கலைஞர் உலகச் செம்மொழிகள் உயராய்வு மையம்

# உலகச் செம்மொழிகள் இலக்கியம்

முதல் தொகுதி

சோ.ந.கந்தசாமி

பல 7206

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# உலகச் செம்மொழிகள் இலக்கியம்

## முதல் தொகுதி

# உலகச் செம்மொழிகள் இலக்கியம்

## முதல் தொகுதி

முனைவர் சோ.ந.கந்தசாமி
இயக்குநர் (பொறுப்பு)
கலைஞர் உலகச் செம்மொழிகள் உயராய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 010.

ISBN: 978-81-7090-429-8

**தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 385**

திருவள்ளுவராண்டு 2041, மார்கழி - டிசம்பர், 2010

| | | |
|---|---|---|
| நூல் | : | உலகச் செம்மொழிகள் இலக்கியம் முதல் தொகுதி |
| ஆசிரியர் | : | முனைவர் சோ. ந. கந்தசாமி |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | இலக்கியம் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2010 |
| பக்கம் | : | X + 264 |
| தாள் | : | 70 ஜிஎஸ்எம் மேப்லித்தோ |
| அளவு | : | 1/8 டெம்மி |
| விலை | : | உரூ 140/- |
| படிகள் | : | 1200 |
| ஒளியச்சு | : | நாகு கம்ப்யூட்டர்ஸ்<br>சுல்தான்ஜியப்பா சந்து<br>தெற்கலங்கம், தஞ்சாவூர்-613 001.<br>செல்பேசி: 94424-21320. |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம்<br>தஞ்சாவூர் - 613 001. |

முனைவர் ம.இராசேந்திரன் தமிழ்ப் பல்கலைக்கழகம்
துணைவேந்தர் தஞ்சாவூர்-613 010

20.09.2010

## அணிந்துரை

உலகச் செம்மொழிகளின் வரிசையில் தமிழ், வடமொழி, கிரேக்கம், இலத்தீனம், ஈபுரு, சீனம், அரபு என்பன ஏழும் சிறப்பாக எண்ணப்படுகின்றன. இவற்றுள் தமிழ், வடமொழி ஆகிய இரண்டு செம்மொழிகளை இந்தியத் திருநாடு பெற்றுள்ளது. செம்மொழிகள் அனைத்திலும் செந்தமிழ் ஒன்றுதான் ஏட்டு வழக்கிலும் நாட்டு வழக்கிலும் நிலைபெற்று வாழும் சிறப்பினைப் பெற்றுள்ளது.

செந்தமிழைச் செம்மொழி என்று ஆராய்ச்சிப் பேரறிஞர் பலர் ஒரு நூறாண்டுக்கும் மேலாகக் கூறி வந்திருப்பினும், **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்** அவர்களின் கூரிய மதிநுட்பத்தாலும் சீரிய முயற்சியாலும் இந்தியப் பேரரசு தமிழின் செம்மொழித் தகுதியை மதித்து ஏற்றுக்கொண்டு 12.10.2004 அன்று முறையான அறிவிக்கையினை வெளியிட்டது. இதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் **டாக்டர் கலைஞர்** அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பயனாகத் தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நிறுவப்பெற்றது. இந்தியாவிலும் உலக நாடுகளிலும் தமிழ்ப்பணி ஆற்றிவரும் அறிஞர் பெருமக்களையும் சான்றோர்களையும் ஆர்வலர்களையும் ஒருங்கிணைத்துக் கோவை மாநகரில் 2010 சூன் 23-27 ஆகிய நாள்களில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு மாண்புமிகு

**டாக்டர் கலைஞர்** அவர்களின் நெறிகாட்டலில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

செம்மொழித் தமிழுடன் ஏனைய உலகச் செம்மொழிகளையும் அவற்றுக்குரிய செவ்வியல் இலக்கியங்களையும் பல்துறை நோக்கில் விரிவாக ஆராய்வதற்கும் விரும்புவோர்க்கு இம்மொழிகளைக் கற்பிப்பதற்கும் உலகளாவிய நிறுவனம் தேவை என்பதை **மாண்புமிகு முதல்வர்** அவர்கள் எண்ணிப் பார்த்தார்கள். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் 27.07.2010இல் நடைபெற்ற மாபெரும் விழாவில், கலைஞர் உலகச் செம்மொழிகள் உயராய்வு மையம் மத்திய அரசின் நிதி உதவியுடன் நிறுவப்பெற்று, செம்மொழிக்காவலர் **டாக்டர் கலைஞர்** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்திய நாட்டிலும் உலக நாடுகளிலும் எந்தப் பல்கலைக்கழகத்திலும் உலகச் செம்மொழிகள் ஆய்வுக்கெனத் தனித்துறையோ, நிறுவனமோ இதுவரை தோன்றவில்லை. புதிதாகத் தொடங்கப் பெற்றுள்ள கலைஞர் உலகச் செம்மொழிகள் உயராய்வு மையத்தில் மேலே சுட்டப்பெற்ற செம்மொழிகளிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்ற அறிஞர்கள் நியமனம் செய்யப்பெற்றுப் பல்வேறு திட்டப்பணிகளை மேற்கொள்ள உள்ளனர். இந்த உயராய்வு மையத்தின் முதல் இயக்குநர் (பொறுப்பு) ஆகப் பணியேற்றுள்ள பேராசிரியர், முனைவர் சோ.ந.கந்தசாமி அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இலக்கியத் துறைத் தலைவராகவும், மொழிப்புலத்தின் தலைவராகவும் பணியாற்றியவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மலாயாப் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றிலும் பல்லாண்டுகள் பணிபுரிந்தவர். இலக்கியம், இலக்கணம், யாப்பியல், தத்துவம், மொழியியல் ஆகிய துறைகளிலும், தமிழ், வடமொழி, பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றவர். பல்துறை சார்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சி நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியவர். இப்பொழுது இவர் எழுதியுள்ள உலகச் செம்மொழிகள் இலக்கியம் - முதல் தொகுதி நம்

உயராய்வு மையத்தின் முதல் நூலாக வெளிவருவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நூலின் முற்பகுதியில் செவ்வியல் தமிழ் இலக்கியம் குறித்தும் பிற்பகுதியில் செவ்வியல் வடமொழி இலக்கியம் குறித்தும் வகைப்படுத்தி விரிவாகவும் விளக்கமாகவும் ஆராய்ந்துள்ளார். தாம் கூறும் கருத்துகளை நிலைநாட்டும் வகையில் ஏற்புடைய சான்றுகளையும் மேற்கோள்களையும் போதிய அளவு தந்துள்ளார். செம்மொழித் தமிழ், வடமொழி இலக்கியங்களை அறிந்து கொள்ளுவதற்கு இந்நூல் பெரிதும் உதவும். நூலாசிரியர்க்கு நம் நன்றியும் பாராட்டும் உரியன.

# முன்னுரை

இந்தியப் பண்பாட்டின் கருவூலமாகச் செந்தமிழும் வடமொழியும் திகழ்கின்றன. இவ்விரு மொழிகளும் உலகச் செம்மொழிகள் வரிசையில் எண்ணப்பெற்று அறிஞர் பெருமக்களின் பாராட்டைப் பெற்றவை. மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை பாடியுள்ள தமிழ்த்தெய்வ வணக்கப் பாடலில், கலைமகளின் வல விழியாகத் தமிழும் இடவிழியாக வடமொழியும் விளங்குகின்றன எனப் புகழ்ந்துள்ளார். தமிழ்மொழிக்கு ஒப்பாக வடமொழியினையும் இணைத்து எண்ணும் மரபு,

**தமிழ்ச்சொல்லும் வட சொல்லும் தாள்நிழல் சேர**

*திருமுறை.1.77.4*

**முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்**

*திருமுறை 6.23.9*

என்று முறையே தமிழ் ஞானசம்பந்தரும் தமிழ்வேந்தர் அப்பரும் பாடியிருப்பதால் தெளிவாகும். இவ்வாறே திருமங்கை மன்னனும்,

**தென்தமிழன் வடபுலக்கோன் சோழன்**

*பெரியதிருமொழி 6.6.5*

**செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்**

*பெரியதிருமொழி 7.8.7*

என்று இருமொழிகளையும் இணைத்துக் கூறுதல் காணலாம். கவிப்பேரரசர் கம்பர்,

**தென்சொற் கடந்தான் வடசொற்கலைக்கு எல்லை தேர்ந்தான்**

*இராமாவதாரம், 2.4.136*

எனக் காப்பியத் தலைவன் ஆகிய இராமன் இருமொழிகளிலும் தேர்ச்சி பெற்றவன் எனப் பாடியுள்ளார். இவ்வாறு பாடியோர் எல்லாம் செந்தமிழையே முதலிற் குறித்துள்ளமை கூர்ந்து நோக்கத்தக்கது.

இந்தியத் திருநாட்டில் பேசப்படும் எண்ணற்ற மொழிகள் பலவும் தமிழ் (-திராவிட) மொழிக்குடும்பம், வடமொழிக் குடும்பம் என்ற இருபெரும் பிரிவிற்குள் அடங்குவன.

வாழ்வியலில் முதன்மைச் சிறப்புடையதாகச் சங்ககாலத் தமிழகத்தில் மதிக்கப்பெற்ற தமிழரின் களவொழுக்க நெறியின் அடிப்படையை வடவரசன் பிரகத்தன் தெரிந்து கொள்ளுவதற்காகக் கபிலர் குறிஞ்சிப் பாட்டினைப் பாடினார். வடமொழி வளர்ச்சிக்குத் தமிழ் நாட்டறிஞர்களின் பங்கு பற்றி அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். தமிழர்கள் யவனர் நாடு ஆகிய கிரேக்கம், உரோமாபுரி உள்ளிட்ட உலகின் பல பகுதி மக்களுடனும் கலை, பண்பாடு, வாணிகத் தொடர்புகள் கொண்டவர்கள். சங்க அக இலக்கியங்களில் **மொழிபெயர் தேயங்கள்** மிகுதியாகப் பேசப்படுகின்றன. **காஞ்சிமாநகர்** உலகப் பேரறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்த செழுங்கலை நிலையமாகத் திகழ்ந்துள்ளது. **இந்நகரில் தோன்றிய, கற்றுத்துறைபோகிய தமிழ்த்தேரர்கள் ஆகிய திக்கநாகர், தருமபாலர் (-அறவண அடிகள்) ஆகியோர் வடநாட்டு நாளந்தாப் பல்கலைக்கழகத்தின் தலைவர்களாக வீற்றிருந்த வரலாற்றினை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.** காஞ்சி மாநகரில் பதினெட்டு மொழிகள் பேசிய பலநாட்டு மக்கள் வாழ்ந்தனர் என்பதைச் சாத்தனார் மணிமேகலையில் குறித்துள்ளார். வடமொழிப் பெருங்கவிஞராகிய **பாரவி** நகரங்களுக்கெல்லாம் நாயகமாகத் திகழ்வது காஞ்சிமாநகர் என்ற கருத்தில் **நகரேஷு காஞ்சி** எனப் பாடியுள்ளார். இச்சிறப்பு சங்ககாலத்திலேயே இந்நகர்க்கு வாய்த்திருந்த வாய்மையினை,

***மலர்தலை உலகத் துள்ளும் பலர்தொழ***
***விழவுமேம் பட்ட பழவிறல் மூதூர்*** 410-411

என்று பெரும்பாணாற்றுப்படை பேசுகிறது. எனவே, தமிழர்கள் பாரோர் போற்றப் பலமொழி மக்களுடனும் பண்டுமுதல் பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்த பாங்கு புலனாகும்.

**மகாகவி காளிதாசர் பாண்டிய வேந்தனின் சிறப்பினையும் அவன் நாட்டின் வளத்தையும் இரகுவமிசத்தில் பாராட்டிப் பாடியுள்ளார்.** உலகச் செம்மொழிகள் என்று அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பெற்ற **தமிழ், வடமொழி, கிரேக்கம், இலத்தீனம், ஈபுரு, சீனம், அரபு** ஆகிய மொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும், இம்மொழியாளர்களின் கலை, பண்பாடு, நம்பிக்கைகள், தத்துவம், வரலாறுகளையும் பல்துறை சார்ந்த ஒப்பியல் நோக்கில் ஆராய்ந்து பொதுக் கூறுகளையும் சிறப்புக் கூறுகளையும் கண்டறிந்து உலகோர்க்கு உணர்த்தும் பொருட்டு உலகளாவிய நிறுவனம் ஒன்று தேவைப்பட்டது.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை அனைவரும் பாராட்டும் வண்ணம் சிறப்புற நடாத்திய **மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் உலகச் செம்மொழிகள் ஆய்வுக்கு ஒரு நிறுவனத்தை உருவாக்க எண்ணினார். பரந்திடம் கொடுக்கும் விசும்புதோய் உள்ளம்** (மலைபடுகடாம், 558) **என்ற சங்கப் பாவலரின் பொன்மொழிக்கு ஏற்ற எடுத்துக்காட்டாக விளங்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 27.7.2010இல் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற மாபெரும் விழாவில் தலைமையேற்றுக் கலைஞர் உலகச் செம்மொழிகள் உயராய்வு மையத்தினைத் தொடங்கி வைத்தார்கள்.** இந்த மையத்தின் இயக்குநர் பொறுப்பினை எனக்கு வழங்கியதற்காகத் **தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும் மாண்பமை துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைப் புலப்படுத்துகிறேன்.**

தஞ்சை மாநகரின் தனிப்பெரும் சிறப்பினைத் தரணியெங்கும் பரப்பும் நோக்கில் **மாமன்னன் முதலாம் இராசராசன்** (கி.பி.985-1014) எடுப்பித்த பெருங்கோயிலின் ஆயிரம் ஆண்டு நிறைவு விழாவிற்கு வருகைதரும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டுவக்கும் பாங்கில் **உலகச் செம்மொழிகள் இலக்கியம் முதல் தொகுதியை** எழுதும்படி துணைவேந்தர் அவர்கள் அன்புடன் கேட்டுக் கொண்டார்.

குறுகிய காலத்தில் அரிதின் முயன்று விரைவில் எழுதி முடித்துள்ள இம்முதல் தொகுதியில், **நம் நாட்டுக்குரிய உலகச் செம்மொழிகள் ஆகிய செந்தமிழிலும் சமற்கிருதத்திலும் செவ்வியல் காலத்தில் எழுதப்பெற்றுள்ள இலக்கியங்களைப் பற்றிய அடிப்படைக் கருத்துக்களை எடுத்துரைக்க முயன்றுள்ளேன்.** இருமொழி இலக்கியங்களிலும் காணப்படும் சிறப்புக்கூறுகளும் பொதுக் கூறுகளும் இந்நூலில் உரிய இடங்களில் சுட்டப்பெற்றுள்ளன.

இந்நூலினை எழுதச் செய்தும் அணிந்துரை வழங்கியும் சிறப்புச் செய்துள்ள மாண்பமை **துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன்** அவர்களுக்கு நன்றி. இந்நூல் வெளிவருவதில் பேரார்வம் காட்டிய பல்கலைக்கழகத்தின் **பதிவாளர் முனைவர் சா.பி.சரவணன்** அவர்கள் அன்பினை ஒருபொழுதும் மறவேன். இந்நூல் எழுதும் பொழுது

வேண்டிய நூல்களைக் கொடுத்துதவிய நூலக இயக்குநர் **முனைவர் பா.சுந்தரேசன்**, மற்றும் அவருடன் பணியாற்றும் நூலகர்கள் உள்ளிட்ட அனைவரையும் பாராட்டுகிறேன். இந்நூலினை வனப்புற வெளியிட்டுள்ள பதிப்புத்துறை இயக்குநர் **திரு.வை.கண்ணபுரக் கண்ணன்** அவர்களின் காலத்திற் செய்த பணி மாணப் பெரிது.

20.09.2010
தஞ்சாவூர்-613 010 **சோ.ந.கந்தசாமி**

# உள்ளுறை


அணிந்துரை iii

முன்னுரை vi


## செந்தமிழ்


| | | |
|---|---|---|
| I. | செம்மொழித் தமிழ் இலக்கியம் | 1 |
| II. | தொல்காப்பியம் | 3 |
| III. | பத்துப்பாட்டு | 28 |
| IV. | எட்டுத்தொகை | 74 |
| V. | இறையனார் களவியல் | 108 |
| VI. | பதினெண் கீழ்க்கணக்கு | 110 |
| VII. | முத்தொள்ளாயிரம் | 132 |
| VIII. | சிலப்பதிகாரம் | 135 |
| IX. | மணிமேகலை | 140 |


## சமற்கிருதம்


| | | |
|---|---|---|
| I. | செம்மொழிச் சமற்கிருத இலக்கியம் | 145 |
| II. | காவிய இலக்கியம் | 147 |
| III. | ஐம்பெருங்காப்பியம் | 152 |
| IV. | நாடகங்கள் | 168 |
| V. | தூது இலக்கியம் | 213 |
| VI. | சதக இலக்கியம் | 219 |
| VII. | புராண இலக்கியம் | 228 |
| VIII. | கதை இலக்கியம் | 233 |
| IX. | பிரசஸ்தி இலக்கியம் | 242 |

பின்னிணைப்பு

1. மேற்கோள் நூல்கள்
   - (i) தமிழ் 253
   - (ii) வடமொழி 254
2. பொருளடைவு
   - (i) தமிழ் 256
   - (ii) வடமொழி 261

# I. செம்மொழித்தமிழ் இலக்கியம்

**செந்தமிழ்** என்ற தொன்மை வழக்கின் விரிவுபெற்ற குறியீடாகச் **செம்மொழித்தமிழ்** என்ற அண்மைக்கால வழக்கு அமைந்துள்ளது. செம்மை என்ற சொல்லிற்கு முழுநிறைவு, ஒழுங்கு, நேரிய தன்மை. செப்பம். ஒத்திசைவு, பெருமை, தூய்மை, வனப்பு, சிவப்பு முதலிய பல பொருள்களைத் தமிழ்ப் பேரகராதி புலப்படுத்துகிறது, இப்பண்புகள் யாவும் பொருந்திய தமிழ் மொழியைச் **செந்தமிழ்** என்று தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே வழங்கிவந்துள்ளனர், தரமானதமிழ் [Standard Tamil] என்ற கருத்திலும் செந்தமிழ் என்ற சொல்லிற்கு இக்கால மொழியியலார் விளக்கம் கூறுவர். பிறமொழிக்கலப்பின்றியும், சொற்சிதைவின்றியும் வழங்கப்படும் தமிழினைச் செந்தமிழ் என்றும், அம்மொழி வழங்கிய நாட்டினைச் செந்தமிழ் நிலம் என்றும் கருதினர். தொல்காப்பியர். '**செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி**' [தொல். சொல். *398*] '**செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**'[தொல். சொல். *400*] என்று இயம்புதல் எண்ணத்தக்கது. செந்தமிழ் நிலத்தைச் சார்ந்திருந்த பன்னிரு நிலப்பகுதிகளில் [Regions] வழங்கிய தமிழைத் **திசைச் சொல்** என்றும் கூறினர். திசைச் சொல்லினை வட்டார வழக்காக [Dialects] எண்ணுதல் மொழியியலாரின் கொள்கை. திசைச் சொற்களைக் கொடுந்தமிழ் என்று கூறும் வழக்கம் சிலப்பதிகாரம் எழுந்த காலத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். இக்காப்பியத்தின் நூற்கட்டுரையில் "**செந்தமிழ் கொடுந்தமிழ் என்றிருபகுதியின்**" எனவரும் பகுதி எண்ணத்தக்கது, திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த மூத்த மொழி தமிழ் என்று மொழி வல்லுநர் கருதுகின்றனர்.

தொல்காப்பியர் காலத்தில் செந்தமிழ் நிலம் என்பது சங்கம் வைத்துத் தமிழாராய்ந்த பாண்டியநாடாகவே கருதப்பட்டது, பாண்டிய நாட்டின் தென்பகுதி சேரநாட்டினைச் சார்ந்ததாக விளங்கியதால் அந்நாட்டின் வடபகுதியையும் சேர்த்துச் **செந்தமிழ் நிலம்** என்று வழங்கினராதல் வேண்டும். தொல்காப்பியப் பாயிரத்தில் '**செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்**' என்று பனம்பாரனார் சுட்டியிருத்தலும் காணத்தக்கது. எனவே, **செந்தமிழ் இலக்கியம் என்பது செவ்வியல் பண்புகள் யாவும் பொருந்திய சங்கத் தமிழிலக்கியத்தையே சிறப்பாகக் குறிக்கும் எனக் கொள்ளுதல் சாலும்**. இதனையே இக்காலத்தவர்க்கு விளங்கும் வகையில் **செம்மொழித்தமிழ் இலக்கியம்** என்று வழங்கி வருகிறோம்.

செந்தமிழ் என்ற சொல்வழக்குடன் **சமற்கிருதம்** [Samskṛta] என்ற வடமொழிச் சொல் வழக்கினை ஒப்பிட்டுக் காணலாம். சமற்கிருதம் என்ற சொல்லின் முன்னொட்டாகிய /சம்/ என்ற சொல்லிற்கு நன்மை, செம்மை முதலிய பொருள்கள் உண்டு. நல்ல இசையினை சம் + கீதம் →சங்கீதம் என்று வழங்குதல் காணத்தக். சமற்கிருதம் என்ற சொல்லில் /கிருதம்/ என்ற பின்னொட்டுச் செ,,ல செய்து கொள்ளப் பெற்றது எனப் பொருள்தரும். எனவே, இலக்கண வழுக்களைந்து செப்பமுற அமைத்துக்கொள்ளப்பெற்ற மொழி சமற்கிருதம் எனப்பெயர் பெற்றது. இயல்பாகவே செந்தமிழும் சமற்கிருதமும் செம்மொழிகளே என்பது இவற்றின் பொருளை உணர்ந்துகொள்வார்க்குத் தெள்ளிதிற் புலனாகும்.

செம்மொழித்தமிழ் இலக்கியங்கள் குறித்துத் துறைவல்ல அறிஞர் பெருமக்கள் கலந்துரையாடி ஒரு முடிபுக்கு வந்தனர். இவர்தம் முடிபின்படி **தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, இறையனார் களவியல்** என்னும் **அகப்பொருள், பதினெண்கீழ்க்கணக்கு, முத்தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், மணிமேகலை** என்றும் நாற்பத்தொரு பனுவல்களும் செம்மொழித் தமிழ் இலக்கியங்களாக [Classical Tamil Literature] ஏற்றுக்கொள்ளப் பெற்றன. இவையாவும் சற்றொப்பக் கி.மு. 500 - கி.பி. 500 என்ற காலப்பகுதியில் தோன்றியவை என்று கொள்ளுதற்குப் போதிய சான்றுகள் உள்ளன.

இலக்கியம் என்ற சொல் இக்காலத்தில் Literature என்ற ஆங்கிலச் சொல் உணர்த்தும் பொருளை உணர்த்துகிறது. Literature என்ற சொல் கவிதை, நாடகம், புதினம் முதலிய படைப்புக்களைக் குறிப்பதுடன் Grammatical Literature, Medical Literature, Philosophical Literature எனக் கூறும்பொழுது முறையே இலக்கணநூல், மருத்துவநூல். தத்துவ நூல் என்பனவற்றைக் குறிக்கும். எனவே, Literature- நூல், பனுவல் என்று பொருள் கொள்ளுதல் போலவே, தமிழிலும் இலக்கியம் என்ற சொல்லின் பொருளைப் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

மேலே சுட்டப்பெற்ற நாற்பத்தொரு பனுவல்களில் காலத்தால் தொன்மைவாய்ந்ததாக ஆராய்ச்சி அறிஞர் பலராலும் கருதப்படும் **தொல்காப்பியம்** குறித்து வரும் இயலில் காண்போம்.

# II. தொல்காப்பியம்

இலக்கிய வழக்கிலும் மொழியியல் நோக்கிலும் வரலாற்றியல் நோக்கிலும் ஆராயப்பெற்றுத் தொல்காப்பியத்தின் காலம் கி.மு. 5 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதன்று என்று அறிஞர்களால் உறுதிசெய்யப்பெற்றுள்ளது. யவனரைக்குறிக்கும் பாணினியின் காலம் கி.மு. 400 என்று ஆராய்ச்சி அறிஞர் முடிபு செய்துள்ளார். தொல்காப்பியத்தில் யவனர் என்ற சொல் இல்லை. **'ஆவோடல்லது யகரம் முதலாது'** (தொல். எழுத்து.65) என்று இலக்கணம் கூறியுள்ள தொல்காப்பியர் பாணினிக்கு முற்பட்டவராவர். தொல்காப்பியத்தில் பௌத்தக் குறிப்பு இன்மையாலும் இக்கருத்து உறுதி பெறுகிறது. தொல்காப்பியம் தோன்றிய வரலாற்றினைப் புரிந்து கொள்ளுதற்கு அதன் பாயிரம் உறுதுணையாக உள்ளது. ஆதலின் முதலில் **தொல்காப்பியப் பாயிரம்** குறித்து ஆராய்வோம்.

## II.1. தொல்காப்பியப் பாயிரம்

தமிழ்மொழியின் அமைப்பினையும் அழகினையும் பேணிக்காக்கும் பாங்கில் எழுந்த இலக்கணச் சுடர்களில் தொல்காப்பியம் ஒரு கதிரவனாகக் காட்சி தருகிறது. இதுகாறும் கிடைத்துள்ள தமிழ் நூல்களில் இந்நூல்தான் முதன்மையும் முதுமையும் வாய்ந்தது என்று அறிஞர் பல எண்ணுகின்றனர். இந்நூலினைப் படைப்பதற்கு எடுத்துக்கொணட முயற்சித் திறம் யாது? நூலாசிரியர் காலத்தில் ஆண்ட அரசன் யார்? நூல் அரங்கேற்றம் எவ்வாறு நிகழ்ந்தது? போன்று வரலாற்றுக்குப் பயன்படும் கேள்விகளுக்குத் தெளிவாகவும் சுருக்க விளக்கமாகவும் விடைகூறும் முதல் மூலகம் (Source) தொல்காப்பியப்பாயிரம் ஆகும்.

பாயிரம் என்பது வரலாறு என்று இயம்புதல் ஒருமரபு. ஒருசிறந்த நூலுக்கு எழுதப்படும் ஆராய்ச்சி முன்னுரையின் மிகப் பழைய வடிவம்தான் பாயிரம் ஆகும். முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என்பன பாயிரத்தின் பரியாயப் பெயர்கள் ஆகும். ஆசிரியர், வகுப்புத் தோழர், மாணவர் என்ற மூவரில் ஒருவர் பாயிரம் வழங்குதல் பழந்தமிழ் உலகில் நிலவிய பழக்கமாகும். அதாவது நூலாசிரியனைப் பற்றி இம் மூவர்தாம் நெருங்கிப்பழகி அறிந்திருக்கமுடியும்; ஆதலின் இவருள் ஒருவர் கொடுக்கும் பாயிரம்தான் யாவரும் மதிக்கும் சிறப்புடையது என்ற எண்ணம் நிலவிய காலம் அது. ஆதலின் உயர் பதவியில்

இருப்போர், செல்வர் முதலியோரிடம் பாயிரம் வாங்கும் போலிக் கௌரவம் இல்லாத காலத்தில், புலமைச் செல்வராகிய பனம்பாரனார் தொல்காப்பியத்திற்குப் பாயிரம் பாடியுள்ளார் என்பது எண்ணிப்பார்த்தற்கு உரியது.

### II.1.1. பனம்பாரனார் யார்?

ஆசிரியர் அகத்தியனாரிடம் தமிழ் பயின்ற மாணாக்கருள் தொல்காப்பியர், அதங்கோட்டாசிரியர், பனம்பாரனார் என்பவர் குறிப்பிடத்தக்கவர் என்பது உரைகளும் பிற்கால இலக்கணநூற் பாயிரங்களும் தெளிவுறுத்தும் செய்தியாகும். அகத்தியர் வரலாறு தனியே ஆராயத்தக்கது. இங்கு, பனம்பாரனார் வரலாற்று மனிதரா? அவர் பாடியுள்ள பாயிரம் பழைமையானதுதானா? என்ற கேள்விகளுக்கு மட்டும் விளக்கம் காண முற்படுவோம்.

பனம்பாரனார் பாடிய அகப்பாடல் ஒன்று குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது (52). யாப்பருங்கால விருத்தியில், "அகத்திணை அல்வழி ஆங்கதன் மருங்கின், வகுத்த சொற்சீர் வஞ்சியொடு மயங்கும்" என்றார் பனம்பாரனார் என்று குறிக்கப்பெற்றுள்ளது. ஆதலின், தொல்காப்பியரைப் போலவே பனம்பாரனாரும் இலக்கண நூல் இயற்றியவர் என்று புலனாகும். இவர் எழுதியுள்ள இலக்கண நூல் இவர் பெயரினைத் தழுவிப் **பனம்பாரம்** என்று வழங்கியதாக மயிலைநாதர் நன்னூல் உரையில் மறவாது குறித்துள்ளார். எனவே, இவர் இலக்கியம், இலக்கணம் ஆகிய இருதுறைகளிலும் தேர்ச்சிபெற்றவர் என்பதும், சங்க காலத்தவர் என்பதும் புலனாகும். இவர் தொல்காப்பியத்திற்கு எழுதியுள்ள பாயிரத்தின் நடையமைப்பும், சொற்பயிற்சியும் கருத்துக்களும் தொல்காப்பியத்தின் நடை, சொல், கருத்துக்களுடன் பெரிதும் பொருந்தியிருத்தல் இவ்விரண்டின் சமகாலத் தன்மைக்குச் சான்றாகிறது. முதலில் பாயிரம் நல்கும் செய்தியைக் காண்போம். பின், பாயிரம் தொல்காப்பியம் ஒப்பீடு காண்போம்.

### II.1.2. பாயிரச் செய்தி

தொல்காப்பியர் சிறந்த தவவலிமையுடையவர். [அரும் பெருஞ் செயல்கள் புரிவோர் தவ ஆற்றல் உடையவராகத்தான் இருப்பர். பவணந்தியார், குணவீரபண்டிதரும் இத்தகையராதலை நன்னூல் நேமிநாதப் பாயிரங்கள் பகரும்.] தம் காலத்தும் முற்காலத்தும் எழுதப்பட்ட செய்யுள் நூல்களையும் தம் காலத்து உலக வழக்குகளையும் கூர்ந்தும் தேர்ந்தும் ஆராய்ந்தவர். வடமொழியிலுள்ள ஐந்திரவியாகரணமும் கற்றவர். எழுத்து, சொல், பொருள் என்ற தனித் தலைப்புக்களில் ஒன்றின் இலக்கணம்

இன்னொன்றில் பெரிதும் மயங்கி விடாதபடி இலக்கணக் கொள்கைகளைத் தம்நூலில் தெளிவாகத் தொகுத்தவர். இவர் நூல் நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையில் அரங்கேறியது. அப்போது, அறமேபேசும் நாவும் நான்மறைப் பயிற்சியும் உடைய அதங்கோட்டாசான் எழுப்பிய சிக்கல்கள் எல்லாம் தீரும்படி விளக்கங்கள் கூறித் தம் இலக்கணக் கருத்துக்களை நிலைநாட்டினார். தம்பெயரினையே நூலின் பெயராகச் சூட்டினார்.

**பனம்பாரனார் பாடிய பாயிரம்**

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரும் முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கைச் சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்;
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்
தறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

நூலைப் பற்றியும் ஆசிரியனைப் பற்றியும், அரங்கேறிய காலம் பற்றியும் அறிவிக்கும் இப்பாயிரம் வரலாற்றுணர்ச்சியுடைய ஒருவரால் படைக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. அக்காலத்தவர்க்கு இவ்வளவில் வரலாறு கூறினால் போதும் என்ற எண்ணம் இருந்திருத்தல் வேண்டும்,

## II.1.3. பாயிரமும் தொல்காப்பியமும்

பாயிரத்தின் யாப்பும் தொல்காப்பிய நூற்பாக்களின் யாப்பும் ஒத்திருத்தலை ஒருமுறை ஒப்பிட்டுப் பார்ப்போரும் உடன்படுவர். எண்ணொடு புணர்ந்த சொற்சீரடியும் தனி நிலையில் சொற்சீரடியும் பாயிரத்தில் காணப்படுதல்போல், நூலினுள்ளும் காண்கிறோம்

(எழுத்து 1,2,3,4, முதலியன). பாயிரத்தில் பனம்பாரனார் பயன்படுத்தியுள்ள **சிவணிய, முந்து, புலம், போக்கு, அவையம், அரில்தப, படிமை** முதலிய அருஞ்சொற்கள் தொல்காப்பியர் காலத்துச் சொற்களே எனலாம். சான்றாகச் சில நூற்பாக்களை மட்டும் இங்குத் தருகிறோம்.

1. இசையொடு **சிவணிய** நரம்பின் மறைய ... எழுத்து.33
2. திங்களும் நாளும் **முந்து**கிளந் தன்ன 286
3. புலனென மொழிப **புலனுணர்ந்** தோரே பொருள்.542
4. **போக்கின்று** என்ப வழக்கி னுள்ளே. சொல்.22
5. எட்டுவகை நுதலிய **அவையகத்** தானும் ... பொருள்.75
6. அகத்தெழு வளியிசை **அரில்தப** நாடி ... எழுத்து.102
7. மேவிய சிறப்பின் ஏனோர் **படிமைய** ... பொருள்.30

சொல்லொப்புமையுடன் கருத்தொப்புமையும் காணப்படுகிறது. ஒருசிலவற்றைச் சுட்டுதல் போதும்.

### II.1.4. தமிழ்நாட்டின் எல்லை

பனம்பாரனார், தமிழ்நாட்டின் வடவெல்லை வேங்கடமலை என்றும் தென்எல்லை குமரி (மலை? ஆறு?) என்றும் கூறி, இவ்வெல்லைக்குள் வழங்குவது தமிழ் என்றும் கூறியுள்ளார். கிழக்கும் மேற்கும் பிற நாடுகள் இன்றிக் கடல் எல்லை யாதலின் கூறாராயினார் என்று இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் குறித்துள்ளனர். தொல்காப்பியர்,

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர் (பொருள். 384)

என்று மொழியும் பகுதியின் சுருக்கமாகத்தான் பாயிரப் பகுதி அமைந்துள்ளது. மங்கலதிசை யாதலின் வடக்கினை முதலில் குறித்தார் என்று உரையாசிரியர் இருவரும் உரைத்தனர். இளங்கோவடிகள் கூட, "**புண்ணிய திசை**" (V-94) என்று வடதிசையினைக் குறித்தனர். தென்திசையினை **மறலி திசை** என்று பழந்தமிழர் எண்ணினர். ஒருவேளை தென்கடலில் பல முறைகள் கொந்தளிப்பு ஏற்பட்டு நிலப்பரப்புகள், மலைகள், ஆறுகள் பல விழுங்கப்பட்ட அச்சம் காரணமாக இப்படி எண்ணியிருக்கலாம். ஆனால் நாலடியாரில் ஒரு சமணப்புலவர் இம் மூடக் கொள்கையினை முறியடித்துப் பாடியுள்ளார்:

எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காழ் தெங்காகா
தென்னாட் டவரும் சுவர்க்கம் புகுதலால்

தன்னால்தான் ஆகும் மறுமை; வடதிசையும்
கொன்னாளர் சாலப் பலர்.

காஞ்சிர விதையினை எவ்வளவு உயர்ந்த மண்ணில் விதைத்தாலும் தேங்காயாகப் போவதில்லை. ஒருவரின் உயர்வு தாழ்வுக்கு அவர் புரியும் செயல்களே காரணம் ஆகுமேதவிர, அவர் வாழும் திசைகள் ஏது ஆகா. தென்னாடும் மங்கலத் தன்மையுடியதுதான்; எனவே, தென்னாட்டவர்க்கும் சுவர்க்கத்தில் உரிமை உண்டு. வடதிசையாளரில் வாழ்நாளை வீணே போக்கும் பதடிவைகலார் மிகப்பலர் என்பதைச் சமணப்புலவர் துணிவாகச் சொல்லியுள்ளார். ஆதலின், புண்ணியதிசை என்ற எண்ணத்தில்தான் பனம்பாரனார் '**வட வேங்கடம்**' என்று முதலில் குறித்தாரா என்பது ஒருதலையாகத் துணிவதற்கு இல்லை. சிலப்பதிகாரத்தில் நூற்கட்டுரையில் "**குமரி வேங்கடம்**" என்று தென்திசை முதலிற் குறிக்கப்பெற்றது. அக்காலத் தேசப்படத்தில் வேங்கடமலை முதல் குமரிமுனை வரை பரவியிருந்த நிலப்பரப்பினைத் தமிழ் நாட்டின் **அகப்பாட்டெல்லை** என்று உரையாசிரியர்கள் கருதினர். கடல் கடந்தும் (மலேசியா, சீயம், சாவகம், எகிப்து, யவனம் முதலியன), வேங்கடத்திற்கு வடக்கும் தமிழ்மக்கள் வாணிபத்தின் பொருட்டுச் சென்றுள்ளனர். இப்பகுதிகளை, "மொழி பெயர்தேஎம்" என்று அகநானூறு பன்முறை கூறுகிறது. இப்பகுதிகளிலும் தமிழருள் ஒருசாரார் சேரிகள் (Colonies) அமைத்து வாழ்ந்திருத்தல் கூடும். இப்பகுதிகள் யாவும் தமிழகத்தின் புறத்தே இருத்தலின், **புறப்பாட்டெல்லை** என்று கொள்ளுதற்கு உரியவையாகும். ஆனால், இவ்வேற்று நிலங்களில் வாழ்ந்த தமிழர்களின் மொழியில் பிறமொழிச் செல்வாக்கு கூடுதலாகக் காணப்பட்டிருத்தல் இயல்பே (அவ்வாறே இவர்தம் சொற்களும் அயல் மொழிகளிலும் கலந்திருக்கும்). இந்நிலப்பகுதிகளுக்குப் பயணம் சென்று, அங்கு வாழ்ந்த தமிழர்களின் மொழி இயல்புகளையும் ஆராயும் பேராசை தொல்காப்பியரின் இலக்கணத் திட்டத்தில் இடம்பெறவில்லை எனலாம். எனவேதான். "**வண்புகழ் மூவர் தண்பொழில்** வரைப்பின், நாற்பேரெல்லை அகத்தவர் வழங்கும் யாப்பு" என்று தெளிவுறுத்தினார். தமிழகத்தின் எல்லை கூறிய பனம்பாரனாரின் பாயிரக்கருத்து, தொல்காப்பிய நூற்பாவின் (பொருள் *384*) விளக்கமாகவே கொள்ளத்தக்கது.

## II.1.5. வழக்கும் செய்யுளும் ஆராய்தல்

தொல்காப்பியர் புறப்பாட்டெல்லையில் வழங்கிய தமிழின் இயல்புகளை எண்ணாது போயினும், அகப்பாட்டெல்லையில்

வடவேங்கடம்-தென்குமரி இடைப்பட்ட பகுதி மக்களால் பேசப்பட்ட வழக்குமொழியின் நடையினையும் மக்கள் வாழ்க்கையினையும், கற்றறிந்த சான்றோர்களால் எழுதப்பட்ட இலக்கிய மொழியின் அமைப்பினையும் பொருளினையும் முதற் பொருளாகவும் மூலப் பொருளாகவும் கொண்டுதான் எழுத்து, சொல், பொருள் இலக்கணங்களை வகுத்துள்ளார். தொல்காப்பியரின் இலக்கணத் திட்டத்தினை நன்றாகப் புரிந்துகொண்ட பனம்பாரனார்,

வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்

எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி

[இருமுதல் = Two Sources; நாடி = ஆராய்ந்து]

என்று பாயிரத்தில் பொறித்துள்ளார். மக்கள் பேசும் வழக்குகளை மதிக்காது தொல்காப்பியம் எழுதப்பட்டிருக்குமேல் அந்நூல் செல்வந்தர்களின் இலக்கணமாகவே ஒதுங்கியிருக்கும். செய்யுள் வழக்குகளை மதிக்காது எழுதப்பட்டிருக்குமேல், அந்நூல் ஒரு பாமர இலக்கணமாகவே புறக்கணிக்கப்பட்டிருக்கும். அங்ஙனமின்றி நாட்டு வழக்கினையும் ஏட்டு வழக்கினையும் ஒப்ப மதித்து இலக்கணம் வகுத்ததால்தான் காலம் கடந்தும் நிற்கும் தெம்பும் திறமும் பெற்றுள்ளது.

### II.1.5.1. வழக்காராய்தல்

வழக்கு என்ற சொல் வழங்கிவருவது என்று பொருள்படும். யார் வழங்கி வருவது? எனின், பாமரர் படித்தவர் இருசாராருமே வழங்கிவருவது எனக் கொள்ளலாம். இவ்விருவர் வழக்கும் வேறுபாடுகள் சிலவேனும் உடையவை. இவ்வேறுபாடுகளைத் திரட்டும் நோக்கில், இக்காலத்து மொழிநூலார் போல வழக்காராய்ச்சி (Dialect Survey) நிகழ்த்தினார் தொல்காப்பியர் என்று சொல்லத் தயாராக இல்லை. ஆயினும், இவற்றை உணர்ந்து இலக்கணம் சொல்லியுள்ளார் என்பதை வலியுத்துகிறோம். தொல்காப்பியர் குறிப்பிடும் திசைச் சொற்கள் வட்டார வழக்குகளையும் உள்ளடக்கியன எனலாம். எச்சவியலில்,

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்

தம்குறிப் பினவே திசைச்சொற் கிளவி [தொல்.சொல்.400]

என வரும் நூற்பாவிற்கு உரைகண்டவர் பலரும் தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா முதலிய தமிழகத்தின் பன்னிரு பகுதிகளிலும் பயிலப்பெறும் சொற்கள் திசைச் சொற்களாகும் என்று விளக்கம் கூறியுள்ளார். **செந்தமிழ்** (Standard dialect) **திசைத்தமிழ்** (Different

dialects of the same language) என்ற பாகுபாடு கொண்டால், வடவேங்கடம் முதல் தென்குமரி வரையில் ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியினர் வழங்கியது செந்தமிழ் என்றும், அப்பகுதியைச் சேர்ந்து அக்கம் பக்கத்து மாவட்டத்தினர் பேசியது திசைத்தமிழ் (கொடுந்தமிழ்?) என்றும் கொள்ளலாம். முதன் முதல் செந்தமிழ், கொடுந்தமிழ் என்ற இரு குறியீடும் இணையாகச் சிலப்பதிகாரத்தில், நூற்கட்டுரை என்னும் பகுதியில் காணப்படுகிறது:

*குமரி வேங்கடம் குணகுட கடலா*
*மண்டிணி மருங்கின் தண்தமிழ் வரைப்பிற்*
*செந்தமிழ் கொடுந்தமிழ் என்றிரு பகுதியின்*
*ஐந்திணை மருங்கின் அறம்பொருள் இன்பம்*

என வருதல் காண்க. தொல்காப்பியர் சேரி மொழி (பொருள் 542) என்று ஒன்றைக் குறிப்பிடுகிறார். எல்லோருக்கும் புலப்படும்படி எழுதப்படும் இலக்கியத்தினைப் புலன் என்றும், இதில் அகராதியின் உதவியோ ஆராய்ச்சியின் துணையோ இன்றிப் பொருள் புரியும் வழக்குச் சொற்கள் இடம் பெறும் என்றும் கூறியுள்ளார். இப்போது **மக்கள் இலக்கியம்** என்று பேசுவதின் ஒரு சிறப்புக்கூறு பேச்சு வழக்கிற்கு மரியாதையளித்தலாகும்.

இதனைத் தொல்காப்பியர் காலத்துத் தமிழ் எழுத்தாளர்கள் புரிந்து கொண்டவர்கள் என்பதை,

*சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து*
*தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்*
*புலனெ மொழிப புலனுணர்ந் தோரே* [தொல்.பொருள்.542]

எனவரும் நூற்பா எடுத்துரைக்கிறது. சேரிமொழி என்பதற்கு மாறாகத் **தெரிந்தமொழி** என்ற பாடமும் உண்டு. செய்யுள் மரபுகளுடன் வழக்கு மரபுகளையும் நினைத்துத்தான் நூன்மரபு, மொழி மரபு, விளிமரபு, மரபியல் முதலிய தலைப்புக்களைத் தந்துள்ளார். மரபியலில் வழக்கு என்பது உயர்ந்தோர் வழங்குவது என்று ஒரு நூற்பா உள்ளது (தொல்.பொருள்.638). ஆனாலும் சொல்லதிகாரத்தில், சமுதாயப்படிநிலைகளை மையமாகக்கொண்டு இழிந்தோன், ஒப்போன், உயர்ந்தோன் என்று பாகுபாடு செய்துள்ளார். இவர்கள் பேச்சு குறித்தும் ஒருமாதிரி (example) வழங்கியுள்ளார்.

1. ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே (தொல்.சொல்.445)
2. தாவென் கிளவி ஒப்போன் கூற்றே (தொல்.சொல்.446)

*3. கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே (தொல்.சொல்.447)*

ஆதலின், சராசரி மனிதர், சாமானியர், பிரபுக்கள், கல்விமான்கள் யாவருடைய பேச்சுக்களையும் அனுசரித்துத்தான் தொல்காப்பியர் இலக்கணம் செய்துள்ளார் என்பது தெளிவு. மக்கள் வாழ்க்கையினைப் பற்றிப் பேசும் பொருளதிகாரத்தில் கூட, மேலோர் கீழோர் ஆகிய இருதிறத்தாரின் பழக்க வழக்கங்களையும் சுட்டியுள்ளார் என்பதும் கருதத்தக்கது.

மக்கள் வழக்கிற்கு முதன்மை கொடுத்துத்தான் இலக்கணம் எழுத வேண்டும் என்பது அக்காலத்து அறிஞர்களின் மரபாக இருந்துள்ளது. வடமொழியாளரும், **"யதாலோகே ததாவியாகரணம்"** என்று கூறுவர் (எப்படி உலகம் அப்படி இலக்கணம் என்பது இதன் பொருள்). தொல்காப்பியத்தின் மூன்று பகுதிகளும் வழக்கு, செய்யுள் ஆகிய அடித்தளத்தின்மேல் எழுப்பப்பெற்ற இலக்கண மாளிகை என்பதைச் சில சான்றுகளினால் நிறுவலாம்.

### II.1.5.1.1. எழுத்ததிகாரத்தில் வழக்கு ஆராய்தல்

நீண்ட சொற்கள் மக்கள் பேச்சில் கவனக் குறைவாலும் விரைவு காரணமாகவும் சிறுகிச் சிதைந்து உருக்குலையும். இவை **மரூஉச் சொற்கள்** என்று குறிக்கப் பெறுவனவாகும். இத்தகைய வழக்குச் சொற்களுக்குத் தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் *111, 172, 250, 251, 355, 483* ஆகிய நூற்பாக்களில் இலக்கணம் கூறியுள்ளார்.

### II.1.5.1.2. சொல்லதிகாரத்தில்

பொருள்கள் யாவும் இயற்கை, செயற்கை என்ற இரு பிரிவிற்குள் அடங்கும். செயற்கைப் பொருளைக் கூறுமிடத்து இன்ன காரணத்தினால் இப்பொருள் இவ்வாறாயிற்று எனக் கூறுதல் வேண்டும். ஆனால் உலக வழக்கில் (பேச்சு நடையில்) இவ்வாறு காரணம் கூறுதல் கட்டாயம் இல்லை என்கிறார் தொல்காப்பியர்:

ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே [தொல்.சொல்.22]

எ.கா. ஆடை நன்றாயிருந்தது. தையல் அழகாய் உள்ளது. (இன்ன காரணத்தினால் ஆடை நன்றாயிருந்தது என்றும், தையல் அழகாக இருந்தது என்றும் பேச்சு வழக்கில் காரணம் கூறத் தேவையில்லை).

### II.1.5.1.3. பொருளதிகாரத்தில்

தமிழர் வாழ்க்கைக்கும், இலக்கியங்களுக்கும் சட்டம் கூறும் பகுதியாக உள்ளது பொருளதிகாரம். இப்பகுதியில் அகப்பொருள்

இலக்கணம் கூறுமிடத்து நாடக வழக்கு, உலக வழக்கு, புலனெறி வழக்கு என்று மூன்றுவகை வழக்குகளை ஆராய்ந்துள்ளார். வாழ்க்கையிற் காணப்படும் சுத்த பாகங்களையும், கற்பனையாகப் படைப்பாளன் உருவாக்கும் உயர்ந்த இலட்சியங்களையும் **நாடக வழக்கு** என்ற குறியீட்டினால் சுட்டினார். இதனைத்தான் Idealism என்ற இக்காலத்தவர் கூறுவர். நல்லன எல்லாம் ஒருங்கு வந்தனபோல் கூறுதல் என்பர் உரையாசிரியர்கள். அன்றாட வாழ்க்கையில் காணப்படும் சுத்தம், அசுத்தம், சுத்தாசுத்தம் என்ற எவ்வகைப்பொருளும் **உலகவழக்கு** என்று குறிக்கப்பெறும். இதனையே Realism அல்லது Naturalism என்ற சொற்களினால் நவீனர் குறிப்பிடுவர். உலகவழக்கும் நாடக வழக்கும் விரவிய நெறியினைப் **புலனெறி வழக்கம்** என்றார். இதனை Realistic Idealism அல்லது Idealistic Realism என்று ஆங்கிலத்தில் குறிப்பிடலாம்.

வழக்கிற்கு (-நடைமுறைக்கு) முதன்மை கொடுத்தவர் தொல்காப்பியர். தொல்காப்பியம் கிளவியாக்கப்பகுதியில், **வழக்குவலியுடைத்தாகலின்** என்று ஆனாச்சிறப்பிற் சேனாவரையர் குறிப்பிடுதல் நோக்கத்தக்கது. தொல்காப்பியரே பலபேச்சுச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். (எ.கா. கோமான், பொருள் 75 சொன்ன பக்கம் - பொருள். 88).

எனவே, மூவகை இலக்கணமும் எழுத முற்பட்ட தொல்காப்பியர் பலவகை வழக்குகளையும் அறிந்து ஆராய்ந்து வரையறை கண்டவர் என்ற பாயிரச் செய்தி உண்மையாதல் தெளிவு.

### II.1.5.2. செய்யுள் ஆராய்தல்

தொல்காப்பியர் தாம் பயின்ற இலக்கண, இலக்கியக் கலை நூல்கள் பலவற்றைக் குறித்துள்ளார். நால்வகைப் பாக்களின் விரிவாக வடிவங்களை ஆராய்ந்துள்ளார். பாட்டு, உரை, பிசி, வாய்மொழி, அங்கதம், முதுசொல் என்ற எழுவகை யாப்புக்களையும்; அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்ற எண்வகை வனப்புக்குரிய இலக்கியங்களையும் வரையறை செய்து காட்டியுள்ளார். ஆதலின் அவர்தம் கல்விப்பரப்பு தெளிவாகிறது, மூன்றதிகாரங்களிலும் செய்யுளில் காணப்படும் மரபுகளுக்கென்று தனி நூற்பாக்களை எழுதியுள்ளார். சில சான்றுகளை இங்குக்காண்போம்.

#### II.1.5.2.1. எழுத்ததிகாரத்தில்

அகரச்சுட்டு செய்யுளில் நெடிலாக ஒலித்தல் உண்டு. இதனை **"நீட வருதல் செய்யுளுள் உரித்தே"** (208) என்ற நூற்பா

உணர்த்துகிறது. ஆசிரியர் தாம் செய்த விதிக்கு எடுத்துக்காட்டாக "ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே" (சொல்.1), "ஆயிரு பாற்சொல்" (சொல்.3) என்று ஆண்டுள்ளார். பனம்பாரனாரும், "ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து" என்று வழங்கியுள்ளார்.

### II.1.5.2.2. சொல்லதிகாரத்தில்

இனப்பொருள்களை வேறுபிரித்துக் காட்டப் பண்படைகளுடன் பெயர்ச்சொற்களை வழங்குதல் ஒரு மரபாகும். குவளை, தாமரை என்ற பொதுச்சொற்கள் கருமை, செம்மை, வெண்மை முதலியவற்றில் ஏற்பன பண்படை பெற்று வழங்குங்கால், இவை தனித்தனி இனம் சுட்டுதல் உண்டு. எ.டு. கருங்குவளை எனக் கூறுங்கால் செங்குவளையினின்றும் பிரிக்கப்படுதலும், வெண்டாமரை எனக்கூறுங்கால், செந்தாமரை என்று ஒன்று உண்டு என்றும் இனம் சுட்டப்பெறுதல் காணலாம். ஆனால் ஞாயிறு, திங்கள் முதலியன பொதுச்சொற்கள் அல்ல. எனினும் செஞ்ஞாயிறு, வெண்டிங்கள் (புறம்-38) என்று வழங்கியுள்ளன. இவ்வழக்கு செய்யுட்கு அழகுதருதலின், உலகவழக்கிற்கு உரியதன்று என்று தொல்காப்பியர் இலக்கணம் செய்துள்ளார்:

*இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை*
*வழக்கா றல்ல செய்யு ளாறே* [தொல்.சொல்.18]

### II.1.5.2.3. பொருளதிகாரத்தில்

தொல்காப்பியர் '**புலனெறி வழக்கு**' என்று சுட்டுதல் பெரும்பாலும் புலவர்கள் பேணிய செய்யுள் வழக்கினைத்தான் எனக்கருதலாம் (பொருள். 56). என்ப, என்மனார், என்றிசினோர் முதலிய பல குறியீடுகளினால் தம்காலத்தும் முற்காலத்தும் விளங்கிய ஆசிரியர்களைச் சுட்டினார் என்க. சொல்லதிகாரத்தின் புறநடையில்,

*செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்*
*மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்* [தொல்.சொல்.463]

என்று ஆசிரியர் குறிப்பதால் செய்யுள் வழக்கிற்கு முதன்மை தந்துள்ளார் என மதிக்கலாம்.

### II.2. செந்தமிழ் நிலம்

பாயிரப்பகுதியில், "செந்தமிழ் இயற்கைச் சிவணிய நிலம்" எனப்பனம்பாரனார் சுட்டுதல்,

அவற்றுள்,

இயற்சொல் தாமே,

செந்தமிழ் இயற்கை வழக்கொடு சிவணித்

தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே [தொல்.சொல்.398]

என்ற தொல்காப்பியப்பகுதியைத் தழுவியுரைத்ததெனலாம். உருக்குலையாது இயல்பாக வழங்கிவரும் செஞ்சொற்களைப் பேசியும் எழுதியும் வந்த வட்டாரத்தினரின் வழக்கினைச் செந்தமிழ் எனக்கருதியிருக்கலாம். சான்றோர் பலரும் பாண்டிநாட்டுத் தமிழ்தான் செந்தமிழ் என்னும் கொள்கையினர்.

## II.3. வடமொழிப் புலமை

தொல்காப்பியர் தென்மொழியில் தேர்ச்சிபெற்றமை போலவே வடமொழி நூல்களையும் நுணுகிப் பயின்றவர். பாயிரம், "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" எனக் குறித்தல் காண்க. எழுத்ததிகாரத்தில்,

அகத்தெழு வளியிசை அரில்தப நாடி

அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே (102)

என்று இயம்புதல் நோக்கத்தக்கது. அந்தணர் மறைகளில் மூலாதாரம், கொப்பூழ், நெஞ்சு ஆகிய இடங்களில் முறையே எழும்பும் பரை, பைசந்தி, மத்திமை முதலிய காற்றின் தன்மைகளுக்குக் கூட மாத்திரை கூறுவர் என்பதைத் தொல்காப்பியர் உணர்ந்துள்ளார். அவர்கள் நெறியினைப் பின்பற்றி, யான் மாத்திரை கூறவில்லை. உள்ளிருந்து வெளிப்பட்டுக் காதில் சென்று சேரும் ஒலிக்குத்தான் அளவு சொல்லியிருக்கிறேன் என்று தம் தனித்தன்மையினைப் புலப்படுத்தியுள்ளார். சொல்லதிகாரத்தில்,

வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ

எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே (401)

என்று வடமொழியாக்கம் கூறியுள்ளார். வடசொற்கள் வட மொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்களின் நீங்கி, இருமொழிக்கும் பொதுவாகிய எழுத்துருவம் பெற்றுத் தமிழ்மொழியில் வழங்க வேண்டும் என்கிறார். அவ்வாறு பல சொற்களைத் தொல்காப்பியரே ஆண்டுள்ளார். எழுத்ததிகாரத்தில் கரம், காரம் முதலியவையும்; சொல்லதிகாரத்தில் அந்தம் (4), ஏது (74), கருமம் (84) முதலியனவும்; பொருளதிகாரத்தில் மாராயம் (64), தாபதப்பக்கம் (74), மூதானந்தம் (77), தாரம் (77), நிச்சம் (96), சிந்தை (109), தூது (267) முதலிய பலவற்றையும் சான்றாகக் கூறலாம். மொழிபெயர்ப்பு

இலக்கியங்களையும் வழிநூலின் ஒரு வகையாகக் கூறியுள்ளார். *(பொருள் 643)*

வேற்றுமைகள் எட்டென்று எண்ணுதல் ஐந்திர வியாகரணத்தில் காணப்படுதலைச் சேனாவரையர் விளக்கியிருத்தலும் இவண் காணத்தக்கது. விளிவேற்றுமையினை எழுவாய் வேற்றுமையுள் அடக்கிய வடமொழிவாணரினின்றும் வேறுபட்டவர் ஐந்திரமுடையார். ஐந்திரவியாகரணத்தினைப் பின்பற்றித் தொல்காப்பியரும் எட்டென்று வேற்றுமைகளை எண்ணினார் என்று இருமொழிப் பெயரும் புலமை படைத்த சேனாவரையர் தெளிவுறுத்தியுள்ளார் (சொல்.74, உரை). "... **இக்கருத்து விளக்கியவன்றே, பாயிரத்துள் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனக் கூறிற்றென்க**" என்பது சேனாவரையரின் முடிந்த கருத்தாகும்.

## II.4. பாயிரத்தின் பயனும் பழைமையும்

சிறந்த நூலிற்குப் பாயிரம் இன்றியமையாது வேண்டப்படும். ஆயிரம் விதங்களில் மேம்பாடும் விரிவும் உடைய நூலாயினும் பாயிரம் அமைந்திலதேல் பனுவலாக மதிக்கப் பெறாது. இதனை,

*ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்*
*பாயிரம் இல்லது பனுவல் அன்றே*

என்று வரும் பழைய நூற்பா உறுதி செய்கிறது. நூல் வரலாறு தெரிந்துகொண்டு நூலைப்படிக்க வேண்டும் என்பதுதான் பழந்தமிழ்க் கல்வி முறை. மிகப்பெரிய யானைக்கு மிகச்சிறிய பாகன் அமர்ந்து இயக்குதல் போலவும், பரந்த வானத்திற்கு உருச்சிறியதாகக் காணப்படும் இருபெருஞ்சுடர்கள் ஒளி பொழிந்து வெளிச்சம் தருதல் போலவும், மிகப்பரந்த நூலிற்கு உருவாற் சிறிய பாயிரம் ஒளி தந்து இயக்கும்; கற்பவர்க்கு உறுதுணையாக, நூலைத்திறக்கும் சாவிபோலப் பயன்படும் பாயிரம் மிகவும் செறிவாகவும், விளக்கமாகவும் இருத்தல் வேண்டும் என்பதே இலக்கண உரையாசிரியர்கள் காட்டும் உவமைகளின் உட்கிடையாகும். வரலாறு தெரியாது நூலைப் பயிலப்புகும் மாணாக்கன் குன்றை முட்டிய குருவியைப் போலவும் வேடர் வாழும் குறிச்சியில் புகுந்த மானைப் போலவும் இடர்ப்பட நேரிடும் என்று உரைகாரர்கள் விளக்குவதால், பாயிரத்தின் பயனும் தேவையும் இவ்வளவு என்பது எளிதிற் புலனாகும்.

இலக்கண உரைகளில் பாயிரத்தின் அமைப்புக்களைப் பற்றிப் பல நூற்பாக்கள் காணப்படுகின்றன. இவற்றின் பெருக்கத்தால்

பாயிரத்தின் பழமை வெளியாகும். சங்கம் மருவிய காலத்தில் எழுந்த பழமொழி நானூற்றில்,

> பாயிரம் கூறிப் படைதொக்கால் என்செய்ப
> ஆயிரம் காக்கைக்கோர் கல் (165)

என்று கூறப்படுதல் எண்ணத்தக்கது. பாயிரம் கூறுதல் என்பது இந்நூல் எழுந்த காலத்தில் பொருள் விரிவு (expansion of meaning) பெற்றுவிட்டது. போர் முனையில், வீரர் புரியவிருக்கும் தீரச்செயல்களின் சுருக்கமே பாயிரம் என்று கருதப்பட்டது. [இதனை வஞ்சினம் கூறுதல் என்றும் கொள்ளலாம்]. ஒருபெரிய அமைப்பின் சிறு உருவம்தான் பாயிரம். நூலாகிய மாளிகையினைப் பாயிரம் என்ற பளிங்கு காட்டுதல் போல், வீரர்கள் ஆற்ற இருக்கும் வீரச்செயல்களை அவர் பகரும் முகவுரை ( பாயிரம்) தெற்றென எடுத்துரைக்கும். ஆதலின், கி.பி.5 ஆம் நூற்றாண்டளவில் எழுந்த பழமொழியில் பாயிரம் என்ற சொல் பொருள் மாற்றம் பெற்றுள்ளதென்றால், மிகப் பழங்காலத்தில் இதேசொல் இலக்கண (இலக்கிய) நூல்களுக்கு வகுக்கப்படும் வரலாற்றுக் குறிப்பு என்னும் பொருள் பயந்தது எனலாம்.

இதுகாறும் கூறிய கருத்துக்களினால், தொல்காப்பியப் பாயிரம் தொல்காப்பியம் அளவிற்குப் பழமையுடையது என்பதும், பாயிரச் செய்திகளும் மொழியமைப்பும் தொல்காப்பியச் செய்திகள் மொழியமைப்புடன் ஒத்துள்ளன என்பதும், வரலாற்றுக் குறிப்பாகக் கருதத்தகுவது பாயிரம் என்பதும் பிறவும் தெளிவு பெறுதல் காணலாம்.

## II.5. தொல்காப்பியர் இருவரா?

தமிழக வரலாற்றில் ஒருவர் பெயர் தாங்கிய புலவர் பலரும் வாழ்ந்துள்ளனர். கபிலர், பரணர், நக்கீரர், கல்லாடர், ஔவையார் என்பார் பெயரில், பலர் பல காலப்பகுதியில் தமிழ்ப்பணி புரிந்துள்ளனர். யாப்பு, பாடுபொருள், நடை, மொழியமைப்பு முதலிய வேறுபாடுகளைக் கொண்டுதான் ஒருவர் பெயரில் பலர் விளங்கினர் என்று அறிஞர்கள் முடிபு கட்டினர். தொல்காப்பியர் இருவர் என்ற எண்ணத்தைப் பேராசிரியர் தெ.பெ.மீ. வெளியிட்டார் [காண்க: 1. T.P.Meenakshisundaran, History of Tamil Language, 2.Foreign Models in Tamil Grammar, D.L.A. Tiruvanandapuram, 1973]. ஆயின் திருவள்ளுவர், கம்பர், சேக்கிழார் பெயரில் பலர் இருந்தனர் என்னும் துணிபு இதுவரையும் தோன்றவில்லை.

தொல்காப்பியர் இருவர் என்பதற்குப் பேராசிரியர் அவர்கள் கூறும் வலிய காரணம், தொல்காப்பிய நூற்பாக்கள் சிலவற்றில்

காணப்படும் முரண்பாடுகளேயாகும். மரபியலில், பிள்ளை என்ற சொல் பறவைகளின் இளமைப்பெயராக வழங்கும் என்றும் (548) மக்களின் இளமைப் பெயராகக் குழவி, மகவு என்னும் இருசொற்கள் தவிர, பிள்ளை முதலான வழங்காதன என்றும் (567) தொல்காப்பியர் சுட்டுகிறார். ஆனால், புறத்திணையியலில், பிள்ளைநிலை, பிள்ளையாட்டு (63) என்று வரும் இடங்களில் பிள்ளை என்ற சொல் உயர் திணையில் வந்துள்ளது. தொல்காப்பியர் ஒருவராக இருந்தால் ஓரிடத்தில் உயர்திணைச் சொல்லாகவும் இன்னோரிடத்தில் அதனையே அஃறிணைச் சொல்லாகவும் ஆண்டிருப்பாரா? என்பது அவர்கள் எழுப்பும் கேள்வியாகும். கிள்ளை என்ற சொல் கிள, கிளத்தல் என்ற வேரிற்பிறந்து பேசும் பறவையாகிய கிளியைக் குறித்ததுபோல, பிள், பிளத்தல் என்ற வேரிற்பிறந்து, பிளந்துகொண்டு தோன்றும் காரணத்தால் இருதிணைக்கும் உரிய விரவுப்பெயராகப் பிள்ளை என்ற சொல் தொல்காப்பியர்க்கு முன்பே தமிழ் மக்களால் பயன்படுத்தப் பெற்று வந்திருத்தல் வேண்டும். இளமைப் பெயராக வரும்பொழுது உயர்திணையில் வாராது என்றாரே தவிர, வளர்நிலையடைந்த மனிதரைக் குறிக்க இச்சொல் வாராது என்று யாண்டும் குறித்தாரல்லர். மேலும், குழவிப் பொருள் பயக்கும் சொல் வேறு, வளர்ச்சிபெற்ற மனிதரைச் சுட்டும் சொல்வேறு என்றும் சிந்தித்தல் கூடும். உருவ ஒப்புமையால் இரு சொற்களையும் ஒன்றெனக் கொள்ளுதல் தேவையில்லை. கிழவன் என்ற சொல் காதலனைக் குறித்தலும், முதுமையடைந்தவரைக் குறித்தலும் காண்க.

## II.5.1. ஐயத்திற்கு இடைச் செருகல் காரணம்

ஒருவர் படைத்த நூலில் ஈடுபட்டுப் படிப்போர் தம் வயம் இழந்து நூலாசிரியர் அனுபவத்துடன் ஒன்றிய நிலையில் பல பாடல்களைக் கட்டி விடுதல் தமிழ் வரலாறு கற்பிக்கும் உண்மையாகும். சீவக சிந்தாமணி, இராமாவதாரம், பெரிய புராணம் முதலிய காவியங்கள் சான்றாக உள்ளன. இவ்வாறு தொல்காப்பியம் பயின்ற புலவர் பெருமக்கள் தங்கள் காலப் புதுமைகளையும் தொல்காப்பியத்தில் ஏற்றி, பழமையாக வழங்கும் கருத்துக்களாக மருளவைத்தனர் என்பதற்குச் சில சான்றுகளைக் காண்போம்.

தொல்காப்பியத்தின் இறுதி இயல்களாகிய செய்யுளியல், மரபியல்களில் நூற்பா இடமாற்றங்களும், புதுவன இடம் பெறுதலும் குறிப்பிடற்பாலன. செய்யுளியலில்,

அவற்றுள்,

நூரலெனப் படுவது நுவலுங் காலை

முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகன்ற உரையொடு புணர்ந்து
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே
[தொல்.பொருள்.468]

என்று நூல் என்னும் வடிவத்திற்கு வரையறை கூறியுள்ளார். மேலும்,

ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த ஓத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்
றாங்கனை மரபின் இயலும் என்ப [தொல்.பொருள்.470]

என்றும் நூலின் நால்வகை உறுப்புக்களையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். மரபியலில் அதிகாரப் புறனடைக்குப் பிறகு (69) 43 நூற்பாக்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சில (92,93,94) புறநடைக்கு முன்பும், சில (96-99) செய்யுளியலிலும் இருத்தற்குரியன. வருணாசிரம தருமங்களையும், உயிர்ப் பாகுபாடுகளையும், நூல் இலக்கணங்களையும் கூறும் எஞ்சிய நூற்பாக்கள் யாவும் பிற்காலத்தவரின் காணிக்கையோ எனக் கருதுதற்குரியன. செய்யுளியலில் அடிவரையறையில்லாத செய்யுள் வடிவங்களில் நூலும் ஒன்று என்றும், அதன் அமைப்புத் திறம் இன்னதென்றும் கூறிய தொல்காப்பியர், மீண்டும் மரபியலில் (அதுவும் புறனடை கூறிய பிறகு), நூலின் இலக்கணம் கூறியிருப்பாரா? அந்நூற்பாவை இங்குக் காண்போம்,

ஒத்த சூத்திரம் உரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்
முப்பத் திருவகை உத்தியொடு புணரின்
நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்
[தொல்.பொருள்.644]

முன்கண்ட செய்யுளியல் நூற்பாவும், இம்மரபியல் நூற்பாவும் ஒருவர் எழுதியன என்று நம்மால் துணிய முடியவில்லை. பின்னது இடைச்செருகலாக வேண்டும். இதன் நடையும், பொருளும் ஊன்றி நோக்குவோர் இக்கருத்தினை உடன்படுவர். நூலின் உறுப்பாகிய சூத்திரத்தின் இயல்பினை,

அவற்றுள்,

சூத்திரம் தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே [தொல்.பொருள்.471]

என்று செய்யுளியலில் வரையறை கண்ட தொல்காப்பியர் மீண்டும் மரபியலில்,

மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சிலவகை எழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை உரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகித்
துளக்கல் ஆகாத் துணைமை எய்தி
அளக்கல் ஆகா அரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்தெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர் [தொல்.பொருள்.646]

என்று பாடியிருப்பாரா? முதல் நூற்பாவில் தன் கூற்றாகக் குறித்தவர், பின் நூற்பாவில் பிறர் கூறுவர் என்று பேசுதல் காண்க. ஒரே பொருள் பற்றிய இரு நூற்பாக்களில் ஒன்று (பின்னது) இடைச் செருகலாக எண்ணத்தக்கது. மரபியலில், அதிகாரப் புறனடைக்குப் பிறகு இந்நூற்பா இருத்தல் நம் கருத்திற்கு அரணாகிறது.

அதிகாரப் புறனடைக்குப் பிறகு நூல் முழுமைக்கும் உரிய புறனடை இருந்திருத்தல் வேண்டும். மரபியல் என்ற தலைப்பின் பொருளைப் புரிந்து கொள்ளாத பிற்காலத்தவர் மரபு = சாதி எனக்கொண்டு சாதிகளைப் பற்றிய நூற்பாக்களைப் (71-85) புனைந்து சேர்த்தனர் போலும்! அதிகாரப் புறனடைக்குப் பிறகு காணப்படும் நூல், சூத்திரம், காண்டிகை, உரை, பத்துவகைக் குற்றம், முப்பத்திரண்டு தந்திரவுத்திகள் (நூ.100-102) முதலியன எல்லாம், சங்கம் மருவிய காலத்தும் பின்னரும் எழுதப்பெற்ற உரைகளிலும் இலக்கண நூல்களிலும் இடம்பெற்றவை சற்று உருமாறித் தொல்காப்பியப் பிற்சேர்க்கையாக ஒட்டப்பெற்றன என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு அதிகாரத்திற்கும் புறனடை கூறும் தொல்காப்பியர், பொருளதிகாரத்திற்கு மட்டும் புறனடை கூறாது தந்திரவுத்தி கூறி நூலை முடித்திருப்பாரா? இடைச்செருகல் உண்மையினை உடன்படுவார், தொல்காப்பியர் நடையினாலும் மொழியமைப்பாலும் ஒருவரே என்பதை ஏற்பர்.

## II.5.2 தொல்காப்பியர் ஒருவரே

கபிலர் ஔவையார் முதலியோரைப் பலர் என்று கணிப்பவர் அவர்தம் மொழிநடை வேறுபாடுகளைக் காட்டுவர். தொல்காப்பியர் இருவர் என்போர் சில முரண்களைத் தவிர மொழிநடை வேறுபாடு காட்ட முயலார். ஏன் எனின் மூன்று அதிகாரங்களிலும் நூற்பா அமைப்பும், சொற்பயிற்சியும், ஓசையொழுங்கும் ஒத்திருக்கக் காண்கிறோம். சான்றாக இரண்டொன்று கூறுவோம். அலங்கடை, அவைதாம், அன்றியனைத்தும், அன்ன பிறவும், ஆகும், ஆகா, இம்பர், என்மனார், என்ப, ஓரன்ன, சிவணும், தெரியுங்காலை, தேருங்காலை, நினையுங்காலை, வரையார், வேண்டும் முதலிய பல சொல்வழக்குப் பெரும்பாலும் நூல் முழுமையும் ஆசிரியரின் முத்திரைச் சொற்கள் போல் காணப்படுகின்றன. **முதலிரண்டு அதிகாரங்களைவிடப் பொருளதிகாரத்தில்தான் தொல்காப்பியர் வாய்விட்டுக் கூடுதலாகப் பேசவேண்டிய வாய்ப்பு கிடைக்கிறது.** சிலப்பதிகாரக் காதைகள் போல் நீண்ட நூற்பாக்களைப் பொருளதிகாரத்தில் காண்கிறோம். பேச எடுத்தக்கொண்ட பொருள் விரிவினை இந்நூற்பா விசுவரூபம் எடுத்துக் காட்டுகிறது.

சொல்லொப்புமைகள் தவிர, தொடர்கள் அடிகள் கூட மூன்று அதிகாரங்களிலும் ஒத்துக் காணப்படுகின்றன. சில சான்றுகளைக் காண்போம்.

1. அவைதாம்,
   **இயற்கைய வாகும் செயற்கைய என்ப** - எழுத்து.197
   அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்
   **இயற்கைய வாகும் செயற்கைய என்ப** - சொல். 125
2. ணனவென் புள்ளிமுன் யாவும் ஞாவும்
   **வினையோ ரனைய என்மனார் புலவர்** - எழுத்து. 146
   அம்முக் கிளவியும் சினைவினை தோன்றின்
   சினையொடு முடியா முதலொடு முடியினும்
   **வினையோ ரனைய என்மனார் புலவர்** - சொல். 213
3. உப்ப காரம் ஒன்றென மொழிப
   **இருவயின் நிலையும் பொருட்டா கும்மே** - எழுத்து. 76
   இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி
   **இருவயின் நிலையும் பொருட்டா கும்மே** - சொல். 243
4. **எஞ்சிய எல்லாம் எஞ்சுதல் இலவே** - எழுத்து. 77
   **எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே** - பொருள். 45
5. **அகத்தெழு வளியிசை அரில்தப நாடி** - எழுத்து. 102
   அங்கதம் தானே **அரில்தபத்** தெரியின் - பொருள். 294

அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே - பொருள். 59

6. ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே - எழுத்து. 203
ஞாங்கர்க் கிளந்த மூன்றுபொரு ளாக - பொருள். 139

இத்தகைய ஒப்புமைகள் தொல்காப்பியம் ஒருவரால் இயற்றப் பெற்றது என்னும் உண்மைக்கு ஆதாரமாகும்.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களினால் அமைந்துள்ள பேரிலக்கண நூலாகும். ஒவ்வோரதிகாரத்திலும் ஒன்பது இயல்கள் இடம்பெறும்படி ஓர் அமைப்பொழுங்கினைப் (Structural Pattern) பேணியுள்ள திறத்தாலும் இந்நூல் தொல்காப்பியர் ஒருவரால் இயற்றப்பெற்றது என்ற உண்மை உறுதியாகிறது.

இனி, இந்நூல் நுதலும் பொருளைச் சுருக்கமாகக் காண்போம்.

### II.5.3. தொல்காப்பியம் நுதலும் பொருள்

எழுத்திலக்கணத்தின் அமைப்பியலை எழுத்ததிகாரத்தில் தொல்காப்பியர் விரிவாக விளக்கியுள்ளார். எழுத்தினால் ஆக்கம் பெறும் சொற்களின் இலக்கணத்தினையும், சொற்களினால் உண்டாகும் தொடர்களின் அமைப்பினையும் சொல்லதிகாரத்தில் தெளிவாகப் புலப்படுத்தினார். சொற்களினால் உணர்த்தப்பெறும் பொருள் இலக்கணத்தைப் பொருளதிகாரத்தில் விரிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளார். ஒவ்வொரு அதிகாரத்திலும் கூறப்படும் பொருளைச் சுருக்கமாகக் காண்போம்.

### II.5.3.1. எழுத்ததிகாரம் நுதலும் பொருள்

இவ்வதிகாரத்தின் முதல் இயலாக அமைந்துள்ள **நூல்மரபில்**, எழுத்துக்களின் எண்ணிக்கை, பெயர், வகைமை, நெடுங்கணக்கில் வழங்குதற்குரிய முறைமை, வடிவம், சுட்டு, வினா பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றன. எழுத்துக்களை உயிர், மெய் என்றும்; உயிரெழுத்தினைக் குறில், நெடில் என்றும்; மெய்யெழுத்தினை வல்லினம், மெல்லினம், இடையினம் என்றும் முந்தையோர் கூறிய முறைப்படி பாகுபாடு செய்துள்ளார். குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற சார்பு எழுத்துக்களையும் குறித்துள்ளார். **மொழிமரபின்** தொடக்கத்தில் நூல்மரபின் ஒழிபாகச் சில எழுத்து மரபுகளும், ஒரு சொல்லிற்கு (-மொழிக்கு) முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் எழுத்துக்கள் வழங்கும் முறைமையும் [Distribution of Phonemes]இடம்பெற்றன. **பிறப்பியலில்**,

மொழிக்கு அடிப்படையாய் உள்ள பேச்சொலிகளின் [Speech Sounds] பிறப்பின் இலக்கணத்தை மொழியியல் உணர்வுடன் தொல்காப்பியர் கூறியுள்ளார். உந்தியினின்றும் (-கொப்பூழினின்றும்) எழும்பும் காற்று நெஞ்சு, மிடறு, தலை, மூக்கு, அண்ணம், நா, பல், இதழ் என்ற எட்டு உறுப்புக்களில் [Organs of speech] பொருந்தி வெளிப்படுதலால் பேச்சொலிகள் பிறக்கின்றன என்று தெளிவுறுத்தினார். நிலைமொழியும் வருமொழியுமாகச் சொற்கள் நின்று இயைந்து வழங்கும் முறைமையின் பொதுவிலக்கணம் **புணரியலில்** கூறப்பெற்றது. உயிரீறு, மெய்யீறு என்ற ஈறுகளுக்குப் பின்னர் விரித்தோதக் கருதிய புணர்ச்சி இலக்கணத்தின் பொதுவிலக்கணங்களைத் **தொகைமரபில்** தொகுத்துக் கூறினார். வேற்றுமை உருபுகள் பெயர்ச் சொற்களோடு இணைந்து வழங்கும் இலக்கண முறைமையினை **உருபியலில்** விளக்கினார். **உயிர்மயங்கியலில்** உயிரீற்று நிலைமொழிகள் பெரும்பான்மை வல்லெழுத்து முதன்மொழிகளோடும் சிறுபான்மை ஏனை எழுத்துக்களில் தொடங்கும் வருமொழிகளோடும் புணரும் இலக்கணத்தினை மிக விரிவாக விளக்கியுள்ளார். **மயங்குதல்** என்ற சொல் **கலத்தல்** என்ற பொருளில் வந்தது. மெய்யீற்று நிலைமொழிச் சொற்கள் பெரும்பான்மையும் வல்லெழுத்தோடும் சிறுபான்மை பிற எழுத்தோடும் தொடங்கும் வருமொழிச் சொற்களுடன் புணரும் இலக்கணத்தைப் **புள்ளிமயங்கியலில்** விரித்துக் கூறினார். தமிழில் குற்றியலுகர வீற்றுச் சொற்கள் மிகுதி என்பதால், அவற்றின் புணர்ச்சி இலக்கணத்தினைக் கூறுதற்காகவே **குற்றியலுகரப் புணரியலை** அமைத்துள்ளார். எழுத்ததிகாரத்தில் பின் ஆறு இயல்களும் புணர்ச்சி இலக்கணம் கூறுவன. எனவே, தொடரமைப்பில் சந்திப்பிழை வரக்கூடாது; மொழியின் ஒலிப்புத்தூய்மை காக்கப்படுதல் வேண்டும் என்ற கொள்கையில் தொல்காப்பியர் கருத்தூன்றியிருந்தார் என்பது புலனாகும். தொல்காப்பியம் விளக்க இலக்கணம் [Descriptive Grammar] என்பது குறிப்பிடத்தக்கது.

### II.5.3.2. சொல்லதிகாரம் நுதலும் பொருள்

சொல்லதிகாரத்தின் அமைப்பு தனித்தன்மை வாய்ந்தது. தமிழ் மொழிக்குரிய அடிப்படைச் சொற்களாகிய பெயர், வினை, இடை, உரி என்பன நான்கிற்கும் உரிய இலக்கணத்தை எடுத்த எடுப்பில் தொல்காப்பியர் கூறவில்லை. சொற்களின் பொது இலக்கணத்தையும் அவற்றால் உருவாகும் தொடர்களின் [Phrases and Sentences] இலக்கணத்தையும் இவ்வதிகாரத்தின் முதல் இயலாகிய **கிளவியாக்கத்தில்** விரித்து விளக்கியுள்ளார். சொற்களை

1. உயர்திணையை உணர்த்துவன 2. அஃறிணையை உணர்த்துவன என்று பாகுபடுத்தியுள்ளார். இத்தகைய சொற்பாகுபாடு **வடமொழியிற் காணப்படவில்லை என்பதைச் சிவஞான முனிவர் தொல்காப்பியச் சூத்திர விருத்தியில் குறித்துள்ளார்.** உயர்திணைக்குரிய ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகியவற்றைக் குறிக்கும் ஈறுகளையும் சுட்டியுள்ளார். அவ்வாறே அஃறிணைக்குரிய ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவற்றைக் குறிக்கும் ஈறுகளையும் கூறியுள்ளார். எழுவாய் பயனிலை என்றமையும் தொடரில் எழுவாயின் இறுதியில் வரும் பாலுணர்த்தும் ஈறும் பயனிலையின் இறுதியில் வரும் பாலுணர்த்தும் ஈறும் ஒத்திருத்தல் வேண்டும் [Concordance] என்றும் மாறுபடக்கூடாதென்றும் அரிய தொடரிலக்கணத்தை [Syntax] வரையறுத்துள்ளார். வழுக்களைந்து சொற்களையும் தொடர்களையும் அமைத்துக் கொள்ளும் முறைமையினை உணர்த்துவதால் இவ்வியல் **கிளவியாக்கம்** என்று பெயர் பெற்றது என்பர் சேனாவரையர். உலகியலில் வினாவும் விடையுமாக வரும் தொடர்கள் வழுவின்றி அமைய வேண்டிய முறையினையும் தெளிவுறுத்தியுள்ளார். பல்வேறு தொடரமைப்புக்களுக்கும் இலக்கணம் கூறும் கிளவியாக்கத்தினை **முதல் தொடரிலக்கண நூல்** என்று மதிப்பிடுதல் பொருந்தும்.

பெயர்ச் சொற்களுக்கு இலக்கணம் கூறுவதற்கு முன்னர், அவையேற்று வரும் வேற்றுமையுருபுக்கு மூன்றியல்களில் விளக்க இலக்கணம் கூறினார். தொல்லாசிரியர்கள் எழுவாய் முதல் ஏழு வேற்றுமைகளையே கூறினர். **பெயர்ப் பொருளை வேறுபடுத்திக் காட்டுவதால் வேற்றுமை எனப் பெயர் பெற்றது என்பர் தெய்வச்சிலையார்.** கிளவியாக்கத்தினை அடுத்து வரும் வேற்றுமையியலில், ஒவ்வொரு வேற்றுமையினையும் எடுத்தோதி, அவை இன்ன இன்ன பொருளைச் சுட்டி வரும்பொழுது பெயர்ப்பொருளை வேறுபடுத்திக் காட்டும் பாங்கினையும் விளக்கினார். வேற்றுமை தம்முள் மயங்கி வருதலை விளக்குவது **வேற்றுமை மயங்கியல்** ஆகும். வேற்றுமை மயக்கம் **1. பொருள் மயக்கம் 2. உருபு மயக்கம்** என்று இருவகைப்படும். தனக்கு வரையறுக்கப்பட்ட பொருளை விட்டுக் கொடுக்காமல் மற்றொன்றிற்குரிய பொருளில் வருதல் **வேற்றுமைப் பொருள் மயக்கம்** எனப்படும். தன் பொருளை இழந்து மற்றொன்றின் பொருளில் வருதல் **வேற்றுமை உருபு மயக்கம்** எனப்படும். **உயிரீற்று** மெய்யீற்றுப் பெயர்கள் விளி ஏற்று வரும் முறைமையினைக் கூறும் பகுதி **விளிமரபு** ஆகும்.

கிளவியாக்கத்தின் இம்மூன்று இயல்களும் இவ்வதிகாரத்தின் இறுதியில் இடம்பெற்றுள்ள எச்சவியலும் தொடரிலக்கணம் கூறுவனவாகும்.

**பெயரியலில்** உயர்திணைப்பெயர், அஃறிணைப் பெயர், இருதிணைக்கும் பொதுவாக வரும் விரவுப்பெயர் ஆகியவற்றின் இலக்கணத்தைத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். வினைச்சொல்லின் பொதுவிலக்கணமும், வினைச்சொற்களின் பாகுபாடும் அவற்றுக்குரிய ஈறுகளும் **வினையியலில்** விரிவாக விளக்கப் பெற்றன.

வினைச்சொல் என்பது வினை முற்றினைக் குறிப்பதுடன் பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவற்றையும் குறிக்கும் என்பது எண்ணத்தக்கது. சாரியை, காலம்காட்டும் கூறுகள், வேற்றுமை உருபு, அசைநிலை, இசைநிறை, குறிப்புப் பொருள் உணர்த்துவன, உவம உருபு ஆகிய ஏழனையும் இடைச்சொற்கள் என்று **இடையியலின்** முதல் நூற்பாவில் தொகுத்துக் கூறினார். பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் இடமாகத் தோன்றுதலால் இடைச்சொல் ஆயிற்று என்று தெய்வச்சிலையார் விளக்கினார். இடம் → இடை என்றாதற்கு உவமம் → உவமை, குலை → குலம் என்றாதல் சான்றாகும்.இவ்வியலில் அசைநிலை, இசைநிறை, குறிப்பு என்ற இடைச் சொற்களுக்கு மட்டும் இலக்கணம் கூறினார். ஏனையவற்றுக்குத் தொடர்புடைய பிற இயல்களில் இலக்கணம் கூறியுள்ளார்.

உரிச்சொல் என்பது செய்யுளில் சிறப்பாக வழங்குவதற்குரிய சொற்களைக் குறிக்கும். இவை பலபொருள் ஒரு சொல்லாகவும் [Homonyms] ஒருபொருட் பன்மொழியாகவும் [Synonyms] வழங்குவன. **உரியியலில்** நூற்றிருபது உரிச்சொற்களின் பொருளை விளக்கியுள்ளார். **பின்னர் எழுந்த நிகண்டுகளுக்கெல்லாம் தாயாக விளங்குவது உரியியல் ஆகும்.**

இதுகாறும் சொல்லாமல் விடுபட்ட (எஞ்சியவற்றை) சொல்லிலக்கணக் கூறுகளைக் கூறுவதாலும், பத்துவகை எச்சங்களைப் பற்றிக் கூறுவதாலும் **எச்சவியல்** எனப் பெயர் பெற்றது என்பர் உரையாசிரியர்கள். செய்யுளில் பயின்று வரும் சொற்களை **1. இயற்சொல், 2. திரிசொல், 3. திசைச்சொல், 4. வடசொல்** என்று இவ்வியலின் முதல் நூற்பாவில் தொல்காப்பியர் பாகுபடுத்தினார். நிரல்நிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்ற நால்வகைப் பொருள்கோள்கள், வேற்றுமைத்தொகை உள்ளிட்ட அறுவகைத் தொகைகள், பிரிநிலை உள்ளிட்ட பத்து வகை எச்சங்கள், சில சொல்

மரபுகள் என்பன பற்றிய இலக்கணம் இவ்வியலில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன.

### II.5.3.3. பொருளதிகாரம் நுதலும் பொருள்

பொருள் என்ற சொல் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்றனையும் குறிக்கும். செய்யுளில் பாடுதற்குரிய பொருள் இவையேயாகும். உலகப் பொருள்கள், வாழ்வியற் கூறுகள் உள்ளிட்ட யாவும் இவற்றுள் அடங்கும். பொருள் என்ற சொல் குறிப்பாக அகப்பொருள், புறப்பொருள் என்ற மக்களின் ஒழுகலாறுகளின் ஒட்டுமொத்தத்தினையும் சிறப்பாகச் சுட்டுகிறது. இவற்றை வாழ்விற்குரிய பொருள் என்பதாலும் மக்கள் வாழ்வுதான் செய்யுளில் பொருளாகப் பாடப்பெறுவதற்குரியது என்பதாலும் உரிப்பொருள் என்று தொல்லாசிரியர் வழிநின்று தொல்காப்பியர் குறித்துள்ளார். முதற்பொருளும், கருப்பொருளும், உரிப்பொருளாகிய வாழ்வியலுக்கு உறுதுணையாக அமைந்துள்ளவையாகும். இத்தகைய பொருட்கோட்பாடு தமிழ்மொழிக்கே உரிய தனிச்சிறப்பு வாய்ந்தது என்பதும் வடமொழியில் சொல்லப்படாதது என்பதும் இருமொழிகளிலும் புலமை பெற்ற சிவஞான முனிவரின் முடிந்த கருத்தாகும்.

சிறந்த இலக்கியப் படைப்பிற்குரிய நான்கு மூலக்கூறுகளாக 1. பொருள், 2. கற்பனை, 3. உணர்ச்சி, 4. வடிவம் என்பனவற்றை சி.டி.வின்செஸ்டர் என்ற திறனாய்வாளர், **Some Principles of Literary Criticism** என்ற நூலில் தெளிவாக விளக்கியுள்ளார். இந்நான்கு இலக்கியக் கூறுகளையும் 2,500 ஆண்டுகட்கு முன்பே தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் விரித்துக் கூறியுள்ளார் என்பது ஊன்றி நோக்கத்தக்கது. அவர் காலத்தில் இலக்கியத்தினைச் செய்யுள் என்று கூறிவந்தனர். பல்வகை உறுப்புக்களும் பொருந்தச் செய்யப்படுதலின் செய்யுள் என்றனர். இதன் முதல் உறுப்பாகப் பொருள் [Substance or Theme] உள்ளது. இந்தப் பொருளிலும் நனி சிறந்து விளங்கிய காதல் ஒழுக்கமாகிய அகப்பொருள் பற்றிய இலக்கணக் கூறுகளை அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியலில் சில பகுதிகள் ஆகிவற்றில் தொல்காப்பியர் விரிவாகப் பேசியுள்ளார். வீர ஒழுக்கமாகிய புறத்திணைக் கூறுகளைப் புறத்திணையியலில் விளக்கினார். எனவே, முதல் ஐந்து இயல்களிலும் இலக்கியத்தின் முதன்மை உறுப்பாகிய பொருள் பற்றிய வரையறைகள் கூறப்பெற்றன. படைப்பாளர் கற்பனை ஆற்றல் தோன்றப் பொருளை எடுத்துப் பாடுதல் வேண்டும். ஆதலின், கற்பனை [Imagination] பற்றிய அடிப்படைக் கருத்துக்களை உவமவியலில் விளக்கியுள்ளார். இலக்கியத்தின் மூன்றாவது

உறுப்பாகிய உணர்ச்சி [Emotion] பற்றி மெய்ப்பாட்டியலில் விரிவாகக் கூறியுள்ளார். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், உவகை, வெகுளி என்ற எண்வகை உணர்ச்சி வேறுபாடுகளையும் அவை தோன்றுவதற்குரிய நிலைக் கலங்களையும் இன்னோரன்ன பிறவற்றையும் இவ்வியலில் எடுத்துப் பேசியுள்ளார்.

பொருள், கற்பனை, உணர்ச்சி என்பனவற்றை தகுந்த, ஆற்றல் மிக்க வடிவத்தில் [Form or Structure] எடுத்துக்கூற வேண்டும் என்ற திறனாய்வுக் கோட்பாட்டிற்கு ஏற்பச் **செய்யுளியலை** அமைத்துள்ளார். தொல்காப்பியர் கூறியுள்ள வெண்பா, ஆசிரியம், கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய பாவகைகளும்; பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் உள்ளிட்ட இலக்கிய வகைகளும் [Literary Genres] தமிழகத்திற்கே உரியவை என்பதனை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். தொல்காப்பியர்,

*வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்*
*நூற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்*
*யாப்பின் வழியது என்மனார் புலவர்* [தொல்.பொருள்.384]

என்று இயம்புதல் இவண் எண்ணுதற்குரியது. இளம்பூரணர்,

வளவிய புகழையுடைய சேரன், பாண்டியன், சோழன்
என்னும் மூவரது தமிழ் நாட்டகத்தவர் வழங்கும் தொடர்
மொழிக்கண் வரும்மொழி யாப்பாவது

என்று விளக்குதல் காணத்தக்கது. புறநானூற்றின் முதல் 86 பாக்கள் சேரன், பாண்டியன், சோழன் என்ற வரிசையில் தொகுக்கப்பட்டிருத்தல் ஊன்றி நோக்கத்தக்கது.

இவ்வதிகாரத்தின் இறுதியில் உள்ள மரபியலில் சில சொல்மரபுகளை உணர்த்தியுள்ளார். சொல்லதிகாரத்தில் உயர்திணைக்குரிய ஆண்பால், பெண்பால் என்ற பாகுபாட்டினைக் கூறிய தொல்காப்பியர் [Grammatical or Morphological Classification of Gender] மரபியலில் அஃறிணைக்குரிய இளமைப்பெயர், ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர் பற்றிய சொல் மரபுகளை பொருண்மை அடிப்படையில் [Semantic Classification of Gender] உணர்த்தியுள்ளார். உணர்வின் அடிப்படையில் பல்வகை உயிர்களை ஆறுவகையாகப் பகுத்துக் கூறும் தமிழ் மரபும் கூறப்பெறுதலாலும் மரபியல் எனப் பெயர் பெற்றது எனலாம். தமிழகத்துச் சமணர்களாகிய **உமா சுவாமி** (கி.பி.50), **குந்தகுந்தர்** (கி.பி.50)

உள்ளிட்டோர் உயிர்வகைப் பாகுபாடு பற்றி தமிழகத்தில் வழங்கிய கருத்தினைத் தம் பிராகிருத நூல்களின் வழி மற்றையோர்க்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

பொருளதிகாரத்தின் புறனடையாக 'குரங்கினுள் ஏற்றை' [613] என்ற நூற்பா அமைந்துள்ளது. அதனுடன் நூல் முடிந்துவிட்டது என்பதுதான் புறனடை நூற்பாவின் அமைப்பு உணர்த்தும் பொருளாகும். அதற்குப் பின் இடம்பெறும் நூற்பாக்கள் பலவும் பின்வந்தோரால் எழுதி இணைக்கப்பெற்றவை என்பது ஆராய்ச்சி அறிஞர்களின் கருத்தாகும். **மரபு** என்ற சொல் **நூல்மரபு, மொழி மரபு** என்பனபோல ஒருசில சொற்களை வழங்கும் முறைமையினை உணர்த்தும் சொல்லாகவே அமைந்துள்ளது. பின்வந்தோர் **மரபு-சாதி** எனப் பொருள் கொண்டு சாதிப்பாகுபாடு பற்றிய நூற்பாக்களை எழுதிச் சேர்த்துவிட்டனர் என்பது முன்பும் சொல்லப்பட்டது. மகாபாரதம், இராமாயணம் உள்ளிட்ட வடமொழி இதிகாசங்களிலும் இடைச் செருகல்கள் காணப்படுதல் போல், மிகப் பெரியதும் தொன்மை மிக்கதும் ஆகிய **தொல்காப்பியத்தில்** காலப்போக்கில் இடைச்செருகல், பிற்சேர்க்கை காணப்படுவதில் வியப்பில்லை.

## II.6. தொல்காப்பிய உரையாசிரியர்கள்

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகிய மூன்று அதிகாரங்களிலும் அடங்கியுள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை *1595* என்று இளம்பூரணர் கொண்டனர். ஒரு சில நூற்பாக்களை இரண்டாக்கிக் கொண்டமையால் இவற்றின் தொகை *1611* என்று நச்சினார்க்கினியரின் உரைவழி அறியப்படும்.

தொல்காப்பியம் முழுமைக்கும் முதன் முதல் உரை எழுதியவர் என்ற காரணத்தினால் இளம்பூரணரை **உரையாசிரியர்** என்று காரண இடுகுறியாகக் கூறுதல் மரபாகும். இவர் காலம் கி.பி.11 ஆம் நூற்றாண்டு. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரத்தின் முதல் ஐந்தியல்கள், செய்யுளியலுக்கும் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். ஏனை இயல்களுக்கும் இவர் உரை எழுதியிருத்தல் வேண்டும். அப்பகுதி கிடைக்கவில்லை. இவர் காலம் கி.பி.பதினான்கு அல்லது பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பது பலரின் கருத்தாகும். சொல்லதிகாரத்திற்குச் **சேனாவரையர்** (கி.பி.12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி), **தெய்வச்சிலையார்** (கி.பி.13 நூ.), **கல்லாடர்** (கி.பி.13 நூ.) உள்ளிட்டோர் உரை எழுதியுள்ளார். திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரையினைப் போன்றும், சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லாரின் உரையினைப்

போன்றும், யாப்பருங்கலத்துக்குக் குணசாகரர் உரையினைப் போன்றும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரை போற்றப்படுகிறது. மொழியியல் உணர்வுடன் உரை எழுதிய சிறப்புக்குரியவர் தெய்வச் சிலையார். ஏனைய உரைகளில் காணப்படாத பல புதிய, அரிய கருத்துக்களை இவர் உரையில் காணலாம். பொருளதிகாரத்தின் பின் நான்கு இயல்களுக்குப் பேருரை கண்டவர் பேராசிரியர் (கி.பி.12 நூ. பிற்பகுதி) ஆவர். பல அரிய சிந்தனைகளையும் விளக்கங்களையும் இவர் உரையால் உணரலாம்.

பழைய உரைகளை அடிப்படையாகக் கொண்டு பலர் புதிய விளக்கங்களைச் சிவஞான முனிவர், அரசஞ் சண்முகனார் உள்ளிட்ட அறிஞர் காலம் முதல் எழுதி வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியம் தோன்றிய 1500 ஆண்டுகட்குப்பின் அதன் உரையாசிரியர் இளம்பூரணர் தோன்றினர் என்பதற்காகச் சிலர் அதன் காலம் கி.பி.11 ஆம் நூற்றாண்டு எனக் கூறினர். பழைமை வாய்ந்த சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம் உள்ளிட்ட இலக்கியங்களின் உரையாசிரியர்கள் மூல நூல்களுக்குப் பற்பல நூறு ஆண்டுகட்குப் பின் வந்தவர் என்பது கருத்தில் கொள்ளுதற்கு உரியது. அன்றியும் வடமொழி இலக்கிய மரபிலும் இப்போக்கு காணப்படுதற்கு இரண்டொரு சான்றுகள் கூறுதல் தகும். மகாகவி காளிதாசரின் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு என்றும் கி.பி.4 ஆம் நூற்றாண்டு என்றும் இருவேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. ஆனால் அவருடைய இலக்கியப் படைப்புக்களாகிய குமார சம்பவம், இரகுவம்சம், சாகுந்தலம் ஆகியவற்றுக்கு உரை எழுதிய மல்லிநாதர் கி.பி.15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது அறிஞர்களின் ஒருமித்த கருத்தாகும். கி.மு.300 என்ற காலப்பகுதியில் பரதமுனிவர் எழுதிய நாட்டிய சாத்திரத்திற்கு அபிநவ பாரதி என்ற உரை எழுதிய அபிநவ குப்தர் கி.பி.11 ஆம் நூற்றாண்டினர் ஆவர். நெடுங்காலம் வரையும் ஆசிரியர் மாணவரிடையே வாய்மொழியாகப் பாடம் ஓதப்பெற்று வந்த தொல்காப்பியம் உள்ளிட்ட மேற்சுட்டப் பெற்ற நூல்கள், எழுத்துருவில் அமைந்த உரைகள்தாம் எளிதிற் கற்பதற்குப் பயன்படும் என்ற நிலை தோன்றிய பிற்காலத்தில் இளம்பூரணர் உள்ளிட்டார் உரை வரைந்துள்ளனர் என்பது தெள்ளிதிற் புலனாகும்.

# III. பத்துப்பாட்டு

## III.1. அறிமுகம்

தமிழ்விடு தூது என்னும் சிற்றிலக்கியத்தைப் பாடிய புலவர்,

முத்தோர்கள்
பாடி யருள்பத்துப் பாட்டும்எட் டுத்தொகையும்
கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும்

என்று பழைய செவ்வியல் இலக்கியங்களைக் குறிப்பிட்டுள்ளார். அடிகளை அளந்து சங்கப்பாக்களைத் தொகுத்த சான்றோர் எட்டுத்தொகையில் 13 அடி முதல் 31 அடி வரை பயின்றுள்ள நானூறு பாக்களை நெடுந்தொகை (-அகநானூறு) என்று தொகுத்தனர். அவற்றினும் மிக நீண்டு வரும் பாட்டுக்கள் பத்தினைப் பத்துப்பாட்டு என்று தொகுத்துள்ளார். ஆசிரிய யாப்பிற்குப் பேரெல்லை ஆயிரம் அடி என்றும் சிற்றெல்லை மூன்றடி என்றும் தொல்காப்பியர் இலக்கணம் கூறியுள்ளார் (தொல். பொருள். 459). இந்நூற்பாவின் உரையில், "... பெரிய பாட்டு **பத்துப்பாட்டினுள்ளும்** சிலப்பதிகாரத்துள்ளும் மணிமேகலையுள்ளும் கண்டு கொள்க" என்று இளம்பூரணர் பத்துப்பாட்டினைச் சுட்டியுள்ளார். எனவே, இளம்பூரணர் காலத்திற்கு முன்பே பத்துப்பாட்டு தொகுக்கப்பெற்றிருத்தல் வேண்டும் என்பது புலனாகும். ஆயினும் கடைச்சங்க இலக்கியங்களைக் கூறும் இறையனார் அகப்பொருள் உரையில் நெடுந்தொகை நானூறும் உள்ளிட்ட எட்டுத்தொகை இலக்கியங்களே கூறப்பெற்றமையால், எட்டுத்தொகை தொகுக்கப் பெற்ற பின்னரே பத்துப்பாட்டு தொகுக்கப் பெற்றிருத்தல் வேண்டும் என்று எண்ண வேண்டியுள்ளது. அகநானூற்றிலும், நற்றிணையிலும் **மதுரைக்காஞ்சிப்புலவன்** என்ற பெயரினால் மருதனிளநாகனார் குறிக்கப்பெறுவதனால். அகநானூறு, நற்றிணை ஆகியவற்றில் காணப்படும் அவருடைய பாடல்களைப் பாடுவதற்கு முன்னரே பத்துப்பாட்டுள் ஒன்றாகிய மதுரைக்காஞ்சியைப் பாடியுள்ளார் என்பது தெளிவாகும், எனவே, பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் தொகுக்கப் பெற்ற காலம் பெருமளவில் வேறுபடவில்லை என்பதும் கூடக் குறைய ஒரு காலத்தில் தொகுக்கப்பெற்றன என்பதும் எண்ணுதற்கு உரியன.

## III.2. பத்துப்பாட்டின் தலைவர்களும் பாடியோரும்

பத்துப்பாட்டில் 1. திருமுருகாற்றுப்படை, 2. பொருநராற்றுப்படை, 3. சிறுபாணாற்றுப்படை, 4. பெரும்பாணாற்றுப்படை, 5. முல்லைப்பாட்டு 6. மதுரைக்காஞ்சி, 7. நெடுநல்வாடை, 8. குறிஞ்சிப்பாட்டு, 9. பட்டினப்பாலை, 10.

மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படை என்னும் பத்து நெடிய பாட்டுக்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் 782 அடியுடைய மதுரைக்காஞ்சி யாவற்றையும் விட மிகப்பெரிய பாட்டு என்பதும் 103 அடியுடைய முல்லைப்பாட்டு மிகச் சிறியது என்பதும் சுட்டத்தகுவன. இவற்றுள் கரிகாற்பெருவளத்தானைப் பாட்டுடைய தலைவனாகக் கொண்டு பாடப் பெற்றவை **பொருநராற்றுப்படையும், பட்டினப்பாலையும்** ஆகும். இவற்றை முறையே பாடிய புலவர்கள் முடத்தாமக் **கண்ணியாரும் கடியலூர் உருத்திரங்கண்ணாரும்** ஆவர். இவருள் கடியலூர் உருத்திரங்கண்ணனார் காஞ்சிமாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த தொண்டைமான் **இளந்திரையனைப் பெரும்பாணாற்றுப்படையில்** பாடியுள்ளார். ஆதலின், பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை என்பன மூன்றும் ஒரு காலத்தன ஆகும்.

**மதுரைக்காஞ்சியும், நெடுநல்வாடையும்** பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றிய பாட்டுக்கள். இவற்றை முறையே **மாங்குடி மருதனாரும்** மதுரைக்கணக்காயனார் மகனார் **நக்கீரனாரும்** பாடியுள்ளனர். **முல்லைப்பாட்டின்** பொருளமைதியை ஆராய்ந்த அறிஞர்கள் அதற்கும் பாட்டுடைத் தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியனாக இருத்தல் வேண்டும் என்று எண்ணுகின்றனர். இதனைப் பாடியவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் ஆவர். நெடுநல்வாடையினைப் பாடிய நக்கீரரே திருமுருகாற்றுப்படையினையும் பாடியவர் என்பது ஆராய்ச்சியால் புலனாவதால் **முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, திருமுருகாற்றுப்படை** என்பன நான்கும் ஒரு காலத்தன ஆகும். ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடியது **குறிஞ்சிப்பாட்டு** ஆகும். நக்கீரர், நப்பசலையார் முதலிய புலவர்களால் கபிலர் போற்றப் பெற்றுள்ளதால், அவருடைய குறிஞ்சிப்பாட்டு பத்துப்பாடில் காலப்பழமை வாய்ந்தது எனலாம்.

**நன்னன்சேய் நன்னனைப்** பெருங்குன்றூர்ப் **பெருங்கௌசிகனார்** பாடியுள்ள **மலைபடுகடாமும்** தொன்மைமிக்க பாட்டாகக் கருதப்படுகிறது. மூவேந்தர்களையும் கடையெழுவள்ளல்களையும் சுட்டும் **சிறுபாணாற்றுப்படை நல்லூர் நத்தத்தனாரால்** பாடப்பெற்றது. இதுவே பத்துப்பாட்டில் காலத்தால் பிற்பட்ட பாட்டாகக் கொள்ளப்படுகிறது. பத்துப்பாட்டின் தலைவரையும் பாடிய புலவரையும் கால

அடிப்படையில் பின்வருமாறு அட்டவணைப்படுத்திக் கூறலாம். இவர்கள் வாழ்ந்த காலம் கி.மு. 200-கி.பி. 200 ஆகும்.

| வ. எண் | பாட்டு | பொருள் | தலைவர் | புலவர் |
|---|---|---|---|---|
| 1. | குறிஞ்சிப்பாட்டு 261 அடி | அகம் | பிரகத்தன் | கபிலர் |
| 2. | மலைபடுகடாம் 583 அடி | புறம் | நன்னன்சேய் நன்னன் | பெருங்கௌசிகனார் |
| 3. | பொருநராற்றுப்படை 248 அடி | புறம் | கரிகாற் பெருவளத்தான் | முடத்தாமக்கண்ணியார் |
| 4. | பட்டினப்பாலை 301 அடி | புறம் | கரிகாற் பெருவளத்தான் | உருத்திரங்கண்ணனார் |
| 5. | பெரும்பாணாற்றுப் படை 500 அடி | புறம் | தொண்டைமான் இளந்திரையன் | உருத்திரங்கண்ணனார் |
| 6. | மதுரைக்காஞ்சி 782 அடி | புறம் | பாண்டியன் நெடுஞ்செழியன் | மாங்குடி மருதனார் |
| 7. | நெடுநல்வாடை 188 அடி | அகம் | பாண்டியன் நெடுஞ்செழியன் | நக்கீரனார் |
| 8. | முல்லைப்பாட்டு 103 அடி | அகம் | பாண்டியன் நெடுஞ்செழியன் | நப்பூதனார் |
| 9. | திருமுருகாற்றுப்படை 317 அடி | புறம் | குமரவேள் | நக்கீரர் |
| 10. | சிறுபாணாற்றுப்படை 269 அடி | புறம் | நல்லியக்கோடன் | நத்தத்தனார் |

சேரவேந்தரைப் பற்றிய பாட்டு இத்தொகையில் இடம்பெறவில்லை.

## III.3. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை இலக்கியம்

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருநாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (-மலைபடுகடாம்) என்பன ஐந்தும் ஆற்றுப்படை என்னும் இலக்கிய வகையினைச் [Literary Genre] சார்ந்தவையாகும். முதலில் ஆற்றுப்படை என்பதற்குரிய சொற்பொருள் விளக்கம் காண்போம்.

தொல்காப்பியர் புறத்திணையியலில் [88],

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்

என்று பாடாண்திணைக்குரிய ஒருவகைத் துறையினைக் குறித்துள்ளார். இப்பகுதிதான் ஆற்றுப்படைக்கு உரிய இலக்கணம் கூறுவது எனக் கொண்ட இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படையில் அமைந்த பாக்களை மேற்கோள் காட்டினர். **ஆற்றுப்படை** என்ற சொல் **ஆற்றுப்படுத்துதல், வழிப்படுத்துதல், நெறிகாட்டல்** என்னும் பொருள் பயப்பது. யாரை யாரிடத்தில் யார் ஆற்றுப்படுத்துவது என்ற வினா எழுதல் இயல்பு. ஆடற்கலையிலும் இசைக்கலையிலும் வல்ல கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என்போருள் ஒருவர் கலைப்புரவலனாகிய வேந்தனையோ குறுநிலத் தலைவனையோ கண்டு தன் கலைத்திறனைப் புலப்படுத்திப் பெரும் பரிசில் பொருள்களைப் பெற்றுத் திரும்புகிறார். வழியில் வறுமையில் வாடும் மற்றொரு கலைஞரைச் சந்திக்கிறார். அவர் நிலைக்கு இரங்கி, இன்ன வள்ளலைக் கண்டு தன் கலைத்திறத்தினை வெளிப்படுத்தி அவன் வழங்கும் பெரும் செல்வத்தைப் பெற்று வாழும்படி ஆற்றுப்படுத்துவதாகப் பாடப்பெறும் ஒரு கற்பனை இலக்கியம் ஆற்றுப்படை ஆகும். **'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'** என்ற பரந்த நோக்குப் புலவர் உள்ளிட்ட கலைஞர்களுக்கு வாய்த்திருந்த உண்மையினை ஆற்றுப்படை இலக்கியங்கள் சுட்டுகின்றன.

தொல்காப்பியர் சுட்டியுள்ள கலைஞர் வரிசையில் இறுதியில் கூறப்பெற்ற விறலியின் பெயரில் பத்துப்பாட்டில் ஒரு பாட்டும் இடம்பெறவில்லை. என்றாலும், நச்சினார்க்கினியர் புறநானூற்றினின்றும் இருபாடல்களை [105, 133] விறலியாற்றுப் படைக்கு மேற்கோளாக எடுத்துக் கொடுத்துள்ளார். பதிற்றுப்பத்தில் பல பாக்கள் விறலியாற்றுப் படையாக [40, 49, 57, 60, 78, 87] அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது. பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ள ஆற்றுப்படைப் பாட்டுக்கள் ஐந்தனுள் முதற்கண் தொகுக்கப் பெற்றுள்ள திருமுருகாற்றுப் படையின் அமைப்பினையும், சிறப்பினையும் நோக்குவோம்.

### III.3.1. திருமுருகாற்றுப்படை

இப்பாட்டின் ஈற்றயலடி முச்சீர்த்தாகவும் இடையேயும் சில அடிகள் சிந்தடி அல்லது குறளடியாகவும் வருதலின் இதனை **இணைக் குறளாசிரியம்** என்று கூறுதல் ஆகும்.

திரு என்ற சொல்லிற்கு அழகு, ஒளி, சிறப்பு, பொலிவு, செல்வம், தெய்வத் தன்மை, கண்டாரால் விரும்பப்படும் இயல்பு முதலிய பல பொருள்கள் தமிழ் இலக்கிய உரைகளிலும்

பேரகராதியிலும் கூறப்படுகின்றன, இப்பண்புகள் யாவும் பொருந்திய பாட்டிற்குத் திருமுருகாற்றுப்படை எனச் சான்றோர் பெயர் சூட்டினர். முருகு என்ற சொல் அழகு, இளமை, மணம், ஆற்றல், கடவுள் தன்மை முதலிய பொருள்கள் உணர்த்துதலின் தமிழர் தம் முழுமுதற் கடவுட்கு முருகன் எனப்பெயர் சூட்டினர் என்பர் தமிழ்த் தென்றல் திரு.வி.க.

## III.3.1.1. திருமுருகாற்றுப்படை சங்கப்பாட்டு

திருமுருகாற்றுப்படையினைச் சங்ககால இலக்கியம் அன்று என்று பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை கூறும் கருத்துக்களை ச் சீர்தூக்கிக் காண்போம்.

திருமுருகாற்றுப்படைக்குப் **புலவராற்றுப்படை** என்பதே பண்டு தொட்டுப் பயின்று வந்த பெயர் என்பது நச்சினார்க்கினியரின் உரைக் குறிப்பினால் உணரலாம். இப்பெயரினையே நக்கீரர் இப்பாட்டிற்குச் சூட்டியிருத்தல் வேண்டும் என்று எண்ணுதற்கு இடம் உண்டு. **தொல்காப்பியரால் சுட்டப்பெறாத புலவராற்றுப் படை என்னும் புதிய துறைக்குரிய பாடல் புறநானூற்றில் காணப்படுகிறது** [48]. இதனைப் பாடியவர் **பொய்கையார்**. முருகப் பெருமானிடத்தில் பெறலரும் பரிசில் பெற்ற புலவராகிய நக்கீரர், அவ்விழுமிய பரிசிலைப் பெறுவதற்கு விரும்பும் புலவர் ஒருவரை அப்பெருமானிடத்தில் ஆற்றுப்படுத்தியதாகப் பாடப்பெற்ற பாட்டிற்குப் **புலவராற்றுப்படை** என்பதுவே முதலில் சூட்டப்பெற்ற பெயர் எனக் கொள்ளுதல் பொருந்தும். குறிஞ்சிப்பாட்டுக்குப் **பெருங்குறிஞ்சி** என்ற பெயரும் கூத்தராற்றுப்படைக்கு **மலைபடுகடாம்** என்ற பெயரும் வழங்கி வருதல் போலவே **புலவராற்றுப்படைக்குத் திருமுருகாற்றுப்படை என்ற பெயர் வழங்கி வருகிறது.**

முருகன் ஒரு புலவன். தலைச்சங்கப் புலவராக வீற்றிருந்தோர் வரிசையில் குன்றம் எறிந்த குமரவேளை இறையனார் களவியல் உரை குறிப்பிடுகிறது. வடமொழியைத் தேவபாடை எனக் கூறிய காலத்தில் தமிழும் தெய்வ மொழியே என்பதை நிறுவுதற்காகப் பண்டைத் தமிழோர் முருகனையும் தமிழ்த் தொடர்பு படுத்திக் கூறிய தொன்மம் நக்கீரர் காலத்தில் வேரூன்றிவிட்டது. எனவே தான், **நூலறி புலவ** 261, **பலர்புகழ் நன்மொழிப் புலவ**ரேறே, 268 என்று நக்கீரர் முருகனைப் போற்றுகிறார். இதனாலும் புலவராற்றுப்படை என்ற பெயர் இப்பாட்டிற்கு முதலில் அமைந்திருத்தல் வேண்டும் எனக் கருதலாம். பொய்கையார் புலவரை முதுவாய் இரவலன் (புறம். 58.7) என்று குறித்தல் போலவே நக்கீரரும் குறித்துள்ளார்

(284). முது என்ற சொல் பேரறிவினைக் குறிக்கும் என்பர் நச்சினார்க்கினியர் (சிறுபாண். 40). வாய் - வாய்மை எனப் பொருள்படும். ஆதலின் **முதுவாய் இரவலன்** என்ற சொல்லிற்குப் பேரறிவும் வாய்மையும் பொருந்திய இரவலனாகிய புலவன் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். எனவே, **நக்கீரர் காலத்தைப் பொய்கையார் காலத்துடன் பொருத்திப் பார்த்தல்தான் ஆய்வியல் நெறிக்கு ஒத்தது.**

உலகியல் செல்வம் முழுவதும் ஒரெல்லைக்கு உட்பட்டது. உலகம் முழுமையினையும் ஒற்றைக் குடைக்கீழாண்ட பெருவேந்தர்க்கும், நள்ளிரவில் கூடத் துயிலாதவனாகக் கொடிய விலங்கினை வேட்டையாட எதிர்பார்த்து நிற்கும் கல்லாத வேடனுக்கும் உண்பதும் உடுப்பதும் பிறவும் ஒரு தன்மையவே. செல்வத்தை ஈட்டுதலின் பயன் வறியவர்களுக்கு வழங்குதலேயாகும். தன்னலத்தராய்த் தாமே அனுபவிக்கலாம் என்று எண்ணியிருப்பின் அச்செல்வங்களை இழக்க நேரிடும் என்று **பொருண்மொழிக் காஞ்சித் துறையில்** நக்கீரர் பாடல் புனைந்தபொழுது (புறம். 189), அவருக்குப் பெறலரும் பரிசிலாகிய பேரின்ப நாட்டம் தோன்றிவிட்டது என்பது புலனாகும். **தப்புநபல** (புறம். 189.8) என்ற தொடரில் வரும் '**பல என்றது அறம் பொருள் இன்பங்களை**' என்று பழைய உரையாசிரியர் விளக்கம் எழுதியிருத்தலை ஊன்றி நோக்குதல் வேண்டும். அகப்பொருள், புறப்பொருள் பற்றி நக்கீரர் பல பாக்களைப் பாடியவர். பல்லாண்டுகள் வாழ்ந்தவர். பல்வகை அனுபவங்களைப் பெற்றவர். **வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் விளைந்த மெய்யுணர்வின் பயனாகப் புலவராற்றுப்படை எனப்படும் திருமுருகாற்றுப்படையினைப் பாடியுள்ளார் எனக் கொள்ளுதல் சாலப்பொருந்தும்.**

### III.3.1.2. மாரைக்கிளவி

மாரீற்றுச் சொல் பல்லோர் படர்க்கையினை உணர்த்துவதுடன் வினைச்சொல்லினைக் கொண்டு முடிதல் வேண்டும் என்பது தொல்காப்பிய விதியாகும் (தொல்.சொல். 207). ஆயினும் திருமுருகாற்றுப்படையில், **முடிமார் மனன்** (89-90) என்று வரும் பகுதியில் முடிமார் என்ற மாரைக்கிளவி வினைச்சொல்லினைக் கொண்டு முடியாமல் மனன் என்னும் பெயர்ச் சொல் கொண்டு முடிந்ததால் அந்நூல் சங்ககாலத்தது அன்று என்றார் பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை. அகநானூற்றில் **கொண்மார்-மறவர்** (67.6-8), **பெய்ம்மார் - உக்கமீன்** (300.2-4) என்றும், புறநானூற்றில் **சென்மார் - உயர்ந்தோர்** (362.22) என்றும் மாரைக்கிளவி பெயர்

கொண்டு முடிதலின் பிள்ளை அவர்கள் கருத்து பொருந்தாது என்பது புலனாகும்.

### III.3.1.3. பெறீஇயர் என்ற சொல்லிலக்கணம்

செய்யியர் என்னும் வாய்பாட்டு வினைச்சொல் வியங்கோளாகவும், வினையெச்சமாகவும் வருதற்கு மாறாகத் திருமுருகாற்றுப்படையில் பெறீஇயர் என்ற சொல் வினையாலணையும் பெயராகப் பெற்றவர் என்ற பொருளில் வந்துள்ளது என்று கூறுகிறார். **பெறீஇயர்** என்ற சொல்லே தொன்மையானது. அர் ஈறு ஆர் ஈறு போல ஓகாரமாகத்திரியும் என்பது தொல்காப்பிய விதி (தொல். சொல். *211*). எனவே, பெறீஇயர் பெறீஇயோர் என்று ஆகும். இதே அமைப்புடைய **மரீஇயோர்** என்ற சொல் **மருவியவர்** என்ற வினையாலணையும் பெயராகச் சங்கப் பாக்களில் வருதலான் (புறம். *13.8*; குறுந். *102.4*; அகம். *231.15*), பிள்ளை அவர்கள் கருத்து பொருந்தாது. ஒரேசொல் வினையாகவும் பெயராகவும் வழங்குவதற்கு *1.* முருகன் **உதவி** வருகிறான் *2.* முருகன் **உதவி** எனக்கு உண்டு என்ற தொடர்களில் வரும் /உதவி/ என்ற சொல் வழக்கு ஏற்ற எடுத்துக்காட்டாகும்.

### III.3.1.4. மதி என்ற சொல்லிலக்கணம்

/மதி/ என்னும் இடைச்சொல் முன்னிலையில் மட்டுமே வழங்கும் என்றார் தொல்காப்பியர் (தொல்.சொல்.*274*). இச்சொல் ஏவற்பொருண்மையினை உணர்த்தும் வேர்ச்சொல்லுடன் ஒட்டி வருதலின் முன்னிலையில் மட்டுமே வழங்கும் எனக் கூறுதல் முறைதான். திருமுருகாற்றுப்படையில் **அஞ்சல் ஓம்புமதி** *(291)* என்று இவ்விடைச் சொல் முன்னிலையில் வந்தது. ஆயினும், **பெறலரும் பரிசில் நல்குமதி** பலவுடன் *(295)* என்ற இவ்விடைச்சொல் படர்க்கையில் வந்தது. இச்சொல் படர்க்கையில் வருதலைப் புறநடையாகக் கொள்க என்றார் நச்சினார்க்கினியர் (தொல்.சொல்.*27*, *48*) மதியைப் பெயராகவே கொண்டு '**மதிபலவுடன் பரிசில் நல்கும் எனக் கூட்டிப் பொருள்கோடலும் ஆம்**' என்று பரிதியாரும், '**அறிவுகள் பலவுடனே மேம்பட்ட பெறுதற்கரிய பரிசில்களை அளித்தருளுவன்**' என்று பரிமேலழகரும் உரை வரைந்துள்ளதால் பிள்ளை அவர்கள் கருத்து பொருந்தாது.

மேலும், இன்ன இடத்திற்கு உரியது என்று தொல்காப்பியர் வரையறுத்துக் கூறிய இடைச் சொற்களில் சில வேறு இடங்களிலும் சங்கப் பாக்களில் பயின்றுள்ளமைக்குச் சில சான்றுகளைக் காண்போம். /மோ/ என்ற இடைச்சொல் முன்னிலையில் மட்டுமே

வழங்கும் (தொல்.சொல்.274). ஆனால், நாம் சென்மோ (அகம். 32.17), **சென்மோ பெரும் எம்விழைவுடை நாட்டென** (புறம். 382.5) என்று தன்மையில் இவ்விடைச்சொல் வருதல் நோக்கத்தக்கது. எனவே, /மதி/ முன்னிலையில் வருதல் வேண்டும் என்ற தொல்காப்பிய இலக்கணம் நெகிழ்ந்து, ஒரே ஒரு இடத்தில் படர்க்கையில் வந்துள்ளதால் திருமுருகாற்றுப்படையினைச் சங்க நூல் அன்று என்று கூறுதல் ஒவ்வாது. பிள்ளை அவர்களின் பிறகருத்துக்களையும் தக்க சான்றுகள் தந்து மறுத்து வேறொரு விரிவான கட்டுரையில் இந்நூலாசிரியர் எழுதியுள்ளார் [காண்க: **இலக்கியச் சோலையிலே,** அபிராமி பதிப்பகம், அண்ணாமலை நகர், 1966, பக்.50-84]. எனவே, நெடுநல்வாடையினைப் பாடிய நக்கீரரே திருமுருகாற்றுப் படையினையும் பாடியவர் என்பது தெளிவாகும். முருகனையே முழுமுதற்கடவுளாகப் போற்றிப் பரவிய நக்கீரரின் அனுபவங்களைத் திருமுருகாற்றுப்படை புலப்படுத்துகிறது. இப்பாட்டின் திரண்ட பொருளைச் சுருக்கமாகக் காண்போம்.

### III.3.1.5. திருமுருகாற்றுப்படை நுதலும் பொருள்

முருகன் ஆறுதலங்களிலும் விளங்கித் தோன்றும் முதல்வன். எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பதால் முருகனைப் **பெரும்பெயர் இயவுள் (274), பெரும் பெயர் முருகன் (269)** என்று நக்கீரர் போற்றுகிறார். இயவுள் என்ற சொல்லிற்கு எல்லாவற்றையும் உள்ளிருந்து இயக்குபவன் (Immanent) என்பது பொருள். அதேவேளையில், எல்லாவற்றையும் கடந்திருப்பவன் (Transcendent) என்ற கருத்தில், **நின்னளந்து அறிதல் மன்னுயிர்க்கு அருமையின் (278), நின்னொடு புரையுநர் இல்லாப் புலமையோய்** (279:280) என்று நக்கீரர் முருகனைப் போற்றியுள்ளார்.

ஆற்றுப்படையில் போற்றப்படும் வீடு (- கோயில்) என்ற கருத்தில் **ஆற்றுப்படைவீடு** என்ற வழக்கு காலப்போக்கில் **ஆறுபடைவீடு** என்று வழங்கியதாதல்வேண்டும். முருகனைப் போர்க்கடவுளாகப் பண்டைத் தமிழர் பரவினர். வீரம், காதல் இரண்டிற்கும் அவனே முதல்வன். வள்ளியைக் களவியல் முறையிலும், தேவயானையினைக் கற்பியல் முறையிலும் வரைந்து கொண்டு மணக்கோலத்துடன் (- போக முர்த்தம்) அப்பெருமான் தமிழரின் அகப்பொருள் நெறிக்கு முன்னவாக விளங்குகிறான். சூரபன்மன் உள்ளிட்ட அவுணரை அழித்த வெற்றிவேலினை ஏந்திய குமரன் வீரத்திற்கும் மேல்வரம்பாக விளங்குகிறான். திருமுருகாற்றுப்படையில் போற்றப்படும் முருகனின் திருத்தலம் ஒவ்வொன்றினையும் நக்கீரர் நெறிநின்று நோக்குவோம்.

### III.3.1.5.1. திருப்பரங்குன்றம்

உலகில் உள்ள உயிரினங்கள் யாவும் மகிழும்படி நீலத் திரைக்கடலில் எழும்பும் காலைக் கதிரவன் நீலக்கலாபமயில்மேல் தோன்றும் கோலக்குமரனாகக் காட்சி தருகிறான். ஒளிமயமாக விளங்கும் முருகன் தன்னை அடைந்தாரைத் தாங்குவதும் அறியாமையினைப் போக்குவதுமாகிய வலிய திருவடிகளை உடையவன்.

தெய்வானையின் கணவன். கடம்பமாலை சூடியவன். முருகப் பெருமானின் வெற்றிக் கொடியாகிய சேவற்கொடியை வாயார வாழ்த்தி வானர மகளிர் திருப்பரங்குன்றத்தின் சோலையில் விளையாடுவர்.

காந்தள் மலர்மாலை சூடிய முருகன் பேருருக்கொண்ட சூரனை அழித்த வெற்றிவேலினை ஏந்தியவன். அவுணர்களை அழித்த போர்க்களத்தில் கிடக்கும் தசைப் பிண்டங்களைத் தின்று பேய் மகள் துணங்கைக் கூத்தாடினாள். குற்றமற்ற வெற்றி பெற்றுப் புகழ்படைத்த வேற்குமரனை அடைய விரும்பினையாயின் (-முதுவாய் இரவலனை நோக்கி ஆற்றுப்படுத்துகிறார் நக்கீரர்), உன் எண்ணம் ஈடேறும்படி உன் முயற்சியில் வெற்றி பெறுவாய்! பகைவரை அழித்த மதில்வாயிலையும், செல்வம் மல்கிய அங்காடிகளையும் மாடங்கள் மலிந்த வீதிகளையும் உடைய மதுரை மாநகர்க்கு மேற்கில், பெரிய சேற்று வயலில் மலர்ந்துள்ள தாமரைப்பூவில் துயின்று, விடியலில் நெய்தல் பூவின் தேனை உண்டு, கதிரவன் தோன்றும்பொழுது சுனை மலர்களில் அழகிய வண்டின் கூட்டம் ஒலித்தற்கு இடமாகிய இயற்கைச் சூழல் பொருந்திய திருப்பரங்குன்றத்தில் முருகன் விரும்பி உறைதலும் உரியன் (1-77).

### III.3.1.5.2. திருச்சீரலைவாய் [திருச்செந்தூர்]

ஆறு திருமுகங்களும் பன்னிரு கைகளும் உடையவனாய்க் களிற்றின்மிசை முருகன் வீற்றிருந்து அருளும் பாங்கினை இப்பகுதியில் நக்கீரர் பாடியுள்ளார். முருகனின் அளப்பரிய ஆற்றலையும் எவ்விடத்தும் இருப்பவன் என்ற கருத்தினையும் உணர்த்தவே அவன் தோற்றத்தைக் கற்பனை செய்துள்ளனார். உலகில் பரவியுள்ள இருளைப் போக்கி ஒளியைப் பரப்புவது ஒரு முகம். வழிபடும் அன்பர்களுக்கு வரம் கொடுப்பது ஒருமுகம். அந்தணரின் வேள்வி வழிபாட்டிற்கு இடர் வராதபடி காப்பது ஒருமுகம். திங்கள் உலகிற்குத் தண்ணளி தருதல் போல்

திசையனைத்திலும் அரிய பொருளை விளக்கிக் குளிர் ஒளியைத் தருவது ஒருமுகம். தீயோரை அழித்தற்பொருட்டுப் போர்க்களத்தை விரும்புவது ஒருமுகம். குறமடந்தையாகிய வள்ளியுடன் மகிழ்ச்சியைப் பொருந்துவது ஒருமுகம். இங்ஙனம் ஆறுமுகங்கட்கும் பொருந்தும் வண்ணம் பன்னிரு கைகளின் சிறப்பினையும் நக்கீரர் பாடியுள்ளார்.

வான்வழி இயங்கும் யோகியரைக் காப்பது ஒரு கை. இடுப்பில் வைத்தது ஒரு கை. தொடையின் மிசை கிடப்பது ஒரு கை. அங்குசத்தைச் செலுத்துவது ஒரு கை. வட்டத்தினைச் சுழற்றுவது ஒரு கை. வேலினைச் சுழற்றுவ்து ஒரு கை. மார்பொடு விளங்குவது ஒரு கை. தாரொடு பொலிவது ஒரு கை. தொடியொடு மேலே சுழல்வது ஒரு கை. மணியோசையினை மாறி ஒலிக்கச் செய்துவது ஒரு கை. மழை பொழியச் செய்வது ஒரு கை. வானர மகளிர்க்கு மணமாலை சூட்டுவது ஒரு கை.

பல்வகை வாத்தியங்களும் முழங்கத் திருச்சீரலைவாயில் முருகன் எழுந்தருள் புரிகிறான். *(78-125)*.

### III.3.1.5.3. திருவாவினன்குடி [பழநி]

இப்பகுதியில் முருகனை வழிபடும் முனிவர்களின் இயல்புகள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கிய முனிவர் கற்றவர்க்குத் தாமே மேல் எல்லையாக விளங்கும் பேரறிவினர். இடும்பை, சினம், காமம் அறவே நீங்கிய அருளாளர்கள். இவர்களையடுத்து யாழேந்தி முருகன் புகழைப்பாடும் அழகிய இசைவாணர்களும் அவர்தம் மகளிரும் இடம் பெறுகின்றனர். நான்முகனின் செருக்கினைப் போக்குதற்கு இத்தலத்தில் அவனை முருகன் சிறை வைத்தான். அவனை மீட்டுச் செல்லும் பொருட்டுத் திருமால், சிவன், இந்திரன், தேவர் முப்பத்து மூவர், பதினெண் கணத்தவர் யாவரும் தன்னைப் பணிந்து நிற்க, முருகன் தன் தேவியுடன் ஆவிநன்குடியில் வீற்றிருக்கிறான் *(148-176)*. நான்முகனைத் திருவேரகம் ஆகிய சுவாமிமலையில் முருகன் சிறையிட்டான் என்பது பிற்காலத்துப் புராணச் செய்தி ஆகும்.

### III.3.1.5.4. திருவேரகம்

நச்சினார்க்கினியர் மலைநாட்டுத் திருத்தலமாகத் திருவேரகத்தினைக் குறித்துள்ளார். ஆயினும் அருணகிரிநாதர் திருப்புகழில் இத்தலமே சுவாமிமலை எனப் பாடியுள்ளார். இதன் சிறப்பினைப் பதின்மூன்றடிகளில் நக்கீரர் பாடியுள்ளார் *(177-189)*.

இருபிறப்பாளராகிய அந்தணர் நீராடியபின் புலவராத ஆடையினை உடுத்தி உச்சிக் கூப்பிய கையினராய் நறுமலர் கொண்டு ஆறெழுத்து மறைமொழியை நாவினுள் உச்சரித்து வழிபாடு புரிதலை இத்தலத்தின் சிறப்பாகப் பாடியுள்ளார்.

### III.3.1.5.5. குன்றுதோறாடல்

குறிஞ்சி நிலத்தில்தான் முதல் நாகரிகம் தோன்றியது என்பர். தொல்பழங்காலத்துத் தமிழர் குறிஞ்சிக்கோமானாக முருகனை வணங்கினர். மேலே பெயர் சுட்டப்படாத பிறகுன்றுகளிலும் முருகன் கோயில் கொண்டு அருள் புரிபவன் என்பதை இப்பகுதியில் நக்கீரர் பாடியுள்ளார்.

குறிஞ்சி மக்கள் தெளிந்த கள்ளினைப்பருகித் தொண்டகப் பறையினை முழக்கி முருகனை வணங்கினர். செம்மேனியன், செவ்வாடை உடுத்தியவன், அசோகம்தளிர் அசையும் காதினன். இடையில் கச்சைக் கட்டியவன். வீரக்கழலினன். வெட்சிமாலை சூடியவன். குழலிசைப்பவன். கொம்பினை ஊதுபவன். பல்வகை வாத்தியங்களை முழக்குபவன். தகர், மயில் ஊர்தியினன். சேவற்கொடியோன், நெடியோன், தொடியணிந்த தோளினன். நிலத்தில் தோயும் ஆடையினன். முழவு போன்ற கையில் வேலினன். இனிய மகளிருடன் தலைக்கை கொடுத்துக் குன்று தோறும் குரவைக் கூத்து ஆடுபவன் *(198-217)*,

### III.3.1.5.6. பழமுதிர்சோலை

இப்பகுதியில் முருகன் வெளிப்பட்டுத் தோன்றுமிடங்கள், வெறியாடல், முருகனின் பல்வகைப் பெயர்களையும் சொல்லி உருகி வழிபடுதல், கூளியரின் பரிந்துரை, முதுவாய் இரவலனுக்கு முருகன் பெறலரும் பரிசில் வழங்குதல், பழமுதிர் சோலையின் இயற்கை வளம் என்பன கற்போர் உள்ளம் கசிந்துருகும்படி கவினுறப் பாடப் பெற்றுள்ளன. கற்றறிந்த பெரியோர் முதல் கல்லாத பாமரர் வரை எல்லோரும் போற்றும் முழுமுதலாக முருகன் திகழ்கிறான். பத்துப்பாட்டு முழுமைக்கும் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். எனினும் திருமுருகாற்றுப்படைக்கு மட்டுமே உரையாசிரியர் (- இளம்பூரணர்), பரிமேலழகர், நச்சினார்க்கினியர், கவிப்பொருமாள், பரிதியார் ஆகிய ஐவர் உரைகள் அமைந்துள்ளன என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

**திருமுருகாற்றுப் படையினை இந்தியாவில் தோன்றிய முதல் பக்தி இலக்கியம் என்று ஏ.எல். பாஷம் என்னும் மேலைநாட்டறிஞர் ஆராய்ந்து கூறியுள்ளார்** [Vide, The Wonder That was India, New York, 1959, p.330].

முருகனின் வழிபாடு தமிழர்க்குரிய சிந்துவெளி நாகரிகத்திலும் காணப்படும் உண்மையினைத் தொல்லியலார் நிறுவியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## III.3.2. பொருநராற்றுப்படை

இதனைப் பாடிய புலவர் **முடத்தாமக் கண்ணியார்**. இவரைப் பெண்பாலாராகக் கருதுவர். பாடப் பெற்றவன் சோழப் பேரரசனாகச் செங்கோலோச்சிய **கரிகாற்பெருவளத்தான்** ஆவன். வஞ்சியடிகள் இடையிடை விரவி வந்த நேரிசை ஆசிரியமாக இப்பாட்டு விளங்குகிறது.

பொருநர் என்ற சொல் கூத்துக் கலையில் வல்லவரைக் குறிக்கும். பொருவுதல் - ஒத்தல். ஒருவரைப் போல் பேசி நடிப்பவர் என்றும் பொருள் கூறலாம். ஆயினும், இப்பாட்டில் இடம் பெறும் பொருநன், யாழிசையில் வல்லவனாகப் புனையப் பெற்றிருத்தலின், அழகியல் கலைகளாகிய ஆடல், பாடல் முதலிய பலவற்றிலும் தேர்ந்த கலைஞரைப் பொருநர் என்ற சொல் குறிப்பதாகக் கொள்ளுதல் வேண்டும்.

கரிகாற்பெருவளத்தானிடம் பரிசில் பெற்றுத்திரும்பும் பொருநன் ஒருவன் வழியிற் சந்தித்த இன்னொரு பொருநனை முன்னிலைப் படுத்தி, அவ்வேந்தனிடம் ஆற்றுப்படுத்தியதாக இந்தப் பாட்டினை முடத்தாமக் கண்ணியார் கற்பனை வளமும் கலை வளமும் சிறக்கப் பாடியுள்ளார். இப்பாடற் பொருளை ஒரு சில தலைப்புக்களில் அடைவு செய்து காண்போம்.

### III.3.2.1. பாலை யாழின் அமைப்பு

இப்பாட்டில் இடம்பெறும் பொருநன் பாடினியுடன் வருகிறான். பெடைமயில்போல் விளங்கும் பாடினி கையில் ஏந்தியிருக்கும் பாலை யாழின் அமைப்பினை விரிவாகச் சொல்லோவியம் செய்துள்ளார். *(4-22)*.

பாலையாழ் பண்டைத் தமிழகத்தில் எவ்வடிவத்தில் இருந்தது என்பதை உணர்ந்து கொள்ளுதற்கு இப்பாடற் பகுதி உதவும், பாலையாழின் வனப்பிற்கு ஒப்பனை செய்யப் பெற்ற திருமணப் பெண்ணின் அழகு உவமை கூறப்பட்டது. யாழ்த்தெய்வமே அதில் வீற்றிருக்கும் அழகிய காட்சி உடையது. வழிப்பறி செய்யும் கள்வர்கூட யாழிசையினைக் கேட்பின் தமது கொடுஞ்செயலைக் கைவிடச் செய்யும் ஆற்றல் உடையது என்று முடத்தாமக் கண்ணியார் பாடுகின்றார். அப்பாடற்பகுதியைக் காண்போம்.

மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன
அணங்குமெய்ந் நின்ற அமைவரு காட்சி
ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை (19-22)

இப்பாடற்பகுதி, இசையின் மென்மைத் தன்மை கள்வரின் வன்மை உள்ளத்தைப் பண்படுத்தும் ஆற்றல் படைத்தது என்ற கருத்தினைப் புலப்படுத்துகிறது.

### III.3.2.2. பாடினியின் பொலிவு

இசைக்கலை அழகுக்கலை. அதனை இசைப்பவரும் அழகினராக இருத்தல் தனிச்சிறப்பு. பாடினியின் உறுப்பு அழகினைப் பொலிவுறப் புலவர் புனைந்துரைத்துள்ளார். கருமணல் போன்ற கூந்தல். பிறை மதி போன்ற அழகிய நெற்றி. வில் போன்ற புருவம். மழைக்கண். இலவின் இதழ் போன்ற உதடு. இனிய மொழி பேசும் பவளம் போன்ற வாய். முத்துப்போல் வெண்பல். கத்தரிக்கோலின் பிடி போன்ற காது. நாணத்தால் சாய்ந்த நலம் மிகு கழுத்து. மூங்கில் போன்ற வளைந்ததோள். மென்மயிர் பொருந்திய முன்கை. காந்தள் மலர் போன்ற மெல்விரல். கிளி மூக்குப் போன்ற நகம். தேமல் பொருந்திய மார்பில் ஈர்க்கு இடையே நுழையாதபடி இளமையும் வளமையும் கொண்ட கொங்கை. நீர்ச்சுழி போன்ற கொப்பூழ். உண்டோ இல்லோ என்னும் படியாக இருக்கும் இடை. மேகலை சூழ்ந்த அல்குல். பெண்யானையின் தடக்கை போன்ற தொடை. ஓடி இளைத்த நாயின் நாவினைப் போன்ற சிற்றடி. இவையாவும் பெற்ற பெடைமயில் போன்றவள் பாடினி. (25-47). இங்ஙனம் பாடினியின் உறுப்புக்களின் வனப்பினைப் பாடியதன் வாயிலாகத் தமிழர் தம் இன்பியல் தழுவிய கலையுணர்வும் அழகியல் உயர்வும் புலனாகின்றன. இப்பாடற்பகுதி பிற்காலத்தில் தோன்றிய கேசாதிபாதம் என்னும் சிற்றிலக்கியத்திற்கு முன்னோடியாக விளங்குகிறது.

### III.3.2.3. பரிசு பெற்ற பொருநன் பெறாதவனை முன்னிலைப்படுத்துதல்

வறுமையில் வாடினும் கோடியர்க்குத் தலைவனாகத் திகழும் பொருநனை முன்னிலைப்படுத்திப் பரிசு பெற்ற பொருநன் கரிகாற்பெருவளத்தான் தன்னைப் பாராட்டி அன்புடன் விருந்தோம்பிப் பரிசுப் பொருள்களை வழங்கிய செய்தியை விரிவாகக் கூறுகிறான். ஈரும் பேனும் குடியிருக்கும் பழைய கிழிந்த ஆடையினை நீக்கி, நுண்ணிய பூவேலைப்பாடு அமைந்ததும்

பாம்பின் தோல் போன்றதும் ஆகிய உயரிய ஆடையினை வளவன் வழங்கினான்.

செம்மறியாட்டின் புழுக்கலும், சுட்ட இறைச்சித்துண்டும், முரியா அரிசிச் சோறும் வறுத்த கருனைக் கிழங்கும் விருந்தாகப் படைத்தான். பல நாள் சென்றதும் ஒரு நாள் தன்னூர்க்குத் திரும்பும் செய்தியைத் தெரிவித்ததும், பிரிவதற்குக் கவலையுற்றான். ஆயினும் களிறு, பிடி, கன்று முதலியவற்றை வேண்டுமளவு வழங்கினான். வறுமை நீங்க ஊர் திரும்பியதாகப் பொருநன் கூறினான்.

உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மகன் ஆகிய கரிகாற்பெருவளத்தான் இளையோனாகிய காலத்திலேயே முடிசூடியவன். வெண்ணிப்போரில் சேர, பாண்டிய வேந்தரை வென்று வாகை சூடினான். தொடர்ந்து கரிகாலனின் கொடைச்சிறப்பு கூறப்பட்டது.

சோழ நாட்டின் ஐந்திணை வளமும் காவிரியாற்றின் வளமும் பீடுகெழு நடையிற் பொருநன் கூற்றாகப் புலவராற்பாடப் பெற்றது. முருகனைப் பழமுதிர்சோலை மலை கிழவோன் என்று நக்கீரர் பாடியது போல, முடத்தாமக் கண்ணியார் கரிகாற் பெருவளத்தானைக் காவிரி புரக்கும் நாடு கிழவோன் (248) எனப் பாடியிருத்தல் சுட்டத்தக்கது.

### III.3.2.4. கருத்துரை

பின்னாளில் காப்பியம் என்ற இலக்கிய வடிவம் வளர்ச்சி பெறுவதற்குப் பொருநராற்றுப் படையினை ஒத்த நெடும் பாட்டுக்கள் மூலமாக விளங்கியுள்ளன என்பது தெளிவு. காப்பியத்தில் இடம் பெறுவதற்குரிய தன்னேரில்லாத் தலைவனாகக் கரிகாற்பெருவளத்தானைப் புலவர் சொல்லோவியம் செய்துள்ளார். சோழ நாட்டின் வளம், விருந்தோம்பும் பண்பு, ஈத்துவக்கும் இன்பம், கலைமாட்சி என்பனவற்றை உணர்த்தும் கருவூலமாகப் பொருநராற்றுப்படை விளங்குகிறது.

### III.3.3. சிறுபாணாற்றுப்படை

பண் என்ற சொல்லினடியாகப் பாண் என்ற சொல் தோன்றியது. கருப்பொருள்களில் ஒன்றாகத் தொல்காப்பியர் செய்யுளையும் (- செய்தி), யாழிசையினையும் (யாழின் பகுதி) குறித்துள்ளார். சீறியாழ், பேரியாழ், மகர யாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் எனப் பல்வேறு யாழ்கள் இலக்கியத்தின் வழியாக அறியப்படுகின்றன. சிறுபாணன் சிறுயாழை மீட்டித் தன்னைப் புரக்கும் புரவலனின் புகழைப்பாடுபவன் ஆவன்.

இலக்கியங்கள் எழுதப்படுவதற்கு முன்பாகப் பாணர்களின் வாயிலாக வாய்மொழியாகவே நெடுங்காலம் வழங்கி வந்தன என்பது ஒப்பியலறிஞர்களின் துணிபாகும். **சிறப்புடைத்தான சிறுபாணாற்றுப்படை என்று தக்கயாகப்பரணி உரையாசிரியர் இந்நூலைப் பாராட்டினார்.**

சிறுபாணாற்றுப்படையின் தலைவன் ஓய்மா நாட்டு **நல்லியக்கோடன்** ஆவன். இவன் ஓவியர் குடியிற் பிறந்தவன். **ஓய்மான் நல்லியாதன், ஓய்மான் வில்லியாதன்** என்ற குறுநிலத்தலைவர்கள் இவன் முன்னோராவர். இவன் ஆண்ட நிலப்பகுதிக்கு **ஓய்மா நாடு** என்பது பெயர். இது தமிழகத்தின் வட பகுதியைச் சேர்ந்தது. சிறுபாணனை நல்லியக்கோடனிடம் ஆற்றுப்படுத்தியதாக இப்பாட்டினைப் பாடியவர் **நல்லூர் நத்தத்தனார்** ஆவர். இப்பாட்டில்,

*இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ* (35)

எனக் குறிக்கப்பெறுதலின், சீறியாழை ஏந்தியவன் சிறுபாணன் [37] என்பது புலனாகும். இதனுள், எல்லா அடிகளும் அளவடியாக வந்து ஈற்றயலடி சிந்தடியாக அமைதலின், இதனை நேரிசை ஆசிரியம் என்று அறிதல் வேண்டும். இப்பாட்டின் பெருண்மையினைச் சில தலைப்புக்களில் அடைவு செய்து காண்போம்.

### III.3.3.1. விறலியர், சிறுபாணன் காட்சி

இப்பாட்டினுள் காட்டப்படும் கலைக்குடும்பம் விறலியரும் பாணரும் கூடிய ஒரு குழுவாகக் காணப்படுகிறது. மனக்குறிப்புக்களையும் உணர்ச்சிகளையும் புறத்தார்க்குப் புலப்படும் வகையில் ஆடல் புரியும் கலையிலும் பாடற்கலையிலும் தேர்ச்சி பெற்றவள் விறலியாவள். மலைபடுகடாத்தில்,

*மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்*
*நரம்புமீது இறவா(து) உடன் புணர்ந்(து) ஒன்றிக்*
*கடவ(து) அறிந்த இன்குரல் விறலியர்* (534-6)

என்று விறலியர் சுட்டப் பெற்றனர். சிறுபாணனுடன் விறலி வருதற்குரிய பொருத்தப்பாடு இப்பாட்டினாலும் புலனாகிறது. மருதப் பண்ணினை வாசித்த கரிய தண்டினையுடைய சிறுயாழின் நரம்பின் ஓசையினைக் கடவாமல் அவ்வோசையுடன் ஒன்றி ஓரோசையாக இனிதாகப் பாடவல்லவர் ஆடுமகளிராகிய விறலியர் என்பது நச்சினார்க்கினியரின் விளக்கம் ஆகும்.

சிறுபாணருடன் சேர்ந்து வரும் விறலியரின் உறுப்பழகினைப் பொலிவுறப் புலவர் புனைந்துள்ளார். கருமுகில் போன்ற கூந்தல்.

மயிலின் வனப்பினையும் வென்ற சாயல். ஓடியிளைத்த நாயின் நாவினைப் போன்ற அணிகலனில்லாத உலறிய அடி. பிடியின்கை, வாழை போன்ற தொடை. வாழைப்பூவினைப் போன்ற கூந்தல். வேங்கைமலரினை ஒத்த சுணங்கு. கோங்கின் முகையினை ஒத்த நகில். பனையின் நுங்கினை ஒத்த வெள்ளிய பற்கள். முல்லை மலர் போன்ற தூய கற்பு. மெல்லியல்பு. மான போன்ற மருள் பார்வை. ஒளி பொருந்திய நெற்றி. இவ்வாறு விறலியரின் வனப்பினைப் பாடினார். கலையுலகில் இருப்பதால் பெண்களுக்குக் கற்புப்பற்றிய கவலையில்லை எனக் கூறப்படும் கருத்தினை நத்தத்தனார் உடன்படாமையின், **முல்லை சான்ற கற்பின்... விறலியர்** *(30-31)* எனக் குறித்தனர். நடந்து மெலிந்த இவருடைய கால்களின் வருத்தம் நீங்கும்படி கல்லா இளையர் மெல்லெனத்தடவிக் கொடுத்தனர். உடன் வந்த பாண்மகன் சிறிய யாழை இடப்பக்கத்தே தழுவி நட்டபாடைப் பண் முற்றிய பாலைப்பண்ணினை (- யாழை) வாசிக்கிறான். இவர்களோடு வந்த முதுவாய் இரவலனும் சீறியாழ்ப் பாணன் ஆவன்.

அவனை விளித்துப் பரிசில் பெற்ற பாணன் பேசுவதாக இப்பாட்டினை நத்தத்தனார் புனைந்துள்ளார்.

### III.3.3.2. மூவேந்தர், எழுவர் வேளிர் சிறப்பு

நல்லியக்கோடனின் கொடைத்திறத்தினை உயர்த்திக்கூற முற்பட்ட புலவர் மூவேந்தர், வேளிர் எழுவர் சிறப்புக்களைக் கூறுகின்றார். இமயத்தில் விற் பொறித்த சேரன் குட்டுவனின் வஞ்சிமாநகரும், பாண்டியனின் தமிழ்நிலை பெற்ற மதுரை மாநகரும், தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியனின் உறந்தை மாநகரும் நல்லியக்கோடனின் கொடைக்குச் சிறிதாகும்.

மயிலுக்குப் போர்வை தந்த **பேகனும்**, முல்லைக்குத் தேர்தந்த **பாரியும்**, குதிரை முதலியவற்றை இரவலர்க்கு ஈந்த **காரியும்**, நாகம் நல்கிய கரிய நீல ஆடையினை ஆலமர் செல்வனுக்கு வழங்கிய **ஆயும்**, ஔவைக்கு அரிய நெல்லிக்கனியைக் கொடுத்த **அதிகனும்**, பரிசிலர்க்கு வேண்டுவன வழங்கிய நள்ளியும், குறும்பொறை நாட்டினைக் கோடியர்க்குக் கொடுத்த ஓரியும் ஆகிய வள்ளல்கள் எழுவரும் பூண்டிருந்த கொடை என்னும் பாரத்தைத்தான் ஒருவனே தாங்கிய சிறப்புக்கு உரியவன் நல்லியக்கோடன் ஆவன். வறுமையில் வாடிய தனக்கு வருத்தம் தீர விருந்தோம்பியும் யானையும் தேரும் வழங்கிச் சிறப்புச் செய்தான். இவ்வாறு கூறி வறிய பாணனை அவ்வள்ளலிடம் ஆற்றுப்படுத்துகிறான்.

### III.3.3.3. ஓய்மாநாட்டு நகர்கள்

நல்லியக்கோடனின் ஓய்மாநாட்டில் உள்ள நகர்களைக் காண்கிறோம். சிறுபாண்டியன் செல்ல வேண்டிய பெருவழிகளைப் புலவர் பாடுகின்றார். முதலில் கடற்கரை நகரமாகிய **எயிற்பட்டினம் கிடங்கில்** ஆகியவற்றின் நெய்தல் வளம் புனைந்து கூறப்படுகிறது. அடுத்து **வேலூர், ஆமூர்** ஆகிய நகர்களின் வளங்களும் சிறப்பிக்கப்படுகின்றன. இந்நகர்களில் வாழும் மக்களின் விருந்தோம்பும் பண்பினையும் காண்கிறோம். நெய்தல் நிலத்து மக்கள் கள்ளையும் மீன் வறுவலையும் வழங்கிப் பேணுவர். வேலூரில் வாழும் வேட்டுவக்குடியினர் புளிச்சோறும் காட்டுப்பசுவின் இறைச்சியும் விருந்தளிப்பர். ஆமூர் வாழ்வார் வெள்ளிய அரிசிச்சோறும், நண்டும் கலந்த உணவினை வழங்குவர் *(146-195)*.

ஓய்மாநாட்டில் **மாவிலங்கை** என்ற நகரும் சிறப்பாக விளங்கியது *(120)*. தொன்மைமிக்க பெருமையுடைய இலங்கையின் பெயரைத் தாங்கியதாக ஓவியர்களால் ஆளப்பெற்ற நகரமாக மாவிலங்கை திகழ்ந்தது *(119-122)*.

### III.3.3.4. நல்லியக்கோடனின் பண்புகள்

நல்லியக்கோடனைக் குறிஞ்சிக் கோமான் என்றும் புலவர் பாடினார் *(267-9)*. ஆதலின், ஓய்மாநாடு குறிஞ்சிவளம் மிக்கதாகவும் விளங்கியது எனலாம். செய்ந்நன்றி அறிதல், சிற்றினம் சேராமை, இன்சொல் பகர்தல், அருள், சினமின்மை, வீரர் அணியைக் குலைந்தோடச் செய்தல், புறங்காட்டி ஓடும் வீரரைத் தாக்காது பொறுத்தல், கருதியது முடித்தல், பிறரால் விரும்பப்படுதல், ஒரு பக்கம் சாராமை, பிறர் மன வோட்டத்தை உணர்தல், மகளிர் புகழும் பொழுது மடம் படல், அறிவுடைமை, பரிசிலரின் தரம் அறிதல், எல்லையின்றி ஈதல் முதலிய பண்புகளைப் பெற்றவன் நல்லியக்கோடன். பல உடுக்களின் நடுவே ஒளிவீசும் முழுமதியைப் போலப் பல மன்னர்களின் நடுவே ஒளிவீசியவன் *(207-220)*.

மூங்கிலை உரித்தாற் போன்ற மாசற்ற ஆடையினையும் தேறலையும் பாணர் முதலிய பரிசிலர்க்கு அளிப்பவன். வீமன் செய்த மடை நூல்வழி சமைக்கப்பெற்ற பல்வேறு உணவுவகைகளையும் மாற்று நாட்டில் படையெடுத்துக் கொண்டு வந்த நிதியங்களையும் பரிசிலர்க்கு வழங்குவான். தேரையும் வெள்ளிய எருதினையும் பாகனொடு கொடுப்பவன் *(235-261)*.

### III.3.3.5. கருத்துரை

நத்தத்தனார் இயற்புலவராகவும் இசைப்புலவராகவும் இருந்தவராதல் வேண்டும். ஆடல், பாடல் முதலிய கலைகளில் தேர்ச்சி பெற்றதாலன்றோ அக்கலை வல்லாரைப் பாராட்டிப் பாடியுள்ளார். தன்னைப் புரந்த வள்ளலாகிய நல்லியக்கோடனின் நகர் வளத்தையும், பண்புநலன்களையும் மக்களின் விருந்தோம்பும் சிறப்பினையும் கற்பனைவளம் மல்கப்பாடியுள்ளார். மூவேந்தர், வேளிர் எழுவர் பற்றிய வரலாற்றுக்குறிப்புக்கள் சுட்டத்தக்கவை.

### III.4. பெரும்பாணாற்றுப்படை

காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிப் புரிந்த தொண்டைமான் இளந்திரையனிடம் பரிசில் பெற்றுவரும் பெரும்பாணன் ஒருவன் தன்னொத்த பெரும்பாணனை ஆற்றுப்படுத்தியதாகக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையினைப் படைத்துள்ளார். இப்பாட்டு ஈற்றயலடி சிந்தடியாக வருதலின் நேரிசை ஆசிரியமாகும். இப்பாட்டில் சுட்டப்பெறும் பாணன் பேரியாழினை இசைப்பவன் என்பது,

*இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி* [462]

என்ற அடியினால் புலனாகும். இப்பாட்டின் பொருட்கூறுகளைக் காண்போம்.

### III.4.1. பெரும்பாணனின் வருகை

இருளைப் பருகி ஒளியை வெளியிட்டு எழும்பும் கதிரவன் கனன்று காயும் முதுவேனிற் பருவத்தில் வறுமையில் வாடும் பெரும்பாணன் ஒருவன் பேரியாழினை இடது கையில் ஏந்திப் புறப்பட்டான். அந்தயாழின் அமைப்பினைப் புலவர் அழகுறச் சொல்லோவியம் செய்துள்ளார். பழுத்த மரத்தைத் தேடிச் செல்லும் பறவைக் கூட்டத்தைப் போல அப்பாணன் தன் சுற்றத்துடன் புரவலரை நாடி வருகிறான். இளந்திரையனைப் பாடிப் பரிசில் பெற்ற பெரும்பாணன் தான் பெற்ற பேற்றினை எடுத்துக்கூறுகிறான். வெப்பத்தால் கருகிய கானத்திற்கு மழை வாய்த்தாற்போல, வறுமையில் வாடிய தனக்குப் பெருஞ்செல்வமும், குதிரையும், களிறும் திரையன் பரிசிலாகத் தந்த இன்பச் செய்தியை இயம்புகிறான். தொடர்ந்து அவ்வள்ளலின் சிறப்பினையும் நாட்டுவளத்தையும் கற்பனைத்திறத்துடன் எடுத்துரைக்கிறான் [*1-28*].

### III.4.2. திரையனின் சிறப்பு

உலகம் காக்கும் திருமாலின் வழித்தோன்றல் ஆகிய திரையன்

மூவேந்தரினும் மேம்பட்டவன். தீயவை கடிந்தவன். அறநெறியில் செங்கோலாட்சி செய்பவன். அவன் ஆட்சியில் பொருள்களை வழிப்பறி செய்யும் கொடியோர் இல்லை. இடி, பாம்பு, விலங்கு என்பனவற்றால் இடர் இல்லை [29-45]. அவன் தலைநகரமாகிய கச்சி (-காஞ்சி) தொன்மைமிக்கது. உலகத்தார் போற்றும்படியான பெரும்புகழ் படைத்தது. தாமரை மலரின் இதழடுக்குகளைப் போன்ற அழகிய வீதிகளை உடையது. வாணிப வளம்மிக்கது. பரிசிலர்க்குத் திறந்த வாயிலை உடையது. வலிய அரண்களைக் கொண்டது. பலாப்பழம் போலச் சுவைமிக்கது. பலநெறியாளரும், விழாக்கொண்டாடும் மாட்சி வாய்ந்தது. பகைவரை வென்று வாகைசூடிய திரையன் கொடைக்குணம் மிக்கவன். தன்னை அடைந்தாரை அருளலும், எதிர்த்தாரைக் காய்தலும் உடையவன். பலநாட்டு வேந்தரும் திறை செலுத்துவர். முறைவேண்டியும், குறைவேண்டியும் வநதவர்க்கு வேண்டுவன வழங்குபவன். புலவர்க்கு அணிகலன்கள் அளிப்பவன். அமைச்சராகிய சுற்றத்துடன் கூடி இருப்பவன். பகைவரை வென்று அவர் நாட்டினின்றும் கொண்டுவரப்பட்ட பொருளை உடையவன். தொண்டை மரபினரின் வழித்தோன்றல். வீரர்க்கு வீரன். செல்வர்க்குச் செல்வன் [393-456].

### III.4.3. தொண்டை நாட்டின் வளம்

தொண்டைநாடு வணிக வளம்மிக்கது. உமணர் உப்புப் பொதியை எருது பூட்டிய வண்டிகளில் ஏற்றிச்சென்று விற்பர். மலையிலும், கடலிலும் விளையும் பொருள்களை விற்கவரும் வணிகர் உடைவாள் தாங்கிப், பொதிகளைக் கழுதைகளின் மேலேற்றிச் செல்லுவர். வணிகர் செல்லும் பெருவழியில் சுங்கவரி வாங்கும் அலுவலர் இருப்பார் [46-82].

### III.3.4.3.1. பாலை வளம்

காடுகளில் வாழும் வேட்டுவர் எலி நுழையாதபடி ஈந்தின் இலையினால் வேயப்பட்ட குடிசைகளில் வாழ்வர். வேட்டுவப் பெண்கள் புல்லரிசியைச் சோறுசமைப்பர். இச்சோற்றுடன் வாட்டிய இறைச்சியையும் தேக்கிலையில் விருந்தினர்க்குப் படைப்பர். கானவர்கள் நள்ளிரவில் பன்றிகளையும், பகலில் முயலையும் வேட்டையாடுவர். வேட்டுவர் வீடுகளில் முள்வேலி இருக்கும். காவல் நாய்கள் கட்டப்பட்டிருக்கும். தாழிட்ட வாயில்களும் உண்டு. வீடுகளில் உள்ளே வில், வேல், வாள் அம்புகள், கேடயம் முதலியன இருக்கும். விருந்தினர்க்கு உடும்புப் பொரியலுடன் நெல்லரிசிச் சோற்றினைப் படைப்பர் [83-133].

### III.3.4.3.2. குறிஞ்சி வளம்

யானை, பாம்பு, இடி என்பனவற்றுக்கு அஞ்சாதவர் மறக்குடி மகளிர். மறவர் வாளாற்றலால் பெற்ற உணவினைக் கூடி உண்பர். புலியைப் போன்ற வீரர்கள் சுற்றத்துடன் சென்று பகைவர் நாட்டினின்றும் கவர்ந்து வந்த ஆக்களைக் கள்ளுக்கு விற்பார். தோப்பிக் கள்ளினைப் பருகி ஆட்டுக்கிடாயை அறுத்துச் சமைத்து உண்டு களியாட்டத்தில் ஈடுபடுவர் [*134-146*].

### III.3.4.3.3. முல்லை வளம்

ஆயர்குடியிருப்புக்களில் குறுந்தடிகளில் கட்டப்பட்டுள்ள தழைகளை ஆட்டுமந்தைகள் தின்னும். வீட்டின் முன்றிலில் உள்ள முளைகளில் ஆக்களைக்கட்டும் கயிறுகள் உண்டு. விடியலில் நிலைமத்தினால் ஆய்ச்சியர் தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பர். ஆய்மகள் மோரினை விற்று நெல்பெற்று வந்து உறவினரை உண்பிப்பாள். நெய்விற்ற பணத்திற்குப் பொன் வாங்கி வராமல் கறவைமாடுகளையே வாங்குவாள். விருந்தினர்க்குப் பாலில் பொங்கிய தினைச்சோற்றினைத் தருவர். ஆநிரை மேய்க்கச்செல்லும் ஆயர் குழலையும், யாழையும் வாசித்துப் பறவைகளையும் மகிழச் செய்வர். ஊர்களில் உள்ள வீடுகள் வரகு வைக்கோலால் வேயப்பட்டிருக்கும். அவற்றின் முற்றத்தில் வரகுக் குதிர்கள் நிறைந்திருக்கும். அவற்றை அரைப்பதற்குரிய திரிகை நடப்பட்ட பந்தரும், கலப்பைகள் சார்த்தப் பெற்ற கொட்டிலும் உண்டு. வரகுச்சோறும் அவரைக்கறியும் விருந்தினர்க்கு வழங்குவர்[*148-196*].

### III.3.4.3.4. மருத வளம்

உணவுப் பொருள் நிறைந்த உழவர் குடியிருப்புக்கள் வளம் பெற்றவை. வேளாண் தொழில் சிறப்புற்றிருந்தது. தோட்டங்கள் பற்பல. உழவரின் மனைகளில் நெற்கூடுகள் மிகுதி. நெற்குவியல்கள் பொன்மலைபோல் காட்சிதரும். சிறுவர்கள் சிறுதேர் உருட்டி விளையாடுவர். விருந்தினர்க்கு நெல்லரிச்சோறும், கோழிக்கறியும் வழங்குவர். கரும்பு ஆலைகளில் கரும்பினை இட்டுச் சாறு பிழிந்து காய்ச்சுவர். அங்குச் செல்பவர் கருப்பஞ்சாற்றினை உண்டுமகிழ்வர் [*197-262*].

### III.3.4.3.5. நெய்தல் வளம்

நெய்தல் நிலத்தில் வாழும் வலைஞர்களின் குடியிருப்புக்களின் முற்றத்தில் சுரைக்கொடி படர்ந்திருக்கும். வலைவீசி மீன்பிடித்து வாழும் பரதவர்கள் அரிசிக்கூழுடன் சுட்ட மீனும், கள்ளும் விருந்தினர்க்குக் கொடுப்பர் [*263-282*].

ஒருபால் மறைகாப்பாளர் உறையும் இடங்கள் உண்டு. பந்தற்கால்களில் ஆவின்கன்று கட்டப்பட்டிருக்கும். கோழி, நாய் அங்கு அணுகா. அந்தணர் ஓதும் மறைமொழியைக் கேட்கும் கிளிகளும் ஓதும். உயர்ந்த அன்னமும், நறுமோரும், நெய்கலந்து மிளகுப் பொடிதூவப் பெற்ற மாதுளங்காய்ப் பொரியலும், ஊறுகாயும பல்வகை மரக்கறி உணவும் வருவார்க்கு வழங்குவர் [*297-310*].

நீர்ப்பெயற்று என்னும் ஊரைத்தாண்டிக் கடற்கரைப் பட்டினத்தில், மேலைநாட்டுக் குதிரைகள், வடநாட்டுப் பொருள்கள் யாவும் மரக்கலங்களில் கொண்டுவரப்படும். மாடம் ஓங்கிய வீதிகள். பரதவர் வாழும் பல்வேறு தெருக்கள். காவலுடைய பண்டகசாலைகள். மயிலனைய மங்கையர் பந்தும் கழங்கும் விளையாடுவர். கள் விற்கும் இடங்களில் பன்றிக்கறியும், கள்ளும் தருவர் [*319-345*].

கடற்கரையில் கடல் வாணிகர்க்குப் பேருதவியாக ஓங்கிய கலங்கரை விளக்கம் உண்டு. படப்பைகளில் வாழும் நெய்தல் நிலத்து உழவர்கள் பலாப்பழம், தெங்குஇளநீர், வாழைக்கனி, பனைநுங்கு, சேம்பின் கிழங்கு, பல்வகைப் பண்டங்கள் முதலியனவற்றை உண்ணத் தருவர் [*346-362*].

மேலும் கடந்துசென்றால் காந்தளையுடைய அழகிய மலையில் களிறு கிடந்தாற் போலத் திருமால் கோயில் கொண்டுள்ள எஃகா என்னும் ஊர் உண்டு. அங்குள்ள சோலைகளில் பாண்மகளிருடன் விளையாடுவர். பூமலிந்த பெருந்துறையில் பொழுது போக்கலாம். யாழை மீட்டித் திருமாலைப் பாடலாம் [*372-392*].

## III.4.4. திரையன் விருந்தோம்பிப் பரிசில் வழங்குதல்

இரவலரின் கிழிந்த ஆடையினை நீக்கிப் பாணனும் அவன் சுற்றமும் அணியப் பாலாவி போன்ற நூலாடையைத் திரையன் வழங்குவான். சமையற் கலையில் வல்லவன் ஆக்கிய இறைச்சித் துண்டுகளையும் அரிசிச் சோற்றையும் தீஞ்சுவை உணவுகளையும் ஒளியுடைய உண்கலத்தில் படைத்து உண்ணச்செய்வான். விறலியர் சூடுதற்குப் பொன்னரி மாலையினையும், பொற்றாமரைப் பூவினையும் வழங்குவான். நான்கு வெண்புரவிகள் பூட்டிய தேரினையும் பரிசிலாகத் தருவான். மேலும் பல குதிரைகளும் தந்து வழி அனுப்புவான் [*465-493*].

இயற்கைவளம் மிக்க தொண்டை நாட்டின் காவலனாகிய இளந்திரையனை,

ஒளிறு இலங்கு அருவிய மலைகிழவோன் [500]

என்று உருத்திரங்கண்ணனார் போற்றினார். வேங்கட மலைக்குத் தலைவனாகப் பேசப்படும் திரையனும் [அகம்.85.9], இப்பாட்டுடைத் தலைவனும் ஒருவனாதல் வேண்டும். மலை கிழவோன் என்று வரும்தொடரில் மலை என்பது வேங்கட மலையாதல் வேண்டும்.

### III.4.5. கருத்துரை

சோழநாட்டின் வடபகுதியாகிய தொண்டை மண்டலம் தொண்டையர் மரபில் தோன்றிய திரையனால் ஆளப்பெற்றது. அத்தலைவனின் வீரம், ஆற்றல், கொடைப்பண்பு, கலையுணர்வு யாவும் சிறப்பாகப் பேசப்பெற்றன. தொண்டை நாட்டின் ஐந்திணை வளமும், மக்களின் பண்பாடும், வாணிபச்செழுமையும் பாட்டிற்குப் பொருளாயின. காஞ்சிமாநகர், கடற்கரைப் பட்டினம் திரு எஃகா ஆகிய நகர்களின் அமைப்பினையும், மாடசியையும் காப்பியப்புலவரைப் போலக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியுள்ளார். பாட்டின் அடிக்குறிப்பில்தான் **இளந்திரையன்** என்ற பெயர் ஆளப்படுகிறது. பாட்டில் **திரையன்** என்றே இத்தலைவன் குறிக்கப்பெற்றான்.

### III.5. முல்லைப்பாட்டு

போர்வயிற் பிரிந்து சென்ற தலைமகன் வாகைசூடித் திரும்பி வருமளவும் தலைவி ஆற்றியிருத்தலும், வினை முடித்த தலைவன் விரைந்து வருதலையும் பொருளாகக் கொண்டது முல்லைப்பாட்டு. இப்பாட்டிற்குரிய தலைவன் இன்னன் என்று சுட்டப்பெறவில்லை. எனினும், அறிஞர்கள் பாண்டியன் நெடுஞ்செழியனாக இருத்தல் வேண்டும் என்று எண்ணியுள்ளனர். பத்துப்பாட்டில் மிகச் சிறியதாக 103 அடிகளில் நப்பூதனார் நேரிசை ஆசிரியமாக முலலைப்பாட்டினைப் பாடியுள்ளார். இவர் தந்தை காவிரிப்பூம்பட்டினத்தில் பொன் வாணிகம் செய்தவர் என்பது இவர் பெயர்க்கு முன்வரும் அடைச்சொற்களால் அறியப்படுகிறது. முல்லைப்பாட்டின் பொருட்கூறுகளைக் காண்போம்.

### III.5.1. விரிச்சிகேட்டல்

தலைவன் தலைவியைப் பிரிந்து வேற்றுநாட்டு வேந்தனுடன் போர்புரியச் சென்றுள்ளான். அவன் பிரிவினை ஆற்றாத தலைவிக்கு ஆறுதல் சொல்லும் பொருட்டு முதுபெரும் பெண்டிர் கார்காலத்து மாலைப் பொழுதில் நெல்லொடு முல்லை அரும்புகளையும் தூவித் [திருமாலைத்]தொழுது விரிச்சி [நற்சொல்] கேட்டு நின்றனர்.

அப்பொழுது ஆய்மகள், வீட்டில் தாய்ப்பசுக்களைப் பிரிந்து வருந்தும் கன்றுகளை விளித்து அவற்றின் வருதத்தைப் போக்கும்படி, ‘உம் தாயர் ஆயர்கள் பின்னின்று செலுத்த இப்பொழுதே வந்தடைவர்’ என்று கூறக்கேட்டனர் முதுபெண்டிர். நல்ல நிமித்தத்தை உணர்த்துவதாக ஆய்மகளின் சொல்லினைப் புரிந்துகொண்டு பிரிவாற்றாத தலைவிக்கு ஆறுதல் கூறினர். தலைவியோ ஆற்றாது புலம்பினாள். பிரிந்து சென்றவன் வேந்தனாதலின், பிரிவாற்றாத தலைவி அவனுடைய பெருந்தேவியே என்பது புலனாகும் [1-23].

### III.5.2. பாசறை இருப்பு

பகைப்புலத்தின் புறத்தில் வேட்டுவர் குடியிருப்பினை அகற்றிப் பாசறை அமைக்கப்படுகிறது, தழைகளை உண்ணாதிருந்த யானைகளைப் பாகர்கள் வடசொற்களினால் அதட்டிக்கவளம் ஊட்டினர். விற்களை வரிசையாக ஊன்றி அவற்றின் மேல் அம்புக் கூடுகளும், ஈட்டிகளை ஊன்றி அவற்றின்மேல் கேடயங்களும் தொங்கவிடப்பட்டன. கூடாரங்களின் நடுவே அரசனுக்கு அமைக்கப்பெற்ற பாசறையில் மங்கையர் விளக்குகள் ஏற்றினர். மூதாளர் பாதுகாவலராக உள்ளனர். நாழிகைக் கணக்கர் பொழுது அறிவிக்கின்றனர். மெய்க்காப்பாளராகிய யவனர் விளக்குக்காட்ட தன்னிடத்தைத் தலைவன் அடைகிறான். ஊமராயினும் உடலசைவுகளினால் பேசும் மிலேச்சர்கள் தலைவனின் மருங்கில் தூங்காமல் காவல்புரிகின்றனர். உறக்கம் கொள்ளாத அரசன் முன்னாட் போரில் நடந்த நிகழ்வுகளை எண்ணிப்பார்க்கிறான். விடிந்ததும் போர் தொடுக்கும் வகை குறித்துச் சிந்திக்கிறான் [24-76].

### III.5.3. தலைவன் மீளுதல்

பிரிவாற்றாமல் மெலிந்துவிட்டாள் தலைவி. வளையல் கழல்கிறது. அம்புப்பட்ட மயில்போல் துடித்துக் கிடக்கிறாள். பெருமூச்சு விடுகிறாள். பாவை விளக்கு எரிகிறது. எழுநிலை மாடத்தில் தலைவி இருக்கிறாள். பெருமழை பொழிந்து அருவிபோலக் கொட்டும் கூடுவாய் நீர்த்தாரைகளின் ஓசையினை எண்ணிக் கொண்டே இருந்தாள்.

பகைவரை வென்று வாகை புனைந்து பெரும்படையுடன் தலைவன் திரும்புகிறான். வெற்றிக்கொடி வலமாக உயர்த்திப் பிடிக்கப்பட்டது. ஊதுகொம்பும் வெண்சங்கும் ஒலிக்கத் தலைவன் வருகிறான். அவன்வரும் பெருவழியில் காயாஞ்செடிகள் அஞ்சனம் போலவும், கொன்றை பொன்போலவும் காந்தள் கைபோலவும் தோன்றி குருதிபோலவும் பூத்தன. வரகங்கொல்லையில்

தலைமானும், பிணைமானும் துள்ளி விளையாடுகின்றன. முல்லைக்காட்டினைப் பின் தள்ளி, தலைவன் குதிரை பூட்டிய தேரில் விரைந்துவரும் ஆரவாரம் பெருந்தேவியாகிய தலைவியின் உட்செவியில் சென்று மகிழ்விக்கிறது [77-103].

### III.5.4. கருத்துரை

தொல்காப்பியப்பாவியல் நெறியினைக் கருத்திற்கொண்டு இப்பாட்டினை நப்பூதனார் புனைந்துள்ளார். 'காரும் மாலையும் முல்லை' என்ற இலக்கணநெறிப்படி கார்காலம் மாலைப்பொழுது ஆகியவற்றின் வருணனைகள் பாடடிற்கு அழகு சேர்க்கின்றன. முல்லையின் புறமாக வஞ்சித்திணை பேசப்படுகிறது. பகையரசனை வென்று தன்னாற்றலை நிறுவிய தலைவனின் வெற்றி சிறப்பாகப் பாடப்பெற்றது. நாழிகைக் கணக்கர், யவனர், மிலேச்சர் பற்றிய குறிப்புக்கள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை ஆகும்.

### III.6. மதுரைக்காஞ்சி

காஞ்சி என்ற சொல் நிலையாமையினைக் குறிக்கும். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு நிலையில்லாத உலகியல்பினை எடுத்துச் சொல்லி, நிலைபேறுடையதை அடைவதற்கு நெறிப்படுத்துவதாய் **மாங்குடிமருதனார்** என்னும் புலவர் தலைவரால் பாடப்பெற்ற நெடும்பாட்டு **மதுரைக்காஞ்சி** எனப்பெயர் பெற்றது. அவன் தலைநகராகிய மதுரையிடத்துக் கூறிய காஞ்சியாதலின் மதுரைக்காஞ்சி எனப்பெயர் சூட்டினார். இப்பாட்டு 782 அடிகளினால் இயன்ற வஞ்சி நெடும்பாட்டாக விளங்குகிறது. கி.பி. 859-907இல் மதுரையில் ஆட்சிபுரிந்த **பராந்தக வீரபாண்டியனின்** தளவாய் புரச்செப்பேடு, மதுரைக்காஞ்சியின் முதலடியாகிய **ஓங்குதிரை வியன்பரப்பின்** என்ற தொடரினைக் கொண்டு தொடங்குகிறது. இச்செப்பேட்டின் செழுந்தமிழ்ப் பாடலைப் பாடியவன் **நிருபசேகரப் பெருங்கொல்லனாகிய** புகழ்படைத்த **நக்கன்** என்னும் பெயருடைய புலவன். பத்துப்பாட்டில் மிக நீண்ட பாட்டாகிய மதுரைக் காஞ்சியின் பொருட்கூறுகளைச் சுருக்கமாகக் காண்போம்.

### III.6.1. பாண்டியனின் சிறப்பு

நிலவளம் மிக்கது பாண்டியநாடு. வாய்மையும், புகழும் நிறைந்த நல்ல அமைச்சரொடு பன்னெடுங்காலமாக உலகினை ஆட்சிப்புரிந்த உயர்குடியில் தோன்றியவனே! பெரும்போரை வெல்லும் ஆற்றல்மிக்க பெரும்படையினை உடையவனே! இராவணனைப் பெயர்த்த பேராற்றல் உடையவனும் அகத்தியரை

ப.ப 720



ஆசானாகக் கொண்டவனும் ஆகிய வேந்தனின் மரபில் வந்தவனே! பொதியமலைக்குத் தலைவனே! இருபெருவேந்தரையும் குறுநில மன்னரையும் வென்று பெருநிலப்பரப்பினைத் தன்னகப்படுத்தி மார்பில் பொன்மாலை பூண்டவனாகிய வடிம்பலம்பநின்ற பாண்டியனின் வழித்தோன்றலே! தெற்கே குமரியையும், வடக்கே இமயத்தையும், கிழக்கும் மேற்கும் கடலையும் எல்லையாகக் கொண்ட பெருநிலத்தில் வாழ்வோர் எல்லாம் நின் ஏவல்கேட்டு நடக்க வெற்றி சிறக்க வேந்தர் வேந்தாய் விளங்குபவனே! கடல் வாணிபம் செழித்த நெல்லூரினை [சாலியூர்] வென்ற வேந்தனே! பல்வகை ஓசைகளும் பரதவர் மகளின் குரவையாடும் ஓசையும் மலிந்த ஊர்க்குத் தலைவனே! பொருநர்களுக்குக் கன்றும், பிடியும், களிறும் திரளாகக் கொடுத்துப் பொற்றாமரைப் பூக்களை அணிவித்துக் குட்டநாட்டாரை வெல்லும் வேந்தனே! [*1-105*].

## III.6.2. தலையாலங்கானத்துப் போரில் வெற்றி

வானம் மழை பொழியாவிடினும், வெள்ளி தன் இடம்மாறிச் செல்லினும், வெள்ளம் மாறாமல் விளையுள் பெருகுவதால் காற்றில் நெல் அசையும் ஓசையும், அதனை அறுப்பாருடைய ஓசையும், பறவைகள் ஓசையும், கடலோசையும் மீன்வேட்டையாடும் பரதவர் கரையினைச் சேரும் ஓசையும் உமணரின் உப்புவிற்கும் ஓசையும் பல தொழில்கள் புரிவாரின் ஓசையும் ஒழியாததும், புதுவருவாய் உடையதுமாகிய **முதுவெள்ளிலை** என்னும் ஊரினை ஆண்டகுறுநில மன்னர் நின்னை மேம்படுத்துக கூறுவர்.

உழவு, வாணிகம் என்ற இருவகையாற் பெற்ற பெருஞ்செல்வத்தால் புகழ்நிறைந்த குடிமக்கள் வாழும் நானிலத் தலைவர்களும் பழமை கூறி நின் ஏவலைக் கேட்டொழுகுவர். காற்றைப் போல் பரந்து சென்று பகைவரின நாட்டினை எரியூட்டி ஆலங்கானத்துப் போரில் நெடுநில மன்னர் இருவரும் குறுநிலமன்னர் ஐவரும் அழியும்படி அவருடைய முரசுகளைக் கைப்பற்றிக் களவேள்வி செய்த புகழ்படைத்த வேந்தனே!

நின்னுடன் நட்புக்கொண்ட அரசரின் குடியை உயர்த்துவாய்! பகைத்தவரின் அரசினைப் பெயர்த்துக் கொள்ளுவாய்! சீரும் சிறப்புமுடைய முத்தினையும் சங்குகளையும் குளித்தெடுப்பாரின் சேரிகளையும், கள் குடிக்கும் குடிகள் வாழும் பாக்கங்களையும் உடைய கொற்கை நகரில் வாழ்பவர் விரும்பும் பொருநனே! [வீரனே]. தென்திசைக் குறுமன்னராகிய பரதவர்க்குப் போரேறாக விளங்குபவனே!

பிறர்க்கு அரியனவாகவுள்ள நுகர்பொருள்களையெல்லாம் எளிதாகக் கொண்டு, அவற்றை நினக்குரியனவாக ஓம்பாமல் மற்றவர்களுக்கு வழங்கிய வள்ளலே! மலைக்காடுகளைக் கடந்து உள்நாடுகளில் புகுந்து பகைவரின் அரண்களைக் கைப்பற்றி, நீ விரும்பிய இடங்களில் பல்லாண்டுகள் தங்கி அந்நிலங்களை மேம்படச் செய்த தலைவனே! [*106-151*].

### III.6.3. பகைவரை அடக்கி நெறிநிறுத்துதல்

பகைவர் தேயத்தை அழித்து நாடு என்னும் பெயர் காடு ஆகச்செய்து, ஆக்கள் இருந்த இடத்தில் புலி முதலிய மாக்கள் வாழ, மங்கையர் துணங்கையாடுதலை மறக்கவும், அவையோர் அமரும் பொது மன்றத்தில் பேய் மகளிர் ஆடவும், பெண்டிர் வருந்தவும். நெற்குதிர்களில் கூகை தன்துணையுடன் கதறவும் பொய்கையில் செருந்தியும், சண்பங்கோரைப்புல்லும் வளரவும், வயல்களில் பன்றிகள் திரியவும் நின் பகைவர் நாடுகள் பாழாயின.

முருகனைப் போலப் பகைவரை அழித்துச் சோழமண்டலம், தொண்டை மண்டலம் ஆகியவற்றை முற்றுகையிட்டு, அரசியல் பிழையாமல் பெரியோர் சென்ற அடிவழியினைப் பின்பற்றி, நின்குலத்திற்குப் பழையதாகிய யாவரும் தொழும் பிறைமதி போல நின்வெற்றி வழிவழிச் சிறப்பதாக! நின் பகைவரின் ஆக்கம் தேய்மதி போல் கெடுக! [*153-196*].

### III.6.4 நிலையாமையினை அறிவுறுத்துதல்

தேவருலகினையும் அமிழ்தத்தினையும் பெறுவதாயினும் பொய் நீங்கிய மெய்நட்பினையுடையோய்! விண்ணவரே பகைத்துவரினும் அவர்க்கு அஞ்சிப் பணியாத ஒழுக்கத்தை உடையவனே! தென்திசையில் வாணன் என்பான் வைத்திருந்த மலைபோன்ற செல்வத்தைக் கொடுப்பினும் பழிச்செயல் புரியாதவனே! ஈதலும் இசையும் விரும்பியவனே! நினக்குப் பெரும்பொருள் ஒன்றனைக் கூறப்போகிறேன். கேட்பாயாக. நின் அவலம் கெடுக. பெரும்புகழ் நிலை பெறுக!

விறலியர், பாணர் முதலியோர்க்குப் பெரும் பரிசில்களை வழங்கி விழுமியாரைச் சுற்றமாகக் கொண்டு பகைவரைப் பணியச் செய்து திறைகொண்டு முரசு முழங்க உலகினை ஆட்சிபுரிந்து மாண்ட மன்னர்களின் எண்ணிக்கை கடலின் திரை கொழித்த மணல் அளவினை விட மிகுதியாகும் [*197-237*].

### III.6.5. ஐந்திணை வளம்

களிறு மறையும்படி ஓங்கிய நெற்கதிர்களையுடைய கழனிகள்.

ஒளிறும் பொய்கையில் உள்ள தாமரை, நெய்தல், நீலம், ஆம்பல் ஆகிய மலர்களில் வண்டுகள் தங்கிவாழும். வலைஞர் மருதநிலத்தின் மீனைப் பிடித்துக் கொன்று குவிக்கும் ஓசையும், கரும்பினைச் சாறுபிழியும் ஆலையின் ஓசையும், உழவர்களின் ஓசையும், திருப்பரங்குன்றத்தில் விழாவெடுக்கும் ஓசையும், மகளிரும் அவர்தம் தலைவரும் நீராடும் ஓசையும் உள்ளிட்ட பலவகை ஓசைகளும், எழும்பும் மருதநிலம் ஒருபக்கம். சிறுதினை, வரகு விளங்கும் முல்லை நிலத்தில் மான்கள் துணையுடன் துள்ளி விளையாடும், கொன்றை, முல்லை முதலிய மலர்கள் கமழும். தோரைநெல், வெண்சிறு கடுகு, ஐவனநெல், இஞ்சி, மஞ்சள், மிளகு முதலியன குறிஞ்சி நிலத்தில் நிறைந்துள்ளன. கிளியை விரட்டும் ஓசையும் அவரையினை மேயும் காட்டுப்பசுக்களை விரட்டும் ஓசையும் வேட்டுவர் பன்றியைக் கொன்ற ஓசையும், வேங்கைப்பூக் கொய்யும் ஓசையும் அருவியோசையுடன் மலைப்பகுதியில் கேட்கும். பாலை நிலத்தில் வில்லேந்திய கையராக வன்சொல் இளைஞர் இருப்பார்.

ஒளியுடைய முத்துக்கள், சங்குகள், பரதர் கொண்டுவந்த பல்வேறு கூலங்கள், வெள்ளுப்பு, கருப்புக்கட்டி, கருவாடுகள் முதலியவற்றை ஏற்றின சீரிய மரக்கலங்களை இயக்கும் மீகாமர் வெளிநாடுகட்குக் கொண்டு செல்லும் பொருட்டுக் கூடியுள்ளனர். மேலைநாட்டிலிருந்து வந்த குதிரைகளும் மிகுந்திருக்கும். இவ்வாறு நெய்தல் நிலம் வழிவழிச் சிறந்திருக்கும். இங்ஙனம் **'ஐம்பால் திணையும் கவினி'**க் காட்சியளித்தன [*238-326*].

### III.6.6. மதுரை மாநகரின் அமைப்பு

ஆடல் பாடல்களால் சிறந்ததும் புதுவருவாயுடையதும் ஆகிய நல்ல நாட்டிற்கு நடுவணதாகப் பெரும்பாணரின் குடியிருப்புக்கள் இருந்தன. மண்ணுள்ள அளவும் ஆழ்ந்து செல்லும் அகழியையும், விண்ணைத் தொடும்படி ஓங்கிய மதிலரணையும் வலிய வாயிலையும், நெடுநிலையினையும், திண்ணிய கதவினையும், மலை போன்ற மாடங்களையும், வையையாறு இடைவிடாது ஓடுதல் போல் மக்கள் இயக்கத்தையும், தென்றல் இசைக்கும் சாளரங்களையுடைய நல்ல இல்லங்களையும், யாறுகிடப்பது போன்ற அகன்ற தெருக்களையும் உடையது மதுரை. வாணிகத்தின் பொருட்டுவந்த பல நாட்டவரும் எழுப்பும் ஓசையும், முரசின் முழக்கமும், பொய்கையில் நீராடுவோரின் ஓசையும் உடையது மதுரை.

நாளங்காடி, அல்லங்காடிகள் ஓவியம்போல் கண்ணைக் கவரும். விழாக்களுக்காக உயர்த்திய கொடிகளும், வெற்றிப் பதாகையும், கள்ளின் கொடியும், உள்ளிட்ட பலகொடிகளும் மலைமேல் அருவி அசைதல் போல அசையும்.

யானை, தேர், குதிரை, வீரர் என்னும் நாற்பெரும் படைகளின் இயக்கம் உண்டு. பல்வகைப் பண்டங்களையும் நாளங்காடியில் விற்பனை செய்வர். முதுபெண்டிர் பல்வகை நுகர் பொருள்களையும் ஏந்திச் சென்று திரிந்து விற்பர்.

மாடங்கள் விளங்கும் மலிபுகழ்க் கூடலின் நாளங்காடியில் பண்டங்கள் கடல்நீரைப்போலக் கொளக்கொளக் குறையாதும் தரத்தர மிகாதும் இருந்தன. வளங்கெழு செல்வர்கள் பொலிவுடைய கலிங்க ஆடையினை உடுத்தி, உடைவாளினைக் கட்டி, தோளில் மேலாடையும் காலில் வீரக்கழலும் மார்பில் (வேப்ப) மாலையினையும், முத்துமாலையினையும் அணிந்து தேரிலமர்ந்து குதிரைகளை விரையச் செலுத்துவர். பூந்தொடி மகளிர் சிலம்பொலிப்பவும் பொன்னணிகலம் ஒளிவிடவும் மலரின் மணம் தெருவுடன் கமழவும், காதிற்குழையும் முகத்தில் ஒளியும் உடையவராய் உலாவும் நீண்ட மாளிகையின் நிலா முற்றங்களில் திங்கள் ஒருகால் தோன்றி ஒருகால் மறையும்.

ஐம்பூதங்களைப் படைத்த சிவபிரானை முதல்வனாகக் கொண்டுள்ள தெய்வங்கட்கு உயர்பலி கொடுத்தற்கு அந்திவேளையில் வாச்சியங்கள் ஒலித்தன. பௌத்தப் பள்ளிகளுக்குப் பெண்கள் குடும்பத்துடன் சென்று பூவும் புகையும் காட்டி வழிபட்டனர். அறநெறி பிறழாத அன்புடைய நெஞ்சினராகிய அந்தணர் பள்ளியும் இருந்தது. சாவகராகிய இல்லறத்தார் பூவும் புகையும் கொண்டு வழிபடுவதற்குரிய அமணப்பள்ளிகள் விளங்கின.

துலாக்கோல் போல் செம்மையுடையராய் நொதுமல் உள்ளத்துடன் அறங்கூறுவோர் வாழும் இருக்கையும், அன்பும் அறனும் காக்கும் காவிதிப்பட்டம் பெற்ற அமைச்சர் இருப்புக்களும் இருந்தன. மலை, நிலம், நீர் முதலிய இடங்களில் விளையும் விலையுயர் பொருள்களையும், அயல்நாட்டுப் பண்டங்களையும் விற்பனை செய்யும் வணிகர் இருப்பிடங்கள் விளங்கின. (அரசர்க்கு உசத்துணையாக உதவும் அமைச்சர் முன்பு கூறப்பட்டதால், அவரை நீங்கிய) நாற்பெருங்குழுவினர் இல்லங்கள் இலங்கின. பல்வேறு தொழிலாளரும், கைவினைஞரும், கலைகளில் வல்லவரும் நால்வேறு தெருக்களில் வாழ்ந்தனர்.

பலவின்சுளை, தேமாங்கனி உள்ளிட்ட பழவகைகள், உணவு வகைகள், கிழங்குகள் முதலியன விற்போரும் இருந்தனர். புள்ளிசை போல அல்லங்காடியில் பேரோசை எழும். வறும்பூத் துறக்கும் வண்டினையும், பழத்தை நாடிச்செல்லும் பறவையினையும் போன்ற பொதுமகளிரின் கலை வாழ்வு மேம்பட்டிருந்தது.

திருமாலுக்குரிய **ஓணவிழா** சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. புதல்வரை ஈன்ற மகளிர் குளத்தில் நீராடினர். மயிலைப்போன்ற நடையுடைய சூலுற்ற மகளிர் தேவராட்டியுடன் சென்று தெய்வத்திற்கு மடைகொடுத்தனர். முருகனுக்குக் குறிஞ்சிப் பூவுடன் கடம்பமாலையும் சூட்டி இன்னியம் ஒலிக்க வேலன் வழிபடுதலும் மகளிர் குரவைக் கூத்தாடுதலும் நிகழ்ந்தன.

இராக்காலம் உரையும் பாட்டும் கொண்டு முதல் யாமம் செல்லும். இரண்டாம் சாமத்தில் கடைகள் அடைக்கப்பட்டன. மகளிர் பள்ளி கொண்டனர். கூவியர் [-கூவி விற்பவர்], வயிரியர் யாவரும் துயின்றனர். ஒலியடங்கிய கடல்போல் இச்சாமம் அமைதியாய் இருந்தது. மூன்றாம் சாமத்தில், அச்சம் அறியாக் காவலர் ஊரினைச் சுற்றிவந்து காப்பர். விடியற்காலத்தில் மறையிசை, யாழிசை உள்ளிட்ட ஒலிகள் கேட்கும். **சூதர்** வாழ்த்துக்கூற **மாகதர்** புகழ்பாடுவர். **வேதாளிகர்** தாளவிசைக் கேற்பப்பாடுவார். **நாழிகைக் கணக்கர்** கால அளவினைக் கூறுவர். முரசு முழங்கும். சேவற்கோழி கூவும். யானைச்சாத்தன், அன்னம் முதலியன கரையும். மயில் அகவும். பிடியைப் புணரும் களிறு பிளிறும். வலிய விலங்குகள் முழங்கும். கணவருடன் ஊடிய பெண்கள் சிந்திய முத்துக்கள் சிதறிக்கிடக்கும். வண்டுகள் ஆர்க்கும் இயல்புடையது வைகறைப் பொழுது. மதுரை மாநகரம் விண்ணகம்போல் பொலிவுற்று மிக்க புகழைப்படைத்தது [327-699].

## III.6.7. வேந்தனின் கொடைப்பண்பு

வாள்முகத்து மகளிரின் நறுந்தோள் புணர்ந்து துயிலெழுந்து காலையில் நீராடிக் கலிங்கம் உடுத்து மாலை சூடி, வீரத்தொடி அணிந்து, விளங்கும் நின்னை, பகைவரை அழித்த நின் மறவர்கள் நின்வாள் வலத்தையும் தாள்வலத்தையும் வாழ்த்தினர். “கிடங்கினையுடைய மதிலில் நின்று போரிட்ட வீரச்செல்வரைக் கொணர்மின்! போர்க்களத்தில் யானையினை வீழ்த்திப் புண்பட்டு வீழ்ந்த தலைவரைக் கொணர்மின்! வேலும் கணையும் மார்பில் பாய்ந்தும் நிலைகுலையாத முயற்சியாளரைக் கொணர்மின்! யானைத்திரளைக் கவர்ந்த, மண்டலத்தலைவர்களைக் கொணர்மின்! இவரையொத்த யாவரும் வருக! பாணர் வருக! பாண் பெண்டிர்

வருக! புலவரொடு கூத்தர் வருக!" என்று அனைவரையும் வரவேற்று நெடுந்தேரும் களிறும் வழங்கினாய் [700-752].

### III.6.8. அரசவாழ்த்து

தொல்லாணை நல்லாசிரியருடன் சங்கத் தமிழாய்ந்து இன்பம் துய்த்த [-புணர்கூட்டுண்ட] புகழ்சால் சிறப்பின் நிலந்தருதிருவிற் பாண்டியனைப்போல அருஞ்செயல்கள் ஆற்றிய நீ கடலின் மிசை விளங்கும் ஞாயிறு போலவும், பல உடுக்களின் நடுவே சுடர்விடும் திங்கள் போலவும் பூத்த சுற்றத்துடன் பொலிந்து இனிது விளங்குக. [நின் முன்னோன் ஆகிய] மாறனும், பல்லிளங்கோசரும், ஐம்பெரு வேளிரும், குறுநில மன்னரும் புகழவையில் நின்னைப் புகழ்ந்தேத்தப் பொற்கிண்ணத்தில் மகளிர் மணம் கமழ்தேறலை வழங்க உண்டு, நினக்குரிய காலமெல்லாம் மகிழ்ந்து உறைவாயாக! [753-782].

### III.6.9. கருத்துரை

சங்க காலத்தில் எழுதப்பட்ட மிகப்பெரும்பாட்டாகிய **மதுரைக்காஞ்சி ஒரு காப்பியம்போல் விளங்குகிறது.** தன்னேரில்லாத பாண்டியன் நெடுஞ்செழியனைத் தலைவனாகக் கொண்டு அவன் பெற்ற வெற்றி, கொடைப்பண்பு, நாட்டுவளம், இயற்கைவளம், அவன் தலைநகராகிய மதுரையின் மாட்சி, கலைகள், பல்வேறு சமயங்களின் சமனிலை, மக்களின் நம்பிக்கைகள், பண்பாடு, வாணிபம் முதலிய வரலாற்றுக் கூறுகளைத் தெள்ளிதின் விளக்கும் கருவூலமாக மதுரைக்காஞ்சி திகழ்கிறது.

## III.7. நெடுநல்வாடை

நெடுநல்வாடை என்ற சொல்லிற்கு நீண்ட நல்ல வாடைக்காற்று என்பது நேர்பொருள். நெடிதாகிய நல்ல வாடை என விரியும். தலைவனைப்பிரிந்து வருந்தும் தலைவிக்கு ஒரு பொழுது ஓரூழி போல நெடிதாகிய வாடையாய்த் துன்பம் தருகிறது. இல்லிருந்து தலைவியுடன் கூடிப் போகம் நுகர்தற்குரிய கூதிர்க்காலத்து, போகத்தில் மனமற்று வேற்றுப் புலத்தில் பகைவேந்தனை வெல்லும் முயற்சியில் கருத்தூன்றியிருக்கும் தலைவனுக்கு நல்வாடையாயிற்று என்பதால் இந்தப் பாட்டிற்கு **நெடுநல்வாடை** என்பது பெயராயிற்று என்ற கருத்தில் நச்சினார்க்கினியர் விளக்கம் தந்துள்ளார். இப்பாட்டு, சுட்டி ஒருவர்ப் பெயர்கொள்ளாமையின் அகப்பொருள் பற்றியது என்று கொள்ளலாம். ஆயினும், **'வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்'**(176) எனப் பாண்டியனின் அடையாளப் பூக் கூறினமையின்

அகம் ஆகாதாயிற்று என்று நச்சினார்க்கினியர் குறித்துள்ளார். வேப்பந்தாரினைத் தலையில் கட்டி வேலேந்திய படைத்தலைவன் புண்பட்ட வீரரை முறையே (மன்னனுக்குக்) காட்டிச் சென்றான் (176-177) என்று கூறப்பட்டதால் இதனை அகப்பாட்டு அன்று என்று கூறுதலை இக்காலத்து அறிஞருள் ஒருசாரார் உடன்படார். முல்லைப்பாட்டினைப் போலவே இப்பாடலின் அடிக்கருத்தும் பொருள் முடிபும் அகமாந்தர் நிலையும் பெரிதும் அமைந்திருத்தலின் அகப்பொருள் பொதிந்த பாட்டாகவே இதனையும் கொள்ளுவதில் தவறில்லை. இப்பாடலின் பொருள்கூறுகளைச் சுருக்கமாகக் காண்போம்.

### III.7.1. கூதிர்க்காலத்தின் நிலை

உலகு குளிரும்படி மழை பொழிந்தது. ஆயர்கள் ஆநிரைகளை வேறுபுலத்திற்குப் பெயர்ந்து செல்லுதற்குக் கலங்கினர். குளிரால் நடுங்கினர். மாக்கள் மேய்தலை மறந்தன. மந்திகள் கூம்பின. பறவைகள் வீழ்ந்தன. குன்றமே குளிர்ச்சியுறும்படியான காலம். குளிர் மிகுதியால் கறவைகள் கன்றுகளைப் பால் குடிக்க விடாமல் உதைத்தன.

முசுண்டைப்பூக்களும் பீர்க்கம் பூக்களும் புதர்களில் மலர்ந்தன. கொக்குகள், நாரைகள் கயல்மீன்களைத் தின்றன. முகில் மழைத்துளிகளைப் பொழிந்தது. நெற்கதிர்கள் முற்றிவிளைந்தன. கமுகின் பெருங்குலைக் காய்கள் முற்றின. பொழில்கள் சூழ்ந்த மாடங்கள் ஓங்கிய (மதுரை) மூதூரில் ஆறு போல் அகன்ற நெடுந் தெருக்கள் விளங்கின. தழைவிரவிய மாலையினையும் இருகோட்டு அறுவையினையும் சூடிய வலிய மிலேச்சர் கள்ளுண்டு மழைத்துளியைப் பொருட்படுத்தாமல் அங்குமிங்கும் திரிந்தனர். அந்திக் காலத்தில் மகளிர் இரும்புத்தகளியில் நெய்விளக்கேற்றினர். நெல்லும் மலரும் தூவி வீட்டுத் தெய்வத்தை வணங்கினர். இங்ஙனம் ஆவண வீதிகள் மகிழ்வுடன் விளங்கின,

இரவு பகல் தெரியாமல் சேவலும் பெடையுமாகிய புறாக்கள் உணவு தேடாமல் செயலற்றுக் கிடந்தன. குற்றேவலர் கத்தூரி முதலிய நறுமணப் பொருள்களை அம்மியில் இட்டு அரைத்தனர். மகளிர் மங்கலமாகச் சில மலர்களை மட்டும் கூந்தலில் அணிந்தனர். கூந்தலுக்கு நறும்புகை ஊட்டினர். விசிறிகள் சிலந்தியின் நூலினால் சூழப்பட்டுத் தொங்கின. மாளிகையின் கதவுகள் தாழிட்டுக் கிடந்தன. வாடையின் நடுக்கத்தைப் போக்க விறகினில் எரிமூட்டிக் குளிர்காய்ந்தனர். ஆடல் மகளிர் சீறியாழை வாசித்தனர். கணவரைப் பிரிந்த மகளிர் வருந்தும்படி கூதிர்க்காலம் நிலைபெற்றது [1-72].

### III.7.2. மன்னனின் மாளிகை

கட்டிடக் கலையில் வல்லவரால் பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மாளிகை நூல்விதிப்படி எழுப்பப்பட்டிருந்தது. சிற்ப நூல் வல்லோர் மனைநூல் விதிப்படி மனை, வாயில், மண்டபம் முதலியவற்றை முறைப்படி கட்டினர். குன்றினைக் குடைந்து செய்தாற் போன்று அரண்மனை வாயில் அமைந்திருந்தது. அன்னங்கள் விளையாடும் வெண்மணல் பரப்பிய முற்றம் விளங்கியது. குதிரைகள் புல்லைக் குதட்டும் ஓசையும், தூம்பில் நீர்விழும் ஓசையும், மயிலின் அகவலோசையும் உள்ளிட்ட பல ஒலிகளும் மன்னனின் மாளிகையில் ஒலித்தன [*73-100*].

### III.7.3. அந்தப்புரம்

அந்தப்புர மாளிகையில் யவனரியற்றிய பாவை விளக்கு எரிந்தது. பெருந்தகையாகிய மன்னனைத் தவிர ஆடவர் பிறர் குறுகாதபடி காவல் மிக்கது. வரைபோலும் காட்சியுடையது. சிறந்த வேலைப்பாடு அமைந்தது. திரண்ட தூண்களை உடையது. பல நிறப்பூக்களையுடைய கொடி சூழ்ந்தது. அந்தப்புரத்தினைக் **கருவில்** என்று புலவர் குறித்தனர்.

யானைத் தந்தத்தால் செய்யப்பெற்ற வேலைப்பாடமைந்த கட்டிலில் மார்பில் மங்கல நாணைத் தவிர வேறு அணிகளின்றி மாசடைந்த புடவையுடன் **புனையா ஓவியம்**போலக் கிடக்கும் அரசியாகிய தலைவிக்குத் தோழியரும் செவிலியரும் பலவகையில் பணிசெய்து, இன்னே வருகுவர் தலைவர் எனக்கூறியும் தலைவி கலங்கினாள். தன் அறையின் சுவரில் எழுதப்பட்டிருந்த திங்களுடன் கூடிய உரோகிணியின் அன்பு நிலையினை நோக்கிய தலைவி தானும் தன்தலைவனுடன் அவ்வாறு கூடியிருக்க வில்லையே எனப் புலம்பிக் கண்ணீர் சொரிந்தாள். வேந்தன் வாகைசூடி விரைவில் திரும்பிவந்து அரசியின் துயரைத் துடைக்க வேண்டும் என்று கொற்றவையினைப் பரவினர் [*101-168*].

### III.7.4. பாசறையில் வேந்தனின் நிலை

போர்க்களத்தில் பகைவேந்தனின் யானைகளைக் கொன்ற வீரரின் விழுப்புண்ணைக் காண வெளிப்பட்டான் வேந்தன். வடந்தைக் காற்றினால் பாண்டில் விளக்கில் எரியும் கொழுந்து தெற்கு நோக்கி எழுந்து சாய்ந்து எரிந்தது. படைத்தலைவன் புண்பட்ட வீரரை முன்னே காட்டிச் சென்றான். குதிரைகள் தம்மேல் விழும் துளிகளை உதறின. நழுவும் மேலாடையினை இடப்பக்கத்தே தழுவிக்கொண்டு, வாள்வீரனின் தோளில் வலக்கையினை வைத்தவனாய் வெண் கொற்றக்குடை

மழைத்துளியை மறைக்க, நள்ளிரவிலும் துயிலாதவனாய்ப் பகைவேந்தர் பலருடனும் முரண்பட்டுப் பாசறையில் திரிந்து கொண்டிருந்தான் [*169-187*].

## III.7.5. கருத்துரை

கூதிர்க் காலத்து வருணனை சிறப்பாக உள்ளது. அரண்மனையின் அமைப்பு, பெருந்தேவியின் அந்தப்புரமாளிகை, கட்டில் ஆகியவற்றின் அமைப்பு, சுவரில் வரையப்பெற்றிருந்த வான மண்டலத்தில் திங்களும் உரோகிணியும் நெருங்கியிருக்கும் காட்சி, பிரிவாற்றாத அரசியின் நிலை, கடமை மேற்கொண்ட காவலனின் குறிக்கோள் முதலியன சிறப்புறப் புனையப்பெற்றன. உச்சவீடாகிய இடபத்தில் திங்களும் உரோகிணியும் கூடியிருக்கும் அதனையே புராணத்தார் திங்கள் செல்வனுக்கு ஏனைய நட்சத்திரங்களாகிய பெண்களைவிட உரோகிணியிடம் தான் காதல் மிகுதி என்று கற்பனை படைத்தனர். கட்டிடக்கலையும் வானவியற் கலையும் நக்கீரர் காலத்தில் மேலோங்கி விளங்கின.

## III.8. குறிஞ்சிப்பாட்டு

தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல் என்ற அகப்பொருள் உடையதாய் இப்பாட்டினைக் கபிலர் பாடியுள்ளார். சங்கப்பாக்களில் மிகுதியாகப் பாடிய சிறப்பு இவர்க்கு உண்டு. வடநாட்டு அரசன் பிரகத்தனுக்குத் தமிழறிவித்தற்காக இதனைப் பாடினர் என்பது இப்பாட்டின் இறுதியில் காணப்படும் குறிப்பாகும். தமிழ் அகப்பொருள்,' அதிலும் சிறப்புடைய களவொழுக்கம். தமிழிற்குச் சிறப்புடைய அகவொழுக்கத்தினைத் **தமிழ்** என்றே சொல்லும் மரபுண்மைக்குத் **தள்ளாப் பொருளியல்பில் தண்டமிழ்** [பரி.9.25] என்ற பரிபாடற் பகுதியும், இறையனார் களவியல் [அகப்பொருள்] உரையில், **இந்நூல் என் நுதலிற்றோ எனின் , தமிழ் நுதலிற்று** [கழகவெளியீடு, ப.5] எனவரும் உரைப்பகுதியும் சான்றாகும். இப்பாட்டு *261* அடியினால் புனையப் பெற்ற நேரிசையாசிரியம் ஆகும்.

தலைவியின் உடல் வேறுபாட்டுக்குக் காரணம் இன்னதென அறியாத செவிலிக்குத் தோழி, தலைவியின் செயல் அறத்தொடு பொருந்தியது என்பதைப் பக்குவமாக எடுத்துக் கூறித் தலைமக்களின் களவொழுக்கத்தினை நயமுற வெளிப்படுத்துவதாக இப்பாட்டு அமைந்துள்ளது. இதன் பொருட் கூறுகளைச் சுருக்கமாகக் காண்போம்.

### III.8.1. தலைவியின் நிலை

அன்னையே! வாழி. என் சொற்களைக் கேட்பீர். தலைவி தன்

உள்ளத்தில் மறைந்துள்ள உயிரினைத் தாங்குதற்கரியள். அவள் கவின் வாடவும், தோள் மெலியவும் வளை கழலுதலைப் பிறர் அறியவும் நினக்கு அறிவிக்கவில்லை. நீயும் அவள் மெலிவு நீங்கும்படி தெய்வங்களை வழிபட்டு மலர் தூவி வழிபட்டும் நீங்கவில்லை. முத்து, மணி, பொன் முதலியவற்றால் செய்யப்பெற்ற அணிகலன் பழுதுபட்டால் செப்பம் செய்து கொள்ளுதல் முடியும். பண்பும் ஒழுக்கமும் கெடின் செப்பம் செய்து கொள்ளுதல் சான்றோர்க்கும் அரிது.

தலைவன், தலைவி இருவர்க்கும் அமைந்தது இக்களவு மணம் தாய்க்கு அறிவுறுத்துவதால் பழியும் உண்டோ? அறத்தொடு நின்றபின், தலைவன் ஒத்துவராவிடின், அதனால் விளையும் வருத்தத்தைத் தாங்கியிருக்க மறு உலகத்திலாவது தலைவனுடன் கூடுதல் இயையும். இருபெருவேந்தரைச் சந்து செய்விக்க நின்ற சான்றோரைப் போல, நினக்கும் இவள் வருத்தத்திற்கும் அஞ்சுவதால் வருந்தினேன்.

தலைவன், தலைவி ஆகிய இருவர் இயல்புகளையும் ஒப்பிட்டு உசாவி அறியாது, நாங்களே முடிவு செய்தது இந்த மணம். இப்படி முடிவு செய்வதற்குமுன் நடந்த நிகழ்வுகளைக் கூறுவேன் [*1-34*].

### III.8.2. தினைப்புனம் காத்தலும் சுனைநீராடலும்

பறவைகளை விரட்டித் தினைப்புனம் காக்கும்படி எங்களை அனுப்பினீர்! மரத்தின் மேல் அமைக்கப்பெற்ற பரணில் இருந்தபடி கிளிகளை விரட்டிக் கொண்டிருந்த உச்சிப் பொழுதில் தலைவனின் மலைச் சிகரத்தினின்றும் ஓடிவரும் வெள்ளருவியில் ஆடினோம். சுனைநீரில் குடைந்தாடினோம். பாடினோம். கூந்தலைப் பிழிந்து புலர்த்தினோம். கண் சிவந்தன.

காந்தள், ஆம்பல், அனிச்சம், குவளை, குறிஞ்சி, வெட்சி, உள்ளிட்ட பல்வகைப் பூக்களைப் பறித்துப் பாறையில் குவித்தோம். தெளிந்த ஓசைகளை எழுப்பிக் கிளிகளை விரட்டினோம். தழையாடையினை உடுத்தினோம். வனப்புடைய மாலைகளைக் கூந்தலில் சூடினோம். அசோகமரத்தின் நிழலில் இருந்தோம் [*35-98*].

### III.8.3. தலைவன் வரவு

மாலை சூடியவனாய் மார்பில் அணிகலன் பூண்டவனாய் தடக்கையில் வில்லேந்தியவனாய், கச்சையினை இழுத்துக் கட்டியவனாய், வீரக்கழல் அணிந்த காலினனாய்த் தலைவன் வந்தான். அவனுடன் வந்த வேட்டை நாயினைக் கண்டு இடும்பை

கூர்ந்த மனத்துடன் மருண்டு வேறிடம் சென்றோம். எம் அச்சத்தைப் போக்கும்படி தலைவன் இனிய சொற்களைக் கூறினான், "ஒண் தொடியும் மென்சாயலும் குழிந்த உந்தியும் மழைக்கண்ணும் உடைய நங்கையீர்!" இங்குக் கெடுதிகள் பலவும் உடையேன் [யானை, மான், பன்றி முதலியன அவ்வழிப்பட்டதை வினவினான்]. எதிருரை ஆடாமல் இருந்த எம்மை நோக்கி, 'இவ்வழிப் போந்தனவற்றைக் கூறாது போயினும், ஒருசொல் கூறுவதும் நுமக்குப் பழியாகுமோ?' எனக் கூறினான். யாழிசை போல ஒலிக்கும் வண்டினங்களைச் சிறுகிளையினை முறித்து விரட்டினான். வேட்டை நாய்களின் குரல்களையும் அவியச் செய்து, எம் சொல்லிற்காகக் காத்திருந்தான் [*99-152*].

## III.8.4. களிறுதரு புணர்ச்சி

மனையோள் வழங்கிய கள்தெளிவைப் பருகி மகிழ்ச்சி மிக்குப் புனம் காத்தலை மறந்த காலத்தில், தலைவன் அம்பினை விடுத்துக் களிற்றினை ஓட்டுகையினால், பிளிறிக் கொண்டு அக்களிறு எங்கள்மேல் வரும் பொழுது, தப்பும் இடம் அறியாமல் நாணத்தையும் மறந்து, தெய்வமேறிய மயிலைப்போல நடுங்கியதைக் கண்ட தலைவன், மீண்டும் ஓரம்பினை அதன் நெற்றியில் பாய்ச்சினான். புண்ணுமிழ் குருதியுடன் அக்களிறு புறங் கொடுத்து ஓடி மறைந்தது. பெருந்தகையாகிய தலைவன், 'கூந்தலழகியே! அஞ்சாதே. உன் நலம் நுகர்வேன்' எனக் கூறினான். களவொழுக்கம் நீடிக்க வேண்டும் என்று என்முகம் பார்த்துப் புன்னகை புரிந்தான். குன்றுகெழு நாடன் எம்மை விழையும் பெரிய வெற்றியினன். உரையாடி மகிழ்ந்து, குறிஞ்சிக்கடவுளாகிய குமரனையும் வாழ்த்தினோம். பிரியேன் என வஞ்சினம் [சபதம்] கூறினான். அச்சொல்லுக்குச் சான்றாக அருவி நீரைக் குடித்தலின் தலைவியின் நெஞ்சம் அமைதியுற்றது. பூமலி சோலையில் களிறு காரணமாகக் கூடிய புணர்வினால் பகல் முழுதும் கழித்தோம் [*153-216*].

## III.8.5. தலைவனின் பிரிவு

மாலைக்காலம் வந்தது. "இன்னும் சிலநாள்களில், நும்மவர் கொடுப்ப நின் கையினைப் பற்றி நாடறிய நன்மணம் புரிந்து கொள்ளுவேன். கலங்கவேண்டாம்" என்று ஈரச் சொற்களைக் கூறி எம்மொடு வந்து நம்முடைய மூதூரின் வாயிலில் நீருண்ணும் துறையில் எம்மைக் கொண்டுவந்து விட்டு நீங்கினான்.

அம்முதல்நாள் போன்ற விருப்புடன் எந்நாளும் இரவுக்குறியில் காணவருவான். அவன் வரும் போதெல்லாம்

ஊர்க்காவலர் விரைந்து வரினும், நாய் குரைப்பினும் நீ [செவிலி] விழித்துக் கொள்ளினும் நிலவு வெளிப்படினும் தலைவியுடன் கூட முடியாத நிலை ஏற்படினும் வெறுப்படையான். இளமையும் வளமையும் மிக்க தலைவன் தன் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லாதவன். வலையிற் பட்ட மயிலைப் போலத் தலைவி அவனை எண்ணிக் கலங்குவாள்.

இரவில் தலைவன் வரும் மலைப்பாதையில் புலி, யாளி, கரடி, காட்டுப் பசு, களிறு ஆகிய விலங்குகள் இயங்கும். இடி, சூர்த் தெய்வம், பாம்பு, நீர்நிலைகளில் உள்ள முதலை, கிடங்கர், கராம் [இம்மூன்றும் ஒன்றின் வகை] என்பனவற்றால் அஞ்சத்தக்க நெடுவழி. தலைவர் வேரவேண்டிய மலைவழி இன்னோரன்ன இடும்பைகளை உடையது.

இங்ஙனம் செவிலியாகிய தாய்க்குத் தலைவியின் நிலையினை எடுத்துச் சொல்லி நன்மணம் விரைவில் நடைபெறுதல் வேண்டும் என்ற குறிப்புடன் தோழியின் பேச்சு நிறைவு பெறுகிறது.

### III.8.6. கருத்துரை

குறிஞ்சித்திணையினைப் பாடுவதில் வல்லவராகிய கபிலர் அத்திணைக்குரிய களவொழுக்கத்தினைப் புலனெறி வழக்கொடு பொருந்தப் பாடியுள்ளார். மக்களின் நம்பிக்கைகள் ஆங்காங்கே சுட்டப்பெற்றன. தலைமக்களின் பண்பாடும் காதல் மனத்தின் மாட்சியும் போற்றத்தருவன. **தொண்ணூற்றொன்பது மலர்வகைகளைக் கபிலர் அடுக்கிக் கூறியுள்ள பகுதியினால் இயற்கையில் அவர்க்கிருந்த அறிவும் ஈடுபாடும் அழகியல் உணர்வும் வெளிப்படுகின்றன.** வீரமும் காதலும் பண்டைத் தமிழரின் வாழ்வியல் என்பதைக் குறிஞ்சிப்பாட்டு உணர்த்துகிறது.

### III.9. பட்டினப்பாலை

பண்டைக் காலத்தில் பட்டினம் என்று கூறினால் காவிரிப்பூம் பட்டினத்தையே குறிக்கும். சோழப் பெருவேந்தர்களின் பெருந் துறைமுகமாகவும் கோநகராகவும் இந் நகர் விளங்கியது. பாலை என்பது பிரிதலும் பிரிதல் நிமித்தமும் ஆகிய அகவொழுக்கம். பல்வகைச் சிறப்புக்களும் பொருந்திய காவிரிப்பூம்பட்டினத்தையே பரிசாகக் கொடுத்தாலும் தன் தலைவியைப் பிரியேன் என்று தலைவன் கூறுவதாக இப்பாட்டினைக் **கடியலூர் உருத்திரங் கண்ணனார்** பாடினார். இப்பாட்டு 301 அடிகளினால் யாக்கப் பெற்ற வஞ்சிநெடும்பாட்டாகும். பிரிவாற்றாத தலைவியின் உள்ளத்தைத் தெளியச் செய்து தலைவன் பிரிந்துபோதலைத் தள்ளிப்போடுகிறான்.

இதற்குச் செலவிடை அழுங்கல் என்பது தொல்காப்பியர் காலத்துக் குறியீடு ஆகும். இப்பாட்டின் பொருட் கூறுகளைச் சுருக்கமாகக் காண்போம்.

### III.9.1. சோழநாட்டின் வளம்

குடகுமலையில் தோன்றிக் கடலிடம் சென்று சேரும் காவிரி வானம் மழை பொழியாது போகினும், தான் பொய்க்காமல் பெருக்கெடுத்து வந்து பொன்போன்ற நெல்மணிகளை விளையச் செய்யும். சோழ நாட்டில் கரும்பு ஆலைகள் மிகுதி. செந்நெற்கதிரைத் தின்ற எருமைக் கன்றுகள் நெற்கூடுகளின் நிழலில் உறங்கும். தெங்கு, வாழை, கமுகு, மஞ்சள், மா, பனை, சேம்பு, இஞ்சி முதலியன விளையும் நிலங்கள். வீட்டின் முற்றத்தில் உலரும் நெல்லைத் தின்னவரும் கோழியை விரட்ட மகளிர் எறிந்த மகரக் குழை, சிறுவர் உருட்டி விளையாடும் சிறுதேரின் காலினைத் தடுக்கும் செழும்பாக்கங்களையுடைய சோழநாட்டின் கடற்கரைப் பட்டினத்தில் உப்பினை விற்றுப் பெற்ற நெல்லைக் கொண்டுவந்த படகினை முளைகளில் கட்டிவைப்பர். புதுவருவாயும், பூஞ்சோலையும், வான்பொய்கையும், இணைஏரிகளும் உடைய நகரம். புலி இலச்சினையுடைய [வீட்டுக்] கதவினையுடைய அழகிய காப்பினையுடையது. அட்டிற்சாலைகளில் வடிக்கப்பெற்ற சோற்றின் கஞ்சி ஆறுபோல ஓடும். அங்கு நின்று ஏறுகள் தம்முள் பொருவதால் சேறாகும். அவ்வழியே தேர்கள் ஓடுவதால் தூளிபொருந்திப் புழுதியைப் பூசிக்கொண்ட களிறுபோலக் காட்சிதரும். மேலும் ஓவியங்கள் வரையப்பட்ட வெண்மாடங்களை மாசூட்டவும் செய்யும். எருதுகள் நிற்கும் சாலைகள் உண்டு. தவப்பள்ளிகள் உண்டு. முனிவரின் வேள்விப்புகைக்கு அஞ்சிய குயில் தன் பெடையுடன் அகன்றுபோய் கோயிலில் தங்கும் [*1-59*].

### III.9.2. பல்வகைப் பொழுதுபோக்குகள்

பரதவரின் பிள்ளைகள் இறால்மீனைச் சுட்டுத் தின்பர். அடப்பம்பூ மாலையினைச் சூடுவர். ஆம்பற்பூவையும் அணிவர். பொது அம்பலத்தில் கவண் கல்லெறிந்து பறவைகளை ஓடச்செய்வர். ஆட்டுக்கிடாயுடன் கவுதாரியினையும் கொண்டு விளையாடுவர். பெரும்பரதவர் கடலில் மீன்வேட்டைக்குப் போகாது, மனம்மடிந்து, தம்மகளிருடன் கூடி மணல் முற்றத்தில் சுறாமீனின் கொம்பினை நட்டு அதில் ஏற்றிய தெய்வம் காரணமாக வெண்கூதாளப்பூமாலை சூடி, தாழம்பூ அணிந்து பனங்கள்ளை உண்டு விளையாடியும், காவிரிகடலிற் கலக்குமிடத்தில் தீது நீங்கக் கடலாடியும், உப்பு நீங்கப் புனல்படிந்தும், நண்டுகளை ஆட்டியும்,

அலையில் விளையாடியும் மணற்பாவைகளைச் செய்தும் நுகர்பொருள்களை உண்டும் விருப்பத்துடன் பகற்பொழுதை விளையாட்டில் போக்குவர் [60-103].

### III.9.3. இரவில் துயிலும் நிலை

சுவர்க்கத்தைப் போன்ற மாடத்தில் பாடலைக்கேட்டும் நாடகங்களை நயந்தும் நிலாப்பயனைத் துய்ப்பார். மதுவினை நீக்கிக் காமபானத்தை நுகர்வர். பட்டாடையினை நீக்கி மெல்லிய ஆடையினை உடுத்துவர். பிற்சாமத்தில் தூக்க மயக்கத்தினால் மைந்தரின் கண்ணியினை மகளிரும் மகளிரின் கோதையை மைந்தரும் சூடுவர். மாடத்தில் அவியாமல் எரியும் விளக்குகளைக் கடலில் படகிற் சென்ற பரதவர் எண்ணும்படியாகக் கங்குற் காலம் அமைந்தது [104-117].

### III.9.4. வணிகவளம்

கொண்டல், தான் கடலில் முகந்த நீரை மலையில் பொழியவும், மலையிற் பொழிந்த நீர் மீண்டும் கடலில் பரவவும் வகைசெய்யும் கார்ப் பருவம் போல, கடலில் மரக்கலத்தில் வந்த பொருளைக் கரையேற்றவும், கரையில் குவிக்கப்பட்ட பண்டங்களைக் கடலில் உள்ள மரக்கலத்தில் ஏற்றவும் அளந்தறியாப் பொருள்கள் திகழ்ந்தன. இவற்றிற்குக் சுங்கவரி தண்டப்பட்டது. புலி இலச்சினை பொறிக்கப்பட்ட பண்டங்கள் பொதிந்துள்ள மூட்டைகள் அடுக்கிய போரின்மேலேறி ஆண்நாயுடன் ஆட்டுக்கிடாய் விளையாடும் [118-141].

### III.9.5. புகாரின் காட்சிகள்

திண்ணை, பலகட்டுக்கள், சிறுவாசல், பெருவாயில், இடைகழி முதலியற்றைக் கொண்டவை உயர் மாடமாளிகைகள். மகளிர் கைகூப்பிச் செவ்வேளைப் போற்றி வெறியாட்டெடுத்து வழிபடுவர். குழல் அகவவும், யாழ் முரலவும், முழவு அதிரவும், முரசு இயம்பவும் விழா நீங்காத அங்காடித் தெருக்கள் விளங்கின.

வீட்டுவாயிலில் கட்டிய கொடியும். கரும்பின் பூப்போன்ற மேலே ஊன்றிய துகில் கொடியும், பல்துறை வல்லுநர்கள் வாதுசெய்வதற்காக நாட்டிய கொடியும், நாவாயின் கூம்பிற் கட்டிய கொடியும், கள்ளுக்கடையில் ஏற்றிய கொடியும், பல்வேறு பதாகையும் செறிவுற்று அசைவதால் செல்கதிர் நுழையாத செழுநகராகப் பூம்புகார் நகரம் காட்சி தந்தது.

அயல்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குதிரைகளும், உள்நாட்டு மிளகுப் பொதிகளும் வடமலையில் பிறந்த மணியும்

பொன்னும், பொதியமலையில் பிறந்த ஆரமும் அகிலும், கங்கையில் விளைந்த பொருள்களும், காவிரியால் விளைந்த பொருள்களும், ஈழதேசத்து நுகர்பொருளும், கடார நாட்டுப் பொருள்களும் பிறநாட்டினின்றும் வந்த அரியனவும் பெரியனவுமாகிய பொருள்களும் குவிந்திருக்கும் அகன்ற வீதிகளை உடையது பூம்புகார் நகரம்.

கொலைகடிந்தும் களவுநீக்கியும், அமரரைப் பேணியும் ஆவுதி அருத்தியும், நல்ல பசுக்களையும் எருதுகளையும் பேணியும், மறையாளர் புகழ் பரப்பியும், பண்ணியங்களைச் சமைத்தும், கறியும் அரிசியும் கொடுத்தும் அறம்புரிபவர் உழவர் பெருமக்கள் ஆவர். அவர்கள் வண்டியின் நுகத்தில் தைத்துள்ள பகலாணிபோல நடுவுநிலை கொண்டவர் வணிகப் பெருமக்கள். தம்பொருளையும் பிறர் பொருளையும் ஒப்ப மதிப்பவர். தாம் வாங்கும் பொருளையும் அளவுக்குமேல் பெறாதும், கொடுக்கும் பொருளையும் அளவுக்குக் குறைவாகக் கொடுக்காமலும் வாணிகம் புரிபவர் நெருங்கியுள்ள இடங்கள் [புகாரில் உண்டு]. **பல நாட்டு வாணிகர் வருமிடம் ஆதலின் இந் நகரில் பல மொழிகள் பேசுபவர் இனிது வாழ்ந்தனர்.**

இவ்வளவு சிறப்புடைய காவிரிப்பூம்பட்டினத்தையே யான் பெறுவதாக இருந்தாலும் தலைவியைப் பிரிந்து வாரேன், என்நெஞ்சமே! *[142-219]*.

## III.9.6. திருமாவளவனின் பண்மாண் சிறப்பு

களிறு மருப்பினால் கரையினை இடித்துத் தான் அகப்பட்ட குழியினைத் தூர்த்து வெளியேறிப் பிடியிடம் சென்று சேர்ந்தாற்போல, புலிக்குட்டி கூட்டிற்குள் அடைபட்டு வளர்ந்தாற்போல, வளர்ந்த இளவரசனாகிய **திருமாவளவன்** பகைவரின் திண்ணிய காவலாகிய வாட்படையினை ஒட்டி வெளிப்போந்து தன் அரச உரிமையினை முறையால் பெற்றவன். அதனுடன் அமையானாய்ப் பகைப்புலம் கெடச் சென்று பகைவரின் யானை, குதிரை வீரர்களை விழச்செய்து, தூசிப்படையினை அழித்து, மருத நிலங்களில் உள்ள குடிகளைப் போக்கிப் பகைவர் நாட்டினைப் பாழாக்கினான்.

பேராற்றல் படைத்தவனாதலின் மலைகளை அகழ்ந்தெடுத்துக் கடல்களையெல்லாம் தூர்க்குவன். வானத்தைக் கீழே வீழத்துவன். காற்றின் போக்கினை மாற்றுவன் எனப் பாரோர் போற்றும்படி, போர்த்துறைகளில் முடிபு போனவன். ஒளிநாட்டார் பணிந்தொடுங்கவும், அருவாளர் இவன் சொல்லும் செயல்களைச் செய்யவும், வடநாட்டு மன்னர்கள் வாடவும், குடநாட்டில் உள்ளார்

மனவெழுச்சி குறையவும், பாண்டியனின் ஆற்றல் கெடவும், பொதுவர் (யாதவ அரசர்) பொன்றவும், இருங்கோவேள் சுற்றத்துடன் சாயவும் போரிட்ட புகழாளன்.

(சோழ மண்டலத்தின்) காடுகளை அழித்துக் குடியிருத்தற்கும் விளைவுக்கும் உரிய நாடாக்கினான். குளங்களைத் தோண்டி வளம் பெருக்கினான். பெரிய நிலைகளையுடைய மாடங்களையுடைய உறந்தையென்றும் தன்னூரில் கோயிலுடன் குடிகளையும் நிலைநிறுத்தினான். திரு நிலை பெற்ற உறந்தையின் மதிலில் வாயிலையும் சிறு வாசல்களையும் அமைத்து ஞாயிலில் அம்புக் கட்டுக்களை நிறுவினான். தான் தனியொருவன் என்ற எண்ணத்தில் தன்னுடன் போர் தொடுக்கும் அரசர் அனைவரையும் சினந்து நோக்கி வெற்றி கொண்டவன். வேந்தர்கள் தம் முடிமேல் சூடிய வீரக்கழலணிந்த காலினன்.

பொற்றொடிப் புதல்வர் ஓடி ஆடுவதாலும் உரிமை மகளிருடைய முகிழ்முலை திளைப்பதாலும் சிவந்த சந்தனம் அழிந்த மார்பினன். ஒள்ளிய பூண்களை உடையவன். சிங்கவேற்றைப் போன்ற திருமாவளவன் ஆகிய கரிகாற் பெருவளத்தான் பகைவர் மேல் வீசிய வேலினும் கொடியது யான் தலைவியைப் பிரிந்து போக வேண்டிய பாலைவழி. அவன் கோலினும் குளிர்ச்சியுடையவை என் தலைவியின் தட மென்தோள்கள் *(220-301)*.

### III.9.7. கருத்துரை

மதுரைக்காஞ்சி பாண்டிய நெடுஞ்செழியனின் சிறப்பினைப் பாடுவது போல, பட்டினப்பாலை திருமாவளவன் ஆகிய கரிகாற் சோழனின் பெருமையினைப் பாடுவது. காவிரி பாயும் சோழ நாட்டின் வளமும், காவிரிப்பூம் பட்டினத்தின் மாட்சியும், மக்களின் பல்வகைப் பொழுதுபோக்குகளும் வணிக வளமும், பல்துறைச் சிறப்பும், பலமொழியாளர் வாழ்வும், திருமாவளவனின் ஒப்பற்ற ஆற்றலும் செங்கோற் சிறப்பும் பாட்டுக்குப் பொருளாக அமைந்துள்ளன.

பிற்காலத்தில் ஆட்சி செய்த மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1215-1239) வலி குன்றிய சோழரின் காலத்தில் படையெடுத்து வந்து மண்டபங்களைப் பாழ்படுத்தினான். ஆயினும், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய மரபில் தோன்றியதால், கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையினை அரங்கேற்றுவதற்காக நிறுவப்பெற்றிருந்த பதினாறுகால் மண்டபத்தினை அழிக்காமல் விட்டுவைத்தான். இவ்வரலாற்றுச் செய்தியை அறிவதற்கு,

*வெறியார் தளவத் தொடைச் செய மாறன்*
*வெகுண்டதொன்றும்*
*அறியாத செம்பியன் காவிரி நாட்டில் அரமியத்துப்*
*பறியாத தூண்இல்லை; கண்ணன்செய் பட்டினப்*
*பாலைக்(கு)அன்று*
*நெறியால் விடுந்தூண் பதினாறுமே அங்குநின் றனவே.*

என்ற திருவெள்ளறைக் கோயில் கல்வெட்டுப்பாடல் சான்றாக உள்ளது. சங்கப்பாக்களில் சுட்டப்படாத அரங்கேற்று மண்டபம் மக்கள் வழக்கில் அறியப்பட்டும் பேணப்பட்டும் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கி.மு.நான்காம் நூற்றாண்டல் வாழ்ந்த **பிண்டார்**(Pindar) என்ற கிரேக்கக் கவிஞரின் மாளிகையினை விட்டுவிட்டு ஏனைய இடங்களைப் பகை மறவர் அழித்த வரலாற்றுச் செய்தியை இங்கு ஒப்பிட்டுப் பார்த்தல் ஏற்புடையது.

## III.10. மலைபடுகடாம்

பல்குன்றக் கோட்டத்துச் **செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னனை** இரணிய முட்டத்துப் **பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் 583** அடியிற் பாடிய நேரிசை ஆசிரியப்பாட்டு **மலைப்படுகடாம்** என்று பெயர் பெற்றது. இதற்குக் **கூத்தராற்றுப்படை** என்ற பெயரும் உண்டு என்பது முன்னரும் சுட்டப்பட்டது. இதனுள்,

*அலகைத் தவிர்த்த எண்ணருந் திறத்த*
*மலைபடு கடாஅம் மாதிரத்(து) இயம்ப* 347-48

என்ற பகுதியில் வரும் **மலைபடுகடாம்** என்ற அரிய தொடரினால் இப்பாட்டு இப்பெயர் பெற்றது. அலகை-எண், தவிர்த்த-ஒழித்த. அதாவது எண்ணுதற்கு அரிதாகிய கூறுபாட்டினை உடைய மலைகளாகிய யானைக்கு உண்டாகும் ஓசை திசைகளில் எல்லாம் ஒலிப்ப என்பது இப்பாடற் பகுதியின் பொருள். மலைக்கு யானையினை உவமித்து அதன்கட்பிறந்த ஓசையினைக் கடாம் எனச் சிறப்பித்ததால், இப்பாட்டிற்கு மலைபடுகடாம் என்பது பெயராயிற்று என்று நச்சினார்க்கினியரின் உரை விளக்குகிறது. இப்பாட்டின் பொருட் கூறுகளைச் சுருக்கமாகக் காண்போம்.

### III.3.10.1. கூத்தர்கள் நிலையும் செயலும்

முழவு, சிறுபறை, பாண்டில் என்னும் கஞ்சதாளம், நெடுவங்கியம், குறுவங்கியம், குழல், கரடிகை, எல்லரி என்னும் வாத்தியங்கள் முதலியன இடம்பெற்ற பையினை உடையீர்!

பாறையில் சிறுவழியாக வருவீர்! பேரியாழை வாசிக்கும் பாணரொடு விறலியர் சூழ்ந்துவர, முல்லைக் காட்டில் தண்ணிழலில் தனிமை நீங்கியிருந்த கூத்தரின் சுற்றத்திற்குத் தலைவனே! பழத்தை நாடிச் செல்லும் பறவைத் திரளைப்போல நீயிரும் நன்னன்சேய் நன்னனை நாடிச்செல்லுக. அவன் அவையினின்றும் யாம் வருகின்றேம். அவன் மங்கையர் கணவன். பகைவரை அழிக்கும் வலிமையும் பரிசிலர்க்கு மென்மையும் ஆக்கத்தைக் கருதும் உள்ளமும் தடக்கையும் பேரணி கலமும் உடையவன். நன்னிமித்தம் காரணமாக என்னை எதிர்ப்பட்டீர்! [*1-67*].

### III.10.2. நன்னன் சேய் நன்னனின் இயல்புகள்

செல்வத்தை மாறாமல் வழங்கும் அவன் நாட்டில் விளைகின்ற உணவுகளும், அவனுடைய மலை, சோலை, கானம் ஆகியவற்றின் தன்மையும் அறிவீர்! பகைவரிடம் திறையாகப் பெற்ற பேரணிகலங்களை புலவோர்க்குச் சொரியும் பொன் மழையும், இகழ்பவரைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும், புகழ்வோர்க்கு வானம்போல் பொழியும் அவன் நாளோலக்கமும்; அவனுடைய அவையில் அரைகுறை அறிவினரைக் கூட அவமானப்படுத்தாமல் அவர்தம் இயலாமையினை மறைத்துத் தாம் பொருளைச் சொல்லிக் காட்டிக் குழுமியோர் மனம் கொள்ளும்படிச் செய்யும் அவனுடைய அவையோர் ஒழுக்கமும் குறிப்பிடத்தக்கவை.

நவிர மலையில் கோயில் கொண்ட நஞ்சுண்ட ஈசனின் இயல்பும், வசையில்லாச் சிறப்பும், புலவர்க்குக் கொடைக்கடன் செலுத்திய அவன் முன்னோர் வரவும், கிடங்கு, மதில் ஆகியவற்றால் சிறந்த அவன் ஊரின் இயல்பும் கேட்பாயாக! நீ செல்லுதற்குரிய திசையின் அமைதியையும் கேட்பாயாக! [*68-94*].

### III.10.3. கூத்தர் செல்லும் வழியின் வளம்

மழை பொழிய நிலத்தில் இட்டன எல்லாம் பெட்டாங்கு விளையும். புனத்தில் கார்த்திகை மீன்போல் முசுண்டை வெள்ளிதாக மலர்ந்தன. எள்ளுச் செடிகள் வளமாக வளர்ந்தன. யானைக் கன்றுகளின் கைபோலக் கதிர்களையுடைய தினைகள் விளைந்தன. அவரை காய்த்தன. தருக்கம் கூறுகின்றவனின் இணை விரல்களைப் போல் வரகுக் கதிர்கள் முற்றி அறுவடை ஆயின. மூங்கில்நெல் அவலாகும் பதம் கொண்டன. வெண்சிறு கடுகு நெருங்கி விளைந்தன. இஞ்சிக் கிழங்கு முதிர்ந்தன. மலையினைச் சூழ்ந்து நின்ற வாழைகளின் காய்கள் பழுத்தன. காலம் அன்றியும் மரங்கள் பயன் அளிக்கும். நாவல் பழம் உதிர்ந்து கிடக்கும் உயவைக்கொடி படர்ந்தன. கூவைக்கிழங்கு முற்றித் திரண்டன. தேமா சாறு மிக்கன.

பலாப்பழங்கள் வெடித்து விதைகள் சிந்தின. ஆந்தைகள் பேடும் சேவலுமாக மாறிக் கூவும். கூத்தரின் முழவுகள் போல் பலாக்கனிகள் தொங்கும். ஐவனம் (-மலைநெல்) வெண்ணெல் நன்கு விளைந்தன. கரும்புகள் முற்றி ஆலைக்குச் செல்லச் சுழலும் [95-144].

### III.10.4. செல்லும் வழியும் விருந்தோம்பலும்

கானவர் குடியிருப்புக்களில் தேன், கிழங்கு, இறைச்சி என்பனவற்றை விருந்தாகப் பெறுவீர். பாக்கங்களிற் சென்று '**நன்னனின் கூத்தரேம்**' எனக் கூறின் இன்சொல் கூறி நெய்யில் பொரித்த தசையும் தினைச்சோறும் பெறுவீர். நன்னன் மலைநாட்டில் பெறுவனவற்றைக் கேட்பீராக. உடும்புத்துண்டு, மான்கறி, பன்றிக்கறியுடன் தேனாற் செய்த கள்ளும் நெல்லாற் சமைத்த கள்ளும் முதலிய உண்பீர். பலாவிதையில் மாவையும் புளியம் பழத்தின் இனிய புளிப்பையும் உலையாக வார்த்த மோருக்கு அளவாகக் கலந்து மூங்கிலரிசியை இட்டு ஆக்கிய வெண்சோற்றினைக் குறமகள் அகமலி உவகையுடன் தத்தம் பிள்ளைகளைக் கொண்டு முறை சொல்லித் தடுக்கையால் மனைகள் தோறும் பெறுவீர். மலையில் விளையும் பண்டங்களும் பெறுவீர்.

தினைப்புனத்தை அழிக்கும் பன்றிகளுக்காக வைக்கப்பட்ட பொறியுள்ள வழிகளில் விடியற்பொழுதில் செல்லுவீர். பாம்பு ஒடுங்கும் வழியில் விறலியர் கையால் தொழுது வாழ்த்த வலப்பக்கத்து வழியாகச் செல்லுவீர். யானையினை விரட்டுவோர் வீசும் கவண்கற்கள் மேலே படாமல் காவற்காடு, முடுக்கர், காட்டாற்று வழியே ஒருவர் ஒருவரைப் பாதுகாத்துப் போவீர். மலைச்சாரலில் மூங்கில் கோல், கொறுக்கந்தட்டையின்கோல் (-எருவை) என்பனவற்றையும் பற்றுக்கோடாகக் கொண்டு நடந்து செல்லுவீர். வழியில் நன்னன் வெற்புறை கடவுளை (-நீலகண்டனை) வணங்கிப் போவீர்.

மலையில் தோன்றும் காட்சிகளில் மனம் செலுத்தின் வழி மாறிவிடும். **இரவில் மலையில் உள்ள குகைகளில் தங்குவீர்.** மலைவழியே மெல்ல மெல்லக் கடப்பிர். **மருளும் குன்றத்தே** செல்லின், பாறையில் அமர்ந்து நும் **இயங்களை வாசிப்பீர்.** காவலர் நல்வழிகாட்ட நும் சுற்றத்தோடு மனம் மகிழ்வீர்! மலை முழுதும் தேனூறும் பலாக்கனியின் வாசனை வீசும். வானர மகளிர் அருவியில் ஆடும்பொழுது எழும் ஓசை நும் வாத்திய இசைபோல் கேட்கும். தினைப்புனம் புகும் யானைத் தலைவனைப் பிடித்தற்கு எழும் ஓசையும், காட்டுப்பன்றி சென்றதால் கானவர் அழும் ஓசையும், **புலிபாய்ந்ததால் தம் கணவர் மார்பில் ஏற்பட்ட புண்ணை ஆற்றுவதற்குக் குறமகளிர் பாடும் பாடல் ஓசையும்** உள்ளிட்ட

பல்வேறு ஓசைகளைக் கேட்பீர். **இவ்வோசைகள் யாவும் சேர்ந்து மலைபோன்ற யானையின் கடாம் என்ற ஓசையாகத் திசையெல்லாம் கேட்கும்படி ஒலிக்கும்.**

குன்றுகளும் குகைளும் அரண்களும் நடுகற்களும் உள்ள வழியாகச் செல்லுவீர். வழியில் நன்னனின் பகைவர் இருக்கும் சுரங்கள் பலவாகும். தங்கவேண்டிய இடத்தில் தங்கி அச்சமின்றிப் பயணத்தைத் தொடர்வீர். கோவலர் குடியிருப்பில் வழங்கப்படும் உபசரிப்பில் நடந்த வருத்தம் தீரப் புதுவிர் (-புதியவர்) ஆகுவீர். பாலும் பாற்சோறும் பெறுவீர். அவர்கள் வழங்கும் தோற்படுக்கையில் தங்கிப் போவீர்.

நாடு காவலராகிய வேடர் திரளைக் காணின், நன்னனை நினைத்துப் போகிறோம் என்று கூறின் தசை, கிழங்குகள் தந்து நும்மைக் காப்பாரல்லது வருத்த மாட்டார். வழியில் புல்வேய்ந்த குடிசைகளில் புளிங்கூழ் உள்ளிட்ட பல உணவும் பெறுவீர். **விடியலில் புள்நிமித்தம் பார்த்துப் பயணத்தைத் தொடர்வீர்.**

நன்னனின் மருதவளம் மிக்க நாட்டில் மென்புலங்களையும் பொழில்களையும் இடைச்சேரிகளையும் உடைய ஊர்கள் தோறும் யாழிசை போன்ற இனிய பொருள்கள் பல உண்டு. வாளைத் துண்டினை, வரால் துண்டுடன் கலந்து தேனினைப் பழையர் மகளிர் நல்குவர். உழவர் நெல்லினை முகந்து கொடுப்பர். தசைத்துண்டுடன் கலந்து சமைத்த வெண்சோற்றைச் சுற்றத்துடன் உண்டு, எருதினை அடிக்கும் உழவரின் ஓசையுடன் ஒத்துவர யாழெடுத்து மருதப் பண்ணினை வாசித்து இளைப்பாறிச் செல்லுவீர் [*145-470*].

### III.10.5. நன்னன் ஊரின் இயல்பும் மக்கள் வரவேற்பும்

கண்ணுக்கு இனிய சேயாற்றின் புதுவருவாயுடைய ஒரு கரையினை வழியாகக் கொண்டு போவீர். பொழில்களையம், ஓங்கும் மதில்களையும், அங்காடித் தெருவினையும், குறுந்தெருக்களையும் பதியை விட்டுப் பெயர்தல் அறியாத பழங்குடிகள் இனிதுறையும் மலைபோல ஓங்கிய மலையினையும் யாறு கிடந்தது போன்ற அகன்ற வீதிகளையும் உடையது நன்னனின் வெற்றி மிக்க மூதூர். நன்னனின் மறவர் தம் மாளிகையின் வாயிலில் ஐயுறாது புகுவீர். பொதுமன்றில் தங்குமியல்புடைய பரிசிலர்களாகிய நும்மைக் கண்டோரெல்லாம் முருகனைப் போலும் அருள் உள்ளம் கொண்ட நன்னனை எண்ணி வந்தவர்கள், இரங்கத்தவர்கள் என்று எண்ணி முகம் பொருந்தி இனிதாகப் பார்த்து விருந்தாய் நீங்கள் அவர் வீட்டில் தங்குதற்கு எதிரேற்றுக் கொள்ளுவர் [*471-497*].

### III.10.6. அரண்மனை வாயிலில் காட்சி தருவன

ஆமானின் கன்று, கரடிக்குட்டி, வருடை, தகர் (-ஆட்டுக்கிடாய்), கீரி, மரையான் குழவி, ஆண் உடும்பு, மயில், கோழிச்சேவல், பலாவின் பழம், சாறு முற்றிய மாம்பழம், நறைக்கொடி, நூறைக்கிழங்கு, கருப்பூரம், யானைகளின் முத்துடைக் கொம்புகள், காந்தட்பூ, புன்னைப்பூ, திலகப்பூ, சந்தனம், பச்சை மிளகு, கள் தெளிவு, இனிய தயிர், இறால்கள், ஆசினிப்பலா முதலியவை நன்னனின் அரண்மனை வாயிலில் ஒருங்கே விளங்கும் [*498-529*].

### III.10.7. நன்னனைப் போற்றுதலும் அவன் கொடைச் சிறப்பும்

அரண்மனை முற்றத்தில் நின்று முழவு ஒலிக்க யாழெடுத்து மருதப் பண்ணினை வாசித்த விறலியர் அருந்திறற் கடவுளை வாழ்த்தினர். '**நின் பெயர் உலகு உள்ளளவும் நிலைபெறும்படி கொடைக்கடன் முடித்த செம்மலே!**' என்று நன்னனின் பல புகழினையும் கூத்தர் போற்றினர். 'என்பால் கொண்ட அன்பால் என்னைக் காணவந்தது பொருந்தும். நீவிர் வழிவந்த வருத்தமும் பெரிது' என்று நன்னன் முகமன் கூறி, அவர்களை நாளோலக்கத்திற்கு அழைத்துச் சென்றான். இரப்போர்க்கு ஈயாமல் மாய்ந்த அரசர் சேயாற்றின் எக்கர் இடுமணலின் பலராவர். ஆதலின், நமக்கு வரையறுக்கப்பட்ட நாள் புகழொடும் கழிக என்று கருதி, **பரந்து எல்லாப் பொருளும் தங்குதற்கு இடம் கொடுக்கும் விசும்பினைத் தொடும் உயர்ந்த உள்ளம் உடைய நன்னனை** நயந்து காணச் செல்லின் நும்மினும் விரும்பி, இனிது நோக்குவான்.

நுண்ணிய நூலாற் செய்த ஆடை, நிணத்தின் தசை, வெண்ணெல் அரிசி என்பன முட்டுப்படாமல் முதல் நாள் போன்ற விருப்புடன் பலநாளும் பெறுவீர். 'எம்மூர் திரும்புவேம்' எனக் கூறி நீங்கின், நும் தலைவன் பொற்றாமரையினைச் சூட, விறலியர் சிறப்புடைய அணிகலன்களைப் பெற, நெடுந்தேர், யானைகள், ஆநிரை, குதிரைகள், செல்வம் அனைத்தையும் நன்னன் தடக்கையினால் வழங்குவான். மலைகள் சூழ்ந்த பரந்த நாட்டிற்குத் தலைவன் ஆகிய நன்னன் வளம்மிக்க நவிரமலை உச்சியில் மழை சொரிந்தாற் போன்ற கொடையினால் முதல் நாளிலே பரிசில் தந்து நும்மை வழி அனுப்புவான் [*529-583*].

### III.10.8. கருத்துரை

காலத்தால் முற்பட்ட வேளிர்களில் நன்னன் சேய் நன்னனும் ஒருவன். அவனுடைய நாட்டுவளம், செல்லும் வழியின் இயற்கை

வளம், பல்வகை ஓசைகள், பாணர், விறலியரின் கலை உள்ளம், மக்களின் விருந்துபேணும் பண்பாடு, நன்னன் மூதூரின் வளம், **சேயாறு, நவிரமலை** ஆகியவற்றின் சிறப்பு, அரண்மனை வாயிலின் அழகு, நன்னனின் கொடைச் சிறப்பு என்பன கூத்தராற்றுப் படையாகிய மலைபடுகடாத்தின் பொருட்கூறுகளாகப் பொலிவுற்றன.

நன்னன் வாழ்ந்த காலத்திற்குப் பல நூற்றாண்டுகட்குப் பின், குறுநிலத் தலைவனாக விளங்கிய **கோப்பெருஞ்சிங்கனும்** அவன் மகன் **ஆட்கொண்ட தேவனும்** திருவண்ணாமலை ஈசனுக்கு ஆற்றிய அறங்களைக் கூறும் நெடும்பாடலில், **நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்** [61] என்று மலைபடுகடாமும், நன்னனும் போற்றப்படுதல் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த செய்தியாகும். வட ஆற்காடு மாவட்டம் செங்கம் சிவன் கோயிலில் கி.பி.13 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுப் பாடல் வருமாறு:

> ***வண்டறைதார் மன்னர் மலைபடைத்தெந் மன்னரைவென்***
> ***கண்டதிறல் காங்கேமன் கண்சிவப்ப - பண்டே***
> ***மலைகடாம் பாட்டுண்ட மால்வரைச்செஞ் சோரி***
> ***அலைகடாம் பாட்டுண் டது.***

இப்பாடலில் தென், காங்கேயன் என்ற சொற்கள் முறையே தெந், காங்கேமன் என்று கவனக் குறைவால் செதுக்கப்பட்டுள்ளன. இப்பாடலின் பொருள்:

வண்டொலிக்கும் மாலை சூடிய மலைநாட்டு மன்னவராகிய சேரரையும் தென்னாட்டு மன்னராகிய பாண்டியரையும் புறங்கண்ட ஆற்றல்மிக்க காங்கேயனின் கண்கள் சிவத்தலால், **பண்டைக் காலத்தில் மலைபடுகடாம் என்ற பாட்டினால் சிறப்பிக்கப்பெற்ற மால்வரையாகிய நவிர மலையில்** இன்று சிவந்த குருதி அலைகள்தாம் பரந்து கிடந்தன.

கோப்பெருஞ்சிங்கனின் மகன் ஆட்கொண்ட தேவனுக்குக் காங்கேயன் என்பது ஒரு பெயர். எனவே, மலைபடுகடாம் மக்கள் வழக்கில் நிலைபெற்றிருந்த வரலாறு புலனாகும்.

# IV. எட்டுத்தொகை

எட்டுத்தொகை இலக்கியங்களை வரிசைப்படுத்திக்கூறிய முதல் நூல் இறையனார் அகப் பொருள் உரையாகும். 'நற்றிணை நல்ல குறுந்தொகை' என்ற வெண்பா கூறும் வரிசை முறை வேறாகக் காணப்படுகின்றது. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த ஆராய்ச்சி அறிஞர்களும் வரலாற்றாசிரியர்களும் கால வரிசைப்படி கூற முற்பட்டிருப்பினும் ஒருமித்த கருத்தினை எட்டவில்லை. இதுகாறும் அறியப்படும் ஐந்துவகை வரிசை முறைகளை இங்குத் தொகுத்துக் காண்போம்.

**அ. இறையனார் களவியல் உரை [ப.6]**

*1.நெடுந்தொகை நானூறு, 2.குறுந்தொகை நானூறு, 3.நற்றிணை நானூறு, 4.புறநானூறு, 5.ஐங்குறுநூறு, 6.பதிற்றுப்பத்து 7.நூற்றைம்பது கலி, 8.எழுபது பரிபாடல்.*

இவற்றைத் தொடர்ந்து இவ்வுரை குறிப்பிடும் கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் உள்ளிட்ட நூல்கள் கிடைக்கவில்லை.

**ஆ. வெண்பாவில் கண்டமுறை**

*1.நற்றிணை, 2.குறுந்தொகை, 3.ஐங்குறுநூறு, 4.பதிற்றுப்பத்து, 5.பரிபாடல், 6.கலித்தொகை, 7.அகநானூறு, 8.புறநானூறு.*

**இ. கே.என்.சிவராஜபிள்ளை கருத்து**

*1.புறநானூறு, 2.குறுந்தொகை, 3.நற்றிணை, 4.அகநானூறு, 5.பதிற்றுப்பத்து, 6.ஐங்குறுநூறு, 7.கலித்தொகை, 8.பரிபாடல்.*

காண்க: **The Chronology of the Early Tamils**, சென்னை, *1932, ப.15* அடிக்குறிப்பு.

**ஈ.பி.டி.சீனிவாச ஐயங்கார் கருத்து**

*1.அகநானூறு, 2.குறுந்தொகை, 3.நற்றிணை, 4.புறநானூறு, 5.ஐங்குறுநூறு, 6.பதிற்றுப்பத்து, 7.பரிபாடல், 8.கலித்தொகை. (இவர் இறையனார் களவியலுரை கூறும் முறையினைப் பின்பற்றியிருப்பினும் பரிபாடலை முன்னும் கலித்தொகையினைப் பின்பும் வைத்துள்ளார் [காண்க:* **History of The Tamils**, AES, New Delhi, 1995, Reprint, pp.156-159].

**உ.ச.வையாபுரிப்பிள்ளை கருத்து**

1.குறுந்தொகை, 2.நற்றிணை, 3. அகநானூறு, 4.ஐங்குறுநூறு, 5.பதிற்றுப்பத்து, 6.புறநானூறு, 7.கலித்தொகை, 8.பரிபாடல்.

காண்க: **இலக்கிய தீபம்**, பாரி நிலையம், சென்னை, 1955, பக்.80-87.

இங்ஙனம் தத்தம் மனத்திற்குப் பொருந்திய வகையில் எட்டுத்தொகைகளை வரிசைப்படுத்தியுள்ளனர். இப்பொருள் பற்றி மேலும் ஆராய்தல் வேண்டும். இவையனைத்தும் தொகை (Compilation or Compendium) என்னும் இலக்கிய வகையின் பாற்படும்.

## IV.1. எட்டுத்தொகை தொகுத்தமுறை

பாட்டின் அடி அளவு, பொருள் யாப்பு என்பனவற்றின் அடிப்படையில் எட்டுத்தொகையினைச் சான்றோர் வகைப்படுத்தித் தொகுத்துள்ளனார். 3 அடி முதல் 6 அடி வரை உள்ள திணைக்கு நூறாக ஐந்திணைக்கும் உரிய ஐந்நூறு ஆசிரியப் பாடல்களைத் தொகுத்து **ஐங்குறுநூறு** என்று பெயர் சூட்டினர். 4 அடி முதல் 8 அடி வ்ரை உள்ள 400 ஆசிரியப்பாக்களைத் தொகுத்துக் **குறுந்தொகை** என்றும். 9 அடி முதல் 12 அடி வரையுள்ள 400 ஆசிரியப்பாக்களைத் தொகுத்து **நற்றிணை** என்றும். 13 அடி முதல் 31 அடி வரையுள்ள 400 ஆசிரியப்பாக்களை **நெடுந்தொகை** என்றும் தொகுத்துள்ளனர். அகத்திணைக்குரிய முதல், கரு, உரி ஆகிய முப்பொருளாலும் சிறப்புற்றிருப்பதால் நெடுந்தொகைக்கு **அகநானூறு** என்றும் பெயரிட்டனர். புறப்பொருள் பற்றிய 400 பாக்களுக்குப் **புறநானூறு** எனப் பெயர் தந்தனர். சேரவேந்தர் ஒருவர்க்குப் பத்துப் பாட்டாகப் பத்து வேந்தர் பேரில் பாடப்பெற்ற பப்பத்துப்பாக்களைக் கொண்ட பனுவலுக்குப் **பதிற்றுப் பத்து** என்று பெயரிட்டனர். இவ்விரு தொகைகளிலும் வஞ்சிப்பாக்கள் சிலவும் விரவியுள்ளன. கலியாப்பினால் பாடப்பெற்ற 150 பாக்களின் தொகுதியைக் **கலித்தொகை** என்றும், பரிபாடல் என்னும் யாப்பில் புனையப்பெற்ற 70 பாடல்களின் தொகுதியைப் **பரிபாடல்** என்றும் பெயர் சூட்டினர். இவற்றுள், பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருள் பற்றியவை. பரிபாடலில் 14 பாடல்கள் கடவுட் பாடாணாகும். எஞ்சிய பாடல்களும் மற்ற தொகை இலக்கியங்களும் அகப்பொருள் பற்றியவை.

இவற்றைப் பாடியவர், பாக்களின் தொகை, தொகுத்தவர், தொகுப்பித்தவர் பற்றிய குறிப்புக்கள் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

| வ. எண் | தொகையின் பெயர் | பாக்களின் தொகை | பாடியோரின் எண்ணிக்கை | தொகுத்தவர் | தொகுப்பித்தவர் |
|---|---|---|---|---|---|
| 1. | ஐங்குறுநூறு | 500 | 5 | புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் | யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறை |
| 2. | குறுந்தொகை | 401 | 205 | - | பூரிக்கோ |
| 3. | நற்றிணை | 400 | 192+ | - | பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதி |
| 4. | அகநானூறு | 400 | 145 | மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திர சன்மனார் | பாண்டியன் உக்கிரப்பெரு வழுதி |
| 5. | புறநானூறு | 400 | 157+ | - | - |
| 6. | பதிற்றுப்பத்து | 100 (80) | 10 (8) | - | - |
| 7. | கலித்தொகை | 150 | 5 | சங்கத்தார் [பேராசிரியர் உரை தொல்.செய். 149, 153] | - |
| 8. | பரிபாடல் | 70 (22+) | 13+ | - | - |

ஒரு சில தொகைகளில் சில பாடல்கள் காணப்படவில்லை; சில பாடல்கள் சிதைந்துள்ளன. சில பாடல்களைப் பாடிய புலவர்கள் பெயர் அறியப்படாத நிலையும் உள்ளது. இத்தொகைகளைத் தொகுத்த பொழுதோ அல்லது பின்னரோ கடவுள் வாழ்த்துப் பாடல் சேர்க்கப்பெற்றுள்ளது. ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு ஆகிய ஐந்து தொகை நூல்களுக்கும் பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். குறுந்தொகைக் கடவுள் வாழ்த்து முருகனைக் குறித்தும், நற்றிணைக் கடவுள் வாழ்த்து திருமாலைக் குறித்தும் எஞ்சியவற்றின் கடவுள் வாழ்த்து சிவபிரானைக் குறித்தும் பாடப் பெற்றவை. அந்தந்த தொகையின் யாப்புக்கும் அடியளவுக்கும் பொருந்தக் கடவுள் வாழ்த்தினைப் பெருந்தேவனார் அறிந்து பாடியிருத்தல் குறிப்பிடத்தக்கது.

பதிற்றுப்பத்துக்குரிய கடவுள் வாழ்த்து கிடைக்க வில்லை. ஆயினும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் புறத்திணையியல் நூ.26 இன் உரையில் நச்சினார்க்கினியர் எடுத்தாண்டுள்ள, **எரி எள்ளு வன்ன நிறத்தன்** என்ற பாடலைச் சிலர் பதிற்றுப்பத்தின் கடவுள் வாழ்த்தாகக் கருதுகின்றனர். கலித்தொகைக்குக் கடவுள் வாழ்த்தாக உள்ள பாடலை நல்லந்துவனார் பாடியிருக்கலாம் எனச் சிலர் எண்ணுகின்றனர். பரிபாடல் கடவுளைப் பொருளாகக் கொண்டு பாடப்பெற்ற இலக்கியம். இதன் முதற்பாடல் திருமாலைப் பற்றியதாகத் தொடங்குகிறது. ஆதலின் தொகுத்தோர் தனியே கடவுள் வாழ்த்தினைப் பாடவேண்டிய தேவை ஏற்படவில்லை எனலாம். இப்பின்புலத்துடன் ஒவ்வொரு தொகை நூலின் அமைப்பினையும் பொருண்மையினையும் சுருக்கமாகக் காண்போம்.

### IV.1.1. ஐங்குறுநூறு

இதனுள் முதற்கண் அமைந்துள்ள மருதத்திணைக்குரிய நூறு பாடல்களையும் பாடியவர் **ஓரம்போகியார்**. நெய்தல் திணைப் பாடல்கள் நூறும் **அம்மூவனார்** பாடியவை. குறிஞ்சித்திணைக்குரியவை நூறும் **கபிலராலும்**, பாலைக்குரியவை நூறும் **ஓதலாந்தையாராலும்** பாடப்பெற்றவை. முல்லைத் திணைப் பாடல்கள் நூறும் **பேயனார்** பாடியுள்ளார். இந்நூலிற்றுப் பழைய உரை 469 ஆம் செய்யுள் வரை கிடைத்துள்ளது.

திருக்குறளில் உள்ள அதிகாரங்களைப் போல ஒவ்வொரு அகத்திணைக் கூறும் பத்துப்பாடல்கள் கொண்டிருத்தல் சுட்டத்தக்கது. ஒவ்வொரு பத்திலும் இடம் பெறும் மையக் கருத்து அல்லது தொடர் அடிப்படையில் அதன் பெயர் அமைந்துள்ளது. **தொண்டிப்பத்து** (171-180) அந்தாதியாகப் பாடப் பெற்றது. அந்தாதி வடசொல்லாயினும் வடமொழி இலக்கியத்தில் இந்த இலக்கிய வகை காணப்படவில்லை.

இத்தொகையில் ஒரு சில பாடல்கள் கிடைக்கவில்லை. அகப்பொருள் இலக்கியத்தில் விழுமியங்களும் அறக்கருத்துக்களும் பற்பல பொதிந்துள்ளன. முதல் பத்தாகிய வேட்கைப்பத்தில்,

*நெல்பல பொலிக!! பொன்பெரிது சிறக்க* 1.2
*விளைக வயலே! வருக இரவலர்* 2.2
*பால்பல ஊறுக! பகடுபல சிறக்க* 3.2
*பகைவர்புல் ஆர்க! பார்ப்பார் ஓதுக* 4.2
*பசிஇல் லாகுக! பிணிசேண் நீங்குக* 5.2

*வேந்துபகை தணிக! யாண்டுபல நந்துக* 6.2
*அறம்நனி சிறக்க! அல்லது கெடுக!* 7.2
*அரசுமுறை செய்க! களவு இல்லாகுக!* 8.2
*நன்று பெரிது சிறக்க! தீதுஇல் லாகுக!* 9.2
*மாரி வாய்க்க! வளம்நனி சிறக்க!* 10.2

இவற்றைப் படிக்கும் பொழுது திருக்குறள் போன்ற அறநூல்களின் கருத்துக்கள் நம் நினைவுக்கு வருகின்றன.

மருதத்திணையின் முதல் பத்தாகிய வேட்கைப்பத்து தோழியின் கூற்றாக அமைந்துள்ளது. **புறத்தொழுக்கத்திலே நெடுநாள் ஒழுகி, 'இது தகாது' எனத் தெளிந்த மனத்தனாய், மீண்டு தலைவியொடு கூடி ஒழுகாநின்ற தலைமகன், தோழியொடு சொல்லாடி, 'யான் அவ்வாறு ஒழுக, நீயிர் நினைத்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது என்ற குறிப்பு** இப்பத்துப் பாடலின் கீழ் இடம் பெற்றது. இதனை யாவர்க்கும் புரியும் வகையில் தெளிவாகக் கூறுதல் வேண்டும். புறத்தொழுக்கம் - தலைவன் தன் வீட்டினையும் மனைவியையும் துறந்து புறத்தே சென்று பொதுமகளிருடன் பொருந்தும் ஒழுக்கம். இதில் நெடுநாள் ஒழுகியவனுக்கு ஒருநாள் இந்த ஒழுகலாறு தகாது என்ற தெளிவு தோன்றியது. உடனே பரத்தையைக் கைவிட்டுத் தன்வீடு திரும்பி மனைவியுடன் வாழ்ந்துவரும் காலத்தில் ஒருநாள் தோழியைப் பார்த்து,'நான் தகாத ஒழுக்கம் மேற்கோண்டிருந்த பொழுது நீயிர் (தோழியும் தலைவியும்) என்ன நினைத்தீர்?' என்று கேட்டான். அவன் கேள்விக்கு விடை கூறும் பாங்கில்தான் வேட்கைப்பத்தின் பாடல்கள் புனையப் பெற்றுள்ளன. அவற்றுள் முதற்பாடலைக் காண்போம்.

*வாழி ஆதன்! வாழி அவினி!*
*நெற்பல பொலிக! பொன்பெரிது சிறக்க!*
*எனவேட் டோளே யாயே; யாமே*
*நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்*
*யாணர் ஊரன் வாழ்க*
*பாணனும் வாழ்க எனவேட் டேமே*

இப்பாடலின் திரண்டபொருளை முதலிற் காண்போம். வேட்டல் - விரும்புதல் ஆகும். தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி எதனை விரும்பியிருந்தாள் என்பதைப் பாடலின் முற்பகுதியும், தோழி எதனை விரும்பியிருந்தாள் என்பதனைப் பிற்பகுதியும் புலப்படுத்துவன. தோழி தலைவியை யாய் (-என் அம்மா) எனக் கூறுதல் சங்ககாலத்து மரபு. என் தாய் (-தலைவி), நாட்டினை ஆளும் வேந்தன் ஆதன் வாழி! அவினி வாழி! நாட்டில் நெல் நன்கு

விளைந்து பொலிவு பெறுக. பொன் மிகுதியாக வாய்த்துச் சிறப்பதாக! என்று விரும்பியிருந்தாள்.

யாம் (-தோழி [Royal we]) மலர்களை உடைய காஞ்சிமரமும் சினைகளை (முட்டைகளை) உடைய சிறுமீன்களும் ஒருங்கே வாழ்தற்கு இடமாகிய புதுவருவாய் பொருந்திய ஊரனாகிய தலைவன் (தீதின்றி) வாழ்க! (அவன் நண்பனாகிய) பாணனும் வாழ்க! என்று விரும்பியிருந்தோம் என்று கூறினாள்.

தலைவனின் பிரிவுத்துயரினைத் தாங்கிக் கொண்டு புலம்பும் தலைமகளின் உள்ளம், நாட்டை ஆள்பவன் நலமாக வாழ்ந்தால் தான் நாட்டுமக்கள் நலமாக வாழ்வார் என்ற உயரிய நோக்கில் அவனை வாழ்த்தினாள். **பசி இல்லாமல் மக்கள் வாழ்வதற்கு நெல்வளம் பெருக வேண்டும்.** மக்களின் வளத்தை அவர்கள் ஈட்டிவைத்திருக்கும் **பொன் வளம்** காட்டும். இந்த விழுமிய நிலையினை நன்குணர்ந்திருந்த தலைவி **நெல்லும் பொன்னும்** மேன்மேலும் பொலிந்து சிறக்க வேண்டும் என்று விரும்பினாள். திருமுறைகள் தோன்றிய காலத்தில் கூட இவையே உலகியல் உயர்வாழ்வுக்குத் தேவையாகத்திகழ்ந்தவை என்ற கருத்து தொடர்ந்து நிலவியது.

1. *தேனமர் பொழில்கொள் ஆலை விளை செந்நெல் துன்னி*
   *வளர் செம்பொன் எங்கும் நிகழ* (*திருமுறை* I. 85.11)

2. *அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்*
   *பொன்னம் பாலிக்கும்* (*திருமுறை* IV.1.1)

எனவரும் ஆன்றோர் அருளிச் செயல்களால் அறியலாம். **சுந்தரர் கூட இறைவனிடம் நெல்லையும் பொன்னையுமே வேண்டி நிரம்பப் பெற்றார் என்பதற்கு அகச்சான்றுகள் உண்டு** (திருமுறை *7.20. 1-10; 25.1-10; 34.1-11*). வாழ்வினை வளப்படுத்துவன இவ்விரண்டுமே என்பது தமிழர்தம் பெருங்கொள்கையாகும்.

எனவே இலட்சியத் தலைவியின் விழுமிய விருப்பம் இன்னதெனக் கண்டோம். அவள் துன்பத்தைக்கண்டு தானும் துன்புறம் தோழியின் அஞ்சாத நெஞ்சமும் தலைவனைத் திருத்த வேண்டும் என்ற உறுதியும் பாடலின் பிற்பகுதி குறிப்பாகப் புலப்படுகின்றன.

யாணர் - புது வருவாய். மருதநிலத்துத் தலைவனை ஊரன் எனக் கூறுதல் இலக்கிய மரபு. அவன் ஊரில் உள்ள

கருப்பொருள்களை எடுத்துக் காட்டி அவற்றின் வாயிலாகக் கூறும் பொருள் மொழி அவனை உறுதியாகத் திருத்தும் என்று எண்ணினாள் தோழி. மருதநிலத்தின் கருப்பொருளாகக் காஞ்சிமரம், மீன் என்பன கூறப்பட்டன. நறுமணம் கமழும் காஞ்சி மலரையும் புலால் நாறும் சிறுமீனையும் உடைய ஊரினன் நீ! காஞ்சி மலர்போல் பண்புநலம் கமழும் தலைவியையும், மீன்போல் இழிநலம் கொண்ட பரத்தையினையும் ஒரு நிகராகக் கொண்டு ஒழுகினாய்! - இங்ஙனம் உள்ளுறைப் பொருள் அமைத்துக் கூறுவதால் தலைவனின் கொடுமை கூறப்பட்டதுடன், அவன் தன்பிழையினை உணர்ந்து திருந்துவான் என்ற குறிப்பும் புலனாகும். பாணனும் வாழ்க என்று இகழ்ச்சிக் குறிப்பினால் வாழ்த்தினாள். தலைவனின் பரத்தைத் தொடர்பிற்கு உடந்தையாக இருப்பவன் பாணனே.

தலைவனை இடித்துக் கூறும் பொழுதுகூட, சொல் நாகரித்தினைப் பேணியவள் தோழி. இனி, குறுந்தொகை குறித்துச் சில கருத்துக்களைக் காண்போம்.

### IV.1.2. குறுந்தொகை

குறுகிய பாடல்களின் தொகுப்பு குறுந்தொகை ஆகும். பழைய உரையாசிரியர்களினால் மிகுதியாக மேற்கோள் காட்டப்பெற்ற இலக்கியம் திருக்குறளுக்கு அடுத்தபடியாக இருப்பது குறுந்தொகையே. பேராசிரியர் இந்நூலின் முதல் 380 பாக்களுக்கு உரை எழுதினாரென்றும், எஞ்சிய 20 பாக்களுக்கு நச்சினார்க்கினியர் உரை வரைந்தனர் என்றும் நச்சினார்க்கினியரின் உரைச் சிறப்புப் பாயிரத்தினால் அறிகிறோம். இவர் தம் உரைகள் இப்பொழுது கிடைக்கவில்லை. இதனுள் காணப்படும் 401 பாடல்களில் 307 ஆம் பாடல் 9 அடிகளைக் கொண்டிருப்பதால் இதனை விலக்கி எண்ணினால் 400 என்ற தொகை பொருத்தமாகும் என்பர் உ.வே.சா. குறளோவியம்போல் குறுந்தொகையில் வரும் காதற்காட்சிகள் சுவைப்படப் பாடப் பெற்றுள்ளன. இடையிடையே வாழ்வியலுக்கு நெறிகாட்டும் பொன் மொழிகள் பல பொதிந்துள்ளன. அவற்றை இங்குத் தொகுத்துக் காண்போம்.

1. அரிகரி பொய்த்தல் ஆன்றோர்க்(கு) இல்லை — 184.1
2. திறவோர் செய்வினை அறவ தாகும் — 247.2
3. அவர் நமக்கு,
   அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி — 93.3
4. அழாஅல் என்று நம் அழுதகண் துடைப்பார் — 82.2
5. நசையிற் புதல்வற் றழீஇயினன் விறலவன்
   புதல்வன் தாயவன் புறம் கவைஇ யினளே — 359.5-6

6. ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்(கு) இல் 63.1
7. இல்லோன் இன்பம் காமுற் றாஅங்கு 120.1
8. உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவென 283.1-2
9. வினையே ஆடவர்க்(கு) உயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் 135.1-2
10. பழியும் அஞ்சும் பயமலை நாடன் 143.2
11. சான்றோர் புகழும் முன்னர் நாணுப
பழியாங்(கு) ஒல்பவோ காணுங் காலே 252.6-7
12. பெருநன் றாற்றிற் பேணாரும் உளரோ 115.1
13. நில்லா மையே நிலையிற்று 143.3
14. முறையுடை அரசன் செங்கோல் அவையத்து 276.5
15. பண்டும், தாமறி செம்மை சான்றோர்க் கண்ட
கடனறி மாக்கள் போல் இடன் விட்டு 265.2-4
16. இடிக்கும் கேளிர் 58.1
17. இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயா கியர்என் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே 49.3-5
18. பால்வரைந் தமைத்தல் அல்லது அவர்வயின்
சால்பளந் தறிதற்கு யாஅம் யாரோ 366.1-2

சீரிய சிந்தனைகளும் வாழ்வியல் மேம்பாட்டுக் கோட்பாடுகளும் குறுந்தொகையில் நிரம்பக் காணப்படுவதால் அதன் ஒப்பற்ற சிறப்பு தெள்ளிதிற் புலனாகும். அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் காதலின் மாண்புரைக்கும் பாடலைக் காண்போம்.

யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே (40)

உறவு, இனம், மொழி, நிலம் என்ற சமுதாய எல்லைகளை ஊடுருவிச் செல்லும் ஆற்றல் உண்மைக் காதலுக்கு உண்டு. முன்பின் அறியாத நம்பியும் நங்கையும் அன்புப் பெருக்கினால் கூடுகின்றனர். இத்தகைய கூட்டத்திற்கு **இயற்கைப் புணர்ச்சி** (-தானாக, இயல்பாக நடைபெறும் அன்புக்கலப்பு) என்பது பெயர். இங்ஙனம் கூடியபின் தலைவன் ஒருவேளை தன்னைப் பிரிந்து சென்று விடுவானோ என்று எண்ணி அஞ்சிய தலைமகளின் குறிப்பு வேறுபாடுகண்டு தலைமகன் கூறியதாக இப்பாடல் அமைந்துள்ளது. **யாய் - என் தாய், தாய் - நின்தாய்; எந்தை - என்**

தந்தை, நுந்தை - நின் தந்தை. தாய்வழி, தந்தை வழி ஆகிய இருவழிகளிலும் இந்தக் காதலர்கள் உறவுடையவர்கள் அல்லர். முன்பின் இவர்கள் ஒருவர் ஒருவரை அறியாதவர். இங்ஙனம் புறத் தொடர்பற்ற இருவர் சந்திக்கும் பொழுது இருவர் தம் அன்பு நெஞ்சங்கள் ஒன்றில் ஒன்று கலந்து விடுகின்றன. இக்கலப்பிற்குப் புலவர் உவமை கூறுகின்றார். வானமும் நிலமும் ஒன்றற்கு ஒன்று சேய்மையில் உள்ளது. என்றாலும் வானின்று இறங்கும் மழைநீர் செம்மண்ணினை அடைந்ததும் நிறமற்ற நீர், தான் அடைந்த செம்மண்ணின் நிறத்தைப் பெறுகிறது. '**செம்புலப் பெயல்நீர் போல**' அன்புடைய நெஞ்சங்கள் கலக்கின்றன. கலந்து ஒரு தன்மையினைப் பெறுகின்றன. இப்பாடலாசிரியரின் இயற்பெயர் தெரியவில்லை. பாடலைத் தொகுத்த அறிஞர், இந்த அரிய தொடரமைப்பின் அழகினை எண்ணிச் **செம்புலப் பெயனீரார்** என்று பெயர் சூட்டினர்.

### IV.1.3. நற்றிணை

நெடியதும் இன்றிக் குறியதும் இன்றி நடுவாக உள்ள பாக்களின் தொகுதிக்கு **நற்றிணை** எனப் பெயரிட்டனர். இந்நூலில் 234 ஆம் பாடல் கிடைக்கவில்லை. குறுந்தொகையில் 9 அடியினால் அமைந்த கூடுதல் பாடல் (307) நற்றிணையில் இடம் பெறும் தகுதி வாய்ந்தது என்பர். பிற அக இலக்கியங்களைப் போலவே நற்றிணையிலும் பற்பல விழுமியங்களும் தகவுகளும் கூறப்பெற்றுள்ளன. திருக்குறள் கருத்துக்களும் விரவியுள்ளன. அவற்றுள் ஒரு சிலவற்றை இங்குக் காண்போம்.

1. *நின்ற சொல்லர் நீடுதோ(று) இனியர்* 1.1
2. *புரைய மன்ற புரையோர் கேண்மை* 1.5
3. *பெரியோர்,*
   *நாடி நட்பின் அல்லது*
   *நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே* 32.7-9
4. *இரந்தோர் மாற்றல் ஆற்றா இல்லின் வாழக்கை* 84.11-12
5. *ஒன்றில் காலை அன்றில் போலப்*
   *புலம்பு கொண்(டு) உறையும் புன்கண் வாழ்க்கை* 124.1-2
6. *இளமையிற் சிறந்த வளமை இல்லை* 126.8
7. *அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாது*
   *மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன்* 136.2-3
8. *நயனும் நண்பும் நாணும் நன்குடைமையும்*
   *பயனும் பண்பும் பாடறிந் தொழுகலும்* 160.1-2

9. இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுநர் இருந்தோர்க்(கு) அரும்புணர்வு இன்ம் 214.1-2
10. முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர் 355.6-7
11. பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சம் 186.8
12. அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும் 142.9
13. விருந்து விருப்புறூஉம் பெருந்தோள் குறுமகள் 221.8
14. முன்னியது முடித்தனம் 169.1
15. சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே 210.7-9
16. மரம்சா மருந்தும் கொள்ளார் மாந்தர்;
உரம்சாச் செய்யார் உயர்தவம்; வளம்கெடப்
பொன்னும் கொள்ளார் மன்னர் 226.1-3
17. நாருடை நெஞ்சத்(து) ஈரம் பொத்தி
ஆன்றோர் செல்நெறி வழாஅச்
சான்றோன் ஆதல் நற்கு அறிந்தனன் தெளிமே 233.7-9
18. ஐதே கம்ம, இவ்வுலகு படைத்தோனே 240.1
19. பொருள்வயிற்,
பிரியல் ஆடவர்க்கு இயல்பெனின்
அரிதுமன் றம்ம அறத்தினும் பொருளே 243.9-11
20. அரும்பொருட் கூட்டம் இருந்தோர்க்கு இல் 352.4
21. நிலம்புடை பெயர்வ தாயினும் கூறிய
சொல்புடை பெயர்தவோ இலரே 289.2-3
22. வேறுபல் நாட்டுக் கால்தர வந்த
பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறை 295.5-6
23. ஒருமை செப்பிய அருமை 298.10
24. முதிர்ந்தோர் இளமை அழிந்தும் எய்தார் 314.1
25. வாழ்நாள் வகை அளவு அறிஞரும் இல்லை 314.2
26. உலகம் படைத்த காலை தலைவ!
மறந்தனர் கொல்லோ இறந்தி சினோரே...
அரும்பெறல் பெரும்பயம் கொள்ளாது
பிரிந்துறை மரபின் பொருள் படைத்தோரே 337.1-10
27. சாதல் அஞ்சேன்; அஞ்சுவல் சாவின்
பிறப்புப் பிறிதா குவதாயின்
மறக்குவென் கொல்என் காதலன் எனவே 397.7-9

காதலைப் பொருளாக அமைத்துப் பாடும் புலவர்கள் வாழ்வியலை உயர்த்தும் அரிய கருத்துக்களை இடை இடையே பொறித்துப் போந்துள்ளனர் என்பதில் ஐயமில்லை.

நற்றிணையில் 36 ஆம் பாடலின் அமைப்பினையும் சிறப்பினையும் இங்கு நோக்குவோம்.

*பளிங்கு செறித்தன்ன பல்கதிர் இடையிடை*
*பால்முகந் தன்ன பசுவெண் ணிலவின*
*மால்புஇடர் அறியா நிறையுறு மதியம்!*
*சால்பும் செம்மையும் உடையை ஆதலின்*
*நிற்கரந்து உறையும் உலகம் இன்மையின்*
*எற்கரந்து உறைவோர் உள்வழி காட்டாய்!*
*நற்கவின் இழந்தஎன் தோள்போல் சாஅய்*
*சிறுகுடி சிறுகுபு செரீஇ*
*அறிகரி பொய்த்தலின் ஆகுமோ அதுவே?* (196)

நீண்ட தூரம் சென்று பொருளீட்டப் பிரிந்த தலைவனின் பிரிவினைத் தாங்கிக் கொள்ளுதற்கு முடியாத தலைவி முழு நிலாவைப் பார்த்துப் பேசுவதாக வெள்ளைக்குடி நாகனார் இப்பாடலைப் புனைந்துள்ளார்.

*பளிங்கினைச் செறிய வைத்தாற் போன்ற பல வாகிய*
*கதிர்க்கற்றைகளின் இடையிடையே பாலை முகந்து*
*வைத்தாற் போன்ற பசிய வெள்ளிய நிலவினை*
*உடைய மேகத்தின் பிடர்மேல் தோன்றும்*
*கலைகள் முற்றிய முழுநிலாவே!*

நீ நிறைவும் நேர்மையும் உடையை. மேலும், நினக்குத் தெரியாதபடி மறைந்து உறையும் பொருள் உலகில் இல்லை. எனவே, எனக்குத் தெரியாமல் மறைந்துறையும் தலைவர் இருக்கும் இடத்தை எனக்குக் காட்டுவாயாக!

திங்களே! அறிந்து வைத்திருந்தும் சான்று கூறாமல் பொய்த்திருத்தலின், நல்லழகு இழந்த என் தோளைப் போல நீயும் வாட்டம் உற்று சிறுகிச் சிறுகிக் குறைந்து, உன் பார்வை மங்குவதால் நின்னால் அவர் இருக்கும் இடத்தினைக் காண்பித்தல்தான் கூடுமோ?

என்று தலைவி வினவுகிறாள். எல்லா இடங்களிலும் சுற்றித்திரியும் முழுநிலவுக்கு எல்லாப் பொருளும் தெரியும். இருந்தும் தலைவர் உள்ள இடத்தினைக் கூறாதிருத்தலின் அறிந்த உண்மையினைப்

பொய்த்தது எனத் தலைவி தன் இயலாமை தோன்றப் பேசினாள். ஆற்ற முடியாத நிலையில், தலைவி இயற்கையினை நோக்கிப் பேசுவதாகப் பாடுவது சங்க இலக்கிய மரபு. உறுப்புடையது போலவும் உணர்வு உடையது போலவும் இயற்கைப் பொருளை எதிர்நோக்கிப் பேசுதல் **பாற்கிளவி** எனப்படும் *(தொல்.பொருள்.194)* பால் - ஆண்பால், பெண்பால் எனப் பொருள்படும். இங்கு பெண்பாலாகிய தலைவியைக் குறித்தது கிளவி - பேச்சு. ஞாயிறு, திங்கள் அறிவு, நாண், கடல், கானல், விலங்கு, மரம், பொழுது, பறவை, நெஞ்சம் உள்ளிட்ட இயற்கைப் பொருளை நோக்கித் தலைவி பேசுவாள் *(தொல். பொருள். 501)* என்ற புலனெறி மரபிற்கு ஏற்ற எடுத்துக்காட்டாக மேலே கண்ட நற்றிணைப் பாடல் அமைந்து இன்பம் பயக்கின்றது.

### IV.1.4. அகநானூறு

நீண்ட அடிகளினால் புனையப் பெற்ற பாக்களின் தொகுதிக்கு நெடுந்தொகை என்பது தொகுத்தோரிட்ட பெயராகும். அகம், அகப்பாட்டு, அகநானூறு என்பனவும் இதன் பெயராக உரைகளில் வழங்கி வந்துள்ளன. கலித்தொகைப் பாடல்களைப் போலவே, அகநானூற்றுப் பாடல்களும் சிதைவில்லாமல் கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தொகுத்தவராகிய மதுரை உப்பூரி குடிகிழான் மகனார் உருத்திரசன்மனார் அழகியல் உணர்வுடன் தொகுத்துள்ளார். ஒற்றை எண்பெற்ற பாக்கள் பாலைத்திணைக்கும்; *2, 8, 12, 18* என்பனவாக வரும் பாக்கள் குறிஞ்சித் திணைக்கும்; *4, 14, 24, 34* என வருவன முல்லைத் திணைக்கும்; *6, 16, 26, 36* என்ப்னவாக அமைவன மருதத்திணைக்கும், *10, 20, 30, 40* என வருவன எல்லாம் நெய்தல் திணைக்கும் உரியனவாகத் தொகுத்திருத்தல் சுட்டத்தக்கது. *1-120* பாடல்கள் **களிற்றியானை நிரை**, *121-130* பாடல்கள் **மணிமிடைபவளம்**, *301-400* பாடல்கள் **நித்திலக்கோவை** எனப்பெயர் பெற்றன. தொகைக்குள் தொகையாக இம்மூன்றும் உள்ளன. முதல் தொண்ணூறு பாக்களுக்கு மட்டும் பழைய உரை கிடைத்துள்ளது. அகநானூற்றில் வடநாட்டு வேந்தராகிய நந்தர் *(251.5, 265.4)*, மோரியர் *(69.10, 251.12, 281.8)* பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. வரலாற்றுக்குறிப்புக்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன அக இலக்கியமாக இத்தொகை நூல் விளங்குகிறது.

#### IV.1.4.1. வாழ்வியல் சிந்தனைகள்

இந்நூலில் பொதிந்துள்ள வாழ்வியல் மேம்பாட்டுக் கருத்துக்களைத் தொகுத்துக் காண்போம்.

1. பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன் (4.10-12,
2. யாமே பிரிவின் றியைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளின் ஓருயி ரம்மே (12.4-5,
3. கிடந்துயிர் மறுகுவ தாயினும் இடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினும் சிறந்த
தாழ்வில் உள்ளம் தலைத்தலைச் சிறப்ப (29.2-4,
4. பெருங்களந் தொகுத்த உழவர் போல
இரந்தோர் வறுங்கலம் மல்க வீசி (30.8-9,
5. அழிவில் உள்ளம் வழிவழிச் சிறப்ப
வினையிவண் முடித்தன மாயின் வல்விரைந்
தெழுவினி வாழிய நெஞ்சே! (47.1-3,
6. என்றும், இல்லோர்க் கில்லென் றியைவது கரத்தல்
வல்லா நெஞ்சம் வலிப்ப நம்மினும்
பொருளே காதலர் காதல்
அருளே காதலர் என்றி நீயே (53.13-16)
7. தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன் (54.13)
8. நோற்றோர் மன்ற தாமே கூற்றம்
கோளுற விளியார் பிறர்கொள விளிந்தோர் (61.1-2)
9. இம்மை உலகத் திசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின் றெய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி (66.1-5)
10. ஈதல் இன்பம் வெஃகி மேவரச்
செய்பொருள் திறவ ராகி... அகன்றனர் (69.5-12)
11. கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோட் பெட்கும் பிணையை யாக (86.13-14)
12. அரும்பொருள் வேட்கையின் அகன்றன ராயினும்
பெரும்பே ரன்பினர் (91.8-9)
13. கேள்கே டூன்றவும் கிளைஞர் ஆரவும்
கேளல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்
ஆள்வினைக் கெதிரிய ஊக்கமொடு புகல்சிறந்து
(93.1-3)
14. இம்மை, நன்றுசெய் மருங்கிற் றீதில் வென்னும்
தொன்றுபடு பழமொழி (101.2-3)
15 புணர்ந்தோர் புன்கண் அருளாலும் உணர்ந்தோர்க்கு
ஒத்தன்று (108.1-2)

16. கழியக் காதல ராயினும் சான்றோர்
பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார் (112.11-12)
17. நன்றல் கலையும் நட்பிற் கோடார்
சென்று வழிப்படூஉம் (113.1-2)
18. பெருந்தண் கோதை, இவளினும் சிறந்தன்று ஈதல் நமக்கு (131.4-5)
19. இடிமறந்து ஏமதி வலவ!... திரிமருப்பேற்றொடு
கணைக்கா வம்பிணைக் காமர் புணர்நிலை
கடுமான் தேரொலி கேட்பின்
நடுநாட் கூட்டம் ஆகலும் உண்டே (134.9-14)

ஒப்புமை: புணரி பொருத பூமணல் அடைகரை
ஆழி மருங்கின் அலவன் ஓம்பி
வலவன் வள்பாய்த் தூர
நிலவுவிரிந் தன்றால் கான வானே. (நற்.1.6-9)

20. தந்நயந் துறைவோர்த் தாங்கித் தாம்நயந்து
இன்னமர் கேளிரொ டேமுறக் கெழீஇ
நகுத லாற்றார் நல்கூர்ந்தார் (151.1-3)
21. அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளி னாகும் (155.1-3)
22. அறந்தலைப் பிரியா தொழுகலும் சிறந்த
கேளிர் கேடுபல ஊன்றலும் நாளும்
வருந்தா உள்ளமொ டிருந்தோர்க் கில்லெனச்
செய்வினை புரிந்த நெஞ்சினர் (173.1-4)
23. முறைபுரிந்து, அறநெறி பிழையாத் திறனறி மன்னர் (188.3-4)
24. உயிர்கலந் தொன்றிய தொன்றுபடு நட்பிற்
செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தோர் போல (205.1-2)
25. விலங்கிருஞ் சிமையக் குன்றத் தும்பர்
வேறுபன் மொழிய தேஎம் முன்னி
வினைநசைஇப் பரிக்கும் உரன்மிகு நெஞ்சமொடு (215.1-3)
26. அன்பும் மடனும் சாயலும் இயல்பும்
என்பு நெகிழ்க்கும் கிளவியும் பிறவும்
ஒன்றுபடு கொள்கை... (225.1-3)

27. செறுவோர் செம்மல் வாட்டலும் சேர்ந்தோர்க்(கு)
உறுமிடத் துய்க்கும் உதவி யாண்மையும்
இல்லிருந் தமைவோர்க் கில்... (231.1-3)

28. துனியின் றமைந்த துவரா நட்பி
னினிய ரம்ம வவரென முனியாது
நல்குவர் நல்ல கூறினு மல்கலும்
பிரியாக் காதலொ டுழைய ராகிய
நமர்மன் (241.1-5)

29. உயிரினும் சிறந்த ஒண்பொருள் தருமார்
நன்றுபுரி காட்சியர் சென்றனர் (245.1-2)

30. ஆர்வுற, நிரந்தோர்க் கீயா தீட்டியோன் பொருள்போல்
பரந்து வெளிப்படா தாகி
வருந்துக தில்ல... (276.12-15)

31. நட்டோர் இன்மையும் கேளிர் துன்பமும்
ஒட்டா துறையுநர் பெருக்கமும் காணூஉ
ஒருபதி வாழ்தல் ஆற்றுப தில்ல (279.1-3)

32. விழையா உள்ளம் விழையு மாயினும்
என்றும் கேட்டவை தோட்டி யாக மீட்டாங்கு
அறனும் பொருளும் வழாமை நாடித்
தற்றக வுடைமை நோக்கி மற்றதன்
பின்னா கும்மே முன்னியது முடித்தல்
அனைய பெரியோர் ஒழுக்கம் (286.8-13)

33. இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
நண்பகல் அமையமும் இரவும் போல (327.1-2)

34. இருள்படு நெஞ்சத் திடும்பை தீர்க்கும்
அருள்நன் குடைய ராயினும் ஈதல்
பொருளில் லோர்க்கஃ தியையா தாகுதல்
யானும் அறிவென் மன்னே... (335.1-4)

35. யாக்கைக்கு, உயிரியைந் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்த லன்ன காதல்
காத லன்ன பிரிவரி யோளே... (339.11-14)

36. வேற்றுநாட் டுறையுள் விருப்புறப் பேணிப்
பெறலருங் கேளிர் பின்வந்து விடுப்பப்
பொருளகப் படுத்த புகல்மலி நெஞ்சமொடு
குறைவினை முடித்த நிறைவின் இயக்கம் (351.1-4)

37. குடிநன் குடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியலன் அன்பினன் (352.8-9)

38. நாளும், கனவுக் கழிந்தனைய வாகி நனவின்
நாளது செலவும் மூப்பினது வரவும்
அரிதுபெறு சிறப்பிற் காமத் தியற்கையும்
இந்நிலை அறியா யாயினும்... உள்ளுவை அல்லையோ
(353.2-16)

(காண்க: தொல்.பொருள்.44)

39. ஆயிதழ் மடந்தை,
வார்முலை முற்றத்து நூலிடை விலங்கினும்
கவவுப்புலந் துறையுங் கழிபெருங் காமத்
தின்புறு நுகர்ச்சியிற் சிறந்ததொன் றில்லென
அன்பான் மொழிந்த என்மொழி கொள்ளாய் (361.4-8)

40. நசைதர வந்தோர் இரந்தவை
இசைபடப் பெய்த வாற்று வோரே (377.14-15)

41. விரிதிரை முந்நீர் மண்டிணி கிடக்கை
பரிதியஞ் செல்வம் பொதுமை யின்றி
நனவின் இயன்ற தாயினும் கங்குல்
கனவின் அற்றதன் கழிவே (379.6-9)

42. பிறருறு விழுமம் பிறரும் நோப
தம்முறு விழுமம் தமக்கோ தஞ்சம் (382.1-2)

இத்தகைய பொன் போன்ற மொழிகள் பண்பாடு பழுத்த புலவர் உள்ளத்தில் பிறப்பவை. உலகினர்க்கு உணர்த்தப்பெற்றவை. இவற்றை எடுத்துரைத்த சங்க காலச் சான்றோர் உலக அறிஞர் வரிசையில் உயரிய இடத்திற்கு உரியர்.

### IV.1.4.2. ஒருபாடலின் சிறப்பு

இத்தொகையில் இடம்பெற்றுள்ள ஒரு பாடலின் சிறப்பினை மட்டும் இங்குக் காண்போம்.

ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை யாக
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசை
தோடமை முழவின் துதைகுர லாக
கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டுயாழ் ஆக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலி சிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்

*கழைவளர் அடுக்கத்து இயலி ஆடு மயில்*
*நனவுட் புகு விறலியின் தோன்றும் நாடன்*
*உருவ வல்வில் பற்றி அம்பு தெரிந்து*
*செருச்செய் யானை செல்நெறி வினாஅய்*
*புலர்குரல் ஏனற் புழையுடை ஒரு சிறை*
*மலர்தார் மார்பன் நின்றோற் கண்டோர்*
*பலர்தில் வாழி தோழி! அவருள்*
*ஆரிருட் கங்குல் அணையொடு பொருந்தி*
*ஓர் யான் ஆகுவது எவன் கொல்*
*நீர்வார் கண்ணொடு நெகிழ்தோளேனே.* *(82)*

பெரும்பாலும் **அறத்தெடு நிற்றல்** என்பது தோழியின் செயலாகப் பாடப்படுவது. ஒரு சில நிலைகளில் தலைவி தன்னிலையினை விளக்கித் தோழிக்கு அறத்தொடு நிற்றலும் உண்டு. இந்த வகையில் இப்பாடலைக் கபிலர் புனைந்துள்ளார். இப்பெரும் புலவர் **குறிஞ்சிப் பாட்டினையும் தோழி அறத்தொடு நிற்றல்** என்ற பொருண்மையில் பாடியுள்ளார் என்பதை முன்னர்க் கண்டோம்.

இப்பாடலின் கற்பனை வளத்தையும் பொருண்மையினையும் காண்போம்.

குறிஞ்சித்திணை பாடுவதில் வல்ல கபிலர் குறிஞ்சிக் கருப்பொருள்களைக் கொண்டு அரிய இசை நிகழ்ச்சியை இப்பாடலில் அமைத்துள்ளார். மலையில் உள்ள மூங்கில்களின் துளைவழியே வரும் காற்று குழலிசையாக இன்பம் தருகிறது. அருவிநீர் மலையினின்றும் குதிக்கும் ஓசை முழுவோசையாக அமைகிறது. ஆண்மான்கள் நீண்டொலிக்கும் குரலோசை பெருவங்கியத்தின் இசையாக இனிக்கிறது.

பூஞ்சோலையில் மொய்க்கும் வண்டின் ஒலி யாழிசையாக இன்பம் அளிக்கிறது. இவ்வியற்கை இசையின் பின்புலத்திற்கு ஏற்றாற்போல விறலியைப்போல மயில் தோகைவிரித்து ஆடுகிறது. இன்ப இசையினையும் மயிலின் ஆடலையும் பார்வையாளராக இருந்து மந்திகள் (- பெண் குரங்குகள்) மருண்டு நோக்கி மகிழும். இத்தகைய இயற்கைக் காட்சிகள் உடைய மலை நாட்டுத் தலைவன் மலர்தார் அணிந்த மார்பனாய், வில்லினை ஏந்தி அம்பினைத் தேர்ந்து கொண்டு தன்னால் எய்யப்பெற்ற யானை சென்ற வழியை வினவிக்கொண்டு தினைப்புனத்தின் ஒருபக்கத்தே நின்றவனை விருப்புடன் கண்ட பெண்கள் பலராவர் தோழி! அவருள் இருள் செறிந்த இரவில் அணையுடன் பொருந்தி நீர் சொரியும் கண்ணொடு நெகிழ்ந்த தோளினேனாக யான் ஒருத்தியுமே ஆகுவது

எம்முறையோ? என்று தலைவி தனக்கும் தலைவனுக்கும் உள்ள தொடர்பினைத் தோழிக்குக் குறிப்பாகப் புலப்படுத்தினாள். இதனால் அறத்தொடு நின்றாள் எனவும் பொருள் கொண்டனர் பேராசிரியர் (தொல்.மெய்.7). அறம் - தனக்கும் தலைவனுக்கும் ஏற்பட்ட இல்லறம் புரிதற்குரிய காதல். இத்தகைய சொல்லோவியங்கள் பண்டைத்தமிழரின் இயற்கை ஈடுபாட்டினையும் கலை உணர்வினையும் காதல் வாழ்வினையும் தெள்ளிதிற்புலப்படுத்துவன ஆகும்.

## IV.1.5. கலித்தொகை

தொல்காப்பியர் வரையறுத்துக் கூறிய நால்வகைப் பாக்களில் ஒன்றாகிய கலிப்பாவினால் அமைந்த தொகை இலக்கியம் கலித்தொகை ஆகும். இதனுள் முதற்பாடல் சிவபிரானுக்குரிய கடவுள் வாழ்த்தாக உள்ளது. அடுத்துப் பாலைத்திணைக்குரிய கலிப்பாக்கள் *35*, குறிஞ்சித் திணைக்குரியவை *29*, மருதத்திணைக்குரியவை *35*, முல்லைத்திணைக்குரியவை *17*, நெய்தல் திணைக்குரிய கலிப்பாக்கள் *33* என்று தொகுக்கப்பெற்றன. கடவுள் வாழ்த்தினையும் சேர்த்து *150* பாக்கள் உள்ளன. **கற்றறிந்தார் ஏத்தும் கலி** என்று இந்நூலின் சிறப்பு உணர்த்தப் பெற்றது.

பாலைத்திணையைப் **பெருங்கடுங்கோவும்**, குறிஞ்சித் திணையைக் **கபிலரும்**, மருதத்திணையினை **மருதனிளநாகனாரும்**, முல்லைத்திணையினைச் **சோழன் நல்லுருத்திரனும்**, நெய்தல் திணையினை **நல்லந்துவனாரும்** பாடியுள்ளனர். இந்நூலிற்கு நச்சினார்க்கினியரின் செவ்வியல் உரை (Classical Commentary) பயில்வார்க்குப் பெருவிருந்தாக விளங்குகிறது.

### IV.1.5.1. கலித்தொகையில் காணப்படும் கலிப்பாக்களின் வகை

#### IV.1.5.1.1. அகநிலை ஒத்தாழிசைக்கலி [61]

கலித்தொகையில் மிகுதியாகப் பயிலப் பெறும் கலிப்பாவாக அகநிலை ஒத்தாழிசைக்கலி உள்ளது.

1. பாலைக்கலியில் *23* பாக்கள் [*2-5, 8-11, 13-17, 20, 22, 25, 27-31, 34, 35*]
2. குறிஞ்சிக்கலியில் *11* பாக்கள் [*38, 44, 45, 46, 48, 49, 52, 53, 57, 58, 59*]
3. மருதக்கலியில் *15* பாக்கள் [*66, 67, 69-79, 99, 100*]
4. நெய்தற்கலியில் *12* பாக்கள் [*121, 123-4, 126-8, 132, 134-7, 150*]

முல்லைத்திணைக்குரிய அக ஒழுகலாறுகளையும் அவை தொடர்பான ஏறுதழுவுதல் முதலிய வீர விளையாட்டுக்களையும் விரித்துரைப்பதற்கு இவ்வகை யாப்புப் போதியதாக

அமையாமையினால் இதனை விடுத்து வேறுவகைக் கலிப்பாவில் அத்திணைப் பொருளைச் சோழன் நல்லுருத்திரன் பாடியுள்ளார் எனலாம்.

### IV.1.5.1.2. கொச்சக ஒருபோகு [18]

இந்த யாப்பில் 18 பாடல்கள் வந்துள்ளன. [*1, 19, 21, 33; 54, 62; 68, 85; 118, 119, 120, 122, 125, 129, 130, 133, 148, 149*] முல்லைத்திணைக்குரிய பாடல் இந்த யாப்பிலும் பாடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### IV.1.5.1.3. அம்போதரங்க ஒருபோகு [1]

**'கண்ணகன் இருவிசும்பிற் கதழ்பெயல் கலந்தேற்ற'** எனத் தொடங்கும் முல்லைக்கலியின் இரண்டாம் பாடல் கலிவெண்பா உறுப்பில் வேறுபட்டு வந்த கொச்சகக் கலியாகும் என்று நச்சினார்க்கினியர் நவின்றனர். இவருக்கு *400* ஆண்டுகள் முற்பட்டவராகிய இளம்பூரணர் இப்பாடலை **அம்போதரங்க ஒருபோகிற்கு** மேற்கோள் காட்டியிருத்தலால் [தொல். பொருள். *455*] அவர் கருத்தினை ஏற்றுக் கொள்ளலாம்.

### IV.1.5.1.4. கலிவெண்பாட்டு [2+6=8]

வெண்டளை பிறழாது ஒரு பொருள் குறித்துப் பன்னிரண்டடியின் மிகாது உருவானவை இருபாடல்கள் [*6,18*]. வேற்றுத்தளை விரவியும் பல பொருள்குறித்தும் வருவன ஆறு பாடல்கள் [*12, 24; 37, 51, 65; 111*].

### IV.1.5.1.5. விரவுறுப்புடைய கலிவெண்பாட்டு [26]

இவ்வகைப் பாக்கள் *28* ஆகும் [*42, 50, 63, 64, 80-84, 86, 88, 89, 92, 96, 98, 109, 110, 115, 116, 138-143, 146*].

### IV.1.5.1.6. கொச்சகக்கலி

இவ்வகையாப்பில் *31* பாக்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. [*7, 23, 26, 32, 36; 39-41, 43, 47, 56, 61, 62; 90, 93-95, 97; 101, 103-108, 112, 117; 131, 144, 145, 147*].

### IV.1.5.1.7. உறழ்கலி [5]

கூற்றும் மாற்றமுமாக உரையாடற் பாங்கில் புனையப் பெறும் இந்தயாப்பில் ஐந்து பாடல்களை நச்சினார்க்கினியர் குறித்துள்ளார். [*60, 87, 91, 113, 114*].

[காண்க: சோ.ந.கந்தசாமி, **தமிழ்யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்**, முதற்பாகம், முதற்பகுதி, தமிழ்ப்பல்கலைக் கழக வெளியீடு, *1989*, பக். *639-652*].

### IV.1.5.2. விழுமியங்கள்

இசைநலம் கெழுமிய இனிய யாப்பில் இயன்றவை கலிப்பாடல்கள். பாடிய புலவர்கள் சமுதாய மேம்பாட்டினையும் ஒழுங்கினையும் அறங்களையும் கருதியவர்கள். காதலின் வலிமையினைக் கற்பனைக் கவினுடன் காட்சிப்படுத்திய கவிதைக் கலையில் வல்லவர்கள். அவர்கள் வழங்கியுள்ள ஒரு சில விழுமியங்களை இங்குத் தொகுத்துக் காண்போம்.

1. தொலைவாகி / இல்லென / இடனின்றி
இரந்தோர்க்கு ஈயாமை இளிவு 2.11-19

2. நும்மொடு,
துன்பம் துணையாக நாடின் அதுவல்ல[து]
இன்பமும் உண்டோ உயிர்க்கு 6.9-11

3. அரிதாய அறன் எய்தி அருளியோர்க்[கு] அளித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்...
11.1-2

4. கடைநாள் இதுவென்[று] அறிந்தாரும் இல்லை 12.15

5. சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவாது 18.5

6. ஒரோஒகை தம்முள் தழீஇ ஒரோஒகை
ஒன்றன்கூ றாடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை 18.9-11

7. கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினை மருங்கிற் பெயர்பு பெயர்பு உறையும்
21.10-11

8. சிறப்புச்செய்[து] உழையராப் புகழ்போற்றி மற்றவர்
புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்புபோல்
25.15-16

9. செல்வத்துள் சேர்ந்தவர் வளன்உண்டு, மற்றவர்
ஒல்கிடத்[து] உலப்பிலா உணர்விலார் தொடர்புபோல்
25.19-20

10. பொருந்திய கேண்மையின் மறையுணர்ந்[து] அம்மறை
பிரிந்தக்கால் பிறர்க்[கு] உரைக்கும் பீடிலார்
தொடர்புபோல் 25.28-29

11. தீதிலான் செல்வம்போல் தீங்கரை மரம் நந்த 27.2

12. கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி 34.10

13. நிலன்நாவில் திரிதருஉம் நீண்மாடக் கூடலார்
புலன்நாவில் பிறந்தசொல் புதிது உண்ணும்
பொழுதன்றோ 35.17-18

14. பொருள்இல்லான் இளமைபோல் புல்லென்றாள்;
வைகறை
அருள்வல்லான் ஆக்கம்போல் அணிபெறும் 38.15-16

15. இன்மை உரைத்தார்க்கு அதுநிறைக்கல் ஆற்றாக்கால்
தன்மெய் துறப்பான் 43.26-27

16. வேட்டார்க்கு இனிதாயின் அல்லது நீக்கினி[து] என்[று]
உண்பவோ நீர்உண் பவர் 62.10-11

17. அறன்நிழல் எனக்கொண்டாய் ஆய்குடை 99.8

18. விரிநீர் ருடுக்கை உலகம் பெறினும்
அருநெறி ஆயர் மகளிர்க்[கு]
இருமணம் கூடுதல் இல்லியல்பு அன்றே 114.19-21

19. ஆற்றுதல் என்பதொன்[று] அலந்தவர்க்[கு] உதவுதல்

20. போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை

21. பண்பெனப் படுவது பாடறிந்[து] ஒழுகுதல்

22. அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை

23. அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்

24. செறிவெனப் படுவது கூறியது மறாஅமை

25. நிறை[வு]எனப் படுவது மறைபிறர் அறியாமை

26. முறைஎனப் படுவது கண்ணோடா[து] உயிர்வௌவல்

27. பொறைஎனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்
133. 6-14

28. உயிர் செகுக்கும்,
பாம்பும் அவைப்படில் உய்யுமாம் 140.21-22

29. தன்னுயிர் போலத் தழீஇ உலகத்து
மன்னுயிர் காக்கும்இம் மன்னனும் 143.57-58

30. அல்லது கெடுப்பவன் அருள்கொண்ட முகம்போல 148.4

இங்ஙனம் வாழ்வியலைச்செம்மைப்படுத்தும் சீரிய சிந்தனைகளைக் காதலைப் பாடும் கலித்தொகைப் பாக்களின் ஊடே புலவர் பெருமக்கள் பொதிந்து வைத்துள்ளனர்.

சமுதாயம் மேம்பட வேண்டும் என்ற அக்கறையினால்தான் இன்பத்தைப் பாடும் பொழுதுகூட அறத்தையும் பாடினர். கற்பார்க்கு இன்பம் பயக்கும் ஒரு கலிப்பாடலின் சிறப்பினை இவண் காண்போம்.

### IV.1.5.3. உடன்போக்குப் பாடல்

களவுக்காலத்து இறுதியில் தலைவனுடன் உடன்போகிய தலைவியைத் தேடிக்கொண்டு செவிலி பாலை வழியில் வருகிறாள். முக்கோல் அந்தணரைக் காண்கிறாள். என்மகளும் வேறொருத்தியின் மகனும் பிறர் அறியாமல் களவுப்புணர்ச்சியில் ஒழுகியவர் இவ்வழியே வந்ததைக் கண்டீரோ என்று கேட்கிறாள். அவரும்,

**காணேம் அல்லேம் கண்டனம் கடத்திடை** [9.9]

என்று நிதானித்துக் கூறி, அண்ணலொடு சுரவழிப் போகிய மங்கையின் தாய் நீர் என்று கருதுகிறேன். அவ்வாறு சென்றதில் பிழையொன்றும் இல்லை. இருமுதுகுரவரினும் சிறந்த கணவனை வழிபட்டு அவன்பின் சென்றாள். இம்மையில் இங்ஙனம் கற்புப் பூண்டு நிகழ்த்தும் இவ்வில்லறமே அறங்களில் தலையாய அறம். மறுமையிலும் இவர்கள் போகபூமிக்குச் செல்லும் வழியை இந்த அறம் அமைத்துக் கொடுக்கும் என்று அறிவுறுத்திய அந்தணர் தன் கருத்தினைச் செவிலி வாங்கிக்கொள்ளும்படி கூறும் மூன்று கருத்துக்களை மொழிந்தனர். அவற்றைப் பின்வரும் தாழிசைகளில் காணலாம்.

**1. பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்[கு] அல்லதை**
**மலையுளே பிறக்கினும் மலைக்[கு] அவைதாம்**
**என்செய்யும்?**
**நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்[கு]**
**அனையளே!**

**2. சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்[கு] அல்லதை**
**நீருளே பிறக்கினும் நீர்க்[கு]அவைதாம்**
**என்செய்யும்?**
**தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்[கு] அனையளே!**

**3. ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்[கு] அல்லதை**
**யாழுளே பிறக்கினும் யாழ்க்[கு] அவைதாம்**
**என்செய்யும்?**
**சூழுங்கால் நும்மகள் நமக்கும் ஆங்[கு] அனையளே!**
[9.12-20]

ஒருபொருள் மேல் மூன்றடுக்கி வந்த தாழிசைகள் இவை. ஒரு கருத்தினை மூன்று முறை வற்புறுத்துக்கூறும் சிறந்த மரபினை இத்தாழிசைகள் புலப்படுத்துகின்றன. எவ்வளவு அரிய, இனிய கவிதை! கருத்தாழம் மிக்க பாடல். சந்தனம் மலையில் பிறக்கும். முத்து கடலில் தோன்றும். இன்னிசை யாழில் பிறக்கும். சந்தனம், முத்து, இன்னிசை என்பன பிறந்த இடத்திற்குப் பயன் தருவதில்லை. இவை முறையே பூசிக் கொள்பவர் அணிந்துகொள்பவர், கேட்பவர் ஆகிய மற்றவர்க்கே பயன்தருவன. அவ்வாறே தலைவி பிறந்த இடத்திற்கு உரியவள் அல்லள். பிறனாகிய தலைவனுக்கே உரியவள் என்ற இனிய, விழுமிய கருத்தினை முக்கோல் அந்தணர் செவிலிக்குச் சொல்லுவதாக அமைந்த இப்பாடலைப் பெருங்கடுங்கோ அற்புதமாகப் பாடியுள்ளார்.

**IV.1.6. பரிபாடல்**

பரிபாடல் என்பது வெண்பா யாப்பின் வகைகளில் ஒன்று. **பரி-பரிதல், சுமத்தல்.** பலவகை உறுப்புக்களையும் நால்வகைப் பாக்களையும் தன்பாற் சுமந்து வருதலின் பரிபாடல் என்பது காரணக்குறியீடாகும். எருத்து, கொச்சகம், அராகம், சுரிதகம், சொற்சீரடி, முடுகியலடி என்ற உறுப்புக்கள் அனைத்துமோ பலவுமோ பெற்றுப் பாடப் பெறும் யாப்பு பரிபாடல் எனப்படும். காதல் பொருளைப் பாடுவதற்குரிய சிறந்த யாப்பாக கலிப்பாவையும் பரிபாடலையும் தொல்காப்பியர் பகர்ந்துள்ளார் [தொல். பொருள். 56]. ஆயினும் அவர் காலத்திற்குப்பின் இறை, மலை, யாறு, ஊர் என்பனவற்றைப் பாடவும் இந்த யாப்பு பயன்படுத்தப் பெற்றதை இளம்பூரணர் காட்டும் மேற்கோள் நூற்பா புலப்படுத்துகிறது.

தொடக்கத்தில் பரிபாடலில் 70 பாடல்கள் இருந்தன என்பது இறையனார் களவியல் உரையாலும் பேராசிரியரின் செய்யுளியல் உரையாலும் அறியலாம். **திருமாலுக்கு 8, செவ்வேளுக்கு 31, காடுகிழாளுக்கு 1, வையைக்கு 26, மதுரைக்கு 4** என்று 70 பரிபாடல்கள் பாடப்பெற்றன என்பதைப் பழம் பாடலினால் அறிகிறோம்.

இப்பொழுது நமக்கு முழுமையாகக் கிடைப்பன 22 பாடல்கள் ஆகும். இவற்றுள் 22 ஆம் பாடலில் சில அடிகள் இல்லை. இவற்றைப் பாடியவர் ஆசிரியர் **நல்லந்துவனார், கடுவன் இளவெயினனாரை** உள்ளிட்ட பதின்மூவர் ஆவர். இவற்றுக்கு இசைவகுத்தவர் **கண்ணகனார்** உள்ளிட்ட பதின்மர் ஆவர். இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோரின் உரைகளில் எடுத்துக்காட்டும் பரிபாடல்களும் அவற்றின்

உறுப்புக்கள் சிலவும், **புறத்திரட்டில்** நகர் என்னும் பகுதியில் காணப்படும் மதுரை பற்றிய வெண்பாக்கள் ஆறும் **பரிபாடல் திரட்டு** என்ற பெயரில் உ.வே.சா. பரிபாடலின் பின்னிணைப்பாகப் பதிப்பித்துள்ளார். இந்நூலிற்குப் பரிமேலழகர் எழுதிய உரை பயன் மிக்கது. இப்போது கிடைத்துள்ள பாடல்கள் திருமால் பற்றியவை 6, செவ்வேளைப் பாடியவை 8. வையை பற்றியவை 8 ஆக 22 பாக்களே மூல நூலின் தொடர்ச்சியாகக் கருதப்படுகின்றன.

பரிபாடல் இசைப்பாடல் என்பது **இன்னியல் மாண்தேர்ச்சி இசைபரிபாடல்** [*11.137*] என்று நல்லந்துவனார் குறிப்பதால் புலனாகும். ஒவ்வொரு பாடலின் கீழ் இசையமைத்தவர், பண் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. பண்ணினை அடிப்படையாகக் கொண்டு இவ்விலக்கியம் தொகுக்கப் பெற்றுள்ளது. *1* முதல் *12* வரையுள்ள பாடல்கள் **பாலைப் பண்ணுக்குரியவை**. *13-17* பாடல்களின் **பண் நோதிறம்**. *18-21* பாடல்களின் பண் காந்தாரம். *22* ஆம் பாட்டின் இறுதிப்பகுதி கிடைக்கவில்லை. ஆதலால் அப்பாடலின்பண் அறியக் கூடவில்லை.

பரிபாடலில் பண்டைத் தமிழரின் இறையியல், மெய்யியல், அகவாழ்வியல் கூறுகள் பாட்டுக்குப் பொருளாக அமைந்துள்ளன. பரிபாடற் புலவர்களில் சிலராவது வடமொழி மூல நூல்களைக் கற்றவராதல் வேண்டும். பரிபாடலில் **பூர்வமீமாம்சம்** [*2.61-68*], **சாங்கியம்** [*3.77-80; 13.14-29*], **யோகம்** [*4.1-3*], **உலகாயதம்** [*2.66*] முதலிய தத்துவங்களைப் பற்றிய குறிப்புக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. இவற்றைப் பற்றிய விரிவான செய்திகளை இந்நூலாசிரியர் எழுதியுள்ள **இந்தியத் தத்துவக் களஞ்சியம் மூன்று தொகுதிகளிலும்** (மெய்யப்பன் பதிப்பக வெளியீடு, சென்னை, *2003*) காணலாம். உலகத்தோற்றம் [Evolution of the World]பற்றிய அறிவியல் கருத்துக்களும் பரிபாடலில் பொதிந்துள்ளன [*2.1-15*].

கிடைத்துள்ள முழுமையான பரிபாடலின் பொருளாக விளங்கும் திருமால், செவ்வேள், வையை பற்றிப் புலவர்பாடியுள்ள பாக்களின் ஓரோர் பகுதியின் சிறப்பினைக் காண்போம்.

### IV.1.6.1. திருமால்

தொல்காப்பியர் முல்லை நிலத்துக் கடவுளாகக் குறித்துள்ள திருமால் நெறி சங்ககாலத்தில் பரவியிருந்தது. தமிழகத்துத் திருமால் நெறிக்கு மூலப்பொருளாகப் பரிபாடல் பாக்கள் உள்ளன. ஐவகைக் கோட்பாடுகளைக் கொண்ட திருமால் நெறியைப் **பாஞ்சராத்திரம்** என்பர் வைணவர். இந்நெறி தமிழர்க்குரியது என்று இந்தியத் தத்துவ வரலாற்றினை ஐந்து தொகுதிகளில் விரிவாக எழுதியுள்ள

பேராசிரியர் எஸ்.என்.தாஸ்குப்தா இயம்பியுள்ளார். [Vide, **History of Indian Philosophy**, Vol.III, p.19]. *1.* திருமாலின் முதன்மை [பரத்துவம்] *2.* முத்தொழில் புரிதற்குரிய நிலை [வியூகம்] *3.* தீயோரை அழித்து நல்லோரைக் காத்து அறத்தை நிலைநாட்டுதற்குரிய நிலை [அவதாரம்] *4.* ஒவ்வொரு பொருளிலும் உட்கலந்து இயக்கும் நிலை [அந்தர்யாமித்துவம்] *5.* கோயில் திருமேனி [அர்ச்சை] என்ற ஐந்து கோட்பாடுகளும் பரிபாடலில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. [*காண்க:* **சோ.ந.கந்தசாமி, பரிபாடலின் காலம்**, அபிராபி பதிப்பகம், அண்ணாமலை நகர், *1972,* ப.*43-57;* ப.*82-91*].

கடுவன் இளவெயினனார் திருமாலைப் பாடியுள்ள பாடலின் ஒரு பகுதியைக் காண்போம்:

***தீயினுள் தெறல் நீ! பூவினுள் நாற்றம் நீ!***
***கல்லினுள் மணியும் நீ! சொல்லினுள் வாய்மை நீ!***
***அறத்தினுள் அன்பு நீ! மறத்தினுள் மைந்து நீ!***
***வேதத்து மறை நீ! பூதத்து முதலும் நீ!***
***வெஞ்சுடர் ஒளியும் நீ! திங்களுள் அளியும் நீ!***
***அனைத்து நீ அனைத்தின்உட் பொருளும் நீ!*** [*3.63-68*]

இந்தப் பகுதியைப் படிக்கும்பொழுது ஒரு தமிழ் உபநிடதத்தினைப் படிக்கும் உணர்வு நமக்குத் தோன்றுவது இயல்பு. காணப்படும் ஒவ்வொரு பொருளிலும் காணமுடியாத உட்பொருளாய்க் கலந்து நின்று உலகினைத் திருமால் இயக்குகிறான். நெருப்பில் வெம்மையாகவும், மலரில் மணமாகவும், கற்களில் மணியாகவும், சொற்களில் வாய்மையாகவும், இறைவன் விளங்குகிறான். செய்யும் அறங்கள் அனைத்திலும் கலந்திருக்கும் அன்பாகவும், மறச்(வீரச்) செயல்களில் வலிமைப் பண்பாகவும் உள்ளான். வேதத்தில் மறைந்துள்ள உட்பொருளாகவும், ஐம்பூதங்கள் தோன்றுவதற்கு மூலமாகவும் [-முதல் பொருள்], கதிரவனில் ஒளியாகவும், திங்களில் குளிர்ப்பண்பாகவும் திகழ்கிறான். இங்குக் கூறப்படாத பொருள்கள் எல்லாம் அவனே. அவற்றின் உள்ளே மறைந்திருக்கும் நுண்பொருளும் அவனே என்ற விழுமிய மெய்யியல் கருத்தினை இப்பாடற் பகுதி புலப்படுத்துகிறது.

### IV.1.6.2. செவ்வேள்

குறிஞ்சி நிலக் கடவுளாகத் தொல்காப்பியர் சேயோனைக் குறித்துள்ளார். சிந்துவெளி நாகரிகம் முதலாகவே செவ்வேளின் வழிபாடு நிலவி வந்துள்ளது. திருமுருகாற்றுப்படையினைப் போலவே பரிபாடலும் முருகனை முழுமுதற் கடவுளாகப்

போற்றுதல் குறிப்பிடத்தக்கது. 3, 4 ஆம் பாடல்களில் திருமாலைப் பாடிய கடுவன் இளவெயினனாரே 5 ஆம் பாடலில் செவ்வேளைப் பரவுகின்றார். அக்காலத்துச் சமயக் காழ்ப்பு இல்லை என்பதற்கு இஃது ஒன்றே சிறந்த சான்றாகும். **நீயே வரம்பிற்று இவ்வுலகம்** [5.17] எனப் போற்றுகிறார். தீய நெஞ்சத்தில் சினத்தை வளர்ப்போரும், அறம்புரியாத சீரில்லாதவரும், தவம் இருந்து தப்பு செய்தவரும், மறுபிறப்பு இல்லை எனக் கூறும் மடவோரும் ஆகியோர் முருகனின் திருவடிநிழலை அடைய மாட்டார். செவ்வேளின் முழு முதன்மையினை ஏற்றுக் கொண்டோரும், அறம் ஓம்பியவரும், நிலைத்த பண்புடையவரும், சிறந்த தவத்தோரும் ஆகிய இவர்கள் அப்பெருமானின் திருவடி நிழலை அடைவர். அதனால், நுகரப்படும் பொருள்களும், அவற்றைப் பெறுவதற்குரிய பொன்னும், அவ்விரண்டாலும் நுகரும் நுகர்ச்சியும் முருகனிடம் வேண்டார். வீடு பயக்கும் அவன் **அருளும்**, அதனை உண்டாக்க அன்பர்கள் செலுத்தும் **அன்பும்**, இவ்விரண்டின் பயனாக வரும் **அறமும்** ஆகிய மூன்றையும் கடப்ப மாலையினை அணிந்த செவ்வேளிடம் அன்பர் இரந்து நிற்பர் எனப் பரிபாடல் பகர்கின்றது. இப்பாடலின் இறுதியடிகளைக் காண்போம்.

> **யாஅம் இரப்பவை**
> **பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்**
> **அருளும் அன்பும் அறனும் மூன்றும்**
> **உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே** [5.78-81]

உயர்ந்த வழிபாட்டு முறையினைப் பரிபாடல் உணர்த்துகிறது.

குன்றம்பூதனார் களவு, கற்பு என்ற இருவகை அகஒழுக்கங்களையும் கூறும் தமிழரின் பொருள் இலக்கணத்தின் சிறப்பினை நான்மறைப் புலவர்க்கு விளக்கும் பகுதி குறிப்பிடத்தக்கது [9.12-26].

### IV.1.6.3. வையை

வையையில் தைந்நீராடச் செல்லும் பல்வகை மக்களின் செயற்பாடுகளை நல்லந்துவனார் சிறப்பாகப் பாடியுள்ளார். அவர் படைத்துள்ள புனலாடற்காட்சிகளில் ஒன்றை மட்டும் நோக்குவோம்.

> **தண்டு தழுவாத் தாவுநீர் வையையுள்**
> **கண்ட பொழுதில் கடும்புனல் கைவாங்க**
> **நெஞ்சம் அவள்வாங்க நீடு புணைவாங்க**
> **நேரிழை நின்றுழி கண்ணிற்ப நீரவன்**

தாழ்வுழி உய்யாது தான்வேண்டு மாறுய்ப்ப
ஆயத் துடன்நில்லாள் ஆங்கவன் பின் தொடரூஉத்
தாயத் திறமறியாள் தாங்கித் தனிச்சேறல்
ஆயத்தில் கூ(டு) என்(று) அரற்று எடுப்பத் தாக்கிற்றே
சேயுற்ற கார்நீர் வரவு. [11.106.114]

ஒருவன் வாழைத் தண்டினைப் புணையாகப் பற்றிப் புனலாடும் பொழுது ஒருத்தியைக் கண்டான். கண்டபொழுதில் அவன் நெஞ்சினை அவள் இழுக்க, கடும்புனலோ அவன் கையினை இழுக்க, புணையோ தன்னை நெடுந்தூரம் கொண்டு செல்ல, அவன் நின்ற இடத்தில் புனல் அவனைக் கொண்டு செல்லாது, அதனைக்கண்ட அவளோ அவன்பின் தொடர்ந்து செல்ல, தாயோ அவ்விருவரின் அன்புடைமையினை அறியாமல், தனித்தோடுவதை விலக்குவதால் அவள் அரற்றும்படியாக, கார்ப்பருவத்துச் சிவப்புநீர் வந்தது. இயல்புடன் பொருந்திய இனிய புனலாடற் காட்சியை உணர்ச்சியும் கற்பனையும் கலந்த மொழிநடையில் நல்லந்துவனார் பாடியிருத்தலைப் பயிலும்தொறும் இன்பம் பயத்தல் காணலாம்.

எனவே, பரிபாடலில் காதலரும் இடம்பெறுகின்றனர். கடவுளரும் இடம்பெறுகின்றனர். **உலகாயதமும் ஆன்மீகமும் கலக்கும் கலவையாகப் பரிபாடல் திகழ்கிறது** [Materialism and Spiritualism are coupled with each other].

### IV.1.7. பதிற்றுப்பத்து

பத்து + இற்று + பத்து → பதிற்றுப்பத்து என்றாயிற்று. /இற்று/ சாரியை. சேரவேந்தர் பதின்மரைப் பத்துப்பத்துப் பாடல்களினால் பாடப்பெற்ற பனுவலுக்குப் **பதிற்றுப்பத்து** என்பது பெயராயிற்று. ஆதியும் அந்தமும் மறைந்தன. இடையில் உள்ள எட்டுப்பத்துக்களில் இரண்டாம் பத்துக்குரிய வேந்தன் **இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன்** ஆவான். இவனைப் பாடியவர் **குமட்டூர் கண்ணனார்**. மூன்றாம் பத்தின் தலைவன் அவ்வேந்தனின் இளவலாகிய **பல்யானைச் செல்கெழு குட்டுவன்**. இவனைப் பாடிய புலவர் **பாலைக் கௌதமனார்**. நான்காம் பத்து, **களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார்** பாடியது. **கடல்பிறக்கு ஓட்டிய செங்குட்டுவனைப் பரணர்** பாடியது ஐந்தாம் பத்தாகும். ஆறாம் பத்தின் தலைவன் **ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்**. இவனைப் பாடியவர் **காக்கைபாடினியார் நச்செள்ளையார்**. **கபிலர் செல்வக்கடுங்கோ வாழியாதனை** ஏழாம்பத்தில் பாடியுள்ளார். எட்டாம் பத்தின் தலைவன் **தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை**. இவனை **அரிசில் கிழார்**

பாடினார். ஒன்பதாம் பத்துக்குரியவன் ஆகிய குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையினைப் பெருங்குன்றூர்கிழார் பாடியுள்ளார்.

ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் அப்பாட்டிற்குரிய துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பன பொறிக்கப்பெற்றுள்ளன. பாடலில் பயின்றுள்ள அருந்தொடர் அதன் பெயராக அமைந்துள்ளது. ஒவ்வொரு பத்தின் முடிவிலும் ஒரு பதிகம் மெய்க்கீர்த்தி நடையில் இடம்பெற்றுள்ளது. இதனைப் பாடியவர் பெயர் அறியப்படவில்லை. பத்துப்பாடலின் சாரத்தைப் பிழிந்து தருவதுடன் பாடிப் புலவர் பெற்ற பரிசிலும். சேர அரசன் ஆட்சிபுரிந்த ஆண்டின் தொகையும் பதிகத்திலும் அதனைச் சார்ந்த உரைநடைப்பகுதியிலும் சுட்டப்பெற்றன. பதிகத்தினை மெய்க்கீர்த்தியின் முன்னோடியாக வரலாற்றறிஞர்கள் கருதுவர். இந்நூலிற்குப் பழைய உரை உண்டு.

சேரநாட்டின் தலைநகராகிய கருவூர்க்கு அண்மையில் புகலூரில் பொறிக்கப்பெற்றுள்ள தமிழ்-பிராமி கல்வெட்டுக்கள் இரண்டிலும் [கி.பி. 150] சுட்டப்பெறும் ஆதன்செல்லிரும்பொறை, பெருங்கடுங்கோன், கடுங்கோன் என்ற சேரவேந்தர் மூவரும் முறையே பதிற்றுப்பத்து அரசர்களாகிய செல்வக்கடுங்கோ வாழியாதன், பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆகிய மூவரும் ஆவர் என்று ஆர்.பன்னீர்செல்வம், ஐராவதம் மகாதேவன் ஆகியோர் கருதினர்.

### IV.1.7.1. பதிற்றுப்பத்தில் விழுமியங்கள்

சேரரின் வரலாற்று இலக்கியமாகத் திகழும் பதிற்றுப்பத்தில் காணப்படும் அரிய சிந்தனைகள் சிலவற்றை இங்குத் தொகுத்துக் காண்போம்.

1. நின், பலர் புகழ் செல்வம் இனிதுகண் டிகுமே — 11.20
2. கேட்டற்கு இனிதுநின் செல்வம் — 12.9
3. நுகர்தற்கு இனிதுநின் பெருங்கலி மகிழ்வே — 12.25
4. குடிபுறந் தருநர் பாரம் ஓம்பி
   அழல்சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது
   மழைவேண்டு புலத்து மாரி நிற்ப
   நோயொடு பசிஇகந்து ஒரீஇப்
   பூத்தன்று பெரும! நீ காத்த நாளே — 13. 24-28
5. நிலம் நீர வளிவிசும்பு என்ற நான்கின்
   அளப்பு அரியையே — 14.1-2

6. நாள்கோள் திங்கள் ஞாயிறு கனை அழல்
ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத்[து] அனையை
14.3-4

7. மாரி பொய்க்குவ தாயினும்
சேர லாதன் பொய்யலன் நசையே 18.11-12

8. பிறர்பிறர் நலியாது வேற்றுப்பொருள் வெஃகாது
மையில் அறிவினர் செவ்விதின் நடந்து 22.7-8

9. தொல்நிலைச் சிறப்பின் நின்னிழல் வாழ்நர்க்குக்
கோடற வைத்த கோடாக் கொள்கையும் 37.10-11

10. அட்டு ஆனானே குட்டுவன்; அடுதொறும்
பெற்று ஆனாரே பரிசிலர் களிறே 47.1-2

11. அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்
பெருங்கலி வங்கம் திசைதிரிந் தாங்கு 52.3-4

12. ஆன்றோர் கணவ! சான்றோர் புரவல 55.1

13. ஓங்கல் உள்ளத்துக் குருசில்! 55.21

14. பாடுசால் நான்கலம் தருஉம்
நாடு புறந்தருதல் நினக்குமார் கடனே 59.18-19

15. ஈத்தது இரங்கான்; ஈத்தொறும் மகிழான்;
ஈத்தொறும் மாவள்ளியன் 61.12-13

16. மழையினும் பெரும்பயம் பொழிதி 64.18

17. புரையோள் கணவ! பூண்கிளர் மார்ப! 70.16

18. வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவம் உடையோர்க்கு 74.25-26

19. பெரியோர்ப் பேணிச் சிறியோரை அளித்தி 79.3

20. சான்றோர்,
வண்மையும் செம்மையும் சால்பும் மறனும்
புகன்று புகழ்ந்து அசையா நல்லிசை
நிலம்தரு திருவின் நெடியோய்! 82.13-16

21. ஈரம் உடைமையின் நீர் ஓரனையை
அளப்பருமையின் இருவிசும்பு அனையை
கொளக்குறை படாமையின் முந்நீர் அனையை
80.14-16

வரலாற்று இலக்கியங்களைப் பாடிய புலவர்களும் வாழ்வியல் மேம்பாட்டுக் கருத்துக்களைப் போதிய அளவு

போதித்துள்ளனர் என்பது மேலே காட்ட ப்பெற்ற பகுதிகளால் தெளிவாகும். சேரவேந்தர் ஒருவரின் சிறப்புக் கூறும் பாடலின் பொருண்மையைக் காண்போம்.

### IV.1.7.2. பெருஞ்சேரலிரும்பொறையின் சிறப்பு

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் வெற்றிச் சிறப்பினை **அரிசில்கிழார்** பாடியுள்ளார். ஒரு பாடலின் [73] சிறப்பினை நோக்குவோம்.

அறிவுடையோர், மடவோர் ஆகிய இருபகுதியினரும் பெருஞ்சேரல் இடும்பொறைக்கு உவமைகூற எண்ணின் உவமையாகக் கூறத் தக்கார் ஒருவரும் இலர். **'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை'** என்பது தொல்காப்பியரின் வரையறை. நீ மற்றவர்க்கு உவமாகக் கூறத்தக்கவன் [தன்னேரில்லாத தலைவன்]. மருதவயலில் நாரைகளை விரட்டும் மகளிர் இரவும் பகலும் தாம் அணிந்துள்ள அணிகலன்களைக் களையமாட்டார். குரவைக் கூத்தாடி மகிழும் காவிரியால் வளம்மிக்க புகார் நகரத்தின் செல்வனே! பூழி நாட்டினர்க்குக் கவசம் போன்றவனே! மேகம் தவழும் கொல்லி மலைக்குத் தலைவனே! கொடி உயர்த்திய தேர்களையுடைய பொறையனே! நின்னுடைய செல்வமும் வீரமும் ஈகையும் மக்களின் ஆராய்ச்சி எல்லையைக் கடந்தவை என்று பலநாள் சென்று கூறவும் நின்பகைவர் தெளியார். சான்றோர் பிறரைக் கொண்டு அறிவுறுத்தியும் அவர் மதிமயங்கியே இருந்தனர். யாங்ஙனம் அவர்க்கு உரைப்பது என்று யானும் வருந்துகிறேன். இவ்வாறு புலவர் சேரனின் சிறப்பினைப் பாடினார்.

இச்சேரவேந்தன் சோழநாட்டினையும் வென்றவன் என்பது **புகாஅர்ச் செல்வ** [73.97] என்பதால் பெறப்பட்டது. பாண்டிய நாட்டிற்குப் **பூழி** என்பது ஒருபெயர். **பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன்** எனவரும் பாடல் காண்க. ஆதலின், பூழியர் மெய்ம்மறை [73.9] எனப்போற்றினார் புலவர். மெய்ம்மறை என்பது கவசம். எனவே, பாண்டியநாட்டாரைக் காத்த பெருமை இச்சேரலுக்கு உண்டு என்பது தெளிவு. கற்பனை வளத்துடன் வரலாற்றுச் செய்திகளைப் பதிற்றுப்பத்து கூறுவதாகக் கொள்ளலாம்.

### IV.1.8. புறநானூறு

புறம், புறப்பாட்டு என்பது புறநானூற்றின் வேறு பெயர்கள். இந்நூலின் 267, 268 ஆம் பாடல்கள் கிடைக்கவில்லை. ஒருசில பாடல்களின் சீர், அடிகளும், பிறகுறிப்புகளும் சிதைந்தன. தொல்காப்பியர் புறத்திணையினை ஏழென்று வகுத்தார். ஆனால்,

இந்நூலின் பாடல்களுக்குரிய திணை, துறை பெரும்பாலும் பன்னிருபடலம், புறப் பொருள் வெண்பாமாலை வழி நின்று வகுக்கப்பெற்றன.

முதல் பாடல் கடவுள் வாழ்த்து. பின்னர் இடம்பெறும் 2-86 பாக்கள் சேர, பாண்டிய, சோழர் என்ற வரிசையில் முடியுடைய மூவேந்தரைப் பற்றியவை. 87-181 பாக்கள் வள்ளல்கள், வேளிர், குறுநிலத்தலைவர்களைப் பற்றிப் பாடப்பெற்றவை. 182-195 பாக்கள் பொருள் மொழிக்காஞ்சியாக அமைந்து நீதிகளைப் போதிப்பன. 196-211 பரிசில் நீட்டித்தல் முதலிய பல துறைகளைச் சார்ந்தவை. 212-270 பாக்கள் கையறுநிலையாகும். 270-335 பாக்கள் உண்டாட்டு, செருமலைதல், குதிரைமறம் போன்ற துறைகளில் அமைந்தவை. 336-354 பாக்கள் மகட்பாற்காஞ்சியாகும். 355-6 காடுவாழ்த்து. 357-400 பல பொருளில் வந்தவை. இது ஒரு பொது வரையறை. இந்நூலுக்குப் பழைய உரை 266 பாடல்கள்வரை கிடைத்துள்ளது.

புறநானூற்றுப் பாடல்களில் சில கி.மு.500 க்கு முற்பட்டவையாகத் தோன்றுகின்றன. பாரதப்போரில் உணவு வழங்கிய சேரமான் பெருஞ்சோற்றுதியஞ்சேரலாதனைப் பற்றிய பாடல் [2] முதற்சங்கத்தின் புலவர் முரஞ்சியூர் முடிநாகராயரால் பாடப்பட்டது. பஃறுளியாறு கடலால் விழுங்கப்படாமல் ஓடிக்கொண்டிருந்த காலத்தில் பாடப்பட்ட பாடல் [9] தொன்மைமிக்கது. மோரியரைப் பற்றி ஒருபாடல் குறிக்கிறது [175.6-8]

சங்ககாலத் தமிழ்மக்களின் சமுதாய அமைப்பு, பொருள் வளம், அரசியல், ஆட்சி, கலைவளம், அயலார் தொடர்பு, நம்பிக்கைகள், பண்பாடு, நாகரிகம் முதலிய பலவற்றையும் தெரிந்துகொள்ளுவதற்குரிய வரலாற்று ஆவணமாகப் புறநானூறு திகழ்கிறது. இந்நூலில் புலவர்கள் பொறித்துள்ள சீரிய சிந்தனைகளையும் தகவுகளையும் ஒருவாறு காண்போம்.

### IV.1.8.1. சீரிய சிந்தனைகள்

1. நிலம்பெயரினும் நின்சொற் பெயரல் — 3.14
2. காவல், குழவி கொள்பவரின் ஓம்புமதி — 5.6-7
3. செய்திரங்கா வினைச் சேண்விளங்கும் புகழ் — 10.11
4. நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
   தட்டோர் அம்ம இவண்தட் டோரே — 18.28-29
5. தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்
   மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்

அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கள் புத்தேள் திரிதரும் உலகத்து 27.11-14

6. அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெரும! நின் செல்வம் 28.15-16

7. விழவிற்,
கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியும்இவ் வுலகத்து 29.23-24

8. மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம் 35.27-29

9. ஒருபிடி படியும் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே 40.10-11

10. விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும் 53.6

11. அடுதீ அல்லது சுடுதீ அறியா[து]
இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன் 70.8-9

12. உண்டாயிற் பதம் கொடுத்தும்
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன் 95.6-8

13. வாழ்தல் வேண்டிப்
பொய்கூறேன் மெய்கூறுவல் 139.5-6

14. செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றெம் சிறுசெந் நாவே 148.6-7

15. வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே 163.7-8

16. பசிப்பிணி மருத்துவன் இல்லம் 173.11

17. என், நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே 175.1-2

18. புகழெனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் 182.5-6

19. மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் 186.2

20. எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே! 187.3-4

21. உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே 189.5-6

22. யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா 192.1-2

23. இன்னா தம்மஇவ் வுலகம்
இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே 194.6-7

24. நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் 195.6-7

25. எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே 206.13

26. பெரிதே உலகம் பேணுநர் பலரே 207.7

27. உயர்ந்த வேட்டத்து உயய்ந்திசினோர்... 214.6

28. சான்றோர் சான்றோர் பாலர் ஆப 218.5-6

29. புலிபார்த்து ஒற்றிய களிற்றிரை பிழைப்பின்
எலிபார்த்து ஒற்றா தாகும் 237.16-17

30. பிறரைத்தான் இரப்பறியலன்
இரந்தோர்க்கு மறுப்பறியலன் 239.8-9

இங்ஙனம் வரும் பொன்மொழிக் குவியல்கள் மேலும் பல உள்ளன. இவையாவும் ஆன்றோரின் அனுபவமொழிகள். காலம் கடந்தும் வழிகாட்டும் நல்லுரைகள். மனித குலத்துக்குப் பொதுவானவை.

இனி, புறநானூற்றுப் பாடல் ஒன்றின் [243] பொருண் மொழியினைக் காண்போம்.

### IV.1.8.2. இளமையினை எண்ணுதல்

முதிர்ந்த வயதில் ஒரு புலவர் இளமைக் காலத்து வாழ்வினை எண்ணிப்பார்க்கிறார். கடந்த காலத்து நினைவுகளை அசைபோடுகிறார். அதில் ஒரு தனிச் சுவை, ஏக்கமும் கூட!

இப்பொழுது எண்ணிப் பார்த்தால் இரக்கம் உண்டாகிறது. மணலில் செய்யப்பட்ட வண்டற் பாவைக்குப்பூவைப் பறித்துச் சூட்டி, பொய்கையில் புனலாடும் மகளிரொடு கைகோத்து, அவர் தழுவிய வழித் தழுவி, அசைந்தவிடத்து அசைந்து வஞ்சனை இல்லாத ஆயத்தாருடன் கூடி மருதமரங்கள் உள்ள நீர்த்துறையில் வந்து அம்மரத்தின் படிகொம்பில் ஏறி ஆழமான மடுவில் துடும் என்று பாய்ந்து, மூழ்கி மணலை மேலே எடுத்துக்காட்டிய கல்லாத இளமைக் காலம் இரங்கத்தக்கது. பூண் செறிந்த உச்சியையுடைய விழுமிய தண்டுக்கோலை ஊன்றி முதுமைகாரணமாக நடுங்கி, இருமல் இடையே நெருங்கின சில சொற்களை மட்டுமே பேசக்கூடிய பெரிய முதுமையுடையேம் ஆகிய எமக்கு **அவ்விளமை எவ்விடத்து உள்ளதோ!** [243].

இப்பாடலைப் பாடியவர் பெயர் தெரியவில்லை. ஆயினும் இதனுள் வரும் **தொடித்தலை விழுத்தண்டு** என்ற தொடர் சிறப்பாக

இருப்பதால் இப்புலவர்க்குத் தொடித்தலை விழுத்தண்டினார் என்று தொகுத்தவர் பெயர் சூட்டியிருத்தல் வேண்டும்.

### IV.1.8.3. கருத்துரை

எட்டுத்தொகை இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள நூல்களைப் பொருண்மை அடிப்படையில் வரிசைப்படுத்தி ஆராய்ந்தோம். காதலைப் பற்றியவை ஐந்து இலக்கியங்கள். காதலுடன் கடவுளைப் பற்றியது ஓரிலக்கியம் [பரிபாடல்]. வரலாற்றுக் கூறுகளும் சமுதாய, பண்பாட்டுக் கூறுகளுமாகிய புறப்பொருளைப் பற்றியவை பதிற்றுப்பத்தும் புறநானூறும். இந்த எட்டுத்தொகைகளின் அடிக்கருத்துக்களும், வாழ்வியல் விழுமியங்களும் புலவரின் மேம்பட்ட உளப்பாங்கும் தெள்ளிதிற் புலனாதல் காணலாம்.

## V. இறையனார் களவியல்

இறையனார் என்ற பெயரினர் குறுந்தொகையில் **கொங்குதேர் வாழ்க்கை** என்ற பாடலைப் பாடியவர். அவரே களவியலை எழுதியிருத்தல் கூடும். நூலாசிரியர் பெயரொடு சேர்த்து **இறையனார் களவியல்** என்பது இந்நூல் வழங்குகின்றது. ஆலவாயில் அவிர்சடைக்கடவுளாகிய இறைவனே இந்நூலினை இயற்றினான் என்று புராணம் செய்தவர்கள் கற்பித்துவிட்டனர். இந்நூலிற்குத் தெய்வத்தன்மை கற்பிக்கவே இதனை இறைவன் செய்ததாகக் கூறியுள்ளனர் என்று கொள்ளுதல் வேண்டும். திருவள்ளுவர்க்குரிய பத்துப்பெயர்களின் இறையனார் என்பதும் ஒன்றாகும். தெய்வப்புலமை படைத்தவர் என்பதால் இவ்வாறு பெயர்சூட்டிப் புலவர் போற்றினராதல் வேண்டும்.

எனவே, **இறையனார் களவியல் கடைச்சங்க இலக்கண நூலாகக் கருதுவதற்கு உரியது**. இதற்கு முதல் உரைகண்டவர் நக்கீரர் என்ற மரபுச் செய்தியும் நம் கருத்திற்கு அரண்செய்கிறது. **தொல்காப்பியப் பொருளதிகாரத்தைக் கற்பதற்கு இந்நூல் ஒரு கையேடாகத் துணை நிற்பது**. இந்நூலாசிரியர் தொல்காப்பியத்தினைப் படித்தவர் என்பதற்கு அந்நூலின் நூற்பாக்களைத் தம் நூலில் எடுத்தாளுதலே சான்றாகும். ஒருசில எடுத்துக்காட்டுக்களைக் காண்போம். முதலில் தொல்காப்பிய நூற்பாவும் தொடர்ந்து அதற்கு ஒத்த இறையனார் களவியல் நூற்பாவும் கீழே தரப்படுகின்றன.

1. குறியெனப் படுவது இரவினும் பகலினும்
அறியக் கிளந்த ஆற்றது என்ப. தொல்.பொருள்.128
குறியெப் படுவது இரவினும் பகலினும்
அறியக் கிளந்த இடம்என மொழிப. இறை.கள.18

2. அம்பலும் அலரும் களவு.... தொல்.பொருள்.137
அம்பலும் அலரும் களவு.... இறை.கள.22

3. .....கிழவோற் சேர்தல் கிழத்திக்கு இல்லை.
தொல்.பொருள்.
கிழவோற் சேர்தல் கிழத்திக்கு இல்லை. இறை.கள.21

4. வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று
ஆயிரண் டென்ப வரைதல் ஆறே தொல்.பொருள்.138
களவு வெளிப்படா முன்னுற வரைதல்
களவு வெளிப்பட்ட பின்றை வரைதல்
ஆயிரண் டென்ப வரைதல் ஆறே இறை.கள.24

5. வரைதல் வேட்கைப் பொருள என்ப தொல்.பொருள்.
வரைதல் வேட்கைப் பொருள என்ப இறை.கள.30

6. பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான. தொல்.பொருள்.185
ஒப்பு: இறை.கள.43

7. கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே
தொல்.சொல்.117,286
கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே
இறை.கள.59

எனவே, இறையனார் களவியல் ஆசிரியர் தொல்காப்பிய நூற்பாக்களைப் பொன்னேபோல் போற்றியுள்ளமை போதரும்.

இந்நூலிற்குக் **களவியல்** என்பதுவே பழைய பெயர் என்பதற்குப் பேராசிரியர் உரை சான்றாகும் [தொல்.பொருள். 649]. இந்நூலாசிரியர் பெயருடன் சேர்த்து, இந்நூல் **இறையனார் களவியல்** என்று வழங்கப்படுகின்றது. **இறையனார் அகப்பொருள்** என்றும் வழங்குவர். அறுபது நூற்பாக்களைக் கொண்ட இந்நூல் 1. **களவியல்** 2. **கற்பியல்** என்ற இரண்டியல்களை உடையது. களவியல் 33 நூற்பாக்களையும் கற்பியல் 27 நூற்பாக்களையும் கொண்டது. தமிழரின் அகவாழ்வியலில் களவியல் சிறப்புறுதலானும், களவினின்றும் கற்பியல் வளர்ச்சி பெறுவதாலும், தலைமை பற்றி **இறையனார் களவியல்** எனப் பெயர் சூட்டினார் என்க. இந்நூல் பழைய அகத்திணை மரபுகளைச் சுருக்கிக் கூறுகிறது. **இந்நூலிற்கு அமைந்த உரை செம்மாந்தநடை பயில்வது.** கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் மதுரையில் ஆட்சிபுரிந்த **நின்றசீர் நெடுமாறனைப்** பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட **பாண்டிக்கோவையின்** பாக்கள் அகமாந்தரின் கிளவி விளக்கத்திற்கு உரையில் மேற்கோள் காட்டப்பெறுதலின், இவ்வுரை கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் இறுதி வடிவம் பெற்றிருத்தல் வேண்டும். முச்சங்கங்களைப் பற்றிய வரலாறும், களவியல் பாடப்பெற்ற வரலாறும் உரையில் கூறப்பட்டுன. இவை கற்பனை கலந்த உண்மைச்செய்திகள் என்பது சுட்டத்தக்கது.

# VI. பதினெண்கீழ்க்கணக்கு

**கணக்கு** என்ற சொல்லிற்கு **நூல்** எழுதுபொருள். **கணக்காயர்** என்ற சொல் நூலைக் கற்பிக்கும் **ஆசிரியரைக்** குறிக்கும். **சமயக் கணக்கு - சமய நூல்; சமயக்கணக்கர் - சமய நூல் வல்லவர்.** பழமொழி நானூற்றில் **கணக்கு-நூல்** என்ற பொருளில் வந்துள்ளது [*61*]. அப்பரடிகள், **எழுதும் கீழ்க்கணக்கு** [V 21.8] என்று தேவாரத்தில் குறித்துள்ளார். இங்குக் கீழ்க்கணக்கு என்ற சொல் சிறுகணக்கு, கையேடு எனப் பொருள்தரும். அடிநிமிர்வு இல்லாத வெண்பாக்களினால் அறம், பொருள், இன்பம் குறித்துப் பாடப்பெறுவது **கீழ்க்கணக்கு** என்று பன்னிருபாட்டியல் [கி.பி. *1100*]இலக்கணம் கூறுகிறது [நூ.*348*]. அகவல், கலிப்பா, பரிபாடல் என்ற யாப்பில் *50* முதல் *500* முடியப் பாடப்பெற்ற பாக்களின் தொகை **மேற்கணக்கு** எனப்படும் என்று அதேபாட்டியல் பகர்கிறது [நூ.*346*]. பதினெட்டு நூல்களைக் கொண்ட பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் மேற்கணக்கு என்று எண்ணப் பெற்றன. கி.பி. *13* ஆம் நூற்றாண்டினராகிய பேராசிரியர், தொல்காப்பியம் கூறும் **அம்மை** எனும் வனப்பிற்கு ஏற்ற எடுத்துக்காட்டாகப் பதினெண்கீழ்க்கணக்கினைக் குறித்துள்ளார். மயிலைநாதரின் உரையிலும் [நன்னூல், *387*] இத்தொகை இலக்கியம் குறிக்கப்பெற்றுள்ளது.

பதினெண் கீழ்க்கணக்கினை, **நாலடி நான்மணி நானாற்பது** எனத் தொடங்கும் வெண்பா தொகுத்துக் கூறுகிறது. கால வரிசையில் நூல்கள் கூறப்படவில்லை. வெண்பா யாப்பு கெடாமல் பாடும் நோக்கத்தில் இதனைப் பாடியவர் பழைய நூலினைப் பின்னும், பின்னர் எழுந்த நூலினை முன்னுமாக வைத்துப் பாடியுள்ளார் எனத் தோன்றுகிறது. இத்தொகைக்குரிய நூல்கள் வருமாறு: **1. நாலடியார் 2. நான்மணிக்கடிகை 3. இன்னாநாற்பது 4. இனியவை நாற்பது 5. கார்நாற்பது 6.களவழிநாற்பது 7.ஐந்திணை ஐம்பது 8.ஐந்திணை எழுபது 9. திணைமொழி ஐம்பது 10. திணைமாலை நூற்றைம்பது 11. முப்பால் [திருக்குறள்] 12. திரிகடுகம் 13. ஆசாரக்கோவை 14. பழமொழிநானூறு 15. சிறுபஞ்சமூலம் 16. முதுமொழிக்காஞ்சி 17. ஏலாதி 18. கைந்நிலை** என்பனவாகும். இவற்றுள் அடங்கியுள்ள பாக்கள் *3250*. ஒருசில கிடைக்கவில்லை.

பதினெண் கீழ்க்கணக்கில் **அறநூல்கள் 11** ஆகும். **புறநூல் 1 அகத்திணை நூல்கள் 6**. இவற்றுள் முதற்கண் அறநூல்களைப் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

## VI.1. அறநூல்களின் காலம்

கால அடிப்படையில் நோக்கில் **முப்பால்** எனப்படும் திருக்குறள் முற்பட்டது. அறநூல்களைத் தொகுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் காலத்தொன்மை வாய்ந்த திருக்குறளையும் கீழ்க்கணக்கில் சேர்த்துவிட்டனர். **சங்க இலக்கியத்தினைச் சான்றோர் செய்யுள் எனக் குறிக்கும் இளம்பூரணர் திருக்குறளையும் அப்பெயரினால் குறித்துள்ளார்** *(தொல்.பொருள்.151).*

சங்க இலக்கியங்கள் பலவற்றில் திருக்குறள் கருத்துக்கள், தொடர்கள் வருவதால் திருக்குறளை அவற்றுக்கு முற்பட்டதாகவோ, உடன் காலத்ததாகவோ கருதுதல் முறையாகும். திருக்குறளின் காலம் கி.மு.50 கி.பி.50 என்று ஆராய்ந்து முடிவு செய்யப்பெற்றது. (காண்க: **சோ.ந.கந்தசாமி, திருக்குறள் கூறும் உறுதிப்பொருள்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2002, ப.11-35). கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் இறுதியில் சமணராக வாழ்ந்த அப்பரடிகள் நாலடியாரைப் படித்துச் சில கருத்துக்களை ஆண்டுள்ளார். (காண்க: **சோ.ந.கந்தசாமி, உலகத்தமிழிலக்கிய வரலாறு II,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004, ப.24-25). எனவே, அப்பர் காலத்திற்கும் நாலடியார் முற்பட்டது. முத்தரையர் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு முதலாகவே அறியப்படுகிறார் என்று அண்மைக்கால ஆய்வுகள் குறிப்பதால் முத்தரையரைச் சுட்டும் நாலடியார் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது அன்று. கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் மதுரையில் வச்சிர நந்தி தமிழ்ச்சங்கத்தை வளர்த்தார். **மதுரையில் இருந்த சமணச் சான்றோர் பாடியவை நாலடியார் பாக்கள்.** ஆதலால், கி.பி. 5 ஆம் நூற்றாண்டளவில் இவை பாடப்பட்டிருத்தல் வேண்டும். ஏனைய அறநூல்களில் முதுமொழிக்காஞ்சியைப் பாடிய மதுரைக் கூடலூர்க்கிழாரும் சங்ககாலத்துக் கூடலூர்கிழாரும் ஒருவராகவே எண்ணப் பெறுவதால் அதன் காலம் கி.பி. முதலிரு நூற்றாண்டிற்குள் அமையும். எஞ்சிய அறநூல்கள் கி.பி. 400 - கி.பி. 600 என்ற கால எல்லையில் தோன்றியவை. கி.பி. 6 ஆம் நூற்றாண்டு முதல் திருமுறைகளும் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தமும் பாடிய அருளாளர்கள் வாழ்ந்துள்ளனர். ஆகையால் அறநூல்களைப் பாடிய புலவர்கள் கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முன்பும் வாழ்ந்தவராகக் கொள்ளுதல் ஆய்வியல் நெறிக்கு ஒத்ததாகும். இனி, அறநூல்களில் தலையாயதாகத் திகழும் திருக்குறளைக் குறித்துச் சுருக்கமாகக் காண்போம்.

### VI.1.1. திருக்குறள்

**தமிழிலக்கிய வானில் திருக்குறள் ஒரு கதிரவனாகக் காட்சி தருகிறது.** திருக்குறளின் தோற்றம் தமிழர்தம் வாழ்வியல்,

கருத்தியல், அரசியல், பண்பாட்டியல், மெய்யியல், இலக்கியவியல் முதலிய பல துறைகளிலும் ஒரு திருப்பத்தையும் மாற்றத்தையும் உருவாக்கியுள்ளது. இப்பெரு நூலை வழங்கிய திருவள்ளுவரின் திட்டமிட்ட வாழ்க்கையும், தெளிந்த சிந்தனையும், பல்துறைப் புலமையும், உலகியலறிவும், பழுத்தபட்டறிவும் நுண்மாண் நுழைபுலமும் இப்பெரு நூலின் ஆக்கத்திற்கு அடிப்படையாயின எனலாம். தம் வாழ்நாள் முழுவதும் சமூக நிறுவனங்களாகிய (Social Instituitions) குடும்பம், கல்வி நிலையம், அறவியலமைப்புக்கள், அரசியலமைப்பு முதலியவற்றைக் குறிக்கோளியல் நோக்கில் அமைக்க விரும்பியவர் திருவள்ளுவர்.

தனி மனிதர்களைச் செம்மையுறச் செய்வதன் வாயிலாகவே சமுதாயத்தை மேம்படுத்த முடியும் என்று எண்ணியவர். தனிமனிதனும் சமுதாயமும் செம்மையுறுவதற்கு நல்லாட்சியின் தேவையினை நன்குணர்ந்தவர். நாட்டின் தலைவராகத் திகழ்பவர்க்கு உரிய தகுதிகளையும் பண்புகளையும் வரையறை செய்தவர். அமைச்சர் உள்ளிட்ட அலுவலர்களின் தகுதிகளையும் கடமைகளையும் பொறுப்புக்களையும் வகுத்துக் கூறியவர். குடிமக்களின் பண்பு நலன்களையும் தகவுகளையும் எடுத்து இயம்பியர். தனிமனிதன், சமுதாய மனிதன், ஆன்மீக மனிதன், அரசியல் மனிதன் என்ற பல திறப்பட்ட மக்களுக்குப் போதிக்க வேண்டிய அறங்களையும் நெறிகளையும் நல்லுரைகளையும் திட்பமும் நுட்பமும் செறிந்த ஆற்றல் மிக்க குறள் பாக்களில் பத்துப்பத்தாக வழங்கியுள்ள திறம் எண்ணும் தொறும் இன்பம் பயப்பது. யாவர்க்கும் பொதுவாக ஏற்கத்தக்க கருத்துக்களைக் கொண்ட திருக்குறள் **பொதுமறை** எனப் போற்றப்படுகிறது.

### VI.1.1.1. திருக்குறளின் அமைப்பியல்

அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்று முப்பாலாகத் திருக்குறளினை அமைத்துள்ளார். இதனுள் 133 அதிகாரங்களும் 1330 குறள் வெண்பாக்களும் அடங்கியுள்ளன. **கவி கூற்றாய அதிகாரத்து** என்று பரிமேலழகர் **அவர்வயின் விதும்பல்** என்னும் அதிகாரத்தின் அவதாரிகையில் குறிப்பிடுவதால் அதிகார அமைப்புக்கள் யாவும் திருவள்ளுவர் செய்தவை ஆகும்.

எல்லாவற்றுக்கும் மூலமாகவும் முதலாகவும் ஒரு பொருள் இருத்தல் வேண்டும் என்பதை ஒத்துக் கொண்ட திருவள்ளுவர் **கடவுள் வாழ்த்தில் நூலைத் தொடங்குகிறார்**. உலகியல் வாழ்வுக்கு மழை வேண்டப்படுதலின் **வான் சிறப்புக்** கூறினார். சமுதாய நலத்திற்காக உலக வாழ்வினைத் துறந்த **சான்றோர்களின்**

சிறப்பினைப் போற்றினார். அறத்தின் அடிப்படையில் தான் வாழ்வின் ஒவ்வொரு கூறும் அமைய வேண்டும் என்று **அறன்வலியுறுத்தல்** என்னும் அதிகாரத்தினை அமைத்தார். முதல் நான்கு அதிகாரங்களும் **பாயிரம்** எனப்படும். **இல்லறவியலில்** குறிக்கோளுடன் வாழ வேண்டிய குடும்பத்தாரின் பண்புகள் பேசப்பட்டன. *(5-24)* **துறவறவியலில்** *(25-37)* அருளாளர்களின் ஆற்றலும் சிறப்பும் உரைக்கப் பெற்றன. இவையாவும் அறத்துப்பாலின் உள்ளுறையாகும். ஊழின் வலிமையினை ஓரதிகாரம் உணர்த்தியது *(38)*

பொருட்பாலில் **அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல் (நாடு), படையியல், நட்பியல், குடியியல்** என்று ஏழியல்கள் அடங்கியுள்ளன.

நல்லாட்சி நடைபெறுவதற்கு வேண்டப்படும் உறுப்புக்களை (Essential Elements of a State) இப்பகுதியில் விளக்கமாகக் கூறியுள்ளார். **பொருட்பாலில் ஓர் அரசியல் ஞானியாகத் திருவள்ளுவர் காட்சி தருகிறார்** *(39-1.8)*. இன்பத்துப்பாலைத் தொல்காப்பிய, சங்க மரபின் படி **களவு, கற்பு** என்று இரு பகுதியாக அமைத்துக் கற்பனைச் சுவையுடன் பாடியுள்ளார் *(109-133)*. இதனைத் தனி இலக்கியமாக கருதுதல் வேண்டும். **இன்பத்துப்பாலில் திருவள்ளுவர் உணர்ச்சியும், துடிப்பும் மிக்க நல்லதொரு கல்லூரி மாணவன் போல் காட்சி தருகிறார்!**

இந்நூலிற்கு மணக்குடவர் முதல் பரிமேலழகர் முடிய பத்துப்பேர் உரை வரைந்தனர். இந்நாளில் பெரியோர் முதல் குழந்தை வரை அறிஞர் பலரும் திருக்குறளுக்கு விளக்க உரைகள் வரைந்துள்ளனர். உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப் பெற்ற சிறப்புக்குரியது திருக்குறளாகும்.

**சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகியலைப் பாடி மக்களை நெறிப்படுத்திய மனிதநேயம் மிக்க மாமேதையாகிய திருவள்ளுவர்க்குத் தமிழ்ச் சார்புடைய கழக அரசு தமிழகத்தின் பொறுப்பேற்றது முதல் திருவள்ளுவர் ஆண்டு அறிமுகம் ஆயிற்று. திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்படுகிறது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் செயல்படுகிறது. திருவள்ளுவரின் திருவுருவப்படமும் திருக்குறளும் பேருந்தில் இடம் பெற்றுப் பயணிகளின் கவனத்தை ஈர்த்தல் காணலாம். பல்கலைக் கழகங்களில் திருக்குறள் ஆய்விருக்கை நிறுவப்பெற்றது. ஒரு பல்கலைக் கழகத்திற்குத் திருவள்ளுவர் பெயர் சூட்டப்பட்டது. திருக்குறள் ஆராய்ச்சி அறிஞர்க்குத் திருவள்ளுவர் விருது வழங்கிப்**

**பாராட்டப் படுதல் குறிப்பிடத்தக்கது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரின் பெரு முயற்சியால் தலைநகரில் வள்ளுவர் கோட்டமும், தெற்கு எல்லையாகிய குமரிப்பாறையில் திருவள்ளுவர் சிலையும் நிறுவப்பெற்றன. செம்மொழித் தமிழ்வல்ல அயல்நாட்டு அறிஞர்க்குக் குறள்பீட விருதும் வழங்கப்படுகிறது.**

சமயச்சார்பற்ற திருக்குறளினை மனிதகுலம் முழுதுக்கும் ஏற்புடையதாக அறிஞர் பெருமக்கள் அனைவரும் தொடர்ந்து கூறிவருவதால் **இந்தியப் பேரரசு திருக்குறளைத் தேசிய நூலாக அறிவித்தல் முறையான எதிர்பார்ப்பு ஆகும்.**

திருக்குறளில் ஒவ்வொரு குறளும் ஆலமர் வித்துப்போல் செறிவும் செம்மையும் பொருளும் பொலியும் பொதிந்தது தான். பாலுக்கு ஒரு குறளாக மூன்று குறள்பாக்களைத் தருகிறோம்.

1. *செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்.* (26)

2. *ஆகா(று) அளவிட்டி தாயினும் கேடில்லை*
*போகா(று) அகலாக் கடை.* (478)

3. *நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்*
*தீயாண்டுப் பெற்றாள் இவள்.* (1104)

இவை மாதிரிகளே. குறள் முழுமையும் திருவள்ளுவரின் அறவியல் சான்ற படைப்பாற்றலைப் புலப்படுத்துகிறது. திருக்குறள் ஒப்பற்ற உலக இலக்கியமாக ஒளிவீசுகிறது.

### VI.1.2. நாலடியார்

சமண முனிவர்களின் படைப்பாக **நாலடி நானூறு** எனப்படும் **நாலடியார்** திகழ்கிறது. **பதுமனார்** என்னும் அறிஞர் இந்நூலினைத் தொகுத்துள்ளார். திருக்குறள் அமைப்பொழுங்கினைப் பின்பற்றி இந்நூல் அமைந்திருப்பினும் சிலவேறுபாடும் காணப்படுகிறது. திருக்குறளின் அறத்துப்பால் இல்லறவியலில் தொடங்கித் துறவறவியல், ஊழியல் கொண்டு நிறைவு பெறும். ஆனால், நாலடியார் துறவறவியலில் தொடங்கி இல்லறவியலில் முடிகிறது. துறவற வியலில் 7 அதிகாரங்களும் இல்லறவியலில் 6 அதிகாரங்களும் அடங்கியுள்ளன. சமணர்கள் துறவறத்துக்கு முதன்மை தந்தவர்கள் என்பதால் இவ்வாறு அமைக்கப் பெற்றுள்ளது. நாலடியாரின் பொருட்பாலில் அரசியல், நட்பியல், இன்பவியல், துன்பவியல், பொதுவியல், பகையியல், பல்நெறியியல் என்று இயல்பாகுபாடு செய்யப் பெற்றுள்ளது.

பொருட்பால் 24 அதிகாரங்களைக் கொண்டது. இன்பத்து [காமத்துப்] பாலில் முதலில் வைக்கப் பெற்றுள்ள இன்துன்பவியலில் ஓர் அதிகாரமும் இன்பவியலில் இரண்டதிகாரங்களும் இடம் பெற்றன. திருக்குறளைப் போலவே ஒவ்வோரதிகாரத்திலும் பத்துப்பாடல்கள் உள்ளன. இந்நூலின் தகுதி கருதித் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.யு.போப் இதனையும் மொழி பெயர்த்துள்ளார். இந்நூலிற்குப் பதுமர், தருமர் உள்ளிட்ட பலர் உரை எழுதியுள்ளனர்.

வாழ்வியல் மேம்பாட்டுச் சிந்தனைகள் பலவற்றைத் தாங்கி நிற்கும் நாலடியாரிலிருந்து ஒருசில கருத்துக்களை இங்குக் காண்போம்.

நாலடியாரின் முதல் அதிகாரம் **செல்வம் நிலையாமை** பற்றியது. தாம் ஆற்ற வேண்டிய கடமைகளை மறந்து செல்வ வாழ்வில் அழுந்திவிடக் கூடாது என்ற கருத்தில் தான் சமணச் சான்றோர் செல்வ நிலையாமையினைப் பேசினர். ஆனால், செல்வம் இல்லாமல் உலகியலில் ஒன்றும் நடைபெறாது என்ற நடைமுறை உண்மையினையும் நன்றாக உணர்ந்தவர்கள். எனவேதான் **மெய்ம்மை** என்ற அதிகாரத்தில்,

*வடுவிலா வையத்து மன்னிய மூன்றின்*
*நடுவணது எய்த இருதலையும் எய்தும்;*
*நடுவணது எய்தாதான் எய்தும் உலைப் பெய்(து)*
*அடுவது போலும் துயர்* *(114)*

என்ற பாடலைத் தந்துள்ளனர். வடுவிலாவையம் - குற்றமற்ற உலகம். மன்னிய மூன்று - அறம், பொருள், இன்பம் என்ற நிலைபெற்ற உறுதிப்பொருள்கள். இருதலை - முதலிலும் முடிவிலும் உள்ள அறமும் இன்பமும். நடுவணது - இம்மூன்றின் நடுவில் உள்ள பொருள். பொருளை ஒருவன் பெற்றான் எனின், மூன்றில் இரு தலையாக உள்ள அறத்தையும் இன்பத்தையும் அடைவான். அங்ஙனம் பொருளைப் பெறாதவன் உலையிலிட்ட அரிசி கொதிப்பதுபோல் துயரத்தை அடைவான். ஆதலின், **அறன் வலியுறுத்தும் சமணப் பெரியார், பொருள் வலியுறுத்தலில் பெரிதும் நாட்டம் செலுத்தியுள்ளார் என்பது புலனாகும்.**

வாழ்வில் உயரிய குறிக்கோளும் நோக்கமும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எளிதில் ஒரு செயலை முடித்தல் இயலும் எனினும், இயலாது எனினும், சான்றோர் குறைவறச் சிந்தித்து ஒரு முயற்சியில் ஈடுபடுவார். வேகமாகச் சென்று நரியின் உடலைக் கிழித்த அம்பினைக் காட்டிலும், சிங்கம் தப்பி ஓடும்படி

தொடுக்கப்பட்ட அம்பு குறையுடையதோ? என்று வினவுகிறார்.

இசையும் எனினும் இசையா(து) எனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர் - விசையின்
நரிமா உளங்கிழித்த அம்பினில் தீதோ
அரிமாப் பிழைப்(பு)எய்த கோல் 152

உள்ளுவதெல்லாம் உயர்வனவாதல் வேண்டும் என்ற திருவள்ளுவர்,

கான முயல் எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது 78.2

எனக் கூறிய பெருமிதக் கருத்தும் இங்கு எண்ணத்தக்கது. கோப்பெருஞ்சோழன்,

யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே புறம்.214:4-5

என்று எடுத்துக்கூறிய கருத்தும் தொன்று தொட்டுச் சான்றோர் புகட்டி வந்துள்ள பொற்புடைய குறிக்கோள் வாழ்வினைப் புதுப்புது வெளிப்பாட்டினால் வலியுறுத்தி வந்துள்ள உண்மை புலனாகும்.

ஆன்றவிந்தடங்கிய சான்றோர் சிற்றினச் சார்பினால் பாதிப்பு அடையார் என்ற விழுமிய கருத்தினை நாட்டுப்புற மக்களுக்கும் புரியவைக்கும் வகையில் ஒரு பாடல் அமைந்துள்ளது.

வேம்பின் இலையுள் கனியினும் வாழைதான்
தீஞ்சுவை யாதும் திரியாதாம் - ஆங்கே
இனம் தீ(து) எனினும் இயல்புடையார் கேண்மை
மனம் தீதாம் பக்கம் அரிது 244

சிற்றூர்களில் வாழைத்தாரினை வெட்டி வேப்பம் தழைகளில் பொதிந்து பழுப்பதற்காகச் சிலநாள் வைத்திருப்பார். என்றாலும் வேம்பினுடன் சேர்ந்த காரணத்தினால் வாழைக்கனி தன்னுடைய இயல்பு (-சுபாவம்) திரிபடைந்து கசப்பினைத் தராது; மாறாகத்தனக்குரிய இனிப்பையே வழங்கும். அதுபோலவே நல்லறிவினை இயல்பாகவே பெற்ற சான்றோர், தாம் சேர்ந்த இனம் தீதாக இருப்பினும், அவர்தம் தொடர்பினால் தம்மனம் தீயதாதல் ஒரு பொழுதும் இல்லை. இத்தகைய பயன்மிக்க கருத்துக்கள் நாலடியாரில் பற்பலவாகும்.

காதலைப் பாடுவதிலும் கனிந்தவர் சமணப்புலவர். களவுக் காலத்தில் தலைவியின் வனப்பினைப் பாராட்டிப் பாங்கனுக்குத் தலைமகன் கூறியதாக ஒரு சிறந்த பாடல் இன்பத்துப்பாலில் இடம்பெற்றுள்ளது. காதலியின் கருவிழிகளைக் கயல்மீன்கள்

என்று கருதிய சிறிய மீன் கொத்திப்பறவை அவளை நெருங்கியது. ஆனால், அவளுடைய புருவத்தைப் பார்த்ததும் அது வளைந்த வில்லோ என்று அஞ்சிக் கயல்விழியைக் கொத்தாமல் அகன்றது என்ற கற்பனைப் பாடலைக் காண்போம்.

*கண்கயல் என்னும் கருத்தினால் காதலி*
*பின்சென்ற(து) அம்ம சிறுசிரல்! - பின் சென்றும்*
*ஊக்கி எறிந்தும் எறிகல்லா நண்புருவம்*
*கோட்டிய வில்வாக்(கு) அறிந்து* 395

(சிறு சிரல் - சிறிய மீன் கொத்திப் பறவை. கோட்டிய - வளைந்த, வாக்கு - வளைவு) இத்தகைய பாக்கள் நாலடியாரின் இலக்கியத்தரத்தை உயர்த்துவன எனலாம்.

### VI.1.3. பழமொழி நானூறு

தொன்று தொட்டு வழங்கிவரும் மூதுரைகள் பழமொழி எனப்படும். ஓரினத்தின் மேதைமை, நுண்ணறிவு, உணர்வுகள் என்பனவற்றைப் பல்லாண்டுகளாகப் பயின்று வரும் பழமொழிகள் புலப்படுத்தும். நுண்மையும் ஒண்மையும் உடையதாய்ச் சுருக்கமும் ஒளியும் வாய்ந்ததாய் ஒரு குறிப்பிட்ட கருத்தினைத் தெளிவுறுத்திக் காட்டுதலை நோக்கமாகக் கொண்டு **முதுமொழி** என்னும் இலக்கிய வகை அமையும் என்று தொல்காப்பியர் வரையறை செய்துள்ளார் (தொல். பொருள். 479). முதுமொழி. மூதுரை, பழமொழி என்பன ஒரு பொருட்பன்மொழி ஆகும்.

பதினெண் கீழ்க்கணக்கில் நாலடி நானூற்றினைப் போலவே, நானூறு வெண்பாக்களினால் அமைந்த அற இலக்கியமாகப் **பழமொழி நானூறு** விளங்குகிறது. இந்நூலினை இயற்றியவர் **முன்றுறை அரையனார்**. இவர் அரசராகவோ தானைத் தலைவராகவோ இருந்தவராவர். இவர் சமண நெறியினர். சங்க இலக்கியங்களில் போற்றப் பெற்ற தூங்கையிலெறிந்த தொடித்தோட் செம்பியன், கரிகாலன், பாரி, பேகன் என்பாரின் வரலாறுகளை இவர் பழமொழி நானூற்றில் குறித்துள்ளார். மேலும் பொற்கைப் பாண்டியன், மனுநீதிச் சோழன் முதலியோரையும் சுட்டியுள்ளார். பலராமன், கண்ணன், தருமன், மாவலி முதலிய தொன்மைக்கால அரசர்களையும் இந்நூல் குறிப்பிடுகிறது.

### VI.1.3.1. பழமொழி நானூற்றின் அமைப்பியல்

இந்நூலில் அதிகார அமைப்பு, இயல், பால் அமைப்புக்கள் ஒன்றும் இல்லை. பெரும்பாலும் ஒவ்வொரு பாடலின் இறுதியில் ஒரு பழமொழி (Proverb) இடம் பெறுகிறது. அதற்குரிய விளக்கம்

பாடலின் முற்பகுதியில் காணப்படுகிறது. பாடலின் இடைப் பகுதியில் கேட்போராகிய கற்பனை மாந்தர் முன்னிலைப்படுத்தப் பெற்றுள்ளனர். இவரைச் சுட்டும் **ஆடூஉ முன்னிலை** (-ஆணை முன்னிலைப் படுத்தல்), **மகடூஉ முன்னிலை** (-பெண்ணை முன்னிலைப்படுத்தல்) என்ற விளித்தொடர்கள் காணப்படும். கூர்ந்து நோக்கின் மாணாக்கர்க்கும் பாடம் சொல்லும் பாங்கில் இப்பழமொழிகளின் விளக்கம் திகழ்கிறது.

## VI.1.3.2. சிறந்த சிந்தனைகள்

கிணற்றுத் தவளைபோல் நாட்டின் நடப்பும் வெளி உலகும் தெரியாமல் மாந்தர் வாழக்கூடாது என்று அறிவுறுத்துகிறார் முன்றுறை அரையனார். கிணற்று நீரைத்தவிரப் பருகுவதற்கு ஏற்ற நீர் வேறெங்கும் இல்லை என்று அதில் வாழும் தவளை, தேரை, மீன் முதலியன எண்ணும். அவற்றைப்போல் தாம் இருக்கும் இடமே உலகம் என்ற குறுகிய உள்ளத்துடன் வெளியுலக அவனுபவம் இல்லாமலும், பல நூலும் பயிலாமலும், நல்லோர் உரைகளைக் கேளாமலும் மக்கள் வாழ்நாளை வீணாளாகக் கழித்தல் கூடாது என்று கூறுகிறார்.

*உணற்கினிய இன்னீர் பிறிதுழி இல்லென்னும்*
*கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார் - கணக்கினை*
*முற்றப் பலகாலும் முனியா(து) இனிதோதிக்*
*கற்றலின் கேட்டலே நன்று* 61

இப்பாடலின் முதலிரண்டடிகளில் பொதிந்துள்ள சிறந்த கருத்தினைத் திருத்தக்கதேவர்,

*ஊற்றுநீர்க் கூவலுள் உறையும் மீனனார்*
*வேற்றுநா டதன் சுவை விடுத்தல் மேயினார்* 1176

என்று சீவகசிந்தாமணியில் போற்றிக் கூறுதல் ஒப்பிட்டுணரத் தக்கது.

இந்நூலில் பயின்றுள்ள பழமொழிகளில் சிலவற்றைக் காண்போம். **பாம்பறியும் பாம்பின கால், 5. குலவிச்சை கல்லாமல் பாகம் படும், 21. ஞாயிற்றைக் கைம்மறிப்பார் இல், 34. நாய்மேல் தவிசிடுமாறு, 75. தீநாள் திருவுடையார்க்கு இல், 82. திங்களை நாய் குரைத்தற்று, 149. ஆயிரம் காக்கைக்கு ஓர்கல், 165. நுணலும் தன் வாயால் கெடும், 184. குன்றின் மேலிட்ட விளக்கு, 204. முழம் குறையச் சாண் நீளுமாறு, 211. நிறைகுடம் நீர் தளும்பல் இல், 243. தொளை எண்ணார் அப்பம் தின்பார், 253. நாய்காணின் கல்காணா வாறு, 261. அணியெல்லாம் ஆடையின் பின், 271. இங்ஙனம்**

வழங்கும் பழமொழிகள் யாவும் வாழ்வியல் உண்மைகளை நடைமுறையின் அடிப்படையில் நன்கு உணர்த்துவனவாகும். முன்றுறையரையனார் கூறியுள்ள **நீர்மிகின் இல்லை சிறை,** *190;* **செருப்பிடைப்பட்ட பரல்,** *224* என்ற பழமொழிகள் இவர்க்குக் காலத்தால் மிகவும் முற்பட்ட புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன:

1. *நீர்மிகிற் சிறையும் இல்லை* — *புறம்.51.1*
2. *செருப்பிடைச் சிறுபரல் அன்னன்* — *புறம்.257.1*

எனவே, பழமொழிகளின் தொன்மை புலப்படும்.

### VI.1.4. நான்மணிக்கடிகை

கடிகை - துண்டு. ஒவ்வொரு பாட்டிலும் நந்நான்கு மணிகளாகிய துணுக்குப் போன்ற அறக்கருத்துக்கள் கூறப்பெற்றதால் **நான்மணிக்கடிகை** என்று இந்நூல் பெயர் பெற்றது. இதனுள் 101 வெண்பாக்கள் உள்ளன. இந்நூலின் ஆசிரியர் **விளம்பிநாகனார்.** மருதன் இளநாகனார், வெள்ளைக்குடி நாகனார் என்ற சங்கப்புலவர் பெயர்போல இவர்பெயர் விளங்குகிறது. இந்நூலின் தொடக்கத்தில் திருமாலைப் போற்றும் இரண்டு வாழ்த்துச் செய்யுள்கள் காணப்படுவதால் இவர் திருமால் நெறியினர் ஆவர்.

இந்நூலில் பொதிந்துள்ள சிறந்த கருத்துக்களை இரண்டொரு வெண்பாக்கள் வழி காண்போம்.

குடிமக்கள் அரசனின் சீரிய செங்கோலைப் பார்த்து வாழ்வர். குழந்தைகள் தாயின் முலையில் சுரக்கும் பாலினை எதிர்பார்த்து வாழ்வர். உலகத்தில் உள்ள உயிரினங்கள் யாவும் வானத்தினின்றும் விழும் மழைத்துளியை எதிர்நோக்கி வாழும். கூற்றுவன் அன்றாடம் யார் யார் இறக்கின்றனர் என்பதை எதிர்பார்த்து இன்புறுவான் என்ற நான்கு கருத்துக்களை அடுக்கிக் கூறுகிறார் விளம்பிநாகனார்:

*கோல்நோக்கி வாழும் குடியெல்லாம்; தாய் முலையின்*
*பால்நோக்கி வாழும் குழவிகள்; வானத்*
*துளிநோக்கி வாழும் உலகம்; உலகின்*
*விளிநோக்கி இன்புறூஉம் கூற்று* 26

இதன் முதலடி திருக்குறள் கருத்தினை எதிரொலிப்பது. மற்றும் ஒரு பாடலில் யார்யார்க்குத் தூக்கம் வருவதில்லை என்பதையும் விளம்பி நாகனார் நால்வகைப் படுத்தி நயம்படக் கூறியுள்ளார்.

*கள்வம்என் பார்க்கும் துயில் இல்லை; காதலிமாட்(டு)*
*உள்ளம்வைப் பார்க்கும் துயில் இல்லை; ஒண்பொருள்*

செல்வம் என் பார்க்கும் துயில் இல்லை; அப்பொருள்
காப்பவர்க்கும் இல்லை துயில்

பிறர்க்குரிய பொருளைத் திருட எண்ணுவார்க்குத் தூக்கம் வாராது. காதலியிடம் தன் உள்ளத்தை ஒப்படைத்தவர்க்கும் தூக்கம் பிடிப்பதில்லை. மேலான செல்வத்தைச் சேர்க்கவேண்டும் என்ற முயற்சியுடையார்க்கும் தூக்கம் வாராது. அவ்வாறு அரிதின் முயன்று ஈட்டிய பொருளைக் காப்பவரும் கண் துஞ்சுதல் இல்லை. உலகநடை முறையினை ஒட்டியே இவ்வுண்மைகள் கூறப்பட்டன.

## VI.1.5. திரிகடுகம்

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்தே **அறிவர் மரபு** தமிழகத்தில் இருந்தது. பின்னாளில் இம்மரபினைச் **சித்தர் மரபு** (சித் -அறிவு) என்று கூறினர். இவர்கள் மருத்துவம், யோகம், ஞானம் முதலிய துறைகளில் வல்லவர். உடலையும் உள்ளத்தையும் உறுதி செய்து ஓம்ப வேண்டியதன் தேவையை மக்களுக்கு உணர்த்தியவர்கள். உடல் பிணியைப் போக்கும் மருந்துப் பொருள்களைப் போல், உள்ளப்பிணியை யோகமும் ஞானமும் போக்கும் என்ற கோட்பாட்டினர். பின்னர் இம்மரபு ஆயுள்வேதம் → ஆயுர்வேதம் என்று பெயர் பெற்றது. ஆயுள்-வாழ்நாள், வேதம்-நூல். நெடுநாள் வாழ்வதற்கு நெறிகாட்டும் நூல் எனப் பொருள் தரும்.

திரிகடுகம் சுக்கு, மிளகு, திப்பிலி என்ற முப்பொருள் சேர்க்கையால் செய்யப்படும் மருந்தினைக் குறிக்கும். இம்மருந்தினைப் போல் மக்களுக்குப் பயன்படும் அறக்கருத்துக்கள் அடங்கிய நூல் **திரிகடுகம்** எனப் பெயர் பெற்றது. ஒவ்வொரு பாடலிலும் மும்மூன்று அரிய கருத்துக்கள் இடம் பெற்றன. இந்நூலில் *101* வெண்பாக்கள் உள்ளன. இதனைப் பாடியவர் **நல்லாதனார்**. இந்நூலின் கடவுள் வாழ்த்தில் இவர் திருமாலைப் போற்றியிருப்பதால், விளம்பிநாகனாரைப் போலவே இவரும் திருமால் நெறியினர் ஆவர்.

இடச்சுருக்கம் எண்ணி ஒரு பாடலின் கருத்தினை மட்டும் இங்குக் காண்போம். அழியாத உடம்பினை அடைந்தவர் யார்? என்ற வினாவிற்கு விடை தருகிறார் நல்லாதனார். தனது அரிய செயல்களினால் உலகில் தன் புகழை நிலைநாட்டுபவனும்; சிறப்புப் பொருந்திய கற்புடைய மங்கையை மனைவியாகப் பெற்றவனும்; ஊரில் உறைபவர்க்கும் வழிப்போக்கர்க்கும் பயன்தரும் கிணறுகளைத் தோண்டியவனும் ஆகிய இம்மூவரும் சாவாத உடம்பினைப் பெற்றவர். அதாவது, இறந்தபிறகு கூட இவர் புரிந்த

பணியினாலும் பண்பினாலும் மறவாமல் புகழுருவில் வாழ்ந்து கொண்டிருப்பவர் ஆவர்.

*மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும்; மாசில்சீர்ப்*
*பெண்ணினுள் கற்புடையாட் பெற்றானும் - உண்ணுநீர்க்*
*கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்*
*சாவா உடம்பு எய்தினார்* 16

மருந்துப் பெயர் பெற்ற மற்றொரு இலக்கியம் சிறுபஞ்சமூலம் ஆகும். இந்நூல் பற்றிச் சற்று உற்றுநோக்குவோம்.

### VI.1.6. சிறுபஞ்சமூலம்

ஐஞ்சிறுவேர் என்பது களப்பிரர், பல்லவர் காலச்சூழலில் **சிறுபஞ்சமூலம்** ஆயிற்று. நாட்டு மருத்துவத்தில் **கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, சிறுநெருஞ்சி** ஆகிய ஐந்தின் வேர்களினால் தனித்தோ கலந்தோ செய்யப்படும் மருந்து பிணிபோக்குதல் போல, ஐந்தைந்து அருங்கருத்துக்கள் அடங்கிய வெண்பாக்களினால் இயன்றுள்ள **சிறுபஞ்ச மூலம்** உளப்பிணியைப் போக்கி உயர் வாழ்வுக்கு வழிகாட்டும். இதனைப் பாடியவர் **காரியாசான்**. இவர் **மாக்காயனார்** என்பாரின் மாணாக்கர். இவர் அருகனுக்கு வணக்கம் கூறியதால் சமணர் ஆவர். 102 பாடல்களில் ஒரு சில பாடல்கள் சிதைந்து போயின. இப்போது 98 வெண்பாக்களே கிடைத்துள்ளன.

இந்நூலின் ஒரு பாடலின் சாரத்தைக் காண்போம். எண்பது வயதுக்கும் மேலும் ஒருவன் வாழவேண்டுமெனின் அவன் ஆற்றவேண்டிய சாதனைகள் *யாவை?* என்பதற்குக் **காரியாசான்** விடை *கூறுகிறார்:* 1. பஞ்ச காலத்தில் தன்னிடம் உள்ள உணவுப் பொருளை மற்றவர்க்குப் பகுத்துக் கொடுத்து எஞ்சியதை உண்பவன். 2. ஒளிவுமறைவின்றி ஈகை புரிபவன். 3. உடைந்தோடும் படையுள் புகுந்து அஞ்சாது போரிட்டு வாகை சூடுபவன். 4. உண்ணும் முன்னர் மற்றவர்க்கு [இரப்பவர்க்கு] உணவு தருபவன். 5. குழந்தைக்குப் பால் கொடுத்துக் காப்பவன் - இந்த ஐவரும் எண்பதுக்கு மேலும் பற்பல ஆண்டுகள் வாழ்வார். தொண்டு புரிவதால் நெடுங்காலம் வாழலாம் என்று தொண்டாற்றக் காரியாசான் ஆற்றுப்படுத்துகிறார்.

*பஞ்சப் பொழுதுபாத்(து) உண்பான்; கரவாதான்;*
*அஞ்சா(து) உடை படையுள் போந்தெறிவான் - எஞ்சாதே*
*உண்பது முன் ஈவான்; குழவி பலிகொடுப்பான்*
*எண்பதின் மேலும்வாழ் வார்* 77

(பாத்து - பகுத்து. பலி - உணவு)

இனி, மருந்துப் பெயர் பெற்ற மற்றொரு அறநூலாகிய ஏலாதியைப் பற்றிச் சிறிது காண்போம்.

## VI.1.7. ஏலாதி

**ஏலம், இலவங்கம், நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு** ஆகிய மூலப்பொருள்களைக் கொண்டு உருவாக்கப்படும் மருந்து பயன் தருதல்போல், இந்நூலிற் சொல்லப்பெறும் அறக்கருத்துக்களும் பெரிதும் பயன்தடுதலால் இந்நூல் இப்பெயர் பெற்றது. 80 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் **கணிமேதாவியார்**. கணி - கணிதத்தில் வல்ல சோதிடர். இவரும் சமணர் ஆவர்.

இந்நூலின் ஒரு பாடலின் கருத்தினைக் காண்போம். யார் யார்க்கு ஈதல் வேண்டும் என்பதைக் கணிமேதாவியார் எண்ணிப்பார்க்கிறார்.

*1. தாய் இல்லாத பிள்ளை 2. கணவனை இழந்த கைம்பெண் 3. வாயில்லாத ஊமையர் 4. வாணிகம் செய்து பொருளை இழந்தவர் 5. கையில் இருப்பில் இருந்த பொருளைத் தொலைத்தவர் 6. குருடர்க்கும் பொருள் உதவி புரிபவர் ஆகிய இவர்கள் (வரும் பிறவிக்கு) வைப்புநிதி வழங்கி வாழ்பவராவார்.*

*தாய் இழந்த பிள்ளை, தலை இழந்த பெண்டாட்டி,*
*வாய்இழந்த வாழ்வினார், வாணிகம் போய் இழந்தார்,*
*கைத்( து )ஊண் பொருள் இழந்தார், கண்ணிலவர்க்(கு)*
*ஈய்ந்தார்*
*வைத்து வழங்கிவாழ் வார்* 78

*(தலை - தலைவன், ஈய்ந்தார் - ஈந்தவர்)*

கணிமேதாவியாரின் பரிவுணர்ச்சியும் மனிதநேயமும் இப்பாடலினால் புலனாகின்றன.

## VI.1.8. ஆசாரக்கோவை

ஆசாரம் - ஒழுக்கம், நடத்தை நான்மணிக் கடிகையில், **ஆசாரம் என்பது கல்வி**, 93 என்று வந்துள்ளது. **அச்சமே கீழ்களது ஆசாரம்** என்றார் திருவள்ளுவர். அப்பரடிகள் தேவாரத்தில், **அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை** 6.25.7 என்று இச்சொல் வழங்குகிறது. முதுமொழிக் காஞ்சியில் **அறியாத் தேயத்து ஆசாரம் பழியார்** 3.8 என்று சொல்லப் பெற்றது. ஆதலின் மக்களுக்குப் பயன்தரும் நெறிமுறைகளும் ஒழுங்குகளும் **ஆசாரம்** என்ற சொல்

குறிப்பதாகக் கொள்ளலாம். அவற்றைக் கோவைப்படுத்தி **ஆசாரக்கோவையினைப் பாடியவர் பெருவாயின் முள்ளியார்.** இந்நூலின் ஒரு பாடற் கருத்தினை இங்குக் காண்போம். செய்ந்நன்றி அறிதல், பொறையுடைமை, இனியவை கூறல், எவ்வுயிர்க்கும் இன்னா செய்யாமை, கல்வி, ஒப்புரவறிதல், அறிவுடைமை, நல்லினத்தாரின் நட்பு என்ற எட்டும் ஆசாரங்கள் (-ஒழுக்கம்) ஆகும். இவை நல்வாழ்விற்கு வித்தாக அமைவன என்று இந்நூலின் முதல் பாடல் மொழிகின்றது.

> நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல்லோ(டு)
> இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியொடு
> ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
> நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
> சொல்லிய ஆகாச வித்து. 1

### VI.1.9. இன்னா நாற்பது

நாற்பது வெண்பாக்களைக் கொண்ட இந்நூலினைப் பாடியவர் **இரண்டாம் கபிலர்** ஆவர். இந்நூலின் கடவுள் வாழ்த்தில் சிவன், பலராமன், மாயவன், முருகன் ஆகியோரைத் தொழாமை இன்னா பயக்கும் எனக் கூறுவதால் இவர் தமிழகத்தில் தொன்றுதொட்டு நிலவி வந்துள்ள நெறியைப் பின்பற்றியவர் ஆவர் (புறம்,56.1-10; சிலம்பு.5.169-172; 14.7-10). இன்ன இன்னவை இன்னாமை (துன்பம்) தரும் என்று மக்களை எச்சரிக்கும் வாய்பாட்டினால் இவர் நீதிபோதனை செய்துள்ளார்.

இந்நூலின் ஒரு பாடலைக் காண்போம்:

> ஆன்றவிந்த சான்றோருள் பேதை புகல்இன்னா;
> மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா;
> நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா; ஆங்கின்னா
> ஈன்றாளை ஓம்பா விடல் 17

பண்பட்ட சான்றோர் கூடியிருக்கும் அவையில் பண்பாடற்ற அறிவிலி புகுதலும், மயங்கிய இருளில் பயணம் செல்லுதலும், பொறுத்துப் புலனடங்கிப் பயிலாதவனின் தவமும், பெற்றெடுத்த தாயைப் போணாமையும் இன்னாமை பயக்கும் என்பது இப்பாடலின் திரண்ட பொருள். இக்கருத்துக்கள் யாவும் மாந்தரை நெறிப்படுத்துவன என்பதில் ஐயமில்லை.

### VI.1.10. இனியவை நாற்பது

இன்ன இன்னவை இனியவற்றைத்தரும் என்ற வாய்பாட்டினால் ஓதப் பெறும் 40 வெண்பாக்களைக் கொண்ட இந்த

அறநூலின் ஆசிரியர் **பூதஞ்சேந்தனார்** ஆவர். பூதனின் மகன் சேந்தனார் என்க. இந்நூலின் கடவுள் வாழ்த்தில் சிவன், திருமால், நான்முகன் ஆகிய மூவரையும் வழிபடுதல் இனிது எனப் பாடியுள்ளார். சமயப் பொறை திகழ்ந்த காலத்தில் இவர் வாழ்ந்தவர்.

இவர் பாடிய ஒரு பாடலைப் பார்ப்போம்.

*பிச்சைபுக்(கு) ஆயினும் கற்றல் மிக இனிதே;*
*நற்சவையில் கைக்கொடுத்தல் சாலவும் முன்னினிதே;*
*முத்தேர் முறுவலார் சொல்லினிது; ஆங்கினிதே*
*தெற்றவும் மேலாயார்ச் சேர்வு* 1

கல்வியின் சிறப்பினை முதலில் குறித்துள்ளார். பிச்சை எடுக்க நேரிட்டாலும் ஒருவன் கற்பதும், அவையில் உரையாற்றுகையில் மறதி வரும் பொழுது தாம் கற்ற கல்வி நினைவுக்கு வருதலும், முத்துப்போன்ற முறுவலுடைய மங்கையரின் சொற்கேட்டலும், மேலோர்களின் நட்பும் ஒருவர்க்கு இன்பம் பயப்பன ஆகும்.

### VI.1.11. முதுமொழிக்காஞ்சி

காஞ்சி இங்கு நிலையாமையினைச் சுட்டாது, உலகியல் உண்மைகளை உணர்த்தும் பொருண்மொழிக் காஞ்சியாகக் கொள்ளுதற்குரியது. முதுமொழி என்பது மூதுரை. இந்நூலினைப் பாடியவர் **மதுரைக் கூடலூர் கிழார்**. ஐங்குறுநூற்றினைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் இவரேயாதல் வேண்டும். இத்தொகை நூலில் காணப்படும் பத்துப் பத்துப் பாக்களைக் கொண்ட உள்ளமைப்பினைப் போலவே முதுமொழிக்காஞ்சியிலும் பத்துப்பத்தாக உள்ளமைப்பு அமைந்துள்ளது. ஒவ்வோரு பகுதியிலும் இடம் பெறும் அரிய தொடரினால் அப்பகுதி பெயரிடப்பட்டுள்ளது. **சிறந்த பத்து, அறிவுப்பத்து, பழியாப்பத்து, துவ்வாப்பத்து, அல்லபத்து, இல்லை பத்து, பொய்ப்பத்து, எளிய பத்து, நல்கூர்ந்தபத்து, தண்டாப்பத்து** என்று இந்நூலின் பிரிவுகள் பெயர் பெற்றன. எல்லாப்பத்துக்களின் தொடக்கமும், '**ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**' என்று அமைந்துள்ளது. கூறப்படும் நீதிகள் உலக நீதிகள் என்பதை இத்தொடர் காட்டுகிறது. ஓரோர் அடியில் நீதி ஓதப்படுகிறது. பத்துப் பத்திலிருந்தும் ஒவ்வொரு நீதியை இங்கு எடுத்துக் காட்டுதல் சாலும்.

1. *ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்*
   *ஓதலின் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை* 1.1
2. *கற்றது உடைமை காட்சியின் அறிப* 2.4
3. *வறியோன் வள்ளியன் அன்மை பழியார்* 3.9

| | | |
|---|---|---|
| 4. | அறிவிலி துணைப்பாடு தனிமையின் துவ்வாது | 4.8 |
| 5. | அறத்தாற்றின் ஈயாதது ஈகை அன்று | 5.8 |
| 6. | மக்கட் பேற்றின் பெறும்பேறு இல்லை | 6.2 |
| 7. | மேல்வரவு அறியாதோன் தற்காத்தல் பொய் | 7.5 |
| 8. | உண்டி வெய்யோர்க்கு உறுபிணி எளிது | 8.7 |
| 9. | நட்பில் வழிச்சேறல் நல்கூர்ந்தன்று | 9.10 |
| 10. | கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான் | 10.3 |

இவ்வாறு சின்மென் மொழியால் கூறப்படும் அறக்கருத்து மக்கள் உள்ளத்தில் சென்று தைக்கும், பயன் நல்கும். சொல்லாட்சி, மொழியமைதி யாவும் சங்க மொழியமைப்புடன் ஒத்துள்ளமை நோக்கத்தக்கது.

## VI.2. புறஇலக்கியம்

பதினெண் கீழ்க்கணக்கில் புறஇலக்கியம் அல்லது போர் இலக்கியமாகத் திகழ்வது **களவழி நாற்பது** ஆகும். இதனைப் பாடியவர் **பொய்கையார்**. இந்நூலின் இறுதியில்,

*சோழன் செங்கணானும் சேரமான் கணைக்கால்*
*இரும்பொறையும் (திருப்) போர்ப் புறத்துப் பொருது*
*உடைந்துழி,*

*சேரமான் கணைக்காலிரும் பொறையைப் பற்றிக் கொண்டு*
*சோழன் சிறை வைத்துழி, பொய்கையார்* **களம்பாடி** *வீடு*
*கொண்டது*

என்ற குறிப்பு உள்ளது. களம்-போர்க்களம். மேற்குறிக்கப்பெற்ற இருவேந்தரும் பொருத போர்க்களத்தில் சோழன் வெற்றிபெற்ற திறத்தைப் பொய்கையார் பாடிய 40 வெண்பாக்களைக் கொண்ட இந்நூல் **களவழி நாற்பது** எனப்பெயர் பெற்றது. இந்த வரலாற்று நிகழ்வினைக் கலிங்கத்துப் பரணியும் மூவருலாவும் தமிழ் விடுதூதும் சுட்டியுள்ளன. புறநானூற்றிலும் (74) இது தொடர்பான குறிப்பு காணப்படுகிறது. ஆகையால், முதுமொழிக் காஞ்சியைப் **போலவே களவழி நாற்பதும் சங்ககால இலக்கியமாக ஆராய்ச்சி அறிஞர்கள் கருதுகின்றனர்.**

இந்நூலின் ஒருபாடலைக் காண்போம்.

*அஞ்சனக் குன்றேய்க்கும் யானை அமருழக்கி*
*இங்குலிகக் குன்றேபோல் தோன்றுமே - செங்கண்*
*வரிவரால் மீன்பிறழும் காவிரி நாடன்*
*பொருநரை அட்ட களத்து* 7

வரால்மீன்கள் பிறழ்ந்து விளையாடும் காவிரி பாயும் நாடன் ஆகிய **சோழன் செங்கணான்** இரும்பொறையின் படை மறவரை அழித்த போர்க்களத்தில் தோன்றும் யானை, போர் தொடங்கும் முன் மைக்குன்றம் போல் காட்சிதந்தது. பகைவரின் உடலைக் கொம்பினால் கிழித்து அவர்தம் புண்ணுடன் குருதியும் தன் உடல் முழுதும் பொருந்தியதால் போருக்குப் பின்னர் அதே யானை செக்கச் சிவந்த சாதிலிங்கம் பொருந்திய மலையே போல் காட்சி அளிக்கிறது.

இத்தகைய கற்பனை உண்மையாயினும் சற்று உயர்வு நவிற்சியாகவே தோன்றுகிறது. எனவே, போரின் கடுமையும் சோழவேந்தனின் யானைப் படையின் சிறப்பும் வெற்றியும் தெளிவாகின்றன.

## VI.3. அகஇலக்கியம்

சங்க காலத்துப் பாடப்பெற்ற திணை இலக்கிய மரபினைப் பேணிக்காக்கும் பெருநோக்கில் சங்கம் மருவிய காலத்தில் வாழ்ந்த புலவர் பாடியவை **1. திணைமாலை நூற்றைம்பது 2. ஐந்திணை எழுபது 3. ஐந்திணை ஐம்பது 4. திணைமொழி ஐம்பது 5. கைந்நிலை அறுபது 6. கார் நாற்பது** என்ற ஆறு அகஇலக்கியம் ஆகும். எட்டுத்தொகையின் அகஇலக்கியம் ஒவ்வொன்றும் பலர் பாடிய பாக்களின் தொகை. ஆனால், பதினெண்கீழ்க்கணக்கில் உள்ளவை தனித்தனிப் புலவரால் பாடப்பெற்றவை. முன்னவை ஆசிரிய யாப்பில் அமைந்தவை. பின்னவை வெண்பா யாப்பில் புனையப்பெற்றவை. சங்க காலத்துத் திணை இலக்கியங்களாகிய கலித்தொகை, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு என்பன முறையே 150, 400[3], 500 பாக்களைக் கொண்டவை. இவற்றை நினைவு கூரும் வகையில் தனிப்புலவர்கள் பாடிய மேலே சுட்டப்பெற்ற அகஇலக்கியங்கள் முறையே 150, 70, 60, 50, 40 என்ற அளவில் மட்டுப்படுத்தப்பட்டன.

பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள அகஇலக்கியங்களைப் **புதுச் செவ்வியல்** (Neo-classicism) பண்பு வாய்ந்தவை எனக் கருதலாம். இவற்றைச் சுருக்கமாக இங்கே காண்போம்.

### VI.3.1. திணைமாலை நூற்றைம்பது

இதனைப் பாடியவர் **கணிமேதாவியார்**. இவரே ஏலாதியை இயற்றிவரும் ஆவர். தன்பெயருக்கேற்ப 150 வெண்பாக்களே இருக்க வேண்டிய இந்நூலில் 153 வெண்பாக்கள் உள்ளன. 1. குறிஞ்சிக்குரியவை 1-31, 2. நெய்தலுக்குரியவை 32-62, 3. பாலைக்கு 63-92 பாக்கள், 4. முல்லைக்கு 93-123, 5. மருதத்திணைக்கு 124-153 பாக்கள் ஆகும்.

இந்த இலக்கியத்தின் ஒரு பாடலைப் பார்ப்போம்.

*வாடாத சான்றோர் வரவு எதிர் கொண்டிராய்க்*
*கோடாது நீர்கொடுப்பின் அல்லது- கோடா*
*எழிலும் முலையும் இரண்டிற்கும் முந்நீர்ப்*
*பொழிலும் விலை ஆமோ போந்து?* 15

தலைமகன் சான்றோரை வரைவு வேண்டி விடுத்த இடத்துத் தலைமகள் தந்தைக்கும் தமையன்மார்க்கும் நற்றாய் அறத்தொடு நின்றது என்ற பொருண்மையில் இப்பாடல் அமைந்துள்ளது. களவொழுக்கத்தில் கடைசிக்கட்டமாக உடன்போக்கு அல்லது அறத்தொடுநிலை அமையும். தலைவன், தலைவி ஆகிய இருவருக்கும் உள்ள காதலுறவினைத் தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தை, அண்ணன் ஆகியோர்க்கும் இணக்கமாக எடுத்துச் செல்லுவாள். இங்கு முற்றிய நிலையில் நற்றாயே அறத்தொடு நிற்கிறாள். திருமணம் பேசுவதற்கு மணமகள் வீட்டிற்குச் சான்றோரை அனுப்புதல் என்ற பழைய மரபு பாட்டிற்குரிய கூற்று விளக்கக் குறிப்பினால் அறிய முடிகிறது. காதலர் இருவர் மனம் கலந்தாலும், பெற்றோரின் இசைவும் உடன் பிறந்தாரின் ஒப்புதலும் திருமணத்திற்குத் தேவைப்படுகிறது.

தலைவன் நம்மிடம் விடுத்துள்ள வாட்டம் இல்லாத சான்றோரை எதிரேற்று வரவேற்ற நீவிர் மனம் கோடாது உவந்து தலைவனுக்கு நம்பெண்ணை மணம் செய்து கொடுப்பின் அல்லது, தலைவியின் குறைபடாத எழிலும் முலையும் ஆகிய இரண்டிற்கும் கடல் சூழ்ந்த உலகினையே விலையாகக் கொடுத்தாலும் (பரிசமாக கொடுத்தாலும்) ஈடாகாது என்று நற்றாய் தலைமகளின் தந்தைக்கும் தனையன் மார்க்கும் அறத்தொடு நின்றாள். அதாவது, தன் கணவனுக்கும் மூத்த புதல்வர்களுக்கும் கூறினாள். இப்பழைய மணமுறை இன்றும் தொடர்ந்து வருவதை எண்ணி இன்புறலாம்.

### VI.3.2. ஐந்திணை எழுபது

ஒவ்வொரு திணைக்கும் 14 வெண்பாக்களாக ஐந்திணைக்கும் 70 பாடல்கள் அடங்கிய இந்நூலினைப் பாடியவர் **மூவாதியார்**. இந்நூலில் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற வரிசையில் திணைகள் அமைந்திருத்தல் சுட்டத் தக்கது. இந்நூலில் 25, 26, 69, 70 என்றுள்ள பாடல்கள் இப்போது கிடைக்கவில்லை. இந்நூலின் ஒரு பாடலைக் காண்போம்.

*சான்றவர் கேண்மை சிதைவின்றாய் ஊன்றி*
*வலியாகிப் பின்னும் பயக்கும்- மெலிவில்*

*கயம்திகழ் சோலை மலைநாடன் கேண்மை*
*நயம்திகழும் என்னும் என் நெஞ்சு* 5

திருவள்ளுவர் '**மடந்தையோ டெம்மிடை நட்பு**' என்று தலைவன் தலைவியின் காதல் தொடர்பினை **நட்பு** என்றே குறித்தார். மூவாதியார் நண்பரைப் போன்றவர் காதலர் என்ற கருத்தினை இப்பாடலில் குறித்துள்ளார். சான்றோருடன் கொண்ட நட்பு சிதையாமல் நிலைபெற்று வலிமையுடையதாக அமைந்து தொடர்ந்து பின்னரும் பயனைத்தரும். மெலிவில்லாத பொய்கையும் சோலையும் கொண்ட மலைநாட்டுத் தலைவனுடன் கொண்ட உறவு நயம் திகழ்வது என்று என் நெஞ்சம் சொல்லுகிறது என்று தலைவனைப் பெருமைப்படுத்தித் தோழியிடம் பேசியதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைமகன் சிறைப்புறத்தானாக (-சிறை-பக்கம், வீட்டின் பின்பக்கம் இருந்தானாக) அவன் நடைமுறையினைப் பழித்துப் பேசிய தோழிக்குத் தலைவனை விட்டுக் கொடுக்காமல் கட்டிக் காக்கும் பாங்கில் இயற்படப் (-புகழ்பட) பேசினாள் தலைவி. அதுவே தமிழ்ப் பெண்ணின் பண்பாடு.

## VI.3.3. ஐந்திணை ஐம்பது

ஒவ்வொரு திணைக்கும் பத்துப் பாடலாக ஐந்து திணைக்கும் ஐம்பது வெண்பாக்கள் கொண்ட அகஇலக்கியம் **ஐந்திணை ஐம்பது** ஆகும். இந்நூலின் திணை வரிசை முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்று அமைந்துள்ளது. இந்நூலைப்பாடியவர் **மாறன்பொறையனார்**. அகமரபுகளை அறிந்துபாடும் ஆற்றல் படைத்த இவர்தம் நூலிலிருந்து ஒரு பாடலைப் பார்ப்போம்.

*சுனைவாய்ச் சிறுநீரை எய்தா(து) என்று எண்ணிப்*
*பிணைமான் இனிதுண்ண வேண்டிக் கலைமாத்தன்*
*கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்பர் காதலர்*
*உள்ளம் படர்ந்த நெறி* 38

பிரிவாற்றாத தலைவியைத் தோழி ஆற்றுவித்ததாக இப்பாடல் புனையப்பட்டது. தலைமகன் பொருளீட்டச் செல்லும் பாலை வழியில் கலைமானும் பிணைமானும் காட்சிதரும். சுரவழியில் நீரூற்றுள்ள இடத்தில் சிறிதளவே நீர் உள்ளது. தான் குடித்துவிட்டால் பிணைமானுக்குக் கிடைக்காதே (-எய்தாது) என்ற அக்கறையினால் கலைமான் பொய்யாகக் குடித்துப் பிணைமான் இனிது குடிப்பதற்கு விரும்பி நிற்கும் பாலைவழியே காதலர் சென்ற நெறி என்பது திரண்ட பொருள்.

இதனுள் இறைச்சிப் பொருள் உள்ளது. கருப்பொருளாகிய விலங்கு, பறவை முதலியவற்றின் அன்புறு காட்சியைப் படைத்துக் காட்டுவதன் வாயிலாகத் தலைவன் தன் தலைவியின் நினைவு தொடர்ந்து உள்ளத்தில் தோன்ற வினைமுடித்து விரைந்து வருவான் என்றமையப் பாடுதல் கலித்தொகை உள்ளிட்ட சங்க அக இலக்கிய மரபாகும்.

கலைமான், பிணைமான் முறையே தலைவன், தலைவி. கலைமானின் கனிந்த அன்புச் செயலைக் காணும் தலைவன் தன் தலைவியின் நினைவு மீக்கூர விரைவில் பொருளீட்டித் திரும்பி வருவான் என்ற குறிப்புப் பொருள்தான் **இறைச்சி** என்ற அகஇலக்கியக் கலைச்சொல்லினால் சுட்டப்பெறுவது.

### VI.3.4. திணைமொழி ஐம்பது

திணைக்குப் பத்துப் பாடல்; ஐந்திணைக்கும் ஐம்பது பாக்களைக் கொண்ட இந்த நூலின் ஆசிரியர் **கண்ணஞ்சேந்தனார்** ஆவர். கண்ணன் மகன் சேந்தனார் என்று அமையும். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசையில் திணையமைந்துள்ளமை சுட்டத்தக்கது. இந்நூலில் **தோழிவரைவு கடாயது** என்ற பொருண்மையில் வரும் பாடலைப் பார்ப்போம்.

***முத்தம் அரும்பும் முடத்தாள் முதுபுன்னை***
***தத்தும் திரைதயங்கும் தண்ணங் கடற்சேர்ப்ப!***
***சித்திரப் பூங்கொடி அன்னாட்(கு) அருள் ஈயாய்***
***வித்தகப் பைம்பூண்நின் மார்பு*** 42

களவொழுக்கத்தினை நீட்டித்துவரும் தலைவனை விரைவில் தலைவியை மணந்து கொள்ளத் தூண்டும் தோழியின் பேச்சாக [Discourse] இவ்வெண்பா உள்ளது.

தலைவன் நெய்தல் நிலத்துக்கு உரியவன். **சேர்ப்பன்** என்று நிலப்பெயரினால் சுட்டப்படுகிறான். அவனுடைய கடற்கரையில் நிற்கும் மூத்த புன்னை மரங்கள் முத்துக்களைப்போல வெண் மலர்களை அரும்புகின்றன. தலைவி சித்திரத்தில் வரையப்பட்ட பூங்கொடியைப் போன்றவள். அழகிய அணிகலம் பூண்ட நின்மார்பினை அவளுக்கு ஈந்தருள்க என்றார்.

ஊரறிய அவளை மணந்து கொண்டு வாழ்க என்பது குறிப்புப்பொருள்.

### VI.3.5. கைந்நிலை

கை-ஒழுக்கம், அக ஒழுகலாறு பற்றிய 60பாக்களைப் கொண்ட இந்நூலின் ஆசிரியர் **மாறோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர்க்**

காவிதியார் மகனார் புல்லங்காடனார் ஆவர். திணைக்கு 12 பாடல்கள்; ஐந்திணைக்கும் 60 பாடல்கள் கொண்ட இந்நூலில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்று திணை வரிசை காணப்படுகிறது. இந்நூலில் 18 பாடல்கள் சிதைந்தன. புல்லங்காடனார் பாண்டியனையும் கொற்கை நகரையும் 60 ஆம் பாடலில் குறிப்பிடுவதால் பாண்டிய நாட்டவராகலாம். இந்நூலின் ஒரு பாடலைக் காண்போம்.

**கல்வரை ஏறிக் கடுவன் கனிவாழை**
**எல்லுறு போழ்தின் இனிய பழம்கவுள் கொண்(டு)**
**ஓல்லென ஓடும் மலைநாடன் தன்கேண்மை**
**சொல்லச் சொரியும் வளை** 7

குறிஞ்சித் திணைக்குரிய இப்பாடலில் ஓர் இனிய காட்சியைப் பார்க்கிறோம். எல்-எல்லி, ஞாயிறு. ஞாயிறு எழும் காலைப்பொழுதில் மலைமீது ஏறி அங்குள்ள வாழையின் இனிய பழத்தை ஆண் குரங்கு பறித்துக் கவுளுக்குள் அடக்கிக் கொண்டு விரைந்து ஓடும் மலை நாட்டுத் தலைவனின் நட்பினைச் சொல்லமுற்படின், (உடல் மெலிந்து) கையில் அணிந்துள்ள வளையல் கழலும் என்பது பாடலின் திரண்ட பொருள்.

இப்பாடலில் உள்ளுறை உவமம் ஒளிந்துறைகிறது. கடுவன்-தலைவன், இனிய வாழைக்கனி-தலைவியிடம் பெற்ற இன்பம், கேண்மை-காதல் உறவு. மலை ஏறுதல்- வரும் வழியில் பல தடைகளைத் தாண்டிக் களவுக் காலத்துக் காண வருதல். இங்ஙனம் உள்ளுறை அமைத்துப்பாடும் சங்க அக இலக்கியமரபினை இந்தப் பாடலிலும் காண்கிறோம். தலைவியின் சொல்நாகரித்தினைப் புலப்படுத்துவது உள்ளுறை உவமமே ஆகும்.

## VI.4. கார் நாற்பது

காடும் மாலையும் முல்லை என்பது தொல்காப்பியம். முல்லைத் திணைக்குரிய முதற்பொருள்களில் ஒன்றாகிய கார்ப்பருவம் பற்றிய காதற் பாடல்கள் நாற்பது கொண்ட நூல் கார் நாற்பது. இதனை இயற்றியவர் **மதுரைக் கண்ணங்கூத்தனார்**. கண்ணனின் மகன் இப்புலவர்.

பருவம் காட்டித் தோழி தலைமகளை ஆற்றியிருக்கக் கூறும் பாடலைக் காண்போம்.

**கடுங்கதிர் நல்கூரக் கார்செல்வம் எய்த**
**நெடுங்காடு நேர்சினை ஈனக் -கொடுங்குழாய்!**

**இன்னே வருவர் நமர் எனறு எழில் வானம்**
**மின்னும் அவர்தூது உரைத்து** 2

கார்காலத்தில் தலைவன் இல்லத்தில் இருந்து தலைவியுடன் கூடி மகிழ்ந்து வாழவேண்டியவன். ஆனால் பொருள்வயிற் பிரிந்து போயுள்ளான். எப்போது திரும்பிடுவான் என்று ஏங்கிக் கொண்டிருக்கும் தலைவிக்கு உயிர்த்தோழி ஆறுதல் கூறுவதாகப் இப்பாடலைக் கண்ணங்கூத்தனார் பாடியுள்ளார். தலைவன் விரைவில் திரும்பி வருவான் என்பதற்கு அவள் கூறும் ஏதுக்கள் ஏற்புடையவை. கார் காலத்தில் ஞாயிற்றின் கடுமையான கதிர்கள் வறுமையுற்றன. கார் வளம் பெற்றது. மழை பொழிவதால் நெடுங்காட்டில் உள்ள மரங்களில் புதுத் தளிர்கள் தோன்றுகின்றன மகரக்குழை அணிந்த தலைவியே! ‘இப்பொழுதே நம்மவர் (நம்தலைவர், நமர்) வருவார்’ என்ற செய்தியைத் தாங்கிக் கொண்டு அவர் விடுத்த தூதாக எழில் வானம் மின்னுகிறது! என்று கூறுகிறாள் நல்ல கற்பனை! இனிய உரை தலைவிக்கு நம்பிக்கை தருவதாக உள்ளது.

# VII. முத்தொள்ளாயிரம்

மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியரைப் பற்றிய தொள்ளாயிரம் பாக்கள் கொண்ட நூலிற்கு **முத்தொள்ளாயிரம்** என்பது பெயராயிற்று. இதனைப் பாடியவர் பெயர் தெரியவில்லை. வெண்பா யாப்பில் பாடப்பெற்ற வரலாறும் கற்பனையும் கலந்த இலக்கியம் முத்தொள்ளாயிரம் ஆகும். **புறத்திரட்டு** என்ற நூலில் இந்நூலின் வெண்பாக்கள் 108 தொகுக்கப்பெற்றுள்ளன. அவற்றுடன் உரைமேற்கோளாகக் கிடைக்கும் 22 வெண்பாக்களையும் சேர்த்து முத்தொள்ளாயிரத்தினைத் தாம் எழுதியுள்ள உரையுடன் ந.சேதுரகுநாதன் கழக வெளியீடாக 1946இல் வெளியிட்டுள்ளார். இந்நூலினை முதன்முதல் **செந்தமிழ்** இதழின் வழி வெளியிட்ட பெருமை மகாவித்துவான் ரா.இராகவையாங்காரைச் சாரும். டி.கே.சி.பதிப்பும் உண்டு. '**குறுவெண் பாட்டிற்கு அளவு எழுசீரே**' என்ற தொல். செய்யுளியல் நூற்பா உரையில், பதினெண் கீழ்க்கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரத்தும் ஆறடியில் செய்யுள் செய்தார் பிற் சான்றோரும் எனக் கொள்க என்று பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் குறித்துள்ளனர். பிறசான்றோர் - சங்கச் சான்றோர்க்குப் பின்வந்த [சங்கம் மருவிய காலத்துப்] புலவர்கள்.

## VII.1. நூலின் காலம்

நக்கீரதேவநாயனார் (கி.பி.600) பாடியுள்ள **ஈங்கோய்மலை எழுபது, கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி** ஆகியவற்றின் வெண்பாக்கள் சில முத்தொள்ளாயிர வெண்பாக்களுடன் ஒத்துள்ளன. கி.பி.400 அளவில் தோன்றிய **பழமொழி நானூற்றின்** பாடல் அடிகள் முத்தொள்ளாயிரப் பாடலடிகளுடன் ஒத்துள்ளன. எ.கா.

1. நீர்ஒ முகப் பால் ஒழுகா வாறு. — பழ.206
   நீர்ஒழுகப் பால் ஒழுகா வாறு. — முத்தொள்.56
2. ஆமா உகளும் அணிவரை — பழ.341
   ஆமா உகளும் அணவரை — முத்தொள்.12

எனவே, நக்கீரதேவரின் காலத்திற்கு முற்பட்டும் பழமொழி நானூற்றின் காலத்திற்குப் பிற்பட்டும் கி.பி. 500 அளவில் முத்தொள்ளாயிரம் பாடப்பெற்றது எனலாம். சிலப்பதிகாரத்தில் மூவேந்தரும் ஒப்ப மதிக்கப்படுதல் போல் முத்தொள்ளாயிரத்திலும் போற்றப்படுதல் குறிப்பிடத்தக்கது. அரசர் பெயர்களை அவர் பிறந்த நாள் மீன் (-நட்சத்திரம்) பெயரில் சுட்டுதல் இந்நூலின் தனிச்சிறப்பு.

அரசரை, இரேவதி, உத்திராடம் என்றெல்லாம் இந்நூலார் குறித்துள்ளார். இம்மரபு சேர நாட்டில் நடை முறையில் இருந்துள்ளது.

## VII.2. சிலபாடல்கள்

முத்தொள்ளாயிர இலக்கிய வளத்திற்குச் சிலபாடல்களை எடுத்துக் காட்டலாம். இந்நூலின் முற்பகுதியில் பாண்டியனும் அடுத்துச் சோழனும் பின் சேரனும் பற்றிய வெண்பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மாறன் (-பாண்டியன்) களிற்றின் பேராற்றலைப் புனைந்துரைக்கும் பாடல் ஒன்றினைப் பார்ப்போம்.

*மருப்(பு) ஊசி யாக மறங்கனல்வேல் மன்னர்*
*உருத்தகு மார்(பு) ஓலை யாகத் - திருத்தக்க*
*வையகம் எல்லாம் எம(து) என்(று) எழுதுமே*
*மொய்யிலைவேல் மாறன் களிறு*

மாறனின் களிறு தன் தந்தத்தினையே எழுத்தாணியாகக் கொண்டு, பகை மன்னரின் வடிவான மார்பினை எழுதும் ஓலையாக வைத்து, வளம்மிக்க உலகம் எல்லாம் எம்முடையது என்று வெற்றிச் சாசனத்தை வரையும்! பாண்டியனின் களிற்றின் மறத்தினைக் கற்பனையாக இப்பாடலில் புலவர் சுவைபடச் சொல்லியுள்ளார். உருவக அணி அமைந்த இப்பாடலில் உயர்வு நவிற்சியணியும் ஒளிர்கிறது.

**சோழனைப் பற்றிய பாடல்**

*மந்தரம் காம்பா மணி விசும்பு ஓலையாத்*
*திங்கள் அதற்(கு)ஓர் திலதமா- எங்கணும்*
*முற்றுநீர் வையம் முழுதும் நிழற்றுமே*
*கொற்றப்போர்க் கிள்ளி குடை*

போரில் வெற்றியே பெறும் கிள்ளியின் (-சோழன்) கொடைக்கு மந்தரமலையே (இமயம்) காம்பாகும். நீல விசும்புதான் ஓலை (மேல் கூரை). முழு நிலாவே திலகம் போன்ற அதன் நடுவட்டம். இப்பெருங்குடை உலகம் முழுமைக்கும் தண்ணிழல் தரும். உருவக அணி அமைந்த உயர்வு நவிற்சியணியே இப்பாடலிலும் ஓங்கியுள்ளது.

**சேரனைப் பற்றிய பாடல்**

*அள்ளற் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ*
*வெள்ளம்தீப் பட்டதென வெரீஇப் - புள்ளினம்தம்*
*கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ*
*நச்சிலைவேல் கோக்கோதை நாடு*

வேலேந்திய கோக்கோதை (-சேரன்) நாட்டின் சிறப்பு கூறப்படுகிறது. சேற்று வயலில் உள்ள செவ்வாம்பலின் இதழ்விரிய, அந்த வயலின் நீர் நிலைதான் தீப்பற்றிக் கொண்டதோ என்று அஞ்சிய பறவைகள் தம் கையாகிய சிறகினால் குஞ்சுகளை அணைத்தெடுக்கும் ஆரவாரத்தை உடையது சேரனின் நாடு என்று வளம் கூறப்பட்டது. இப்பாட்டிலும் முன்புபோல் உருவக அணியும் உயர்வு நவிற்சி அணியும் வந்தன. புலவரின் இயைபுக் கற்பனைத் திறனும் (Associative Imagination) படைப்பாற்றலும் அழகுணர்ச்சியும் முத்தொள்ளாயிரத்தின் இலக்கியத் தரத்தினை உயர்த்துவன எனலாம்.

# VIII. சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்ற ஐந்து இலக்கியங்களையும் ஐம்பெருங்காப்பியங்களாகப் போற்றும் மரபு மயிலைநாதர் காலத்துக்கு முன்பே தோன்றியுள்ளது. இவற்றுள் முதல் மூன்றும் முழுமையாகக் கிடைத்துள்ளன. பின்னிரண்டின் சில பாடல்கள் தவிர எஞ்சியவை கிடைக்கவில்லை. காலத்தால் தொன்மை வாய்ந்தவை சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஆகும். **பூம்புகார் கடல் கொள்ளப்படுவதற்கு முன்பு சிலப்பதிகாரம் கி.பி.300 அளவில் பாடப்பெற்றிருத்தல் வேண்டும்.**

## VIII.1. காப்பியம் பாடக் காரணம்

சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் பாடப்பெற்ற ஒப்பற்ற **நிலக்காப்பியம்** ஆகும். காவிரிப்பூம்பட்டினத்துப் பெருஞ்செல்வ வணிகன் மாசாத்துவானின் மகன் **கோவலன்,** அதே நகரில் வாழ்ந்த மற்றொரு பெருங்குடி வணிகன் மாநாய்கன் மகள் **கண்ணகி,** ஆடல் பாடல் அழகு மூன்றும் முற்றிய கலையரசி **மாதவி** ஆகிய குடிமக்களைக் காப்பியத்தின் முதன்மைக் கதை மாந்தராக [Characters] அமைத்து இக்காப்பியத்தினை இளங்கோ முப்பது காதைகளில் படைத்துள்ளார். **1. அரசியல் பிழை புரிந்தவரை அறமே கூற்றாகவந்து ஒறுக்கும், 2. பத்தினிப் பெண்ணைப் பாரோர் போற்றுவர், 3. ஊழ்வினை உருஎடுத்து வந்து உரியவனை நுகர்விக்கும்** என்ற மூன்று உண்மைகளை உணர்த்தவே இக்காப்பியம் பாடப்பட்டதென்று இதன் பதிகச் செய்யுள் பகர்கிறது. **ஆயினும் வேறுபல காரணங்களும் காப்பிய ஆக்கத்திற்கு உறுதுணையாக அமைந்துள்ளன.**

இளங்கோவடிகள் வாழ்ந்த காலம் தமிழகம் மூவேந்தராலும் வேளிர் பலராலும் ஆளப்பட்டுச் சிதறிக் கிடந்தது. **ஒருமொழி, ஒருநாடு, ஓர் இனம் என்ற ஒற்றுமை உணர்ச்சியை உருவாக்கித் தமிழகத்தை ஐக்கியப்படுத்த எண்ணிய பேரார்வமே காப்பியம் பாடுவதற்குத் தலையாய காரணமாகத் தோன்றுகிறது.** சோழநாட்டில் பிறந்து பாண்டிய நாட்டில் அறத்திணை நிலைநாட்டி, சேரநாட்டில் கோயில் கொண்ட செல்வியின் கதையினைக் காப்பியக் கருவாக இளங்கோ கொண்டார். **மூன்று நாடு, மூன்று நகர், மூன்று ஆறு** [காவிரி, வையை, ஆன்பொருநை] என்று மூன்றையும் ஒருநிகராகப் பாடியுள்ளதன் வாயிலாகத் **தமிழ்த்தேசியத்தை** [Tamil Nationalism] வளர்த்துள்ள சிறப்பு இளங்கோவையே சாரும். புகார்,

மதுரை, வஞ்சி என்று மூன்றெழுத்தில் பெயர் பூண்ட நகர்வளத்தினை நயமுறப் பாடியுள்ளார். புகார்க்காண்டத்தைப் பாடுவதற்குப் பொருநராற்றுப்படையும் பட்டினப்பாலையும் வழிகாட்டின. மதுரைக் காண்டத்தைப் பாடுவதற்கு மதுரைக்காஞ்சி உதவியது. வஞ்சிக்காண்டத்தைப் பாடுவதற்குப் பதிற்றுப்பத்துப் புலமை பெரிதும் பயன்பட்டது.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்க் காப்பியமாகவும் இதனைப் பாடியுள்ளார். காதைகளாக வருவன பலவும் இயல்தமிழ். கானல்வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வாழ்த்துக்காதை உள்ளிட்டவை ஆடலும் பாடலுமாக அமைந்து இசைத்தமிழாகவும் நாடகத் தமிழாகவும் விளங்குவன. நாடகக் காப்பியம் என்பது சிலப்பதிகாரத்திற்கு மறுபெயர். இக்காப்பியத்தினை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகவும் படைத்துள்ளார். அரங்கேற்று காதையினை நூலுக்குள் ஒரு நூலாகப் பாடியுள்ளார். பண்டைத் தமிழரின் கலைக்களஞ்சியமாக அரங்கேற்றுகாதை அமைந்துள்ளது.

வடவேந்தன் தென்னிலங்கையினை வென்ற செய்தியைப் பாடும் இராமாயணம். ஆனால், தென்தமிழன் வடவேந்தரை வென்று வாகை சூடி அருந்தமிழாற்றலை உணர்த்தி அவர் முடியின்மேல் இமயக்கல்லினை எடுத்து வந்து காப்பியத் தலைவி கண்ணகிக்குக் கோயில் கட்டிய கொற்றத்தினைப் பாடுவது சிலப்பதிகாரம்.

பொதுமக்களாகிய திணைமக்களின் வாழ்வியலையும் நம்பிக்கைகளையும் கலைகளையும் பண்பாடுகளையும் பதிவு செய்வதற்கும் இக்காப்பியத்தினை இளங்கோ எழுதியுள்ளார். முடிமக்களின் சிறப்பெல்லாம் உழவராகிய குடிமக்களின் சிறப்பே எனப்பாடுகிறார்.

> பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்
> இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
> உழவிடை விளைப்போர் பழவிறல் ஊர்களும் 10.148-150

என வரும் பகுதி காணத்தக்கது.

காவிரித் தாயின் செல்லப் பிள்ளைகள் உழவர்கள் என்று உயர்த்திப் பாடுகிறார். இரந்து வருவோரைப் பேணும் புரவலர் இவர்கள். நாட்டைப் புரக்கும் வேந்தனின் வெற்றியைத் தீர்மானிக்கும் பேராற்றலும் இவர்களே என்ற மேம்பட்ட கருத்தினை இளங்கோ பாடியுள்ளார்.

பரதம் தென்னாட்டிற்கே உரிய ஆடற்கலை. பரதம் என்ற நாடகத்தமிழ் நூல் பண்டு இருந்தது என்பதை அடியார்க்கு நல்லார் குறித்துள்ளார். இதுவே பரத முனிவரின் நாட்டிய சாத்திரத்திற்கு முதல் நூலாக இருந்திருத்தல் வேண்டும். மாமன்னன் இராசராசன் எழுப்பிய தஞ்சைப் பெரியகோயில், தில்லை நடராசர் கோயில் உள்ளிட்ட பல கோயில்களில் ஆடற்கலையின் கரணச்சிற்பங்கள் செதுக்கப்பெற்றுள்ளன. இறைவனையே ஆடல் வல்லானாகக் கண்டவர் தமிழர். ஆடற்கலையின் மாட்சி தெரிக்கவே மாதவி என்னும் மங்கையைப் படைத்துள்ளார் இளங்கோ. பரதக் கலையில் வல்லவரைப் பரத்தை என்று பழம் தமிழகம் வழங்கியது. [காண்க: **T.Burrow, Collected Papers on Dravidian Linguistics**, p.220]. கலைவாழ்வில் ஈடுபடுவோரிடம் கற்பினை எதிர்பார்ப்பது அரிதெனக் கருதிய சமுதாய அமைப்பில் கலையரசியாகிய மாதவியைக் கண்ணகிக்கு நிகராக ஒப்பற்ற பாத்திரமாக இளங்கோ படைத்துள்ளார். பெண்ணின் பெருமைக்காக, பெண்ணின் உரிமைக்காகக் குரல் கொடுத்த முதற்காப்பியக் கவிஞர் இளங்கோவே.

இளங்கோ காலத்தில் பல்வேறு நம்பிக்கைகள் இருந்தன. திணைத்தெய்வ வழிபாடு சிறப்புற்றிருந்தது. தமிழர் வணங்கிய கடவுட்கோயில்களையும் ஞாயிறு, திங்கள், மழை முதலிய இயற்கை வழிபாட்டினையும் சிலப்பதிகாரத்தில் பார்க்கிறோம். ஆசீவகம், சமணம், பௌத்தம் ஓங்கியிருந்தன. ஒரே குடும்பத்தில் பல சமயச் சார்பினரைப் படைத்துக் காட்டுகிறார் இளங்கோ. கோவலன் தன்மகள் மணிமேகலைக்கு தன் முன்னோனைக் கடற்பயணத்தின்போது காப்பாற்றிய மணிமேகலா தெய்வம் என்னும் பௌத்தத் தெய்வத்தின் பெயரினை நன்றியுணர்வோடு சூட்டினான். அவன் தந்தை மாசாத்துவான் பௌத்தம் தழுவியவன். கண்ணகியின் தந்தை மாநாய்கன் ஆசீவகத்தை அடைந்தவன். கோவலன், கண்ணகி இருவர்க்கும் வழித்துணையாக வந்த தவந்தரு சிறப்பின் கவுந்தி அடிகள் சமண நெறியினர். இவர்களை அடைக்கலமாக ஏற்றுப் புகலிடம் அளித்த மாதிரி திருமால் நெறியினள். இடையில் இவர்களைச் சந்தித்து உரையாடிய மாடல மறையோன் வைதீக நெறியினன். கண்ணகியைக் கொங்கச்செல்வி, குடமலையாட்டி, தென்தமிழ்ப் பாவை, தவக்கொழுந்து, ஒருமாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி எனப் போற்றிய சாலினி கொற்றவை வழிபாட்டினள். கண்ணகியைப் போலும் நம் குலக்கோர் இருந்தெய்வம் இல்லையாதலின், இவளைத் தெய்வமாகப் போற்றுவீர் எனக் கூறிய குறிஞ்சி நிலத்தவர்

முருகனை வழிபடுவோர். கண்ணகிக்குக் கோயில் எடுத்த செங்குட்டுவனோ சிவனை மறவாச் செம்மல். இங்ஙனம் இளங்கோ படைக்கும் உலகில் சமயக் காழ்ப்பின்றி மனச் செம்மையுடன் மக்கள் இன்புற்று வாழ்ந்த நிலையினைப் பொலிவுறப் பாடிய பொதுமைப் பாவலர்.

எனவே, ஒற்றுமைக் காப்பியமாகவும், நிலக்காப்பியமாகவும், முத்தமிழ்க் காப்பியமாகவும், குடிமக்கள் காப்பியமாகவும், புரட்சிக் காப்பியமாகவும், சீர்திருத்தக் காப்பியமாகவும், பொதுமைக் காப்பியமாகவும் இளங்கோ சிலப்பதிகாரத்தினைப் படைத்துள்ளார் என்பது தெள்ளிதிற் புலனாகும்.

## VIII.2. சீரிய சிந்தனைகள்

காப்பியம் வெறும் பொழுது போக்குக்காகவும் இன்ப நுகர்ச்சிக்காகவும் மட்டுமே பாடப்படுவதில்லை. ஒரு சிலரை உயர்த்திப் பாடுவதற்காக மட்டுமே எழுதப்படவில்லை. சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகளைக் கூறுதல் இலக்கியப் படைப்பின் நோக்கம் என்பது நம்மரபு. சமுதாயத்திற்குச் சிறந்த செய்திகளைக் காப்பியக் கவிஞர்கள் கடமையுணர்ச்சியுடன் வழங்க வேண்டும் என்பதைப் பாவியலார் சுட்டியுள்ளனர். அவ்வகையில் இளங்கோ கூறும் சீரிய சிந்தனைகள் அடங்கிய காப்பியப் பகுதியைக் காண்போம்.

மங்கல வாழ்த்தில் தொடங்கிய காப்பியம் வாழ்த்துக்காதையில் முடிகிறது. சிறப்புடைப் பொருளைப் பிற்படக்கிளத்தல் வேண்டும் என்ற கருத்திற்கு ஏற்பக் காப்பிய முடிவில் ஒரு குட்டித் திருக்குறளை இளங்கோவடிகள் வழங்கியுள்ளார்.

*பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்*
*தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்*
*பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்*
*ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்*
*தானம் செய்யின் தவம்பல தாங்குமின்*
*செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பு இகழ்மின்*
*பொய்க்கரி போகன்மின் பொருள்மொழி நீங்கன்மின்*
*அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்*
*பிறவோர்அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்*
*பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்*
*அறமனை காமின் அல்லவை கடிமின்*

கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது
செல்லும் தேஎத்துக்(கு) உறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென் *30.186-202*

காப்பியத்தின் கருத்தியலாக [Ideology] இப்பகுதி நல்வாழ்விற்கு நெறி காட்டுவது. காப்பியத்தின் குறிக்கோள் உறுதிப்பொருளை உணர்த்துவதாகும் என்ற பாவியலாரின் கொள்கைக்குச் சிலப்பதிகாரம் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

# IX. மணிமேகலை

சிலப்பதிகாரத்தின் தொடர்கதையாக மணிமேகலைக் காப்பியம் திகழ்கிறது. பெருங்குடி வணிகன் கோவலனுக்கும் கலையரசி மாதவிக்கும் பிறந்த மகள் **மணிமேகலையினைக் காப்பியத் தலைவியாகக் கொண்டு இக்காப்பியம் புனையப் பெற்றுள்ளது**. சிலப்பதிகாரத்தினைப் போல் இதில் காண்டப் பகுப்பு இல்லை. முப்பது காதைகளும் ஆசிரிய யாப்பினால் இயன்றவை. இக்காப்பியத்தைப் பாடிய கவிஞர் **மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்** ஆவர். இவர் சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்களை ஆழமாகக் கற்றுப் புலமை பெற்றவர் என்பதற்கு அகச்சான்றுகள் உள்ளன. இவர் காலத்தில் பௌத்த நெறி தமிழகத்திலும், தமிழகத் தொடர்புடைய இலங்கையிலும் சாவகம் [Java] உள்ளிட்ட கிழக்குத் தீவுகளிலும் செழித்து ஓங்கியிருந்தது. பாலியில் உள்ள பிடகங்களையும் அவற்றுக்குப் புத்ததத்தர், தருமபாலர் உள்ளிட்டோர் எழுதிய விளக்கங்களையும் தோய்ந்து பயின்றவர் சாத்தனார். அசுவகோஷன் வடமொழியில் எழுதியுள்ள புத்த சரிதம், மகாவத்து, இலங்காவதார சூத்திரம், இலலித விஸ்தரம் உள்ளிட்ட வடமொழிப் பௌத்த இலக்கியங்களையும் ஆழ்ந்து கற்றவர். எனவே தமிழ், பாலி, வடமொழி ஆகிய மும்மொழிப் புலமையும் மிளிர இக்காப்பியத்தினைப் படைத்துள்ளார்.

சாத்தனார் வாழ்ந்த காலத்தில் பூம்புகாரின் கடற்கரையில் ஒரு சங்கம் இருந்ததைப் புலம்புரிச்சங்கம் பொருளொடு முழங்க [7.114] என்று நிகழ்காலத்தில் குறித்தனர். இச்சங்கத்தின் தலைவராக விளங்கிய புத்ததத்தரின் காலம் கி.பி.5 ஆம் நூற்றாண்டு. ஆதலின், சாத்தனாரும் இவர் காலத்தவர் ஆவர்.

காஞ்சி மாநகரில் பதினெட்டு மொழியினைப் பேசியோர் வாழ்ந்தனர் எனக் கூறுகிறார் [28.221]. அறவண அடிகள், மணிமேகலை, சாதுவன், புண்ணியராசன் ஆகியோரின் பன்னாட்டுப் பயணங்களைப் பாடியுள்ளார். புத்தர் பிரானின் புனித நெறியே எல்லா நெறிகளையும் விட மேம்பட்டது என்பதை நிலைநாட்டுவதே சாத்தனாரின் முதன்மைக் குறிக்கோள். இவர் காலத்தில் இளங்கோவடிகள் காட்டிய சமயப்பொறை [Religious Toleration] காணப்படவில்லை. மாறாகச் சமயக் காழ்ப்பு, சமயப் போர், பட்டிமன்றம் என்பன மணிமேகலையில் சுட்டப்படுகின்றன. பல்வேறு சமயப் படிற்றுரை

[10.77; 21.101] என்று சாத்தனார் மற்றவர்களின் சமயங்களைக் குறை பேசுகிறார். அதற்குக் காரணம் புத்தர் பிரானிடம் கொண்ட வரம்பற்ற நம்பிக்கையும் ஈடுபாடும் ஆகும். **இதனுள் சௌத்திராந்திக யோகாசாரம் என்ற பௌத்தப் பிரிவின் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.**

## IX.1. மணிமேகலையில் சிறு நூல்கள் [Manuals]

மணிமேகலையில் சில காதைகள் தனி நூல்களாக விளங்குகின்றன. சக்ரவாளக் கோட்டம் உரைத்த காதை [6] **பௌத்தப் பிரபஞ்சவியல்** [Buddhist Cosmology] பற்றிய நூலாகும். **சமயக் கணக்கர் தம் திறம்கேட்ட காதை** [27] **இந்தியாவில் தோன்றிய முதல் சர்வதரிசன சங்கிரகம்** [First Compendium of Various Systems of Indian Philosophy]. **தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை** [29] **தமிழில் தோன்றிய பௌத்த அறிவுக்கோட்பாட்டியல்** [Manual of Buddhist Epistemology] **ஆகத் திகழ்கிறது**. இறுதியாகவுள்ள **பவத்திறம் அறுகெனப் பாவைநோற்ற காதை** *(30)* **பௌத்தத் தத்துவவியல்** [Manual of Buddhist Philosophy]. பௌத்தத் தத்துவத்தைக் காஞ்சி மாநகரில் போதுசத்துவர் **அறவண அடிகளிடம்** அறச்செல்வி **மணிமேகலை** பாடம் கேட்பதற்கு முன்பாகப் புறச் சமய, தத்துவக் கோட்பாடுகளை அத்துறைவல்ல அறிஞர்களிடம் கேட்டறிந்தாள். பின்னர், மெய்ப்பொருளை நிலைநாட்டுவதற்கு உறுதுணையாக விளங்கும் பௌத்தர்க்குரிய அளவைக் கோட்பாட்டினையும் அதன்பின் பௌத்தத்தின் மையக் கோட்பாடாகிய **பன்னிரு சார்புகளின் தோற்றமும் நீக்கமும், யோகப் பயிற்சிகளையும் அறவணரிடம் பாடம் கேட்டுத் தெளிகிறாள்.** பின்னர், பிறவிப் பிணி நீங்கத் தவத்திறம் பூண்டு நோன்புமேற் கொண்டனள் என்று காப்பியத்தினை முடித்துள்ளார்.

## IX.2. துறவு வலியுறுத்தல்

இல்லறத்தைவிட, சாத்தனார் துறவறத்தையே கூடுதலாக வரையறுத்துள்ளார். **சோழ** இளவரசன் உதயகுமரன் **மணிமேகலையினை அடையப் பன்முறை விரும்பினான். ஒருமுறை அவள் மனமும் அவன்பின் சென்றது.** இதற்குக் காரணம் பழம்பிறப்பில் இருவரும் **இராகுலன், இலக்குமி** என்ற பெயருடன் கணவன் மனைவியாக வாழ்க்கை நடத்தியதே என்பதையும் சாத்தனார் குறித்துள்ளார். இப்பிறவியில் அவ்விருவரும் இணைவதைத் தடுத்து நிறுத்திய சாத்தனார்,

> **புதுவோன் பின்றைப் போனதுஎன் நெஞ்சம்**
> **இதுவோ அன்னாய் காமத்து இயற்கை**

*இதுவே ஆயின் கெடுக அதன்திறம்* [5.89-91]

என மணிமேகலையினைக் கூறவைத்துத் துறவுநிலை நோக்கிக் காப்பியத் தலைவியைக் கொண்டு செல்கிறார். **தன்னலம் துறந்து பிறர் துயர் துடைத்துப் பசிப்பிணி போக்கி நல்லறம் பரப்பி நாடெங்கும் சென்று தொண்டாற்றிய அறச்செல்வியாக மணிமேகலையைப் படைத்துள்ளார்.** இளமையில் துறந்தாலும் இளமையினைத் துறக்காதவளாக விளங்குகிறாள். **மணிமேகலை துறவு** என்று இக்காப்பியத்திற்கு ஒரு பெயர் உண்டு. இக்காப்பியத்தில் மணிமேகலையின் துறவுடன் **மாதவி, சுதமதி, இராசமாதேவி, மாசாத்துவான், ஆபுத்திரன், விசாகை, தருமதத்தன்** உள்ளிட்ட பலரின் துறவு நிலைகளையும் பேசுவதால் சாத்தனார் துறவுக்கு முதன்மை தந்தவர் என்பது தெளிவு.

சமுதாயத் தொண்டர்களாகிய போதிசத்துவர்களையும் மணிமேகலையில் காண்கிறோம். இவர்கள் வரிசையில் **1.கோவலனின் முன்னோன் 2.சங்க தருமன், 3. புண்ணியராசன், 4.அறவண அடிகள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்களில் அறவண அடிகள் பலதலைமுறைகளைக் கண்ட ஒப்பற்ற போதிசத்துவராவர். காஞ்சி மாநகரில் வாழ்ந்த பௌத்தப் பேரறிஞர் தருமபாலரைத்தான்** [கி.பி.500] **சாத்தனார் அறவணராகப் படைத்துள்ளார் என்பது ஆய்வினால் புலனாகின்றது.**

## IX.3. சீரிய சிந்தனைகள்

பசிப்பிணி போக்கும் பேரறத்தினைச் சாத்தனார் வலியுறுத்தியுள்ளார். இதற்காகவே அமுத சுரபியைப் படைத்துள்ளார். இதில் முதன்முதல் உணவு படைத்தவள் ஆகிய ஆதிரை,

*பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுகென*
*ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்தென்* 16.134-135

என்று உலகம் முழுதும் பசியார வேண்டும் என்று விரும்பியதாகக் காண்கிறோம். மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் உணவும், ஆடையும், இருப்பிடமும் ஆகும். இவை நிரம்பப் பெற்றால்தான் ஒரு நாடு நல்ல நாடாக இருக்கமுடியும். அடிப்படைத்தேவைகள் நிறைவுறாத நிலையில் அல்லற்படும் மக்கள் நீதியையும் நேர்மையினையும் நினைக்க முடியுமா? மெய்யியல் கருத்துக்கள் எளிய மாந்தரிடம் சென்று சேருமா? வறட்டுத் தத்துவங்களைப் பரப்புவதுதான் சமயப்பணி என்று எண்ணாமல் சாத்தனார் மக்கள் தேவைகளை நிறைவு செய்வதுதான் தலையாய அறப்பணி என்று

எண்ணினார். எனவேதான், **அறம் என்பது யாது?** என்ற கேள்விக்கு விளக்கம் தரும்பொழுது திருவள்ளுவர் கூறிய **மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம்** என்றோ, **அறன் எனப்படுவது ...** கொல்லாமை என்றோ கருத்தியல் விளக்கங்களைக் கூறவில்லை. தமிழிலக்கிய வரலாற்றிலேயே முதன்முதலாக, அடிப்படைத் தேவைகளை நிரப்புவதுதான் அறம் என்ற புதிய விளக்கத்தினை சாத்தனார் மொழிந்துள்ளார்:

*அறம்எனப் படுவது யாதெனக் கேட்பின்*
*மறவா[து] இதுகேள்; மன்னுயிர்க்[கு] எல்லாம்*
*உண்டியும் உடையும் உறையுளும் அல்லது*
*கண்டது இல்* மணி.25.228-233

இக்கொள்கை இக்காலத்துச் சமதருமக் கோட்பாட்டுடன் ஒத்திருத்தல் உணரத்தக்கது. இங்ஙனம் புதிய சிந்தனைகள் பற்பல பழைய இலக்கியங்களில் பதிவாகியிருத்தலை எண்ணிப் பார்த்து இன்புறலாம்.

சாதிபேதமற்ற சமுதாயத்தைச் சாத்தனார் படைக்க விழைந்துள்ளார். ஆபுத்திரன் வைதிக அந்தணர்களை நோக்கிப் பேசும் உரையில் சாதி கண்டிக்கப்படுகிறது [*13.63-69; 93-99*].

சுத்தபிடகம் மஜ்ஜிமநிகாயத்தில் சம்மாதிட்டி சுத்தத்தில் சொல்லப்பட்டுள்ள பத்துத் தீ வினைகளையும் அழகிய தமிழில் அதர்ப்பட யாத்து, அவற்றை அறவே விலக்குதல்தான் நல்லறம் என்று நவின்றுள்ளார். அப்பகுதியைக் காண்போம்.

*தீவினை என்பது யாது? என வினவின். . .*
*கொலையே களவே காமத் தீவிழைவு*
*உலையா உடம்பில் தோன்றுவ மூன்றும்*
*பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்*
*சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும்*
*வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சி என்(று)*
*உள்ளம் தன்னில் உருப்பன மூன்றும் எனப்*
*பத்து வகையால்; பயன்தெரி புலவர்*
*இத்திறம் படரார்* [24.123-134; 30.64-75]

இவையனைத்தும் திருக்குறளில் முன்னமே திருவள்ளுவரால் பேசப்பட்ட அறங்கள் ஆகும். சாத்தனார்,

*தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்*
*பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்* [22.59-61]

என்று திருவள்ளுவரை மட்டுமே **பொய்யில்லாத புலவர்** என்றும் அவர் புகன்ற உரைகளையே **பொருளுரை** என்றும் போற்றி ஏனையோர் சொற்களைப் **படிற்றுரை** [*10.77; 21.101*] என்றும் இகழ்ந்தொதுக்கினார். **சாத்தனார் நோக்கில் திருவள்ளுவர் புத்தநெறியினராகக் காட்சி தருகிறார்.** முடிவாக,

> **பசியும் பிணியும் பகையும் நீங்கி**
> **வசியும் வளனும் சுரக்க** [*1.70-71*]

என்று இயம்பியுள்ளார். நாட்டுமக்கள் யாவரும் **பசி, பிணி, பகை** என்ற மூன்றினின்றும் விடுபட்டுப் பருவ மழையும் பல்வகை வளமும் பெற்று வாழியர் என்று வள்ளுவர் வழிநின்று வாழ்த்தியுள்ளார். இவ்வாழ்த்தினால் சாத்தனாரின் மனிதநேயப் **புலனாகின்றது.**

# I. செம்மொழிச் சமற்கிருத இலக்கியம்

## I. முன்னுரை

சமற்கிருதம் [Samskrita] என்ற சொல்லிற்குச் செப்பம் செய்யப் பெற்ற மொழி என்பது பொருளாகும். இம்மொழி இந்திய நாட்டின் வடபகுதியில் வழங்கியதால் வடமொழி என்ற சொல்லினால் இதனைத் தமிழர் குறித்தனர். சமற்கிருதம் இந்திய ஐரோப்பிய மொழிக் குடும்பத்தினைச் சார்ந்தது. இம்மொழிக்குரிய ஆரியர்கள் கி.மு 2000 அளவில் வடமேற்குப் பகுதியிலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்கள் என்பது ஆராய்ச்சியாளரின் துணிபு. இம்மொழியாளர்க்கு உரிய மூலஇலக்கியம் இருக்குவேதம் ஆகும். இதன் காலம் கி.மு 1500 என்று கணிக்கப்பட்டுள்ளது. **இவ்விலக்கியத்தில் தமிழ்ச் சொற்கள் பல காணப்படுகின்றன என்ற உண்மையினை ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் தாமஸ் பர்ரோ** நிறுவியுள்ளார். வேதகால வடமொழிக்கும் இலக்கண ஆசிரியராகிய பாணினியின் காலத்து வடமொழிக்கும் வேறுபாடுகள் உண்டு.

வடமொழி இலக்கிய வரலாற்றினை விரிவாக எழுதிய **விண்டர்நீட்சு, ஏ.பி.கீத்து, எஸ்.என்.தாஸ்குப்தா** ஆங்கிலக் கலைக்களஞ்சியத்தார் உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் வேத இலக்கியம், சூத்திர இலக்கியம், இதிகாச இலக்கியம், **செவ்வியல் இலக்கியம்** (classical literature), பிற்கால இலக்கியம் என்று ஐந்து வகைப்படுத்தி ஆராய்ந்துள்ளனர். இவற்றுள் **செவ்வியல் இலக்கியம்** என்பது கி.பி 400-800 என்ற காலப்பரப்பில் தோன்றியுள்ள **காப்பியம், நாடகம், தூது, சதகம், புராணம், கதை இலக்கியம், பிரசஸ்தி** (- மெய்க்கீர்த்தி) **இலக்கியம்** என்பன குறிப்பிடத்தக்கவை ஆகும். இக்காலப்பகுதியில் தோன்றிய பல்வகைப்பட்ட இலக்கியப் படைப்புக்களின் தாக்கம் பின்னர் எழுந்த இலக்கியங்களின் அமைப்பிலும் உள்ளடக்கத்திலும் பெரும்பதிவினை ஏற்படுத்தியுள்ளது.

முதலியலில் வடமொழிச் செவ்வியல் இலக்கியத்தின் முதற்பகுதியாகிய காப்பிய இலக்கியங்கள் பற்றிய அடிப்படைக் கருத்துக்களை ஆராய்ந்து காண்போம். காளிதாசனுக்கு முன்பே **அசுவகோஷர்** ஒப்பற்ற காப்பியங்களைப் பாடியிருப்பினும் அவரைப் பௌத்தர் என்பதற்காகப் போலும் வைதிகர் அவர் படைப்புக்களுக்கு முதன்மை கொடுக்கவில்லை. என்றாலும் தொடர்பு கருதி அவருடைய காப்பியங்களைக் குறித்துச் சுருக்கமாகக்

றுதல் பொருத்தமாகவிருக்கும். காப்பியங்களைப் பற்றி ஆராய்வதற்கு முன்னர், பல்வகைக் காப்பியங்களையும் ஆழ்ந்து பயின்று, அவற்றின் கட்டமைப்பினையும் கருத்தமைதியையும் ஆராய்ந்து வடமொழிப் பாவியலார் உருவாக்கிக் கொடுத்துள்ள காவிய இலக்கணம் குறித்து அறிந்து கொள்ளுதல் பெரும் பயன் தரும். எனவே, காவிய இலக்கணம் குறித்து முதலில் நோக்குவோம்.

# II. காவிய இலக்கியம் (காப்பியம்)

## II. காவிய இலக்கணம்

பெருங்காப்பியம் **மகாகாவியம்** என்று வழங்கப்படும். பல சர்க்கங்களால் யாப்புறுதலின் இதனைச் சர்க்கபந்த காவியம் என்றும் கூறுவர். கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சி மாநகரில் ஆட்சிபுரிந்த இராசசிம்ம பல்லவனின் அவைக்களப்புலவராக விளங்கிய தண்டி என்பார் தாம் எழுதியுள்ள காவியாதரிசம் என்னும் அணி இலக்கண நூலில் பெருங்காப்பியத்திற்குச் சொல்லியுள்ள இலக்கணம் யாவும் தமக்கு முற்பட்ட கவிஞர்கள் பாடிய பெருங்காப்பியங்களின் அமைப்பினைக் கருத்திற்கொண்டு கூறப்பட்டன என்பது ஆராய்ச்சியறிஞர்களின் துணிபு. தண்டி கூறும் பெருங்காப்பிய இலக்கணத்தைச் சுருக்கமாகக் காண்போம்:

பெருங்காப்பியத்திற்கு முகமாக இருப்பது வாழ்த்தும் வணக்கமும் (-ஆசீர்நமஸ்க்ரியா), வருபொருள் உரைத்தலும் (-வஸ்துநிர்த்தேசம்) ஆகும். இதற்குரிய கதை இதிகாசத்திலிருந்து அல்லது வேறு போற்றத்தக்க மூலத்திலிருந்து எடுக்கப்பெற்றதாக இருத்தல் வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப்பொருள்கள் நான்கனையும் விளக்குவதாக அமைதல் வேண்டும். உத்தமநாயகனைத் தலைவனாகக் கொண்டிருத்தல் வேண்டும். நகர், கடல், குன்று, பருவம், மதிஉதயம், கதிரவன் உதயம், பொழில் விளையாட்டு, புனல் விளையாட்டு, மது அருந்தல், தேர்த்திருவிழா (காப்பியத் தலைவனின்) திருமணம், மக்கட்பேறு, கூடல், பிரிதல், மந்திராலோசனை, தூது போதல், பயணங்கள், போர், வெற்றி ஆகியவற்றைப் பெருங்காப்பியம் விரித்துரைத்தல் வேண்டும். **இரசம்** (சுவை) **பாவம்** (குறிப்புப்பொருள்), **அணி** இவை நிரம்பியிருத்தல் வேண்டும். காதிற்கு இனிமையாகவும் (அறிஞர்களால் மட்டுமன்றி) உலகத்தாராலும் விரும்பப்படுவதாய் அமைதல் வேண்டும். பல்வேறு பொருண்மைகளைக் கொண்டதாகவும் படைக்கப்பெறும் காவியம் கல்பாந்த காலம் வரை நீடித்து வாழும் (காவியாதரிசம் 15-19).

இப்பின்புலத்துடன் வடமொழியில் வளர்ந்து வந்துள்ள பெருங்காப்பியங்களில் மிகவும் சிறந்தனவற்றைக் குறித்து நோக்குவோம்.

## II.1. புத்தசரிதம்

புத்தர்பிரானின் வாழ்வினை மையமாகக் கொண்டு **அசுவகோஷர்** என்னும் மாக்கவிஞர் புனைந்துள்ள பெருங்காப்பியமே **புத்தசரிதம்** என்று பெயர் பெற்றது. இக்கவிஞர் கி.பி. முதல் நூற்றாண்டில் அரசு புரிந்த கனிஷ்கரின் அவைக்களப் புலவராகப் புகழுடன் விளங்கியவர். மகாயான பௌத்த நெறியைச் சார்ந்தவர். கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் சீன மொழியிலும் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் திபெத்திய மொழியிலும் ஆக்கம் செய்யப்பெற்ற சிறப்புக்குரியது **புத்தசரிதம்**. கி.பி. 671-95இல் இந்திய நாட்டின் பல பகுதிகளுக்குப் பயணம் சென்ற சீன ஞானி **இட்சிங் (Itsing)** என்பார் பண்டைக்காலப் பௌத்த ஆசாரியர்களுள் அசுவகோஷர் சிறந்து விளங்கியவர் என்றும் அவர்தம் நூல்கள் யாவும் கவனத்துடன் பயிலப்பெற்றன என்றும் தன் பயணக்குறிப்பில் சுட்டியுள்ளார்.

அசுவகோஷர் அயோத்தி நகரில் தோன்றியவர். பௌத்தப் பிட்சுவாக வாழ்ந்தவர். **இராமாயணத்தில் வரும் தசரதனைப் போல் புத்த சரித்திரத்தில் சுத்தோதனர் உள்ளார். இந்த இதிகாசத்தில் இராமனும் சீதையும் போற்றப்படுதல் போல் புத்தசரிதத்தில் போதிமாதவன் ஆகிய புத்தரும் அவர்தம் துணைவி யசோதரையும் சிறப்பிக்கப்படுதல் காணலாம்.** சீன, திபெத்திய மொழிபெயர்ப்புக்களில் 28 சர்க்கங்கள் கொண்டதாகப் புத்தசரிதம் காணப்படுகின்றது. புத்தரின் தோற்றம் முதலாக, புத்தர் போதனையினை எங்கும் பரப்பிய மகா அசோகன் ஆட்சி ஈறாக நடைபெற்ற நிகழ்வுகள் இச்சர்க்கங்களில் சுவைநலம் பொருந்தப் பாடப்பட்டுள்ளன. எனின், வடமொழியில் உள்ள புத்த சரிதத்தில் 13 சர்க்கங்கள் மட்டுமே உள்ளன. இவற்றுள்ளும் முதல் சர்க்கத்தில் முக்கால் பாகமே கிடைத்துள்ளது. பதினான்காம் சர்க்கத்தில் 31 பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன.

முதல் சர்க்கத்தில் கபிலவத்து அரசன் **சுத்தோதனனுக்கும்** அவன் பெருந்தேவி **மாயாதேவிக்கும்** போதிசத்துவர் **சித்தார்த்தர்** மகனாகத் தோன்றிய நிலையும், **அசித முனிவர்** அக்குழந்தை எதிர்காலத்தில் பெருஞானியாகத் திகழும் எனக் கூறியதும், மகனுக்குப் பிறப்பு விழா எடுத்ததும் பிறவும் கூறப்பட்டன.

இரண்டாம் சர்க்கத்தில் புத்தரைச் **சர்வசித்தி** என்ற பெயரினால் **அசுவகோஷர்** குறித்தார். இப்பெயரே **சித்தார்த்தன்** என்றும் சொல்லப்பெறும். அவர் யசோதரையினை மணந்து **இராகுலனைப்** பெற்றெடுத்த செய்தி சொல்லப்பெற்றது. மூன்றாம் சர்க்கத்தில் சித்தார்த்தர் (-புத்தரின் இளமைப் பெயர்) பட்டணப் பிரவேசம்

செய்ததும், முதியோன், பிணியாளி, சவம், துறவி ஆகியோரைக் கண்டு வாழ்வியல் உண்மையினை உணர்ந்த செய்தியும் கூறப்பட்டன. நாலாம் சர்க்கத்தில் சித்தார்த்தரின் மனத்தினை உலகியலில் நிலைநிறுத்த மன்னன் சுத்தோதனன் எடுத்த முயற்சிகளும் ஐந்தாம் சர்க்கத்தில் அவை பயன்படாமையும், குதிரைப்பாகன் தொடர்ந்து வர, கந்தகன் என்ற புரவியில் ஊர்ந்து காடு சென்றடைந்த செய்தியும் சொல்லப் பெற்றன. குதிரைப்பாகனை நகரத்திற்குத் திருப்பி அனுப்பிய செய்தி ஆறாம் சர்க்கத்திலும், வனத்தில் இருடிகளின் சந்திப்பு ஏழாம் சர்க்கத்திலும் இடம்பெற்றன. இளவரசரைப் பிரிந்த நகர மக்களின் துயரம் எட்டாம் சர்க்கத்தில் இடம்பெற்றது. மன்னரால் ஏவப்பட்ட அமைச்சரும் அந்தணரும் காட்டிற்கு வந்து இளவரசரை நாட்டிற்கு அழைத்துச்செல்ல எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயனற்றுப் போனமை ஒன்பதாம் சர்க்கத்தில் கூறப்பட்டன. மகத அரசன் சித்தார்த்தரை வசப்படுத்த முயன்றமையும், அவனுக்குச் சித்தார்த்தர் தக்க விடை கொடுத்தமையும் அடுத்துவரும் இரு சர்க்கங்களில் இயம்பப் பெற்றன. அராட முனிவரின் ஆசிரமம், கயாச்ரமம் முதலிய பல முனிவர்களின் இருப்பிடத்திற்குச் சித்தார்த்தர் சென்றமை 12 ஆம் சர்க்கத்தில் இடம் பெற்றது.

பதின்மூன்றாம் சர்க்கத்தில், தவமும் தியானமும் மேற்கொண்டிருந்த சித்தார்த்தரின் மனத்தில் ஆசையை அரும்பச் செய்ய மாரன் எடுத்த முயற்சி பயனற்றுப் போனமையும் சித்தார்த்தரின் மன உறுதிக்கும் அருள் வெற்றிக்கும் வியந்து வானவர் பூமழை பொழிந்தமையும் புகலப்பட்டன. இத்துடன் கதை நிரம்பி விடுவதால், அசுவகோஷரின் மூல இலக்கியத்தில் 13 சர்க்கங்களே இருந்திருத்தல் வேண்டும் .என்பதும் மிகுதியாக உள்ளவை அமிர்தானந்தரால் (கி.பி. 18 நூ.) எழுதிச் சேர்க்கப்பெற்றவை என்பதும் A.B. கீத்து, E.B. கோவெல் உள்ளிட்ட புத்தவியல் பேரறிஞர்களின் துணிபு. ஆங்கிலத்தில் இக்காப்பியத்தினை முதன்முதல் மொழிபெயர்த்த சிறப்பு E.B. கோவெல் அவர்களுக்கு உரியது.

புத்த சரிதத்தில் உருக்கமான ஓரிரு காட்சிகளை இங்குச் சுட்டுதல் தகும். கானகம் சென்ற சித்தார்த்தரை அமைச்சர் முதலியோர் திருப்பி நகர்க்கு அழைத்துவரச் சென்றனர். "இளவரசர் வந்துவிட்டார் என்ற எண்ணத்தில் நகரப் பெண்கள் தம்மாளிகையின் சாளரங்களை நெருங்கிச் சென்றனர். ஆயினும், குதிரையின்மீது இளவரசர் இன்றிக் காணப்பட்டதால் சாளரங்களைச் சார்த்திக்கொண்டு வாய்விட்டு அரற்றினர்."

இதனால் இளமையிலேயே புத்தர்பிரான் மக்களிடம் பெற்றிருந்த பேரன்பும், நன்மதிப்பும் தெள்ளிதிற்புலனாதல் காணலாம். தந்தையினைப் பிரிந்து துயரப்படும் மைந்தன் இராகுலன் தன் தாய் யசோதரையின் அவல நிலையினை எண்ணித் துயரப்படுதலையும் அசுவகோஷர் சித்திரம் செய்துள்ளார்:

> ஆழ்ந்த எதிர்பார்ப்புடன் என் தாய், பல்வேறு வலிகளையும் தாங்கிக் கொண்டு தன் கருவில் என்னைத் தாங்கினாள். அவள் முயற்சியாவும் வெறுமை ஆயின. அவள் ஏன் தாயானாள்? நான் ஏன் அவள் மகன் ஆனேன்?....

என்ற பகுதி உள்ளத்தை உருக்குவது.

பல்வேறு யாப்புகளும், அணிகளும் விரவிவர அசுவகோஷர் பாடியுள்ள புத்த சரிதத்தில் கற்பனைகள் மிகுதி. புத்தசரிதத்தில் ஆரிய அட்டாங்க மார்க்கம் என்னும் எண்வகை நெறிகள் எழிலுற விளக்கம் பெற்றிருத்தல் சுட்டத்தக்கது. "நிர்வாணப் பேரின்பம் நோக்கிப் பயணம் மேற்கொண்ட நல்லோனுக்கு நற்காட்சி தான் ஒளிகாட்டும் பெருஞ்சுடர்; நல்லூற்றம்தான் வழிகாட்டி; நல்வாய்மை தான் வழியில் தங்கி இளைப்பாறும் சாவடி; நற்செய்கையே நேர்நிற்கும் நிலை; நல்வாழ்க்கை தான் உணவு; நல்லூக்கமே நடை; நற்கடைப்பிடி தான் மூச்சுக்காற்று; நற்சமாதி (தியானம்) தான் இளைப்பாறும் படுக்கை" என்று உருவக அணிநலம் தோன்ற அசுவகோஷர் பாடியிருத்தல் அறிந்தின்புறத்தக்கது. இக்காப்பியத்தில் சாந்தரசம் மேலோங்கியது. காதற்சுவை, கருணைச்சுவை என்பனவும் காணப்படும்.

அசுவகோஷர் பாடியுள்ள மற்றொரு காவியம் சௌந்தரானந்தம் ஆகும். இதனைப் பற்றிச் சிறிது நோக்குவோம்.

## II.2. சௌந்தரானந்தம்

சுத்தோதனனுக்கு இரண்டாம் மனைவியின் மூலம் தோன்றியவன் நந்தன். ஆதலின் புத்தருக்கு இவன் ஒன்றுவிட்ட இளவல் ஆவன். நந்தன்அழகனாகஇருந்தானாதலின், சுந்தரன் என்றபெயரும் உண்டு. சுந்தரநந்தனை மையமாகக் கொண்டு அசுவகோஷர் பாடிய காவியம் சௌந்தரானந்தம் எனப் பெயர் பெற்றது. பதினெட்டுச் சர்க்கங்களைக் கொண்டது இக்காப்பியம்.இளவலின் வரலாறு இடம்பெறினும் புத்தரின் சரிதமும் இதனுள் விரவியே வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்காப்பியத்தின் முதல் சர்க்கத்தில் தலைநகர் ஆகிய

கபிலவத்துவின் வனப்பும், சிறப்பும் புனைந்துரைக்கப்பெற்றன. இரண்டாம் சர்க்கத்தில் அந்நகரிலிருந்து ஆட்சி புரிந்த மன்னன் சுத்தோதனனின் பெருமையும் அவனுக்குச் சர்வார்த்த சித்தன் (-புத்தர்), நந்தன் என்ற மைந்தர்கள் பிறப்பும் சொல்லப்பெற்றன. மூன்றாம் சர்க்கத்தில் சித்தார்த்தனின் துறவுச் சிந்தனை இடம்பெற்றது. நான்காம் சர்க்கத்தில் நந்தன் தன் மனைவியுடன் புரிந்த காதல் விளையாட்டுக்களும், ஐந்தாவது பகுதியில் சித்தார்த்தரின் போதனையால் நந்தன் துவராடை பெறுதலும் கூறப்பட்டன. நந்தன் துறவறம் மேற்கொள்ளுதலைத் தாங்கிக்கொள்ள இயலாத அவன் மனைவியின் புலம்பல் ஆறாம் சர்க்கத்திலும் உருக்கமாகப் புலப்படுத்தப்பெற்றன. புலனின்பத்தினால் விளையும் அழிவினையும் நிர்வாணப் பேரின்பத்தினால் உண்டாகும் மேன்மையினையும் சித்தார்த்தர் நந்தனுக்கு எடுத்துரைத்தல் எட்டாம் பகுதியில் காணலாம். அகப்பற்று, புறப்பற்று என்பவற்றால் விளையும் தீமைகளைஅடுத்த சர்க்கம் சுட்டுகின்றது. சுவர்க்க உலகத்துப் பேரழகியரை நந்தனுக்குக் காட்டி, அவர்கள் தரும் சுகத்தைவிட, தவத்தால் எய்தும் பேரின்பமே மேம்பட்டது என்று சித்தார்த்தர் போதிப்பது பத்தாம் சர்க்கத்தில் இடம்பெற்றது. மனைவியுடன் கலந்துபெறும் புலனின்பத்தினும் சுவர்க்க இன்பம் மேம்பட்டது என்ற எண்ணத்தில் நந்தன் தவம்புரிய முற்பட்டான். விண்ணக இன்பம் துய்க்கப்பெற்ற பின்னர் மீண்டும் மண்ணகத்தில் பிறந்து பல வினைகள் புரிந்து துன்பம் அனுபவிக்க வேண்டும் என்று எடுத்துரைத்துச் சித்தார்த்தார் நந்தனின் தவத்தைக் கைவிடக் கூறுதல் பதினோராம் சர்க்கத்தில் கூறப்பட்டது. சித்தார்த்தர் தம் நெறிக்குரிய அறக்கோட்பாடுகளை நந்தனுக்குப் போதித்தலும், அவற்றைச் செவிமடுத்த நந்தன் துறவறம் மேற்கொண்டு நிர்வாணப் பேற்றிற்கு (-ஆசைகள் அவிந்த நிலைக்கு) முயல்வதுடன், பிறரையும் ஈடுபடச் செய்தற்கு இசைந்தமை முதலிய செய்திகளும் எஞ்சிய ஏழு சர்க்கங்களில் இயம்பப்பெற்றன.

# III. ஐம்பெருங்காப்பியம்

வடமொழியில் எழுந்த காப்பியங்கள் பலவற்றையும் பயின்றறிந்த பெருமக்கள் ஐந்து காவியங்களைத் தலைசிறந்தவை எனக் கருதி அவற்றைப் **பஞ்சமகா காவியம்** என்று வழங்கினர். அவையாவன. 1. **குமாரசம்பவம்** 2. **இரகுவம்சம்** 3. **கிராதார்ச்சுனீயம் 4. சிசுபாலவதம் 5. நைடதம்** என்பனவாகும். இவற்றுள் முதலிரு காப்பியங்களையும் பாடியவர் **மகாகவி காளிதாசர்** ஆவர். **பாரவி** என்னும் பெருங்கவிஞர் கிராதார்ச்சுனீயம் என்ற காப்பியத்தினைப் புனைந்துள்ளார். **மாககவி** சிசுபாலவதத்தையும் **ஹர்ஷகவி** நைடதத்தினையும் யாத்தவர்கள்.

இந்திய வரலாற்றில் குப்தர்கள் ஆட்சி செய்த காலத்தினைப் **பொற்காலம்** என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவார்கள்.

குப்தரின் பொற்காலத்தில் வாழ்ந்த பெருங்கவிஞர் **காளிதாசர்.** இவர் காலம் கி.பி. 4 அல்லது 5 ஆம் நூற்றாண்டு என்பர். இவர் உச்சயினியில் வாழ்ந்தவர் என்பது பலரின் கருத்து. **தமிழிலக்கியத்தில் கம்பரைப் போலவும் ஆங்கில இலக்கியத்தில் சேக்ஸ்பியரைப் போலவும் வடமொழி இலக்கியத்தில் காளிதாசர் கவிச்சக்கரவர்த்தியாகப் போற்றப்படுகின்றார்.** இவர் பாடியவற்றுள் **குமாரசம்பவம். இரகுவம்சம்** என்பன இரண்டும் பெருங்காப்பியப் பண்புகள் பொருந்திய விழுமிய இலக்கியப் படைப்புக்கள் எனலாம். இவ்விரு காவியங்கள் பற்றிய அடிப்படையான கருத்துக்களைக் காண்போம்.

### III.1. குமார சம்பவம்

குமாரன் முருகனைக் குறிக்கும். சம்பவம்-தோற்றம், பிறப்பு. தீமையின் சின்னமாகிய அசுர சக்தியினை அழித்து நன்மையின் சின்னமாகிய வானவரைக் காக்கும் பொருட்டுச் சிவபாலகனாகக் குமாரக்கடவுள் அவதாரம் செய்தமையினை மையக் கருத்தாகக் கொண்டு காளிதாசர் கற்பனை வளம் கொழிக்கப்பாடிய காவியம் **குமாரசம்பவம்** எனப்பெயர் பெற்றது.

இக்காப்பியத்தில் இப்போது 17 சர்க்கங்கள் இடம் பெற்றிருப்பினும் பேருரையாசிரியர் ஆகிய **மல்லிநாதசூரி** என்பார் முதல் எட்டுச் சர்க்கங்களுக்கு மட்டுமே உரை வரைந்திருத்தலின், அவையே காளிதாசர் பாடியவை என்றும், எஞ்சியவை பின்வந்தோரின் புனைவு என்றும் அறிஞருள் ஒருசாரார் கருதுவர். ஆங்கிலத்தில் இக்காப்பியத்தினை மொழிபெயர்த்த அறிஞர்

எம்.ஆர்.காலே (M.R. Kale) என்பார் கருத்தும் இதுவேயாகும். முதல் எட்டுச் சர்க்கங்களில் உள்ள செய்திகளைச் சுருக்கமாக இங்குக் கூறுவோம்.

முதல் சர்க்கம் இமயமலையின் வருணனையாகத் தொடங்குகின்றது. இமவானுக்கும் மேனா என்ற தேவிக்கும் மைநாகம் என்ற மகனும், பார்வதி என்ற மகளும் தோன்றினர்.

தக்கன் மகளாகிய தாட்சாயணியே இப்போது பார்வதியாக அவதரித்தாள். தாட்சாயணிக்குச் சதி என்ற பெயரும் உண்டு. இளமைப் பருவம் உற்ற பார்வதியிடம் நாரதர் தோன்றிச் சிவனை மணப்பாய் எனக் கூறினார். சதியை இழந்த சிவனும் இமயமலையின் உச்சியில் அவளை அடைதற்குத் தவம் புரிதலையும், தந்தையின் அறிவுரையின்படி அவரை அணுகிப் பார்வதி அஞ்சலி செய்தலையும் முதல் சர்க்கம் கூறுகின்றது.

தாரகன் என்னும் அசுரனால் கொடுமை இழைக்கப்பட்ட தேவர்கள் நான்முகன், இந்திரன் ஆகியோரின் உதவியை நாடியும் பயனில்லை. பார்வதியும், சிவனும் மணந்து தோற்றுவிக்கும் குமாரக் கடவுள் ஒருவரால்தான் தாரகவதம் முடியும் என்று நான்முகன் புலப்படுத்தினான். சிவபார்வதி திருமணம் நிகழ்தற்குக் காமதேவனை அனுப்பும் முயற்சியில் இந்திரன் ஈடுபட்ட செய்தியும், சிவனின் தவத்தினைக் குலைக்க முற்பட்ட காமனை நெற்றிக் கண்ணினின்றும் புறப்பட்ட நெருப்பினால் சிவன் எரித்த செயலும், அஞ்சிய இமவான் தன் மகள் பார்வதியைப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு சென்றமையும், சிவன் மறைதலும் மூன்றாம் சர்க்கத்தில் சொல்லப்பட்டன. காமனின் மனைவி இரதி அனலில் பாய்தற்கு முற்படும் வேளையில், சிவபார்வதி திருமணம் நிகழும் என்றும், காமன் மீண்டும் உயிர்த்தெழுவான் என்றும் காமனும் இரதியும் மீண்டும் இணையலாம் என்றும் அசரீரி ஒலித்தமை நான்காம் சர்க்கத்தின் சாரம் ஆகும்.

சிவனிடம் காதல் கொண்ட பார்வதியின் ஆற்றாமையும், சிவனை மணத்தற்பொருட்டு அருந்தவம் புரிதலும் இளந்துறவி வேடத்தில் சிவன் அவள் முன்தோன்றி உரையாடலும் இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்தலும் ஐந்தாம் சர்க்கத்தின் மையக் கருத்தாகும். தன் தந்தையின் இசைவினைப் பெற்றுத் தன்னை மணக்கும்படி பார்வதி சிவனுக்குக் கூறுதலும், சிவன் ஏவலின்படி வசிட்டரின் மனைவி அருந்ததி தொடர முனிவர் எழுவரும் இமவானைக் காணும்பொருட்டு இமயத்தின் தலைநகர் ஆகிய ஒஷதிபிரஸ்தம் போதலும் பிறவும் ஆறாம் சர்க்கத்தில்

இடம்பெற்றன, அவர்களை வரவேற்று உபசரித்த பர்வதராஜன் சிவனுக்குத் தன் மகள் பார்வதியை மணம் செய்து கொடுக்க இசைந்து நாளும் குறித்த செய்தியைச் சிவனிடம் தெரிவித்து வானகம் சென்ற செய்தி எஞ்சிய பகுதியில் கூறப்பட்டது.

ஏழாம் சர்க்கத்தில் திருமண ஏற்பாடுகள், நகர அலங்காரம், பார்வதியின் ஒப்பனை, சிவனின் ஒப்பனை என்பன புனைந்துரைக்கப்பட்டன. தேவர்கள் முன்பாகத் திருமணம் சிறப்பாக நடந்தமையும், மாமனார் இல்லத்தில் மாப்பிள்ளை ஆகிய சிவன் தங்குதலும் இப்பகுதியில் இயம்பப் பெற்றன.

எட்டாம் சர்க்கத்தில் மணமக்களின் லீலைகள் புனைந்து கூறப்பட்டன. இவ்விளையாட்டுக்கள் யாவும் ஓடதபுரம், மேரு, கைலாயம், மந்தரம், மலயம் முதலிய மலைகளிலும், ஆகாய கங்கையிலும் நந்தவனச் சோலையிலும் நடந்தன. முடிவாக, கந்தமாதன வெற்பிற்குச் சிவனும் பார்வதியும் வந்தனர். சிவன் கதிரவன் மறையும் காட்சியையும் திங்களின் எழுச்சியையும் பார்வதிக்கு உரைத்தலும், கந்தமாதனத்தின் காவல் தெய்வம் நல்கிய தேனைத் தம்பதி இருவரும் பருகுதலும் இன்புற்றிருத்தலும் எட்டாம் சர்க்கத்தில் கூறப்பட்டன.

குமார சம்பவம் என்ற காப்பியப் பெயர்க்குத்தக, குமாரக் கடவுள் பிறப்பதற்குத் தேவையான சூழல்கள் யாவும் முதல் எட்டுச் சருக்கங்களில் கூறப்பட்டமையால், அவர் தோற்றமும் தாரகனை வதைத்துத் தேவரைக் காத்தலும் வெளிப்படையாகக் கூறத்தேவையில்லை என்றும், குறிப்பாக உணர்ந்து கொள்ளுதற்குரியன என்றும், பெருங்கவிஞர்கள் அவ்வாறு குறிப்பாகவுணர்த்திப் பாடும் திறலினர் என்றும் ஆராய்ச்சியாளரில் ஒரு சாரார் கூறுவர். எனினும், எஞ்சிய சர்க்கங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளையும் சுருக்கமாகக் காண்போம்.

ஒன்பதாம் சர்க்கத்தில் கயிலையின் வருணனையும், புற உருவில் வந்த அக்கினி தேவனிடம் பார்வதியுடன் இருந்த சிவன் தன் ஆற்றலை (-ரேதஸ்) வழங்கியதும் இடம்பெற்றன. அதனைத் தாங்க முடியாத அக்கினிக்கடவுள் இந்திரனிடம் விண்ணப்பிக்க, கங்கையில் நீராடி அந்த ஆற்றலை விடும்படி அவன் அறிவுரை கூறினான். முடிவாக, சிவனின் ஆற்றலைப் பெற்ற கங்கை, நீராட வந்த கார்த்திகைப் பெண்கள் அறுவரிடமும் அதனைச் செலுத்த, அதனைப் பெற்ற அப்பெண்கள் கருவுற்றுச் சரவணத்தில் ஆறு குழவிகளை ஈன்றனர் என்ற செய்தி பத்தாம் பகுதியில் இடம்பெற்றது. அறுமுகக் குழவிக்கு அக்கினியும், கங்கையும்,

கார்த்திகை மகளிரும் உரிமை கொண்டாடும் பொழுது பார்வதியும் சிவனும் தோன்றி அக்குழந்தையினைத் தம்முடன் எடுத்துச் சென்று பிறந்தநாள் விழாக் கொண்டாடுதலும் பிறவும் பதினோராம் சர்க்கத்தில் சொல்லப்பெற்றன. இந்திரன் சிவபிரானைப் போற்றி வணங்கி, தேவர் சேனைக்குக் குமாரனைத் தலைவனாக அனுப்ப வேண்டுதல் பன்னிரண்டாம் பகுதியின் பொருளாகும். குமாரன் தேவர் உலகிற்கு வருதலும், அவர் படையுடன் போர்க்குச் செல்லுதலும் அடுத்துவரும் இரு சர்க்கங்களில் கூறப்பட்டன. அசுரர்கள் படை தாரகன் தலைமையில் போர்க்குப் புறப்படுதலும், தீய நிமித்தங்களும் பதினைந்தாம் சர்க்கத்தின் சாரம் ஆகும். இருவர் படைகட்கும் போர் நிகழ்தல் அடுத்த பகுதியிலும், குமாரக் கடவுள் தாரகனைப் பொருது கொன்று வாகை சூடுதல் பதினேழாம் சர்க்கத்தில் சொல்லப்பெற்றன. **சங்க இலக்கியத்தில் சூரபன்மனை முருகன் வென்ற செய்தியும் வள்ளியை மணந்த செய்தியும் கூறப்பட்டுள்ளன. இவை குமாரசம்பவத்தில் சொல்லப் படவில்லை.**

இக்காப்பியத்தில் சிருங்காரச் சுவையும், கருணைச் சுவையும், வீரச்சுவையும் விரவி வந்துள்ளன. **இதற்கு மல்லிநாதசூரியும் அருணகிரியும் உரைவரைந்துள்ளனர்.** மல்லிநாதசூரி ஆந்திரப் பகுதியினர். **தமிழிலக்கிய உரையாசிரியர் ஆகிய நச்சினார்க்கினியார்க்கு ஒப்பானவர். அருணகிரி தமிழகத்தவர்.** காளிதாசரின் மற்றொரு பெருங்காப்பியம் ஆகிய **இரகுவமிசம்** பற்றி அடுத்துக் காண்போம்.

## III.2. இரகுவமிசம்

காளிதாசனின் படைப்பாற்றலும் கற்பனைத் திறனும் மேலோங்கி நிற்கும் படைப்பாக இக்காப்பியம் திகழ்கின்றது. இரகுவைப் பற்றியும் அவன் வமிசத்தார் பற்றியும் விரிவாக இக்காப்பியம் எடுத்துரைக்கின்றது. இதனுள் அமைந்துள்ள 18 சர்க்கங்களில் முதல் எட்டு ரகு என்ற அரசனைப் பற்றியும் பின்வரும் எட்டும் அவன் வமிசத்தவனான **இராமனைக்** குறித்தும், 17 ஆம் சர்க்கம் அவன் பேரனை (குசலனின் மகன்) அதிதியின் வரலாறு குறித்தும் இலக்கியச்சுவை ததும்ப எடுத்துரைப்பன. இவர்கள் யாவரும் சூரிய குலத்தில் வந்தவர்கள் என்பது சுட்டுதற்கு உரியது. இறுதி இரு சர்க்கங்களையும் காளிதாசர் பாடவில்லை என்றும் பின் வந்த கவிஞர் ஒருவர் பாடியவை என்றும் ஒரு சாரார் கருதினர். அதிதிக்குப்பின் வந்த 21 அரசர்களைக் குறித்து 18ஆவது சர்க்கம் பேசுகின்றது. புலனின்பத்தில் திளைத்துச் சிறுமையுற்ற அக்னி வர்ணனைப் பற்றி 19 ஆம் சர்க்கம் கூறுகின்றது. **இக்காப்பியத்தில்**

பிரதான இடத்தில் இருப்பவர்கள் இரகுவும் அவன் வழிவந்த இராகவன் ஆகிய இராமனுமே ஆவர்.

இயற்கை வருணனைகள், போர்க்காட்சிகள், காதற் களங்கள், மக்கட்பேறு, கொடை, வழிபாடு, உறுதிப் பொருள்கள் முதலிய விழுமிய பொருள்கள் இரகுவமிசத்தில் சிறப்பாகப் பாடப் பெற்றுள்ளன. வீரச்சுவை, சிருங்காரச்சுவை, சாந்த ரசம், கருணை முதலிய சுவைகளால் இக்காப்பியம் மாட்சியுறுகின்றது. மல்லிநாதசூரி உள்ளிட்ட முப்பத்து மூவர் இரகுவம்சத்திற்கு உரை வரைந்துள்ளதால் இதன் சிறப்பு நன்குப் புலனாகும். இக்காப்பியத்தில் உள்ள ஒவ்வொரு சருக்கத்தின் பொருட் சுருக்கத்தையும் இங்குக் காண்போம்.

காப்பியத்தின் முகப்பில் உள்ள கடவுள் வணக்கமும் அவையடக்கமும் கவிஞரின் உயர்வினைக் குறிப்பன. காளிதாசர் சிறந்த சிவநேசச் செல்வர். சொல்லும் பொருளும் போல் இணைந்திருப்பவரும், உலகத்திற்குத் தாய் தந்தையாக இருப்பவரும் ஆகிய பார்வதி பரமேஸ்வரரை, வாக்கியத்தினையும் அதன் அர்த்தத்தினையும் அறியும் பொருட்டு வணங்குகின்றேன் என்று கடவுள் வணக்கம் கூறினார். அவையடக்கம் கூறும் பாடற் பொருளும் காணத்தக்கது.

*சூரியனிடமிருந்து பிரபவித்த வமிசம் எங்கே! என்னுடைய*
*சிற்றறிவு எங்கே! கடக்க இயலாத சாகரத்தை (-கடலை)*
*அறியாமையின் காரணமாக, சிறு படகு மூலம் கடக்க*
*விரும்புபவனாக இருக்கின்றேன்!*

என்பது அவையடக்கப் பாடலின் தமிழாக்கம். குணவீரபண்டிதர் நேமிநாதப் பாயிரப் பாடலில் தொல்காப்பியம் என்னும் பெருங்கடலைக் கடப்பதற்கு உதவும் சிறுபடகு என்று தன்னூலினைப் பணிவுடன் கூறியுள்ளமை இயைபு கருதி இவண் சுட்டுதற்குரியது. மேலும் வரும் பாடல்களில் வருபொருள் உரைத்தல் (வஸ்து நிர்த்தேசம்) காணப்படுகின்றது. காவியத்தில் இடம்பெறும் மன்னர்களின் வரலாறு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

முதல் சர்க்கத்தில் சூரிய மரபில் தோன்றிய அரசர்களின் சிறப்புக்கள், பண்புகள், செயல்கள் பொதுவாகக் கூறப்பட்டன. இம்மரபில் முதல் அரசன் வைவஸ்வதமனு. இவ்வேந்தனின் வமிசத்தில் தோன்றிய அரசன் திலீபன், அவன் மனைவி சுதட்சிணை ஆகியோர், குலகுரு வசிட்டரின் அறிவுரைப்படி காமதேனுவின் பெண் ஆகிய நந்தினியைப் பேணி வளர்த்து இரகு என்னும் புதல்வனைப் பெற்றெடுத்த செய்தி மூன்றாம் சர்க்கம் வரை

கூறப்பட்டது. திலீபன் நூறாவது யாகத்தினைப் புரியக் கருதி, அதற்கான குதிரையைக் காக்கும்படி தன்மகன் இரகுவிடம் பணித்து வேள்வியைத் தொடங்கினான். பொறாமையால் இந்திரன் குதிரையைக் கவர முற்பட்டபொழுது, இரகு தன் வில்லாற்றலால் அவனைப் பணியச் செய்தான். குதிரை இன்றியே நூறாவது யாகத்தின் பயனைத் தன் தந்தை திலீபனுக்கு இந்திரனை வழங்கச் செய்தமையும், தன் மகனின் ஆற்றலை வியந்து அரசாட்சியை அவனிடம் ஒப்படைத்துத் திலீபன் தவம் புரிய வனம் சென்ற செய்தியும் மூன்றாம் சர்க்கத்தின் பொருளாகும்.

நான்காம் சர்க்கத்தில் காப்பியத்தின் பிரதான நாயகன் ஆகிய இரகுவின் வீரதீரச் செயல்களும் நீதி வழுவாத நெறியும் ஆட்சி புரிந்த மாட்சியும் திக்குவிசயமும் கூறப்பட்டன. இவன் வங்கம், கலிங்கம் ஆகியநாடுகளை வென்று தெற்கு நோக்கிக் கடற்கரை ஓரமாகப் பயணம் செய்து பாண்டிய நாட்டினை அடைந்ததும், பாண்டியர் இரகுவிற்கு முத்துக்குவியலைப் பரிசளித்ததும், பின் கேரள அரசர்களை வென்றமையும், அங்கிருந்து தரை வழியே பாரசீகம் சென்று யவனர்களை (பாரசீகர்களை) வென்றமையும் பிறவும் இப்பகுதியில் இயம்பப் பெற்றன. விச்வசித்து என்னும் வேள்விபுரிந்து செல்வங்களை இல்லாதவர்க்கு வழங்கினான் என்பதும் இச்சருக்கத்தின் இறுதியில் இடம்பெற்றது. எல்லாப் பொருளையும் தானம் செய்துவிட்டு வறிய நிலையில் இருந்தபொழுது, முனிவர் வரதந்துவிற்குக் குருதட்சணை கொடுக்கப் பணம் வேண்டும் என்று கௌத்ஸர் வேண்டினார். விண்ணகம் சென்று குபேரனிடம் போரிட்டு முனிவரின் சீடன் விரும்பிய பதினான்கு கோடிப் பொன்னையும் கொண்டு வருவதற்குச் சித்தமாயிருந்தான் இரகு. அன்றிரவு அரண்மனைக் களஞ்சியத்தில் குபேரன் பொன்மாரி பொழிந்திருந்ததால் போரின்றியே கிடைத்த பொருளை யாசித்தவரிடம் கொடுத்துதவினான். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் புலவர்கள் தன்னிடம் பொருள் வேண்டிய பொழுது, பரிசில் கொடுத்தல் பொருட்டு இருவேந்தர்களின் நிலத்தில் படையெடுக்கும் முயற்சியை மேற்கொண்டமை இங்கு ஒப்புநோக்கத்தக்கது. (புறம்.42: 19-24).

மகிழ்ச்சியுற்ற முனிவரின் ஆசியால் அஜன் என்னும் உத்தமப் புதல்வன் இரகுவிற்குப் பிறந்தான். அஜன் பல கலைகளிலும் தேர்ச்சியுற்று மணப்பருவம் அடைந்தான். விதர்ப்ப நாட்டு வேந்தன் போஜனின் தங்கை இந்துமதியின் சுயம்வரத்திற் கலந்து கொள்ள அஜன் சென்றான் என்ற செய்தி வரை ஐந்தாம் சருக்கத்தில் காணலாம்.

இந்துமதியின் தோழி சுநந்தை சுயம்வர மண்டபத்தில் இருந்த அரச குமாரர்களை அறிமுகப்படுத்திய பகுதியாக ஆறாம் சர்க்கம் உள்ளது. போஜன் வழங்கிய ஆசனத்தில் அமர்ந்திருந்த அஜன் மயிலின் மீதிருக்கும் குமாரக் கடவுளைப்போல் விளங்கினான் என்று காளிதாசர் உவமை கூறியுள்ளார். மகதம், அங்கதேசம், அவந்தி தேசம் முதலிய தேசத்து அரசர்களைக் கூறியபின் பாண்டிய இளவரசனைப் பற்றிச் சுநந்தை இந்துமதிக்கு அறிமுகம் செய்த பகுதி காணத்தக்கது.

> அழகிய மாலையினை அணிந்திருக்கும் இவ்வரசர் பாண்டியர், அகத்திய முனிவரின் அருளைப் பெற்றவர். ஈசனிடமிருந்து பிரம்மசிரசு என்னும் அத்திரத்தைப் பெற்றவர். இராவணன் இவருடன் போர் புரிய மாட்டாமல் சமாதானம் புரிந்து கொண்டு இந்திரனை வெற்றி கொள்ளப் புறப்பட்டான். இவரை நீ மணந்து கொண்டால் வெற்றிலை, ஏலக்கொடி, சந்தன மரங்கள் முதலியவை அடர்ந்துள்ள மலய மலையில் (-பொதியம்) இன்பமாக இருக்கலாம்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இப்பகுதியில் முத்தமிழை வளர்த்த பாண்டிய வேந்தரின் பன்மாண் சிறப்புக்கும் காளிதாசன் என்னும் பெருங்கவிஞன் வழங்கிய ஒப்புதலையும் பாராட்டினையும் புலப்படுத்துதல் நோக்கத்தக்கது.

பாண்டியனுக்கு அடுத்த நிலையில் அஜன் வருகிறான். அவன் பெருமைகளைக் கேள்வியுற்ற இந்துமதி அவனை மணக்க விரும்புதலுடன் ஆறாம் சருக்கம் நிறைவுற்றது. திருமண வைபவம் ஏழாம் சர்க்கத்திலும், அஜன் இந்துமதி இருவருக்கும் தசரதன் பிறத்தல் எட்டாம் சருக்கத்திலும் சொல்லப்பட்டன. இந்துமதியின் இறப்பும், தசரதனிடம் ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்து, அஜன் கங்கை சரயூ கலக்குமிடத்தில் மூழ்கி இறந்து விண்ணகம் சென்று இந்துமதியுடன் இன்புற்றமையும் எட்டாம் சர்க்கத்தில் இயம்பப் பெற்றன. தசரதன் வரலாறு, அவனுக்குப் புதல்வர்களாக இராமன், பரதன், இலக்குவன் சத்துருக்கனன் தோன்றிய வரலாறு, விசுவாமித்திரரின் வேள்வியைக் காத்தல், மிதிலையில் அவர்கள் முறையே சீதை, மாண்டவி, ஊர்மிளா, சுருதிகீர்த்தி ஆகிய இளவரசியரை மணத்தல், தாயகம் திரும்பும் வழியில் பரசுராமனை வெல்லுதல் முதலிய செய்திகள் பதினோராம் சர்க்கம் வரை கூறப்பெற்றன.

கைகேயி சூழ்ச்சியால் இராமன் சீதையுடனும் இலக்குவனுடனும் கானகம் செல்லுதல், தசரதன் மறைவு, பரதன் இராமனின் பாதுகையினைப் பெற்றுப் பரிபாலனம் புரிதல், இராமன் விராதன் முதலியோரைக் கொல்லுதல், சூர்ப்பணகையினை இலக்குவன் அங்கப்பங்கப்படுத்தல், இராவணன் சீதையை எடுத்துச் செல்லுதல், சீதையின் அக்கினிப்பிரவேசம், புட்பக விமானத்தில் அயோத்திக்குத் திரும்புதல் முதலியன 12, 13 ஆம் சர்க்கத்தில் இடம்பெற்றன. இராமர் முடி சூடுதல், அவதூறு அகலும் பொருட்டுக் கருவுற்ற பிராட்டியை வான்மீகி முனிவர் ஆசிரமத்தில் விடச் செய்தல், குசர், லவர் பிறத்தல், அவர்கள் கலைகளில் மேம்படுதல், பூமிதேவியிடம் சீதை புகுதல், இராமன் பரமபதம்அடைதல், குசன் ஆட்சிப் பொறுப்பேற்றல், குசன் குமுதவதியை மணத்தல், அதிதியை மகனாகப் பெறுதல், அதிதி (-இராமனின் பேரன்) அரசாளுதல் முதலியன 17 ஆம் சருக்கம் வரை கூறப்பெற்றன.

18 ஆம் சருக்கத்தில் அதிதியின் மகன் நிஷதன் உள்ளிட்ட 21 அரசர்களின் வரலாறு கூறப்பட்டது. இறுதி அரசனாகிய அக்கினி வர்ணனின் மட்டற்ற புலனின்பப் பொழுதுபோக்கும், அதன் பயனாய்ப் பெருநோயுற்றுக் காற்றில் விளக்கு அணைதல் போல் இறந்தமையும், கருவுற்றிருந்த அவன் மனைவியை மக்கள் தலைவர்களின் விருப்பறிந்து அமைச்சர்கள் நாட்டாளச் செய்தமையும் இறுதிச் சருக்கத்தில் (-19 ஆம் பகுதி) இயம்பப்பெற்றன.

தொல்பழங்காலத்தில் தென்னாட்டு மதுரையில் ஒரு பெண் அரசாட்சி செய்தமைபோல, வடநாட்டில் ஒருபெண் அரசாட்சி புரிந்தமை குறிப்பிடத்தக்கது.

மிக நீண்ட காலப்பகுதியில் அரசு புரிந்த முப்பது அரசர்களின் வரலாற்றினைக் கற்பனைத் திறமும் அற்புதச் சுவையும் கவியின்பமும் பொருந்துமாறு **இரகு வமிசம்** என்ற பெருங்காப்பியத்தினை **மகாகவி காளிதாசர்** புனைந்துள்ளமை போற்றத்தக்கது.

காளிதாசர் காலத்தினை அடுத்து வடமொழி இலக்கியத்தில் சுட்டத்தக்க கவிஞராகப் **பாரவி** ஒளிவீசுகிறார். இவர் ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்பது அறிஞர் பலரின் கருத்து. இவர் படைத்துள்ள **கிராதார்ச்சுனீயம்** என்ற பெருங்காப்பியம் குறித்துச் சற்று உற்று நோக்குவோம்.

## III.3. கிராதார்ச்சுனீயம்

காளிதாசனைப் போலவே பாரவியும் சிவநேசச் செல்வராகவும் தமிழகத்தினை நன்கு மதித்தவராகவும் திகழ்கின்றனர். புஷ்பங்களில் சிறந்தது பாரிஜாதம். புருஷர்களில் சிறந்தவர் விஷ்ணு. நாரியரில் சிறந்தவள் அரம்பை. நகரங்களில் சிறந்தது காஞ்சி என்று இவர் பாடியுள்ளார். **"புஷ்பேஷு ஜாதி புருஷேஷு விஷ்ணு நாரீஷு ரம்பா நகரேஷு காஞ்சி"** என்பது அவர் பாடல். தெய்வங்களில் சிறந்தவர் விஷ்ணு என்று கூறாமல் புருடர்களில் சிறந்தவர் எனக் கூறியதற்குக் காரணம் அவர் சிவநேசர் என்பதே ஆகும். **உலக அரங்கில் காஞ்சி மாநகர் ஓங்கி ஒளிவீசிய காலத்தில் அவர் வாழ்ந்தவர் என்பது புலனாகும்.**

மகாபாரதத்தில் வனபர்வத்தில் அருச்சுனன் பாசுபதம் பெற்ற வரலாற்றினைக் கூறும் கிளைக்கதையினைப் பாரவி விரிவுபடுத்திப் பெருங்காப்பியமாகப் பாடியுள்ளார். கிராதன்-வேடனாக வந்த சிவன்; அர்ச்சுனன் ஆகியோரைப் பற்றிய இலக்கியமாதலின் **கிராதார்ச்சுனீயம்** எனப்பெயர் பெற்றது. இக்காப்பியத்தில் பதினெட்டுச் சர்க்கங்கள் உள்ளன. இதனுள் குமாரசம்பவம், இரகுவம்சம் ஆகிய காப்பியங்களின் தாக்கம் காணப்படுதலை அறிஞர்கள் குறித்துள்ளனர். பாரவி இக்காப்பியத்தில் காளிதாசனைப் போலவே சிவபிரானின் அர்த்தநாரீச்சுவர வடிவத்தைச் சுட்டியுள்ளார். இதனுள் வீரச்சுவையே மேலோங்கியுள்ளது. சிருங்காரம், சாந்தம் முதலிய சுவைகளும் விரவி வந்துள்ளன. இக்காப்பியத்தின் நடை **நாளிகேரபாகம்** பொருந்தியது என்பர் திறனாய்வாளர். நாளிகேரம் என்பது தேங்காய். அதனை அப்படியே சாப்பிட முடியாது. மட்டையை உரித்து, ஓட்டினைப் பிரித்துத் தேங்காயின் பருப்பினைத் துருவி எடுத்துச் சுவைத்துச் சாப்பிடுதல் இயலும். அதுபோலவே, இக்காவியத்தின் பாடலும் பெரு முயற்சிக்குப் பின்னரே சுவைத்து அனுபவிக்க முடியும் அருமைப்பாடு உடையது.

பாரவியின் சொற்கள் **அர்த்த கௌரவம்** (பொருட்சிறப்பு) வாய்ந்தவை. கி.பி. 9ஆம் நூற்றாண்டினராகிய **ஆனந்தவர்த்தனர்** தமது **தொனியாலோகத்தில்** குணீபூதவியங்கியத்தினை விளக்கும் பொருட்டுக் கிராதார்ச்சுனீயத்திலிருந்து ஒரு பாடலை மேற்கோள் காட்டியிருத்தல் சுட்டத்தக்கது. இக்காப்பியத்தில் இடம்பெறும் கதைச் சுருக்கத்தினைக் காண்போம்.

கௌரவர்களுடன் சூதாடித் தோற்ற பாண்டவர்கள் நிபந்தனையின்படி திரௌபதியுடன் பன்னிரண்டாண்டுகள் துவைத

வனத்தில் கரந்துறையும் வாழ்வினை மேற்கொண்டனர். வனவாசம் பிடிக்காததால் திரௌபதி கௌரவர்களுடன் போரிட்டு இழந்த நாட்டினைப் பெற்று வாழும்படி தூண்டுகிறாள். பீமன் உடன்படினும் உதிட்டிரன் (தருமன்) உடன்படவில்லை. வியாசரின் அறிவுரைப்படி துவைத வனத்தைத் துறந்து காம்யக வனத்திற் சென்று பாண்டவரும் திரௌபதியுடன் வாழ்ந்து வருகின்றனர். கௌரவர்களுடன் போர்புரிவதற்கு ஆயத்தப்படுத்திக் கொள்ளும் பொருட்டு அருச்சுனன், தமையன் அறிவுரையினை ஏற்று இமயச்சாரலில் கடுந்தவம் புரிகிறான். அவன் முன்பாக வேடனின் வேடம் தாங்கிச் சிவன் தோன்றினார். ஒரு பன்றியைக் கொன்றமை காரணமாக இருவர்க்கும் வாக்குவாதம் முற்றிப் பூசல் நிகழ்கிறது. பின்னர், தன் உண்மை உருவத்தினைக் காட்டி, அருச்சுனனுக்குச் சிவபிரான் தெய்வப் படைக்கலன்களை (-பாசுபதம் முதலியன) வழங்கினார் என்ற பாரதக்கதையினைப் பாரவி தன் கற்பனை ஆற்றலால் ஒரு காவியமாகப் படைத்துள்ளார்.

முதல் சருக்கதில், தருமரால் அனுப்பப்பெற்ற ஒற்றன், சுயோதனன் அறவழியில் ஆட்சிபுரிதலையும் மக்கள் மனத்தை மகிழ்வித்தலையும் தெரிவிக்கும் செய்தி இடம்பெற்றது. அதனைப் பொறாத திரௌபதி விரைந்து போரிடுதற்கு வலியுறுத்துதலும் இச்சருக்கத்தின் முடிவில் சொல்லப்பெற்றது. இரண்டாம் சர்க்கத்தில் போர் புரிதற்கு வீமன் ஆதரவு அளித்தமையும், தருமரின் (உதிட்டிரர்) தயக்கமும் கூறப்பட்டன. வியாசமுனிவரின் ஆலோசனையினை நாடுதலும், அவர் இமயச்சாரலில் அருச்சுனன் தவம்புரிந்து இந்திரன் உதவியைப் பெறுதற்கு வழிகாட்டுதலும் மூன்றாம் சர்க்கத்தில் காணலாம். அருச்சுனன் முன்பாக ஓர் இயக்கன் தோன்றி அவனை வழிநடத்திச் செல்லுதலும், எஞ்சிய பாண்டவரின் நல்விருப்பங்களால் ஊக்கம் அடைதலும், இச்சர்க்கத்தின் முடிவில் கூறப்பட்டன. துவைத வனத்தைவிட்டுக் காம்யகவனம் வந்த செய்தியைப் பாரவி நீக்கிவிட்டார்.

நான்காம் சருக்கத்தில் கூதிர்ப்பருவ வருணனை கவிஞரின் படைப்பாற்றலுக்குச் சான்றாக அமைகிறது. அடுத்துவரும் பகுதியில், இமயச் சாரலைப் பற்றிய சொற்சித்திரம் காணலாம். சிவனுக்கும் பார்வதிக்கும் விருப்பமான இம்மலையின் மறைபொருளை இயக்கன் அருச்சுனனுக்கு உணர்த்தி இந்திரகீலத்தில் தவம் மெற்கொள்ளும்படி கூறி மறைந்த செய்தியும் இப்பகுதியில் இடம்பெற்றது. அருச்சுனனின் கடுந்தவத்தைக் கண்டு அஞ்சிய தெய்வ கணங்களின் முறையீட்டினைக் கேட்ட இந்திரன் மலைப்பகுதியின் அமைதிக்கு ஊறு விளைவிக்கும் தவத்தினைக்

குலைக்கும் பொருட்டுக் கந்தர்வர்களையும் அப்சரசுகளையும் அனுப்புதல் ஆறாம் சர்க்கத்தில் கூறப்பட்டது.

அவர்கள் வானத்தினின்றும் விரைந்து வந்து இந்திரகீலத்தில் தங்கியமையும் அவர்கள் ஊர்ந்து வந்த யானைகளின் வருணனையும் ஏழாம் சர்க்கத்தில் காணலாம். எட்டாம் சர்க்கத்தில் அப்சர மகளிரின் விளையாட்டுக்கள் இடம்பெற்றன. மாயா சாலத்தினால் நிர்மாணித்துக் கொண்ட தங்கள் அரண்மனைகளினின்றும் நீங்கி மலர் கொய்யும் பொருட்டுப் பொழில்களில் உலாவுதலும், நீராடுவதற்கு அவர்களைக் கங்கை வரவேற்றலும், அவர்கள் நீராடற் காட்சியும் வனப்பும் புனையப்பெற்றன. மாயையின் வருகை, கதிரவன் மறைவு, திங்களின் எழுச்சி, கந்தர்வர்களும் காதலியராகிய அப்சரசுகளும் மதுவருந்திக் காதலின்பத்தில் திளைத்தல், பொழுது புலர்தல் என்பன ஒன்பதாம் சர்க்கத்தில் இடம்பெறுவன. அப்சரப் பெண்கள் தங்கள் கவர்ச்சியாலும் அழகாலும் இளமை மிக்க அருச்சுனனின் தவத்தைக் குலைக்க முயன்றும் முடியாமையினைப் பத்தாம் சர்க்கம் பகர்கின்றது.

அருச்சுனனின் மனத்திட்பத்தினால் தெய்வப் பெண்கள் தோல்வியுற்றதைக் கண்ட இந்திரன் முனிவன் உருவத்தில் தோன்றி அவன் தவத்தின் கடுமையினைப் பாராட்டுதல், படைக்கலன் தாங்குதலுக்கும் தவக்கோலத்திற்கும் உள்ள பொருந்தாமையினை இந்திரன் எடுத்துரைத்தல்; அவன் உரையினை உடன்படினும், தன் குடும்பக் கௌரவத்தினைக் காத்துக் கொள்ளும்பொருட்டுத் தேவையான அனைத்தையும் தான் செய்ய வேண்டிய கடமையினை அருச்சுனன் எடுத்துரைத்தல்; நெகிழ்ச்சியுற்ற இந்திரன் தன்னுருவத்தைக் காட்டி ஆசி வழங்கிச் சிவன் அருளைப் பெறும்படி கூறுதல் யாவும் பதினோராம் சர்க்கத்தில் இடம்பெற்றன.

சிவபிரானின் அருளைப் பெறுவதற்கு அருச்சுனன் கடுந்தவம் புரிதல்; அஞ்சி முறையிட்ட முனிவர்களுக்குச் சிவபிரான், அருச்சுனன் பரம்பொருளின் ஒரு கூறாகிய நரன் என்றும் தெய்வீக இயல்பு வாய்ந்தவன் என்றும் கூறுதல்; மூகன் என்ற அசுரன் பன்றி உருவம் எடுத்து அவனைக் கொல்ல முயல்தல்-இவையாவும் பன்னிரண்டாம் பகுதியில் கூறப்பெற்றன. தன் முன் தோன்றிய பன்றியை ஒருபுறம் அருச்சுனனும் மறுபுறம் வேடனாக வந்த சிவனும் அம்பு தொடுத்துக் கொல்லுதல்; யார் கொன்றது என்ற வகையில் இருவருக்கும் சொற்போர் நிகழ்தல் அடுத்துவரும் பகுதியில் இடம்பெற்றன. தானே வென்றதாக அருச்சுனன் கூறுதல், வேடனுக்கும் தனக்கும் கடும் விற்போர் நிகழ்தல்; வாட்போர்

மட்டுமன்றி, குன்றுகளையும் அடிமரங்களையும் எடுத்துச் சிவனைத் தாக்க எடுத்த அருச்சுனனின் முயற்சிகள் பயனற்றுப் போதல்; இருவருக்கும் மற்போர் நிகழ்தல்; முடிவில் சிவன் தன் சுய உருவத்தைக் காட்டுதல், பணிவுற்ற அருச்சுனன் சிவபிரானின் பெருமையினைப் புகழ்தல், ஆற்றலையும் வெற்றியையும் தனக்கு அருளும்படி வேண்டுதல்; சிவபிரானும் திசைக்காவல் தெய்வங்களும் அருச்சுனனின் பத்திமையினை ஏற்றுக் கொண்டு அவன் விரும்பிய அற்புதப் படைக்கலன்களை வழங்குதல் என்பன 13 ஆம் சர்க்கம் முதல் 18 ஆம் சர்க்கம் வரை விரிவாகக் கூறப்பெற்றன.

அருச்சுனனுடன் போர் புரிவதற்குச் சிவன் சார்பில் கந்தக் கடவுளின் தலைமையில் சிவகணங்களும் வந்தன என்ற கருத்தும், தெய்வத்தன்மை பொருந்திய படைக்கலன்களுடன் போர் நிகழ்ந்தது என்ற கருத்தும் கவிஞர் கற்பனையின் படைப்பாக எண்ணப்படுகின்றன.

அப்சரசுகளின் காதல் விளையாட்டுக்களோ, தெய்வ கணங்களின் அற்புத ஆயுதங்களோ அருச்சுனனின் ஆற்றலைத் தகர்க்க முடியவில்லை. எனினும், அவன் சிறந்த சிவபக்தன். ஆதலால் வேண்டியதைப் பெற்றான் என்பது கதை உணர்த்தும் கருத்தாகும்.

பல்வேறு யாப்புச் சந்தங்களினாலும், சொற்பொருள் அலங்காரங்களினாலும், இயற்கை வருணனைகளாலும், கற்பனைத் திறத்தாலும், சுவைவேறுபாடுகளினாலும் கிராதார்ச்சுனீயத்தைச் சிறந்த காப்பியமாகப் பாரவி படைத்துள்ளார்.

கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் **மாககவி**. இவர் சிறந்த திருமாலன்பர். இவர் படைத்துள்ள பெருங்காப்பியம் **சிசுபாலவதம்** எனப்படும். இக்காப்பியம் குறித்து அடுத்துக் காண்போம்.

## III.4. சிசுபாலவதம்

இக்காப்பியத்திற்குரிய மூலக்கதையும் மகாபாரதத்தில் காணப்படுகின்றது. யதுகுல அரசன் கண்ணனின் சொற்படி தருமன் இராயசூயப் பெருவேள்வி புரிகிறான். பிதாமகரான பீஷ்மரின் அறிவுரையின்படி, தருமர் வேள்வியைக் காண வந்த அரசர்களுள் கண்ணனுக்கு முதல் மரியாதை (-அக்ரபூசை) செய்கிறான். அதனைக் காணப்பொறாத சேதி நாட்டரசன் ஆகிய **சிசுபாலன்** கொதிப்பும் கோபமும் அடைந்து வேள்விச் சாலையை விட்டு அகல்கிறான். அவனைச் சமாதானப்படுத்தும் பொருட்டுச் சென்ற தருமரைத் தடுத்து நிறுத்திய பீஷ்மர் கண்ணனைப் போற்றுகின்றார். வேள்வியை அழிக்கப் போவதாகச் சிசுபாலன் முயல்கிறான். கண்ணனிடம்

நம்பிக்கை கொள்ளும்படியும் சேதி மன்னனைப் புறக்கணிக்கும் படியும் பிதாமகர் தருமனுக்கு அறிவுரை கூறுகிறார். சிசுபாலன் பீஷ்மரையும் இகழ்ந்து பேசுகிறான். எனினும், அவன் நூறு தீச்செயல்கள் புரியும் வரையும் பொறுப்பதாக அவன் தாயிடம் கண்ணன் கொடுத்த வாக்குறுதியை அவனிடம் பீஷ்மர் நினைவூட்டுகிறார். கண்ணனைக் கண்டபடி இகழ்ந்து பேசுகிறான். தன் வாக்குறுதி முடிவுற்றதாகக் கூறிய கண்ணன் தன் சக்கரப் படைக்கருவியால் அவன் தலையைத் துண்டித்து விடுகிறான் என்பது மகாபாரதத்தில் காணப்படும் கதையாகும். **மாககவி** இக்கதைக்குத் தன் கவித்திறனாலும் கற்பனை ஆற்றலாலும் பெருங்காப்பிய வடிவம் தந்துள்ளார். இருபது சர்க்கங்களில் **சிசுபாலவதம்** என்ற பெயரில் ஒப்பற்ற இக்காப்பியத்தைப் படைத்துள்ளார்.

இந்திரனின் வேண்டுகோளின்படி நாரதர் வசுதேவர் இல்லத்திற்கு வந்து சிசுபாலனைக் கொல்ல வேண்டும் என்று கண்ணனிடம் தெரிவித்தலை முதல் சர்க்கத்தில் காணலாம். சிசுபாலனுடன் போர்க்குச் செல்வதா? அல்லது தருமர் புரியும் வேள்விச் சாலைக்குச் செல்வதா? என்று பலராமனையும் உத்தவரையும் கண்ணன் கேட்டதும்; போர்க்குப் போதலைப் பலராமனும், வேள்விச் சாலைக்குப் போதலை உத்தவரும் கூறுதலும் இரண்டாம் சர்க்கத்தில் இடம்பெற்றன. உத்தவர் சொல்லையே கண்ணன் எடுத்துக்கொண்டான். யாதவர்கள் புடைசூழக் கண்ணன் தருமரின் வேள்விக்களம் நோக்கிப் புறப்படுதல் மூன்றாம் சர்க்கத்தில் சொல்லப்பெற்றது. மலைவருணனை, காதல் லீலைகள், பருவங்கள், வனம், புனலாடல், கதிரவன் மறைவு, திங்களின் உதயம், ஞாயிற்றின் எழுச்சி என்பன 4 முதல் 11 ஆம் சர்க்கங்களில் புனைந்துரைக்கப் பெற்றன. யமுனை ஆற்றினைக் கடந்தமை 12 ஆம் சர்க்கத்திலும்; கண்ணன் பரிவாரத்துடன் இந்திரப் பிரத்தம் அடைதலும் உதிட்டிரரால் (-தருமரால்) வரவேற்கப்படுதலும் அடுத்துவரும் சர்க்கத்திலும் கூறப்பட்டன. வேள்வி முடிவில் கண்ணனுக்கு முதல் மரியாதை வழங்கப்படுதல் 14 ஆம் சர்க்கத்திலும், சிசுபாலனின் பொறாமையும் எதிர்ப்பும் சண்டைக்கு ஆயத்தமாதலும் 15 ஆம் சர்க்கத்திலும் சொல்லப்பெற்றன. எஞ்சிய சர்க்கங்களிலும் இரு திறத்துப் படைகளும் போர்க்களம் நோக்கிப் புறப்படுதலும். அம்புகளாலும் இயற்கையிறந்த அற்புதப் படைக்கருவிகளாலும் போரிடுதலும் முடிவில் கண்ணன் சிசுபாலனை வதம் செய்தலும் உருக்கமாக மாககவியால் பாடப்பட்டன. யானைப்படையின் போர் வருணனை சிறப்பாக உள்ளது.

இக்காப்பியத்தில் வீரச்சுவை மிகுதி. சிருங்காரம், ரௌத்திரம் (சினம், உருத்திரம்) முதலிய சுவைகளும் விரவி வந்துள்ளன. அர்த்தசாத்திரம், காமசாத்திரம் ஆகியவற்றில் மாககவி புலமை படைத்தவர் என்பது இக்காப்பியத்தினால் புலனாகும். பொருளணிகளுடன் சிலேடை முதலிய சொல்லணிகளும் இதன் இலக்கியச்சிறப்பினை உயர்த்துவன. இக்காப்பியத்திற்கு வல்லபதேவர், மல்லிநாசூரி என்பார் உரை வரைந்துள்ளனர்.

## III.5. நைடதம்

நிடத நாட்டு மன்னன் நளனின் சரிதத்தினை **நைஷதீய சரிதம்** என்ற பெயரில் காப்பியமாகப் பாடியவர் **ஸ்ரீ ஹர்ஷன்** என்னும் மகாகவி ஆவர். இக்காப்பியத்திற்கு நளீயசரிதம், நைஷதம் என்பன வேறு பெயர்கள். ஹர்ஷகவி கி.பி.12 ஆம் நூற்றாண்டினர். கான்ய குப்ஜத்தில் ஸ்ரீ ஹீரர். மாமல்லதேவி என்பார்க்கு மகனாகத் தோன்றியவர். **பிரியதரிசிகை, இரத்னாவளி, நாகானந்தம்** முதலிய நாடகங்களைப் படைத்துள்ளவரும் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் கான்ய குப்ஜத்தின் அரசராக விளங்கியவரும் ஆகிய ஸ்ரீஹர்ஷரினின்றும் வேறுபட்டவராக நைஷத ஆசிரியரைக் கருதுதல் வேண்டும். பெயர் ஒப்புமையால் இருவேறு படைப்பாளரையும் ஒருவராகக் கருதுதல் கூடாது. இக்காப்பியம் செவ்வியல் காலம் ஆகிய கி.பி.400-800 என்ற காலப்பகுதிக்கு உரியதன்று. எனினும், பஞ்சமகாகாவியத்தில் இறுதியில் வைத்து எண்ணப்படுவதால் இக்காப்பியத்தினைப் பற்றி இங்குக் கூறவேண்டிய தேவை ஏற்படுகிறது.

**'நைடதம் புலவர்க்கு ஔடதம்'** என்று தமிழிலும் ஒரு முதுமொழி உண்டு. கி.பி.16 ஆம் நூற்றாண்டில் தென்பாண்டி நாட்டினை ஆட்சி செய்த **அதிவீரராமபாண்டியர்** ஸ்ரீ ஹர்ஷரின் காவியத்தினைத் தழுவித தமிழில் நைடதம் பாடியுள்ளார். கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் சந்திரன் சுவர்க்கி என்ற வள்ளலால் ஆதரிக்கப்பட்ட **புகழேந்திப்புலவர் நளவெண்பா** என்னும் அரிய தொடர்நிலைச் செய்யுளைக்கற்பனைச் சுவை மிளிர வெண்பா யாப்பில் படைத்துள்ளார். இவர்களுக்கு எல்லாம் வழிகாட்டி இலக்கியமாகத் திகழ்வதும் பஞ்ச மகாகவியங்களில் ஒன்றாக வடமொழி வாணரால் மதிக்கப்பெறுவதும் ஆகிய ஸ்ரீ ஹர்ஷ கவியின் நைஷதம் பற்றிச் சுருக்கமாகக் கூறுதல் தகும்.

இக்காவியம் 22 சர்க்கங்களால் புனையப்பெற்ற சர்க்கபந்தம் ஆகும். சிருங்காரச் சுவை இதனுள் மிகுதி. மாவிந்தம் என்ற தலைநகரைக் கொண்ட நிடத நாட்டின் **நளச்சக்கரவர்த்தி**

குண்டினபுரத்து அரசன் வீமனின் மகள் தமயந்தியை மணந்து இன்புற்று வாழ்தல் இக்காவியத்தில் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. வியாகரணம், தருக்கம், இருவகை மீமாம்சை, சோதிடம், காம நூல் முதலிய பல நூல்களில் நிரம்பிய புலமை பெற்றவர் ஸ்ரீ ஹர்ஷர் என்பதற்கு அகச்சான்றுகள் பல உள்ளன. இவர் திருமாலன்பர். மகாபாரதத்தில் சூதாட்டத்தினால் நாட்டினை இழந்து துயருற்ற தருமனுக்கு ஆறுதல் கூறும் வகையில் ஒரு முனிவரால் கூறப்பெற்ற நளசரிதத்தினை இவர் நன்கு அறிந்தவர். எனினும், பல புதுமைகளைப் புகுத்திக் காவியத்தினைப் படைத்துள்ளார். தம் நூலினைப் பல்துறைப் பேரறிவு படைத்த காசுமீரக் கவிஞர்கள் பாராட்டினர் என்று குறித்துள்ளார் (16.131).

இக்காவியத்தில் வருணனைப் பகுதிகள் சுட்டத்தகுவன. தமயந்தியின் சுயம்வரத்தினைக் கூறும் பதின்மூன்றாம் சர்க்கத்தில் இந்திரன், அக்கினி, யமன், வருணன் ஆகிய நால்வரும் நளனைப் போலவே தோன்றிய காட்சியையும், அதனால் உண்மை நளனை காண்பதில் தமயந்தியின் தடுமாற்றத்தையும் கவிஞர் சிறப்பாகப் படைத்துள்ளார். நளனைப் பார்க்கும் பெண்டிரின் வருணனையும், திருமண விருந்தின் வருணனையும் சுட்டத்தகுவன. குண்டினபுரத்தின் இயற்கைக் காட்சிகள், நளன் தமயந்தி இருவரும் கூடி மகிழும் காட்சிகள் கவிஞரின் கற்பனைக்குக் கட்டியம் கூறுவன. காலைக்காட்சி, மாலையில் திங்கள் எழும் காட்சி, மலை வருணனை, பருவ வருணனை, புனலாடல் என்பனவும் கூறத்தகுவன. நளன் சந்திரமரபில் தோன்றியவன் என்பதால், “சந்திரன் நமக்கு மகிழ்ச்சி வழங்கட்டும்” என்ற பொருள் பொதிந்த சுலோகத்துடன் காவியத்தினை நிறைவு செய்துள்ளார்.

வடமொழிவாணர்கள் இலக்கிய அமைப்பினைத் திராட்சா பாகம், கதலி பாகம், கபித்த பாகம், நாளிகேர பாகம், அவுடதபாகம் எனப் பெயரிட்டு பல வகைப்பட்ட நடைகளுடன் இணைத்துக் காட்டுவர். இவையனைத்தும் நைடதத்தில் உள்ளன. திராட்சையினை அப்படியே சாப்பிடலாம். வாழைக்கனியின் தோலினை நீக்கி உண்ணலாம். கபித்தம் என்பது விளங்கனி. நாளிகேரம் என்பது தேங்காய். இவ்விரண்டனையும் ஓட்டை நீக்கி உள்ளே உள்ள பொருளை எடுத்துச் சுவைக்க வேண்டும். மருத்துவர் மட்டுமே பிணியாளன் நிலையறிந்து மருந்தினைத் தருதல் பயனளிக்கும். அவ்வாறே தேர்ச்சி பெற்ற ஆசிரியன் உதவியால் மட்டுமே காப்பியத்தில் இடம்பெறும் இலக்கிய முடிச்சுகளை அறிந்து மகிழ்தல் இயலும்.

இக்காப்பியத்தில் பல அரிய செய்திகள் சொல்லப்பெற்றன. பெண்வீட்டார் மணமகனை நாடும் வழக்கம் இதனுள் காணப்படுகின்றது. தம் பெயர்களைச் சாதுக்களாகிய முனிவர்கள் கூறார் (9,13). கூட்டத்தில் எள் போட்டால் எள் விழாத (10.5) அளவிற்கு மக்கள் நெருக்கம் இருந்தது. வெள்ளைத் துணியில்தான் அழுக்கு வெளிப்படத் தோன்றும் (12.22) என்ற மக்கள் மொழியும் இடம்பெற்றது. கழுத்துப்பிடிக்க உண்டனர் (16.93) என்ற உலக வழக்கும் காணப்படுகின்றது. கி.பி.12 ஆம் நூற்றாண்டின் நைடதத்தில் காணப்படும் இச்செய்தி கி.பி. முதல் நூற்றாண்டுக்குரிய சங்க இலக்கியமாகிய பொருநராற்றுப்படையில் (115-116) காணப்படுதல் நோக்கத்தக்கது. எனவே, இத்தகைய பொதுமைக் கூறுகளை இந்தியப் பண்பாட்டின் பொதுமைப் பண்புகளாக அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

இக்காப்பியத்திற்கு முப்பதின் மிக்க உரைகள் உள்ளன. அவற்றுள் மல்லிநாதசூரியும், நாராயணரும் எழுதிய உரைகளே நனி சிறந்தன.

தமிழில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்ற ஐந்து இலக்கியங்களையும் ஐம்பெருங் காப்பியங்கள் என்று கூறுதல் மரபு. இம்மரபு நன்னூலுக்கு மயிலைநாதர் எழுதியுள்ள உரையில் முதன்முதல் காணப்படுகின்றது. இத்தகைய மரபு வடமொழியிலும் காணப்படுகின்றது. காளிதாசர் படைத்துள்ள குமார சம்பவம், இரகுவம்சமும், பாரவி பாடியுள்ள கிராதார்ச்சுனீயமும், மாககவியின் சிசுபாலவதமும், ஹர்ஷ கவியின் நைடதமும் சேர்ந்து பஞ்சமகா காவியங்கள் என்று போற்றப்படுகின்றன.

# IV. நாடகங்கள்

வடமொழியில் நாடக இலக்கியங்கள் மிகுதி. நாடக இலக்கிய வரலாற்றில் காளிதாசன் கதிரவனாகக் காட்சி அளிக்கிறான். அப்பெருங்கவிஞனின் உருவாக்கத்தில் பாசகவியின் பங்கு பெரிது. ஆதலின், பாசகவியின் நாடகங்களைப் பற்றி முதலில் நோக்குவோம்.

## IV.1. பாசகவியின் நாடகங்கள்

கி.பி. 1910இல் T. கணபதி சாத்திரியால் தென்திருவிதாங்கூரில் **பாசகவியின் பதின்மூன்று நாடகங்களும்** ஓலைச் சுவடிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டன். இவை மூவகை மூலங்களிலிருந்து கவி பாசனால் படைக்கப்பெற்றவை. மாபாரதக் கதைகளிலிருந்து 1. பாஞ்சராத்திரம், 2. தூதவாக்கியம், 3. மத்திமவியாயோகம், 4. தூத கடோற்கசம், 5. கர்ணபாரம், 6. ஊருபங்கம் என்ற நாடகங்கள் படைக்கப்பெற்றன. 7. பாலசரிதமும் மகாபாரதத் தொடர்புடையது.

இராமாயண மூலத்தினின்றும் 8. பிரதி மாநாடகம், 9. அபிடேக நாடகம் பாசனால் புனையப்பெற்றவை. இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்களுக்கு இணையாக மதிக்கப்பெறும் குணாட்டியரின் பிருகத்கதா (பெருங்கதை) என்னும் சமண நெறிக்குரிய இலக்கியத்தின்றும் சில கதைகளைத் தெரிவு செய்து நான்கு நாடகங்களைப் பாசகவி இயற்றியுள்ளார். அவையாவன: 10. சுவப்பன வாசவதத்தம், 11. பிரதிஞ்ஞா யௌகந்தராயணம், 12. அவிமாரகம், 13. தரித்திர சாருதத்தம்.

இக்காப்பியங்களை விரிவாக ஆராய்ந்த A.D.புசால்கர் என்னும் அறிஞர் Bhasa-A Study என்ற தம் ஆராய்ச்சி நூலில் பசாகவி கி.மு. 3 ஆம் நூற்றாண்டினர் என்பதை நிறுவியுள்ளார். எனினும் இவர் காலம் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு என்று கருதுவாரும் உள்ளனர்.

**மகாகவி காளிதாசன் தம் மாளவிகாக்கினிமித்திரம் என்ற நாடக நூலின் தொடக்கத்தில் பாசகவியைப் புகழ்ந்துள்ளார். இவருடன் சௌமிலன், கவிபுத்திரன் என்பாரையும் குறித்துள்ளார். பாணன் தம் ஹர்ஷ சரிதத்தில் பாசனைப் போற்றுகின்றார். அவந்தி சுந்தரி கதையில் தாண்டி பாசகவி எழுதிய நாடகங்களின் பூரணத்துவத்தைப் பாராட்டியுள்ளார். சயதேவர் என்பார், சரசுவதியின் புன்னகைதான் பாசன் என்று விதந்து கூறினார். இராசசேகரர் என்னும் அணிநூலார், பாசனின் சுவப்பன வாசவதத்தையின் தகுதிப்பாட்டினால், அனல் கூட அதனை எரிக்க**

இயலாது எனக் குறித்தனர். இங்ஙனம் காளிதாசனும் அவருக்கு பின்வந்த கவிஞர்களும் போற்றத்தக்க பெரும்படைப்பாளராகப் பாசகவி விளங்குகிறார். அறிஞருள் ஒருசாரார் காளிதாசனுக்கு முற்பட்டும் அசுவகோஷனுக்குப் பிற்பட்டும் பாசகவி வாழ்ந்தவர் என்பர். இவருடைய நாடகங்கள் சேர நாட்டில் தென் திருவிதாங்கூரில் கிடைத்திருப்பதால் இவரைத் தென்னகத்தாராகக் கருதுதல் தகும். இவர் எழுதிய பாலசரிதத்தினையும், சேர இளவேந்தாகிய இளங்கோ சுட்டியுள்ள வாலசரிதை நாடகங்கள் (சிலம்பு 17.5) என்ற குறிப்பினையும் ஒருங்கிணைத்து நோக்கின் நம் ஊகம் மேலும் உறுதிபெறுதல் காணலாம். இனி, இவர்தம் படைப்புக்களைப் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

### IV.1.1. மகாபாரதத் தொடர்புடையவை

#### IV.1.1.1. பாஞ்சராத்திரம்

மகாபாரதத்தின் நான்காம் பகுதியாகிய விராட பருவத்தினை அடியொற்றிப் பாஞ்சராத்திரத்தினைப் பாசகவி புனைந்துள்ளார். இது மூன்று அங்கங்களில் அமைந்தது.

ஆசிரியர் துரோணரின் அறிவுரைப்படி துரியோதனன் வேள்வி புரிகிறான். அந்தணச் சிறுவனின் கவனக்குறைவால் அனல் வனத்தில் பரவிய செய்தி இந்நாடகத்தின் முதல் அங்கத்தில் வருணிக்கப்பட்டது. இவ்வங்கத்தின் இறுதிப் பகுதியில் தனக்கு வில் வித்தையைக் கற்றுத் தந்த அந்தண ஆசிரியராகிய துரோணரிடம் வேள்விக் காணிக்கையாக என்ன வழங்க வேண்டும் என்பதை வினயமாகத் துரியோதனன் கேட்கிறான். புனித நீரைத் தரையில் தெளித்து அவர் வேண்டுவதை வழங்குவதாகச் சத்தியம் செய்து தருகிறான். துரோணரோ வேள்விக்குரிய தட்சிணை எதுவும் வேண்டியதில்லை என்றும், பாண்டவர்களுக்கு இராச்சியத்தில் பாதியைத் தந்தால் போதும் என்றும் துரியோதனனிடம் கூறினார். சகுனி, கர்ணன் ஆகியோரைக் கலந்து ஆலோசித்து ஒரு நிபந்தனையின் அடிப்படையில் ஆசிரியர் துரோணரின் கோரிக்கைக்குத் துரியோதனன் உடன்படுகின்றான். ஐந்து நாளுக்குள் பாண்டவர் இருப்பினைக் குறித்த செய்தியைக் கொண்டுவரின், பாதி இராச்சியத்தினை அவர்களுக்குத் தருவதாக ஒரு நிபந்தனை வைக்கிறான். ஐந்து நாள் நிகழ்வுகள் இந்நாடகத்தின் இடம்பெறுதலின் (பஞ்ச + ராத்திரி = ஐந்து இரவு, ஐந்து நாள்) பாஞ்சராத்திரம் என்று இது பெயர் சூட்டப்பெற்றது. பேரறிஞர் அண்ணா ஓர் இரவு என்று தம் நாடகத்திற்குப் பெயர் சூட்டியிருத்தல் இங்கு எண்ணத்தக்கது.

நிபந்தனையினைச் செவியுற்ற துரோணர் கலக்கம் உற்றார். சூதாட்டத்தில் தோற்று நாடு கடத்தப்பட்டுப் பன்னிரண்டாண்டுகளாக மறைந்து உறையும் (-அஞ்ஞாத வாசம்) பாண்டவர்கள் எங்குள்ளனர் என்பதனை ஒருவரும் சிறிதும் கேள்விப்படவில்லை. இந்நிலையில் ஒரு தூதுவன் அங்கு வருகிறான். வேள்வியை நடத்திய துரியோதனன் உள்ளிட்ட இளவரசர்களின் மரியாதையினைப் பெறும் பொருட்டு விராட அரசன் வர இயலாமையினையும், அதற்குக் காரணம் தன் படைத்தலைவன் கீசகன் கொலை செய்யப்பட்டதால் ஏற்பட்ட துயரம் என்பதையும் தூதுவன் எடுத்துக் கூறினான். கீசகன் கொலைக்குப் பின்னணியில் வீமன் இருத்தல் வேண்டும் என்று வீடுமர் உய்த்துணர்ந்து, துரியோதனின் நிபந்தனைக்கு உடன்படும்படி துரோணருக்கு அறிவுரை கூறுகிறார். வேள்விக்கு வராத காரணத்தினால் விராட அரசனின் ஆநிரைகளைக் கவர்வதற்குத் துரியோதனனை வீடுமர் தூண்டுகிறார்.

ஆநிரை கவர்தல் இந்நாடகத்தின் இரண்டாம் அங்கத்தின் கருப்பொருளாக அமைகிறது. இப்போர் முறை தொல்பழந் தமிழகத்திற்குரியது. இதனை வெட்சிப் போர் என்று பெயரிட்டுக் கூறுவர் தொல்காப்பியர். ஆதலின், தொல்பழங்காலத்தில் வடநாட்டில் வாழ்ந்த தமிழர்களுக்கும் பாண்டவர்க்கும் தொடர்பிருந்தமை உய்த்துணரப்படும். விராடனின் அரண்மனையின் உள்ளே நடைபெறும் இரு தரப்புப் போரில் விராடனின் மகன் உத்தரன் வெற்றி பெறுகிறான். அவனுக்குத் தேரோட்டியாகிய அருச்சுனன் பிருகன்னலா எனப் பெயர் கொண்ட அலி வேடத்தில் இருப்பதால், அவன் முன் கௌரவர் அம்பு தொடுக்கவில்லை. இச்செய்தி ஒரு தூதுவனால் வெளிப்படுகிறது. தேரிலிருந்த அபிமன்யுவை வீமன் கீழிறக்கிச் சிறைப்படுத்துகிறான். பாண்டவர்கள் தங்கள் அடையாளத்தைப் புலப்படுத்துகின்றனர். உத்தரையினைத் தன் மகனுக்குரிய மங்கையாக அருச்சுனன் கவர்கிறான். இதுவே இரண்டாம் அங்கத்தின் முடிபு.

மூன்றாம் அங்கம் மீண்டும் துரியோதனனின் அரசவையில் தொடங்குகிறது. அபிமன்யு பிடிபட்ட செய்தியைப் பணிமகன் ஒருவன் கொண்டு வருகிறான். அர்ச்சுனன் என்று பொறிக்கப்பட்ட அம்பின் உதவியால் உண்மை நிலை தெரியவருகிறது. இங்ஙனமாக ஐந்து நாள்களில் பாண்டவர் பற்றிய செய்தி அறியப்படுவதால், தன் இராச்சியத்தின் ஒரு பாதியைப் பாண்டவரிடம் ஒப்படைப்பதற்குத் துரியோதனன் கடமைப்பட்டவனாகிறான். விராடனின் அவையில்

பாண்டவர் பூண்டிருந்த இரட்டை வேடம் நாடக ஓட்டத்தில் விறுவிறுப்பினை ஊட்டுதற்குப் பயன்படுத்தப்பட்டது. **அபிமன்யுவை வீமன் சிறைப்படுத்துதல் என்பது பாசகவியின் கற்பனைத் தந்திரம்.** இதனால் தந்தை மகன் இருவருக்குமிடையே ஒரு நாடகக் காட்சி தோன்ற வாய்ப்பு உண்டாகிறது. **இந்நாடகத்தில் பாசகவி எதிர்நாயகனாகிய துரியோதனனை மிகவும் நல்ல பாத்திரமாகப் படைத்திருத்தல் அவர்தம் படைப்பாற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டு எனலாம்.**

## IV.1.1.2. மத்தியம வியாயோகம்

இந்த ஓரங்க நாடகத்திற்குரிய கதைக்கரு பகாசுரனும் அந்தணக் குடும்பமும் ஆகும். இதனையும் மகாபாரததிலிருந்து பாசன் எடுத்துக் கற்பனை மெருகேற்றிப் புனைந்துள்ளார் என்று விண்டர் நீட்சு குறித்துள்ளார். எனினும், இந்நாடகத்தின் உண்மைக் கதை வேறு வகையாக உள்ளது.

பாண்டவர் வனவசாசத்தின் பொழுது நடந்த ஒரு நிகழ்ச்சி இந்நாடகத்தின் மையக் கதையாக அமைந்தது. கடோற்கசனும் அவன் தாய் இடிம்பியும் (Hidimbi) நரமாமிசம் விரும்பினர். கேசவதாசன் எனப் பெயர் கொண்ட அந்தணன் தன் மனைவியுடனும் மூன்று மகன்களுடனும் வனத்தின் வழியே செல்வதை அவ்விருவரும் பார்த்துவிட்டனர். அவர்களை வழிமறித்துக் கடோற்கசன் ஒரு பிள்ளையைத் தரும்படி அந்தணனைக் கேட்டான். மூன்று பிள்ளைகளுமே கடோற்கசனைத் தொடருங்கால், முதல் மகனைத் தந்தையும் இளையவனைத் தாயும் தடுக்க, நடுமகன் தன் குடும்பத்தினைக் காக்கும் நோக்கில் கடோற்கசனைப் பின்தொடர்ந்தான். வழியில் தன் வழிபாட்டுக் கடமைகளைப் புரிதற் பொருட்டு அவ்வரக்கனிடம் இசைவு பெற்று ஒரு குளத்தின் மருங்கில் சென்றான். நெடுநேரம் கடந்தும் அவன் திரும்பாமை கண்டு, நடுப்பிள்ளை என்று பொருள்பட **“மத்தியமா, மத்தியமா”** எனக் கூறினான் கடோற்கசன். ஒருபக்கத்தில் உடற்பயிற்சி புரியும் வீமன், தன்னைத்தான் அப்படி அழைப்பதாக எண்ணி கடோற்கசன் அருகில் சென்றான். உண்மை நிலையினை உணர்ந்த வீமன், அந்தணச் சிறுவனை விடும்படி கூறியும் அவன் உடன் படாமையின் இருவர்க்கும் போர் நிகழ்ந்தது. ஒருவரும் தோற்காத நிலையில், தம்மைத் தந்தையும் மகனும் என்பது அறிந்து கொண்டனர். கடோற்கசன் அந்தணச் சிறுவனை விடுவித்தான். இதுவே இந்நாடகக் கதை ஆகும்.

### IV.1.1.3. தூத வாக்கியம்

இதுவும் ஓரங்க நாடகமே. பாண்டவரின் தூதுவனாகக் கண்ணன் துரியோதனனிடம் சென்ற செய்தியே இந்நாடகத்தின் மையக் கதையாகும்.

துரியோதனனைக் காண்பதற்குக் கண்ணன் வந்துள்ள செய்தியைக் கஞ்சுகி தெரிவிக்கிறான். அவையில் ஆசனத்தில் அமர்ந்த கண்ணன், அரை ஆடையுடன் திரௌபதியின் முடியைப் பிடித்து இழுத்துவரும் அவலக் காட்சி தீட்டப்பட்ட ஓவியத்தினை அங்குக் கண்ணுற்றான். தாய பாகத்தினைப் பாண்டவர்க்குத் தரும்படி துரியோதனனிடம் கேட்டான். துரியோதனன் மறுத்ததுடன் வன்முறையில் ஈடுபட முயன்றான். கண்ணன் விசுவரூபம் எடுத்தான். அவன் உருவமே அவையில் எல்லா இடத்திலும் நிரம்பியிருந்தது. அவனுக்குரிய சுதர்சனம், பாஞ்ச சன்னியம் உள்ளிட்ட படைக்கலன்களும் அவன் ஆணையின்படி வந்து சேர்ந்தன. அவன் ஊர்தியாகிய கருடனும் வந்தான். இவற்றைக் கண்ட துரியோதனனின் அச்சமும் குழப்பமும் மிகுந்தன. கண்ணன் அமைதியுற்றான். அந்நிலையில் திருதிராட்டிரன் தோன்றித் தன் பிள்ளைகள் செய்த பிழையை மன்னிக்கக் கோரி, கண்ணனின் கழலிணைகளில் விழுந்து வணங்கினான். அவன் வேண்டுகோளைக் கண்ணன் ஏற்றருளினான் என்று இந்நாடகம் நிறைவு பெறுகிறது. இந்நாடகத்தில் வாசுதேவனாகிய கண்ணன் மனிதனாகவும் பரம்பொருளாகவும் காட்சி தருதல் சுட்டத்தக்கது.

### IV.1.1.4. தூதகடோற்கசன்

இதுவும் ஓரங்க நாடகம் ஆகும். போர் அறத்திற்குப் புறம்பாகவும் கொடுமையாகவும் அபிமன்யு கொல்லப்பட்டதற்குக் காந்தாரி, திருதிராட்டிரரை உள்ளிட்டோர் வருந்திக் கௌரவர்களின் நடத்தையை இகழ்ந்தனர். அமைதித் தூதுவனாகக் கடோற்கசன் பாண்டவரால் கௌரவர் பக்கம் அனுப்பப் பெற்றான். எனின், அவனை அவர்கள் அவமானப்படுத்தினர். தன்னை இகழ்ந்து பேசியவை அனைத்தும் 'அடிகளுக்கு ஏற்கும்' என்று துரியோதனனை நோக்கிக் கடோற்கசன் கூறினான். திருதிராட்டிரன் குறுக்கிட்டு அவனைத் தணிவுறச் செய்தான் என்பது இந்நாடகப் பொருளாகும்.

### IV.1.1.5. கர்ணபாரம்

தான் சத்திரியன் என்பதை மறைத்துக் கூறிப் பரசுராமனிடம் போர் வித்தையில் தேர்ச்சி பெற்றான் கர்ணன். அவன் சத்திரியன் என்பதனைத் தெரிந்துகொண்ட பரசுராமன் தான் கற்பித்த வித்தை

நெருக்கடி வேளையில் பயன்படாது போகட்டும் என்று இட்ட சாபத்துடன் இந்நாடகம் தொடங்குகிறது. அருச்சுனனுக்கு எதிராகப் போர் புரியப் போகும் வழியில் ஏழை அந்தணன் வடிவெடுத்து வந்த இந்திரன் கர்ணனிடம் யாசகனாக வருகிறான். எதை வேண்டுமானாலும் தருவதாகக் கூறிய கர்ணனிடம் அவனுடைய கவச குண்டலங்களைத் தரும்படி கேட்டுப் பெறுகிறான். ஈகையினையே வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்ட கர்ணனிடம் தன் உண்மை வடிவத்தினைக் காட்டிய இந்திரன் "வேண்டும் வரங்களைக் கேள், தருவேன்" என்றான். அந்நிலையிலும் கர்ணன்,

**இல்லைஎன் றிரப்போர்க்கு இல்லைஎன் றுரையா**
**இதயம்நீ அளித்தருள் என்றான்**

என்று வில்லிபுத்தூராழ்வார் பாடியிருத்தல் இங்கு எண்ணத் தக்கது.

### IV.1.1.6. ஊருபங்கம்

இதுவும் ஓரங்க நாடகமே. ஊரு-தொடை; பங்கம்-பங்கப்படுத்துதல். வீமன் கதாயுதத்தினால் துரியோதனனின் தொடையினைப் பங்கப்படுத்தித் தரையில் வீழ்த்திய செயல் இந்நாடகத்தின் மையக்கதை. வீழ்ந்து கிடக்கும் மகனைக் காணத் திருதிராட்டிரனும் காந்தாரியும் வருகின்றனர். மறுபிறப்பிலும் தனக்குத் தாயாக வருதல் வேண்டுமெனக் காந்தாரியைத் துரியோதனன் வேண்டும் பகுதி உருக்கம் வாய்ந்தது.

மேலே சுட்டப்பட்ட ஐந்து ஓரங்க நாடகங்களிலும் ஊருபங்கமே காவியத் தன்மை வாய்ந்தது என்பர். பாசகவியின் கற்பனை இதில் முழுவீச்சில் அமைந்துள்ளது. **இதன் ஆறாம்பாடலில் போர்க்களத்தினை வேள்விக்களத்துடன் ஒப்பிட்டுப் பாசன் ஒரு அரிய கற்பனையைப் படைத்துள்ளான்.** யானையின் கால்களே வேள்வித் தூண்கள்; அம்புகளே தர்ப்பைப்புல்; அடுக்கி வைக்கப்பட்ட கொல்லப்பட்ட யானைகளின் முறிந்த உடல்களே பலிபீடம்; சீற்றமே நெருப்பு; போர்க்குரலே வேள்வியின் மந்திர ஓசை; போரிட்டு வீழ்ந்த வீரர்களே யாகப் பசுக்கள் என்ற வருணனை கவிஞனின் படைப்புக் கற்பனைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. **புறநானூற்றிலும் பரணி இலக்கியங்களிலும் புனையப் பெற்றுள்ள போர்க்கள உருவகக் காட்சிகளை இங்கு எண்ணிப் பார்த்தல் சாலும்.**

இந்நாடகத்தின் இறுதியில் பாண்டவ மரபின் கடைசிக் கால் முளையினை அழிக்கப் போவதாகக் கொதிப்புற்ற நிலையில் அசுவத்தாமன் சபதம் செய்கிறான். துரியோதனனின் இறப்பும்,

திருதிராட்டிரனின் துறவும் இறுதியில் இடம் பெறுதலின், இதனை அவல நாடகமாக (Tragedy) எண்ணுதல் பொருந்தும். **இந்திய நாடகங்கள் யாவும் இன்பியல் சார்ந்தவை என்ற பொதுக் கருத்திற்கு விதிவிலக்காக இதனைக் கருதுதல் சாலும்.** மேற்சுட்டப்பட்ட ஆறு நாடகங்களும் பாசகவியின் முற்காலப் படைப்புக்களாக எண்ணப்படுகின்றன. இவையாறும் மகாபாரதத்துடன் நேரடித்தொடர்பு கொண்டவை.

### IV.1.1.7. பாலசரிதம்

ஐந்து அங்கங்களைக் கொண்டது இந்நாடகம். பால- இளமை; சரிதம் - வரலாறு. கண்ணனின் பாலப்பருவ நிகழ்ச்சிகளை இதனுள் பாசகவி நாடகமாக அமைத்துப் பாடியுள்ளார். கண்ணனைப் பற்றிய நாடகங்களில் இதுவே தொன்மைமிக்கது. பாரதத்துடன் மட்டுமன்றி **அரிவமிசம்,** பாகவதம் முதலிய கண்ணன் தொடர்பான தொன்மங்களிலிருந்தும் இந்நாடகத்திற்குத் தேவையான கதைக்கூறுகளைப் பாசகவி பெற்றிருத்தல் வேண்டும்.

எருது வடிவெடுத்த **அரிட்டநேமி** என்னும் அசுரனை அழித்தமை, பாம்புருவில் வந்த காளிய அசுரனை அதன்மேல் நின்று நடனமாடி அடக்கியமை, **சாணூரன், முட்டிகன்** என்ற மல்லர்களை அழித்தமை, முடிவாகக் **கம்சனைத்** தரையில் மோதிக் கொன்றமை முதலிய கண்ணனின் பாலப்பருவச் செயல்கள் இந்நாடகத்தில் விரித்துரைக்கப்பெறுதலின் **பாலசரிதம்** என்று இது பெயர் பெற்றது.

கண்ணன் தொடர்பான பாசகவியின் நாடகங்களில், அவனைப் பரம்பொருளின் அவதாரமாகவே கவி போற்றியிருத்தல் சுட்டத்தக்கது. இனி, இராமாயண மூலத்தினின்றும் எடுத்துப் படைத்த பிரதிமா நாடகம், அபிடேக நாடகம் பற்றிச் சற்று உற்று நோக்குவோம்.

## IV.1.2. இராமாயணத் தொடர்புடையவை

### IV.1.2.1. பிரதிமா நாடகம்

வான்மீக இராமாயணத்தில் அயோத்தியா காண்டம், கிட்கிந்தை காண்டம் ஆகியவற்றில் வரும் ஒரு சில காட்சிகளை முதன்மைப்படுத்தி ஏழு அங்கங்களில் இந்நாடகம் படைக்கப் பெற்றுள்ளது.

முதல் அங்கத்தில் தனக்கு எந்த அளவில் மரவுரி தரித்தல் பொருத்தமாயுள்ளது என்பதைக் காணும் நோக்கில் பணிப்பெண் கொண்டுவந்த மர ஆடையினைச் சீதை வேடிக்கையாக உடுத்துதல் இடம்பெற்றது. பின், இராமன் முடிசூடும் செய்தியும், அதனைத்

தொடர்ந்து அது ஒத்தி வைக்கப்பட்டதுடன் 14 ஆண்டுகள் இராமன் வனவாசம் செய்யவேண்டிய செய்தியும் வருகின்றன. வேடிக்கைக்காக அணிந்து கொண்ட மரவுரியுடன் சீதையும், பாசம் மிக்க இளவல் இலக்குவனும் கானகம் செல்லும் இராமனைத் தொடர்கின்றனர்.

தசரதனுக்குச் சலபோக முனிவரிட்ட சாபத்தைப் போக்கவே இராமனைக் காட்டிற்குச் செல்ல, கைகேயி சூழச்சி செய்தாள் என்பதும்; பதினான்கு நாள் வனவாசம் செய்ய வேண்டும் என்று கூற எண்ணியவள் வாய் தவறிப் பதினான்கு ஆண்டுகள் என்று கூறிவிட்டதாகக் கைகேயி கூறுதலும்; **பரதன் தன் தாய் நல்லவள் என மகிழ்ந்து அவனிடம் மன்னிப்புக் கேட்பதும் பாசகவி படைத்த புதுமைகள் ஆகும்.**

இரண்டாம் அங்கத்தில், உள்ளத்தை நெகிழச் செய்யும் பாங்கில் தசரதச் சக்கரவர்த்தியின் புலம்பலும் இறப்பும் கூறப்பட்டன. மூன்றாம் அங்கத்தில் அரண்மனையில் அவன் முன்னோர்களின் பிரதிமைகளுடன் (Images) தசரதனின் பிரதிமையும் காட்சிப்படுத்துப்படுதல் இடம்பெறுகிறது. தன் அம்மான் வீட்டிலிருந்து தேரில் தாயகம் திரும்பும் பரதன் அயோத்தியில் அரண்மனையின் முகப்பில் கோயில் அந்தணனின் வாயிலாக அங்கு நடந்த அவலத்தை அறிகிறான். மயங்கி விழுகிறான். பெருந்தேவியர் மூவரும் சுமந்திரனுடன் அங்கு வரும்பொழுது உணர்வு பெற்று எழுகிறான் பரதன். மரியாதையுடன் கோசலை, சுமித்திரையினை வரவேற்கிறான்; தன் தாய் கைகேயியை வசைபாடுகிறான். முடிசூட மறத்து, இராமன் இருக்கும் இடத்திற்குச் செல்ல முடிவு செய்கிறான். ஆரண்யத்தில் இராமனிருக்கும் பர்ண சாலைக்குப் பரதன் புறப்பட்டுச் செல்லும் நிகழ்ச்சி நான்காம் அங்கத்தின் அடிக்கருத்தாகும். ஐந்தாம் அங்கத்தில் இராவணன் வஞ்சினையால் சீதையைக் கவர்தல் இடம்பெற்றது. ஒரு சோலையில் இராமனும் சீதையும் உள்ளனர். தனக்கு விருப்பமான ஒரு செடிக்குச் சீதை நீர் வார்த்துக் கொண்டிருக்கிறாள். தன் தந்தை இறந்து ஓராண்டு நிறைவுறும் சிராரத்த நாளினை எவ்வாறு கொண்டாடுவது என்ற கவலையில் இராமன் இருக்கிறான். அப்போது துறவிக்கோலத்தில் இராவணன் வருகிறான். தனக்குச் சிரார்த்த கல்பம் உள்ளிட்ட வைதிக நூல்களில் தேர்ச்சி உண்டு என்றும், இறந்த தந்தைக்கு எப்படி சிறப்பாகப் பிதிர்க்கடன் செலுத்த வேண்டும் என்றும் இராமனிடம் கூறுகிறான். இமயத்தில் காணப்படும் பொன் மான்களைப் பிதிரர்கள் மிகவும் விரும்புவர் என்று கூறும்பொழுது, தன் மாயாசாலத்தினால்

படைத்த பொன்மானைக் காண்கிறான் இராமன். சீதையைத் தனித்துவிட்டு, அதனைப் பிடிப்பதற்கு விரைகிறான். இச்செவ்வியைப் பயன்படுத்திக் கொண்டு சீதையினை அழ அழ எடுத்துச் செல்கிறான் இராவணன்.

**மூலக்கதையினின்றும் பாசன் இங்கு வேறுபடுகிறான் என்பது சுட்டத்தக்கது. மேலும் கைகேயி என்ற பாத்திரத்தை மேம்படுத்திப் படைத்துள்ளான்.**

ஏழாம் அங்கத்தில் இராமன் இராவணனைக் கொன்று சீதையினை மீட்டு வனத்தில் உள்ள தன் பர்ணசாலைக்குத் திரும்புதலும், பரதன் தாயருடன் அங்குச் சந்தித்தலும், அங்கேயே இராமன் முடிசூடப் பெறுதலும் இடம்பெற்றன. வான்மீகத் தொடர்கள் பல இந்நாடகத்தின் அப்படியே எடுத்தாளப்பெறுதலை அறிஞர்கள் சுட்டியுள்ளனர்.

### IV.1.2.2. அபிடேக நாடகம்

அபிடேகம் என்பது பட்டாபிடேகம், முடிசூடுதல் ஆகும். இந்நாடகம் ஆறு அங்கங்களைக் கொண்டது. கிட்கிந்தை காண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் ஆகியவற்றில் இடம்பெற்ற கதை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு இந்நாடகம் புனையப்பெற்றது. **பிரதிமா நாடகத்தில் இராமன் மனிதரில் சிறந்தோனாகவே வருகிறான். எனின், அபிடேக நாடகத்தில் திருமாலாகவே அவன் போற்றப்படுகின்றான். ஏழாம் அங்கத்தில் சீதையைத் திருமகள் அவதாரம் என அக்கினி தேவன் பரவுகிறான். இராமன், கண்ணன் ஆகிய இருவரும் திருமாலின் அவதாரமாகப் போற்றப்படுதல் கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டளவில்தான் என்று வரலாற்றறிஞர்கள் கருதுவதால், பாசகவி, இக்காலத்தினை ஒட்டி வாழ்ந்தனராதல் வேண்டும் என்று எண்ணுதல் சாலும். இதனால், A.D.புசால்கரின் கருத்து மறு ஆய்வுக்கு உரியது எனலாம்.**

முதல் அங்கத்தில் வாலியின் சிறப்பு இடம்பெற்றது. வான்மீகத்தின்றும் பாசகவி வேறுபடும் இடங்களில் சுட்டத்தகுவன சில உள்ளன. இலங்கைக்குச் செல்ல சேதுபந்தனம் அமைத்த செய்தி இந்நாடகத்தில் இல்லை. வருண பகவான் இராமனின் சீற்றத்தைத் தணிக்க, கடலினை இரு கூறாக்கி வானரசேனை இலங்கை செல்ல வழிவிடுகிறான். இராமன் வானரப்படையுடன் இலங்கை வருகிறான். இராவணன் தன் மாயா சாலத்தினால் இராம இலக்குவரின் உடம்புகளிலிருந்து துண்டிக்கப்பட்ட தலைகளைச் சீதைக்குக் காண்பிக்கிறான். அப்போது தன் மகன் இந்திரசித்தை

இராமன் கொன்று விட்டான் (மூலத்தில் இலக்குவன் கொன்ற செய்தி உண்டு) என்ற செய்தியை ஓர் அரக்கன் கூறக்கேட்டு இராவணன் துயருற்ற நிலையைப் பாசகவி புலப்படுத்தியுள்ளார். இராவண வதத்திற்குப்பின் சீதையின் அக்கினிப் பிரவேசம், நாடு திரும்புதல் இடம்பெற்றன.

இந்த நாடகத்தில் இரு அபிடேகங்கள் (-முடிசூடல்) இடம்பெற்றன. 1. வாலியைக் கொன்று கிட்கிந்தைக்கு அரசனாகச் சுக்கிரீவனுக்கு இராமன் முடி சூட்டுவித்தல். 2. இராவணனைக் கொன்றபின் தான் முடி சூடிக் கொள்ளுதல். ஆதலின், இந்நாடகத்திற்கு, **அபிடேக நாடகம்** எனப் பாசகவி பெயர் சூட்டினார். இதிகாசங்களிலிருந்து புனையப்பெற்ற பாசனின் நாடகங்களில் விதூடகனோ, நகைத்துணுக்குக் காட்சியோ இடம்பெறவில்லை என்பது சுட்டுதற்குரியது. இவற்றில் பாடல்களே ஓங்கி நின்றன. பிராகிருத வழக்குப் பின்தள்ளப்பட்டிருந்தது என்பர் திறனாய்வாளர்கள். இனி பிருகத்கதா (-பெருங்கதை) தொடர்புடைய நாடகங்கள் பற்றி நோக்குவோம்.

### IV.1.3. பிருகத்கதா தொடர்புடையவை

#### IV.1.3.1. சுவப்பன வாசவதத்தம்

பாசகவியின் பிரகரண நாடகங்களில் சுவப்பன வாசவதத்தம் நனிசிறந்த படைப்பாகப் போற்றப்படுகின்றது. நாடகத்தின் தலைவன் ஆகிய உதயணன் தன் தலைவி வாசவதத்தையினைக் கனவில் சந்தித்தலினால், இந்நாடகம் இப்பெயர் பெற்றது. இதன் கதைச் சுருக்கம் காண்போம்.

உதயண மன்னனின் மற்றும் அவன் இராச்சியத்தின் நலம் கருதி மகத நாட்டின் மன்னனின் சகோதரி பதுமாவதியை உதயணன் மணத்தல் தேவை என்பதைச் சோதிடர்கள் கணித்துக் கூறினர். எனின், தன் மனைவி வாசவதத்தையினை உதயணன் கூடுதலாக நேசித்தமையால், இரண்டாம் மனைவி என்ற பேச்சுக்கே இடம் எழவில்லை. அவன் நம்பிக்கைக்குரிய நண்பனும் அமைச்சனும் ஆகிய **யூகி** எனப்படும் **யௌகந்தராயணன்** ஒரு சூழ்ச்சி செய்தான். நகரினை எரி கொளுவி விட்டு, வாசவதத்தையினை எரியினின்றும் காப்பாற்ற முற்படும் பொழுது தானும் அவளும் எரிந்து விட்டதாக ஒரு அலர்ப்பேச்சினை (-வதந்தியை)ப் பரவச் செய்தான். பின்னர்த் துறவிக் கோலம் பூண்டு வாசவதத்தையினைத்தன் சகோதரி எனக் கூறிக்கொண்டு மகதம் வரை அவளுடன் அவன் பயணித்தான். மகத இளவரசியாகிய பதுமாவதியின் பாதுகாப்பில் அவளை விடுத்தான்.

இரு பெண்களும் விரைவில் நெருங்கிய தோழியராயினர். இதுவே முதல் அங்கத்தின் கதைச் சுருக்கம்.

இரண்டாம் அங்கத்தில் இருவரும் பந்த விளையாடுதல் இடம் பெற்றது. அவர்தம் உரையாடலிலிருந்து உதயணனைப் பதுமாவதி மணப்பதற்குச் சித்தமாயுள்ளாள் என்பது புலனாகும். பணிமகள் வாயிலாக உதயணனின் விருப்பமும் இசைவும் அவளுக்குத் தெரிவிக்கப்பட்டது. வாசவதத்தையின் தனி மொழியால் இச்செய்தி கேட்டு அவள் மனம மிகவும் கலக்கமுற்றது. பதுமாவதியை உதயணன் மணப்பதற்குத் தன்பால் அன்பின்மை காரணமன்று என்றும், கடமை உணர்வுதான் காரணம் என்றும் அறிந்து கொண்ட வாசவதத்தை தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள். இதுவரையும் இரண்டாம் அங்கத்தின் கதைக் கூறாகும்.

மூன்று, நான்காம் அங்கங்களில் உதயணன் பதுமாவதி இவருர்க்கும் திருமணம் நிகழ்தல் இடம்பெற்றது. தன் உயிர்க்கினிய கணவன் உதயணன் ஆகிய மணமகனுக்குரிய மாலையினைத் தொடுக்கும் இன்பமற்ற பணியைச் செய்யும்படி வாசவதத்தை கேட்டுக் கொள்ளப்பெற்றாள். நான்காம் அங்கத்தில் விதூஷகன் தோன்றி, திருமண நிகழ்வினையும் சுவைமிக்க விருந்துணவு சாப்பிட்ட மன நிறைவினையும் புலப்படுத்துவதாகப் பாசகவி அமைத்துள்ளார். எனினும், தன் வயிறு நிலைகுலைந்ததாக முறையிடுகிறான். பின்னர், பதுமாவதி வாசவதத்தையுடன் வந்தனள். அவர்தம் உரையாடலிலிருந்து உதயணன் இன்னமும் வாசவதத்தையைக் காதலிப்பதாக அறிகிறோம். இடையே உதயணனும் விதூடகனும் தோன்றி உரையாடுவதைப் பெண்கள் இருவரும் ஒட்டுக்கேட்கின்றனர். வாசவதத்தை, பதுமாவதி ஆகிய மனைவியர் இருவருள் யார் உதயணனுக்கு அணுக்கமானவர் என்று அவனை விதூடகன் வினவுகிறான். நெடுநேரம் விடை கூறாமல் இருந்தும், தான் பதுமாவதியைக் காதலிப்பினும், இறந்துவிட்ட (எரியூட்டப்பட்டதால்) வாசவதத்தையினையே தன் உள்ளம் பற்றிக் கிடப்பதாக உதயணன் கூறுகிறான். சுவையான உணவளித்துத் தன்னைப் புரப்பதால் பதுமாவதியிடம் கூடுதல் அன்பு காட்டுவதாக விதூடகன் கூறுகிறான். ஆயினும், வாசவதத்தையினையே எண்ணி எண்ணி உதயணன் புலம்புகிறான்; பின் தூங்கத் தொடங்குகிறான். உதயணன் கண்களைக் கழுவும் பொருட்டு நீர் கொண்டுவருவதற்கு விதூடகன் அகல்கிறான். பெண்கள் இருவரும் உரையாடலைக் கேட்டு மனம் நெகிழ்ந்தனர். வாசவதத்தை பின்வாங்குகிறாள். பதுமாவதி கணவனை அணுகுகிறாள்.

அரண்மனையில் குளியலறையில் ஐந்தாம அங்கம் விரிகிறது. பதுமாவதிக்குத் தலைவலி என்பதால் அங்குப் படுக்கையில் ஓய்வு கொண்டிருக்கிறாள் என்ற செய்தியைப் பணிப்பெண்கள் தெரிவிக்கின்றனர். விதூடகன் வாயிலாக இதனை அறிந்த உதயணன் அவனுடன் அங்கு வருகின்றான். அங்குக் கிடந்த ஒரு மாலையினை அரவு என்று அஞ்சிப் பின்னோக்கி ஓடிய விதூடகனை உதயணன் பரிகாசம் செய்கிறான். அவர் இருவரும் வரும்பொழுது பதுமாவதி அங்கு இல்லை. படுக்கையில் விழுந்த உதயணன் துயிலும் பொருட்டுக் கதைகள் கூறும்படி விதூடகனைக் கேட்கிறான். எனின், விதூடகன் பின்வாங்குகிறான். நலக்குறைவுற்ற பதுமாவதியைக் காணும்பொருட்டு வாசவதத்தை அங்கு வருகிறாள். பதுமாவதிதான் உறங்குவதாக நினைத்துப் படுக்கையில் வாசவதத்தை அமர்கிறாள். ஆயின், உதயணன் கனவில் '**வாசவதத்தாய்!**' என்று கூவுதல் கேட்டு, தன் தலைவன்தான் என்பதை உணர்கிறாள். அவன் காணும் கனவில் வாசதத்தையுடன் பேசுகிறான். சிறிது நேரம் காத்திருந்து கனவில் அவன் வினவும் கேள்விகளுக்கெல்லாம் விடை கூறிவிட்டு அவன் விழிக்கும் முன்னர் அகன்று விடுகிறாள். அவள் வெளியேறும் வேளையில், விழித்த உதயணன் அவளை அகவி அழைத்து,

> **வாசவதத்தையே! தயை கூர்ந்து இங்கு இரு; நான் விரைந்தேகும் வேளையில் கதவின் ஒரு பக்கத்தில் இடித்துக் கொண்டேன். அதிலிருந்து இது உண்மையா? கனவா? என்பது எனக்குத் தெளிவாகவில்லை**

என்று கூறும் வேளையில் விதூடகன் வருகிறான். "விழித்துக் கொண்டாயா?" என்று வினவுகிறான். "நண்பனே! ஒரு புதுச் செய்தி: வாசவதத்தை உயிருடன் உள்ளாள்" என்கிறான் உதயணன். "வாசவதத்தை எங்கே இருக்கிறாள்? இறந்து நெடுநாளாகிவிட்டதே" என்கிறான் விதூடகன். 'இப்படிப் பேசாதே' என்கிறான் உதயணன். "தூங்கிய என்னை அவள் எழுப்பிவிட்டுப் போய்விட்டாள்; அவளை எரியுண்டதாகத் தெரிவித்த உருமண்ணுவாவால் நான் ஏமாந்தேன்" என்று கூறுகிறான் அரசகுமாரன். "அது நினைக்க முடியாத ஒன்று. அவந்தியில் குளியலிடம் பற்றி நான் குறிப்பிட்டபொழுது, வாசவதத்தையைப் பற்றி நீ நினைத்தாய்; இப்போது கனவில் அவளைக் கண்டதாக உணர்கிறாய்" என்றான் விதூடகன். அவனுக்கு மறுமொழி பகரும் மன்னவ குமரன்,

> அது வெறுங் கனவாக இருந்தால், நான் எழாவிடின் அப்படியே இருந்து போகட்டும்! அது வெறும் மாயையாக (-பொய்த்தோற்றம்) இருந்தால்,

அத்தோற்றம் எப்பொழுதும் தொடரட்டும்

என்று இயம்புகிறான். அவன் கனவுதான் கண்டான் என்று விதூடகன் கூறிக் கொண்டிருக்கும் வேளையில், உள்படுகருமத் தலைவன் தோன்றிப் போர் மூண்டுள்ளது என்று அறிவிக்கிறான். இச்செய்திகேட்டு உதயணன் போர்க்கு விரைகிறான்.

ஆறாம் அங்கம் உதயணனின் அரண்மனைக்கு நம்மை எடுத்துச செல்கிறது. வாசவதத்தைக்குத் தான் இசை கற்பித்துக் கொடுத்த யாழினைக் காண்கிறான். அதனைக் கண்டதும் பழைய நினைவுகள் எழுகின்றன. யாழைப் பார்த்துப் பேசுகிறான்:

> அன்புக்குரிய யாழே! முன்பு அவள் தனங்களிலும் தொடைகளிலும் நீ வீற்றிருந்தாய். கானகத்தில் பறவைகள் உன்கோலினைச் சிதறச் செய்து புழுதிப்படுத்தியதால், எங்ஙனம் அச்சுறுத்தும் வாழ்வினை நடத்தினாய்?
>
> உனக்கு உணர்ச்சி இல்லை; கோஷவதியே! (யாழின் பெயர்-இதனைக் கொங்குவேளிர் பெருங்கதையில் கோடபதி என்று குறித்துள்ளார்) உன்னை அவள் தொடைகளில் தாங்கியும், தன் புயங்களில் அழுத்தியும், தன் மார்பகங்களில் இன்ப அணைப்பு வழங்கியும் இருந்த அவளை நீ நினைவுபடுத்திக் கொள்ளமாட்டாய்! என்னை அவள் பிரிந்துள்ளபொழுது நீ அரற்றினாய்! இசை நிறுத்தங்களின் இடையே நிகழ்ந்த உரையாடல்கள் நகை நிரம்பியவை!”

இங்ஙனம் காதலால் உதயணன் அரற்றுதல் வாசவதத்தையின் பெற்றோர்கள் விடுத்த தூதுவர்கள் வரவினால் தடைப்பட்டது. வாசவதத்தையின் தாயின் பெயரினால், அவளும் உதயணனும் தீட்டப்பெற்ற அழகிய ஓவியப் படத்தினை உதயணனிடம் தூதுவர்கள் கொணர்ந்தனர். இதற்கிடையில், தன் தங்கையினை மீட்டுச் செல்ல யௌகந்தராயணன் வருகிறான். ஓவியத்தின் உதவியால் வாசவதத்தை அடையாளம் காணப்படுதலும் உண்மைகள் யாவும் வெளிப்படுகின்றன. இறுதியில் இடம்பெறும் தூத வாக்கியம்:

> கடல் சூழ்ந்ததும், இமயமும் விந்தியமும் இரு குண்டலங்களாக உடையதும் ஆகிய இந்நில வுலகினை இராசசிம்மனாகிய நம் மன்னவன் புரக்கட்டும்!

சுவப்பன வாசவதத்தம் என்ற ஒரு நாடகத்தைக் கொண்டே பாசன் இந்தியப் பெருங்கவிஞருள் ஒருவன் என்று முடிபு செய்யலாம் என்பர் ஜெர்மானிய அறிஞர் விண்டர் நீட்ஸ்.

### IV.1.3.2. பிரதிஞ்ஞாயௌகந்தராயணம்

பிரதிஞ்ஞா-சபதம்; யௌகந்தராயன்-ஊகி என்னும் உதயணனின் அமைச்சனும் நண்பனும்; இவன் எடுத்த சபதத்தை மையமாகக் கொண்டு பாசகவி புனைந்த நாடகத்திற்குப் பிரதிஞ்ஞா யௌகந்தராயணம் என்பது பெயராயிற்று.

யௌகந்தராயணனின் (-ஊகியின்) அரசியலறிவு, வினைத்திறம், மன்னன் உதயணனிடம் கொண்ட விசுவாசம் என்ற விழுமிய தகவுகள் இந்நாடகத்தில் மேம்படுத்தப்படுகின்றன. பிரச்சோதனனின் (-பிரத்யோதன்-பாசகவியின் சொல்லில்) அமைச்சருள் ஒருவனாகிய பரதரோககனுக்கும் (-பரதன் என வழங்கினர் கொங்குவேளிர்) உதயணனின் அமைச்சனாகிய யௌகந்தராயணனுக்கும் இடையே உள்ள போராட்டமே இந்நாடகத்தின் வளர்ச்சிக்கு உந்தாற்றலாகும். நான்கு அங்கங்கள் கொண்டது இந்நாடகம்.

மாய யானையின் உதவியால் மன்னன் பிரச்சோதனின் அமைச்சன் பரதரோககனால் சிறைப்பிடிக்கப்பட்ட உதயணன், மன்னன் மகள் வாசவதத்தைக்கு யாழிசையினைக் கற்பித்து அவள் காதலைப் பெறுகிறான். வஞ்சித்து உதயணனைச் சிறைப்பிடித்த செய்தியை ஒற்றனால் கேள்வியுற்ற யௌகந்தராயணன், தன் அரசனை மீட்பதற்குச் சபதம் எடுத்த செயலைப் பாசகவி கற்பனைத் திறனால் சுவைபடப் படைத்துள்ளார். உதயணனுடன் வாசவதத்தையினையும், யானையினையும் மக்களையும் மீட்டுத் தன்னாட்டிற்குக் கொண்டுவரவில்லையெனின், தன்னை யௌகந்தராயணன் என்று யாரும் அழைக்கவேண்டாம் என்று சூளுரைக்கின்றான். இந்த நோக்கத்துடன், யூகி பித்தனாகக் கோலம் கொள்கிறான்; பிரச்சோதனன் அரண்மனையில் திரிகிறான். தன் திட்டத்தில் வெற்றி கொள்கிறான். உதயணனை மீட்கிறான். எனின், போரிடும்பொழுது தன் வாளினைப் பகைவரின் களிறு தந்தத்தினால் தூள் தூளாக்கி விட்டதால் சிறைப்படுகிறான். எனினும், தன் தலைவனை மீட்டுவிட்டதால் வெற்றி தன்னதே என்று முழங்குகிறான். பரதரோககனின் இகழ்ச்சியுரையினை அவன் சிறிதும் பொருட்படுத்தவில்லை. முடிவில், வாசவதத்தை உதயணனின் திருமணத்திற்குப் பிரச்சோதனன் இசைவு தெரிவித்தலின் எல்லாம் இனிதாய் முடிகின்றது.

### IV.1.3.3. அவிமாரகம்

இது ஆறு அங்கம் கொண்ட நாடகம் ஆகும். இதற்கும் மூலம் பிருகத் கதையாதல் வேண்டும் என்பர். உதயணன் கதை இடம்பெறும் கதாசரித சாகரத்தில் இதன் வேரினைக் காண்பர் சிலர். சௌவீர அரசன் **விஷ்ணுசேனன்** குந்திபோச நகரில் கரந்துரையும் காலத்தில் **அவி என்னும் அசுரனைக் கொன்று விட்டதால் அவிமாரகன் என்ற பெயரினைப் பெற்றான்.** தீர்க்கதபசு என்னும் இருடியின் சாபத்தால் ஓராண்டு காலம் அவன் சண்டாளனாக மாறினான். ஒரு நாள் தன் தாய் மாமன் குந்திபோசனின் மகள் **குரங்கி** என்பாளை மதயானையினின்றும் அவிமாரகன் காப்பாற்றுகிறான். குரங்கியும் அவிமாரகனும் காதல் கொள்கின்றனர். **(-களிறுதரு புணர்ச்சி என்று இத்தகைய கூட்டத்தினைச் சங்க இலக்கிய மரபு கூறுதல் இங்கு எண்ணுதற்கு உரியது)**. இளவரசியின் பணிமகளின் வாயிலாக, காதலிரின் களவுப்புணர்ச்சி அரண்மனையின் ஒரு பக்கத்தில் நிகழ்கிறது.

மூன்றாம் அங்கத்தில் இளவரசனாகிய அவிமாரகன் கள்வன் கோலம் தாங்கி நள்ளிரவில் அரண்மனையில் இளவரசியின் முன் தோன்றுகிறான். **"நூறு யுகமாக இந்த இரவு நீடிப்பின், என்னினும் பேறு பெற்றார் யாவர் உளர்?"** என்று அவன் கூறுவதுடன் இவ்வங்கம் முடிகிறது (-இங்கு, **"ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப, நீடுக மன்னோ இரா"** என்ற **திருக்குறள் எண்ணற்பாலது)**. களவுக் கால இன்பம் 3, 4 ஆம் அங்கங்களின் இடையே ஓராண்டுக்காலம் கடக்கிறது. அந்தப்புரத்தில் காவலர்க்குச் செய்தி தெரிந்ததும், அவிமாரகன் அவ்விடத்தினின்று அகன்றோடுகின்றான். மனம் குழம்புகிறான். தன் உயிரைத் துறக்கக் காடு நோக்கி ஓடுகின்றான். அந்தக் காடோ அனல் பற்றி எரிகிறது. அதில் குதிக்கிறான். எனின், செந்தழல் சந்தனமாகக் குளிர்ந்து அவனை எரிக்கவில்லை. குன்றில் ஏறி மேலிருந்து கீழே விழுந்து உயிர் துறக்க எண்ணும் தருணத்தில், அவன் முன், வித்தியாதரன் ஒருவன் தோன்றி மந்திர ஆற்றல் மிக்க கணையாழியினைத் தருகிறான். அதன் உதவியால் அவிமாரகன் தன் காதலியுடன் மறைவாகக் கூடி மகிழலாம். அவள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்கும் தருணத்தில் அவன் வருகிறான். இதற்கிடையில் சாபகாலம் ஆகிய ஓராண்டு முடிகிறது. நாரதர் வருகிறார். அவர் உதவியால் எல்லாம் இன்பமாக நிறைவு பெறுகிறது.

இந்நாடகத்தில் வரும் விதூடகன் பண்படாத அந்தணனாகவும் படிப்பறிவில்லாதவனாகவும் படைக்கப்பட்டுள்ளான். எனினும்

கேளிக்கைகள் செய்பவனாகக் காட்சி தருகிறான். அவன் பேசுகிறான்:

"நான் அந்தணன்; பூணூல் போட்டுள்ளதால்; நான் ஒரு பிச்சைக்காரன்; பிச்சைக்காரனுக்குரிது துவராடை அணிந்துள்ளதால் நான் ஒரு புத்த பிட்சு; ஆடை அற்ற நிலையில் நான் சமணத்துறவி". இத்தகைய விந்தைமிக்க பேச்சுக்கள் நாடகத்தின் நகைச்சுவைக்கு ஏதுவாதல் சுட்டத்தக்கது. அவன் கதாநாயகனுக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய நண்பன். பொழுது போக்குகளில் அவன் கேளிக்கை புரிபவன்; போர்க்களத்தில் ஒரு மறவன்; துயருறுவோர்க்கு நல்லாசான்; பகைவர்களுக்கு அஞ்சாத வீரன். இத்தகைய விதூடகனின் பண்பு நலன்கள் மற்ற நாடகங்களில் வரும் விதூடகனிடம் காண இயலா என்பர் திறனாய்வாளர்.

பாசகவி காவிய உவமைகள் சிறந்து விளங்க இந்நாடகத்தினைப் படைத்துள்ளார். கனன்று காயும் கதிரவனின் வெப்பத்திற்குக் கற்பனைத்திறனால் கவிஞர் படைத்துக் காட்டும் உவமைகளைக் காண்போம்.

> சாச நோயால் துன்புறும் பிணியாளனைப் போல
> மண்மடந்தை துயருறுகிறாள்.
>
> குலைகள் என்னும் தம்வாய்களைக் கிழித்துக்கொண்டு
> ஊத்துக் கத்துதல்போல் குன்றுகள் தோன்றுகின்றன.
> கதிரவனின் வெப்பத்தின் காரணமாக இந்த முழு
> உலகமும் தன் உணர்வினை (-பிரக்ஞையை) இழந்து
> விட்டதாகக் காட்சி தருகிறது (அங்கம் 4, பாடல் 4)

இத்தகைய கற்பனைகள் பாசனின் படைப்பாற்றலுக்குச் சான்று பகர்கின்றன.

### IV.1.3.4. தரித்திர சாருதத்தன்

பிருகத்கதாவில் இதற்கு மூலம் உண்டு எனச் சிலர் கூறுதல் மேலும் ஆராயத்தக்கது. நான்கு அங்கங்களைக் கொண்ட இந்நாடகத்தின் ஒரு சில பகுதிகள் கிடைக்கவில்லை. கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சூத்திரகன் எழுதிய மிருச்சகடிகம் என்ற நாடகத்திற்கு இதனை முதல் நூல் என்று கூறுவர்.

சாருதத்தன் பிறப்பால் அந்தணன்; தொழிலால் வணிகன்; அளவற்ற கொடை காரணமாகச் செல்வம் எல்லாம் இழந்து வறியவன் ஆகிறான். வசந்தசேனை என்ற கணிகையைக் காதலிக்கிறான். அரசனின் மைத்துனன் தன்னைத் தொடர்வதால்

சாருதத்தன் இல்லத்தில் வசந்தசேனை சரண்புகுகிறாள். தன் விலையுயர்ந்த அணிகலன்களையும் அவன் பாதுகாப்பில் கொடுக்கிறாள். அவளிடமிருந்து ஒரு அடிமைப் பெண்ணை விலை கொடுத்துப் பெற வேண்டும் என்ற நோக்கத்தில், ஓரிரவில் அந்நகைகளை **சஞ்ஜாலகன்** என்ற கள்வன் திருடுகிறான். பொழுது புலர்ந்ததும் நடந்ததை அறிந்த சாருதத்தன் களவுபோன நகைகளுக்கு ஈடாகத் தன் மனைவியின் ஆரத்தினை வசந்தசேனைக்கு வழங்குகிறான். எனின். அடிமைப் பெண்ணைச் சஜ்ஜாலனிடம் ஒப்படைத்துத் தான் சாருதத்தனிடம் செல்கிறாள். இதற்குமேல் வரும் கதைப்பகுதி கிடைக்கவில்லை என்பர் **எம்.கிருட்டினமாச்சாரியார்.**

இதுகாறும் பாசகவி எழுதிய பதின்மூன்று நாடகங்களின் அமைப்பினையும் சிறப்பினையும் பார்த்தோம். **இவை கேரளத்தில் சாக்கையர்களால் நடிக்கப்பட்டவை என்ற பரவலான கருத்தினைத் தாஸ்குப்தா குறித்துள்ளார்.** அடுத்து, அசுவகோஷர் படைத்துள்ள நாடகங்களைப் பற்றிச் சிறிது கூறுதல் தகும்.

## IV.2. அசுவகோஷரின் நாடகம்

பாசகவி எந்த அளவு கண்ணனிடம் பத்தி பூண்டிருந்தாரோ அதற்குக் குறையாத அளவில் புத்தர்பிரானிடம் அசுவகோஷர் பத்தி பூண்டிருந்தார். இவர் கி.பி. முதல் நூற்றாண்டில் அரசோச்சிய கனிஷ்கர் காலத்தவர் என்பது அறிஞர் பலரின் துணிபு. பிறப்பால் அந்தணராயினும், புத்தரின் போதிசத்துவக் கொள்கையினால் ஈர்க்கப்பெற்று அந்நெறிக்குத் திரும்பினார். கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த சீனப்பயணி இட்சிங் என்பார் பழங்காலத்தில் சிறந்து விளங்கிய புத்தநெறிப் போதகாசிரியர்களில் அசுவகோஷர் ஒருவர் எனப் போற்றியுள்ளார். இவர் சாகேதம் எனப்படும் அயோத்தியில் தோன்றியவர். இவர் தாயின் பெயர் சுவர்ணாட்சி. இவர் மகாயான பௌத்த வளர்ச்சிக்குப் பல பனுவல்களை இயற்றினார். மகாயானத்திற்கு முன்னோடியாகக் கருதப்படும் மகாசங்கிகர் பிரிவினைச் சேர்ந்தவர் என்பர். **சிரத்தோத்பாதம், வச்சிரசூசி** என்பன இவர் எழுதிய பௌத்த நூல்கள். பின்னது சீனமொழியில் மொழிபெயர்க்கப்பெற்ற சிறப்புக்குரியது. இவர் எழுதிய **புத்த சரிதம், சௌந்தரானந்த காவியம்** என்பன மகாகாவியமாக மதிக்கத் தக்கவை. **காளிதாசனின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தியவர்களில் பாசகவியைப் போல அசுவகோஷரும் ஒருவராகக் கருதப்படுகிறார்.** ஆதலின், காளிதாசனின் நாடகங்களைப் பற்றி ஆராய்வதற்கு முன்னர்,

அசுவகோஷரின் **சாரிபுத்திரப்பிரகரணம்** என்ற நாடக இலக்கியத்தின் அமைப்பினைச் சுருக்கமாகக் காண்போம்.

### IV.2.1. சாரிபுத்திரப் பிரகரணம்

ஒன்பது அங்கங்களைக் கொண்ட இந்நாடகம் கி.பி.1911இல் லூடர்ஸ் (Luders) என்பவரால் மத்திய ஆசிய எழுத்துருவில் கண்டெடுக்கப்பட்டது. ஒன்பதாம் அங்கத்தின் கொளுவில், "சுவர்ணாட்சியின் மகன் அசுவகோஷன் எழுதிய **சாரிபுத்திரப் பிகரணம்** அல்லது **சாரத்வதி புத்திர பிரகரணம்**" என்ற செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இந்நாடகம் முழுமையாகக் கிடைக்கவில்லை. எனினும், கிடைத்த பகுதியைக் கொண்டு இது பௌத்த நாடகம் என்பது தெளிவாகிறது. **சாரிபுத்திரர், மௌத்கல்யாயணர் என்னும் இருவரையும் புத்தர்பிரான் தம் நெறிக்கு மாற்றிய வரலாற்றினை மையமாகக் கொண்டு இந்நாடகம் புனையப்பெற்றது. இக்கதைக்குரிய மூலம் பாலியில் எழுதப்பெற்ற விநயபிடகப் பகுதியாகிய மகாவக்கத்தில் காணப்படுகிறது.** இதில் வரும் விதூடகன் பிராகிருதத்தில் பேசுகிறான். **சாரிபுத்திரன் என்ற பெயர் பாலியில் சாரிபுத்தன் என்று வழங்கும்.** எனின், வடமொழி நாடகம் ஆதலின், அம்மொழியின் ஒலி நீர்மைக்கு ஏற்ப சாரிபுத்திரன் என்றே அசுவகோஷர் பயின்றுள்ளார். சாரிபுத்திரனுக்கும் விதூடகனுக்கும் நடைபெறும் உரையாடல் பகுதி குறிப்பிடத்தக்கது. **புத்தரின் சமத்துவ நெறி தன்னைப் போன்ற பிராமணர்களுக்கு ஒத்துவராது என்று விதூடகன் கூறினான். அவனுக்கு மறுமொழி பகரும் சாரிபுத்திரன் "தாழ்ந்த சாதியினன் கொடுக்கும் மருந்து பிணியுற்றிருக்கும் ஒருவனின் (உயர்ந்தவனின்) நோயைப் போக்குவதில்லையா? தாழ்ந்த இனத்தவன் கொடுக்கும் தண்ணீர் தாகம் எடுத்தவனின்(-உயர்த்தவனின்) தாகத்தைத் தணிப்பதில்லையா?" என்று வினவுகிறான்.** பின்னர், மௌத்கல்யாயணர் சாரிபுத்திரரை வரவேற்கிறார். பின்னவர் மலர்ச்சி பெற்றிருப்பதற்குரிய காரணங்களை முன்னவர் உசாவி அறிகிறார். இருவரும் பகவான் புத்தரைப் பார்க்கப்போகின்றனர். புத்தர்பிரான் அவர்களை ஏற்றுக்கொள்கிறார்; வருங்காலத்தில் அவர்கள் முழுஞானம் பெற்றும் அற்புத ஆற்றல்கள் அடைந்தும் ஒளிவீசுவார்கள் என்றும் கூறுகிறார். நாடகத்தின் இறுதியில் சாரிபுத்தனுக்கும் பகவான் புத்தர்க்கும் இடையே நிகழும் உரையாடல் அனான்மவாதத்தினைப் பற்றியதாகும். **முடிவில் சீடர்கள் இருவரையும் புத்தர்பிரான் வாழ்த்துவதுடன் நாடகம் நிறைவுபெறுகிறது.**

அசுவகோஷர் சிறந்த காவியக்கவிஞர் மட்டுமல்லர், விழுமிய நாடகக்கவிஞர் என்பதற்குச் சாரிபுத்திரப் பிரகரணத்தில் கிடைத்துள்ள பகுதிகள் சான்று பகர்கின்றன. பாசகவி, அசுவகோஷரின் படைப்புகளைப் பயின்ற பெரும்புலமைச் செல்வனாகிய காளிதாசனின் நாடகங்களைக் குறித்து ஆராய்வோம்.

## IV.3. காளிதாசனின் நாடகங்கள்

இந்தியக் கவிஞர்களில் கம்பனைப்போல் காளிதாசன் உயர்ந்து ஒளிவீசுகிறார். மகாகவி பாரதியார்,

*கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்*
*காளி தாசன் கவிதை புனைந்ததும்*

என்று தம் சுயசரிதைக் கவிதையில் இருபெரும் கவிஞர்களையும் போற்றுதல் காணலாம். காளிதாசன் வாழ்ந்த காலம் குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. கி.மு. முதல் நூற்றாண்டில் காளிதாசன் வாழ்ந்தவர் என்று ஒருசாரார் கூறினர்; குப்தர்களின் பொற்காலத்தில் (The Golden Age of the Guptas) வாழ்ந்தவர் என்பது மிகப் பலரின் கருத்தாகும். கி.பி. 4 ,5 ஆம் நூற்றாண்டில் அவர் இருந்திருக்கலாம். இவர் காவியக் கவிஞராகச் சிறந்து விளங்குதல் போலவே நாடகக் கவிஞராகவும் திகழ்கின்றார். இவர் உஜ்ஜயினி நகரில் நெடுங்காலம் இருந்தவர் என்பர். காளி உபாசகர் என்பது செவிவழிச் செய்தி. தென்னாட்டினை நன்கு அறிந்தவர். தண்டி, பட்டபாணன் முதலியோரால் காளிதாசன் போற்றப்படுகிறார்.

இவர் எழுதிய நாடகங்கள்: **1. மாளவிகாக்கினிமித்திரம், 2. விக்கிரமோர்வசீயம், 3. சாகுந்தலம் என்ற மூன்றுமேயாகும். இவற்றுள் சாகுந்தலம் ஒப்பற்ற நாடகப் படைப்பு** என்பது திறனாய்வளார்களின் ஒருமித்த கருத்து. இந்நாடகங்களைப் பற்றி நிரலே காண்போம்.

### IV.3.1. மாளவிகாக்கினி மித்திரம்

இந்நாடகம் ஐந்து அங்கங்களில் அமைந்தது. **மாளவிகா** என்பவள் நாடகத் தலைவி. **அக்கினி மித்திரன்** நாடகத் தலைவன். ஆதலின், இவ்விருவரின் பெயராலும் இந்நாடகத்திற்கு **மாளவிகாக்கினிமித்திரம்** எனக் காளிதாசன் பெயர் சூட்டினார். மாளவிகா அழகே வடிவானவள்; அரசன் அக்கினி மித்திரனின் பெருந்தேவிக்குப் பணிப்பெண்; அவளை அரசன் காதலிக்கிறான். எனின், பெருந்தேவி அவன் அவளைக் காதலிப்பதை விரும்பவில்லை; எனவே, அவன் பார்வையில் அவள் படாமல்

பார்த்துக் கொள்ளுகின்றாள். மாளவிகாவினைக் கண்டு உரையாடுதற்கு அக்கினிமித்திரன் எடுக்கும் முயற்சிகள் எண்ணற்ற சிக்கல்களை உருவாக்குகின்றன. எந்தச் சூழலிலும் அரசன் ஒரு கொடுங்கோலனாக நடந்துகொள்ளாமல், தன் பெருந்தேவியரின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இங்கிதமறிந்து ஒழுகுகிறான். கதைப்போக்கில், மாளவிகா பிறப்பினால் இளவரசி என்பதும் கள்வர்கள் கையில் அகப்பட்டபின் அரண்மனையில் பணிப்பெண்ணானாள் என்பதும் தெரிய வருகின்றன. உண்மை புரிந்ததும் அரசனின் உரிமை மனைவியரே திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறார்கள். அக்கினிமித்திரனின் முதல் பெருந்தேவி **தாரிணி** தானே முன்வந்து மாளவிகாவுக்கு ஒப்பனை செய்து தன் கணவனிடம் அழைத்துச் செல்கிறாள். இதனைக் கண்ணுற்ற பிக்குணி, இந்தியப் பெண்மையின் பெருந்தக்க பண்பினைப் புகழ்ந்து பெருந்தேவியைப் பார்த்துப் பின்வருமாறு பாராட்டுகிறாள்.

> **உன்னால் காட்டப்பட்ட விரிந்த மனப்பான்மையினைக் கண்டு நான் சிறிதும் வியப்பு அடையவில்லை. சச்சரவுகளையும் எதிர்த்துத் தன் கணவனுக்குப் பெண்கள் எந்த அளவு பணி செய்கிறார்களோ அந்த அளவு விசுவாசம் உள்ளவர்கள்; அண்மையில் மணந்துகொண்ட மங்கையரையும் கூட அவனிடம் அழைத்துச் செல்கின்றனர்; (எதைப் போல் எனின்): கடலுக்குள் சங்கமம் ஆகும் ஆறுகளைப் போல; ஏனைய ஆறுகளின் நீரையும் கடலுக்கு எடுத்துச் செல்லுதல் போல.**

இத்தகைய விழுமிய கருத்துக்கள் இந்நாடகத்தில் பற்பல. **இயற்கையினை ஆராதிப்பவர் காளிதாசன். இயற்கையின் அழகினை எழிலோவியமாகப் புனைவதில் வல்லவர்.** மூன்றாம் அங்கத்தில் மாளவிகா பரிசித்ததும் அசோகம் மலர்தலைக் காளிதாசன் காட்சிப்படுத்தியுள்ளார். அழகிய நங்கை அதனைக் காலால் தொட்டதும் அம்மரம் மலரும் என்பது இந்திய மக்களின் மரபு வழிப்பட்ட நம்பிக்கை.

காளிதாசனின் இளமைக் காலத்தில் இந்நாடகம் எழுதப்பட்டது என்பர் ஒருசாரார். ஜெர்மன் உள்ளிட்ட ஐரோப்பிய மொழிகளில் இந்நாடகம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஜெர்மன் நாட்டு நாடக அரங்குகளில் நடிப்பதற்குரிய பாங்கிலும் இருமுறை இந்நாடகம் வடிவமைக்கப்பட்டது என்பர் விண்டர்நீட்ஸ். அடுத்து, விக்கிரமோர்வசீயம் பற்றிக் காண்போம்.

## IV.3.2. விக்கிரமோர்வசீயம்

இந்நாடகமும் ஐந்து அங்கங்களில் எழுதப்பட்டது. இதுவும் ஒரு புனைவியல் நாடகம் (Romantic Drama) ஆகும். இந்நாடகம் மண்ணகத்தையும் விண்ணகத்தையும் காதலால் இணைப்பது. **இவ்வுலக வேந்தன் புரூரவசு தேவர் உலகத்து ஆடலழகி ஊர்வசியைக் காதல் கொண்ட சரிதத்தை மையப்பொருளாகக் கொண்டது.** இக்கதைக்குரிய மூலம் இருக்கு வேதத்திலும் (X 95), சதபதப்பிராமணத்திலும், மத்சபுராணம் உள்ளிட்ட தொன்மங்களிலும் காணப்படுகிறது. எனினும் கதையில் சில பல மாற்றங்களைக் காளிதாசன் செய்திருக்கிறார். அரசன் புரூரவசு தன் விக்கிரமத்தினால் (-பேராற்றலால்) அப்சரசாகிய ஊர்வசியை அடைந்ததால் **விக்கிரமோர்வசீயம்** என்பது நாடகத்தின் பெயராயிற்று.

அசுரர்களின் பிடியினின்றும் தன் ஆற்றலால் ஊர்வசியைப் புரூரவசு விடுவிக்கிறான்; நெஞ்சார நேசிக்கிறான்; அவளும் காதலிக்கிறாள். எனின், இந்திரன் அழைப்பின் பேரில் அப்சராகிய ஊர்வசி தேவ சபைக்குச் செல்கிறாள். தன் உண்மைக் காதலை உணர்த்தும் ஒரு மடலை எழுதி மன்னன் பார்வைக்காக விட்டுச் சென்றாள். இழவு ஊழ் காரணமாக அரசனின் பெருந்தேவியின் பார்வையில் அம்மடல் தென்படுகிறது. அவள் பெரிதும் வருந்துகிறாள். அரசனோ ஊர்வசியைக் காணாமல் வருந்துகிறான்.

வானவரின் அரங்கில் **இலக்கிமி சுயம்வரம்** என்னும் நாட்டிய நாடகத்தில் இலக்குமியின் பாத்திரம் ஏற்று ஊர்வசி நடிக்கிறாள். அவள் மனமோ புரூரவசுவிடம் மொய்த்துக் கிடந்ததால், புருடோத்தமனை (- திருமாலை) நோக்கி விடை பகர்தற்கு மாறாக, புரூரவசுவுடன் உரையாடல் கொண்டு விடைபகர்கிறாள். அதனைக்கண்ட அவள் குருவாகிய பரதர், அவளை நிலவுலகில் போகும்படி சபித்து விடுகிறார். இரக்கம் கொண்ட இந்திரன், அச்சாபத்தின் கடுமையினைக் குறைத்து, அவள் நிலவுலகில் புரூரவசுவுடன் மகனைப் பெறும் அளவும் தங்கியிருக்கலாம் என்று ஆணை இடுகிறான். காதலர் இருவரும் கரந்து அலையும் பொழுது, ஊர்வசி தடுக்கப்பட்ட கண்ணுவ முனிவரின் சோலையினைக் கடக்கிறாள்; கொடியாக உருமாற்றம் அடைகிறாள். தன் காதலியைக் காணாது கலங்கிய புரூரவசு கானகம் எங்கும் அவளைத் தேடி அலைகிறான்.

இயற்கைப் படைப்புக்களைப் பார்த்துப் பேசுகிறான். தன் தலைக்குமேல் உயரப் பறக்கும் மேகத்தைத் தன் காதலியைக் கவர்ந்த

அசுரன் எனக் கருதி அதனைப் பிடிக்க முயல்கிறான். முடியாத பொழுதுதான், அது மேகம் என்பதை உணர்கிறான். மழைத் தூறலால் மென்மை அடைந்திருக்கும் செம்மண் ஒருவேளை அவ்வழியே தன் காதலி செம்பஞ்சு தீட்டிய பாதத்தினளாய் நடந்து போயிருப்பின் அச்சுவட்டினைத் தன்பால் கொண்டிருக்கும் என்று தேடிப் பார்க்கிறான். பின்னர், மயிலையும், பெண் குயிலையும் நோக்கித் தன் காதலியைக் கண்டது உண்டோ? என்று வினவுகிறான். தன் காதலியின் தரிசனத்தால்தான் நாரை ஒளிநடை பெற்றிருக்க வேண்டும் என்ற கற்பனையால் அந்நாரை தன் காதலியைக் கட்டாயம் பார்த்திருத்தல் வேண்டும் என்று அதனைக் கேட்கிறான். அப்பறவையே அவளைக் கவர்ந்திருக்க வேண்டும் என்று அவன் கூறுதல் கேட்டு நாரை அஞ்சிப் பறந்து போகிறது. மலர்ந்திருக்கும் தாமரை மலரில் ரீங்காரம் செய்யும் வண்டினை நோக்கிப் பேசுகிறான்.

> தேனினால் மயக்குற்ற வண்டே! மதுமயக்கம் அளிக்கும் விழிபடைத்த என காதலியைப் பற்றித் தயவுசெய்து கூறுக! நீ கூறமாட்டாய். வசீகரமிக்க வனிதையின் ஒப்பனையினை நீ உறுதியாகக் கண்டிருக்க மாட்டாய்! அவள் விடும் மூச்சுக்காற்றின் நறுமணத்தை நீ எப்பொழுதாவது நுகர்ந்தது உண்டா? இந்தத் தாமரை மலரில் ஒட்டிக் கொண்டிருப்பதால், என்ன இன்பத்தை நீ பெற முடியும்

இங்ஙனம் பேசும் தனி மொழிகளைத் தொல்காப்பியர் பாற்கிளவி என்று கூறினார். தமிழ் இலக்கிய மரபில் இவை சங்க கால அளவுக்குத் தொன்மை வாய்ந்தவை என்பது இங்கு இயைபு கருதிச் சுட்டத்தக்கது. ஆங்கிலத்தில் இத்தகைய பேச்சினை, **"Pathetic Fallacy"** என்பர்.

பின்னர், புருரவசு தன் காதலியைப் பற்றிய செய்தியை யானை, பன்றி, மான் என்பனவற்றைத் தனித்தனியே பார்த்துக் கேட்கிறான்; மலையைப் பார்த்துக் கேட்கிறான். எனின், **'கண்டேன்'** என்ற எதிர் ஒலியே வருகிறது. பரிபாடலிலும் ஒரு பெண்ணின் பேச்சு மலையில் எதிர் ஒலியாக வருதல் குறிக்கப்பட்டது (19.60-66). சலிப்புற்ற அரசன், மலையருவி தன்னை அடித்துப்போகச் செய்கிறான். தன் காதலியின் இருப்பிடத்தை அருவியும் கூறவில்லை. அங்குக் கிடந்த மந்திரக்கல் ஒன்றினைப் பார்க்கின்றான். பிரிந்தாரைச் சேர்ப்பிக்கும் ஆற்றல் வாய்ந்தது அக்கல். அதனை எடுத்து முன்னர்க் கிடந்த ஒரு கொடியின் மீது விசையுடன் வீசுகிறான். அக்கொடியைத் தழுவுகிறான். அப்போது சாபம் நீங்கிய

ஊர்வசி அவன் கைகளில் தவழ்கிறாள். இருவரும் இன்புறறு வாழும் ஆண்டுகள் பல சென்றன. இந்நிகழ்வுகள் யாவும் 4, 5 ஆம் அங்கங்களில் விரவி வந்தன.

பின், ஒரு பருந்து பிரிந்தாரைப் புணர்க்கும் செந்நிறக் கல்லினை தூக்கிச் சென்று விடுகிறது. அடுத்து, ஒரு அரசகுமாரன் அம்பு தொடுத்து அப்பருந்தினை வீழ்த்தியதால், அக்கல்லும் நிலத்தில் விழுந்த செய்தி புரூரவசுக்கு வருகிறது. அங்குள்ள வனத்தில் உள்ள ஆசிரமத்தில் பெண் துறவியின் கவனிப்பில் அச்சிறுவன் வளர்க்கப்பெற்று வருபவன் என்பதையும் அறிகிறான். அவன் புரூரவசுவின் முன்பு கொண்டுவரப்படுகிறான். தனக்கும் ஊர்வசிக்கும் களவுப் புணர்ச்சியில் தோன்றியவன் அச்சிறுவன் என்பது நிரூபணமாகிறது. தன் கணவன் மகனைப் பார்க்க நேரிடும் வரைக்கும், ஊர்வசி உடன் உறையலாம் என்ற இந்திரன் ஆணையைக் கருதி அவன் பார்வையிலிருந்து மகனை அவள் மறைத்து வளரச் செய்திருந்தாள் என்பதும் தெளிவாகிறது. மகனைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருக்கும் புரூரவசு, ஊர்வசிக்கு வானவர்கோன் இட்ட ஆணை சிறிதும் தெரியாமையால், அவள் பிரிந்து சென்றபொழுது அவன் மகிழ்ச்சி ஒரு முவுக்கு வந்தது. இந்நிகழ்வுடன் கதை முடிந்திருப்பின் நாடகம் துன்பியலாக அமைந்திருக்கும். எனின், நாரத முனிவர் அசுரர்களுடன் போரிடுதற்குப் புரூரவசின் பணி தேவைப்படுவதாய் இந்திரன் அனுப்பிய செய்தியைக் கொண்டுவருகிறார். தன் உயிர் உள்ளவரை ஊர்வசியுடன் கூடி வாழ்தற்குரிய வரமும் புரூரவசுக்கு வழங்கப்படுகிறது. இதனால் நாடகம் இன்பியலாக முடிகிறது.

பொதுவாக இந்திய இலக்கியங்களில்-குறிப்பாக நாடகங்களில் சாபம், மந்திரக்கல், தேவதூதன் என்ற கோட்பாடுகள் காரணமாகக் கதைச் சிக்கலில் தீர்வும் கதைப்போக்கில் மாற்றமும் ஏற்படுவதைத் திறனாய்வாளர்கள் சுட்டியுள்ளனர். விக்கிரமோர்வசீயமும் ஜெர்மன் உள்ளிட்ட ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பெற்றது. மேலும் நடிப்பதற்குரிய வகையில் இந்நாடகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### IV.3.3. சாகுந்தலம்

காளிதாசனின் படைப்பாற்றலும் கற்பனை முதிர்ச்சியும் பாத்திரப் படைப்பும் இயற்கை ஈடுபாடும் நடைநலமும் வளத்தக்க சொல்லாட்சியும் முற்றிய நிலையில் கனிந்து காணப்படுதல் சாகுந்தலம் என்னும் இணையற்ற நாடகத்தில் தான் என்று உலக அறிஞர்கள் ஒருமித்துக் கூறியுள்ளனர். ஜெர்மன்

உள்ளிட்ட ஐரோப்பிய மொழிகளிலும் இந்திய மொழிகளிலும் இந்நாடகக் காப்பியம் மொழிபெயர்க்கப்பெற்ற சிறப்புக்கு உரியது. இனிய தமிழில் தமிழ்க்கடல் மறைமலை அடிகள் காஞ்சிமா முனிவரும் பாராட்டும் பாங்கில் சாகுந்தலத்தினை மொழிபெயர்த்து ஆராய்ச்சியும் எழுதியுள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

வடமொழிவாணரிடம் இந்நாடகம் பற்றிய ஒரு சுலோகம் வழங்கி வருகிறது.

Kavyeṣu nāṭakam ramyam

tatra ramyā sākuntalā

tatra ramyaś caturthonkas

tatra ślokacatuṣṭayam

இப்பாடலைப் பின்வருமாறு மொழிபெயர்க்கலாம். பல்வகைக் கவிதைப் படைப்புக்களில் நாடகம் மிகவும் அழகிது (இரம்மியமானது); நாடகங்கள் அனைத்துள்ளும் சாகுந்தலம் மிகவும் அழகிது (இரம்மியமானது); சாகுந்தல நாடகத்தினுள்ளும் நான்காம் அங்கம் அழகிது (இரம்மியமானது); நான்காம் அங்கத்தினுள்ளும் நான்கு சுலோகங்கள் (பாடல்கள்) அழகுடையன (இரம்மியமானவை). இந்த நான்கு சுலோகங்களைப் பற்றிப் பின்னர்க் காண்போம்.

மகாபாரதத்தில் ஆதிபர்வத்தில் வரும் சகுந்தலோ பாக்கியானம் (அத்தியாயங்கள் 89-100) என்ற பகுதியை இந்நாடகக் கதைக்கு மூலம் என்பர். எனினும், மூலக்கதைக்கும் காளிதாசனின் படைப்புக்கும் சுட்டத்தக்க வேறுபாடுகள் உள்ளன. கற்பனைத் திறத்தினால் கதைப்போக்கில் சுவையான மாற்றங்களைக் கவிஞர் அறிமுகம் செய்துள்ளார். பொது நிலையில் சாகுந்தலம் என்ற பெயரில் நாடகம் பரவலாக வழங்கப்பெறினும் அபிக்ஞான சாகுந்தலம் என்பதே கவிஞர் சூட்டிய பெயர். இந்நாடகத்தில் ஏழு அங்கங்கள் உள்ளன. அபிஞானம் என்ற சொல்லிற்கு அடையாளம் என்பது பொருள். நாடகத்தின் தலைவன் ஆகிய துஷ்யந்தன் கொடுத்த மோதிர அடையாளத்தினால் மீண்டும் தலைவி ஆகிய சகுந்தலை அவனை அடைதலின் இந்நாடகம் இப்பெயர் எய்திற்று. நாடகத்தின் கதைச் சுருக்கத்தைக் காண்போம்.

விசுவாமித்திர முனிவர்க்கும் மேனகைக்கும் மகளாகப் பிறந்து கண்ணுவர் ஆசிரமத்தில் வளர்கிறாள் சகுந்தலை. சந்திர

வமிசத்தைச் சேர்ந்த அரசன் **துஷ்யந்தன்** கண்ணுவ முனிவரின் ஆசிரம வளாகத்தில் ஒரு மானைத் துரத்திக் கொண்டு போகிறான். **இதுவும் சங்ககாலத் தலைவனின் வழக்கமே.** தன் தோழியருடன் சகுந்தலை செடி கொடிகளுக்கு நீருற்றிக் கொண்டிருப்பதை வேவு பார்க்கிறான். சகுந்தலையின் அழகினால் ஈர்க்கப்பட்ட அரசன் அவளிடம் உரையாட வேண்டுகிறான். இவரிடையே ஒத்த காதல் விளைதலின், அவளை மணக்கிறான் துஷ்யந்தன். **தன் கணையாழியை அவளுக்கு வழங்குகிறான்;** விரைவில் தன்னிடத்திற்கு அழைத்துக் கொள்வதாகக் கூறி அரண்மனைக்குப் போகிறான்.

ஆசிரமத்திற்கு வந்த சினத்திற்குப் பேர்போன **துர்வாச முனிவரைச்** சகுந்தலை சிந்தனையற்ற நிலையில் வரவேற்று உபசரிக்கத் தவறுகிறாள். தன் காதலனுக்கு அவளைப் பற்றிய நினைவு தடம் தெரியாமல் போகும்படி முனிவர் சபிக்கிறார். அவன் கணையாழியைக் காணும்பொழுது நினைவு மீண்டும் எழும் என்று சாபவிமோசனமும் உரைக்கிறார். சில காலம் சென்றது. கணவனிருப்பிடத்திற்கு அவளை அனுப்புதற்கு வளர்ப்புத் தந்தையாகிய கண்ணுவ முனிவர் முடிவு செய்கிறார்.

**சகுந்தலை தோழியரிடமிருந்தும் தான் வளர்த்த செடிகொடிகளினின்றும் மானினின்றும் விடைபெற்றுச் செல்கிறாள்.** அரசனின் அரண்மனைக்குப் போகிறாள். அவள் கணையாழியை இழந்தமையால், எத்துணை முறை அவனை விளித்தும் பயனில்லை. முனிவரின் சோலையில் சகுந்தலையுடன் தான் பெற்ற இன்ப அனுபவங்கள் பற்றிய நினைவற்றவனாக உள்ளான் அரசன். தன் விதியை நொந்து புலம்புகிறாள். அவள் தாய் மேனகை தேவருலகிற்கு அவளை எடுத்துச் செல்கிறாள். மீனவன் ஒருவன் மீனின் வயிற்றினின்றும் இழந்த கணையாழியை எடுத்துக் கொடுக்கிறான். குற்றம் சுமத்தப்பட்ட கள்வனாக உள்ள அரசன் **அக்கணையாழியினைப் பார்த்ததும் மயக்கம் தெளிகிறான்;** தன் கடந்த காலக் காதலை நினைவு கூர்கிறான். பிழைக்குப் பேழ்கணிக்கிறான்.

காலம் செல்கிறது. அசுரர்களுடன் பொருதற்குத் துஷ்யந்தன் உதவியை இந்திரன் கோருகிறான். அவனுடைய தேரில் அரசன் செல்லும்பொழுது **தன் அருமை மகன் பரதன் சிங்கக் குருளையுடன் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறான்; உடன் சகுந்தலையினையும் காண்கிறான்.** இன்பியலாக நாடகம் நிறைவுகிறது. இளமையில் இந்திரசித்தும் சிங்கக்குட்டிகளுடன் விளையாடியதைக் கம்பர் பாடியுள்ளார்.

இயற்கையில் ஈடுபாடு கொண்டு சகுந்தலை செடி கொடிகளுக்கு நீருற்றி வளர்ப்பதை எண்ணி ஜெர்மன் மொழிபெயர்ப்பாளரும் கவிஞருமாகிய கோத்தே (Goethe) இந்தியப் பெண்ணின் தாயுள்ளத்தைப் பெரிதும் போற்றினர். எனினும், காளிதாசனுக்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்ட சங்க இலக்கியமாகிய நற்றிணையில் *(172.1-6)*, தமிழ்ப்பெண் தான் வளர்க்கும் புன்னைச் செடிக்கு நறுநெய்யும் தீம்பாலும் வார்த்து வளர்த்தாள் என்பதைக் கோத்தே பயின்றிருப்பின், சகுந்தலையினை விட, தமிழ் நங்கை அன்பின் சிகரத்தில் உள்ள உண்மையினை உணர்ந்து பாராட்டியிருப்பார் என்ற கருத்துப்படப் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் 'நற்றிணை' பற்றிய கட்டுரையில் பொறித்துள்ள கருத்து இயைபு கருதி இங்குக் குறிப்பிடத்தக்கது.

இனி, சகுந்தலை நாடகத்தின் நான்காம் அங்கத்தில் இடம்பெறும் மிக அழகிய நான்கு பாடல்களில் சாரத்தினைக் காண்போம். தன் ஆசிரமத்தை விடுத்துக் கணவனிடம் செல்லும் தன் வளர்ப்பு மகள் சகுந்தலைக்குக் கண்ணுவ முனிவர் பிரியாவிடை கூறும் பகுதியாக அப்பாடல்கள் அமைந்துள்ளன. முதற்பாடலின் சாரம்:

> இந்த நாளே சகுந்தலை தன் கணவனின் இல்லத்திற்குப் புறப்படுவாள். அதனை எண்ணும்பொழுது பிரிவாற்றாமையால் என் உள்ளம் துன்பத்தல் அரிக்கப்படுகிறது. கண்ணினின்றும் பெருகும் நீரை அடக்குவதால் என் குரல் தழுதழுக்கிறது. துறவியாகிய எனக்கே அவளிடம் கொண்ட பாசத்தால் மனக்கலக்கம் உண்டாகிறது என்றால், தங்கள் மகள்களிடமிருந்து பிரிவதால் ஏற்படும் ஆற்றாமையால் குடும்பத் தலைவர்கள் ஆகிய தந்தையர் எந்த அளவு கூடுதலாகக் கலக்கம் உறுவார்களோ?

அடுத்து வரும் இரு பாடல்களில் சகுந்தலையினைத் தேவர்கள் ஆசிர்வதிக்க வேண்டுகிறார் கண்ணுவ முனிவர். கடைசியாக ஆசிரமத்தில் உள்ள மரங்களின் ஆதரவினை நாடுகிறார்:

> தாவரங்களே! நீங்கள் நீர் குடிப்பதற்கு முன், அவள் (-சகுந்தலை) நீர் பருகமாட்டாள். அவள் அணிகலன்களில் பிரியம் உடையவளே எனினும், உங்களிடம் கொண்ட பாசத்தினால், சூடிக் கொள்ளும்பொருட்டு ஒரு மலரைக் கூட

> உங்களிடமிருந்து பறிக்க மாட்டாள். புதுப் பருவகாலத்தில் நீங்கள் முதல்முதல் மலர்வதைக் காண்பதில் அவள் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகிறவள். அத்தகைய சகுந்தலை இப்பொழுது கணவனில்லம் செல்கிறாள். உங்களால் அவள் அன்புடன் அனுப்பிவைக்கப்பெறட்டும்.

இவ்வாசகத்தைப் பயிலும்பொழுது சகுந்தலை மலராகவே வளர்ந்தவள் என்பதும் முனிவரும் மலர் போன்ற அன்பு மனமும் நெகிழ்ச்சியும் வாய்ந்தவர் என்பதும் புலனாகும்.

வெட்டவெளியில் புல்வெளித் தெய்வங்களின் வாழ்த்தொலி எதிரொலிக்க, சகுந்தலை வளர்ப்புப் பிராணிகளிடமிருந்தும், ஆசிரமத் தாவரங்களிடமிருந்தும், வளர்ப்புத் தந்தையிடமிருந்தும், நெருங்கிய தோழியரிடமிருந்தும் அன்புடன் விடைபெற்றுச் செல்லுகிறாள். கண்ணுவ முனிவர் உணர்ச்சி பொங்கப் பின்வருமாறு கூறுகிறார்:

> மகள் மற்றவனுக்கே உரிமையானவள் என்பதால். உரியவனிடம் அவனுக்குச் சொந்தமானதும் என் பொறுப்பில் இருந்ததுமான சொத்தினைத் திருப்பிக் கொடுத்த பிறகு, என் ஆன்மா மிகுதியும் திருப்தி அடைகிறது.

இத்தகைய உருக்கமான காட்சிகளும் கருத்துக்களும் பயில்வார் உள்ளத்தைச் சிலிர்க்கச் செய்வன எனலாம்.

காளிதாசனுக்குப் பின் வந்த நாடகப் படைப்பாளரில் சூத்திரகன் சுட்டத்தக்கவர். அவரைப் பற்றியும் அவர் எழுதிய சிறந்த நாடகம் ஆகிய மிருச்ச கடிதத்தினைப் பற்றியும் சுருக்கமாகக் காண்போம்.

## IV.4. மிருச்சகடிகம்

சூத்திரிகன் பற்றிய வரலாறு தெளிவாகப் புலப்படவில்லை. இவரை அரசன் என்றும் அந்தணன் என்றும் வேறுவேறு கூறுவர். இருக்கு, சாமம் ஆகிய மறைகளிலும், கலைகளிலும், அசுவசாத்திரத்திலும் புலமை படைத்தவர் என்பர். இவர் நூறாண்டுக்குமேல் வாழ்ந்தவர் என்ற செய்தியும் உண்டு.

இவர் காலம் நிர்ணயிக்கப்படவில்லை. ஒருசாரார் கி.மு. முதல் நூற்றாண்டு என்றும். மற்றொருசாரார் கி.பி. முதல் நூற்றாண்டு என்றும் கருதினர். பேராசிரியர் எஸ்.என்.தாஸ்குப்தா கி.மு.

*100*-கி.பி. *100* என்ற காலமே சூத்திரிகன் வாழ்ந்த காலம் என்று குறித்துள்ளார். ஆயினும், அறிஞருள் பலர் **சூத்திரகன் கி.பி. 4 அல்லது 5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்ற கருத்தினைக் கொண்டவர்.** சிவபிரான் அருளினால் கொடிய கண்ணோய் நீங்கியவர் என்று ஒரு செய்தி உள்ளது. பாசகவியின் **தரித்திர சாருதத்தன்** என்ற நாடகத்தினை முதல் நூலாகக் கொண்டு மிருச்சகடிகத்தினைச் சூத்திரகன் படைத்தனர் என்று கருதப்படுவதால் **பாசகவிக்குப் பிற்பட்டவர்** என்பது தெளிவு. காளிதாசனுக்கு முற்பட்ட **சோமிலர்** எழுதிய சூத்திரக் கதை சூத்திரகனைப் பற்றியதாகக் கருதுவர். இவரைக் காளிதாசனுக்கும் சோமியருக்கும் முற்பட்டவர் என்றும் எண்ணுவர். கி.பி. *8* ஆம் நூற்றாண்டினராகிய வாமனர் காவியாலங்கார விருத்தியில் *(3.2.4)* சூத்திரகனின் செய்யுளைக் குறிப்பதால், இவர்க்கு மிகவும் முற்பட்டவர் எனலாம். **கி.பி. 7 ஆம் நூற்றாண்டினராகிய தண்டியும் மிருச்சகடிகத்தினை மேற்கோள் காட்டியுள்ளார்.**

சூத்திரகன் என்ற பெயர் கல்வெட்டுக்களிலோ. நாணயங்களிலோ காணப்படவில்லை என்றும், மிருச்சகடிகத்தின் ஆசிரியர் வைதிகரின் மேல்வருணங்கள் இரண்டனையும் **(அந்தணன், அரசன்)** சார்ந்தவராகக் கருதுவதற்கு இடம் இல்லை என்றும் **விண்டர்நீட்ஸ்** கருதுகின்றார். நாடகத்தில் வரும் உஜ்ஜயினி அரசன் பாலகனை, ஆரியகன் என்ற ஆயன் தன் பரிவாரத்துடன் தாக்கி, அவனை நீக்கி ஆட்சியைப் பெற்ற வரலாறு குறிக்கப்பெற்றதாலும், **வடமொழியை விட பிராகிருதத்திற்கே முதன்மை தரப்பட்டிருப்பதாலும், பௌத்தக் கருத்துக்கள் காணப்படுவதாலும், சூத்திரகன் பிராமணராக இருத்தல் இயலாது என்பது அவர் கருத்தாகும்.**

## IV.4.1. மிருச்சகடிகத்தின் அமைப்பும் சிறப்பும்

மிருச்சகடிகம் பத்து அங்கங்களைக் கொண்ட பிரகரணம் என்ற நாடக வகையைச் சேர்ந்த இலக்கியப் படைப்பு. **இதன் தலைவன் சாருதத்தன் பிறப்பால் அந்தணன். தொழிலால் வணிகன்.** முன்பே திருமணம் ஆகியவன்; ஒரு மகன் உளன். தான் ஈட்டிய செல்வத்தை எல்லாம் பிறர்க்கு வழங்கி வறுமை அடைந்தவன். எனினும் உயர்ந்த பண்புடையவன். **இந்நாடகத்தின் தலைவி கணிகை ஆகிய வசந்தசேனை** செல்வமும் செழுமையும் மிக்கவள். வசதி படைத்தவள். சாருதத்தனை நெஞ்சாரக் காதலிக்கிறாள். இருவரும் ஒருவரை ஒருவர் நேசிக்கின்றனர். அரசன் பாலகனின் மைத்துனன் **சகாரன் கொடியவன், பண்பற்றவன்;** வசந்தசேனையிடம் ஒருதலைக்

காதல் கொண்டிருக்கிறான். அவனை ஒரு சிறிதும் அவள் எண்ணவில்லை.

நாடகத்திற்குத் தலைவன் அல்லது தலைவியின் பெயர் அமையவில்லை. ஆறாம் அங்கத்தில் இடம்பெறும் மிருச்சகடிகம் (-மண்தேர், மண்வண்டி) என்பது நூலின் பெயராக அமைகிறது. சாருதத்தனின் பணிப்பெண் இரதனிகை அவன் சிறுமகனுடன் தோன்றும் காட்சியையும் இருவர்க்குமிடையே நிகழும் உரையாடலையும் இங்குக் காண்போம்.

இரதனிகை : இனிய குழந்தாய்! வருக. சிறு தேருடன் விளையாடுவோம்.

சிறுவன் :(அழுதுகொண்டு): இரதனிகை! இந்தச்சிறு மண் தேரை வைத்துக்கொண்டு நான் என்ன செய்ய முடியும்? சிறு பொன்தேர் கொடுப்பாய்.

இரதனிகை: (வேதனையுடன் புலம்பிக் கொண்டு): குழந்தாய்! எங்கிருந்து உனக்குப் பொன்தேர் கொண்டுவர முடியும்? உன் தந்தை மீண்டும் செல்வராக வரும்பொழுது, நீ பொன்தேருடன் விளையாடலாம். [எப்படியாவது அவன் கவனத்தை வேறொரு தலைப்பிற்குத் திருப்பவேண்டும் என்பதால் பேசுகிறாள்]; வசந்தசேனையைச் சந்திப்பதற்குப் போக வேண்டும். அம்மையீர்! வணக்கம்.

வசந்தசேனை: இரதனிகா, வணக்கம். இச்சிறுவன் யார்? அவன் நன்கு அணிசெய்து கொள்ளப்படாவிடினும், திங்கள் முகம் கொண்ட அவன் என் உள்ளத்திற்கு இன்பம் தருகிறான்.

இரதனிகை: மேன்மை தங்கிய சாருதத்தனின் மகன். அவன் பெயர் உரோகசேனன்.

வசந்தசேனை: (தன் கைகளை நீட்டி): என் குழந்தாய்! அன்புடன் இங்கு வா; என்னைத் தழுவுக. (தன் மடியில் அவனைக் கிடத்துகிறாள்).அவன் தோற்றம் அவன் தந்தையை உரித்து வைத்ததுபோல் உள்ளது.

இரதனிகை: தோற்றம் மட்டும் அன்று, பண்பும்கூட அப்படியே உள்ளது. எனவேதான், மேன்மை தங்கிய சாருதத்தன் இவனை எண்ணிப் புளகாங்கிதம் கொள்கிறான்,

வசந்தசேனை: அங்ஙனமிருக்க, ஏன் அவன் அழவேண்டும்?

இரதனிகை: அப்பகுதியைச் சேர்ந்த ஒரு சிறுவனின் பொன் தேரை வைத்து இவன் விளையாடிக் கொண்டிருந்தான். அவன் அதனை எடுத்துச் சென்றுவிட்டான். அதற்காக இவன் பார்த்துக் கொண்டிருந்தபோது, இந்த மண் தேரினைச் செய்து இவனிடம் கொடுத்தேன். இவன் ‘இரதனிகா! இந்த மண் தேருடன் எனக்கு

என்ன வேலை? பொன் தேரினைக் கொடுப்பாய்' என்று பிணங்குகிறான்.

**வசந்தசேனை:** பிறர் செழுமையினால் அவன் பாதிப்புற்று உள்ளான். விந்தையான விதியே! தாமரை இலையினின்றும் விழும் தண்ணீர்த் துளிகளைப் போன்ற மனிதனின் துயரத்தோடு நீ விளையாடுகின்றாய்! (தன் விழிகளில் நீர் மல்க) குழந்தாய்! அழாதே.

**சிறுவன்:** (உரோகசேனன்): இரதனிகா! இவர் யார்?

**வசந்தசேனை:** உன் தந்தையின் உயர் குணங்களின் காரணமாக அவரால் வெற்றி கொள்ளப்பெற்ற பெண் அடிமை நான்.

**இரதனிகை:** இச்சீமாட்டி உன் தாய்.

**சிறுவன்:** நீ சொல்வது உண்மையன்று. ஒருவேளை இவர் என் தாயாக இருப்பின், எவ்வாறு அவர் நன்கு அலங்கரித்துக் கொண்டிருக்க முடியும்?

**வசந்தசேனை:** உன்னுடைய மாசற்ற வாயினின்றும் மிகவும் துயர் தரும் வேதனைச் சொற்களைப் பேசுகிறாய். (தன் ஆபரணங்களைக் எல்லாம் கழற்றி வைக்கிறாள்; அழுது கொண்டு): இப்போது நான் உன் தாயாகிவிட்டேன். அன்பு கூர்ந்து இந்த அணிகலன்களை எடுத்துக்கொள்; பொன்தேர் வாங்கிக்கொள்.

**சிறுவன்:** போ! இவற்றை நான் எடுக்க மாட்டேன். நீங்கள் அழுது கொண்டுள்ளீர்.

**வசந்தசேனை:** (தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு): குழந்தாய்! நான் அழமாட்டேன். இப்போது நீ சென்று விளையாடு (சிறு தேரினை அணிகலப் பொதிவினால் நிரப்புகிறாள்). குழந்தாய்! உனக்காக அமைந்த சிறு பொன்தேரினைப் பெறுகிறாய். (சிறுவனுடன் இரதனிகை செல்லுதல்).

எனவே, இந்த உரையாடலைக் காணும்பொழுது நாடகத்தின் பெயர் மிகவும் புதுமையாகவும் பொருள் பொதிந்ததாகவும் புரட்சிமிக்கதாகவும் சூத்திரகன் சூட்டியிருப்பதன் பொருத்தம் எண்ணும்தொறும் இன்பம் பயப்பதாகும்.

இந்நாடகம் சமுதாய, பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்தது. கணிகையர் வாழ்வு உன்னதமாக இருந்த காலத்தினை இந்நாடகம் காட்டுகிறது. வசந்தசேனை பொதுமகளிர் மரபில் வந்தவளாயினும் பண்பின் சிகரமாகப் படைக்கப்பெற்றுள்ளாள். இவளை எண்ணும்பொழுது இளங்கோவடிகள் படைத்துள்ள கலையரசி மாதவி என்னும் மாசற்ற பாத்திரம் மனக்கண்முன் தோன்றும். அரண்மனை போன்ற அவள் மாளிகையின் அழகு

இந்நாடகத்தில் வருணிக்கப்பட்டுள்ளது. தனக்கென யானைகளையும், பாகன் ஒருவனையும் உடைய அவள் மிகப்பெரிய பணிமகளிர் வரிசையினையும் பெற்றிருந்தாள். சகாரன் என்ற கயவனைத் தவிர, சமுதாயத்தின் பலதரப் பிரிவினராலும் மதிக்கப்பட்டிருந்தாள். பணிமகளிர் பெண்அடிமைகள். பிணைப்பணயம் தந்து அவர்களை மீட்டுச் செல்லுதல் வழக்கம். தன் பணிப்பெண் மதனிகையை அங்ஙனம் அவள் விடுவிக்கிறாள். அவள் வசந்தசேனையை விட உயர்ந்து காணப்படுகிறாள்.

அவளை மணப்பதற்கு முன்வரும் சார்விலகன் (-பாசகவி சஜ்ஜலகன் என்பார்) ஓர் அந்தணன்; சூதாடி, காலப்போக்கில் பௌத்தத் துறவியாகிறான். ஆர்யகன் என்பான் அரசனானதும் பௌத்தப் பிக்குகளின் சங்கத்திற்கு அவனைத் தலைவனாக்குகிறான். இறுதி அங்கத்தில் சண்டாளர்களின் மனதநேயப் பண்புகளைச் சூத்திரகன் புலப்படுத்திக் காட்டியுள்ளார். அந்தணரைவிட அவர்கள் மேம்பட்டவராகக் காட்டப்பெற்றுள்ளனர்.

சாருதத்தனும் அவன் உரிமை மனைவியும் நடத்தும் வாழ்விற்கு அவன் வசந்தசேனையுடன் கொண்டிருந்த அன்பு வாழ்க்கை எவ்வகையிலும் தடையாக இல்லை. இரு பெண்களுக்குமிடையே சிறு பூசல்கூட இல்லை. மனைவியர் இருவரிடமும் சாருதத்தன் செலுத்திய அன்பினை அவ்விருவரும் அவனிடம் செலுத்தினர்.

துன்பியல் நாடகமாகத் தொடர்ந்த மிருச்சகடிகம் முடிவில் இன்பியலாக நிறைவுறும் பாங்கினைப் பார்ப்போம்.

தன் விருப்பத்திற்கு இணங்கவில்லை என்பதால் சகாரன் சம்ஸ்தானகன் (அரசன் பாலகனின் மைத்துனன்) வசந்த சேனையின் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டு, அப்பழியைச் சாருதத்தன்மேல் சுமத்துகிறான். உண்மையில் அவள் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அப்பாவி சாருதத்தனுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டிய சூழலில், மீண்டும் உணர்வு பெற்ற நிலையில் நீதிமன்றம் நோக்கி வசந்தசேனை பௌத்தப்பிட்சுடன் வருகிறாள். உண்மை உணரப்படுகிறது. சாருதத்தன் விடுவிக்கப்படுகிறான்.

சாருதத்தனால் முன்பு ஒருபொழுது சிறை மீட்கப்பட்டிருந்த ஆயர் தலைவன் ஆரியகன் உஜ்ஜயினிமேல் படைஎடுத்து வருகிறான்; அரசன் பாலகனை விரட்டியடித்துவிட்டுத் தான் அரியாசனத்தில் அமர்கிறான். தன் முக்கிய அரசியல் அலுவலருள் ஒருவராகச் சாருதத்தனை அமர்த்திக்கொள்கிறான்.

இந்நாடகத்தில் களவுக்கலையினை விரித்துக்கூறும் ஒரு நூலிற்கு (ஸ்தேய சாஸ்திரம்) குமாரக்கடவுள் ஆசிரியர் என்று சூத்திரிகன் குறித்திருத்தல் கூர்ந்து நோக்கத்தக்கது. தமிழ்ப் பண்பாட்டு மரபில் களவு வழி வள்ளியை முருகன் மணம் புரிந்தவன் என்று சங்க இலக்கியங்களாகிய நற்றிணையும், பரிபாடலும் புலப்படுத்துகின்றன. களவு என்ற சொல்லின் உயர்பொருளை உணராமையால்போலும். களவு நூலுக்கு முருகன் ஆசிரியன் எனப் பிறழக் கூறினானோ சூத்திரிகன் என்று எண்ணத் தோன்றுகிறது.

ஐரோப்பிய மொழிகள் பலவற்றில் மிருச்சகடிகம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் இந்நாடகத்தினை மண்ணியல் சிறுதேர் என்ற பெயரில் சிறந்த தமிழாக்கம் செய்துள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## IV.5. முத்திராராட்சசம்

இனி, விசாகதத்தரின் முத்திராராட்சசம் என்ற நாடகம் குறித்துக் காண்போம்.

குப்தர்கள் வமிசத்தைச் சேர்ந்த இரண்டாம் சந்திர குப்தனினன் (*கி.பி.375-கி.பி.413*) காலத்தில் விசாகதத்தன் வாழ்ந்தவர் என்பது அறிஞர் பலரின் கருத்தாகும். இவர் எழுதிய நாடகம் முத்திராராட்சசம் ஆகும். பாடலிபுரத்தினைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த நந்தனின் அமைச்சன் இராட்சசன் என்பவனை அவன் முத்திரை பொறித்த மோதிரத்தினால் சமுத்திரகுப்த மௌரியனின் அமைச்சன் சாணக்கியன் வெற்றி கொண்ட சரித்திரக் கதையினை மையமாகக் கொண்டு இந்நாடகத்தினை விசாகதத்தன் படைத்துள்ளார். இந்நாடகத்தில் ஏழு அங்கங்கள் உள்ளன.

இந்நாடகத்தின் தனித்தன்மைகளில் ஒன்றாகக் காதல் காட்சி இடம்பெறாமை சுட்டத்தக்கது. இதனுள் ஒரே ஒரு பெண் பாத்திரமே உண்டு. அதுவும் துணைப் பாத்திரமாகத் தோன்றுதல் குறிப்பிடுதற்குரியது. அரசியல் தந்திரம், சூழ்ச்சி, சாகசம், அரசநீதி என்பன இதனுள் வரும் கதைப் போக்கில் மாற்றங்களை உண்டாக்குகின்றன. பஞ்சதந்திரக் கதைகள், தந்திராக்கியாயீகா முதலியனவற்றுள் புகட்டப்படும் அரசியல் தொடர்பான கருத்துக்களை விசாகதத்தரும் இந்நாடகத்தில் ஏற்ற பெற்றி எடுத்து ஆண்டுள்ளார்.

பாடலியின் அரசன் நந்தன், அந்தணன் ஆகிய சாணக்கியனை அவமதித்தான். தன் குடுமியை விரித்துவிட்டு

அவனைப் பதவி இறக்கம் செய்து அவன் வமிசத்தையும் அழித்தாலன்றித் தன் சிகையை முடிய மாட்டேன் என்று சாணக்கியன் சபதம் செய்கிறான்.

தாழ்ந்த குடியில் தோன்றியவனும் நந்தனின் அவையில் இருந்தவனும் ஆகிய சந்திரகுப்தனைச் சாணக்கியன் எவ்வாறு அரசனாக்கினான் என்பதையும் அரங்கத்தார் முன்பே அறிந்தவர் என்று விசாகதத்தன் கருதிக்கொண்டு கதைப் பின்னலை நேர்த்தியாகச் செய்கிறார். நந்தனை அழித்தும்கூட, சாணக்கியன் தன் குடுமியை முடிக்கவில்லை. நந்தனின் வழியினன் ஆகிய மலயகேது என்பான் உயிருடன் உள்ளதே அதற்குக் காரணம். நந்தனின் அமைச்சன் இராட்சசன் மலயகேதுவிடம் ஆழ்ந்த விசுவாசம் கொண்டிருக்கிறான். இந்த அமைச்சன் சந்திரகுப்தனின் மேலாண்மையினை அங்கீகரிக்க வில்லை. தன் அரசன் நந்தன் இறப்பினைக் கருத்தில் கொண்டு பகைவனைப் பழி வாங்க ஆவலுடன் உள்ளான். மலயகேதுவிடமிருந்து இராட்சசனைப் பிரித்து, சந்திரகுப்தனுக்கு அவனை அமைச்சனாக்கினாலன்றித் தன் சிண்டினை முடியப் போவதில்லை என்று சாணக்கியன் உறுதி பூண்டிருக்கிறான்,

சாணக்கியன் தான் இழைக்கும் சதிகளையும் தந்திரங்களையும் ஒற்றர்கள் வாயிலாகவும் நச்சுநாரியர் வாயிலாகவும் கொலையாளிகளின் மூலமாகவும் வெற்றிகரமாக நிறைவேற்றுகிறான். இராட்சசன் இழைக்கும் சதித்திட்டங்களையும் முறியடிக்கிறான். அவனுடைய 'நண்பர்கள்' என்று இருந்தவருள் பலரும் சாணக்கியனிடம் கைக்கூலி பெற்ற ஒற்றர்களே ஆவர்.

எனினும், இராட்சசனுக்குச் சந்தனதாசன் என்னும் பொற்கொல்லன் உயிர்த்தோழனாக உள்ளான். பகைவர்களுக்கு இராசட்சசனின் குடும்பத்தைக் காட்டிக் கொடுப்பதற்கு முன்னால், உயிர்த்தியாகம் செய்வதற்குச் சந்தனதாசன் சித்தமாக இருக்கிறான். அவனைத் தூக்கிலிடும் இடத்திற்கு அழைத்துப் போகின்றனர். தன் உயிர் நண்பனைக் காக்கும் பொருட்டு இராட்சசன் தான் வெறுக்கும் பகைவனிடம் தன்னையே ஒப்படைக்கிறான்.

இறுதி அங்கத்தில் அரசியலில் சாணக்கியனின் மேதைமையினை யாருடைய நிர்ப்பந்தமும் இன்றி இராட்சசன் உறுதிப்படுத்தி உடன்படுகிறான். இவ்வாறு அவன் உள்ளத்தை வெல்கிறான் சாணக்கியன். தன் நண்பன் உயிரினைக் காக்கும் நோக்கில், சந்திரகுப்தனுக்குத் தான் அமைச்சனாகப் பணிபுரிய

இசைவு தெரிவிக்கிறான். தன் குறிக்கோளில் வெற்றி பெற்ற சாணக்கியன் அவிழ்த்த குடுமியை முடிக்கிறான்!

பாத்திரப்படைப்பில் விசாகதத்தன் சிறந்து விளங்குகிறார். சாணக்கியன், இராட்சசன் ஆகிய அமைச்சர்கள் இருவரும் ஒப்பும் முரணுமாகப் படைக்கப்பட்டுள்ளனர். இருவரும் தனித்தன்மை வாய்ந்தவர்கள். இருவரும் உறுதியும், நுண்ணறிவும், ஆற்றலும் படைத்தவர்கள்; தன்னலமற்றவர்கள்; தத்தம் அரசனின் நலத்தில் அக்கறை கொண்டவர்கள். எனினும், சாணக்கியன் தன்னம்பிக்கை மிக்கவன்; தெளிந்த சிந்தையன்; விழிப்புடன் இருப்பவன். இராட்சசனோ மென்மையானவன்; உணர்ச்சிவசப்படுபவன்; தப்பு செய்து விடுபவன். முன்னவன் இரகசியம் மிக்கவன்; நம்ப ஒண்ணாதவன்; யாரையும் விட்டுவைக்காதவன். பின்னவனோ வெளிப்படையானவன்; ஒத்துப்போகிறவன்; பெருந் தன்மையானவன்.

அமைச்சர்களைப் போலவே, அவர்கள் விசுவாசம் காட்டிய அரசர்களையும் ஒப்பும் முரணும் தோன்ற விசாகதத்தன் படைத்துள்ளார். அரசியல் விளையாட்டில் சந்திரகுப்தனும் மலயகேதுவும் பகடக்காயாக நகர்த்தப்படுகின்றனர். எனினும், தங்கள் அரசியல் தந்திரிகளின் கைகளில் அவ்வரசர்கள் இருவரும் வெறும் பொம்மைகளாக இருந்து விடவில்லை. இழிபிறப்பினனாகவும் பேராசையுடையவனாகவும் இருப்பினும் மௌரிய சந்திரகுப்தன் பெருமிதம் படைத்த சக்கரவர்த்தியாகவும், ஒழுக்கசீலனாகவும், அரசியலில் நன்கு பயிற்சிபெற்றவனாகவும், தன் குருவும் அமைச்சரும் ஆகிய சாணக்கியரிடம் முழு நம்பிக்கை கொண்டவனாகவும் படைக்கப்பட்டுள்ளான். எனின், மலயகேது விசுவாசத்தினால் இயக்கப்படுகிறவன், செருக்குற்றவன், நலிந்தவன், முரட்டுப் பிடிவாதம் உள்ளவன்; தன் அமைச்சரிடம் நம்பிக்கையும் அவநம்பிக்கையும் கொண்டவன்.

சிறுபாத்திரங்களையும் மிகவும் சிறப்பாகப் படைத்துள்ளார் விசாகதத்தர். சாணக்கியனின் ஒற்றர்களாகிய பாகுராயணனும் சித்தார்த்தகனும் விசுவாசத்துடனும் பணிவுடனும் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளைப் புரிகிறார்கள். ஆயினும், தனி நபர்கள் என்ற முறையில் அவன் தரும் வேலைகளை வெறுக்கிறார்கள்; உள்ளம் உறுத்துகிறது, மனச்சான்றினால் மயங்குகிறார்கள். இராட்சசனின் ஒற்றர்கள் விராதகுப்தனும் சகடதாசனும் தங்கள் தலைவனிடம் உண்மையான ஈடுபாட்டுடன் நடந்துகொள்கிறார்கள். நேர்மையுடன் கூடிய விருப்பத்தால் சேவகம் செய்கிறார்கள்.

நெஞ்சத்தைத் தொடக்கூடிய சிறு பாத்திரமாகச் சந்தனதாசனைப் படைத்துள்ளார் விசாகதத்தன். அணிமணி பணிபுரியும் பொற்கொல்லர்களின் தலைவன் சந்தனதாசன். சாணக்கியரிடத்தில் இந்துவர்மன் கொண்டுள்ள நேர்மையும் விசுவாசத்திற்கும் இணையாக இராட்சசனிடத்தில் சந்தனதாசன் கொண்டுள்ளான். இராட்சசன் அவனுக்காக உயிர்த் தியாகம் செய்யும் அளவிற்கு அவனுடைய மதிப்பினைப் பெற்றுள்ளான் சந்தனதாசன். அவனுடைய பலகீனத்தைப் பயன்படுத்திக் கொள்கிறான் சாணக்கியன்.

இந்நாடகத்தில் விசாகதத்தனின் படைப்பாற்றல், பிராகிருத மொழியை இலக்கியப் பயன்பாட்டிற்கு உட்படுத்தல் என்பன சிறப்பாகக் காணப்படினும், ஒருசில வடமொழிப் பாடல்களும் ஓங்கி நிற்றல் சுட்டுதற்குரியது. இராட்சசனின் தனிமொழி (Soliloquy) நீண்டதுதான். எனினும், சேக்ஸ்பியர் எழுதிய ஹாம்லெட் (Hamlet) நாடகத்தில் வருவன போன்ற நெடுமொழிகள் போல் மிகவும் நீண்டு செல்லாமை குறிப்பிடத் தக்கது. உரையாடல்கள், நாடக கதியின் விரைவு, பாத்திரங்களின் வழியே தன் ஆளுமையினைப் புலப்படுத்துதல், தன்னுடைய இலக்கிய நுணுக்கங்களை வெளிப்படுத்துதற்குரிய தக்க ஊடகமாக இந்நாடகத்தினைப் படைத்திருத்தல் என்பன சிறப்பாகப் போற்றத்தகுவன..

இனி, ஹர்ஷனின் நாடகங்களைப் பற்றிக் காண்போம்.

## IV.6. ஹர்ஷனின் நாடகங்கள்

பிரபாகரவர்த்தனன் யசோமதி ஆகிய அரச தம்பதிகளின் மகனாகத் தோன்றியவன் ஹர்ஷவர்த்தனன். ஹர்ஷன் என்றும் ஹர்ஷதேவன் என்றும் குறிக்கப்பெறுபவன். தன் பராக்கிரமத்தினாலும் பண்பினாலும் பிரதாபசீலன், சீலாதித்தன் என்ற சிறப்புப் பெயர்களையும் பெற்றவன். தானேசுவரம், கன்யகுப்ஜம் (கண்னோஜ்) ஆகிய தலைநகரில் இருந்து ஆட்சிபுரிந்த பெருவேந்தன். இவன் தமையன் இராச்சியவர்த்தனன், தங்கை இராச்சியஸ்ரீ. கி.பி. 604இல் அரியணை அமர்ந்த ஹர்ஷன் கி.பி. 64' வரை சிறப்பாக ஆட்சி புரிந்தான். கங்கைச் சமவெளியிலும் நேப்பாளத்திலும் ஒரிசாவிலும் இவன் ஆட்சி பரவியது. எனினும் மேலைச் சாளுக்கிய அரசன் புலிகேசியால் தோல்வியுற்றதால் தென்னகத்தில் இவன் ஆட்சி செல்லவில்லை.

காவலனாக மட்டுமன்றிப் பாவலனாகவும் விளங்கியவன் ஹர்ஷன். தன் அவையில் பெரும்புலவர்களை ஆதரித்த புரவலன்

அவர்களில் பட்டபாணர், திவாகரர், மயூரர் என்போர் குறிப்பிடத்தக்கவர். இவன் வாழ்வியலை **ஹர்ஷ சரிதம்** என்ற பெயரில் வரைந்தவர் பட்டபாணர். இவன் அவைக்கு வருகை தந்த சீனப்பயணி ஹயூந்தசாங்க் என்பான் இவன் நிர்வாகத் திறத்தினைப் பாராட்டியிருப்பதுடன் அவையினையும் புகழ்ந்துள்ளான். ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவிற்கு வந்த மற்றொரு சீனப்பயணி இட்சிங் (Yi-tsing) என்பான் ஹர்ஷனின் **நாகானந்தம்** அரங்கேற்றம் பெற்றதைக் குறித்துள்ளான்.

ஹர்ஷன் எழுதிய நாடகங்கள் மூன்றாகும். அவையாவன: *1. இரத்தினாவளி, 2. பிரியதரிசிகா, 3. நாகானந்தம் என்பன.* இவற்றுள் முதலிரண்டும் **நாடிகா** என்னும் வகையினைச் சார்ந்தவை. வீர, தீரங்களில் குறைந்து காணப்படும் நாடகத்தினை நாடிகா என்று கூறுவர் என்பதை,

"The Natika is the lessor heroic and erotic Nataka.

என்று தாஸ்குப்தா (History of Sanskrit Literature, p.67) குறித்துள்ளதால் புரிந்துகொள்ளலாம். இரத்தினாவளி, பிரியதரிசிகா ஒவ்வொன்றும் நான்கு அங்கங்களில் அமைந்த நாடிகா ஆகும். இவ்விரண்டும் வத்ச தேசத்து அரசன் உதயணனின் கதையினை மையமாகக் கொண்டவை. முதலில் இரத்தினாவளியினைப் பற்றிக் காண்போம்.

### IV.3.6.1. இரத்தினாவளி

இந்நாடிகாவின் முதல் அங்கத்தில் **வசந்த உற்சவம்** *(இளவேனில் விழா)* இடம்பெறுகிறது. காதற் கடவுளாகிய காமதேவனைப் போற்றும் விழாவாக இஃது உள்ளது. இளம் பெண்களின் பாடலும் ஆடலும் விதூடகன் அவர்களுடன் இணைந்து நகை விளைத்தலும் இந்த அங்கத்தில் காணலாம். இக்கவின்மிகு காட்சியில் அரசன் **உதயணன்** குதூகலத்துடன் வருகிறான்; சோலையில் மகிழ்ச்சியுடன் உலவுகிறான். பணிப் பெண்கள் தொடர்ந்துவர அரசி வாசவதத்தை காமதேவனை வழிபட அங்கு வருகிறாள். அவர்களில் சாகரிகா என்பாளும் ஒருத்தி. இவளுக்கு **இரத்தினாவளி** என்ற பெயரும் உண்டு. சாகரம் என்பது கடல். கடல் பயணத்தின்பொழுது மரக்கலம் உடைந்ததால் காப்பாற்றப்பட்டு உதயணனின் அரண்மனையில் அரசமாதேவிக்குப் பணிப்பெண்ணாக இருந்தமையால் அவள் சாகரிகா என்று அழைக்கப்பெற்றாள். உண்மையில் அவள் இலங்கை இளவரசி என்பது கதைப்போக்கில் புலனாகிறது. இவள் பெயர்தான்

இரத்தினாவளி. இவளே இந்நாடிகாவின் தலைவியாதலின் இவள் பெயரே இந்தப் படைப்பிற்கும் பெயராக வழங்கப்பெற்றது. இவளைப் பார்த்த மாத்திரத்தில் உதயணன் காதலிக்கிறான். அவளும் அவனை ஒரு காமவேளின் அவதாரமாக எண்ணிக் காதலிக்கிறாள். இதுவே முதல் அங்கத்தின் பொருள் முடிவு.

இரண்டு, மூன்றாம் அங்கங்களில் உதயணன், இரத்தினாவளி இருவரின் காதல் நிலை விரிவாக இடம்பெறுகிறது. அரசனின் வடிவத்தினை இரத்தினாவளி வண்ண ஓவியமாகத் தீட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்ட வாசவதத்தை சினமுறுகிறாள்; அழுக்காறு அடைகிறாள். அவளை மென்மையாக அமைதிப்படுத்துவதற்கு உதயணன் மிகவும் முயல்கிறான். பெருந்தேவியைப் பார்த்து அவன் பின்வருமாறு பேசுகிறான்.

> அன்பு கூர்ந்து தணிவுறுவாய் என்று நான் சொல்லின், நீ கோபமாக இல்லாமையால் அது பொருத்தமாகப் படாது; இது போன்ற செயலை இனிமேல் யான்செய்யேன் என்று உறுதி சொல்லின், குற்றத்தை ஒப்புக்கொண்டதாக முடியும்; நான் குற்றமற்றவன் எனக் கூறின் அதனை நீ பொய் என்று எண்ணுவாய்! என் அன்புக்குரியவளே! இந்தச் சூழ்நிலையில் என்ன சொல்லுவது என்பதை நான் அறியவில்லை.

மிகச் சாதுரியமான இப்பேச்சு அரசியின் சினத்தைத் தணிக்குப் ஆற்றல் வாய்ந்தது என்பதில் ஐயமில்லை.

நான்காம் அங்கத்தில் சிக்கலுக்குத் தீர்வு ஏற்படுகிறது அரசியல் நிகழ்வுகள் பற்றிய தகவலின் வாயிலாகவும் வல்லமை வாய்ந்த மாயவித்தைக்காரனின் செயற்பாடு பற்றிய செய்தி வாயிலாகவும் உண்மை புலனாகிறது. மந்திரவாதி வருகிறான் சிவன், திருமால், நான்முகன், இந்திரன் முதலிய கடவுளரையும் வித்தியாதரர், சித்தர் முதலிய விண்ணகவாசிகளையும் காட்சியில் தோன்றும்படி சாலம் செய்கிறான். கடைசியாக அந்தப்புரம் அனலில் எரிவதைக் காட்டுகிறான். அதனைக் கண்ணுற்ற உதயணன் விரைந்தோடிப்போய் தன் அன்புக்குரியாளைக் காப்பாற்றித் தன் கைகளில் பற்றியெடுத்து வருகிறான். அவள் இலங்கை இளவரசி என்பது அப்போதுதான் தெரியவருகிறது. இந்நிகழ்வுகள் எல்லாம் மதியூகம் மிகுந்த அமைச்சனால் விளைந்தவை என்பதும் புலனாகிறது. உதயணன், சாகரிகா (-இரத்தினாவளி) இருவரின் திருமணமும் அமைச்சனால் நடைபெறுகிறது. பணிப்பெண்ணை மணக்கக் கூடாது என்ற தடை நீங்கி விட்டதால் பெருந்தேவியுட

அமைதியுறுகிறாள். இரத்தினாவளி பற்றிய கதை பெருங்கதையில் இல்லை; வேறு மூலங்களிலிருந்து ஹர்ஷன் அதனை அறிந்து படைத்திருத்தல் வேண்டும். அல்லது சொந்தக் கற்பனை ஆகவும் இருக்கலாம்.

எனவே, இரத்தினாவளி ஓர் இன்பியல் படைப்பு என்பது தெளிவு. இனி, பிரியதரிசிகா என்ற நாடிகை பற்றிக் காண்போம்.

### IV.3.6.2. பிரியதரிசிகா [-பிரியதரிசிகை]

இரத்தினாவளியைப் போன்றே இந்நாடிகையும் புனையப்பெற்றுள்ளது. அங்க நாட்டின் அரசன் தன் மகள் பிரியதரிசிகையினை வத்ச நாட்டரசன் உதயணனுக்குத் திருமணம் முடிக்க இசைகிறான். அவளை அவனிடம் கொண்டு செல்லவும் ஆயத்தம் ஆகிறான். இதற்கிடையில் கலிங்க வேந்தன் படை எடுத்து வருகிறான்; அங்க அரசனைச் சிறைப் பிடிக்கிறான். பல துன்பங்களைக் கடந்து பிரியதரிசிகை **ஆரண்யிகா** என்ற பெயரினளாய் உதயணனின் படைத்தலைவனால் காப்பாற்றப்பட்டுப் பெருந்தேவி வாசவதத்தைக்குப் பணிப்பெண்ணாக அமர்த்தப்படுகிறாள். ஆரண்யம்-காடு; காட்டிலிருந்து காப்பாற்றப்பெற்றமையால் **ஆரண்யிகா** என்று அழைக்கப்பெற்றாள்.

பேரழகு வாய்ந்த அவளைக் கண்ட உதயணன் காதலிக்கிறான். இருவரும் களவில் கூடி மகிழ்தலைப் பெருந்தேவி அறிந்து விடுகிறாள். அரசியால் ஆரண்யிகா சிறைப்படுத்தப்படுகிறாள். விரைவிலேயே, அவள் அங்க நாட்டின் இளவரசி என்பதும் தனக்குத் தங்கை முறையினள் என்பதும் வாசவதத்தை தெரிந்துகொள்கிறாள். **நாகத்தினால் தீண்டப்பட்டு மயக்கமுற்ற பிரியதரிசிகையினை உதயணன் விடக்கடி வித்தையினால் தெளிவித்து உணர்வுபெற்றெழச் செய்கிறான்.** இருவரின் திருமணத்தையும் வாசவதத்தையே நடத்தி வைப்பதுடன் இன்பியலாகப் **பிரியதரிசிகை** நிறைவுறுகிறது. **சீவகன் அரவு தீண்டிய பதுமையினை விடம் நீக்கி மணந்த செய்தியை இங்கு ஒப்பு நோக்குதல் பொருந்தும்.**

### IV.3.6.3. நாகானந்தம்

புத்தரின் சாதகக் கதைகளில் ஒன்றாகிய **ஜீமூதவாகனனின்** கதையினை மையமாகக் கொண்டு ஷர்ஷன் **நாகானந்தம்** என்ற ஐந்து அங்க நாடகத்தினைப் புனைந்துள்ளான். **நாகத்தின் ஆனந்தம் பற்றிக் கூறுவதால் இந்நாடகம் இப்பெயர் பெற்றது.** சிவபிரானிடம்

ஈடுபாடு கொண்டவனாயினும் புத்தரின் போதிசத்துவக் கொள்கையில் பெரிதும் ஈடுபாடு கொண்டதால் புத்தரின் அளவற்ற கருணைக் கோட்பாட்டினைப் போதிக்கும் இந்நாடகம் ஹர்ஷனால் படைக்கப்பட்டது. அவன் அவைக்கு வந்த பௌத்தனாகிய சீனப்பயணி ஹயூந்தசாங்கின் தொடர்பும் இப்படைப்பிற்கு ஓர் உந்தாற்றலாகக் கொள்ளத்தக்கது. கதையின் சுருக்கத்தினைக் காண்போம்.

புத்தர் தன் கருணைத் திறத்தினைப் புலப்படுத்துதற்காக எடுத்த பல்வேறு பிறவிகளில் **ஜீமூதவாகனன்** என்ற நாகராசனாகப் பிறவி எடுத்ததையும் அப்போது அவர் புரிந்த அருஞ்செயல்களையும் **நாகானந்தம்** தெளிவுறுத்துகின்றது.

முதல் அங்கத்தில், சித்த அரசனின் அழகிய மகள் **மலயவதி** என்பவள் தேவி கௌரியின் கோயிலில் வழிபடும் பொருட்டு வசீகரிக்கும்படி வாசித்த குழல் இசையினை விதூடகனின் கூட்டுறவில் கேட்கிறான் **ஜீமூதவாகனன்**. தான் பௌத்தத்தின் துறவு நெறிக்குரியனாயினும் இளவரசி மலயவதியின் பேரழகும் இசையின்பமும் அவனை ஈர்த்ததால் பார்த்த மாத்திரத்தில் காதல் கொள்கிறான். இருவரின் திருமணமும் தேவியால் முன்பே தீர்மானிக்கப்பட்டு அவர்தம் பெற்றோர்களினால் ஒத்துக்கொள்ளப் பெற்றிருப்பினும், ஒருவர் மற்றொருவரை விரும்பவில்லை என்ற உணர்வினால் காதல் நோயினால் கலக்க முறுதலை நீண்ட இரண்டு அங்கங்களில் ஹர்ஷன் விரிவாகப் புனைந்துரைக்கின்றான்.

மூன்றாம் அங்கத்தில், ஜீமூதவாகனன் மலயவதியின் திருமணம் நிகழ்கிறது; உண்டாட்டு நடைபெறுகிறது. பணிமகன் பின்தொடர விடன் ஒருவன் களியமக்குற்ற நிலையில் விநோத ஆடையில் கையில் பரிகலம் ஏந்தியவனாய்த் தோளில் எரிமதுப்புட்டியைத் தொங்கவிட்டபடி வருகிறான்; உரத்த குரலில் பின்வருமாறு பாடுகிறான்.

> நான் எண்ணுவதுபோல் குற்றமற்ற தெய்வங்கள் இருவர்:
> நித்தமும் சுரபானம் செய்யும் பலராமன் ஒருவர்;
> காதலரைத் தம் காதலியருடன் இணைக்கும்
> காமதேவன் மற்றொருவன்

இப்பாடலினால் கள்ளும் காமமும் தொடர்புடையன என்பது புலனாகும். வாக்குறுதி தந்தபடி பணிமகளின் வருகைக்காக விடன் காத்துக் கொண்டிருக்கிறான். எனின், களியமக்குற்ற நிலையில் விடன், அப்போது அங்கு வந்த விதூடகனைப் பணிமகளாகக்

கருதுகிறான்; அவனை விழச் செய்கிறான். விரைவில் பணிமகள் வருகிறாள். விடன் விதூடகன் இருவருடனும் நகையாடுகிறாள். சோலையில் இக்காட்சி நடைபெறும் வேளையில், புதிய இணையராகிய ஜிமூதவாகனனும் மலயவதியும் தோன்றுகின்றனர். தலைவன் பாடுகிறான்.

> என் இனியவளே! மலர்ச்சோலையினைக் காணவேண்டும் என்ற என் பேரார்வம் காரணமாக உன்னைத் தேவையின்றிச் சங்கடப்படுத்திவிட்டேன். உன் வதனமே வானகத்துக் கற்பகச் சோலை, விழியின் புருவங்கள் மெல்லிய கொடிகளைப்போல் சுடர் விடுகின்றன; பாடலங்கொடியின் தளிர்கள் போன்றவை உன் உதடுகள்; இப்படி இருக்க, சோலை (-வனம்) வேறு வேண்டுமோ!

கற்பனைத் திறத்திற்கு இப்பகுதி ஒரு சான்று.

பணிமகள், விதூடகன் ஆகிய இருவரின் நகையாடலைக் கேட்டு இளைய தம்பதிகள் மகிழ்கின்றனர். இந்த இன்பக்காட்சி, பகைவர்கள் ஜிமூதவாகனின் இராச்சியத்தை நோக்கி வருகிறார்கள் என்ற செய்தியால் தடைப்படுகின்றது. புத்த பக்தனான இத்தலைவன் ஒன்றும் கவலைப்படாமல் பாவம் என்ற பகை ஒன்றே தனக்குத் தெரிந்தது என்று அமைதியுறுகிறான். ஜிமூதவாகனன் ஒரு போதிசத்துவ நிலையில் பின்வருமாறு பேசுகிறான்:

> இங்குள்ள புல்லே என் படுக்கை, தூய கல்லே என் ஆசனம்; மரங்களில் நிழலே இருப்பிடம்; தூய குளிர்ந்த ஊற்று நீரே பானம்; கந்த மூலமே உணவு; மான்களே நண்பர்கள்; ஒருவர் தயவின்றி இந்த நுகர்ச்சிப் பொருள்கள் யாவும் கிடைக்கின்றன. இவ்வனத்தில் ஒரே ஒரு குறைபாடு உண்டு. பிறர்க்கு உதவலாம் என்று தேவை உற்றவர்களைப் பார்த்தால் இங்குக் காண முடியவில்லை. எனவே, பயனற்ற முறையில் வாழ்வைக் கழிக்கிறேன்.

பின்னர், கடற்கரை ஓரமாக நடந்து போகிறான். மடிந்த நாகர்களின் எலும்புக் குவியலைப் பார்க்கிறான். அவர்கள் கருடனால் அந்த நிலையை அடைந்தவர்கள். நாக அரசனுக்கும் கருடனுக்கும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, முழு இனத்தையும் கருடன் அழித்துவிடாதபடி நாளொன்றுக்கு ஒரு நாகனை இரையாகத் தருதல் வேண்டும். புலம்பியபடி நாகம்மை தன் மகனைக் கருடனிடம்

நோக்கி இட்டுச் செய்வதை ஜிமூதவாகனன் பார்க்கிறான். அவனுக்கு மாறாகத் தானே செல்வதாக அந்தத் தாயை இணங்க வைக்கிறான். அஞ்சத்தக்க கருடப் பறவை ஜிமூதவாகனனைப் பற்றி இழுத்து வானில் சென்றது. பாதி உடலை மட்டுமே உண்டு எஞ்சிய பாதியை ஒரு கல்லின்மேல் வைத்தது. பின்னர். இரையானவனின் அருள் தவழும் முகத்தினைப் பார்த்துத் தான் பிழை செய்து விட்டதாக உணர்கிறது. ஒரு போதிசத்துவனைத் தான் கொன்றுவிட்டதாக வருந்துகிறது. தன்னை எரித்துக் கொள்வதன் வாயிலாகவே தான் செய்த பிழைக்குக்கழுவாய் தேட முடியும் என்று எண்ணுகிறது. இனி எந்த உயிரையும் கொல்லுவதில்லை என்று உறுதி பூண்பதுவே தக்க பிராயச்சித்தம் என்று ஜிமூதவாகனன் கூறுகிறான். பின்வரும் சொற்களைக் கூறியபடியே அவன் உயிர் விடுகிறான்!

> நாகத்தைக் காக்கும் பொருட்டு என் உடலைத் தியாகம்
> செய்ததன் வாயிலாக இன்று நான் புரிந்துள்ள புனிதச்
> செயலின் பயனாக மீண்டும் மீண்டும் நான் பிறவி
> எடுத்துப் பிறர்க்குத் தொண்டுபுரிவேன் ஆகுக.

அவன் இறப்பினை அடுத்து அவன் பெற்றோர், மனைவி மலயவது, நாகர்கள் ஆகியோர் கண்ணீர் ததும்பி, எரிபாயச் சித்தமாகிறார்கள். ஆயினும், தேவி உபாசகியாகிய மலயவதி கௌரியை வழிபடுகிறாள். உடனே தேவி தோன்றி அமிழ்தத்தை இறந்த கணவன்மேல் தெளிக்கிறாள். உயிர்பெற்று எழுகிறான். இறந்த நாகர்களின் எலும்புகளின் மேல் கருடன் அமிழ்தத்தைத் தெளிக்கிறான். அவர்கள் உயிர்த்தெழுகின்றனர். தன் தியாகத்திற்குப் பரிசாக ஜிமூதவாகனனை வித்தியாதரர்களின் வேந்தனாகும்படி கௌரி அருள் பாலிக்கிறாள். அவன் அம்மையைப் போற்றுகிறான் என்ற அளவில் நாடகம் நிறைவுறுகிறது.

**மகாயான பௌத்தத்தில் போதிசத்துவக் கோட்பாட்டுடன் சக்தி வழிபாடாகிய தாந்திரிக பௌத்த நெறியும் இணைந்துவிட்ட நிலையை நாகானந்தம் நமக்குப் புலப்படுத்துகின்றது.** ஹர்ஷனின் காலத்தைச் சார்ந்து வாழ்ந்த நாடக ஆசிரியருள் பவபூதி புகழ் பெற்றவர். அடுத்து, அவர் புனைந்துள்ள நாடகங்களைப் பற்றிக் காண்போம்.

## IV.7 பவபூதியின் நாடகங்கள்

இவர் பெற்றோர் நீலகண்டர், ஜதுகர்ணீ ஆவர். இவர்தம் இயற்பெயர் ஸ்ரீகண்டர். இவர் குருவின் பெயர் ஞானநிதி. வேதம், உபநிடதம், சாங்கியம், யோகம், வேதாந்தங்களில் தேர்ச்சி பெற்றவர். கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கன்னோஜி

அரசன் யசோவர்மனின் அவைக்களப் புலவராக விளங்கியவர். உச்சயினியில் புகழ் வாய்ந்த காலப்பிரியநாதரின் கோயிலில் திருவிழாவின்போது இவர் நாடகங்கள் யாவும் அரங்கேற்றம் பெற்றவை. நாடகக கலையில் இவருக்கிருந்த தேர்ச்சியை விட, வடமொழியைப் பயன்படுத்துவதில் இவருக்கிருந்த தேர்ச்சித் திறம் விழுமியது. ஏனைய சுவைகள் இவர் படைப்புக்களில் பரவி இருப்பினும் நகைச்சுவை அரிது. நீண்ட தொடரமைப்புக்கள் பொருந்தியிருப்பதால் இவர் நாடகங்கள் படிப்பதற்கு அரியவை, நடிப்பதற்குரியவை என்பர். இவர் எழுதிய நாடகங்கள்: 1. மகாவீர சரிதம், 2. உத்தரராம சரிதம், 3. மாலதி மாதவம் என்பனவாகும். இவற்றுள் மகாவீர சரிதம் பற்றி முதலில் காண்போம்.

### IV.7.1. மகாவீர சரிதம்

ஏழு அங்கங்களில் இந்நாடகம் அமைந்தது. மகாவீரன் என்ற சொல் சமண தீர்த்தங்கரரைக் குறிக்கவில்லை; இராம பிரானைக் குறித்தது. வான்மீகி இராமாயணத்தின் முதல் ஆறு காண்டங்களில் இடம் பெற்றுள்ள கதை நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு பவபூதி இந்நாடகத்தினை எழுதியுள்ளார். வீரராகவன் என்பார் இந்நாடகத்திற்கு உரை கண்டவர்.

### IV.7.2. உத்தரராம சரிதம்

இராமாயணத்தின் ஏழாவது காண்டம் ஆகிய உத்தர காண்டத்தில் வரும் கதை நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு இந்நாடகத்தினை ஏழு அங்கங்களில் பவபூதி எழுதியுள்ளார். ஒரு சில இடங்களில் கதை மாற்றங்கள் செய்திருக்கிறார். அவலமும் கருணைச் சுவையும் இந்நாடகத்தில் மிகுதி.

முதல் அங்கத்தில் ஓர் ஓவியன் இராமாயணக் கதையினை முழுமையாகத் தீட்டிய ஓவியங்களைப் பற்றி இராமன், சீதை, இலக்குவன் மூவரும் உரையாடுகிறார்கள். இப்படங்களின் விவரங்களை இலக்குவன் உரைக்கின்றான். மூவரும் இணைந்து வாழ்ந்த வாழ்க்கையினை அவை நினைவுபடுத்துகின்றன. இராமனும் சீதையும் ஒருவருக்கு ஒருவர் கொண்டிருந்த உண்மையான அன்பினையும் மென்மையினையும் அவை புலப்படுத்துவன. சீதை அயலான் இருப்பிடத்தில் தங்கியவள் என்றாலும் அவளைத் தன் மனையாளாக இராமன் ஏற்றுக்கொண்டவன் என்று பொதுமக்கள் பேசும் சொற்களைச் செவியுற்றதும், அவன் அவலக் குழப்பத்தில் ஆழ்ந்துவிடுகிறான் என்பது ஓவியக்காட்சிகள் உணர்த்துவன. மக்களின் வம்புப் பேச்சுக்காகச் சீதையைக் கைவிடும் காட்சியும் சுட்டத்தக்கது.

முதல் காட்சிக்கும் இரண்டாம் காட்சிக்கும் இடையே பன்னிரு ஆண்டுகள் செல்கின்றன. இரண்டு முதல் ஆறாம் காட்சி வரை இராமனின் குமாரன் பிறத்தல் முதல் சீதையைச் சந்தித்தல் வரை கதை நிகழ்வு இடம்பெற்றது. ஏழாம் அங்கத்தில் நாடகத் தன்மை மேம்படுகிறது. வால்மீகி தான் எழுதிய நாடகத்தினைக் காணுதற்காக மக்களையும் தெய்வங்களையும் விண்ணகவாசிகளையும் இராம இலக்குவரையும் வரவழைக்கிறார். இங்கு, நாடகத்திற்குள் ஒரு நாடகம் (இதனைக் **கர்ப்பாங்கம்** என்பர்) தொடங்குகிறது. அது ஒரு நாடகம்தான் என்பதை இராமன் சற்றும் அறியாதவன் ஆகிறான். பூமடந்தையும் கங்காதேவியும் சீதைப்பிராட்டியைத் தங்கள் அரவணைப்பில் எடுத்துக் கொள்கின்றனர். விசுவாசம் மிக்க தன் மனைவியை வெறுத்து ஒதுக்கியதற்காக இராமன் தன்னையே குறை சொல்லிக் கொள்கிறான். ஆயினும், கங்காதேவி அவன் செயலை நியாயப்படுத்துகிறாள். மக்களின் சொற்களையே ஆதாரமாகக் காட்டித் தெய்வங்கள் சீதை கற்புடையவள், பாவமற்றவள் என்று நிறுவ முயல்கிறார்கள். அதன் பயனாக, முடிவில் கணவன், மனைவி, பிள்ளைகள் அனைவரும் இணைதல் நிகழ்கிறது.

எனவே, முதலிரு நாடகங்களும் இராமாயணத்தினை மையமாகக் கொண்டவை என்பது தெளிவு. மூன்றாவது நாடகம் மாலதி மாதவம். இதன் அமைப்பினைப் பற்றிச் சிறிது காண்போம்.

### IV.7.3. மாலதி மாதவம்

இந்நாடகம் பத்து அங்கங்களைக் கொண்டது. உச்சயினி நகரில் கதை விரிகிறது. அந்த நாட்டின் அமைச்சரின் மகள் **மாலதிக்கும்,** பிறிதொரு நாட்டின் அமைச்சரின் மகனும், மலரும் புலவனும் ஆகிய **மாதவனுக்கும்** விளைந்த காதலைக் கருவாகக் கொண்டு புனையப்பெற்ற இந்நாடகத்தில் சிருங்காரச்சுவையே பிரதானமாக உள்ளது. இளிவரல், மருட்கை, கருணை, வீரம் முதலிய சுவைகளும் விரவி வந்தன.

**நந்தனன்** என்பவனும் மாலதியை மணக்க விரும்புகிறான். அவன அரசனுக்கு மிகவும் வேண்டியவன் என்பதால் அரசனும் அந்நிகழ்வினை விரும்புகிறான். எனினும், மாலதி மாதவன் இருவரும் இணைதற்குக் காரணமாக இருப்பவள் காமாந்தகி என்ற **பௌத்தப் பிக்குணி.** அவள் இருவருர்க்கும் ஒரு தாய்போல் நின்று இப்புனிதப் பணியைப் புரிகிறாள். மாதவனின் நண்பன் **மகரந்தன், மதயந்திகை** ஆகிய இருவரின் காதல் மணமும் நிறைவேறுகிறது.

ஆறாம் அங்கத்தில் நடைபெறும் நிகழ்வு உண்மைக் காதலின் ஆற்றலையும் புனிதத்தினையும் உலகுக்கு உணர்த்துவது. தான்

விரும்பாத ஒருவனுடன் மாலதி மண ஊர்வலத்தில் போகும் காட்சியை ஒரு கோயிலில் இருந்தவண்ணம் மாதவனும் அவன் நண்பனும் பார்க்கின்றனர். கோயிலுக்கு முன்பு ஊர்வலம் வந்து நின்றது. தன் தோழி இலவங்கிகையும் பிக்குணியும் தொடர்ந்துவர மாலதி கோயிலுக்குள் நுழைகிறாள். ஒரு தூணின் பின் மறைந்திருந்து மாதவனும் அவன் நண்பனும் மாலதி தன் தோழியுடன் உரையாடுவதைக் கேட்கின்றனர். தான் யாரைக் கணவனாக வரவேண்டும் என்று விரும்பினளோ அவனை நல்லூழ் இன்மையால் அடைய முடியாமையால் இறக்க விரும்புவதாகத் தோழியிடம் மாலதி கூறுகிறாள். தன் காதலனுக்கு ஒரு செய்தியையும் தோழியிடம் வழங்குவதையும் மறைந்திருக்கும் மாதவன் செவியுறுகிறான். தோழி இலவங்கிகை கொடுத்த குறிப்பினால் மாதவன் மறைவிலிருந்து வெளிப்பட்டு அவள் இடத்தினை எடுத்துக்கொள்கிறான். கோயிலின் அடர்ந்த வெளிச்சத்தில் முதலில் அவனை அடையாளம் காணவில்லை. காதல் பெருக்கினால் தன் தோழி என எண்ணி அவளைத் தழுவுகிறாள். பின்னரே, தன் கரங்களுக்கு இடையே கிடப்பவன் தன் நெஞ்சமர் காதலன் மாதவன் என்பதை மாலதி உணர்ந்து மகிழ்கிறாள். விரும்பாத மணமகனுடன் ஊர்வலத்தினர் கோயிலின் வெளிப்புறத்தில் கும்மிருட்டில் நின்று கொண்டுள்ளபொழுது மேதக்க பிக்குணி காமாந்தகி அங்கு வந்து இருவரையும் வாழ்த்துகிறாள்.

இவ்வாறு பவபூதியின் நாடகங்கள் கற்பனை வளம்மிக்க படைப்புக்களாக விளங்குகின்றன. இனி பட்ட நாராயணன் என்ற கவிஞரின் நாடகங்களைப் பற்றிச் சற்று உற்று நோக்குவோம்.

## IV.8. பட்டநாராயணன் – வேணி சம்காரம்

இவர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது பலர் கருத்து. வாமனன், ஆனந்தவர்த்தனர் முதலிய அணிநூலாசிரியர்கள் இவர்தம் வேணிசம்காரம் என்ற நாடக நூலிலிருந்து சில பகுதிகளை மேற்கோள் காட்டியிருத்தலின், அதன் சிறப்பு நன்கு அறியப்படும். இந்நூல் ஆறு அங்கங்களைக் கொண்டது. மகாபாரதக்கதைக் கூறினை மையப்படுத்தியது. **வேணி** என்ற சொல்லிற்குக் **கூந்தல்** என்பது பொருள். **சம்காரம்** [-சம்ஹாரம்] என்ற சொல் **1. முடியப்படுதல், 2. அழிக்கப்படுதல்** என்ற இரு பொருளைத் தருவது. மகாபாரதத்தில் கண்ணன் தூது போதல் முதல் வீமனால் துரியோதனன் அழிதல்வரை உள்ள நிகழ்வுகள் இந்நாடகத்தில் இடம்பெற்றன. துரியோதனனின் ஆணைப்படி அவைக்களத்தில் துச்சாதனன் பாண்டவரின் தேவி திரௌபதியின் கூந்தலைப் பற்றி

இழுத்து வந்து அவமானப்படுத்தினான். தன்னை அவமானப் படுத்தியவர்களைப் பழிவாங்கும் வரை விரிந்த கூந்தலை முடியேன் எனச் சூள் உரைக்கிறாள் திரௌபதி. துரியோதனனைக் கதாயுதத்தினால் அடித்துக் கொன்று அவன் குருதியினால் திரௌபதியின் கூந்தலை நீவி முடிப்பதாக வீமன் சபதம் செய்கிறான், அவ்வாறே செய்கிறான்.

மகாபாரதத் கதையினின்றும் சிற்சில மாற்றங்களைப் பட்டநாராயணன் செய்துள்ளார். வீமனின் சினம் பெருகும் பொருட்டுத் துரியோதனனின் மனைவி பானுமதி திரௌபதியைப் பரிகாசம் செய்ததாக இந்நாடகத்தில் அமைந்துள்ளதைக் குறிப்பிடுதல் தகும். வீடுமரும் துரோணரும் இறந்ததால் பாண்டவரோடு சமாதானம் செய்து கொள்ளும்படி அசுவத்தாமன் கூறுவதாக மகாபாரதத்தில் உள்ளது. எனின், இந்நாடகத்தில் அதனைத் திருதிராட்டிரர் உரைக்கிறார். இப்படி இவர் செய்துள்ள சிறு மாற்றங்கள் கதைப்போக்கிற்குத் தேவையாக எண்ணியுள்ளார்.

# V. தூது இலக்கியம் (சந்தேச காவியம்)

சந்தேசம் எனினும் தூது எனினும் ஒரே பொருளையே குறிக்கும். இதற்கு இணையாகத் தமிழில் வாயில் என்ற சொல்லினைத் தொல்காப்பியர் குறித்தனர். பிரிவாற்றாமையால் துயர்ப்படும் தலைவன் இயற்கைப் பொருளாகிய கொண்டல், காற்று, திங்கள், துளசி, கிளி, வண்டு, சாதகப்புள், சக்கரவாளம், குயில், அன்னம், மயில் முதலியவற்றுள் ஒன்றினை முன்னிலைப்படுத்திச் சேய்மையில் உள்ள தன் தலைவியிடம் தன் மாறா அன்பினையும் துயரினையும் சொல்லும்படி வேண்டுவதாகக் கற்பனைக் கவின் மிளிரக் கவிஞனால் படைக்கப்படும் சிற்றிலக்கிய வகையே சந்தேச காவியம் எனப்படும் தூது இலக்கியமாகும்.

கி.பி. 4, 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காளிதாசன் பாடியுள்ள மேகசந்தேசம் எனப்படும் மேகதூதம் என்ற படைப்பினை வடமொழி அறிஞர்கள் இவ்வகைக்கு முதல் இலக்கியமாகக் கூறுகின்றனர். காளிதாசனுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுந்த சங்கப்பாக்களில் இதற்கு மூலம் காணப்படுவதால், தமிழிலிருந்து வடமொழிக்கு இவ்விலக்கிய வகை எடுத்தாளப் பெற்றிருத்தல் வேண்டும் என்று ஜியார்ஜ் ஹார்ட் (Geroge Hart) என்ற அமெரிக்க நாட்டுத் தமிழறிஞர் ஆராய்ந்து கூறியுள்ளார்.

காளிதாசனுக்கு முன்பு தூது என்ற பெயரில் வட மொழியில் இலக்கியம் எழுதப்படவில்லை என்பது உண்மை. எனினும். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செய்தி கொண்டு செல்பவராக ஒன்றையோ ஒருவரையோ அமைத்துப் பாடும் மரபு காளிதாசனுக்கு முன்பு காணப்படுதலை ஒரு சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். பாணிசு என்பாரை நோக்கிச் சரமம் என்ற நாயினைத் தூது போக்கிய செய்தி இருக்கு வேதத்தில் *(X 108)* காணப்படுகிறது. இராமனின் தூதனாக அனுமன் இலங்கையில் சீதையை நாடிச் செல்லுதலை வான்மீகி இராமாயணத்திலும், தருமபுத்திரரின் தூதுவராகக் கண்ணன் துரியோதனாதியர் பக்கம் செல்லுதலை வியாசபாரதத்திலும் வருதலைச் சுட்டிக் காட்டுவர். எனின், இம்மூவகைத் தூதுகளில் நடுவில் உள்ளது மட்டும்தான் பிரிவாற்றாத் தலைவனின் துயரத்தை எடுத்துச் சொல்லும் தூதாக உள்ளது புலனாகும். அதுவும்கூட, இயற்கைப் பொருளை பிரிவாற்றாத் தலைவன் முன்னிலைப்படுத்திப் பேசுவது என்ற தூது இலக்கண அமைப்புடையது எனக் கூறுதல் ஒவ்வாது. எனின், புத்தர் சாதகக் கதைகளில் (எண்.297) காமவிலாப சாதகம் என்பது ஒன்றாகும்.

துயருறும் ஒருவன் தன் மனைவிக்குக் காகத்தினைத் தூது அனுப்பிய செய்தி காணப்படுகிறது. ஆதலின், தூது இலக்கியத்தினை அனைந்திந்திய இலக்கிய வகை (**Pan-Indian genre**) என்று எண்ணுதல் பொருந்தும்.

மகாபாரதத்தில் இடம்பெறும் கிளைக்கதையில் நளன் அன்னத்தை நோக்கித் தன் தலைவி தமயந்தியிடம் தூது அனுப்புவதாக வரும் பகுதி இவ்வகை இலக்கியத்தின் சாயல் பெற்றிருத்தல் நோக்கத்தக்கது. இப்பகுதி தவிர, வேறு தூது இலக்கியம் எனக் கூறத்தக்க ஒரு தனிப் படைப்பு காணப்படவில்லை. வடமொழியில் இவ்வகை இலக்கயத்தினை முதன் முதல் படைத்தவர் காளிதாசன் என்பதும், அவருடைய மேகசந்தேசத்தினைப் பார்த்துப் பின்வந்தோர் பலர் இந்த இலக்கிய வகையை வளர்த்துள்ளனர் என்பதும் எண்ணற்பாலன. முதலில், மேகசந்தேசத்தின் பொருண்மையினை நோக்குவோம்.

### V.1. மேகசந்தேசம் அமைப்பும் சிறப்பும்

பெருமிதமும் இனிமையும் விரவிய மந்தாகிராந்தா என்னும் யாப்பில் இவ்விலக்கியத்தினைக் காளிதாசன் பாடியுள்ளார். விண்ணக நகரமாகிய அளகாபுரிக்கு அரசனாகிய குபேரனின் பணிமகன் ஆகிய இயக்கன் ஒருவன் தன் கடமை தவறியதால் ஓராண்டு காலம் தன்னாட்டினின்றும் வெளியேற்றப்படுகிறான். தன் மனைவியையும் இல்லத்தையும் துறந்து தென்பால் உள்ள இராமகிரியை அடைகிறான். பிரிவுத் துயரினை அவனால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. இராமகிரியின் சிகரத்தில் தவழும் மேகம் தென்திசையிலிருந்து தன் இல்லம் உள்ள வடதிசை நோக்கி நகரத் தொடங்குவதை இயக்கன் காண்கிறான். தன்னைப் பிரிந்துறைவதால் ஆற்றாது வாழும் தன் தலைவிக்குத் தானும் அதே நிலையில் துயருறுவதை எடுத்துக் கூறும்படி மேகத்தைப் பார்த்து வேண்டுகோள் விடுக்கிறான். தான் இருக்கும் இராமகிரியிலிருந்து கயிலையில் உள்ள அளகாபுரியில் தன் இல்லம் இருக்கும் இடத்திற்குச் செல்லும் பாதையை வருணித்துரைக்கிறான். அங்கே தன் மாளிகையில் தன் வரவு பார்த்துத் தன்னந்தனியளாய்த் தவித்திருக்கும் தலைவியிடம் உணர்த்த வேண்டிய செய்தியைக் கூறும் முன்னர், நெடுவழியைப் பற்றிய விவரங்களைக் கலைழகுடனும் கற்பனையுடனும் கூறும் பகுதி காளிதாசனின் அழகுணர்ச்சிக்குச் சான்று பகர்வது. போகிற வழியில் உள்ள தன் நகர் உச்சயினியையும் வருணிக்கிறார்: இயக்கனுக்குரிய அளகாபுரியையும் வருணிக்கிறார். உவமைகளாலும்

உருவகங்களாலும் படிப்பவர் உள்ளத்தில் உணர்ச்சிகள் கிளர்ந்தெழச் செய்கிறார்.

நிலமடந்தையின் மார்பில் அணிந்திருக்கும் முத்தாரம் போல் ஓடும் அருவியின் மிசை கருமேகம் பரவுகிறது; அது அந்த ஆரத்தின் நடுவில் கருநீலக்கல் பதித்தாற்போல உள்ளது. ஆம்பல் மலரைப் போன்ற பனியால் மூடப்பட்ட சிகரங்களை உடைய கயிலை வானத்தில் உயர்ந்தெழுந்து சிவபிரானின் இடிக்கும் சிரிப்பினைப்போல் ஒவ்வோர் இரவையும் நோக்குகிறது. கயிலை மலையின் மருங்கில் உள்ள **அளகாபுரி** என்னும் அழகிய நங்கை. அதன் கீழிருந்து பெருக்கெடுக்கும் **கங்கை நதி** என்னும் ஆடையினை உடுத்தி, குன்று என்னும் தன் காதலனின் மடியில் கிடத்தலைப் போன்றுள்ளது. கார் காலத்தில் மேகங்களால் சூழப்பட்ட மாடமாளிகைகள் முத்தாரம் சூடிய மங்கையின் கூந்தலைப் போன்றுள்ளன. தன் நகரத்தினையும் காப்பரண் மாளிகையினையும் கொண்டலிடம் துல்லியமாக வருணித்துக் கூறியபின் இயக்கன், நீண்ட பிரிவிற்குப்பின் தன் மனம் கற்பனை செய்த வண்ணம் தன் மனைவியின் கவினைப் புனைந்து பேசுகிறான். இறுதியாக, தான் அனுப்பும் செய்தியின் வாசகத்தினைத் தன் இடிக்குரலில் தன் அன்புக்குரியாளிடம் புலப்படுத்துதல் வேண்டும் என்று எடுத்துக் கூறுகிறான். தான் அவளைப் பற்றி எப்போதும் ஆர்வத்தோடு எண்ணி இருந்ததை அவளிடம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறான். அவன் மேகத்திடம் தரும் செய்தி இதுவே:

> என் இனியவளே! பிரியங்கு என்ற கொடியில் உன் மேனியைக் காண்பேன்; மிரளும் மானின் விழிகளில் உன் பார்வையைக் காண்பேன்; நின் செவித்தடத்தில் (கன்னப்பொட்டு) நிலவினைக் காண்பேன்; உன் கூந்தலின் அழகினை மயிலின் பீலியில் காண்பேன்; உன் விழிப் புருவங்களின் வினோதத்தினை நதியின் மெல்லிய அலைகளில் காண்பேன்; ஓ மடப்பம் பொருந்தியவளே! ஒரே இடத்தில் உன் முழுச் சாயலும் கிடைப்பதில்லையே.

தொல்காப்பியர் "நோக்குவ எல்லாம் அவையே போறல்" (தொல்.பொருள்.) எனக் கூறிய பகுதி இங்கு நோக்கத்தக்கது. மேலும் இயக்கன் பேசுகிறான்:

> நாம் ஊடல் கொள்ளும்போது நீ சினக்கோலம் கொள்வதையும் சினத்தைத் தணிக்கும்பொருட்டு உன் காலில் நான் விழுவதையும் ஓவியமாகத் தீட்டப்

பலமுறை நான் விரும்பும்பொழுது நீண்ட காலமாக நிரப்பப்பட்ட கண்ணீர்த்துளிகளினால் என் பார்வை தடைப்பட்டுப் போகிறது. அவ்விடத்தில் கூட விதியெனும் கொடிய தெய்வம் நம் இணைவினைப் பொறுத்துக்கொள்ளாது போலும்!

இவ்வாறு இயக்கன் தன் உணர்வுகளைக் கொண்டலிடம் கொட்டி வைக்கிறான்; தன் மனையாளிடம் கூறும்பொருட்டு, மேலும் இயக்கன் பேசுகிறான்:

ஒருமுறை (படுக்கையில்) என் கழுத்தினைத் தழுவிக் கொண்டிருந்த பொழுதிலும் நன்கு துயின்றாய்; யாதொரு காரணத்தாலோ விழித்தெழுந்து விம்மினாய்! (அதற்குக் காரணம்) திரும்பத் திரும்பக் கேட்டேன், அடக்கிக் கொண்ட புன்னகையுடன், "ஓ போக்கிரி! என் கனவில் நீ அயல் பெண்ணுடன் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்ததைக் கண்டேன்! என்றாள்."

இவ்வாறு வரும் பகுதிகளைப் படிக்கும்பொழுது பழைய தமிழிலக்கியப் பதிவுகள் மனத்திரையில் எழுகின்றன. காதலர்களின் செயற்பாடுகள், உணர்வுகள், எண்ணங்கள் என்பன மனிதகுலம் முழுமைக்கும் பொதுவானவை *(UNIVERSAL)* என்ற உண்மையினை உணர்ந்து மகிழலாம்.

பேசாதவற்றைப் பேசுவது போலவும் கேளாதவற்றைக் கேட்பது போலவும் அமைத்துக் காதலர்கள் பேசும் கூற்று வகைகளைத் தொல்காப்பியர் வரையறை செய்து இலக்கணம் கண்டுள்ளார். பன்னெடுங் காலத்திற்கு முன்பிருந்தே இவ்வகை இலக்கிய மரபு தமிழகப் பாவலரால் பேணப்பெற்றுள்ளமை எண்ணி இன்புறுதற்குரியது,

காளிதாசனின் மேகதூதத்தினைப் பின்பற்றிப் பலபேர் பிற்காலத்தில் தூது இலக்கியங்களைப் படைத்திருப்பினும் கற்பனைத் திறத்தாலும், உணர்ச்சிப் புலப்பாட்டினாலும் நடை நலத்தினாலும் இயற்கைத் தன்மையாலும் கவிதையழகாலும் அவரை ஒருவராலும் விஞ்சிச் செல்ல இயலவில்லை. பேராசிரியர் எஸ்.என்.தாஸ்குப்தா,

**A large number of attempts were made in later times to imitate the poem, but the Mega-dūta still remains unsurpassed as a masterpiece of its kind, not for its matter, nor for its description,**

**but purely for its poetry [History of Sanskrit Literature, Vol.I, p.134].**

என்று திறனாய்ந்து தெளிதல் நோக்கத்தக்கது. மேகசந்தேசத்தினை ஜெர்மன் மொழியில் ஆக்கம் செய்தவர் மாக்சுமுல்லர். கி.பி.1792இல் வில்லியம் ஜோன்ஸ் இதனை ஆங்கிலத்தில் ஆக்கம் செய்தார். திபெத்து மொழியிலும் சிங்கள மொழியிலும் இவ்விலக்கியம் மொழிபெயர்க்கப்பெற்றுள்ளதால், இதன் சிறப்பு புலனாகும். பி.வோன் போலன் (P. Von Bohlen) என்பார் மேகதூதத்தினை இலத்தினிலும் ஜெர்மனிலும் கவிதை நடையில் கி.பி.1840இல் மொழிபெயர்த்துள்ளார். **இதனைத் தமிழில் மொழி பெயர்த்தவர் திருவாரூர் தமிழறிஞர் சமதக்கினி ஆவர்.**

மேக தூதத்திற்கு நாற்பதுக்கு மேற்பட்ட உரைகள் எழுதப்பெற்றிருத்தலை நோக்குங்கால், அவ்விலக்கியத்தின் அருமையும் சிறப்பும் தெளிவாகும். கவிச்சந்திரர், கிருட்டிணதாசர், சிந்தாமணி, சனார்த்தனர், பரதசேனர். கல்யாணமல்லர், விசுவநாதர், மேகராசர், சீவானந்தர், திவாகரர் என்போர் அவ்வுரையாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர்.

தமிழிலக்கியங்களிலும் மேகத்தினைக் காதலியிடம் தூதுவிட்ட படைப்புக்கள் பல உள்ளன. எனவே, தூதினை அனைத்திந்திய இலக்கிய வகையாகக் (**Pan-Indian Literary Genre**) கருதுதல் தகும். சென்ற நூற்றாண்டில் **நாவலர் சோமசுந்தர பாரதியார் அருச்சுனன் தன் காதலி ஆகிய பாண்டிய இளவரசி சித்திராங்கதைக்கு மேகத்தினைத் தூது அனுப்பியதாக ஒரு சிற்றிலக்கியம் புனைந்துள்ளார்.** அதற்குப் பெயர் **மாரி வாயில்.** மாரி = மேகம்; வாயில் = தூது.

### V.2. பிற தூது இலக்கியங்கள்

மேக தூதத்தினைப் பின்பற்றிக் காளிதாசனுக்குப்பின் வந்த கவிஞர்கள் பல்வேறு தூது பிரபந்தங்களைப் புனைந்துள்ளனர். இத்தகைய தூது இலக்கியங்களில் **மந்தாகிராந்தம்** என்னும் யாப்பு பொதுவாகப் பயன்படுத்தப்பெறினும் **சிகரிணி, வசந்த திலகம், மாலினி, சார்தூலவிக்கிரீடிதம்** முதலிய பிற யாப்புக்களும் பயிலப் பெறுதலைத் திறனாய்வாளர் குறித்துள்ளனர்.

**மேருதுங்கன்** (கி.பி.15 நூ.) என்னும் சமணப்புலவர் பாடிய மேகதூதம் நேமிநாதரின் வாழ்வினைப் புலப்படுத்துவது. சிறைப்பட்ட அந்தணன் ஒருவன் தன் காதலி காதம்பரிக்குக் காகத்தினைத் தூது போக்குவதாகப் பாடப்பெற்ற இலக்கியம்

காகதூதம் எனப்படும். உலகை வெறுத்து வனத்தில் திரியும் ஒருவன் அன்னப்பறவையினைச் சிவபிரானுக்குத் தூது விடுப்பதாகப் பெயரறியாப்புலவர் **அம்சசந்தேசத்தினைப்** பாடியுள்ளார். சட்சக்கரத்தின் வழியே (மூலாதாரம் முதல் ஆஞ்ஞை முடிய உள்ள ஆறு ஆதாரங்கள்) துவாதசாந்தப் பெருவெளியில் உள்ள சிவபிரானுக்கும் முத்தி என்னும் கன்னிக்கும் அன்னத்தைத் தூது விடுதல் இப்படைப்பின் தனிச் சிறப்பு. காதலால் பிரிவாற்றாது வருந்துவோர் தமக்குரியவர்க்குத் தூதுவிடும் மரபு மாறி இங்ஙனம் ஆன்மீகப் பேற்றுக்கும் இறைவனுக்குத் தூது விடுதல் **உமாபதி சிவம் எழுதிய நெஞ்சுவிடு தூது** என்னும் இலக்கியத்தில் காணலாம். எனவே, இதனை அனைத்திந்திய இலக்கிய வகையாக (**Pan-Indian Literary Genre**) கருதுதல் பொருந்தும்.

தூது இலக்கியத்தினைப் போலவே வடமொழியில் சதக இலக்கியங்கள் பற்பல தோன்றியுள்ளன. **சதகம் - நூறு**. ஒரு பொருள் பற்றி வரும் 100 பாடல்கள் கொண்ட இலக்கிய வகை சதகம் எனப்படும். இவை பெரும்பாலும் **காதல், நீதி, பக்தி** என்ற பொருண்மையில் பாடப்பெற்றவை. இவையும் வளம்மிக்க இலக்கிய வகையாக வளர்ந்துள்ளன. ஆதலின், சதக இலக்கிய வகை பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

# VI. சதக இலக்கியம்

கி.பி. 6 அல்லது 7 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராகக் கருதப்பெறும் **பர்த்துருஹரி** என்பார் பாடிய **சதகத்திரயம்** வடமொழியில் தோன்றிய மூத்த சதக சாகித்தியம் என்று வடமொழி இலக்கிய வரலாற்றாசிரியர்கள் எண்ணியுள்ளனர். ஆயினும், **மகாயான பௌத்த இலக்கியங்களில் சுட்டத்தக்கதாக விளங்கும் அவதான சதகம் காலத்தால் முற்பட்டதாகத் தோன்றுகிறது**. புத்தர், பிரத்தியேக புத்தர், அருகர், போதிசத்துவர் என்போர் புரிந்துள்ள அருட்செயல்களையும் அற்புத நிகழ்வுகளையும் பொருளாகக் கொண்டு புனையப் பெற்றுள்ள **அவதான சதகம் கி.பி.3ஆம் நூற்றாண்டில் சீனத்தில் மொழிபெயர்க்கப்பெற்றுதால், குறைந்தமட்டில் இவ்விலக்கியம் கி.பி.2ஆம் நூற்றாண்டிற்கு உரியதாகக் கொள்ளுதற்கு உரியது என்பர் விண்டர்நீட்ஸ்.**

வடமொழியில் தோன்றிய சதகங்களை **1. நீதிசதகம், 2. சிருங்கார சதகம், 3. வைராக்கிய சதகம், 4, பக்தி சதகம்** என்று அடைவு செய்தல் பொருந்தும். வாழ்வியலுக்கு வேண்டப்படும் அறக்கருத்துக்களையும் உயரிய தகவுகளையும் உரைப்பன நீதி சதகங்கள். காதல் உணர்வுகளையும் இல்லற இன்பத்தையும் மையப்படுத்துவன சிருங்கார சதகங்கள். உலகியல் இன்பத்தினை ஒதுக்கிப் பாரமார்த்திக நெறியினையும் வீட்டின்பத்தினையும் அடைதற்குரிய மெய்ப்பொருட் சிந்தனைகளைக் கொண்டவை வைராக்கிய சதகங்கள். வழிபடு கடவுளிடம் கொண்டுள்ள வரம்பற்ற அன்பினையும் ஈடுபாட்டினையும் இயம்புவன பத்தி சதகங்கள்.

நீதிசதகம், வைராக்கிய சதகங்களுக்கு உரிய மூலக் கருத்துக்கள் மகாபாரதத்தில் சாந்தி பருவத்தில் காணப்படுகின்றன என்பர் வடமொழி இலக்கிய அறிஞருள் ஒருசாரார். தருமசாத்திரங்கள், பஞ்ச தந்திரம், இதோபதேசம் முதலியவற்றிலும் நீதிக்கருத்துக்கள் இடம்பெறுவதால், இவற்றையும் நீதி சதகங்களுக்குரிய மூலங்களாகக் கருதுதல் பொருந்தும்.

முதலில், பர்த்துருஹரி பாடியுள்ள மூன்று சதகங்களைப் பற்றிக் காண்போம். இவை யாவும் கி.பி.1651இல் அப்ரஹாம் ரோகர் **(Abraham Roger) என்பவரால் டட்சு மொழியில் மொழி பெயர்க்கப்பெற்றவை. ஐரோப்பியர்க்கு முதன் முதலில் அறிமுகம் ஆகிய இந்திய இலக்கியம் இவையே என்பர் விண்டர்நீட்ஸ்.**

## VI.1. சிருங்கார சதகம்

இல்லறம் துறவறம் ஆகிய இரண்டிற்கும் இடையே ஏழுமுறை தத்தளித்த பின்னரே பர்த்துருஹரி துறவு மேற்கொண்டார் என்ற அரிய செய்தியைக் கி.பி.7 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த இட்சிங் என்னும் சீனப்பயணி தன் பயணக் குறிப்பேட்டில் பொறித்துள்ளான். இதனால் இல்லற இன்பத்தினைக் கைவிடுதல் என்பது எவ்வளவு அரிதான செயல் என்பது புலனாகும். அவர் பாடிய சிருங்கார சதகத்தில் இரண்டாட்டம் ஆடிய செயலுக்குச் சான்றாகக் கொள்ளத்தக்க பாடல்கள் உள்ளன. ஒருசிலவற்றின் சாரத்தினைக் காண்போம்.

1. காதல் என்னும் இருளில் அறியாமையால் நான் அங்குமிங்கும் அலைந்தேன்; இந்தப் பரந்து விரிந்த உலகில் மகளிரைத் தவிர மற்ற யாதொன்றையும் யான் கண்டிலேன்; கண்ணிற்கு ஊற்றப்படும் மருந்தாகிய ஞானத்தால் குருடு நீங்கப்பெற்றேன்; உடன் என் கண்முன் எல்லாம் அமைதியாகத் தெரிந்தன; இந்த உலகில் பிரமம் என்ற ஒன்றை மட்டுமே கண்டேன் (98),

2. பலவாறாகப் பேசிப் பயன் என்ன? இருவகைகளில் நீங்கள் இன்பம் பெறலாம். இளம் நங்கையரின் கூட்டுறவில் இன்புற்று வாழ்தல் ஒருவகை; இல்லற வாழ்வினின்றும் ஓய்வு பெற்று வனவாசம் மேற்கொண்டு அமைதியையும் ஆனந்தத்தையும் அடைதல் மற்றொரு வகை (19, 53).

3. நிலையாமையும், மாறும் தன்மையும் உடைய இவ்வுலக வாழ்வில் மனிதன் இன்பம் பெறுவதற்குரிய மார்க்கங்கள் இரண்டு உள்ளன; தத்துவப் பனுவல்களிலிருந்து ஞானத்தைப் பருகலாம்; அல்லது, இளம் மடந்தையர் மடியில் அமிழ்ந்து இன்புறலாம்.

எனவே, புலன்களால் பெறும் இன்பத்தினைச் சிருங்காரச் சதகம் ஒப்புக் கொண்டாலும். புலன் கடந்து மெய்ப் பொருளை ஞானத்தினால் நினைந்து இணைந்து பெறும் மாறாத பேரின்பத்தினையே பெரிதும் வலியுறுத்தியுள்ளது என்பது தெளிவு இனி, அவர் பாடியுள்ள நீதி சதகத்திலிருந்து சில பாடல்களின் சாரத்தினை நோக்குவோம்.

**VI.2. நீதி சதகம்**

1. முதலையின் நச்சுப் பற்களிடையே அகப்பட்டுக் கொண்ட மாணிக்கக் கல்லைக்கூட ஒருவன் வலிந்து பிடுங்கி எடுத்துவிடலாம். சுழலும் அலையும் நிரம்பிய கடலைக்கூட ஒருவன் கடந்துவிடலாம். மலர் மாலையினைத் தலையில் சூடிக்கொள்ளுதல்போல் ஒருவன் படம் எடுத்தாடும் பாம்பினை அணிந்து கொள்ளுதல் இயலும். எனின், மூர்க்கனின் மனத்தைத் திருத்துதலும் திருப்தி செய்தலும் ஒருவராலும் முடியாது (சுலோகம் 3).

2. மணலைப் பிழிந்து ஒருவன் எண்ணெய் எடுப்பது கூட இயலும்; தாகம் எடுத்தவன் கானல் நீரில் கூட தண்ணீர் குடிக்க இயலும்; முயலின் கொம்பினைக் கூட ஓடி ஆடி ஒருவன் பற்றுதல் இயலும்; எனின், மூர்க்கனை ஒருவராலும் திருத்தவோ திருப்தி செய்யவோ இயலாது (சுலோகம் 4).

3. தண்ணீரால் நெருப்பினை அணைக்க முடியும். கதிரவனின் வெப்பத்தினைக் குடையினால் விலக்க முடியும். மதயானையினைக் கூரிய குத்துக்கோலால் அடக்க முடியும். ஒரு காளையினையோ கழுதையினையோ ஒரு கோலால் அடக்க முடியும். மணிமந்திர மருந்துகளால் நஞ்சினைக் கூட நீக்க முடியும். ஒவ்வொரு சீர்கேட்டினையும் செப்பம் செய்வதற்கு நீதிசாத்திரங்களில் நல்ல மருந்து உண்டு. ஆனால், தீம்பரை நல்லவராக்க மருந்து இல்லை (சுலோகம் 10).

*இங்ஙனம் தீயோரின் இயல்பினையும் அவர்களைத் திருத்த இயலாமையினையும் பார்த்துருஹரி பக்குவமாகப் பாடியுள்ளார் நல்லவரின் நட்புறவால் ஒருவன் பெறும் நயங்களையும் நமக்( எடுத்துரைக்கின்றார்.*

சான்றோரின் உறவு மனத்தின் மடிமையினைப் போக்கும்; உண்மையினைப் பேசச் செய்யும்; மரியாதை உணர்வினை உண்டாக்கும்; பாவத்தை விலக்கும்; ஒருவனுடைய மனத்தினைத் தெளிவுறுத்தும்; எத்திசையிலும் புகழைப் பரப்பும் (சுலோகம் 19).

இவ்வாறு பண்பட்ட பேச்சினால் ஒருவன் பெறுப் நன்மைகளையும் விளக்குகிறார்.

ஒரு மனிதனுக்குத் திங்களைப்போல் சுடர்விடும் வளையல் அணியும் கழுத்தணிகலனும் வனப்பு அன்று; நீராடல், வாசம் பூசுதல், மலர் அணிதல், முடிதிருத்தம் (முடிவனப்பு) என்பனவும் ஒருவனுக்கு வனப்பு அன்று. நன்கு பயன்படுத்தப்பட்ட சொல்லுடைமையே ஒருவனுக்கு அழகு தரும், பிற அணிகலன்கள் யாவும் அழியக்கூடியவை; அழியாதது பண்பட்ட பேச்சு என்னும் அணிகலனே ஆகும் (சுலோகம் 15).

இத்தகைய கருத்துக்களைத் தமிழிலக்கியங்களில் நிரம்ப காணலாம். சான்றாக,

*மயிர் வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்*
*உகிர்வனப்பும் காதின் வனப்பும் செயிர் தீர்ந்த*
*பல்லின் வனப்பும் வனப்பல்ல; நூற்கியைந்த*
*சொல்லின் வனப்பே வனப்பு* (35

என்று **காரியாசான்** தாம் பாடிய **சிறுபஞ்சமூலத்தி** பாடியிருத்தலைச் சுட்டலாம். அவர்தம் வகுப்புத் தோழராகி **கணிமேதாவியார்,**

*இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்*
*நடை வனப்பும் நாணின் வனப்பும் - புடைசால்*
*கழுத்தின் வனப்பும் வனப்பல்ல; எண்ணோ(டு)*
*எழுத்தின் வனப்பே வனப்பு* (74

என்று **ஏலாதியில்** பாடியிருத்தலும் நோக்கத்தக்கது இப்புலவர்கள் இருவரும் சமணர்கள். பர்த்துருஹரி பழுத் வேதாந்தி. இவருடைய காலத்திற்கு முற்பட்ட தமிழ்ப் புலவர்களி கருத்துக்களும் வடமொழிவாணரின் கருத்துக்களும் ஒன்றை பார்த்து ஒன்று எழுந்தவை அன்று. கனிந்த சான்றோர் எந்நெறிக் உரியராயினும் அவர்தம் உள்ளத்தில் உதிக்கும் கருத்துக்கள் மனி குலத்திற்கே உரிய பொதுமை வாய்ந்தவை என்பது அறியத்தக்கது

பர்த்துருஹரியின் பாடல்கள் வாழ்வியலுக்குப் பயன் தருவ மேலும் சிலவற்றின் சாரத்தினைக் காண்போம்.

1. மெல்லியலார் எனப்பாடும் கவிஞர்களின் அறிவு விபரீதமானது. இந்திரன் உள்ளிட்டோரையே தன் நயன வலையில் அகப்படுத்தும் பெண்ணை மெல்லியலார் எனக் கூறுதல் எங்ஙனம் பொருந்தும்?

> 2. பெண்ணின் அழகிய விழிகள் மூடியிருக்கும் மட்டுமே ஞானம் என்னும் விளக்கு பிரகாசமாகவும் தெளிவாகவும் எரிகிறது. அதற்குப்பின்னர் (அவள் மூடிய விழியைத் திறப்பின்) அது அணைந்து போகிறது.

*இத்தகைய சிந்தனைகளை முற்றிலுமாக ஏற்கவோ தள்ளவோ இயலா. பட்டினத்தார், பத்திரகிரியார் முதலியோரின் பாடல்களிலும் இத்தகைய எண்ணங்களைக் காணலாம். சமுதாய நோக்கில் அவை மேலும் ஆய்வு செய்தற்குரியவை. பட்டினத்தார் காலத்தில் (கி.பி.1000) வாழ்ந்த பத்திரகிரியார் துளுநாட்டு அரசராக இருந்து துறந்து அவருக்குச் சீடரான ஞானி நீதிசதகம் பாடிய பர்த்துருஹரி இவருக்கு முற்பட்ட காலத்தில் விளங்கியவர். பர்த்துருஹரி மேலும் கூறுகிறார்:*

> துன்பம் வரினும் துயரம் வரினும் சான்றோர் ஒரு நிலையில் நிற்பர். தேயும் திங்கள் முழுமதி ஆதல் உண்டு. மரம் விழினும் அதன் வேர்கள் மீண்டும் துளிர்த்தல் உண்டு.

*இப்பாடலின் கருத்துக்கள் நாலடியாரிலும் வருதல் காணலாம்.*

### VI.3. வைராக்கிய சதகம்

*இந்நூலிலிருந்து சில பாடல்களின் கருத்தினைக் காண்போம்.*

> தரையே துறவிக்குப் படுக்கை, முழங்கையே தலையணை, வானமே கூரை, மேல் காற்றே இதமான தென்றல், துறவே துணைவி, திங்களே சுடர் விளக்கு, இத்தகைய வசதியுடன் ஒரு துறவி அமைதியாகத் தூங்குகிறான்; பெருஞ்செல்வம் படைத்த அரசனைப் போல.

*இதற்குச் சமமான கருத்தமைந்த பட்டினத்தாரின் பாடல்கள் பல உள்ளன. அவற்றுள், 'வீடு நமக்குத் திருவாலங்காடு' எனத் தொடங்கும் பாடல் சுட்டத்தக்கது. இச்சதகத்தில் இடம்பெறும் மற்றொரு பாடலின் பொருளைக் காண்போம்.*

> பருகுவதற்குத் தெளிந்த ஆற்றுநீர் உண்டு. உண்பதற்குப் பழங்கள் உண்டு. உடுத்த மரவுரி உண்டு. படுக்கத் தரை உண்டு. இவை எனக்கு இன்பம் தருவன. செல்வம் எனும் பானத்தைப் பருகி அறிவிழந்த பணக்காரர்களின் முன்பு பணிந்து நிற்கவேண்டிய அவசியம் இல்லை, துறவிக்கு வேந்தன் துரும்பு என்பது பழமொழி.

இங்ஙனம் நிறைவுபெற்ற துறவற நெறியை வைராக்கிய சதகம் வலியுறுத்துகின்றது.

வைராக்கிய சதகத்தில் பொதிந்துள்ள மேலும் சில அரிய சிந்தனைகளை நோக்குவோம்.

முதுமையிலும் ஆசை மனிதனை விடுவதில்லை என்ற கருத்தினைப் பார்த்துருஹரி அழகாகப் பேசுகிறார். **'முகம் திரைவுகளால் (Wrinkles) தாக்கப்பட்டிருக்கிறது. தலையோ சாம்பல் நிறம் கொண்ட முடியுடன் வெண்மை தீட்டப்பட்டுள்ளது. உடல் உறுப்புக்களோ மெலிந்து தளர்ந்து போய்விட்டன, எனினும், ஆசைமட்டும் மீண்டும் இளமையூட்டப்படுகிறது *(8)*'** எனவே, ஆசையினையும் அவாவினையும் முதுமைக் காலத்தில் போக்கிவிடலாம் என்று எண்ணுதல் பிழையாகும். மனப்பயிற்சியானாலும் தற்பண்பாட்டினாலும் (Self-culture) `மட்டுமே புலனைப் பற்றியிருக்கும் ஆசைகளைப் போக்க முடியும் என்று குறிப்புப் பொருள் தோன்றக் கூறுகின்றார்.

> பிரமத்தினைத் தியானித்துக் கொண்டு மலைக் குகைகளில் வாழும் பெரியோர்கள் கொடுத்து வைத்தவர்கள். வாழ்வியலில் சகல சீவராசிகளின் ஒருமையினை உணர்ந்து அஞ்சாமையினையும் சலனமில்லாத அமைதியையும் பெற்ற அவர்களின் மடிகளில் அச்சமின்றிப் பறவைகள் அமர்கின்றன; அவர்கள் தியான முதிர்ச்சியினால் வடிக்கும் ஆனந்தக் கண்ணீர்த் துளிகளைப் பருகுகின்றன. எனினும், நம்மனோர் வாழ்வு நாமே கற்பித்துக் கொண்ட மாடகூடங்களிலும், இன்பச் சோலைகளிலும் புரியும் கேளிக்கைகள், சல்லாபங்களின் தூண்டுதலினால் பின்னடைவு பெறுகிறது.
>
> எரித்துவிடும் என்ற ஞானம் இன்றிப் பூச்சி கொழுந்துவிட்டு எரியும் தீயில் குதித்து விடுகிறது. அறியாமையின் காரணத்தினால் தூண்டிலில் பொருத்தப்பட்ட இரையினை மீன் தின்று முடிந்து விடுகிறது. பகுத்தறிவு இருந்தும் பல்வகை அச்சம்தரும் ஆசைகளை நாம் துறந்தோம் இல்லை, மாயையின் வலிமை என்னே! (18)

உலகில் அச்சத்துடன் கூடிய பொருள்களைப் பார்த்துருஹரி எண்ணிப் பார்க்கிறார்: **"சுகம் அனுபவிக்கும் காலத்தில் நோய்**

வருமோ என்ற அச்சம், சமுதாய மேல்நிலையில் உள்ளபொழுது. நிலைகுலைவு பற்றிய அச்சம். செல்வச் செழுமை நிலையில் பகை மன்னர்கள் பற்றிய அச்சம். மரியாதையும் மதிப்பும் மிக்க நிலையில் தாழ்வுறுதல் பற்றிய அச்சம். அழகாக உள்ள நிலையில் முதுமையின் அச்சம். அறத்தகை நிலையில் தூற்றுவோர் பற்றிய அச்சம். உடம்பில் இறப்புப் பற்றிய அச்சம். இவ்வுலகில் மாந்தர்க்கு உரிய எல்லாப் பொருள்களும் அச்சத்துடன் கூடியவை. ஆதலின், வைராக்கியம் மட்டுமே அஞ்சாமையினைத் தரும்."*(31)*

"மனிதனுக்கு வகுக்கப்பட்ட வாழ்நாள் நூறு ஆண்டு. இதில் பாதி காலம் உறக்கத்தில் போய் விடும். எஞ்சிய ஐம்பது ஆண்டுகளில் பாதி *(25 ஆண்டு)* இளமையிலும் முதுமையிலும் போய் விடும். எஞ்சிய ஆண்டுகள் *(25)* நோய், அழுகை, துன்பம் பொருந்தியதாய் மற்றவர்க்கு உழைப்பதில் போய்விடும். நீர்மேல் குமிழிகள் போல் நிலையில்லாத வாழ்வில் அழியும் மானுடங்களுக்கு இன்பம் எங்கே இருக்க முடியும்?" *(31)*

இப்பாடலின் கருத்தினைத் தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் (கி.பி. 7 ஆம் நூ,) பாசுரத்திலும் பார்க்கலாம். திருமாலை என்னும் பிரபந்தத்தில்,

வேதநூல் பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவ ரேலும்
பாதியும் உறங்கிப் போகும்
நின்றதில் பதினை யாண்டு
பேதைபா லகன தாகும்
பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன்
அரங்கமா நகரு ளானே!

என்று திருவரங்கநாதனை நோக்கி முறையிடுதல் அறியத்தக்கது.

இன்பம் தருவனவற்றையும் பார்த்ருஹரி எண்ணியுள்ளார்,

"திங்களின் தண்கதிர்கள் இன்பம் தருவன. வனங்களின் புற எல்லைகளில் உள்ள பசுமைத் தரைகள் இன்பம் தருவன. ஞானிகளின் கூட்டுறவு இன்பம் தருவது. கவிதை இலக்கியங்களில் வரும் கதைகள் இன்பம் தருவன. தணிந்த கோபத்தில் சொட்டும் கண்ணீர்த் துளிகளில் மிதக்கும் பிரியமுள்ள மனைவியின் முகம் இன்பம் தருவது. எல்லாமே மகிழ்ச்சி தருவன. எனின், பொருள்களின் நிலையாமையினால் மனம் பற்றப்படும்பொழுது எதுவும் இன்பம் தருவது இல்லை," *(79)*

பார்த்துருஹரி சிறந்த சிவபக்தர் (83). எனினும், அரனும் அரியும் ஒருவரே என்ற உணர்வு கொண்டவர் என்பதற்கு வைராக்கிய சதகம் 84 ஆம் பாடல் சான்றாக உள்ளது.

> உலக நாயகன் ஆகிய மகேஸ்வரனுக்கும். உலகின் உள்ளுயிராக (அந்தர் ஆத்மா) உள்ள ஜனார்த்தனனுக்கும் (-திருமால்) பொருளளவில் ஒரு வேறுபாடும் இல்லை. என்றாலும், என் உள்ளம் தருணேந்து சேகரனுக்கே (பிறை சூடியவன்) என் பக்தி பொருந்தியது.

இத்தகைய அபேதச் சிந்தனை முதலாழ்வார் பாடல்களிலும் உண்டு. திருமுறையிலும் காணப்படும், தருணேந்து சேகரன் என்ற சொல்லாட்சி ஒன்பதாம் திருமுறைப் பாடலிலும் பயின்றுள்ளது.

பர்த்துருஹரி காசியில் வாழ்ந்தவர் என்பதற்கு இச்சதகத்தில் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன.

பர்த்துருஹரி சதகத் திரயங்களைப் பின்பற்றி அவர்க்குப் பின் வந்த கவிஞர்கள் பாடிய சதகங்களும் சுட்டுதற்குரியன. ஜனார்த்தனகோசுவாமி என்பார் பாடிய சிருங்கார சதகமும் வைராக்கிய சதகமும் கிடைத்துள்ளன. நீதி சதகம் கிடைக்க வில்லை. தனததேவர் என்பாரும் இம்மூவகைச் சதகங்களும் பாடியுள்ளார்.

## VI.4. அமருசதகம்

பார்த்துருஹரியின் காலத்தினைச் சார்ந்து வாழ்ந்தவர் அமரு என்னும் கவிஞர். காதற் பொருண்மையில் இவர் படைத்துள்ள 100 பாடல்களின் தொகுதி இவர் பெயரால் அமருசதகம் என்று வழங்கியது. இச்சதகத்திலிருந்து ஒரு பாடலின் கருத்தினை மட்டும் இங்கு நோக்குவோம்.

“அப்பாவிப் பெண்ணே! மடப்பத்துடன் காலமெல்லாம் கழிப்பதற்குத் தொடங்கியது ஏன்? உன் அன்புக்குரிய தலைவனிடம் சினம் காட்டு. பொறையினை ஒதுக்கிவை. நேர்மையினை விலக்கிவை.” என்று தோழி கூறினாள். பயமூட்டப்பட்ட முகத்துடன் தலைவி, தோழியை நோக்கிப் பின்வருமாறு பேசுகிறாள்:

> தயவு செய்து மெதுவாகப் பேசு; என் வாழ்வின் நாயகர் என் நெஞ்சில் உறைவதால் உன் பேச்சினைக் கேட்டு விடுவார்!

தன் தலைவனைப் பிராண ஈசுவரன் என்று ஏற்றம் கொடுத்துத் தலைவி கூறுவதாக அமரு பாடியுள்ளார். இப்பாடலின் இறுதிப் பகுதியுடன்,

நெஞ்சத்தர் காத லவராக வெய்துண்டல்

அஞ்சுதும் வேபாக்(கு) அறிந்து

எனவரும் திருக்குறள் ஒரு புடையால் ஒப்பிடத்தக்கது. இத்தகைய ஒத்த பகுதிகள் கவிஞர்களின் கற்பனைகளில் பொதுவாகத் தோன்றுதலை எண்ணி மகிழ்தல் இலக்கியம் கற்பாரின் கடமையாகும். ஒன்றைப்பார்த்து ஒன்று பாடப்பட்டதாக எண்ணுதல் முறையன்று; இயல்பாகவே எழுந்தவை என்று எண்ணுதல் முறையாகும்.

# VII. புராண இலக்கியம்

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களின் கால அளவிற்குத் தொன்மை மிக்க இலக்கிய வகையாகப் புராணம் கருதப்படுகிறது. **புராணம் என்ற சொல்லிற்குப் பழமை, தொன்மை என்பது நேர் பொருள்.** புராணம் என்ற சொல்லினைப் **புராணி, நவீனாம் என்று பிரித்துப் பழைய பொருள் பேசப்படினும் புதுப்பொருள் பொருந்தியது என்று ஒரு விளக்கம் தருதல் உண்டு** (It is though old ever new). மிகப் பழைய காலத்தில் நடந்ததாகக் கருதப்படும் கதையின் விளக்கமாகவும் பழைய நம்பிக்கைகள், மரபுகளைக் கூறுவதாகவும் அமைவது புராணம். இவை தெய்வங்கள், முனிவர்கள், அரசர்கள் பற்றிய புனைவுகளாக இலங்குவன. **இதிகாசத்துடன் புராணத்தையும் இணைத்து ஐந்தாம் வேதமாகச் சாந்தோக்கிய உபநிடதம் (அத்தியாயம் 7, முதற்காண்டம்) சுட்டுகின்றது.** உண்மையான நண்பன் நல்ல அறிவுரையினை உரிமையோடு கூறி நெறிப்படுத்துதல் போல், பழைய கதைகளின் வழியே நீதிகளைச் சொல்லி நன்னெறிப் படுத்துதலின் புராண இதிகாசங்கள் **சுஹ்ருத் சம்மிதை** என்று **பிரதாபருத்ரீயம்** என்ற அணிநூலில் **வித்தியாநாதர்** (கி.பி.13 நூ.) குறித்துள்ளார். இவர் ஆந்திர நாட்டைச் சேர்ந்தவர். (சுஹ்ருத் - நண்பன்) (சம்மிதை - போன்றது) எல்லாப் புராணங்களையும் **வேதவியாசரே தொகுத்துச் செய்தனர் என்பது ஒரு கருத்து.** இவை யாவும் நைமிசாரண்யத்தில் இருந்த முனிபுங்கவர்க்குச் **சூதன்** என்னும் பாடகன் கூறியவை என்பது மற்றொரு கருத்து. இதிகாசங்களிலுள்ள கதைகளிலிருந்து பிற்காலத்தில் நாடகம் உள்ளிட்ட பல்வகை இலக்கியங்கள் தோன்றியிருத்தல் போல், புராணங்களிலிருந்தும் தோன்றியுள்ளன.

## VII.1. புராணத்தின் பொருள் வகை

இதிகாச, புராணங்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்தவர் **ஏ.டி.புசால்கர்.** இவர்தம் Studies in Epics and Puranas of India (Bombay, 1963) என்ற நூலில் புராணங்களின் பொருள்வகை விரிவாக ஆராயப்பெற்றுள்ளது. இந்தியாவின் பண்பாட்டு வரலாற்றுக்குரிய மூலக்கூறுகள் புராண இலக்கியங்களில் பொதிந்துள்ளன. **சமயம், தத்துவம், நாட்டாரியல், இனவியல், இலக்கியவியல், அறிவியல், வரலாறு, நிலவியல், அரசியல், சமூகவியல் பற்றிய கருத்துக்கள் புராணங்களில் இடம் பெற்றுள்ளன.** பர்ஜிடெர் என்னும் அறிஞர்,

**.....taken collectively, the Purāṇas may be described as a popular encyclopaedia of ancient and medieval Hinduism, religious, philosophical, historical, personal, social and political (Ibid, p.22)**

என்று புராணப்பொருள் வகையினைப் புரிந்து கூறியுள்ளார். பழைய சமய, தத்துவ, வரலாற்றுக் கூறுகளையும், சமுதாய அரசியல் கூறுகளையும் புலப்படுத்தும் மக்களின் கலைக்களஞ்சியமாகப் புராண இலக்கியத்தினை பர்ஜிடர் மதிப்பீடு செய்தனர்.

தானம், விரதம், பக்தி, யோகம், சிவபிரானின் சிறப்பு, திருமாலின் அவதார விசேடம் என்பனவும் பல புராணங்களில் பேசப்பட்டன. மருந்தியல், இசை, இலக்கணம், யாப்பியல், பாவியல் (Poetics), அணியியல், நாட்டியவியல், வானியல், சோதிடம், சிற்பவியல், கட்டிடவியல், உலோகச்சிலை இயல், அரசநீதி, நிர்வாகம் முதலிய பல்வேறு பொருட்கூறுகள் பற்றியும் புராணங்கள் பேசுகின்றன. உலகத் தோற்றம் பற்றிய கொள்கையும் சுட்டத்தக்கது. பரம்பொருள் (Brahman), புருடன் (உயிர்), பிரதானம் (பிரகிருதி) என்ற முப்பொருள் பேசப்படுகின்றது. புருடனிலும், பிரதானத்திலும் பிரமம் பிரவேசிக்கும் பொழுது பிரதானத்திலிருந்து (Primordial Matter) மகத் எனப்படும் புத்தி தத்துவம் தோன்றுகிறது. புத்தியிலிருந்து அகங்காரமும், அதிலிருந்து தன் மாத்திரைகள் ஐந்தும், அவற்றிலிருந்து ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஐம்பூதங்களும் தோன்றின என்ற செய்தி புராணங்கள் பலவற்றில் காணப்படுவது. சாங்கியயோகத் தத்துவப் பயிற்சியால் இச்செய்தி கூறப்பட்டிருக்கலாம். இராசதக்குணம் உடைய பிரமன் படைப்புக் கடவுள் என்றும், சத்துவக் குணமுடைய விஷ்ணு காப்புக் கடவுள் என்றும் தமோகுணம் உடைய உருத்திரன் அழிப்புக்கடவுள் என்றும் கூறப்பட்டனர். அழிப்பு என்பது முற்றிலுமாக அழிதல் இல்லை. நிலைமாற்றமே அழிப்பு. அரிசி, சோறு ஆதல் போலவும், சோறு உண்டபின் உடம்பில் தாதுப் பொருளாதல் போலவும் நிலைமாற்றமே அழிப்பு எனப்பட்டது.

யுகம் என்பது மன்வந்தரம் ஆகும். மகாகாலம் என்பது ஆயிரம் ஆண்டுகள் ஆகும். யுகம் நான்கு ஆகும். அவையாவன:

1. கிருதயுகம் 400 ஆயிரம் ஆண்டுகள் (மகாகல்பம்)
2. திரேதாயுகம் 300 ஆயிரம் ஆண்டுகள்
3. துவாபரயுகம் 200 ஆயிரம் ஆண்டுகள்
4. கலியுகம் 100 ஆயிரம் ஆண்டுகள்

பழைய மாந்தர் ஏதோ ஒரு கணித முறைப்படி இவ்வாறு காலங்களைப் பாகுபடுத்தியுள்ள பாங்கினைப் புராணத்தில் காணலாம். இறையனார் களவியல் உரையிலும், பாண்டிய அரசர்கள் சங்கங்களை நிறுவி அரசு புரிந்த ஆண்டுகள் கூடுதலாக (ஆனால் நடைமுறைக்கு ஒத்ததாக)க் கூறப்பட்டிருத்தல் நோக்கத்தக்கது.

திருமாலின் பத்து அவதாரங்களும் மனிதனின் பரிணாம (Evolution) வளர்ச்சியைக் குறிப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

1. மத்ச (மீன்) அவதாரம் நீரில் மட்டும் வாழும் மீன் முதலிய உயிர்களின் தோற்றத்தினைக் குறிப்பது.
2. கூர்ம அவதாரம் நீரிலும் நிலத்திலும் வாழும் ஆமை முதலிய உயிர்களின் தோற்றத்தினைக் குறிப்பது.
3. வராக அவதாரம் நிலத்தில் மட்டும் வாழும் பாலூட்டிகளின் (Mammalian kingdom) பரிணாம வளர்ச்சியைச் சுட்டுவது.
4. நரசிங்க அவதாரம் பாதி விலங்கு பாதி மனிதன் என்ற நிலையினைச் சுட்டுவது.
5. வாமன அவதாரம் குறளனாக மனிதன் தோன்றியதைக் குறிக்கும்.
6. விக்கிரம அவதாரம் நெடியோனாக உயர்ந்தமையினைச் சுட்டும்.
7. பரசுராமன் ஆவேச மனிதனின் தோற்றத்தினை உணர்த்தும்.
8, 9, 10. பலராமன், இராமன், கண்ணன் அவதாரங்கள் பூரணத்துவம் பொருந்திய மனிதனின் முழுமைத் தன்மையினைப் புலப்படுத்தும். சில புராணங்களில் கபில முனி, புத்தர், மகாவீரர் உள்ளிட்ட ஆன்றோர் பலரும் திருமாலின் அவதாரமாகக் கூறப் பெற்றுள்ளனர். பாகவத புராணத்தில் ஆழ்வார் பன்னிருவர் வரலாறும் கூறப்பட்டது. அப்பகுதி பிற்சேர்க்கையாகத் தோன்றுகிறது.

## VII.2. புராணங்களில் வரலாற்றுக் குறிப்புக்கள்

சுமித் (Smith), ஜெயஸ்வால், பண்டார்கர், வி.ஆர்.இராமச்சந்திர தீட்சிதர், அட்லேகர், பர்ஜிடெர், புசால்கர் முதலிய சரித்திர ஆராய்ச்சியாளர்கள் புராணங்களில் பொதிந்துள்ள வரலாற்றுக் கூறுகளை வெளிப்படுத்தியுள்ளனர். சுவர்ணத்தீபம், நைல் நதி பற்றிய அயல் தேசக் குறிப்புக்களும் புராணத்தில் உள்ளன. மத்ச புராணத்தில் ஆந்திர அரசர்களின் வரலாறும், விஷ்ணு புராணத்தில் மௌரிய அரசர்களின் வரலாறும், வாயு புராணத்தில் குப்தர் காலம் வரை அரசாண்ட மன்னர்களின் வரலாறும் கூறப்பெற்றுள்ளன. பழங்கால இந்திய வரலாற்றினை

எழுதுதற்குரிய மூலங்களில் புராணத்திற்கும் இடம் உண்டு. புராணங்கள் இதிகாச கால அளவுக்குப் பழமை கொண்டது என்றாலும், குப்தர் காலத்தில் (கி.பி.5 நூ.) அவை இறுதி வடிவம் பெற்றன என்று எண்ணுதல் பொருந்தும்.

மகாபுராணங்கள், உபபுராணங்கள் என்ற பாகுபாடும் உண்டு. பொதுவாகப் புராணம் ஐந்துவகைக் கூறுகளைக் கொண்டிருக்கும். இவற்றை பஞ்சவித லட்சணம் என்று கூறுதல் வழக்கம். அவையாவன: 1. சருக்கம், 2. பிரதி சருக்கம், 3. மன்வந்தரம், 4. வமிசம் அல்லது மரபு, 5. வமிசானுசரிதம், இவை முறையே 1. உலகத்தோற்றம், 2. உலக ஒடுக்கம், 3. தேவர், அசுரர், முனிவர், அரசர் மரபு கூறுதல், 4. மனுவாதிகளின் கால அளவு, யுகங்கள் முலியன. 5. சூரிய, சந்திர வமிசத்து அரசர்களின் வரலாறுகள் என்பனவற்றைக் குறிப்பன. இவ்வாறு விஷ்ணு, வாயு, மத்ச புராணங்களிலும் அமரகோச நிகண்டிலும் கூறப்பெற்றன.

மகாபாரதத்தில் பதினெட்டுப் புராணங்கள் இருந்தன என்ற செய்தி சுட்டப்பட்டுள்ளது. இவை மகாபுராணங்கள் ஆகும். அவையாவன: 1. பிரமம், 2. பதுமம், 3. வைணவம், 4. சைவம், 5. பாகவதம், 6. நாரதீயம், 7. மார்க்கண்டேயம், 8. ஆக்கினேயம், 9. பவிஷ்யம், 10. பிரமவைவர்த்தம், 11. இலிங்கம், 12. வராகம், 13. ஸ்காந்தம், 14. வாமனம், 15. கூர்மம், 16. மத்சம், 17. கருடம், 18. பிரமாண்டம் என்பன. இவற்றுள் சிவனை முதன்மைப்படுத்துவன பத்துப் புராணங்கள் ஆகும். வைணவம், பாகவதம், நாரதீயம், கருடம் என்ற நான்கு புராணங்கள் திருமாலையும் பிரமம், பதுமம் என்ற இரண்டு புராணங்கள் நான்முகனையும் முதன்மைப்படுத்துவன, ஆக்கினேய புராணம் சூரியனையும், பிரம வைவர்த்த புராணம் அக்கினியையும் சிறப்பித்துக் கூறுவன.

இதிகாசங்களின் காலத்திற்குப் புராணங்கள் முற்பட்டவையாக எண்ணப்பெறினும் இப்போது கிடைத்துள்ள வடிவத்தில் இவை இதிகாசங்களுக்குப் பிறகுதான் உருப்பெற்றன என்பர் ஆராய்ச்சி அறிஞர். ஆதலின் இப்புராணங்கள் இவற்றில் சுட்டப்பெறும் வேந்தர்களின் காலத்தை ஒட்டி இறுதி வடிவம் எய்தின என்று எண்ணுதல் சாலும். புராணங்களில் ஒன்பான் சுவைகளும், உவமை, உருவகம் முதலிய அணிகளும் இயற்கைப் புனைவுகளும் இடம்பெறுதலின் இலக்கியப்பாங்கு அவற்றில் காணப்படுதலை வடமொழி வாணர்கள் சுட்டிக்காட்டுவர்.

மகாபுராணங்களை ஒட்டியே உபபுராணங்கள் தோன்றின என்று சூதசங்கிதையின் முதல் இயல் சுட்டுகின்றது. இவற்றின்

எண்ணிக்கையும் 18 என்று இந்நூல் கூறுகின்றது. இவற்றை எழுதிய முனிவர்களின் பெயரினால் இவை பெரிதும் வழங்கப்படுகின்றன. சனற்குமாரர் என்ற முனிவரால் இயற்றப்பட்டது சனற்குமார புராணம் எனப்படும். அவ்வாறே நாரத முனிவர் செய்தது நாரத புராணம் எனப்பெயர் பெற்றது. பிறவற்றுள் பலவும் வியாசமுனிவர் எழுதியவை என்பது ஒரு பொதுக்கருத்து. இவற்றுள் பல அச்சில் வரவில்லை. **தமிழில் அதிவீரராம பாண்டியனால் (கி.பி.16 நூ.) பாடப்பெற்ற கூர்ம புராணத்தில் பதினெட்டு உபபுராணங்களின் பெயர்கள் தொகுத்துக் கூறப்பெற்றுள்ளன.** அவையாவன:

1. சனற்குமார புராணம்
2. நரசிங்க புராணம்
3. துருவாச புராணம்
4. சிவதருமோத்திரம்
5. நாரதீயம்
6. காபிலம்
7. மானவ புராணம்
8. வவுசனம்
9. வாசிட்டலைங்கம்
10. வருணபுராணம்
11. காளிகம்
12. சாம்பேசம்
13. சவுமிய புராணம்
14. அங்கிரபுராணம்
15. சவுரபுராணம்
16. பராசர புராணம்
17. மாரீசபுராணம்
18. பார்க்கவ புராணம்

மகாபுராணங்கள், உபபுராணங்கள் ஆகியவற்றின் பெயர்களைக் கி.பி.9ஆம் நூற்றாண்டில் தமிழில் எழுதப்பட்ட திவாகர நிகண்டு தொகுத்துரைக்கிறது. கி.பி.7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் பதினெண்புராணங்களைக் குறித்துள்ளமையால், இவற்றுள் பலவும் தமிழகத்தில் சங்கம் மருவிய காலத்தில் அறிமுகமாயிருந்தன என்று உய்த்துணர்தற்கு இடம் உண்டு. எனின், சங்க இலக்கியத்தில் புராணக் கதைகள் சில வருதலின் அவற்றின் தொன்மை துணியப்படும்.

# VIII. கதை இலக்கியம்

பொழுது போக்கிற்காக மட்டுமன்றி மக்களுக்கு நீதிகளையும் உலகியல் உண்மைகளையும் கற்பிக்கும் நோக்கில் வடமொழியில் கதை இலக்கிங்கள் தோன்றியுள்ளன. இவற்றுக்கு முன்னோடியாக வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்களில் இடம்பெறும் கதைக் குறிப்புக்களும், உருவகங்களும் காணப்படுகின்றன. **வேள்வியில் உரக்க மந்திரங்களை ஓதும் அந்தணர்களுக்குக் கத்தும் தவளைகளை உவமை சொல்லியிருத்தல் இருக்கு வேதத்தில் காணலாம் (VI.103).** இவ்வகையில் மனிதனுக்கும் விலங்குக்கும் இயைபு உண்டாக்குதல் உபநிடதங்களிலும் காணப்படுகிறது. தங்கள் உணவுக்காக ஊளையிடுதற்குரிய ஒரு தலைவனைத் தேடுகிற நாயைப் பற்றிய அங்கதமும், இரு நாரைகளின் பேச்சும், சிறுவன் சத்யகாமனுக்கு எருதும் நாரையும் புரியும் உபதேசமும் சாந்தோக்கிய உபநிடதத்தில் காணலாம் (I.-12; IV-1, 5.71).

மகாபாரதத்தில் பல விலங்குக் கதைகள் இடம்பெற்றன. பஞ்சதந்திரத்திற்கு உரிய பல மூலகங்கள் இந்த இதிகாசத்தில் உள்ளன. கூர்த்த மதி படைத்த நரி, தன் நண்பர்களாகிய எலி, கீரி, ஓநாய் ஆகியவற்றின் உதவியுடன் பெற்ற பொருளில் அவற்றுக்குப் பங்கு கொடுக்காமல் ஏமாற்றியதுபோல, பாண்டவர்களும் நடத்தப்பட வேண்டும் என்ற கௌரவரின் எண்ணத்தில் பஞ்சதந்திரக் கதைக்குரிய கூறுகள் பொதிந்துள்ளன.

**வடமொழியில் தோன்றிய கதை இலக்கியங்களில் பஞ்சதந்திரம் முதன்முதலில் சுட்டுதற்கு உரியது.** நீதி சாத்திரம், அர்த்த சாத்திரம் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள கருத்துக்களை விளக்கவும் இக்கதை இலக்கியம் முற்பட்டுள்ளது. பெரும்பாலும் அரச குமாரர்களுக்கு அரசநீதியையும் உலகியல் நிலையினையும் போதித்தலைக் குறிக்கோளாகக் கொண்டு பஞ்சதந்திரம் படைக்கப்பட்டது. ஆயினும், ஏனையோர்க்கும் இக்கதைகள் அரிய உண்மைகளைச் சுவை குன்றாமல் சொல்லவல்லன.

**பஞ்சதந்திரம் கி.பி. ஆறாம் நூற்றாண்டிலேயே பஹ்லவி, சிரியன், அரபு மொழிகளில் ஆக்கம் செய்யப்பெற்றதுடன் கிரேக்கத்திலும் சென்றுள்ளது. எனவே, அதன் தொன்மை புலனாகும். நேபாள மொழியிலும், திராவிட மொழிகளிலும் இவ்விலக்கியம் பரவியுள்ளது.**

## VIII.1. பஞ்சதந்திரம் – அமைப்பும் சிறப்பும்

பஞ்ச என்ற சொல்லிற்கு ஐந்து என்பது பொருள். தந்திரம் என்பதற்கு இருபொருள் உண்டு: 1. நூல், 2. சூழ்ச்சி. எனவே **ஐந்து வகையான சூழ்ச்சிகளைக் கூறும் நூல் பஞ்சதந்திரம் என்று அழைக்கப்பட்டது**. இதனை ஒருவர் எழுதினார் என்று கருதுதற்கு இல்லை. வாய்மொழியாக வழங்கிவந்த கதைகள் காலம்தோறும் பல புதிய கூறுகளையும் இணைத்துக் கொண்டு வளர்ச்சி பெற்றுள்ளது. இதன் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு ஆகும் என்பது வடமொழி இலக்கிய வரலாற்றறிஞர்கள் பலரின் கருத்தாகும்.

பஞ்சதந்திரங்கள் ஆவன: **1. மித்திரபேதம், 2. மித்திரலாபம் அல்லது சுகிர்லாபம். 3. சந்திவிக்கிரகம், 4. அர்த்தநாசம், 5. அசம்பிரேட்சிய காரித்துவம்**. இவற்றுள், **மித்திரபேதக் கதைகள்** நண்பர்களாக இருப்பவர்களுக்கு இடையே சூழ்ச்சியினால் பகைமையினை விதைத்துப் பிரிப்பது பற்றிப் புனையப் பகைமையினை விதைத்துப் பிரிப்பது பற்றிப் புனையப்பெற்றவை. இது அரசியலுக்கு மிகவும் தேவை. ஒருவன் தன் வலிமையினைப் பெருக்கிக்கொள்வது எப்படி என்பதை மித்திரபேதக் கதைகள் எடுத்துரைப்பன. **மித்திரலாபக் கதைகள்** வலிமை மிக்கவர்களைத் தனக்கு நண்பர்களாக ஆக்கிக் கொள்வதைக் கூறுவன. **சந்திவிக்கிரகக் கதைகள்** பகைவனுடன் பழகி அவனைக் கெடுப்பது பற்றிய கற்பனையாக அமைந்திருப்பவை. நான்காம் பிரிவாகிய **அர்த்தநாசக் கதைகள்** பகைவரின் செல்வத்தை அழிப்பதற்கு வழிகாட்டுவன. ஐந்தாம் பாகமாகிய **அசம்பிரேட்சிய காரித்துவக் கதைகள்** ஆராயாது செயல்புரிவதால் வரும் கேடுகளைச் சுட்டிக்காட்டுவன.

**இந்த ஐந்தாம் பாகத்துக்குரிய ஒரு கதை பற்றிய குறிப்பு சிலப்பதிகாரத்திலும் அடியார்க்கு நல்லார் உரையிலும் காணப்படுகிறது**. காப்பியத் தலைவன் ஆகிய கோவலனுடன் இக்கதையினை இளங்கோ அடிகள் தொடர்பு படுத்தி ஒரு கற்பனை புனைந்துள்ளார். அதனை இங்குக் காண்போம்.

பூம்புகார் நகரில் ஒரு பார்ப்பனத்தி கீரிப்பிள்ளை வளர்த்தாள். அதனைத் தன் பிள்ளையினைக் காத்திருக்கச் செய்துவிட்டுத் தான் வேறு வேலையாக வெளிப்புறம் சென்றாள். ஒரு பாம்பு அந்தப் பிள்ளையை அணுகியது. அதனைக் கௌவித்துணித்த குருதி வாயுடன் கீரி அவள் வரவினை எதிர்நோக்கி இருந்தது. உண்மையினை ஆராயாமல் அக்கீரிதான் தன் பிள்ளையினைக் கொன்றுவிட்டதாகக் கருதி அப்பார்ப்பனத்தி தன் கையில் இருந்த

மணைக் கட்டையால் கீரியைப் புடைக்க அது மரித்தது. அவள் செய்த கொலைப் பாவத்தினைத் தீர்க்கும் பொருட்டு வடநாட்டுக்குப் புறப்பட்டு (கங்கை நீரில் ஆடிக்) கழுவாய் தேடும்பொருட்டு அவள் கணவன் அகன்றான். அவனைத் தொடர்ந்து சென்ற மனைவியை இகழ்ந்து 'கொலைப்பாவம் புரிந்துள்ள உன்னுடன் மனையறம் புரியும் வாழ்க்கையினை வேண்டேன்' என்று கூறினான். வடமொழி வாசகம் ஒன்றினை மட்டும் ஓர் ஏட்டில் எழுதிக் கொடுத்து இதன் பொருளைப் புரிந்துகொள்ளுபவரிடம் காண்பித்து (பிழைத்துக் கொள்) என்று நீங்கினான். தான் செய்த கருமத்தினைக் கழித்துப் புண்ணிய பலனைப் பெறுவீர் எனக் கூறியபடியே பெருங்குடி வணிகர்கள் வாழும் மாட வீதியில் மனைதோறும் போய் உதவி கேட்டாள். அவள் நிலைக்கு இரங்கிய கோவலன் அவள் நீட்டிய ஓலையினை வாங்கி அதில் உள்ள வடமொழி வாசகத்தினைப் படித்து, **"அஞ்சாதே உன் அரிய துயரைக் களைவேன்"** என்று ஆறுதல் சொல்லி, அந்தணரின் வேத விதிப்படி பாப பரிகாரமாகத் தானம் பல செய்து அவள் துயரினைப் போக்கிக் கானகம் சென்ற கணவனைக் கூட்டி வந்து இருவரையும் இணைத்துவைத்துப் பெரும் செல்வமும் கொடுத்து நல்வழிப்படுத்தி இல்லறம் புரியச் செய்தான் *(15.54-75)*.

அடியார்க்கு நல்லார், 'வடமொழி - ஆரியம், வாசகம் - கவி; ஆவது:

apariksya na kartavyam, kartavyam suparīkṣitam|
pascād bhavati santāpam, brāhmaṇi nakulam yathā||

என்பது' என்று பஞ்சதந்திரப் பாடலை உரையில் கொடுத்துள்ளார். இதன் பொருள்:

> **நன்றாக ஆராயாமல் எதையும் செய்யற்க; நன்றாக ஆராய்ந்த பின்னரே எதையும் செய்க. (ஆராயாமல் செய்தால்) பின்பு மனத்துன்பம் உண்டாகிறது. பிராமணி கீரிப்பிள்ளை (கதையைப்)போல.**

**கோவலனின் இரக்க உணர்வையும் கொடைக் குணத்தையும் கற்பனை நலம் சிறக்கப் படைக்க முற்பட்ட இளங்கோ ஒரு பஞ்சதந்திரக் கதையினைப் பக்குவமாகப் பயன்படுத்தியுள்ளார் என்பது அடியார்க்கு நல்லார் காட்டிய மேற்கோள் பாடலால் அறியலாம். கி.மு. முதல் நூற்றாண்டில் தோன்றிய இக்கதையினைப் பயன்படுத்தியிருப்பதால். இளங்கோவடிகளின் காலம் இதற்கு ஓரிரு நூற்றாண்டுகட்குப் பின்னரே இருத்தல் வேண்டும் எனத் துணியலாம்.**

பஞ்ச தந்திரம் என்னும் கதை இலக்கியம் சுருக்கியும் பெருக்கியும் பலரால் புனையப்பெற்றுள்ளன. அவற்றுள் **இதோபதேசம்** (Hitopadesa) என்ற பெயரில் **விஷ்ணுசர்மன்** எழுதியது சுட்டுதற்குரியது. **நாராயணன்** என்பாரும் இப்பெயரில் எழுதியுள்ளார். பஞ்சதந்திரத்தின் மற்றொரு வடிவில் **தந்திராக்கியாயிகா** அல்லது **தந்திரக்கியானம்** என்ற நூல் விளங்குகிறது.

பஞ்சதந்திரத்தினைத் தவிர வேறு சில கதை இலக்கிங்களையும் காண்போம்.

## VIII.2. பிருகத்கதா [– பெருங்கதை]

பிருகத் - பெரிய என்பது பொருள்; கதா - கதை ஆதலின், கொங்குவேளிர் **பெருங்கதை** என்றே பிருகத்கதாவினை வழங்கினார். பஞ்ச தந்திரக் கதைக்கு ஒப்பாகவே தொன்மையும் சுவையும் போதனையும் மிக்கது பிருகத்கதா. கி.மு.2ஆம் நூற்றாண்டில் **குணாட்டியர்** என்னும் கவிஞர் பண்டு தொட்டு வழங்கி வந்த பிருகத்காதவினைத் தொகுத்து இலக்கிய வடிவம் கொடுத்தார் என்பது ஆராய்ச்சி அறிஞரின் துணிபு.

**இராமாயணம், மகாபாரதத்திற்கு இணையாகப் பிருகத்கதா ஒரு இதிகாசம்போல் போற்றப்பட்டுள்ளது**. மறைந்து போன இலக்கியங்களில் குணாட்டியரின் பிருகத்கதாவும் ஒன்றாகும். இக்கதையின் தோற்றத்திற்கு ஒரு பழைய கதை கூறப்படுகிறது. புதிதாக ஒரு கதை கூறும்படி பார்வதி தேவி சிவனிடம் ஒரு நாள் கேட்டனள். அவளுக்குச் சிவன் கூறிய கதையே பிருகத் கதை. சிவகணத்தில் ஒருவனாகிய **புட்பதந்தன்** மறைந்திருந்து அக்கதையினைக் கேட்டுத் தன் மனைவி ஜயாவுக்குக் கூறினான். அதனை அவள் பார்வதிக்குத் திரும்பக் கூறினாள். சீற்றம் உற்ற பார்வதி சிவகணத்தில் இருக்கும் தகுதியைப் புட்பதந்தன் இழக்கும்படி சபித்தாள். அவன் வேண்டவும் சாபவிமோசனமும் கூறினாள். முன்பே சபிக்கப் பட்ட இயக்கன் ஒருவனைச் சந்தித்து, தான் மறைவில் கேட்ட பிருகத்கதாவினைக் கூறிவிடின் சாபம் நீங்கி மீண்டும் சிவகணத்தினை அடையலாம் என்றாள் பார்வதி. புட்பதந்தனுக்காக இடையிட்டுப் பேசிய **மாலியவந்து** என்னும் அவன் நண்பனும் பார்வதியால் சபிக்கப்பட்டான். காணபூதியைக் கண்டு இக்கதையினைச் செவியுற்றுப் பாபம் விமோசனமாகி மீண்டும் வானக வாழ்வு பெறவும் ஆணையிட்டிருந்தாள்.

கோசாம்பி என்னும் நகரில் புட்பதந்தன் வரருசி - காத்தியாயனராக அவதாரம் எடுத்தான். நந்த அரசனுக்கு

அமைச்சரானான். இறுதி நாளில் விந்தியமலைக்குச் சென்றான். காணபூதியைக் கண்டான். வித்தியாதரர்களாகிய பேரரசர் எழுவரைப் பற்றிய கதையினை அவனுக்குக் கூறினான். சாபத்தினின்றும் விடுதலை பெற்றான். மாலியவந்து என்பான் கோதாவரி நதிக்கரையில் பிரதிட்டானம் என்ற நகரில் குணாட்டியராகப் பிறவி எடுத்தான். சாதவாகன அரசனுக்குக் குணாட்டியர் சார்பாக இருந்தார். ஆறு ஆண்டுகளில் அவனுக்குச் சமற்கிருத மொழியைக் கற்றுக் கொடுப்பதாகக் கூறினார். அதனைக் கேட்ட **காதந்திரம்** எழுதிய **சர்வவர்மன்** நகைத்தார். குணாட்டியர் சமற்கிருதம், பிராகிருதம், வட்டார மொழி எதனையும் பயன்படுத்தவில்லை எனச் சூளுரைத்தால், தான் ஆறு மாதங்களில் வடமொழியைச் சாதவாகனனுக்குக் கற்பிப்பதாகப் பந்தயம் கூறுகிறார். இதற்கு உடன்பட்ட குணாட்டியர் மன அமைதியின்றி விந்தியமலையில் திரிந்தார். வரருசியிடமிருந்து (- புட்பதந்தனின் மறு அவதாரம்) தான் கற்றுக்கொண்ட கதைகளைக் காணபூதி குணாட்டியர்க்கு எடுத்துச் சொல்லினான். சமற்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளைப் பயன்படுத்தக் கூடாது என்று சர்வவர்மனிடம் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி **குணாட்டியர் பூதங்களுக்குரிய பைசாச மொழியில் எழுதினார்**. அவருடைய சீடர்கள் சாதவாகனனிடம் இப்பெரிய கதையினைக் கொண்டு சென்றனர். அதனை அவன் ஏற்கவில்லை. குணாட்டியர் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இக்கதையினைக் கூறிவிட்டு போகிற வழியில் மூலச்சுவடியை எரித்துவிட்டார். இதன் விளைவாக, அந்த இனிய கவிதைக் கதையை எண்ணி எண்ணி விலங்குகள் மெலிந்து போயின; அரண்மனையின் அட்டிற் சாலையில் உள்ள சமையல்காரர்கள் சுவையான சாற்றினை பரிமாறவில்லை. **மூல நூலில் இருந்த ஏழு லட்சம் பாடல்களில் ஏழில் ஒரு பாகத்தினைக் காப்பாற்றிய கதையே பிருகத்கதாவில் பேணி வைக்கப்பட்டுள்ளது என்பர்.**

வத்சராசன் ஆகிய உதயணனின் கதையினை உள்ளடக்கிய தாய்ப் பல்வேறு அரசர்கள், இளவரசர்கள், அரசப் பெருந்தேவிகள், இளவரசிகள், அமைச்சர்கள், வீரர்கள் பற்றிய அரிய கதைக் கருவூலமாகத் திகழ்கிறது பிருகத்கதா. உதயணனின் வீரதீரச் செயல்கள், காதல் விளையாட்டுக்கள், கந்தர்வர், வித்தியாதரர் ஆகியோர் மண்ணகத்தாருடன் கொண்ட தொடர்பு முதலியன அற்புதமாகப் புனையப்பெற்றிருத்தல் சுட்டத்தக்கது.

பிருகத்கதா வேறு வேறு வடிவங்களில் பலராலும் புனையப்பட்டுள்ளது. அவற்றுள் நேபாள மகாத்மியமும் ஒன்றாகும்.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த **பாணகவி, சுபந்து** ஆகியோரும் கி.பி.8ஆம் நூற்றாண்டினராகிய **தண்டியும்** பிருகத்கதாவினைக் குறிப்பிட்டுள்ளனர். காசுமீரக் கவிஞர்களும் பிருகத்கதாவினைத் தழுவி இலக்கியம் படைத்துள்ளனர். க்ஷேமேந்திரர் (கி.பி.11நூ.) **பிருகத்கதா மஞ்சரி** எழுதினார். ஹேமசந்திரர் உரைநடையில் இக்கதையினை வழங்கினார்.

புத்தசுவாமி என்பார் பிருகத்கதாவினைச் சுருக்கிப் **பிருகத்கதா சுலோகசங்கிரகம்** வரைந்தனர். சோமதேவர் (கி.பி.11நூ.) **கதாசரிதசாகரம்** இயற்றினார். **கி.பி. 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டில் கொங்குவேளிர் தமிழில் ஆறு காண்டங்களிலும் 100 காதைகளிலும் உதயணன் கதையினைப் பெருங்காப்பியமாகப் பாடியுள்ளார்.** இதனால் இதனைப் **பெருங்கதை** என்றே வழங்குவர். இவனைப் பற்றிய **வச்சத்தொள்ளாயிரம்** என்ற தமிழ் இலக்கியம் மறைந்துபோயிற்று. கூடக்குறைய இதே காலத்தில் **துர்விநீதன்** என்ற கங்க அரசன் வடமொழியில் பிருகத்கதாவினைப் பாடியுள்ளான் என்பதும் இங்குச் சுட்டுதற்குரியது.

## VIII.3. விக்கிரமார்க்க சரிதம்

இது ஒரு கதைத் தொகுதி. இதற்குச் **சிம்மாசன துவாத்திரிம்சிகா** என்ற பெயரும் உண்டு. துவாத்திரிம்சிகா - 32. இதனுள் 32 கதைகள் அடங்கியுள்ளன. இக்கதையின் தொடக்கம் விநோதமாக இருக்கிறது. இந்திரன் விக்கிரமாதித்தனுக்குச் சிம்மாசனத்தை வழங்கினான். சாலியவாகனன் என்னும் அரசன் அவனோடு போர் தொடுத்துத் தோற்கடித்து அவனையும் கொன்றபின், அவன் சிம்மாசனம் மண்ணில் புதைக்கப்பட்டது. போசராசன் எதேச்சையாகப் பூமியைத் தோண்டி அதனைக் கண்டெடுத்தான். அச்சிம்மாசனத்தில் அமர்ந்துகொண்டபொழுது அதில் செதுக்கியிருந்த சிலைகளாகிய கன்னிப் பெண்கள் உயிர் பெற்றெழுந்து விக்கிரமாதித்தனின் புகழினைப் போசராசனுக்கு எடுத்துக்கூறி, விடுதலையும் பெற்றனர் என்பது இக்கதைத் தொகுதியின் அறிமுகமாக அமைந்துள்ளது. **க்ஷேமேந்திரர், சித்தசேன திவாகரர், வரருசி** என்பார் பெயரிலும் விக்கிரமாதித்தன் கதைகள் வழங்கி வருகின்றன. தமிழிலும் ஏனைய திராவிட மொழிகளிலும் இவை மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## VIII.4. சுகசப்ததிகதா

இத்தொகுப்பில் 70 தந்திரக்கதைகள் அடங்கியுள்ளன. சுகம் என்ற சொல்லிற்குக் கிளி என்பது பொருள். சப்ததி - எழுபது. நாரதர் கிளி உருக்கொண்டு தேவசபையில் இந்திரனுக்கு இக்கதைகளைக்

கூறியதாகச் சொல்லப்படுகிறது. மேலும், இக்கதைகளைக் கேட்பவர்கள் வாழ்க்கைப் பயன்களை நிறைவாக அடைவார்கள் என்று பலனும் சொல்லப்பட்டுள்ளது. இந்நூலினைச் **சிந்தாமணிப்பட்டர்** எழுதியதாகச் சிலர் கருதுவர்.

தேவதாசன் ஒரு கிளி வளர்த்தான். அரசன் அவன் மனைவியைக் கூடவேண்டும் என்ற கருத்தினால் அவனைத் தூர தேசத்திற்கு அனுப்பிவைத்தான். செல்லுதற்குமுன் தேவதாசன் குடும்ப பாரத்தை அவன் வளர்த்த கிளியிடம் ஒப்படைத் திருந்தான். அந்தக்கிளி ஒவ்வோர் இரவும் ஒவ்வொரு கதையினை அவன் மனைவிக்கு விடியும்வரை சொல்லி வந்தது. அவளும் ஆர்வமாகக் கேட்டுவந்தாள். எழுபதாவது கதை சொல்லி முடிக்கும் விடியல் வேளையில் அவள் கணவன் தேவதாசன் திரும்பி வந்தான். அரசன் எண்ணம் ஈடேறவில்லை. எல்லாம் இனிதாக முடிந்தது என்று கதை நிறைவுகிறது.

## VIII.5. வேதாள பஞ்சவிம்சதி

இதனுள் **வேதாளத்தின் கதைகள்** பொதிந்துள்ளன. தம் பாடல்களில் இக்கதைகளை **க்ஷேமேந்திரரும் சோமதேவரும்** எடுத்துக் **கூறியுள்ளனர். சிவதாசர், ஜம்பலதத்தர், வல்லபதாசச், வேங்கடபட்டர்** என்பார் இக்கதைகளை வேறு வேறு வகையில் கூறியுள்ளனர். நாட்டுப்புறக் கதையின் பாங்கில் இவை அமைந்துள்ளன. இதன் மையக் கதையின் அமைப்பினைச் சுருக்கமாகக் காண்போம்.

விக்கிரமசேனனிடம் (- விக்கிரமாதித்தன்) ஒவ்வொரு நாளும் ஒரு முனிவர் மாணிக்கக்கல் உள்ளே மறைக்கப்பட்ட கனி ஒன்றினைக் கொண்டுவந்து கொடுக்கிறார். அம்முனிவரின் வேண்டுகோளின்படி ஒரு மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் பிணத்தினை மந்திரச்செயல் புரிவதற்காகக் கொண்டு வந்து தருவதற்கு விக்கிரமசேனன் உடன்படுகிறான். எனினும், முன்பே ஒரு வேதாளம் (-பேய்) அந்தப் பிணத்தைப் பற்றிக் கொண்டுள்ளது. தன் வினாக்களுக்கு அரசன் விடை கூறினால், அப்பிணத்தை விட்டுச் செல்வதாக வேதாளம் பேசுகிறது. புதிர்க்கதையினை ஒன்றன்பின் ஒன்றாக இருபத்தைந்து முறை கூறிப் புதிரை விடுவிக்கும்படி அவனிடம் கேட்கிறது.. அரசனின் மௌன விரதத்தினால் அப்பிணத்தைப் பெற வேண்டும் என்ற நிலையினைச் சிதற அடிக்கிறது வேதாளம். புதிர்கள் எளிதில் தீர்வு காண்பதற்கு உரியன அல்ல. சில புதிர்களைப் பார்ப்போம்.

சுவையுணர்வு கொள்வதில் மிகவும் தேர்ந்தவன் யார்? என்று மூன்று வகையான மனிதர்களை வேதாளம் வரிசைப்படுத்திக் கேட்கிறது:

1. சுடுகாட்டுப் பக்கத்தில் உள்ள வயலில் விளைந்த நெல்லின் அரிசியால் தயாரிக்கப்பட்ட உணவு என்பதைக் கூர்த்த நுகர்புலனால் அறிந்துகொண்டு அந்த உணவைத் தொடாமல் இருப்பவனா?

2. தெய்வீகமானதும் மென்மையானதும் ஆகிய படுக்கையில் உள்ள விரிப்பின்கீழே ஒரு முடி இருப்பதை நுண்புலனால் அறிந்துகொண்டு அந்த மெத்தையில் படுக்காமல் இருப்பவனா?

3. குழவிப் பருவத்தில் செம்மறி ஆட்டுப் பாலைக் குடித்து வளர்ந்த ஒரு பெண்ணினை, அந்த ஆட்டின் முடை நாற்றம் அவள்மேல் அடிப்பதை நுண்புலனால் உணர்ந்து அவளைத் தீண்டாமல் இருப்பவனா?

இம்மூன்று வகையான மனிதருமே ஒப்ப வல்லவர்கள். எனினும், இவருள் மிக்க திறமைசாலி யார்? என்பது வினா.

பின்வரும் மூவகையருள் யார் நனி சிறந்த காதலன்?

1. இறந்த பெண்ணின் உடலோடு உடன்கட்டை ஏறி உயிர் துறப்பவனா?

2. சுடுகாட்டின் பக்கத்தில் ஒரு சிறு குடில் அமைத்துக் காலம் முழுவதும் துயரத்தில் கழிப்பவனா?

3. தற்செயலாகக் கிடைத்த மந்திர சக்தியால் இறந்த பெண்ணினை உயிர்த்தெழச் செய்பவனா?

தொல்காப்பியம், புறநானூறு உள்ளிட்ட பழைய தமிழ்ப் பனுவல்களில் பெண்தான் உடன்கட்டை ஏறுதல் சொல்லப்பட்டது. இங்கு, ஆணும் உடன்கட்டை ஏறும் குறிப்பு போற்றுதலுக்குரிய ஒரு புதுமையாக அன்றோ உள்ளது! கைம்மை நோன்பிருக்கும் பெண்ணிற்கு மாறாக, அந்த விரதத்தினைக் கடைப்பிடிக்கும் மனிதனின் மேதக்க அன்பினைக் காண்கிறோம்.

இந்த நூலில் இப்படிப் பல கேள்விகள் புதிர்களாகப் போடப்பட்டுள்ளன. கள்வன் ஒருவனின் மகனை அந்தணன் ஒருவன் வளர்க்கிறான்; அவனை மகன்மை கொள்கிறான் மன்னவன். எனவே கள்வன், அந்தணன், மன்னவன் ஆகிய மூவரின் தொடர்புடைய

மகன் கொடுக்கும் பலி உணவினைப் பெறுபவர் பற்றிய புதிர் ஒரு கதையாக உருக்கொண்டது. இவ்வாறு வருவன மேலும் பல உள்ளன. மேலே பார்த்த முதல் கதையில் சுட்டப்பட்ட முனிவனுக்கு மாறாகப் பிக்கு, சிரமணன், திகம்பரன் ஆகியோருள் ஒருவர் சொல்லப்படுதலும் உண்டு.

# IX. பிரசஸ்தி இலக்கியம் (Panegyrical Verse)

வடமொழியில் சுட்டத்தக்க இலக்கிய வகைகளில் பிரசஸ்தி என்பதும் ஒன்றாகும். இதனை **மெய்க்கீர்த்தி இலக்கியம்** எனக் கூறுதல் தமிழ் மரபு. வேந்தர்களின் அரிய சாதனைகளையும் வெற்றிகளையும் கலை ஆர்வத்தையும் ஆட்சித் திறத்தினையும் அன்புச் செயல்களையும் பாராட்டும் பாங்கில் பாடப்பெறும் வடமொழிப் பாடல்கள் பிரசஸ்தியில் இடம்பெற்றுள்ளன. வரலாற்றுக் காவியங்கள் தோன்றுவதற்கு இவை மூலக்கூறுகளாக விளங்குவன. வடமொழி இலக்கிய வரலாற்றாசிரியர் S.N. தாஸ்குப்தா, கல்பொறிப்புக்களில் காணப்படும் பிரசஸ்தி காவியங்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். அவை விழுமிய கவித்தகுதி வாய்ந்த படைப்புக்கள் என்பது அவர் துணிபு. கி.பி.8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த **கவீசுவரராமர்** பாடிய பிரசஸ்திகளும், கி.பி.9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த **இலலிதசூரதேவர்** பாடிய பிரசஸ்திகளும் பிரசித்தி பெற்ற காவியங்கள் என்று குறித்துள்ளார்.

பெருவேந்தர்களிடமும் புரவலர்களிடமும் புலவர்கள் வைத்துள்ள விசுவாச உணர்வுகளும் நன்றி உணர்ச்சியும் பிரசஸ்திப் பாடல்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தன. இவர்தம் அன்புணர்வுக்கு இணையாக இறைவனிடம் செலுத்தும் பக்தியை மட்டுமே சொல்ல இயலும்.

வடமொழிக் கல்வெட்டுக்களை விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்ந்த மேலை நாட்டு அறிஞர் பூலர் (Buhler) என்பார், கி.பி.இரண்டாம் நூற்றாண்டு முதல் ஐந்தாம் நூற்றாண்டு வரை பிரசஸ்திகளை எழுதியவர்களில் பலர் கவிதைக் கலையின் கோட்பாட்டினை நன்றாக அறிந்தவர் என்று கூறியுள்ளார். மேலும், அவர்கள் பாமகர், தண்டி என்பார்க்கு மிகவும் முற்பட்ட காலத்திலேயே செய்யுள் அலங்கார விதிகளுக்குப் பொருந்தப் பாடியவர்கள் என்றும், அவர்தம் படைப்புக்களில் பொதிந்துள்ள பல்வேறு அணிகளும் பிற்காலத்து அணி இலக்கணம் செய்தவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கியவை என்ற கருத்தினையும் பூலர் வெளியிட்டுள்ளார்.

கி.பி.4 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அலகாபாத்தில் உள்ள தூபியில் சமுத்திரகுப்தனைப் போற்றி அரிசேனர் (Harisena) என்னும் கவிஞர் பாடிய பிரசஸ்தி சிறப்பாகப் பாராட்டப்படுகிறது. எட்டு முழுப் பாடல்களும் ஒரு சில துண்டு கவிதைகளும்

அத்தூபியில் பொறிக்கப்பட்டவை. முதலாம் சந்திரகுப்தனின் இறப்பினையும் அவன் மகன் சமுத்திர குப்தனின் அரியணை அமர்வினையும் விரிவாக எடுத்துக்கூறும் பிரசஸ்தி உடைநடை வாசகமும் இடையிட்டுப் போற்றுதல் பாடலுடன் முடிகிறது. இப்பாடல்கள் நனி சிறந்த காவிய நடையில் அமைந்துள்ளன. இரண்டாம் சந்திரகுப்தனின் அமைச்சர் வீரசேனனைப் பற்றிய கல்வெட்டும் குறிப்பிடத்தக்கது.

## IX.1. வத்சபட்டியின் படைப்பு

தசபுரம் (Mandasor) என்ற இடத்தில் கி.பி.473 இல் எழுப்பப் பெற்ற சூரியனார் கோயிலின் குடமுழக்கினைப் போற்றி வத்சபட்டி (Vatsabhatti) என்னும் கவிஞர் பாடிய 44 பாடல்களும் சிறந்த பிரசஸ்தி இலக்கியமாக மதிக்கப்பெறுகின்றன. காளிதாசனைப் பின்பற்றி இக்கவிஞர் பாடினார் எனச் சொல்லப்படுகின்றது. எனினும், முயன்றும் வலிந்தும் பாடப்பெற்ற இப்பாடல்களின் இலக்கியத்தரத்தினை மிகைப்படுத்தக் கூடாது என்றார் S.N.தாஸ்குப்தா.

காலத்தால் முற்பட்ட வரலாற்றுச் செவ்வியல் ஆவணங்களாக விளங்குவன பிரசஸ்திகளே என்பர். தூபிகள், கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ள இப்பிரசஸ்திகளின் பொருளடக்கம் பற்றித் தாஸ்குப்தா பின்வருமாறு கூறுகின்றார்.

> **The object of the elaborate Prasastis or panegyrics, embodied in insriptional records is to celebrate in sonorous prose and verse some meritorious acts of a particular ruler, eulogise his valour and munificence, and give genealogical and other relevant descriptions of some value. But, while the genealogy beyond one or two generations is often amiably invented and exaggerated, and glorification takes the place of sober statement of facts, the laudatory accounts are generally composed by poets of moderate power. The result is neither good poetry nor good history. They are yet interesting as the first poetical treatment of historical themes; and the agreeble practice which may establish of mixing fact with fiction was accepted by more earnest and ambitious writers, but perhaps it was accepted with a greater learning towards pleasant fiction than towards hard facts.**

இப்பகுதியைப் பின்வருமாறு மொழியாக்கம் செய்யலாம்:

கல்வெட்டு ஆவணங்களில் காணப்படும் விரிவான பிரசஸ்திகள் அல்லது பாராட்டுரைகளின் நோக்கம்: சப்த கௌரவம் மிக்க வசனத்திலும் கவிதையிலும் குறிப்பிட்ட ஓர் அரசனின் ஒருசில தகுதிமிக்க செயல்களைப் போற்றுவதும்; அவன் ஆற்றலையும் கொடைப்பண்பினையும் புகழ்வதும்; அரச மரபு மற்றும்பிற முக்கிய வருணனைகளை ஓரளவு தரம் கொண்ட நிலையில் வழங்குவதும் ஆகும். எனினும், ஓரிரு தலைமுறைகளைத் தாண்டிவிடின், முற்றிலும் கற்பனையாகவும் மிகைப்படுத்தப்பட்டதாகவும் (இராசபாரம்பரிய வரலாறு) படைக்கப்படுகிறது. உண்மைகள் கூறும் ஆன்றமைந்த வாக்கியத்தின் இடத்தினை உயர்வு நவிற்சி எடுத்துக் கொள்ளுகின்றது. போற்றிப்பாடும் குறிப்புக்கள் பொதுவாகக் கவித்துவம் குறைந்த பாவலர்களால் புனையப்படுகின்றன. முடிபாக நல்ல கவிதையோ, நல்ல வரலாறோ கிடைப்பதில்லை. என்றாலும், வரலாற்று அடிக்கருத்துக்களை முதன்முதல் கவிதை வடிவத்தில் புலப்படுத்தும் படைப்பு என்பதால் பிரசஸ்திகள் கவர்ச்சி ஊட்டுவனவாக உள்ளன. கற்பனையுடன் உண்மையினைக் கலந்து கூறும் ஏற்கத்தக்க பழக்கம். பேரார்வமும் மிகுந்த அக்கறையும் கொண்ட எழுத்தாளர்களால் ஒத்துக்கொள்ளப்பட்டது. எனினும், வறட்டு உண்மைகளை நோக்காது இன்பம் தரும் கற்பனைகளைக் கூடுதலாக நோக்கி அங்ஙனம் அப்பழக்கம் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, பிரசஸ்தி என்பது நூற்றுக்கு நூறு வரலாற்று உண்மைகளைக் கூறும் நோக்கில் புனையப்படவில்லை என்பதும், படைப்பாளரின் கற்பனைகள் கலந்துவரப் பாடப்பெறுதலின், வரலாற்றுக் கூறுகளைப் பிரித்தறிதல் அறிஞர்தம் கடன் என்பதும் எண்ணத்தக்கவை. கற்பனைக் கூறுகள்தாம் பிரசஸ்திக்கு இலக்கியத் தரத்தினை வழங்குகின்றன என்பதும் நோக்கத்தக்கது.

இனி, தமிழக வேந்தர்களைப் பற்றி அவர்களால் ஆதரிக்கப்பெற்ற வடமொழிப் புலவர்கள் பாடியுள்ள பிரசஸ்திகள் சிலவற்றின் அமைப்பினையும் பொருளமைதியையும் காண்போம்.

## IX.2. தமிழ் வேந்தரைப் பற்றிய பிரசஸ்திகள்

தொல்காப்பியர் சுட்டும் பாடாண்திணைக்குரிய இயல் மொழி வாழ்த்து என்னும் துறை தமிழில் பிரசஸ்தி இலக்கியம் தோன்றுவதற்குரிய முதலாக (Source) எண்ணுதற்குரியது. **வடமொழியில் பிரசஸ்தி என்ற இலக்கியவகை தோன்றுவதற்கு முன்னமே தமிழில் அது தோன்றியுள்ள உண்மையினை ஒப்பியல்**

ஆராய்ச்சி அறிஞர் உடன்படுவர். புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் பாடாண் திணையினைச் சார்ந்துள்ள அரச வாழ்த்து என்னும் துறை வளர்ச்சி பெற்றுப் பாண்டியர்கள், சோழர்கள் காலங்களில் புதிய பரிமாணங்களைப் பெற்றது. பாட்டியலார் மெய்க்கீர்த்தி என்றும் மெய்க்கீர்த்திமாலை என்றும் இவ்விலக்கிய வகையினை இனங்கண்டு இலக்கணம் கூறியுள்ளனர்.

தமிழில் எழுதப்பட்ட மெய்க்கீர்த்திகளைச் சார்ந்து வடமொழி பிரசஸ்திகளும் கல்பொறிப்புக்களில் காணப்படுகின்றன. இவ்வரிசை மாறியும் ஒருசில அமைந்துள்ளன. முதலில் பாண்டியர்க்கு உரிய மெய்க்கீர்த்திகளில் காணப்படும் வடமொழி பிரசஸ்திகளைச் சற்று உற்று நோக்குவோம்.

### IX.2.1. பாண்டியரின் பிரசஸ்தி

பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையனின் வேள்விக்குடி செப்பேடு கி.பி.770 அல்லது கி.பி.771இல் பொறிக்கப்பட்டது என்பர் வரலாற்றாராய்ச்சியாளர். இச்செப்பேட்டின் இறுதியில் இதனை இயற்றியவன் பெயரும் செப்பேட்டில் பொறித்தவன் பெயரும் காணப்படுகின்றன.

*இப்பிரசஸ்தி பாடின சேனாபதி ஏனாதி ஆயின*
*சாத்தஞ்சாத்தன். . . .*

ஏனாதி என்ற பட்டம் படைத்தலைவரில் சிறந்தோர்க்கு வழங்கப்படுவது. சாத்தன் என்பானின் மகன் சாத்தன் இப்பிரசஸ்தியை இருமொழியிலும் பாடியவன் என்பதும் அவன் பாண்டியனின் படைத்தளபதியாகப் பணி புரிந்தவன் என்பதும் சுட்டத்தகுவன. ஆதலின், போர்த்துறையில் மட்டுமன்றிப் புலமைத் துறையிலும் சிறந்து விளங்கியவன் என்பதும் இருமொழியிலும் புலமை பெற்றுக் கவிபாடும் திறமை படைத்தவன் என்பதும் எண்ணும்தோறும் இன்பம் பயப்பன. செப்பேட்டில் பிரசஸ்தியைப் பொறித்தவனை,

*தாம்ர சாசனம் செய்வித்தான் இஃதெழுதின*
*சுத்தகேசரிப் பெரும் பணைக்காரன்*

என்று இச்செப்பேட்டின் இறுதிப் பகுதி சுட்டுகின்றது. பாடியவன், எழுதியவன் இருவருக்கும் பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையன் வழங்கிய கொடைகளும் குறிக்கப்பட்டுள்ளன.

இச்செப்பேட்டின் தொடக்கத்தில் 17 வடமொழிப் பாடல்கள் ஆகிய பிரசஸ்தியும் தொடர்ந்துவரும் "கொல்யானை பலவோட்டி"

என்ற நீண்ட தமிழ் மெய்க்கீர்த்தியும் அதன்பின் 6 வடமொழிப் பாடல்களும் அடங்கியுள்ளன. இங்குத் தொடக்கத்தில் இடம்பெற்ற ஓரிரு செய்யுளின் தமிழாக்கம் காண்போம்:

1. (கோச்சடையன்) இரணதீரனின் மகன் ஸ்ரீ மாறன். மாறன் இந்திரனின் மறுவடிவம் ஆவன்; பூமி என்னும் அழகியின் கணவன்; தன்னைப் பணிந்த அரசர்கள் அனைவரின் முடிகளில் பதிக்கப்பட்ட மணிகளின் குவையால் சூழப்பட்ட பாதங்களை உடையவன்; உண்மையின் நண்பன்; வீரமே செல்வமாகக் கொண்டவன்; தாமரை மணாளன்; கல்வியையும் ஒழுக்கத்தையும் ஆபரணமாகப் பூண்டவன்; கேள்விச் செல்வத்தின் இருப்பிடம். (செய்யுள் 10)

2. உயர்ந்த குலத்தில் பிறந்தவளும் தானே தனக்கு ஒப்பானவளுமாகிய மழவர் அரசரின் மகளை மாறவர்மன் மணந்து கொண்டான். சிவபிரானுக்குப் புதல்வனாகத் தோன்றிய முருகனைப் போன்று அப்பாண்டியனுக்கு ஜடிலன் என்னும் மகன் உலக நன்மைக்காகத் தோன்றினான். (செய்யுள் 14)

இப்பிரசஸ்தியில் சுட்டப்படும் மாறவர்ம பாண்டியன் ஸ்ரீமாறன் ராஜசிம்மன் என்றும் தேர்மாறன் என்றும் இவன் மகன் ஜடிலன் பராந்தகன் என்றும் கூறப்பெற்றனர்.

இவ்வடமொழிப் பிரசஸ்தியில் உவமை அணியுடன் உருவக அணியும் உயர்வு நவிற்சி அணியும் விரவிவரக் காணலாம். மாறனின் தோற்றப் பொலிவு, ஆற்றல், வீரப் பெருமிதம், வெற்றி, கல்வி, ஒழுக்கம் ஆகிய உயர் பண்புகள் பலவும் இனிய பாடல் வடிவில் புலப்படுத்தப்பெற்றன. ஆதலின், ஸ்ரீமாறனுக்கும் மழவர் குலத்தில் வந்த அவன் பெருந்தேவிக்கும் பிறந்த மைந்தன் ஜடிலனுக்குச் சிவகுமாரனாகிய முருகன் உவமை சொல்லப்பெறுதல் ஒரு கவி மரபாகக் கொள்ளத்தக்கது.

பாண்டியர்கள் செப்பேடுகளில், அபிமானமேரு என்னும் சிறப்புப் பெயர் கொண்ட இராஜசிம்ம பாண்டியனின் (கி.பி.907-931) முன்னோர் பெருமைகளையும் அவனுடைய கொடைச் சிறப்பினையும் கூறுவது சின்னமனூர்ப் பெரிய செப்பேடு ஆகும். இச்செப்பேட்டின் தொடக்கத்தில் இடம்பெற்றுள்ள 38 வடமொழிச் செய்யுள்களையும் பாடியவன் வாசுதேவன் என்றும் இவன் மதுரகுணனின் நண்பன் என்றும் சுட்டப்பெற்றன:

prasastim madhuraguṇaṣya sakhā sa vāsudeva:

இவ்வடமொழி பிரசஸ்திக்குப்பின்னர், "திருவொடும் தெள்ளமிர்தத் தொடும்" எனத் தொடங்கித் துள்ளலோசையும் தூங்கலோசையும் விரவி வர ஒருவகைக் கலவைப் பாட்டாக அடிநிமிர்ந்தோடிய தமிழ் மெய்க்கீர்த்தி இடம் பெற்றுள்ளது.

இங்கு வடமொழி பிரசஸ்திக்குரிய ஓரிரு பாடல்களின் பொருளமைதியைக் காண்போம்:

1. துள்ளியெழும்பும் திரைத்திரளால் மோதப் பெற்றுச் சுழலும் கதிரவன், உடுக்கள், திங்கள் என்பனவற்றை இரத்தினங்களாகக் கொண்ட பெருங்கடல், ஊழிமுடிவில் கொந்தளித்த பொழுதும் எவனுடைய (பாண்டியனுடைய) பாதபீடத்தின் ஒளியை ஊன்றுகோலாகக் கொண்டிருந்ததோ, அத்தகைய பாண்டிய மரபு தன் பேராற்றலினால் உலகை அடிமைப்படுத்திக் கொண்டது. பகைவரின் ஆண்மை என்னும் இரவுக்குப் பாண்டிய மரபு ஞாயிறு போன்றது. அம்மரபில் தோன்றி உயர் புகழும் பெருமிதப் பொலிவும் கொண்ட வீர அரசர்க்கு நிலமடந்தை இல்லக்கிழத்தி ஆகினாள். (செய்யுள்கள் 1, 2).

2. வரகுண பாண்டியனின் இளவல் ஆகிய பராந்தகன் மனைவி வானவள் மாதேவி திருமாலுக்குத் திருமகள் போலவும், இந்திரனுக்குச் சசிதேவி போலவும் திகழ்ந்தாள் (செய்யுள் 15)

3. இவ்விருவர்க்கும் (- பராந்தகன், வானவன் மாதேவி) தோன்றிய இராசசிம்மன் பகையரசர்களை விரட்டும் ஒளித் திருவுடையவன். அறிவு, ஆற்றல், திண்மை, வீரம், குலமாட்சி, கொடை முதலிய குணங்களுக்கு ஆதாரமானவன். (செய்யுள் 16)

பாண்டியர்களின் குலப்பெருமை, மரபு, அரிய சாதனைகள், சமயப்பற்று, கொடை, கலையார்வம் என்பனவற்றைப் புகழ்ந்து கற்பனை கலந்து பாடப்பெற்றுள்ள பிரசஸ்திகளும் மெய்க்கீர்த்திகளும் பழைய வரலாற்றினை அறிதற்குரிய ஆவணங்களாக விளங்குவன. மதுரை மாநகரில் சங்கம் வைத்துத் தமிழாராய்ந்த பெருமைக்குரிய பாண்டிய வேந்தர்கள் களப்பிரர்கள் ஆட்சிக்குப் பிறகு வடமொழிக்

> கவிஞர்களாலும் பாராட்டப் பெறுதலைப் பெருமையாக எண்ணி உள்ளனர் என்பதை அவர்தம் செப்பேடுகள் உறுதிப்படுத்துகின்றன.

## IX.2.2. பல்லவ அரசர்களின் பிரசஸ்தி

முதலாம் மகேந்திரவர்ம பல்லவனின் பாட்டன் சிம்மவர்மனின் ஆட்சியின் ஆறாம் ஆண்டில் வெளியிட்டுள்ள பள்ளன்கோயில் செப்பேடு பாண்டிய வேந்தர்களின் செப்பேட்டினை விட, காலப்பழமை வாய்ந்தது. இவ்வேந்தன் கி.பி.5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். இவனுடைய செப்பேட்டின் முதற் பகுதி வடமொழியில் எழுதப்பட்ட ஒன்பது சுலோகங்களைக் கொண்ட பிரசஸ்தி ஆகும். இப்பகுதியை யாத்தவர் பற்றி ஒன்பதாவது சுலோகத்தில்,

> எல்லாச் சாத்திரங்களிலும் மூழ்கியவனும் மரியாதைக்கு உரியவனும், அறிவினில் வியாழனுக்கு நிகரானவனும் ஆகிய மேதாவி இந்தப் பிரசஸ்தியை இயற்றினான்

என்று பொறிக்கப்பட்டுள்ளது. வடமொழிப் பகுதிகள், தேவநாகரி லிபியில் எழுதப்படாமல் பல்லவர் காலத்துத் தமிழர் உருவாக்கிய கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருத்தல் சுட்டத்தக்கது. வடமொழிச் சுலோகங்களைத் தொடர்ந்து தமிழில் உரைநடைப் பகுதி அமைந்துள்ளது.

பல்லவ மரபு பௌராணிக மரபின்படி தெய்வத் தொடர்புடையது. திருமாலின் உந்தித் தாமரையிலிருந்து நான்முகனும், நான்முகனிடமிருந்து அங்கிரசும் அவனிடமிருந்து பிருகற்பதியும், அவனிடமிருந்து சம்யுவும், அவனிடமிருந்து பரத்துவாசரும், அவரிடமிருந்து துரோணரும், அவரிடமிருந்து அசுவத்தாமனும், அவனிடமிருந்து பல்லவனும் தோன்றினர் என்று இச்செப்பேடு செப்புகிறது (செய்யுள் 2). இதனால் பல்லவர் தம்மைப் பாரத காலத்துக் கதைமாந்தருடன் தொடர்புபடுத்திக் கொண்டார்கள் என்பது புலனாகும்.

தொடக்ககாலப் பல்லவர்கள் சமணச் சார்பினர். ஆதலின், சமண நெறிக்கு அவர்கள் ஆற்றிய பணியை இச்செப்பேடு எடுத்துரைப்பதில் வியப்பில்லை. ஒருசில வடமொழிப் பாடல்களின் பொருண்மையினைக் காண்போம்.

முதல் செய்யுள் அருகபரமேட்டிக்கு வணக்கம் கூறுகிறது. ஒருசில எழுத்துக்கள் விடுபட்டுள்ளன. இதன் திரண்ட கருத்து:

1. "சுவர்க்கம் மோட்சம் முதலியவற்றின் உயர்குணங்களின் தலையாய. . . சினேந்திரர், முனீந்திரர், தேவேந்திரர். . . ஆகிய கூட்டங்களால் வந்தனம் செய்யப்பெறுபவர்,"

இப்பகுதியினால் சமணர்க்குத் தெய்வமாகிய அருகபரமேட்டி பல்வகைப்பட்ட இந்திரர்களால் தொழப்படும் தன்மையர் என்பது புலனாகும். இந்திரியங்களை வென்றவர்கள் இந்திரியர்கள் என்பது சமணக் கொள்கை. மணிமேகலையில்,

இந்திரர் தொழப்படும் இறைவன் எம் இறைவன் (21.171)

என்று நிகண்டவாதி (-சமண சமயத்தை நிலைநாட்டும் அறிஞன்) பேசுதல் இங்கு எண்ணத்தக்கது. தம் தவப்பயனாய் இந்திரப்பதம் பெற்றவர் பல்வகையினர். பவணேந்திரர், வியந்திரேந்திரர், கற்பேந்திரர், நரேந்திரர், மிருகேந்திரர் முதல் இந்திரர் பல்வகையர் என்பது சமண நூல்களினால் அறியப்படும்.

2. சோழ நாட்டைப் பற்றி ஓர் அரிய வருணனை ஐந்தாம் பாடலில் இடம்பெற்றுள்ளது.

கவேரன் மகளாகிய காவிரி ஆற்றினை மாலையாக அணிந்தவள்; செழுமை மிக்க செந்நெல் வயல்கள், கன்னல் வயல்களை ஆடையாக உடுத்தியவள்; வாழைத் தோட்டங்களை மேகலையாகப் பூண்டவள் சோழ நாடு என்னும் நங்கை நல்லாள்,

உண்மை, தியாகம், வணக்கம் போன்ற தூய நற்பண்புகளின் உறைவிடமாக உள்ளவனும் சத்திரியக் குணங்கள் ஒருங்கே அடையப்பெற்றவனுமாகிய சிம்மவர்மன் சோழ நங்கையினைக் கைப்பற்றினான்,

இப்பாடற்பகுதியில் பல்லவ வேந்தன் சோழ வேந்தனை வெற்றிகொண்ட வரலாற்றுச் செய்தி இடம்பெற்றது. கவேர முனிவனின் மகள் என்பதால் காவேரி என்ற பெயர் காவிரிக்கு உண்டு என்ற குறிப்பு இச்செய்யுளில் காணப்படுகின்றது. இதற்கு மூலமாக,

*தவாநீர்க் காவிரிப் பாவைதன் தாதை*
*கவேரன்ஆங் கிருந்த கவேர வனமும்* (மணி. 3.55-56)

எனவரும் மணிமேகலை காப்பியப்பகுதி அமைந்துள்ளது.

3. ஸ்ரீ வர்த்தமானேச்சுவர தருமத்தீர்த்தம் என்ற தலத்தில் எண்ணில் குணங்களைக் கொண்ட கணங்களின்

தலைவர்கள் நிறைந்த நந்தி சங்கத்தில் சகல சாத்திரங்களிலும் நிரம்பிய ஞானமுள்ளவரும் ஆசாரியருமாகிய வச்சிரநந்தி தோன்றினார்,

சினேந்திரர், சைனேந்திரர் ஆகிய கணங்களின் (-முனிவர் கூட்டம்) வழிபாட்டுக்காகச் சிரமணாச்சிரமம் என்ற ஊர் முழுவதையும் நன்கு வகுக்கப்பட்ட எல்லைகளை உடையதாக அந்தத் தவமுதல்வர்க்கு அவ்வரசன் வழங்கினான் (செய்யுள் 6, 7)

கி.பி.5 ஆம் நூற்றாண்டில் (கி.பி.470இல் மதுரை மாநகரில் திரமிள சங்கம் என்ற சமணத் தமிழ்ச்சங்கத்தினை நிறுவியவர் புஷ்யபாதரின் மாணாக்கர் வச்சிரநந்தி என்று தேவசேனர் தம் திகம்பர தரிசனம் என்ற நூலில் குறித்துள்ளார். மேலே பல்லவனின் பிரசஸ்தியில் குறிக்கப்படும் வச்சிரநந்தியும் இவரும் ஒருவராகலாம். சமண முனிவர்கள் நீண்ட காலம் வாழ்ந்தவர்கள்.

இச்செப்பேட்டினை வழங்கிய சிம்மவர்மன் வழித் தோன்றல்களே பின்னர் 400 ஆண்டுகள் காஞ்சிமா நகரில் ஆட்சி செய்தவர்கள். சிம்மவர்மனுக்குப் பின்னர் ஆட்சி புரிந்தவன் சிம்மவிஷ்ணு பல்லவன். இவன் தம்பி பீமவர்மன். சிம்ம விஷ்ணுவின் பெருமைமிகு புதல்வன் முதலாம் மகேந்திரவர்மன்.

முதலாம் மகேந்திரவர்மனின் மகன் முதலாம் நரசிம்மவர்மன். அவன் மகன் இரண்டாம் மகேந்திரவர்மன். அவன் மகன் முதலாம் பரமேச்சுவரவர்மன். இவனுடைய கூரம் செப்பேடுகள் புகழ் வாய்ந்தவை. இதன் முற்பகுதி 26 செய்யுள்களைக் கொண்ட பிரசஸ்தியாக உள்ளது. இரண்டாம் பகுதி தமிழில் பொறிக்கப்பட்ட உரைநடைக் கல்வெட்டு.

சாளுக்கிய வேந்தன் ஆகிய முதலாம் விக்கிரமாதித்தனோடு முதலாம் பரமேச்சுவரவர்மன் புரிந்த போர்க்களத்தின் வருணனைப் பகுதி பிற்காலத்தில்எழுந்த பரணி இலக்கியங்களுக்கு வழிகாட்டியாகக் கருதத்தக்கது. ஆதலின், அப்பகுதிக்குரிய வடமொழி பிரசஸ்தியின் பாடல்களின் பொழிப்பினைக் காண்போம்.

1. போர்க்களத்தில் எண்ணற்ற காலாட்கள், குதிரைகள், யானைகள் ஆகியவற்றின் கூட்டங்கள் மிதிப்பதால் எழும்பிய தூசிகளால் பனிப்படலம் போல் மறைக்கப்பட்ட சூரியபிம்பம் சந்திரமண்டலம்போல் காட்சி அளித்தது,

முரசின் ஒலி இடிபோல முழங்கி அச்சத்தை உண்டாக்கியது. உறை நீக்கப்பட்ட சுரிகை, மின்னற் கொடிபோல் வளைந்து ஒளிர்ந்தது. யானைகளின் நடமாட்டம் கருமேகக் கூட்டம் செல்வதுபோல் இருந்தது. காலம் அல்லாக் காலத்தில் தோன்றிய மழைபோல் அது விளங்கியது.

உயர்ந்த குதிரைகள் தாவின (-அல்லது நிமிர்ந்த அலைகள் வீசின). யானைகள் செல்லும் வழி மேடு பள்ளம் ஆயிற்று (-நீர்யானை, முதலை ஆகியவற்றால் நீர்ச்சுழல்கள் தோன்றின). சங்கு இடைவிடாமல் ஒலித்தது (வெளிப்பட்டது). இவ்வாறு அப்போர்க்களம் பெருங்கடலை ஒத்தது.

கொடிபோல் வளைந்த குறுவாள், கேடயம் முதலியன நிரம்பின. வலிமை மிக்க யானைகளின் மீது வில்லேந்திய வீரர்கள் வீற்றிருந்தனர். மதம் மிக்கவர்களின் போரொலி பேரொலி ஆயிற்று. பெருவேகத்தோடு கூடிய காற்றினால் அலைக்கப்பட்ட காட்டினைப்போல் போர்க்களம் விளங்கியது.

போர் வீரர்கள் வில்லை வளைத்தனர். காற்றின் வழியே குறுக்கு நெடுக்குமாகப் பாய்ந்த அம்புகளால் வானவெளி அடைபட்டது. தோமரம், சக்தி, பிராசம், கதை, கணயம், கார்ப்பணம், சக்கரம் முதலிய படைக்கலன்கள் எடுத்து வீசப்பட்டன. . (செய்யுள் 8-12)

இருதரத்தாரும் ஒருவரை ஒருவர் தாக்கும்பொழுது உடைந்தனர், நெருக்கினர், ஓடினர், விழுந்தனர், எழுந்தனர். ஐயம் என்னும் ஊஞ்சலில் அமர்ந்து ஆடிய வெற்றித் திருவின் போக்கினால் இருதிறத்தில் போர் வீரர்கள் வெற்றி - தோல்வியை அறிய இயலாமல் தவித்தனர். (செய்யுள் 16)

போர்க்களத்தில் பல இலட்சம் வீரர்கள் நிறைந்த படையினைக் கொண்ட விக்கிரமாதித்தனை ஒரு கந்தையை மட்டும் உடுத்துத் தனியாக ஓடச் செய்தான் பரமேச்சுவர வர்மன்.

இரத்தின காந்தியால் பொன்மயமான அம்பாரியை உடையதும் எப்போதும் மதநீர் பெருகி வழிவதால்

> இந்திரனின் களிறாகிய ஐராவதம் என்ற பெயர் கொண்டதும் ஆகிய பட்டத்து யானை ஆயிரம் யானைகள் தொடர்ந்து வரக் கம்பீரமாக நடந்து சென்றது, நீரோடைகள் கொண்ட சரிவுகளுடன் கூடிய மலையரசன் ஆகிய இமயம் நடந்து செல்வதுபோல் காட்சி அளித்தது (செய்யுள் 21, 22).

கற்பனை வளமும், படைப்பாற்றலும், நடைநலமும் பொருந்தப் பாடப்பெற்ற இப்பிரசஸ்தி பாடல்களில் காவியப்பாங்கு காணப்படுகின்றது.

கூரம் என்ற ஊரின் நடுவில் வித்தியாவிநோத பல்லவ பரமேச்சுவரனுடைய கோயிலில் பிரதிட்டை செய்யப்பெற்ற பினாகபாணிக்கு (- சிவனுக்கு) பூசை நீராட்டல், மலர், சந்தனம், தூபதீபம், படையல், சங்கம், படகம் முதலியன ஒலித்தல் ஆகியவற்றுக்காகவும், பாரதம் படித்தற்காகவும் பிற அறங்களுக்காகவும் பரமேச்சுவர மங்கலம் என்னும் ஊரினைத் தேவதானமாக இப்பல்லவ வேந்தன் வழங்கிய செய்தியையும் வடமொழிப்பகுதி குறித்துள்ளது.

சோழப் பெருவேந்தர்களுக்குரிய பிரசஸ்திகள் பல உள்ளன. அவை செவ்வியல் காலத்திற்குப் பின் பாடப்பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, தமிழ்நாட்டாரும் வடமொழி வளர்ச்சிக்குப் பங்காற்றியவர்கள் என்பது புலனாகும்.

# மேற்கோள் நூல்கள்

## (i) தமிழ் [முதன்மை நூல்கள் மட்டும்]

**அகநானூறு**, பழைய உரை, வே.இராசகோபாலன் பதிப்பு, சென்னை, *1923*.

**அகநானூறு**, ந.மு.வேங்கடசாமி நாட்டார். ரா.வேங்கடாசலம் பிள்ளை உரை, கழக வெளியீடு, சென்னை, *1962-64*.

**இறையனார் களவியல்**, கழக வெளியீடு, சென்னை, *1964*.

**ஐங்குறுநூறு**, பழைய உரை, உ.வே.சா. பதிப்பு, சென்னை.

**ஐங்குறுநூறு**, ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, அண்ணாமலை நகர், *1957-58*.

**கலித்தொகை**, நச்சினார்க்கினியர் உரை, இ.வை.அனந்தராமையர் பதிப்பு, சென்னை, *1925, 1931*.

**கலித்தொகை**, நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு, சென்னை, *1955*.

**குறுந்தொகை**, உ.வே.சா.உரை, சென்னை, *1955*.

**சங்க இலக்கியம்**, பாட்டும் தொகையும் I&II, சமாசப் பதிப்பு, சென்னை, *1940*.

**சிலப்பதிகாரம்**, அடியார்க்கு நல்லார் உரை, உ.வே.சா. பதிப்பு, சென்னை, *1950*.

**திருக்குறள்**, பரிமேலழகர் உரை, கழக வெளியீடு, சென்னை, *1956*.

**திருமுருகாற்றுப்படை உரைக்கொத்து**, காசிமடம் வெளியீடு, திருப்பனந்தாள், *1950*.

**தொல்காப்பியம்**, எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியம், கழக வெளியீடு, சென்னை, *1952*.

**தொல்காப்பியம்**, **சொல்லதிகாரம்**, **சேனாவரையம்**, கழக வெளியீடு, சென்னை, *1952*.

**தொல்காப்பியம்**, பொருளதிகாரம், இளம்பூரணம், கழக வெளியீடு, சென்னை, *1953*.

**நற்றிணை**, பி.அ.நாராயணசாமி ஐயர் உரை, கழக வெளியீடு, சென்னை, *1956*.

**பத்துப்பாட்டு**, நச்சினார்க்கினியர் உரை, உ.வே.சா. பதிப்பு, சென்னை, *1961*.

**பதிற்றுப்பத்து**, பழைய உரை, உ.வே.சா. பதிப்பு, சென்னை, *1957*.

**பதிற்றுப்பத்து**, ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உரை, கழக வெளியீடு, சென்னை, *1955*.

**பரிபாடல்**, பரிமேலழகர் உரை, உ.வே.சா. பதிப்பு, சென்னை, *1956*.

**பதினெண்கீழ்க்கணக்கு**, மர்ரே பதிப்பு, சென்னை, *1957*.

**புறநானூறு**, பழைய உரை, உ.வே.சா. பதிப்பு, சென்னை, *1950*.

**புறநானூறு**, ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உரை, கழக வெளியீடு, சென்னை, *1956*, *1960*.

**மணிமேகலை**, உ.வே.சா. பதிப்பு, சென்னை, *1949*.

**முத்தொள்ளாயிரம்**, சேதுரகுநாதன் உரை, கழக வெளியீடு, சென்னை, *1946*.

**(ii) வடமொழி (Select Bibliography)**

ANANDAVARDHANA, **Dhvanyaloka**, Translated by P.S.S. Sastri, Tiruchirappalli, 1944.

BHARTRI HARI, **Vairāgya Satakam** with English Translation, Calcutta, 1981.

BHAṬṬABĀṆA, **Harṣacarita** with English Translation of Cowell and Thomas, Motilal Banarsidass Publishers, Delhi.

BHAVA BHUTI, 1. **Mālati Mādhavam** with M.R. Kale's Translation.

2. **Uttarama Carita** with M.R. Kale's Translation.

BHARĀVI, **Kiratārajunīyam** with M.R. Kale's Translation.

DANDI, **Kāvyādarśa** with Narayana Aiyar's Translation, Chennai, 1964.

DASGUPTA, S.N. and De, S.K., **A History of Sanskrit Literature,** Volume I, University of Calcutta, Calcutta, 1977.

DEVADHAR, C.R., **Works of Kalidasa**, Vol.I (Drama).

KEITH, A.B., **A History of Sanskrit Literature**, Motilal Banarsidass Publishers, Delhi, 1996.

KRISHNAMACHARIYAR, M., **History of Classical Sanskrit Literature**, Delhi, 1977.

KALIDASA, **1. Kumārasambhava, 2. Abhiñāna Sakuntala, 3. Meghadūta** and **4. Vikramorvasīyam** with M.R.Kale's Translation.

KANE, P.V., **History of Sanskrit Poetics. Kumārasambhavam** with Tamil Translation of V.S.Venkataragavacāryar, Chennai, 1982.

NARAYANASAMY, K., **The Purāṇas in the light of Modern Science**, Theosophical Society Publication, Chennai, 1914.

**Pallavar Ceppēṭukaḷ**, International Institute of Tamil Studies, Chennai, 1967.

Pāṇḍiyar **Ceppēṭukaḷ**, International Institute of Tamil Studies, Chennai, 1967.

PUSALKAR, A.D., **Bhāsa - A Study**.

**Raghuvamśa** with Tamil Translation of V.S.Venkataragavacharyar, Chennai, 1982.

SRI HARṢA, **Ratnāvaḷi** with M.R. Kale's Translation.

**Value Systems in Purāṇas**, Chimaya Mission, Chennai, 1985.

WINTERNITZ, M. 1. **A History of Indian Literature**, Volumes I and II, Calcutta, 1933.

2. **A History of Indian Literature**, Vol.III, Delhi, 1977.

# பொருளடைவு

## (i) தமிழ்

| | |
|---|---|
| அகநானூறு | *85* |
| அகப்பாட்டெல்லை | *7* |
| அதங்கோட்டாசிரியர் | *4* |
| அபிநவபாரதி | *27* |
| அம்மூவனார் | *77* |
| அரண்மனை வாயில் | *72* |
| அல்லங்காடி | *55* |
| அறத்தொடு நிற்றல் | *60* |
| அறநூல்களின் காலம் | *111* |
| அறிவர் மரபு | *120* |
| ஆசாரக்கோவை | *122* |
| ஆற்றுப்படை வீடு | *35* |
| ஆறுபடை வீடு | *35* |
| இந்தியத் தத்துவக் களஞ்சியம் | *97* |
| இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன் | *100* |
| இயற்கைப் புணர்ச்சி | *81* |
| இயற்சொல் | *23* |
| இரண்டாம் கபிலர் | *123* |
| இளங்கோவடிகள் | *135* |
| இளம்பூரணர் | *26* |
| இறையனார் களவியல் | *2, 108* |
| இன்னா நாற்பது | *123* |
| இனியவை நாற்பது | *123* |
| உடன்போக்குப் பாடல் | *95* |
| உரிச்சொல் | *23* |
| உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி | *41* |
| உலக வழக்கு | *11* |
| எட்டுத்தொகை | *2, 74* |
| எட்டுத்தொகை தொகுத்தமுறை | *75* |
| எழுத்ததிகாரம் நுதலும் பொருள் | *20* |
| ஏலாதி | *122* |
| ஐங்குறுநூறு | *77* |
| ஐந்திணை எழுபது | *127* |
| ஐந்திணை ஐம்பது | *128* |
| ஐந்திணை வளம் | *53* |
| ஐந்திரம் | *14* |
| ஐந்திரவியாகரணம் | *14* |
| ஓணவிழா | *56* |

ஓதலாந்தையார் 77
ஓய்மாநாட்டு நகர்கள் 44
ஓரம்போகியார் 77
ஔவை 43
கடல்பிறக்கு ஓட்டிய செங்குட்டுவன் 100
கடியலூர் உருத்திரங்கண்ணனார் 45, 63
கண்ணகி கோயில் 136
கண்ணஞ்சேந்தனார் 129
கணிமேதாவியார் 122, 126
கபிலர் 60, 77
கரிகாற்பெருவளத்தான் 39
கல்லாடனார் 26
கலித்தொகை 91
கலிப்பாக்களின் வகை 91
களவழி நாற்பது 125
களிற்றியானை நிரை 85
களிறுதருபுணர்ச்சி 62
காப்பியம் பாடக்காரணம் 135
கார்நாற்பது 130
காரியாசான் 121
கிளவியாக்கம் 22
குட்டித்திருக்குறள் 138
குணவீரபண்டிதர் 4
குமரிவேங்கடட் 7
குறிஞ்சிப்பாட்டு 60
குறுந்தொகை 80
குன்றுதோறாடல் 38
கூத்தர் செல்லும் வழியின் வளம் 69
கூதிர்க்காலத்தின் நிலை 58
கைந்நிலை 129
கோப்பெருஞ்சோழன் 116
சிவஞானமுனிவர் 24
சிலப்பதிகாரம் 2, 135
சிறந்த சிந்தனைகள் 118
சிறுபஞ்சமூலம் 121
சிறுபாணன் காட்சி 42
சிறுபாணாற்றுப்படை 42
சீரிய சிந்தனைகள் 104, 138, 142
செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னன் 68
செந்தமிழ் 1
செந்தமிழ் நிலம் 12
செம்புலப்பெயனீரார் 82

செம்மொழித் தமிழ் 1
செய்யுள் ஆராய்தல் 11
செய்யுளியல் 17
செவ்வேள் 98
சேனாவரையர் 11
சொல்லதிகாரம் நுதலும் பொருள் 21
சோழநாட்டின் வளம் 64
சோழன் செங்கணான் 126
தக்கயாகப்பரணி 42
தமிழ்நாட்டின் எல்லை 6
தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் 51
தளவாய்புரச் செப்பேடு 51
திசைச்சொல் 23
திணைமாலை நூற்றைம்பது 126
திணைமொழி ஐம்பது 129
திரிகடுகம் 120
திரிசொல் 23
திருக்குறள் 111
திருக்குறளின் அமைப்பியல் 112
திருச்சீரலைவாய் 36
திருப்பரங்குன்றம் 36
திருமால் 97
திருமுருகாற்றுப்படை 32
திருவள்ளுவர் 113, 144
திருவாவினன்குடி 37
திருவேரகம் 37
திரையன் 48, 49
தெய்வச்சிலையார் 26
தெரிந்த மொழி 9
தொடித்தலை விழுத்தண்டினார் 107
தொண்டிப்பத்து 77
தொண்டை நாட்டின் வளம் 46
தொண்டைமான் இளந்திரையன் 45
தொண்ணூற்றொன்பது மலர் வகை 63
தொல்காப்பிய உரையாசிரியர்கள் 26
தொல்காப்பியப் பாயிரம் 3
தொல்காப்பியம் 2
தொல்காப்பியம் நுதலும் பொருள் 20
தொல்காப்பியர் 1, 13, 18, 19, 25
தொல்லாணை நல்லாசிரியர் 57
நக்கீரர் 108
நச்சினார்க்கினியர் 26. 58

| | |
|---|---|
| நப்பூதனார் | 49 |
| நல்லாதனார் | 120 |
| நல்லியக்கோடனின் பண்புகள் | 44 |
| நவிரமலை | 73 |
| நற்றிணை | 82 |
| நன்னன்சேய் நன்னன் | 69 |
| நன்னூல் | 4 |
| நாடக வழக்கு | 11 |
| நாலடியார் | 6, 114 |
| நாளங்காடி | 55 |
| நான்மணிக்கடிகை | 119 |
| நித்திலக்கோவை | 85 |
| நிலந்தரு திருவிற்பாண்டியன் | 57 |
| நெடுந்தொகை | 85 |
| நெடுநல்வாடை | 57 |
| நெல்லும் பொன்னும் | 79 |
| நெல்லூர் | 52 |
| நேமிநாதம் | 4 |
| பட்டினப்பாலை | 63 |
| பத்துப்பாட்டின் தலைவர்களும் பாடியோரும் | 28 |
| பத்துப்பாட்டு | 2, 28 |
| பதிற்றுப்பத்தில் விழுமியங்கள் | 101 |
| பதிற்றுப்பத்து | 100 |
| பதினெண் கீழ்க்கணக்கு | 2, 110 |
| பரணர் | 60 |
| பரதமுனிவர் | 27 |
| பரிபாடல் | 60, 96 |
| பரிமேலழகர் | 34 |
| பவணந்தியார் | 4 |
| பழமுதிர்சோலை | 38 |
| பழமொழி நானூற்றின் அமைப்பியல் | 117 |
| பழமொழி நானூறு | 15, 117 |
| பனம்பாரம் | 4 |
| பனம்பாரனார் | 4 |
| பாசறை இருப்பு | 50 |
| பாசறையில் வேந்தன் நிலை | 59 |
| பாடினியின் பொலிவு | 40 |
| பாண்டிக்கோவை | 109 |
| பாண்டியன் நெடுஞ்செழியன் | 57 |
| பாண்டியனின் சிறப்பு | 51 |
| பாணினி | 3 |
| பாயிரச்செய்தி | 4 |
| பாலையாழின் அமைப்பு | 39 |

பிரகத்தன் *60*
புகாரின் காட்சிகள் *65*
புல்லங்காடனார் *130*
புலவராற்றுப்படை *33*
புலனெறி வழக்கம் *11*
புறப்பாட்டெல்லை *7*
புறநானூறு *103*
புனையா ஓவியம் *59*
பூதஞ்சேந்தனார் *124*
பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் *68*
பெரும்பாணாற்றுப்படை *45*
பெரும்பெயர் முருகன் *35*
பெருவாயின் முள்ளியார் *123*
பேயனார் *77*
பொய்கையார் *125*
பொருண்மொழிக்காஞ்சி *33*
பொருநராற்றுப்படை *39*
பொருளதிகாரம் நுதலும் பொருள் *24*
பொன்மொழிகள் *80*
மக்கள் இலக்கியம் *9*
மகாகவி காளிதாசன் *27*
மணிமிடைபவளம் *85*
மணிமேகலை *2, 140*
மணிமேகலையில் சிறு நூல்கள் *141*
மதுரைக்கண்ணங்கூத்தனார் *130*
மதுரைக்காஞ்சி *51*
மதுரைக்காஞ்சிப் புலவன் *28*
மதுரைக்கூடலூர்கிழார் *124*
மதுரைக்கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் *140*
மதுரை மாநகரின் அமைப்பு *54*
மயிலைநாதர் *4*
மல்லிநாதர் *27*
மலைபடுகடாம் *68*
மன்னனின் மாளிகை *59*
மாங்குடி மருதனார் *51*
மாறன் பொறையனார் *128*
முடத்தாமக்கண்ணியார் *39*
முத்தமிழ்க் காப்பியம் *136*
முத்தொள்ளாயிரம் *2*
முதுமொழிக்காஞ்சி *120*
முதுவாய் இரவலன் *33*
முல்லைப்பாட்டு *49*
முன்றுறை அரையனார் *117*

மூவாதியார் 127
மேற்கணக்கு 110
யாப்பருங்கலவிருத்தி 4
வடசொல் 23
வண்புகழ் மூவர் 7
வழக்காராய்தல் 8
வாழ்வியல் சிந்தனைகள் 85
விரிச்சிகேட்டல் 49
விழுமியங்கள் 82, 93
விளம்பிநாகனார் 119
வையை 99

### (ii) வடமொழி

அக்கினிமித்திரன் 186
அசுவகோஷர் 148, 150
அட்டாங்கமார்க்கம் 150
அடியார்க்கு நல்லார் 235
அண்ணா - ஓர் இரவு 169
அதிவீரராம பாண்டியர் 165
அபிக்ஞான சாகுந்தலம் 191
அபிடேக நாடகம் 176
அமிர்தானந்தர் 149
அமரு சதகம் 226
அவிமாரகம் 182
அர்த்த கௌரவம் 160
ஆனந்த வர்த்தனர் 160
இரகுவம்சம் 155, 156
இரகுவின் வீரதீரச்செயல்கள் 157
இரத்தினாவளி 203
இராசசிம்ம பல்லவன் 147
இராசசேகரர் 168
இராட்சசன் 200
இருக்குவேதத்தில் தமிழ்ச் சொற்கள் 145
இலக்குமி சுயம்வரம் 188
இளங்கோவடிகள் 197
உத்தரராம சரிதம் 209
உதயணன் 177, 203
ஊர்வசி 188
ஊருபங்கம் 173
ஐம்பெருங்காப்பியம் 152
ஓஷதிபிரஸ்தம் 153
கண்ணுவர் ஆசிரமம் 191
கணையாழி 192

| | |
|---|---|
| கதிரேசன் செட்டியார் மு.பண்டிதமணி | *199* |
| கதை இலக்கியம் | *233* |
| கர்ணபாரம் | *172* |
| காகதூதம் | *218* |
| காஞ்சி மகாமுனிவர் | *191* |
| காஞ்சிமாநகர் | *160* |
| காலே, எம்.ஆர். | *153* |
| காவிய இலக்கணம் | *147* |
| காவிய இலக்கியம் | *147* |
| காவியாதர்சம் | *147* |
| காளிதாசர் கவிச்சக்கரவர்த்தி | *152* |
| காளிதாசனின் நாடகங்கள் | *186* |
| கிராதார்ச்சுனீயம் | *159, 160* |
| கீத்து, A.B. | *149* |
| குணாட்டியர் | *236, 237* |
| குமாரசம்பவம் | *152* |
| கூதிர்ப்பருவ வருணனை | *161* |
| கோவெல், E.B. | *149* |
| சகுந்தலை | *191* |
| சதகஇலக்கியம் | *219* |
| சந்தனதாசன் | *200* |
| சந்திரன் சுவர்க்கி | *165* |
| சந்தேச காவியம் | *213* |
| சாகுந்தலம் | *190* |
| சாணக்கியர் | *201* |
| சாரிபுத்திரப் பிரகரணம் | *185* |
| சாருதத்தன் | *183, 195* |
| சிசுபாலவதம் | *163, 164* |
| சித்தார்த்தர் | *148* |
| சிருங்காரசதகம் | *220* |
| சீவகன் | *205* |
| சுகசப்ததி கதா | *238* |
| சுவப்பனவாசவதத்தம் | *177* |
| சூத்திரகன் | *183, 194* |
| செம்மொழிச் சமற்கிருத இலக்கியம் | *145* |
| சேக்ஸ்பியர் | *202* |
| சோமசுந்தர பாரதியார், நாவலர் | *217* |
| சௌந்தரானந்த காவியம் | *184* |
| சௌந்தரானந்தம் | *150* |
| தண்டி | *147* |
| தமிழ் வேந்தரைப் பற்றிய பிரசஸ்திகள் | *244* |
| தரித்திரசாருதத்தன் | *183* |

| | |
|---|---|
| தாஸ்குப்தா, S.N. | *203, 243* |
| திருக்குறள் | *227* |
| துஷ்யந்தன் | *192* |
| தூதகடோற்கசன் | *172* |
| தூதவாக்கியம் | *172* |
| தூது இலக்கியம் | *213* |
| தொண்டரடிப் பொடி ஆழ்வார் | *225* |
| தொல்காப்பியம் | *156* |
| தொல்காப்பியர் | *170* |
| தொனியாலோகம் | *160* |
| நளவெண்பா | *165* |
| நற்றிணை | *193* |
| நாகானந்தம் | *205* |
| நாளிகேரபாகம் | *160* |
| நீதி சதகம் | *221* |
| நைடதம் | *165* |
| பஞ்சதந்திரத்தின் அமைப்பும் சிறப்பும் | *234* |
| பஞ்சமகாகாவியம் | *152* |
| பட்டநாராயணன் | *211* |
| பதுமாவதி | *178* |
| பர்த்துருஹரி | *220, 223* |
| பரதன் | *192* |
| பரணி இலக்கியம் | *177* |
| பரிபாடல் | *189* |
| பல்லவ அரசர்களின் பிரசஸ்தி | *248* |
| பவபூதியின் நாடகங்கள் | *208* |
| பாசகவி | *195* |
| பாசகவியின் நாடகங்கள் | *168* |
| பாஞ்சராத்திரம் | *169* |
| பாண்டிய இளவரசன் | *158* |
| பாண்டியர் செப்பேடுகள் | *246* |
| பாண்டியன் பிரசஸ்தி | *245* |
| பாரவி | *159, 160* |
| பாலசரிதம் | *174* |
| பிரசஸ்தி இலக்கியம் | *242* |
| பிரதிமா நாடகம் | *174* |
| பிரியதரிசிகா | *205* |
| பிருகத்கதா | *236* |
| புகழேந்திப்புலவர் | *165* |
| புத்த சரிதம் | *148, 184* |
| புராண இலக்கியம் | *228-232* |
| புரூரவசு | *188* |

| | |
|---|---|
| புறநானூறு | *173* |
| போதிமாதவன் | *148* |
| மகாகவி காளிதாசன் | *159, 168* |
| மகாகவி பாரதி | *186* |
| மகாவீர சரிதம் | *209* |
| மத்தியமவியாயோகம் | *171* |
| மந்தாகிரந்தம் | *217* |
| மலைபடுகடாம் | *246* |
| மறைமலைஅடிகள் | *191* |
| மாககவி | *163, 164* |
| மாரிவாயில் | *217* |
| மாலதி மாதவம் | *210* |
| மாளவிகா | *186* |
| மாளவிகாக்கினிமித்திரம் | *186* |
| மிருச்சகடிகம் | *183, 194* |
| மீனாட்சி சுந்தரனார், தெ.பொ. | *193* |
| முத்திராராட்சசம் | *199* |
| மேகசந்தேசம் அமைப்பும் சிறப்பும் | *214* |
| மேருதுங்கன் | *217* |
| மேனகை | *191* |
| யூகி | *177* |
| யௌகந்தராயணன் | *177* |
| வச்சிரசூசி | *184* |
| வச்சிரநந்தி | *250* |
| வசந்தசேனை | *183, 195* |
| வத்சபட்டியின் படைப்பு | *243* |
| வாசவதத்தை | *177, 178, 179* |
| விக்கிரமசேனன் | *239* |
| விக்கிரமார்க்க சரிதம் | *238* |
| விக்கிரமாதித்தன் | *239* |
| விக்கிரமோர்வசீயம் | *188* |
| விசாகதத்தன் | *199* |
| விசுவாமித்திரர் | *191* |
| விண்டர்நீட்ஸ் | *187, 195* |
| வெட்சிப்போர் | *170* |
| வேணிசம்காரம் | *211* |
| வேதாளபஞ்ச விம்சதி | *239* |
| வைராக்கிய சதகம் | *223* |
| ஜிமூதவாதகனன் | *206* |
| ஸ்ரீ ஹர்ஷன் | *165* |
| ஹர்ஷனின் நாடகங்கள் | *202* |

